உலகத் தமிழாசிரியர் மாநாடு

9th World Tamil Teachers' Conference

2011 - Singapore

9ஆம் உலகத் தமிழாசிரியர் மாநாடு

8.9.2011 – 10.9.2011

கருப்பொருள்:

உலகமயமாதலும் தமிழ் கற்றல் கற்பித்தலும்

மாநாட்டு ஆய்வடங்கல்

ஏற்பாடு:

சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கம்

STTU

60 மணி விழா anniversary 1951 2011 STTU

9th World Tamil Teachers' Conference
2011 - Singapore

9ஆம் உலகத் தமிழாசிரியர் மாநாடு

8.9.2011 – 10.9.2011

கருப்பொருள்:

உலகமயமாதலும் தமிழ் கற்றல் கற்பித்தலும்

பொருளடக்கம்

எண்		பக்கம்
	முதன்மையுரை	
1	தமிழின் புதிய தேவைகளின் பார்வையில் தமிழ் கற்பித்தல்	3-9
	பொது அமர்வுகள்	
	பொது அமர்வு 1	
2	தமிழ்மொழிக் கலைத்திட்ட உருவாக்கத்தில் புதிய பரிமாணங்கள் – வாய்ப்புகளும் சவால்களும்	10-19
3	புலம்பெயர்ந்த நிலையில் தமிழ்க்கல்வி – ஜெர்மனி	20-24
4	தமிழ்மொழி கற்றல் கற்பித்தலில் மலேசியா – மொரிசியஸ் : ஓர் ஒப்பீடு	25-31
	பொது அமர்வு 2	
5	சிங்கப்பூர்த் தமிழர் இல்லங்களில் தமிழ்மொழிப் புழக்கம்	32-46
6	பேச்சுச் சூழல்களும் செயல்பாட்டு அடிப்படையில் மொழிக்கற்றல் முறையும்	47-54
7	தமிழர் வாழ்புலங்களில் தமிழ்மொழிக் கல்வி கற்றல் கற்பித்தல் – சிக்கல்களும் தீர்வுகளும்	55-61
	பொது அமர்வு 3	
8	தமிழ் மின்னகராதி – அமைப்பும் செயல்பாடும்	62-64
9	தரவுத்தொகுப்பின் வழித் தேடலை நோக்கிய மொழிக் கல்வி	65-79
10	தரவுத்தொகுப்பால் உருவாகும் பயிற்றுப் பாடங்களும் மாணவர் தரவுத்தொகுப்பும்	80-85
11	உலகமயமாதலும் சிங்கப்பூரில் தமிழாசிரியர் பயிற்சியும்	86-91

எண்		பக்கம்

இணை அமர்வுகள்

இணை அமர்வுகள் 1

12	சிங்கப்பூர்ப் பள்ளிகளில் 10'T சிகரம் – தகவல் தொடர்புத் தொழில்நுட்பம் சார்ந்த கற்பித்தலியல்	92-96
13	பண்பாடு தழுவிய கற்றலும் கற்பித்தலும்	97-100
14	எழுதுதல் திறனை வளர்த்தல்	101-109
15	கற்பனை வளத்தையும் படைப்பாக்கத் திறனையும் பயன்படுத்தி எழுதுதல் – செயல் ஆய்வுத் திட்டம்	110-120
16	மலேசியாவில் தமிழ்க்கல்வி	121-126
17	பண்பாடு தழுவிய தமிழ் கற்றலும் கற்பித்தலும்	127-133
18	தமிழ் கற்றல் கற்பித்தலில் தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தின் பயன்பாடு	134-137
19	சுய அனுபவக் கற்றலின் வாயிலாக உயர்நிலைப் பள்ளி மாணவர்களின் பேச்சுத் திறனை மேம்படுத்துதல்	138-145
20	இரண்டாம்மொழி / அந்நியமொழி நிலையில் தமிழ் கற்றலும் கற்பித்தலும்	146-152
21	தமிழ் மொழியில் எழுத்தாற்றலை வளர்ப்பதில் செய்தித்தாளின் பங்கு	153-160
22	தமிழ் கற்றல் கற்பித்தலில் சொல்வளப் பெருக்கம் தயாரிப்பும் பயன்பாடும் - பயிலரங்கு	161-168

இணை அமர்வுகள் 2

23	ஆரம்பத் தொடக்கநிலைத் தமிழ் வகுப்புகளில் ஆங்கிலமொழிப் பயன்பாடு	169-187
24	சமூகத்தொடர்பு வழியாக 21-ஆம் நூற்றாண்டுத் திறன்களைப் பெறுதல்	188-195
25	மலேசியத் தமிழ்ப்பள்ளிகளுக்கான கலைத்திட்டத்தில் பண்பாட்டுக் கூறுகள்	196-198

எண்		பக்கம்
26	கணினி விளையாட்டுகள் வழி மொழி கற்பித்தல்	199-201
27	இரண்டாம் மொழிநிலையில் தமிழ் கற்றல் கற்பித்தலில் நிலவும் சிக்கல்கள்	202-206
28	மொரீசியஸில் காணப்படும் பன்மொழிச் சூழலில் தமிழ்மொழி கற்றல் கற்பித்தல்	207-213
29	பண்பாடு தழுவிய தமிழ் கற்றலும் கற்பித்தலும்	214-221
30	மாணவர்களின் எழுத்துப்படைப்பில் வருணிக்கும் திறனை வளர்த்தல்	222-228
31	மலேசியத் தமிழ்மொழிப் பாடத்திட்டமும் பண்பாடு தழுவிய கற்றலும்	229-242
32	தமிழ் கற்றல் கற்பித்தலில் தகவல் தொடர்புத் தொழில் நுட்பம், சமூகக் கட்டமைப்பு வலைகளின் வளமைகளும் பயன்பாடும்.	243-249
33	தமிழ் கற்றலில் முழுமையான மதிப்பீடு – பயிலரங்கு	250-256

இணை அமர்வுகள் 3

34	இரண்டாம் மொழி நிலையில் தமிழ் கற்றல் கற்பித்தல்	257-264
35	தமிழ்மொழி இலக்கணம் கற்பித்தலில் தற்காலத் தமிழ் இலக்கியம்	256-270
36	தமிழ்மொழி கற்றலில் முழுமையான மதிப்பீட்டின் பங்கு	271-278
37	தமிழ் தகவல் இணையத் தளங்கள் : ஓர் ஆய்வு	279-286
38	தமிழ்மொழி கற்றல் கற்பித்தலில் நோக்கல் கருத்தறிதல்	287-292
39	புதிய கற்பித்தல் கருவிகள் மூலம் தமிழ் கற்பித்தல்	293-297
40	பயன்மிக்க மொழி கற்பித்தலுக்கு இலக்கியங்களின் பங்கு	298-306
41	தமிழ்மொழி கற்றல் கற்பித்தலில் மென்பொருள்கள் – பயிலரங்கு	307-309
42	மாணவர்கள் திறனுக்கும் தேவைக்கும் ஏற்ற வேறுபடுத்தப்பட்ட கற்பித்தல் – பயிலரங்கு	310-318

எண்		பக்கம்

இணை அமர்வுகள் 4

43	இயல்பு மற்றும் கற்றல் சூழல்களில் சிங்கப்பூர்த் தமிழின் பயன்பாடு – ஒரு சமுதாயமொழியியல் அணுகுமுறை	319-329
44	கேட்டல், பேச்சுத்திறன் கற்பித்தலில் தகவல் தொழில்நுட்பப் பயன்பாடு	330-335
45	இரண்டாம்மொழி, அந்நியமொழி நிலையில் தமிழ் கற்றல், கற்பித்தல்.	336-343
46	பண்பாடு தழுவிய தமிழ் கற்றலும் கற்பித்தலும்	344-350
47	இலங்கையில் தமிழை இரண்டாம் மொழியாகக் கற்றல் கற்பித்தலிலுள்ள பிரச்சனைகள் : பேச்சுத் தமிழ் பற்றிய ஓர் ஆய்வு	351-361
48	கற்றல் உத்திகளின்வழி எழுத்துத்திறன் மேம்பாடு – பயிலரங்கு	362-363

முதன்மை உரை

தமிழின் புதிய தேவைகளின் பார்வையில் தமிழ் கற்பித்தல்

Dr. இ. அண்ணாமலை
சிகாகோ பல்கலைக்கழகம்
அமெரிக்கா.

காலந்தோறும் தமிழ் மொழியின் தேவைகள் மாறிவருகின்றன. அந்தத் தேவைகளை நிறைவு செய்வதில் தமிழின் வாழ்வு இருக்கிறது. அவற்றை நிறைவு செய்யும் வகையில் தமிழ் கற்பித்தல் அமைய வேண்டும். உலகம் ஒருமைப்பட்டுவரும் இக்காலத்தில் தமிழின் முதல் தேவை இந்த உலகில் தமிழின் இடத்தை இருத்திக்கொள்வது. இதற்குத் தமிழைப் பேசுபவர்களின் எண்ணிக்கை குறையாமல் இருப்பது அவசியம். தமிழ் வழக்கில் இருந்தால்தானே அதன் தேவையைப் பற்றிய கேள்வி எழ முடியும்? தமிழை எழுதுபவர்களின் எண்ணிக்கையைக் கூட்டுவது இரண்டாவது தேவை. இதில் தமிழில் பல நிலைகளில் எழுதுபவர்களும் - குழந்தைக்குப் பாட்டு எழுதுபவர்களிலிருந்து கணினிக்குத் தமிழ் ஆராய்ச்சி செய்பவர்கள் வரை - அடக்கம். எழுத்தறிவு தரும் முதியோர் கல்வியும் இதில் அடங்கும். இவர்களெல்லாம் தமிழில் எழுதக் கற்க வேண்டும். தமிழில் பேசவும், எழுதவும் எந்தத் தமிழைக் கற்பிப்பது, எப்படிக் கற்பிப்பது என்னும் கேள்விகள் காலத்திற்கேற்ற தமிழைக் கற்கும் தேவையை நிறைவேற்றுவதில் முக்கியமானவை.

தமிழைக் கற்பிக்கும் நோக்கங்களில் இரண்டாயிரம் ஆண்டுப் பாரம்பரியம் உள்ள மொழியை இருபத்தோராம் நூற்றாண்டில் துடிப்புடன் செயல்பட வைக்க வேண்டியது முக்கியமான ஒன்று என்பது தெளிவு. பழம் பெருமையைப் போற்றுவதில் நின்றுவிடாமல், புதிய வன்மை பெறுவதற்குத் தமிழைத் தயார்ப்படுத்தும் வகையில் தமிழ் கற்பித்தல் – அதாவது தமிழ்ப் பாடத்திட்டமும் பயிற்சி முறையும் - இருக்க வேண்டும். உலகளவில் இன்று உயர்ந்து நிற்கும் ஆங்கில மொழியின் கவர்ச்சிக்கு ஈடுகொடுக்கும் நிலையைத் தமிழுக்கு உருவாக்கும் வகையில் அவை இருக்க வேண்டும்.

தமிழ்ப் பயிற்சியை இன்று உலகில் பலவிதமான கலாச்சாரச் சூழல்களில் தரும் தேவை இருக்கிறது. உலகம் முழுவதும் தமிழ் கற்பித்தல் ஒரே வகையாக இருக்க முடியாது. வெவ்வேறு நாட்டுக் கல்வி அமைப்பில் பாடத்திட்டத்தின் நோக்கமும் உள்ளடக்கமும் வேறு. தமிழ் கற்போரின் நோக்கமும் கற்கும் சூழலும் வேறு. தமிழ்நாட்டிலும்

சிங்கப்பூரிலும் அமெரிக்காவிலும் இவை வேறு. வேறுபாடுகளுக்குப் பொருந்தும்படி தமிழ்ப் பயிற்சி அமைய வேண்டிய தேவை இன்று இருக்கிறது. ஒரே நாட்டிலும் பல திறப்பட்ட கற்போரின் தேவைகளுக்கேற்பத் தமிழ்ப் பயிற்சி அமைவது பொருத்தம். இலக்கிய மாணவன் கற்கும் தமிழும் அறிவியல் மாணவன் கற்கும் தமிழும் ஒன்றாக இருக்க முடியாது. அவர்களுடைய கருத்து வெளிப்பாட்டின் தேவைகளை அவர்கள் கற்கும் தமிழ் நிறைவேற்ற வேண்டும். இல்லையென்றால் அறிவியல் மாணவர்கள் தங்களுக்குத் தமிழ் தேவை இல்லை என்றுதான் எண்ணுவார்கள்.

தமிழ் கற்பித்தலின் இன்றைய தேவையின் இந்தப் பின்னணியில், அதன் வரலாற்று நிலையைச் சுருக்கமாகப் பார்க்கலாம். தமிழ்க் கல்வி தமிழின் வரலாற்றுக் காலத்திலிருந்து தமிழின் இலக்கியத்தையும் இலக்கணத்தையும் கற்பதாகவே இருந்து வந்திருக்கிறது. இன்றும் பள்ளியிலிருந்து பல்கலைக்கழகம் வரை இவை இரண்டுமே தமிழ்க் கல்வியின் உள்ளடக்கமாக இருக்கின்றன. இலக்கியம் என்பதன் வரையறையை விரித்துத் தற்கால (அதாவது சமகால) இலக்கியம், நாட்டார் இலக்கியம், உரைநடைத் தமிழ், ஊடகத் தமிழ், திரைப்படத் தமிழ் முதலானவை தமிழ்ப் பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இவற்றில் சில உயர்கல்வி மட்டத்திலேயே சேர்க்கப்பட்டிருக்கின்றன். இலக்கியத்தின் இந்த விரிவு எல்லாக் கல்வி மட்டங்களிலும் ஏற்பட வேண்டும். அப்படி ஏற்பட்டாலும் இலக்கியக் கல்வியே தமிழ்க் கல்வியின் ஒட்டுமொத்தமும் ஆகாது.

முற்காலத்தில் இலக்கியம் படிப்பதன் நோக்கம் தமிழ் இலக்கிய மரபைத் தெரிந்துகொள்வதும் இலக்கியத்தை அர்த்தப்படுத்தி நயம் காண்பதும் இலக்கியம் புனைவதும் இலக்கியத்தைக் கற்பிப்பதுமே. இது இக்காலத்தில் தமிழைச் சிறப்புப் பாடமாகப் பள்ளிப்படிப்பு முடிந்தபின் கற்பிப்பதற்கு மட்டுமே பொருந்தும். இந்தக் கட்டுரையில் தமிழைப் பொதுப்பாடமாகக் கற்பதைப் பற்றிப் பேசுகிறோம். இதிலும் இலக்கியத்திற்கு இடம் உண்டு; ஆனால் இலக்கியக் கல்வி மட்டுமே பொதுத் தமிழ்க் கல்வி ஆகாது. இலக்கியக் கல்வி தமிழ்ப் பண்பாட்டை அறிமுகப்படுத்துவது, இலக்கிய உணர்வை மனதில் விதைப்பது ஆகியவற்றோடு மொழியின் அழகியியல் வெளிப்பாட்டை அறிந்து பயன்படுத்தும் கருத்துப் பரிமாற்ற (aesthetic communicative) சாதனமாகவும் அமைய வேண்டும். அழகியல் வெளிப்பாடு இலக்கியத்திற்கு மட்டுமே உரியது அல்ல; இது அலங்கார மொழியும் அல்ல. இது ஒருவர் தன் கருத்தைப் பிறர் மனதைக் கவரும் வகையில் சொல்லும் திறனாகும். பல வகை மொழித் திறன்களில் இதுவும் ஒன்று. கருத்து வெளிப்பாட்டுத் திறனை வளர்க்கும் வகையில் இலக்கியம் கற்பிக்கப்படவேண்டும்; மனப்பாடம் பண்ணுவதற்கோ மூதாதையினரின் பெருமை பேசுவதற்கோ அல்ல.

தமிழ் கற்பதில் பேண வேண்டிய பிற திறன்களில் உறவை உரப்படுத்திக்கொள்ளும் உரையாடல் திறன், சொல்லவந்த கருத்தைப் பிசிறின்றி, வேண்டாத சொல்லின்றி, ஒரு தடவையில் விளங்கும்படி சொல்லும் பேசும் திறன், எழுதும் திறன், ஒன்றைக் கேட்டு அல்லது படித்துத் தவறின்றிப் புரிந்துகொள்ளும் திறன், அறிவார்ந்த விவாதத் திறன், ஆங்கிலத்தில் கேட்டதை, படித்ததைத் தமிழில் எடுத்துச் சொல்லும், எழுதும் திறன் முதலானவையும் அடங்கும். இவற்றின் முக்கியத்துவம் இக்காலத் தமிழ்க் கல்வியைப் பழங்காலத் தமிழ்க் கல்வியிலிருந்து வேறுபடுத்தும். இவை போன்ற திறன் தொகை (skill set) ஒன்றை ஏற்படுத்திக்கொண்டால், கல்வி மட்டப்படி, மாணவரின் பின்னணிப்படி, கற்கும் நோக்கப்படி பாடத் திட்டத்தை அமைத்துக்கொள்ள வேண்டிய தேவை விளங்கும்.

முற்காலத்தில் தமிழ் இலக்கணம் கற்பிப்பதில் செய்யுள் எழுதத் தரும் பயிற்சியே குறிக்கோள். தற்காலத்தில் சிறப்புத் தமிழ்க் கல்வியிலும் கவிதை எழுதக் கற்பிப்பது ஒரு நோக்கமல்ல. புதுக் கவிதை எழுத மரபிலக்கணமும் தேவை இல்லை. இலக்கணம் மொழி கற்பிப்பதற்குப் பயன்படும் கருவி. இன்றைய தமிழைக் கற்க அதனுடைய இலக்கணத்தைப் படிக்க வேண்டும்; பழைய தமிழின் இலக்கணத்தை அல்ல. இலக்கணத்தை நேரடியாகக் கற்பிக்காமலே மொழியைக் கற்பிக்க முடியும். மொழி கைவரப் பெறும்போது அதன் இலக்கணம் தனி முயற்சி இல்லாமலே மனதில் உருவாகிவிடும்; இலக்கணத்தைத் தனியே கற்பிக்கத் தேவை இல்லாமல் போகும். குழந்தைகள் தமிழை இயல்பாகக் கற்றுப் பேசும்போது இலக்கணத்தை மனனம் செய்வதில்லை; இலக்கணத்தை மனதிற்குள் உருவாக்கிக் கொள்கிறார்கள். சில மாணவர்கள் இந்த மாதிரியான முறையையே வகுப்பறையில் மொழி கற்பதற்கும் விரும்புவார்கள். ஆனாலும், மொழியின் அமைப்பை ஆசிரியர் விளக்க இலக்கணம் தேவைப்படும்; மாணவர்களின் கற்றல் பிழைகளை விளக்கித் திருத்த இலக்கணம் உதவும். தமிழை முதல் மொழியாக - தாய்மொழியாக - கற்கும் மாணவர்களுக்குத் தமிழ் இலக்கணத்தை எடுத்துரைக்கும் திறன் வேண்டும்; அதற்கு இலக்கணக் கலைச்சொற்கள் தெரிய வேண்டும் என்னும் ஒரு கல்வி நோக்கம் இருக்கிறது. இந்த மொழிப்பயனை அடையவும் இலக்கணம் கற்பிக்கும் தேவை இருக்கிறது.

தமிழை வாழும் சூழலிருந்து இயல்பாகக் கற்காமல் வகுப்பறையிலிருந்து கற்கும் மாணவர்களுக்கு - தமிழை இரண்டாம் மொழியாகக் கற்கும் மாணவர்களுக்கு - இலக்கண விளக்கம் தேவைப்படும். இவர்களுக்குத் தமிழைக் கற்கும் நேரம் குறைவு. இலக்கண விளக்கம் நேரக் குறைவைச் சரிக்கட்ட ஒரு வழி. இது தமிழறியா அந்நிய மாணவர்களுக்கு மட்டுமல்லாமல், அந்நிய நாடுகளில் வாழும் தமிழ்க் குடும்பங்களில் தமிழ் பேசாமலலே வளரும் மாணவர்களுக்கும் பொருந்தும்.

இலக்கணத்தைக் கற்பிக்கும்போது அது தமிழைக் கற்கும் ஆர்வத்திற்கு முட்டுக்கட்டையாக இருக்கக் கூடாது என்பது பலரும் ஒப்புக்கொள்ளும் ஒரு கருத்து. இதைச் சாதிப்பதில் தமிழாசிரியர்கள் கவனம் செலுத்த வேண்டும். இலக்கணம் கற்பதை நவீன தொழில்நுட்பச் சாதனங்கள் மூலம் சுவையுடையதாக ஆக்கலாம். இதில் முக்கியமான கேள்வி கற்பிக்கும் இலக்கணம் எதுவாக இருக்க வேண்டும் என்பது. அது இக்காலத் தமிழின் இலக்கணமாக இருக்க வேண்டும் என்பதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது; கூடாது. இந்த இலக்கணம் இன்னும் முழுமையாக எழுதப்படவில்லை என்பதும் பலர் ஒத்துக்கொள்ளும் கருத்து. எனவே, இலக்கணத்தை வரைப்படுத்திக்கொள்ளும் வேலை தமிழைக் கற்றுக்கொடுக்கும் ஆசிரியர் தலையில் விடிகிறது; அல்லது அது பாடப் புத்தகம் தயாரிப்பவரின் பொறுப்பாகிறது. இவர்கள் எல்லோருக்கும் இந்தத் திறன் இருக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. எனவே, இன்றைய தமிழின் இலக்கணத்தை விளக்கத்துடன் எழுதி, ஆசிரியர்கள் பயன்படுத்தும் வகையில் - முக்கியமாகத் தன்னார்வத் தமிழாசிரியர்கள் பயன்படுத்தும்வகையில் - இணையத்தில் தரவேண்டிய தேவை இருக்கிறது. இதைத் தமிழில் தரவேண்டும்; தமிழை இரண்டாம் மொழியாகப் பயில்பவர்களுக்காக ஆங்கிலத்திலும் தரலாம்.

தமிழ்க் கல்வி வரலாற்றில், தமிழைப் பிற மொழியின் மூலம் பயிற்றுவது காலனிய காலத்தில் துவங்கியது. லத்தீன், போர்ச்சுகீஸ் முதலிய மொழிகளில் தமிழ் இலக்கணம் எழுதப்பட்டது; அந்த மொழிகளின் மூலம் தமிழ் கற்கப்பட்டது. போன நூற்றாண்டிலிருந்து ஆங்கிலத்தின் வழி தமிழை இரண்டாம் மொழியாகக் கற்பிப்பது பெருகிவருகிறது. தமிழ் கற்கும் மாணவர்கள் – இதில் புலம்பெயர்ந்த தமிழ்க் குடும்பத்தைச் சார்ந்த மாணவர்களும் சேர்த்தி -உலகம் முழுவதும் பரவியிருக்கும் இன்று ஆங்கிலம் தமிழின் பயிற்றுமொழியாக விளங்குவதைத் தடுக்க முடியாது. இது ஒன்றே வழி என்பதல்ல; இதுவே நடைமுறையில் உலகச் சூழலில் பெருவழி.

உலகளாவிய நிலையில் தமிழ் கற்கும் மாணவர்களின் தமிழ் கற்கும் நோக்கம் பலதரப்பட்டது என்று சொன்னோம். இதில் ஒன்று பேச்சுத் தமிழைக் கற்பது. இது தமிழ்க் கல்வியில் புதிதாக வந்துள்ள மாற்றம். இந்தத் தேவையைத் தீவிரமாக மறுப்பவர்களும் இருக்கிறார்கள். பேசும் தேவையை வற்புறுத்தினால், இவர்கள் செந்தமிழையே பேசும் தமிழாகக் கற்பிக்க வேண்டும் என்பார்கள். அயல் மாணவர்களுக்கு வேண்டுமானால் தமிழ்நாட்டு மாணவர்களைப் போல இயல்பாகத் தமிழ் பேசும் தேவையை நிறைவுசெய்யலாம் என்று இவர்களில் சிலர் கொஞ்சம் விட்டுக்கொடுத்தாலும், பேச்சுத் தமிழ் எல்லோருக்கும் வேண்டும் என்று ஒப்புக்கொள்ளமாட்டார்கள். புலம்பெயர்ந்த தமிழ் மாணவர்கள் பண்பாட்டுத் தொடர்புக்காகத் தமிழைப் படித்தாலும், அதற்காக இலக்கியத் தமிழைப் படித்தாலும், அது ஒன்றே அவர்கள் தேவையை நிறைவுசெய்யப் போதுமானது அல்ல. அவர்கள்

தமிழ்த் திரைப்படங்களை ரசிக்கப் பேச்சுத் தமிழ் வேண்டும்; தங்கள் தனி அடையாளத்தைத் தமிழ் பேசி நிறுவிக்கொள்ளப் பேச்சுத் தமிழ் வேண்டும்; தமிழகத்திலும் இலங்கையிலும் உள்ள ஆங்கிலம் தெரியாத உறவினர்களின் உறவை வலுப்படுத்த பேச்சுத் தமிழ் வேண்டும்.

இந்தத் தேவையை அரைமனதாகப் புலம்பெயர்ந்தவர்களுக்கு ஒப்புக்கொள்பவர்-களுக்கும் தெருக்களில் தமிழ் வழங்கும் நாடுகளில் பேச்சுத் தமிழ் பள்ளிகளில் தீண்டத்தகாத ஒன்று. இவர்களுக்குப் பேச்சுத் தமிழ் தெருக்களில் படிக்க வேண்டிய மொழி, வகுப்பறைகளில் அல்ல எனபது அவர்கள் வாதம். இந்தத் தீண்டாமை உணர்வு நீங்குவது தமிழ்க் கல்வியின் இன்றைய தேவைகளில் ஒன்று. தமிழை வகுப்பறைக்கு வெளியே பேசி வளரும் சிறாரும் பேச்சுத் தமிழைப் பிழையறப் பேசுவது அவசியம். தமிழைச் சரியாக உச்சரிக்கத் தெரியவில்லை; ஆங்கிலம் கலக்காமல் பேசத் தெரியவில்லை என்பது போன்ற கவலைகள் பத்து ஆண்டுகள் தமிழை முறையாகப் படித்த மாணவர்களைப் பற்றியும் வெளிப்படுத்தப்படுகின்றன. இந்தக் கவலைகள் போக வேண்டுமென்றால் பேச்சுத் தமிழைக் கற்பிப்பது அவசியம். பேச்சுத் தமிழே பிழை என்னும் உணர்வு போனால்தான் அதைப் பிழையின்றிப் பேசுவது தமிழ்க் கல்வியின் நோக்கங்களில் ஒன்றாக ஏற்றுக்கொள்ளும் பக்குவம் வரும்.

தரமான பேச்சுத் தமிழ் (Standard Spoken Tamil) என்று ஒன்று இல்லை; வட்டாரப் பேச்சுகளும், சாதிப் பேச்சுகளுமே உண்டு என்று வாதிடுபவர்களும் உண்டு. இவர்கள் கல்லூரி விடுதிகளில் தங்கியதில்லை; சினிமா பார்ப்பதில்லை என்றே சொல்ல வேண்டும். பேச்சுத் தமிழ் பாடத் திட்டத்தில் இடம்பெறும்போது தமிழ்நாட்டிற்கும் இலங்கைக்கும் தனியே தரமான பேச்சுத் தமிழ் உண்டு என்பதை மனதில் கொள்ள வேண்டும். இரண்டு பேச்சுத் தமிழுக்கும் தமிழில் இலக்கணம் எழுதவேண்டிய தேவை இன்று இருக்கிறது. பேச்சுத் தமிழைக் கற்பிக்கும்போது ஆசிரியர்களுக்கு இது உதவும்.

தமிழ் இரட்டை வழக்கு உள்ள மொழி (diglossic language) என்பது தெரிந்த செய்தி. இரண்டையும் பாடத்திட்டத்திற்குள் கொண்டுவருவதே புதிய செய்தி. இரண்டு வழக்கையும் ஒரே பாடத்திட்டத்தின் கீழ் கற்றுக்கொடுக்கும்போது அதற்கு ஒரு பயிற்சி முறை (pedagogical method) உருவாக்க வேண்டும். பேச்சுத் தமிழைத் தமிழ் எழுத்துகளில் எழுதப் பலரும் ஏற்றுக்கொளளும் வகையில் ஒரு எழுத்துக்கூட்டு முறைப்பாடு (spelling system) உருவாக வேண்டும். மாணவர்களின் கற்கும் சுமை குறையும் வகையில் இரட்டை வழக்கைக் கற்பிக்கும் முறை உருவாக வேண்டும். இன்று இரட்டை வழக்கை அயல் மானவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்களிடையே இதற்குப் பின்பற்றும் முறையில் வேறுபாடு இருக்கிறது. இந்த முறைகளின் அறிமுகம் தன்னார்வத் தமிழாசிரியர்களுக்குத் தேவை.

தமிழ் கற்பிக்கும் சாதனங்கள் அச்சுப் புத்தகங்களோடு நிற்கவில்லை. மணலில் விரலால் நெடுங்கணக்கை எழுதிப் படித்த காலத்திலிருந்து சிலேட்டுப் பலகைக்குத் தாவியதைப் போல, அச்சிலிருந்து மென்பொருளுக்குத் தாவுவதற்கு முயற்சிகள் தேவை. மாணவர்கள் தமிழை நண்பர்களுடன் செய்தி பரிமாறிக்கொள்ளப் பயன்படுத்தும் புதிய தொடர்புச் சாதனங்களில் வழங்கும்படி செய்வது தமிழை மாணவர்களின் வாழ்க்கையோடு இணைப்பதற்குத் தேவையான ஒன்று. இன்று பாடப் புத்தகங்களில் உள்ள தமிழ் இதற்குப் பொருந்தாது. மாணவர்களைத் தன்பால் ஈர்ப்பதற்கு, அவர்கள் தமிழைக் கட்டாயத்திற்காக அல்லாமல் விரும்பிக் கற்பதற்கு, செய்ய வேண்டிய பலவற்றில் பல்லூடக வழி (multi media) தமிழைக் கற்பிப்பதும் ஒன்று. கண்ணுக்குக் கவர்ச்சியாகவும் காதிற்கு இனிமையாகவும் தமிழ்ப் பாடங்களை மாணவர்களிடம் எடுத்துச் செல்ல வேண்டிய தேவை இருக்கிறது. தமிழ் கற்பது ஒற்றையடிப் பாதை அல்ல; அது பல்வழிச் சாலை. மாணவர்கள் தங்கள் வேகத்தில் பயில வகை செய்வது இப்போது தேவை. ஆசிரியர் இல்லாமல் தன் முயற்சியில் தமிழைக் கற்க வசதிகளும் தேவை. இதற்கெல்லாம் துணைசெய்ய இன்று கணினி இருக்கிறது.

கரும்பலகை போல், கணினியைக் கற்றுக்கொடுக்கும் சாதனமாகப் பயன்படுத்தும் திறனைப் பெறுவது தமிழாசிரியர்களுக்கு இன்றியமையாததாகிறது. இந்தத் திறன் அச்சுப் புத்தகத்தை அல்லது அதன் மாதிரியைக் கணினியில் ஏற்றுவது அல்ல. மொழி கற்கும் மென்பொருள் அச்சுப் புத்தகத்தின் எண்வயமாக்கப்பட்ட வடிவம் அல்ல. கணினி தரும் புதிய வாய்ப்புகளைப் பயன்படுத்திப் பாடங்கள் தயாரிக்க வேண்டும். இதைச் செயல்படுத்த, மேலே சொன்னபடி தமிழ் கற்ற கணினி வல்லுநர்களின் கூட்டுறவு தேவை.

தமிழ் கற்பது இன்று உலகளாவி நிற்கிறது. தமிழ் மண்ணில் பிறந்தவர்களும் தமிழ் பயில்கிறார்கள்; புலம் பெயர்ந்தவர்களும் பயில்கிறார்கள். இப்படி அது பன்னிலை கொண்டதாக இருக்கிறது. கற்றலில் முதல் மொழியாகவும் இருக்கிறது; இரண்டாம் மொழியாகவும் இருக்கிறது, அயல் மொழியாகவும் இருக்கிறது. தமிழைப் பேசத் தெரிந்தவர்களும் படிக்கிறார்கள்; கேட்டும் பேசாமல் வளர்ந்தவர்களும் படிக்கிறார்கள்; தமிழின் பெயரைமட்டுமே கேட்டவர்களும் படிக்கிறார்கள். சிறு வயதிலும் படிக்கிறார்கள்; வயது வந்தபின்னும் படிக்கிறார்கள். தமிழின் இலக்கியத்திற்காகவும் படிக்கிறார்கள்; தமிழ் நாட்டில் பயணம் செய்வதற்காகவும் படிக்கிறார்கள். வெவ்வேறு நாடுகளில் உள்ள கல்விப் பாடத்திட்டங்களின் கீழ், அங்கு விதிக்கப்பட்டுள்ள தமிழ்க் கல்வியின் நோக்கங்களைப் பின்பற்றிப் படிக்கிறார்கள். தமிழ் கற்பதன் எல்லா வகைத் தேவைகளுக்கும் தனித்தனிப் பாடப்பொருள்கள் (pedagogical materials) தயரிப்பது சாத்தியம் அல்ல; தேவையும் அல்ல.

தமிழ் கற்பிக்கும் முறை பல வகைப் பாடப்பொருளகளைப் பொறுக்கி, அவற்றை வேண்டும் வகையில் இணைத்து மாணவர்களுக்குத் தருவதாக அமைய வேண்டும். ஆங்கிலத்தில் இதை modular approach என்பார்கள். தமிழில் கூட்டு முறை எனலாம். இதற்குப் பலர் தயாரித்த, தெரிந்தெடுக்கப்பட்ட, மென்பொருளாக எழுதிய பாடப்பொருள்களை ஒரு இணைய தளத்தில் ஏற்றி, ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களுக்குப் பொருத்தமானவற்றைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்குப் பயனளிக்கும் வகையில் கோர்த்து அளிக்க வகைசெய்ய வேண்டும்.

தமிழ் உலக மொழி என்றால் அதை உலகெங்கும் உள்ளவர்கள் கற்கும் வகை செய்ய வேண்டும். அதைச் செய்யத் தமிழைப் பார்க்கும் பார்வையை ஒரு அரசியல் சித்தாந்தத்திற்குள் அடக்குவது உதவாது. தமிழை வணங்கும் மொழியாக இருத்தாமல் வழங்கும் மொழியாக ஓடவிட வேண்டும்.

தமிழைக் கொண்டாடுவதற்குரிய மொழியாகச் சுருக்காமல் மக்களை முன்னே கொண்டுசெல்லும் மொழியாக விரிக்க வேண்டும். இதற்குத் தமிழ்ப் பாடங்கள் தயாரிப்பது அரசுகளின் அல்லது சில தமிழறிஞர்களின் கட்டுப்பாட்டில் இருப்பதும் உதவாது. தமிழ்ப் பாடங்கள் உருவாக்குவது திறந்தவெளிப் படைப்பாக (open source), கூட்டு முயற்சியாக மாற்றம் பெறுவது முக்கியமான தேவை. தகவல் தொழில்நுட்பத்தால் நெருங்கி வரும் உலகில் இது சாத்தியம்.

பொது அமர்வு 1

பொது அமர்வு 1

தமிழ்மொழிக் கலைத்திட்ட உருவாக்கத்தில் புதிய பரிமாணங்கள் – வாய்ப்புகளும் சவால்களும்.

த. வேணுகோபால்
தலைவர், தமிழ்த்துறை
கல்வி அமைச்சு, சிங்கப்பூர்

முன்னுரை

ஓர் இனத்தவரை அடையாளங் காட்டுவதில் உயிர்நாடியாய் திகழ்பவை மொழியும் பண்பாடுமே ஆகும். தொன்மை மொழிகளுள் இன்றளவும் உயிர்ப்புள்ள மொழியாய் இலங்கும் தமிழ் மொழி சிறந்த இலக்கியச் செல்வங்களையும் உயரிய பண்பாட்டு விழுமியங்களையும் தன்னகத்தே கொண்டது. தாயகமான தமிழ்நாட்டில் மட்டுமன்றி, உலககெங்கிலும் தமிழ்மொழி பரந்து விரிந்துள்ளது. உலக நாடுகள் பலவற்றிலும் தமிழர்கள் வாழ்கிறார்கள்; தமிழ் வாழ்கிறது என்றாலும், தொடர்ந்து அதற்கு ஏற்றமிகு வாழ்வு உண்டா என்னும் ஐயப்பாடு இன்று பலருக்கும் தோன்றியுள்ளது.

சிங்கப்பூரில் தமிழும் தமிழரும்

சிங்கப்பூரின் நான்கு அதிகாரத்துவ மொழிகளுள் தமிழும் ஒன்றாகும். இந்நிலையைக் கட்டிக்காக்க வேண்டும் என்பதில் அரசாங்கம் உறுதியாக இருக்கிறது. பல மொழிச் சமூகங்கள் வாழும் சிங்கப்பூரில், தமிழர்கள் சிறுபான்மைச் சமூகமே. இருந்தபோதிலும், தமிழுக்குத் தொடர்ந்து தம் நல்லாதரவினையும் அங்கீகாரத்தையும் அரசாங்கம் வழங்கி வருவது தமிழுக்கும் தமிழருக்கும் கிடைத்த நற்பேறாகும்.

ஏனைய அதிகாரத்துவ மொழிகளைப் போலவே, தமிழும் தாய்மொழிப் பாடமாகப் பள்ளிகளில் கற்பிக்கப்படுகிறது. தொடக்கநிலை முதற்கொண்டு தொடக்கக் கல்லூரி வரைக்கும் தமிழை ஒரு பாடமாகப் பயிலக்கூடிய வாய்ப்பு இங்குண்டு. இவ்வாறு தமிழ் பயிலக்கூடிய வாய்ப்பு இருப்பதால் மட்டுமே, சிங்கப்பூரில் தமிழ் செழித்து வளரும் சூழல் அமைந்துவிடும் என்று கருதிவிட முடியாது. சிங்கப்பூரின் மக்கள் தொகையில் 9.2% சதவிகிதத்தினரே இந்தியர்கள்.[1] அவர்களுள் 60% குறைந்தவர்களே தமிழ் பேசும் இந்தியர்கள். இவர்கள் தம் அன்றாட வாழ்வில் தமிழைப் பயன்படுத்தும் அளவைப் பொறுத்தே சிங்கப்பூரில் தமிழின் எதிர்காலம் நிர்ணயிக்கப்படும்.

[1] Census of Population 2010 Advance Census Release, Dept of Statistics, Ministry of Trade and Industry

வீட்டுப் பின்னணியில் தமிழ்ப் புழக்கம்

சிங்கப்பூரைப் பொறுத்தமட்டில் பெரும்பான்மையான தமிழ் மாணவர்களின் இல்லங்களில் ஆங்கிலமே முதன்மை மொழியாக உள்ளது. சிங்கப்பூரின் பன்மொழிச்சூழலும் முதல்மொழியாக விளங்கும் ஆங்கிலத்தின் தாக்கமும் இந்நிலைக்குக் காரணமெனக் கருதப்படுகின்றன. ஆங்கில மொழியின் ஆதிக்கம் தாய்மொழியின் பயன்பாட்டை வெகுவாகக் குறைத்து, இன்று பல இந்தியக் குடும்பங்களில் முதன்மையான அல்லது ஒரே வீட்டுமொழியாக இருக்கும் நிலை உருவாகியுள்ளது. இந்தச் சவாலை இந்தியக் குடும்பங்கள் மட்டுமன்றி, சீன, மலாய்க் குடும்பங்களும் எதிர்நோக்குகின்றன. எந்த மொழி ஒருவரின் உணர்விலும் உதட்டிலும் அதிகம் வெளிப்படுகிறதோ, அதுவே அவரின் முதன்மைமொழியாக இருக்கும். அந்த அடிப்படையில், நம் தமிழ் மாணவர்களில் பெரும்பான்மையினர் ஆங்கிலத்தில் அதிக ஆற்றல் உடையவர்களாக இருக்கின்றனர். ஆங்கிலத்தை விடுத்துத் தமிழின்பால் அவர்களின் ஆர்வத்தையும் ஆற்றலையும் வளர்ப்பது என்பது நடைமுறைக்கு சாத்தியமாகாத ஒன்று. மாறாக, ஆங்கிலத்தோடு தமிழையும் பயன்படுத்தும் இருமொழித்திறன் கொண்டவர்களாகத் தமிழ் மாணவர்களை உருவாக்குவது என்பது எட்டிப்பிடிக்கக்கூடிய இலக்காக அமையக்கூடும். ஆனால், அந்நிலையை அடைய நாம் பெருமுயற்சி எடுத்தாக வேண்டும்.

தமிழ் மொழி கற்றல் கற்பித்தல் – மறு ஆய்வு நடவடிக்கைகள்

கடந்த ஐந்து ஆண்டுகளில், சிங்கப்பூர்க் கல்வி அமைச்சு, தாய்மொழிக் கல்வியில் இரண்டு மறு ஆய்வு நடவடிக்கைகளை நடத்தியுள்ளது. 2005-ஆம் ஆண்டுமுழுதும், மூன்று தாய்மொழிப் பாடங்களிலும் முழுமையான மறு ஆய்வு நடந்தேறியது. தமிழ் மொழிப் பாடத்திட்ட மறு ஆய்வு நடவடிக்கையைத் தமிழ்த்துறை ஏற்று நடத்தியது.

இந்த ஆய்வை நடத்திய குழுவினர், இரண்டு அடிப்படை நோக்கங்களை மனத்திற்கொண்டு செயற்பட்டனர். வருங்காலச் சிங்கப்பூர்த் தமிழ்ச் சந்ததியினரிடையே தமிழ் வாழும் மொழியாகத் திகழவேண்டும் என்பதும், பலவகைப் பண்பாட்டுப் பாரம்பரியத்தைக் கொண்டு உலக நகராக விளங்கும் சிங்கப்பூரின் தனித்தன்மைக்கு வலுவூட்டும் அம்சமாக அது விளங்க வேண்டும் என்பதுமே அந்த இரண்டு நோக்கங்களாகும்.[2]

[2] தமிழ்மொழிப் பாடத்திட்டம் கற்பித்தல்முறை மறு ஆய்வுக் குழு அறிக்கை 2005, கல்வி அமைச்சு, சிங்கப்பூர்

பாடத்திட்டத்தில் பேச்சுத் தமிழ்

இந்த ஆய்வின் பயனாகப் பல முக்கியப் பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டன. அந்தப் பரிந்துரைகளை முழுமையாக ஏற்றுத் தகுந்த மாற்றங்கள் தமிழ் மொழிக் கலைத்திட்டத்தில் செய்யப்பட்டன. தமிழ் வகுப்பறைகளில் பேச்சுத் தமிழை முதன்மைப்படுத்த வேண்டும் என்னும் பரிந்துரையே அவற்றுள் மிக முக்கியமானதாகும். பேச்சுத் தமிழுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுவதன் அவசியம் குறித்து மறு ஆய்வு குழுவினர் தெளிவான கருத்துக் கொண்டிருந்தனர். பத்து, பன்னிரண்டு ஆண்டுக்காலம் வரை தமிழைப் பயின்றபிறகும் மாணவர்கள் பலருக்கும் தன்னம்பிக்கையுடன் அம்மொழியைப் பயன்படுத்த இயலாதநிலையும் பள்ளி வாழ்க்கைக்குப் பிறகு தமிழை முற்றாக மறந்துவிடுகின்ற நிலையும் ஏற்பட்டுள்ளன என்பதும் கருத்துக்கணிப்பில் கண்டறியப்பட்ட உண்மையாகும். தேர்வில் உயர்ந்த மதிப்பெண்களைப் பெற்றிருந்த மாணவர்களும் தமிழில் சரளமாக உரையாடச் சிரமப்படுவதாகக் குறிப்பிட்டிருந்தனர். இந்நிலைக்கு என்ன காரணம் என்று தீர ஆராயப்பட்டது. பாடங்கள் பெரிதும் எழுத்துத் தமிழைச் சார்ந்திருந்ததும், தேர்வு அடிப்படையிலான கற்பித்தல் அணுகுமுறையைப் பலரும் பின்பற்றியதே இப்பின்னடைவுக்குக் காரணமெனக் கண்டறியப்பட்டது. எனவே, இந்நிலையைச் சீரமைக்க எத்தகைய மாற்றம் அவசியமென ஆராய்ந்தபோது, தமிழ் வகுப்பறைகளில் பேச்சுத் தமிழை முதன்மைப்படுத்தும் முயற்சி நல்ல பலனைத் தருமென ஆய்வுக்குழுவினர் உறுதியாக நம்பினர். இக்கருத்தைக் கல்வியாளர்கள் பலரும் வரவேற்றனர்.

தமிழ் ஓர் இரட்டை வழக்கு மொழி. அது இரண்டு வடிவங்களைக் கொண்டது. ஒன்று எழுத்துத் தமிழ்; மற்றது பேச்சுத் தமிழ். எழுத்திலும் முறை சார்ந்த சூழல்களில் மட்டுமே பயன்படுவது எழுத்துத் தமிழ். பேச்சுத் தமிழோ அன்றாட வாழ்க்கையில் ஒருவரோடு ஒருவர் தொடர்புகொள்ளப் பயன்படுவது. எந்த மொழியிலும், எழுத்தைவிடப் பேச்சே அதிகப் பயன்பாடு உடையது. இது எல்லா மொழிகளுக்கும் பொருந்தும் உண்மையாகும். பள்ளி வாழ்க்கைக்குப் பிறகும் ஒருவருக்கு அதிகம் பயன்படுவது பேச்சு வடிவமே என்பதை எவரும் ஒப்புவர். எனவே, பள்ளி வாழ்க்கையின்போது மாணவர்களுக்குப் பேச்சுத் தமிழில் நல்ல அடிப்படையை ஏற்படுத்திவிட்டால், வாழ்நாள் முழுதும் அம்மொழியோடு அவர்கள் தொடர்பு வைத்திருப்பர்.

கற்பித்தல் அணுகுமுறைகளில் மாற்றங்கள்

பேச்சுத்தமிழோடு, அமல்படுத்தப்பட்ட வேறு சில பரிந்துரைகளும் தமிழ் மொழி கற்றல் கற்பித்தலில் பெரும் தாக்கங்களை ஏற்படுத்தின. தேர்வு நோக்கிய கற்பித்தல் அணுகுமுறையை விடுத்து, மாணவர்களை மையமாகக்கொண்ட பாடத்திட்டத்தை உருவாக்க வேண்டுமென்பதும், தமிழ் மொழியின்பால் மாணவர்களின் ஈடுபாட்டை

வளர்க்க ஆர்வத்தைத் தூண்டும் பாடநூல்களும், உற்சாகமான வகுப்பறைச் சூழல்களும் அமைய வேண்டும் என்பதும் குறிப்பிடத்தக்க பரிந்துரைகளாகும்.

இப்பரிந்துரைகளை அமல்படுத்த மாணவர்களைக் கற்றலில் ஈடுபடுத்தும் நடவடிக்கை சார்ந்த கற்பித்தல்முறையில் ஆசிரியர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்பட்டன. பல்வேறு குடும்ப மொழிப் பின்னணிகளைக் கொண்ட மாணவர்களின் தேவைக்கேற்ப வேறுபடுத்த கற்பித்தல் அணுகுமுறைகளும் உத்திகளும் அறிமுகப்படுத்தப்பட்டன. மாணவர்களின் திறமறிந்து கற்பிக்கும் அணுகுமுறை மாணவர்களைப் பெரிதும் கவர்ந்தது. குறிப்பாகத் தொடக்கநிலையில் முதல் சில ஆண்டுகளில் விளையாட்டும் நடவடிக்கைகளும் சார்ந்த கற்பித்தல் உத்திகள் மாணவர்களிடையே இருந்த அச்சத்தையும் தயக்கத்தையும் போக்கி உற்சாகமாகத் தமிழ் பயிலும் சூழலை உருவாக்க உதவின. தமிழ்க் கல்வியில், அடிப்படைத் தேவையான தமிழ் எழுத்துக்கள் கற்பித்தலில் மாணவர்களுக்கு ஆழமான அடிப்படையை அமைத்துத்தர, எழுத்து அறிமுகம் ஈராண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டன.

எழுத்து அறிமுகத்தோடு, கீழ் வகுப்புகளில், பாடல்கள், கதைகள் சார்ந்த கற்பித்தல் நடவடிக்கைகளும் பெருமளவில் மேற்கொள்ளப்பட்டன. பாடல்களும் கதைகளும் இளஞ்சிறார்களை எளிதில் ஈர்க்கக்கூடியவையாகும். இவற்றின்வழி மாணவர்களுக்கு எளிய சொற்களையும் தொடர்களையும் அறிமுகப்படுத்துவதோடு மொழியின்பால் ஆர்வத்தையும் ஏற்படுத்திவிட முடியுமென ஆசிரியர்கள் அனுபவபூர்வமாக உணர்ந்துள்ளனர். இவற்றினூடே, மாணவர்களைப் பேச வைக்கும் பேச்சுப் பயிற்சிகளையும் ஆசிரியர்கள் மேற்கொண்டு வெற்றிகண்டுள்ளனர்.

<u>உற்சாகமூட்டும் பாடநூல்களும் மொழி நடவடிக்கைகளும்</u>

தமிழ் பயிலும் மாணவர்களுக்கெனப் பாடநூல்களும் பயிற்சிநூல்களும் தொடக்கநிலை, உயர்நிலை வகுப்புகளுக்கென உருவாக்கப்படுகின்றன. சிங்கப்பூர்ச் சூழலுக்குப் பொருந்தக்கூடிய பாட உள்ளடக்கத்தைக்கொண்டு மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டும் பாடப்பகுதிகளும் பயிற்சிகளும் தயாரித்து வழங்கப்படுகின்றன. தமிழ் மரபையும் பண்பாட்டையும், இன்றைய சூழலில் மாணவர்களுக்குப் பொருந்தக்கூடியவகையில் மாணவர்களுடைய வாழ்க்கையோடு தொடர்புபடுத்திப் பாடங்கள் தயாரிக்கப்படுகின்றன. அவற்றையொட்டி மாணவர்களோடு நடத்தப்படும் கலந்துரையாடல்களும், நடவடிக்கைகளும் அவர்களின் வயதுக்கும் அனுபவத்துக்கும் ஏற்புடையனவாய் இருப்பதில் ஆசிரியர்கள் தனிக்கவனம் செலுத்துகின்றனர். இத்தகைய முயற்சிகளால் தமிழ்மீது மாணவர்களின் ஈடுபாட்டையும் ஆர்வத்தையும் வளர்க்க முயல்கின்றோம்.

இலக்கணம் செய்யுள் பயிற்றலில் புத்தாக்க முயற்சிகள்

மொழியின் அமைப்பையும் பயன்பாட்டையும் ஒருவருக்கு உணர்த்த உதவுவதே இலக்கணமாகும். இலக்கணப் பகுதியின் கடினத்தன்மையைக் கண்டு தமிழை வெறுத்தொதுக்கிய மாணவர்கள் பலருண்டு. நுட்பமான இலக்கணக் கூறுகளை விடுத்து, மொழி கற்றலுக்கு இன்றியமையாத இலக்கணக் கூறுகளை மட்டுமே பாடத்திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், மாணவர்களுக்குச் சலிப்பு ஏற்படுத்தாத வகையில் இலக்கணப் பயிற்சிகளை வாசிப்புப் பகுதிகளோடும், மொழித்திறன் பயிற்சிகளோடும் இணைத்துக் கற்பிக்க ஆசிரியர்களுக்கு வழிகாட்டப்படுகிறது. மாணவர்கள் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் பாடல்களின் வழியாகவும், நடவடிக்கைகளின் வழியாகவும் இலக்கணக் கூறுகளைக் கற்பிக்கும் புதிய உத்திகளை ஆசிரியர்கள் பலரும் கையாளுகின்றனர்.

சிறந்த இலக்கியச் செல்வத்தின் கருவூலமாக விளங்கும் தமிழ் மொழியில் நிறைந்துள்ள செய்யுள், பழமொழி, மரபுத்தொடர் முதலான இலக்கியப் படைப்புகளை மாணவர்களுக்குக் கொண்டுசேர்ப்பது நம் கடமையாகும். இப்பகுதிகளைத் தேர்வுக்கென வெறுமனே மனனஞ்செய்யும் முறை மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இன்றைய சூழலில் மாணவர்களுக்கு நல்ல விழுமியங்களைச் சேர்க்கும் திருக்குறள் முதலான நீதிநெறிப் பாடல்களும், மொழியின் தனித்தன்மையையும் ஆழத்தையும் விளக்கும் பழமொழி, மரபுத்தொடர்கள் முதலானவை தெரிவுசெய்யப்பட்டுள்ளன. மாணவர்கள் மனத்தில் ஆழப் பதியச்செய்து பேச்சிலும் எழுத்திலும் பயன்படும்படி புத்தாக்க முறைகளில் இவை கற்பிக்கப்படுகின்றன.

தமிழ் மொழி கற்றலில் சமூகத்தின் ஈடுபாடு

தமிழ் மொழி கற்றல் என்பது தமிழ் வகுப்பறைகளுக்கு அப்பாலும் செல்ல வேண்டும் என்பதனைக் கருத்திற்கொண்டு, முக்கியப் பரிந்துரை ஒன்று முன்வைக்கப்பட்டது. தமிழ் மொழி கற்றலில் சமூகத்தின் பங்களிப்பும் வலுவாக இடம்பெறுதல் வேண்டும் என ஆய்வுக்குழுவினர் பணித்திருந்தனர். இதனைச் செயற்படுத்தக் கல்வி அமைச்சு, தமிழ் மொழி கற்றல் வளர்ச்சிக் குழு என்னும் ஓர் அமைப்பை உருவாக்கியது. இந்தக் குழுவில் தமிழ் அமைப்புகளில் முக்கியப் பொறுப்பில் இருந்தோர் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டிருந்தனர். அரசாங்கத்தின் ஆதரவில் இயங்கும் இக்குழு பள்ளிகளில் தமிழ் மொழி பயிலும் மாணவர்களெனப் பல கற்றல் நடவடிக்கைகளையும் பயிற்சி வகுப்புகளையும் திட்டமிட்டு நடத்தி வருகிறது. தமிழ் தொடர்பாக ஏனைய தமிழ் அமைப்புகள் நடத்தும் பயனுள்ள நிகழ்ச்சிகளுக்கு நிதியாதரவும் தந்து ஊக்குவித்து வருகிறது. கடந்த 5 ஆண்டுகளாக, ஏப்ரல் மாதத்தில் கொண்டாடப்படும் ஒரு மாதக் கால தமிழ் மொழி விழா ஏற்பாட்டில் தமிழ் மொழி கற்றல் வளர்ச்சிக் குழுவின் பங்களிப்பும் ஈடுபாடும் குறிப்பிடத்தக்க வகையில் அமைந்திருந்தன.

இவ்வாறு 2005-ஆம் ஆண்டு நடத்தப்பட்ட மறு ஆய்வு நடவடிக்கையின் பயனாகப் பல்வேறு பரிந்துரைகள் கடந்த 5 ஆண்டுகளாக நடைமுறைப்படுத்தப்பட்டு வந்துள்ளன. இந்தப் பரிந்துரைகள் பள்ளிகளிலும் சமூகத்திலும் தமிழ் மொழி கற்றல் கற்பித்தலில் விரும்பத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. இந்த வெற்றிகளைக் கண்டு மெத்தனமாக இருந்துவிடாமல், இளம் சந்ததியினரிடையே தமிழ் மொழியின் ஆர்வத்தையும் ஈடுபாட்டையும் தக்க வைத்துக்கொள்ளும் சவாலையும் தமிழ்ச் சமூகம் எதிர்நோக்கியுள்ளது. தமிழுக்கு மட்டுமன்றி, ஏனைய தாய்மொழிகளும் இந்தச் சவாலை எதிர்நோக்கியதால், கல்வி அமைச்சு, 2010-ஆம் ஆண்டு முழுதும் மற்றொரு மறு ஆய்வு நடவடிக்கையை மூன்று மொழிகளுக்கும் நடத்தியது. சிங்கப்பூரின் பன்மொழிச் சூழலைக் கருத்திற்கொண்டு தொடர்ந்து தாய்மொழிகள் நம் மாணவரிடத்து வாழும் மொழிகளாக நிலைத்திருக்கச் செய்ய வலுவான அடிப்படைகளை உருவாக்கவும் புதிய உத்திகளை வகுக்கவும் இவ் ஆய்வு நடவடிக்கை வழியமைத்துக் கொடுத்தது.

2010-ஆம் ஆண்டு மறு ஆய்வு நடவடிக்கையும் பரிந்துரைகளும்

இளம் சிங்கப்பூரர்களிடையே தொடர்ந்து தாய்மொழி ஆர்வத்தைப் பெருக்கவும் திறமையாக மொழியைக் கையாளும் திறத்தை வளர்க்கவும் ஆய்வுக்குழுவினர் கருத்துப்பரிமாற்றம், கலாசாரம், இணைப்பு என்னும் மூன்று பரந்துபட்ட குறிக்கோள்களை வகுத்துக்கொண்டு செயற்பட்டனர்.[3]

கருத்துப் பரிமாற்றமே மொழியின் அடிப்படைப் பயனாகும். சிங்கப்பூரில் மாணவர்கள் ஆங்கில மொழியில் தேர்ச்சி பெறுவதோடு தாய்மொழியில் திறம்படக் கருத்துப்பரிமாற்றம் செய்யும் திறம் பெறுவதும் அவசியமாகும். இது போட்டித்தன்மை மிக்க உலகில் சாதகமான நிலையைச் சிங்கப்பூரர்களுக்கு ஏற்படுத்தித் தரும். பன்மொழிச் சுழல் நிலவும் சிங்கப்பூரில், தாய்மொழிக் கற்பதன் வாயிலாக மாணவர்கள் தங்கள் கலாசாரம், பாரம்பரியம், இலக்கியம், வரலாறு ஆகியவற்றில் தெளிவுபெறுகிறார்கள். இவற்றின்மூலம் தங்கள் அடையாளத்தை உணர்ந்து, தனித்தன்மையை உருவாக்கிக்கொள்கிறார்கள். இந்தப் படிப்பினைகளே வாழ்க்கைக்குத் தேவையான பண்பாட்டு விழுமியங்களையும் மரபுகளையும் கட்டிக்காக்க அவர்களுக்கு துணைநிற்கின்ற கூறுகளாக அமைகின்றன.

இன்றைய சூழலில் நாடுகளுக்கிடையே அணுக்கமான பிணைப்பும் தொடர்பும் உருவாகிவிட்டது. உலக மக்களோடும் தொடர்புகொள்ளும் வாய்ப்பு வசதிகள் பல்கிப் பெருகிவிட்டன. நேரிலோ இணையத்திலோ ஒருவர் மற்றவரோடு கருத்துப் பரிமாறிக்கொள்வது அன்றாட நிகழ்வாக மாறிவிட்டது. இந்நிலையில் ஒரு மாணவர்

[3] தாய்மொழிகள் மறு ஆய்வுக்குழு அறிக்கை 2010 – கல்வி அமைச்சு, சிங்கப்பூர்

தம் தாய்மொழியிலும் திறம்பெற்றிருப்பது, உலக அளவில் மற்றவர்களோடு அம்மொழியைப் பயன்படுத்தித் தொடர்புகொள்ளும் வாய்ப்பினை மேலும் அதிகரித்துள்ளது.

இந்த மூன்று குறிக்கோள்களை மையமாகக்கொண்டே தாய்மொழிக் கல்வியின் அவசியத்தை மாணவர்களுக்கு வலியுறுத்த வேண்டும். தமிழ் மொழியைக் கற்பதால் உள்ள பயன்பாட்டை மாணவர்களுக்கு உணர்த்தும்போது, அவர்கள் அதனை விரும்பிக் கற்கவும், அதனை அன்றாட வாழ்வில் பயன்படுத்தவும் முனைவர்.

<u>இருவழிக் கருத்துப்பரிமாற்றத் திறன்களும் தொழில்நுட்பத் திறன்களும்</u>

இதுவரை மொழிக் கல்வியில் அடிப்படை நான்கு மொழித்திறன்களான, கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் என்பவை வலியுறுத்தப்பட்டு வந்துள்ளன. ஆனால், இந்த மறு ஆய்வு நடவடிக்கையின் மூலமாக, பேசுதல் திறனிலும், எழுதுதல் திறனிலும் புதிய பரிமாணங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அன்றாட வாழ்வில், கருத்துப்பரிமாற்றத் திறன்களே அதிகம் பயன்படுகின்றன. அந்த வகையில், பேசுதல், எழுதுதலில் இருவழிக் கருத்துப்பரிமாற்றத் திறன் வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. இருவழித் தொடர்பை மேம்படுத்தும் பேச்சுவழி, எழுத்துவழிக் கருத்துப் பரிமாற்றத் திறன்களை மாணவர்களிடையே வளர்க்கப் பாடத்திட்டத்தில் தகுந்த மாற்றங்கள் செய்யப்படவுள்ளன. இம்முயற்சிகளில் தகவல் தொழில்நுட்பம் அதிகமாகப் பயன்படுத்தப்படும். நம் இளைஞர்கள் எந்நேரமும் இணையத்துடனே இணைந்திருக்கிறார்கள். அவர்களை அதிகம் ஈர்க்கும் இணையத்தைக்கொண்டே தமிழ் மொழியில் கருத்துப்பரிமாற்றத் திறன்களை மேம்படுத்திக்கொள்ளும் வழிவகைகளை நாம் ஆராய வேண்டும். நேர்க்கு நேர் பேசத் தயங்கும் மாணவர்களும் இணையத்தில் பேச்சுவழியாகவும், எழுத்து வழியாகவும் உற்சாகமாகக் கருத்துப் பரிமாற்றம் செய்துகொள்வதைக் காண்கிறோம். இந்த 21-ஆம் நூற்றாண்டில், இணையத்தை விடுத்து ஆக்கபூர்வமான முறையில் கற்றலை நிகழ்த்திவிட முடியாது. ஆகவே, கற்றலுக்கு இணையத்தையும் அரவணைத்துக்கொண்டு செயற்பட்டால் எளிதில் நம் இலக்கை அடைந்துவிடலாம். இத்தகைய புதிய முயற்சிகளும் மாற்றங்களும், மேலும் பயன்முனைப்புமிக்க முறையிலும் அர்த்தமுள்ள வகையிலும் மொழியைப் பயன்படுத்தக்கூடிய ஆற்றலை மாணவர்களிடையே வளர்க்கும் என நாம் உறுதிப்படக் கூறலாம்.

<u>ஆக்கபூர்வமான மதிப்பீட்டு நடவடிக்கைகள்</u>

சென்ற ஆண்டு நடந்த ஆய்வின்வழி வெளிப்பட்ட இன்னொரு முக்கியப் பரிந்துரை மதிப்பீடு தொடர்பானது. நீண்ட காலமாகவே, மதிப்பீடு என்பது மாணவர்களைப் பயமுறுத்தும் கருவியாக இருந்து வந்துள்ளது. மொழியில் நன்கு தேர்ச்சியுள்ள

மாணவர்களும் தேர்வை விரும்பி ஏற்பதில்லை. இதற்கு முக்கியக் காரணம் நாம் மதிப்பீடு என்ற ஒன்றை முறையாகப் பயன்படுத்தத் தவறியதே ஆகும். மொழிப் பாடத்தைப் பொறுத்தமட்டில், மாணவர்களின் மொழித் திறன்களின் அடைவுநிலையை அளவிட்டறிவதற்குப் பயன்படும் நடவடிக்கையே மதிப்பீடாகும். ஆனால், தமிழ் மொழி கற்றலில், பெரும்பாலும் முறைசார்ந்த மதிப்பீட்டு நடவடிக்கையே ஆதிக்கஞ்செலுத்தி வந்துள்ளது. அதுவும் அது பெரிதும் எழுத்துத்திறனைச் சார்ந்தே நிகழ்ந்துள்ளது. மாணவர்களிடையே மொழிமீது வெறுப்பு ஏற்படும் அளவுக்கு மதிப்பீட்டுத் தேர்வுகள் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன. கடந்த சில ஆண்டுகளாக, மதிப்பீட்டு நடவடிக்கைகள் குறித்த தவறான கருதுகோள்கள் மாற்றப்பட்டுச் சரியான புரிந்துணர்வு ஏற்படுத்தும் வகையில் பயிற்சி பட்டறைகள் ஆசிரியர்களுக்கு நடத்தப்பட்டு வருகின்றன. இந்த முயற்சியின் பயனாகத் தமிழ் மொழி கற்றல் கற்பித்தலில் நிறைவான பலன்களை ஆசிரியர்கள் காணத் தொடங்கியுள்ளனர். மாணவர்களின் மொழித் திறன் அடைவுநிலைகளை அவ்வப்போது அவர்களுக்கு எடுத்துக்காட்டித் திறன் மேம்பாட்டுக்கு உரிய வழிமுறைகளையும் ஆலோசனைகளையும் ஆசிரியர்கள் உடனுக்குடன் தருவதால் மாணவர்கள் உற்சாகத்தோடு மொழி கற்கும் சூழல் வகுப்பறையில் உருவாகியுள்ளது.

<u>தேர்ச்சிநிலை விளக்கக்குறிப்புகள் உருவாக்கம்</u>

மாணவர்களின் திறன் வளர்ச்சிநிலையை அளவிட்டறிவதில் ஆசிரியர்கள் பலருக்கும் இடர்ப்பாடுகள் ஏற்பட்டுள்ளன. மாணவர்களின் மொழித் தேவைகளைப் புரிந்துகொண்டு, சரியான மொழி மேம்பாட்டு ஆலோசனைகள் வழங்க ஆசிரியர்களுக்கு ஆழமான மொழியாற்றலும், நிபுணத்துவப் பயிற்சியும், பணி அனுபவமும் மிகவும் அவசியமாகும். இதில் ஆசிரியர்களுக்குத் தகுந்த முறையில் உதவும்பொருட்டுத் தேர்ச்சிநிலை விளக்கக்குறிப்புகள் பட்டியலை உருவாக்கும் முயற்சியில் கல்வி அமைச்சு இப்போது ஈடுபட்டுள்ளது. தொடக்கநிலை முதற்கொண்டு தொடக்கக்கல்லூரி வரையிலும் ஒவ்வொரு கட்டத்திலும் மாணவரின் மொழி அடைவுநிலையைச் சரியாக அளவிட்டறியவும், தகுந்த முறையில் மாணவருக்கு வழிகாட்டி உதவவும் ஆசிரியர்களுக்கு இது பெரிதும் பயன்படும். இந்தத் தேர்ச்சிநிலை விளக்கக்குறிப்புகளின் துணைகொண்டு ஆசிரியர்கள் பொருத்தமான முறையில் தங்கள் கற்பித்தல், மதிப்பீட்டு நடவடிக்கைகளைத் திட்டமிட்டு நடத்தலாம். மறு ஆய்வு நடவடிக்கையின் பயனாகத் தொடங்கப்பட்ட இம்முயற்சி மிகவும் கடினமான ஒரு பணியாகும். கல்வியாளர் பலரின் கூட்டுமுயற்சியும் நிபுணத்துவமும் இன்றி இப்பணி எளிதில் நிறைவுறாது. ஆனால், இப்பணி முழுமைபெறும்போது அது தரமான கற்றல் கற்பித்தலுக்குப் பாதை அமைத்துத் தரும் என்பதை நாம் உறுதியாக நம்பலாம்.

மொழி ஆர்வத்தை வளர்க்கும் தகவல் ஊடகங்கள்

பன்மொழிச் சூழல் நிலவும் சிங்கப்பூர் போன்ற நாடுகளில், மொழி கற்றலுக்கு இல்லம், பள்ளி, சமூகம் ஆகியவற்றின் கூட்டுமுயற்சி இன்றியமையாதது. இந்த மூன்றிலும் தகவல் ஊடகங்களின் தாக்கம் பெருமளவில் இருப்பதை நாம் அனைவரும் அறிவோம். அண்மைக் காலங்களில் தகவல் ஊடகங்களான வானொலி, தொலைக்காட்சி, இணையம் போன்றவற்றில் தமிழின் பயன்பாடு மேம்பட்டு வருவது மகிழ்ச்சி தரும் செய்தியாகும். உள்ளூர் நிகழ்ச்சிகளுக்கும் நாடகங்களுக்கும் இளையரிடையே வரவேற்பு பெருகி வருகிறது. இணையத்திலும் இளையர்கள் அதிகமானோர் தமிழ் சார்ந்த செய்திகளையும் ஒளிக்காட்சிகளையும் நாடிச் செல்வதைக் காண முடிகிறது. இளையர்களிடம் இருக்கும் இந்த நாட்டத்தைத் தமிழ் மொழி கற்றல் கற்பித்தலுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள வழியுண்டு. இதை உணர்ந்தே தமிழ் மொழிக் கலைத்திட்டத்தில் தகவல் தொடர்புச்சாதனக் கற்பித்தல் வளங்களை அதிகம் சேர்த்துள்ளோம். கடந்த இருபது ஆண்டுகளாகத் தயாரிக்கப்பட்டுள்ள எல்லா வளங்களையும் கல்வி அமைச்சின் இணையத்தளத்தில் தொகுத்து வழங்கியுள்ளோம். கற்பித்தலுக்குத் திட்டமிடும் ஆசிரியர்கள் இவற்றுள் பொருத்தமானதைத் தங்கள் கற்பித்தல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்திக்கொள்ளலாம். தகவல் தொழில்-நுட்பத்தைப் பொறுத்தவரையில், நம் இளையர்களிடமிருக்கும் உள்ள நாட்டத்திற்கும் திறமைக்கும் ஈடுகொடுக்கும் அளவுக்குத் தமிழாசிரியர்கள் தங்கள் திறன்களை மேம்படுத்திக்கொள்வது அவசியம். இது மிகப் பெரிய சவாலாகும். இச்சவாலை எதிர்நோக்கும் ஆசிரியர்களுக்கு உதவும் வகையில் பலதரப்பட்ட தகவல் தொழில்நுட்பப் பயிற்சிகள் திட்டமிட்டு நடத்தப்படுகின்றன. இணையத்தளத்தைப் பயன்படுத்திக் கற்றல் கற்பித்தலை நிகழ்த்துவதற்கு ஏதுவாகக் கல்வி அமைச்சு தாய்மொழிக் கருத்துப்பரிமாற்றத் தளம் ஒன்றை உருவாக்கியுள்ளது. இந்த இணையத்தளத்தின்வழி ஆசிரியர்கள் பாடங்களையும் மதிப்பீட்டு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளலாம். குறிப்பிட்ட மொழி நடவடிக்கையில் மாணவரின் செயல்திறன் குறித்து ஆசிரியரும் சக மாணவரும் கருத்துத்தெரிவிப்புச் செய்ய இத்தளத்தில் வசதி உண்டு. தமிழ் கற்றல் கற்பித்தலில் அறிமுகங்காணும் இத்தகைய புதுமுயற்சிகள் இளையர்களை வெகுவாக ஈர்க்கக்கூடியவை.

முடிவுரை:

உலகமயமாகி வரும் சூழலில், சிங்கப்பூரில் நம் இளந்தலைமுறையினர் தங்கள் அடையாளத்தையும் மறவாமல், தொடர்ந்து தமிழ் மொழியைக் கற்பதில் ஆர்வமும் ஈடுபாடும் காட்டுவதற்கு வாய்ப்புகளை உருவாக்குவதில் இல்லங்களும், பள்ளிகளும், சமூகம் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டும். முழு ஈடுபாட்டுடன் பணியாற்றும் தமிழாசிரியர்கள் அயராத முயற்சிக்குக் கடந்த சில ஆண்டுகளாக நல்ல பலன்கள் கிடைத்துள்ளன. எனினும், சமூகநிலையிலும் குடும்பப் பின்னணியிலும் தொடர்ந்து

பல மாற்றங்கள் நிகழ்ந்துகொண்டிருப்பதைக் கருதிப் பார்த்து, தமிழ் மொழி கற்றலிலும் கற்பித்தலிலும் தகுந்த மாற்றங்களையும் ஏற்றங்களையும் செய்ய வேண்டுவது அவசியமாகும். பாடத்திட்டம், கற்பித்தலியல், மதிப்பீடு ஆகியவற்றை அவ்வப்போது புதுப்பித்து இளையர்கள் மனங்கொள்ளும் வகையில் கற்பித்தல் அமைய வேண்டும். மொழி கற்றல் கற்பித்தலில் எதிர்ப்படும் சவால்களைச் சமாளித்து நம்மைப் புதுப்பித்துக்கொள்ளவதால் மட்டுமே தமிழைத் தொடர்ந்து ஒரு வாழும் மொழியாகத் திகழச் செய்ய முடியும். சிங்கப்பூருக்கு மட்டுமின்றித் தமிழ் மொழி வழங்கும் எல்லா நாடுகளுக்கு இது பொருந்தக்கூடிய ஒன்றாகும்.

புலம்பெயர்ந்த நிலையில் தமிழ்க்கல்வி – ஜெர்மனி

Dr. மனோன்மணி சண்முகதாஸ்,
முன்னாள் ஆய்வாளர், கக்சுயின் பல்கலைக் கழகம், ஜப்பான்.

பேராசிரியர் Dr. அ. சண்முகதாஸ்,
தகைசார் வாழ்நாட் பேராசிரியர் (யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்)

முன்னுரை

தமிழர் தற்போது 40க்கு மேற்பட்ட நாடுகளில் வாழ்கின்றனர். "ஒரு மொழி, பல நாடுகள்" என்ற அடிப்படையில் அவர்கள் ஒரு குழுவினராகவே கருதப்படுகின்றனர். இந்திய தமிழ்நாடு மாநிலத்தில் தமிழ் உத்தியோக மொழியாக அமைகின்றது. சிங்கப்பூரிலும் இலங்கையிலும் உத்தியோக மொழிகளுள் ஒன்றாகத் தமிழ் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. ஐரோப்பா, அவுஸ்திரேலியா, கனடா, ஐக்கிய இராச்சியம், அமெரிக்கா ஆகிய நாடுகளிலே வாழும் புலம்பெயர் தமிழர் தமிழ் மொழியைப் பேணி வளர்க்க-வேண்டும் என்பதிலே ஆர்வமுடையவர்களாக இருக்கின்றனர். இங்கு தமிழ்ப் பிள்ளைகளுக்குத் தமிழ் மொழி, இலக்கியம், கலை, பண்பாடு தொடர்பான வகுப்புகள் நடைபெறுகின்றன. இத்தமிழ்க் கல்வியின் வலிவு மெலிவுகளைப் பல ஆய்வாளர்கள் தம்முடைய கட்டுரைகளிலே குறிப்பிட்டுள்ளனர். (எடுத்துக்காட்டாக, பார்க்கவும்: A. Kandiah (2002), Kulam Shanmugam (2007), Parvathy Kandasamy (2007).

ஆய்வுச் சிக்கல்

புலம்பெயர்ந்த நிலையில் தமிழ்க் கல்வி தொடர்பாக எதிர்மறைக் கூற்றுக்களையே நாம் கேட்டுவருகிறோம். தாய் நாடுகளிலிருந்து புலம்பெயர்ந்த பிள்ளைகள் ஆர்வமுடன் தமிழ்க் கல்வியைக் கற்கக்கூடும்; அடுத்த தலைமுறை இக்கல்வியினைத் தொடராது என்னும் கருத்தே பரவலாகக் கூறப்படுகிறது. இது ஐரோப்பாவைப் பொறுத்த மட்டில் பொருந்தாத ஒரு கூற்று ஆகும். ஆங்கில மொழி பேசும் நாடுகளாகிய அவுஸ்திரேலியா, கனடா, ஐக்கிய இராச்சியம், அமெரிக்கா ஆகியவற்றிலே வாழும் தமிழ்ப் பிள்ளைகள் தொடர்பாக இக்கூற்றுப் பொருத்தமாக அமையலாம். ஆங்கில ஆட்சிக்குக் கீழே பல நூற்றாண்டுகள் வாழ்ந்த நம்மவர்க்கு ஆங்கில மொழி நன்கு பரிச்சயமாக இருந்துவந்துள்ளது. ஏனைய இனத்தவர்களை விட தமிழர்களாகிய நாம் வீட்டிலும், தமிழ் நண்பர்களை வீதிகளிலே காணும்போதும் ஆங்கிலத்திலே பேசி மகிழ்ந்து வருகிறோம். சீன, ஹிந்தி, துருக்கி, ஜப்பானிய மொழி பேசுகின்றவர்கள்; இவ்வாறு செய்வதில்லை. இதனால் இந்நாடுகளில் தமிழ் கற்றல், கற்பித்தல் தொடர்பாகப் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. இந்நாடுகளில் வாழும் பெரும்பாலான தமிழ்ப் பிள்ளைகள் வீடுகளில் ஆங்கிலத்திலேயே பேசுகின்றனர்.

ஆனால், ஐரோப்பிய நாடுகள் தொடர்பாக மேற்படி கூற்று ("தாய் நாடுகளிலிருந்து புலம்பெயர்ந்த பிள்ளைகள் ஆர்வமுடன் தமிழ்க் கல்வியைக் கற்கக்கூடும்; அடுத்த தலைமுறை இக்கல்வியினைத் தொடராது என்னும் கருத்தே பரவலாகக் கூறப்படுகிறது.") பொருத்தமானதன்று. ஐரோப்பிய நாடுகளிலே புலம்பெயர் பிள்ளைகளின் தமிழ்க் கல்வி எவ்வாறு அமைகின்றது என்பதை முழுமையாக நோக்கமுடியாத காரணத்தால், வகைமாதிரிக்கு ஜெர்மனி நாட்டில் நடைபெறும் தமிழக் கல்வி பற்றியே இக்கட்டுரை நோக்குகின்றது.

ஜெர்மனியில் புலம்பெயர் தமிழ்க்கல்வியின் வரலாறு ஜெர்மனி முதலாய ஐரோப்பிய நாடுகளில் தமிழ்ப் பிள்ளைகள் வீடுகளில் தம்முடைய பெற்றோர்களுடன் தமிழிலேயே பேசுகின்றனர். டொச், சுவிஸ், பிரெஞ்சு முதலாய மொழிகளைப் பேசத் தெரியாத பெற்றோர்கள் தம்முடைய பிள்ளைகளுடன் தமிழிலே மட்டும் பேசுவதால், பிள்ளைகளும் தமிழிலே பேசப் பழகிவிடுகின்றனர். இவர்களுடைய தமிழ்க் கல்வியினை நடத்தப் பெற்றோர்களும் கல்விமான்களும் பல ஆண்டுகளாக முயற்சிசெய்து வருகின்றனர். இன்று ஜெர்மனி நாட்டிலே 130 தமிழ்ப் பாடசாலைகளும் (தமிழாலயங்கள்), 900க்கு மேற்பட்ட தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்களும், 6000க்கு மேற்பட்ட தமிழ் கற்கும் மாணவர்களும் உளர். ஏறக்குறைய 140க்கு மேற்பட்ட இளைய ஆசிரிய பயற்றுநர்கள் பணிசெய்கின்றனர். இவர்கள் ஜெர்மனியிலே பிறந்தவர்கள். டொச் மொழியிலே உயர் கல்வி கற்பவர்கள். பன்னிரண்டு ஆண்டுகள் தமிழாலயங்களில் தமிழ் படித்தவர்கள். இரண்டாம் தலைமுறையினரான இவர்கள் மூன்றாம் தலைமுறையினர்க்குத் தமிழ்க் கல்வி புகட்டுகிறார்கள். இத்தகையோருடைய தமிழ்க் கல்வி மேம்பாட்டிலே நாம் கவனம் செலுத்தவேண்டியுள்ளது. சென்ற ஆண்டு பேராசிரியர் சண்முகதாசும் நானும் இவ்விளைய ஆசிரிய பயிற்றுநர்க்குத் தனியான பணியவைகள் நடத்தினோம். இவர்களைத் தமிழ் கற்பிக்கும் செயற்பாட்டில் சரியான பயிற்சி கொடுத்தால் நம்முடைய மூன்றாம் தலைமுறையினர் மகிழ்ச்சியுடன் தமிழ்க் கல்வியை மேற்கொள்வர்.

<u>தமிழாசிரியரின் தகைமைகள்</u>

ஜெர்மனியிலே தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்கள் தொடர்பாக ஒரு செய்தி என்னவெனில் அவர்கள் எவரும் தம்முடைய பணிக்கு ஊதியம் பெறுவதில்லை. அவர்களுடைய கல்வித் தகைமைகளைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்:

(1) பட்டதாரிகள்

(2) பயிற்றப்பட்ட ஆசிரியர்கள்

(3) க.பொ.த. உயர் தரம் / சாதாரண தரம்

(4) தமிழாலயங்களில் ஆண்டு 12 வரை படித்த இளம் ஆசிரியர்கள்.

ஊதியம் இல்லாமல் கற்பிப்பதனால் அவர்களிடம் ஓர் அர்ப்பணிப்பு உணர்வு மேலோங்கி இருப்பதை உணரக்கூடியதாயுள்ளது. அங்குள்ள 900 தமிழ் ஆசிரியர்களுள் 700க்கு மேற்பட்ட ஆசிரியர்களை நாம் சென்ற ஆண்டு பல்வேறு நகரங்களிலும் நடைபெற்ற கருத்தரங்குகளில் சந்திக்க முடிந்தது. தமிழாலயங்களிலே கற்று ஆசிரியர்களாகக் கற்பிக்கும் இளையவர்கள் தமிழ் கற்கும் மாணவர்களை ஈர்ப்பவர்களாயுள்ளனர். ஏனைய ஆசிரியர்கள் டொச் மொழியிலே பாண்டித்தியம் பெறாதவர்கள். இளைய ஆசிரியர்கள் டொச் மொழியிலே உயர்கல்வி பெற்றவர்கள். இவர்கள் தமிழ் இலக்கியப் பாடல்களின் பொருளை மாணவர்கள் கிரகிக்கமுடியாத வேளைகளில் டொச் மொழியூடாக விளக்கம் கொடுப்பர். ஐரோப்பிய நாடுகள் எல்லாவற்றிலும் இத்தகைய இளைய ஆசிரியர்கள் உள்ளனர். நாம் புலம்பெயர் நாடுகளிலே தமிழ்க் கல்வியூடாக இத்தகைய இளம் ஆசிரியர்களை உருவாக்கினால் தமிழ் மொழி "மெல்லச் சாகும்" என்ற கூற்றுக்கே இடமில்லாது போய்விடும். இத்தகைய ஆசிரியர்களுக்குப் பொருத்தமான பயிற்சிகளை வழங்கவேண்டும். நமது செவ்வியல் தமிழ் இலக்கியங்களை டொச் மொழியிலே பெயர்ப்பதற்கு இவ்விளம் ஆசிரியர்கள் பேருதவியாயிருப்பர்.

<u>பாடநூல்கள்</u>

மழலையர் தொடக்கம் பன்னிரண்டாம் ஆண்டு வகுப்பு வரையும் மாணவர்கள் கற்பதற்குப் பாட நூல்களும் பயிற்சி நூல்களும் தயாரிக்கப்பட்டுள்ளன. மொழித்திறன், இலக்கிய வரலாற்றுத்திறன், நயக்குந்திறன், விமரிசிக்குந்திறன் ஆகியனவற்றை வளர்த்தற்கேற்ற வகையில் பாடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. வாசித்தல், எழுதுதல், கிரகித்தல், ஆக்கம் செய்தல் ஆகிய திறன்களை வளர்க்கும் நோக்குடையனவாகப் பாடங்கள் அமைகின்றன.

பிள்ளைகள் புறநிலையிலே கற்பதற்கு இறுவட்டுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. ஆனால் ஆசிரியர்கள் இப்பாடங்களைக் கற்பிப்பதற்கான ஒரு வழிகாட்டி நூல் இன்னும் தயாரிக்கப்படவில்லை. இதனைத் தயாரிப்பதற்கான ஆலோசனைகளை வழங்கியுள்ளோம். விரைவில் ஒவ்வொரு வகுப்புக்கான பாடங்களையும் கற்பிக்க கைநூல்கள் தயாரிக்கப்படவுள்ளன.

<u>தமிழாலயங்களின் நிலை</u>

ஜெர்மனியில் பாடசாலைகள் 'தமிழாலயங்கள்' என வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு கிழமையும் சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் தமிழ் வகுப்புகள் நடத்தப்படுகின்றன. பெரும்பாலும் அந்தந்த நகரங்களிலுள்ள அரச பாடசாலைகளிலே சில வகுப்பறைகள் இதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன. நீண்ட தூரங்களிலுமிருந்தும் பிள்ளைகளைப் பெற்றோர் இப்பாடசாலைகளுக்குக் கொண்டுவந்து விட்டுச்செல்வர். தமிழ் படிப்பதனாலே தங்கள் பிள்ளைகளின் டொச் மொழித் திறன் குறைந்து விடும் என

அஞ்சும் பெற்றோர்கள் சிலரும் இருக்கின்றனர். ஆனால் ஜெர்மனியிலே நூற்று முப்பது தமிழாலயங்கள் இருப்பதும் அவற்றில் 6000 மாணவர்கள் படிப்பதும் அங்கு தமிழ்க் கல்வியிலே பெற்றோரும் பிள்ளைகளும் எவ்வளவு விருப்புடையோராய் உள்ளனர் என்பதைக் காட்டுகின்றன. சில தமிழாலயங்களிலே பாடசாலை நிர்வாகத்தின் தலையீடு ஏற்படுவதால் சில குழப்பங்கள் சிற்சில வேளைகளில் ஏற்பட்டுத் தீர்வதுண்டு.

தமிழாலயங்களை நடத்துபவர்கள் அரச மானியம் பெறும் வழிகளை இன்னும் தேடவில்லை. இனியும் அவர்கள் காலத்தை வீணாக்காது தமிழ்க்கல்வி பண்பாட்டு மேம்பாட்டுக்குள் வருவதால் அரசு, மானியக் கொடுப்பனவுக்கான வேண்டுதலைச் சாதமாகப் பரிசீலனை செய்யுமென நம்புகிறோம்.

ஜெர்மனியில் தமிழ்க் கல்வியின் எதிர்கால நிலையும் பரிந்துரைகளும்

தமிழ்க் கல்வியினை நடத்துதற்கு ஏற்ற ஒரு கல்வி நிர்வாகம் ஜெர்மனியிலே இயங்குகின்றது. ஜெர்மன் குடியரசின் பதிவிலக்கத்துடன் ஒரு தலைமைச் செயலகம் இயங்குகின்றது. ஆனால் இதற்குச் சொந்தமான தனிக் கட்டிடம் எதுவும் இல்லை. ஜெர்மன் அரசு இது தொடர்பாக உதவிகளை நல்கமுடியும். நிர்வாகத்தினர் இது தொடர்பாக முயற்சிகள் மேற்கொள்ளவேண்டும்.

இவ்வேளையில் புலம்பெயர் தமிழ்ப் பிள்ளைகளின் கல்வி தொடர்பாக ஒரு பரிந்துரையினை இங்கு முன்வைக்க விரும்புகிறோம். உலகில் புலம்பெயர் தமிழர் வாழும் நாடுகளில் எல்லாம் தமிழ் இரண்டாவது அல்லது மூன்றாவது மொழியாகக் கற்பிக்கப்படுகின்றது. இவ்வாறு இரண்டாம் அல்லது மூன்றாம் மொழியாகக் கற்கும் பிள்ளைகளுக்குத் தமிழ் மொழி, அதன் இலக்கியம், பண்பாடு பற்றி எதுவும் அறிந்திருக்க முடியாது. அவர்கள் தமிழ் மொழி, இலக்கியம் ஆகியனவற்றைக் கற்க முன்னர் அவை பற்றிச் சுருக்கமாக அவர்களுடைய முதல் மொழியிலே (எடுத்துக்காட்டாக, ஜெர்மனி நாட்டில் டொச், டென்மார்க்கில் டேனிஷ், பிரான்சில் பிரெஞ்ச்) படிக்கக்கூடிய நூல்கள் தயாரிக்கப்படவேண்டும். உதாரணமாக, ஜெர்மனியிலே பிறந்த தமிழ்ப் பிள்ளைகள் ஜெர்மன் மொழியிலே தமிழ் மொழி பற்றியும் தமிழ் இலக்கியம் பற்றியும் பண்பாடு பற்றியும் முன்கூட்டியே வாசிக்கக்கூடிய நூல்கள் தயாரிக்கப்படவேண்டும். இத்தகைய நூல்கள் தயாரிக்க அரசு நிச்சயமாக உதவி செய்யுமென நம்புகிறோம். இல்லாவிட்டால் உலகத் தமிழ் ஆர்வமுள்ள செல்வந்தர்களை அணுகலாம். இத்தகைய நூல்கள் தயாரிக்கப்படும்போது பிள்ளைகள் அவற்றை படிக்கும்போது செம்மொழித் தமிழை அறியவும், செவ்வியல் தமிழ் இலக்கியங்களையும் நவீனதமிழ் இலக்கியங்களையும் தமிழப் பண்பாட்டின் சிறப்பான

பண்புகளையும் அறியவேண்டுமென்னும் ஆர்வத்தினை ஊட்டவல்லதாக அமையவேண்டு மென்பதை மனதில் கொள்ளவேண்டும்.

தமிழிலக்கியங்களைப் புலம்பெயர் மாணவர்கள் கற்பதற்குத் துணைசெய்யும் கருவி நூலாக ஓர் அகராதி அந்தந்த ஐரோப்பிய மொழியுடன் இணைத்துத் தயாரிக்கப்படவேண்டும். உதாரணமாக, ஜெர்மன் நாட்டில் இது தமிழ் - ஜெர்மன் மொழியகராதியாக அமையும்.

Kandiah, A. : “Teaching Tamil as a Second Language – A Brief Survey”, **Tamil in International Arena,** Center for Arts, National University of Singapore. 2002 January.

Kulum Shanmugam, : "Teaching Tamil Language in the Tamil Diaspora: Australian experience", Paper presented at the Conference jointly hosted by the University of Toronto and the University of Windsor, Canada, 2007.

Parvathy Kandasamy : “Pedagogical Challenges in the Teaching of Tamil Language in Canada”, Paper presented at the Conference jointly hosted by the University of Toronto and the University of Windsor, Canada, 2007.

தமிழ்மொழி கற்றல் கற்பித்தலில் மலேசியா-மொரிசியஸ் : ஓர் ஒப்பீடு

Dr. மு. பரமசிவம்
புத்ரா பல்கலைக்கழகம், மலேசியா.

ஆய்வுச்சுருக்கம்

மலேசியா-மொரிசியஸ் ஆகிய இருநாடுகளும் புலம் பெயர்ந்த இந்தியத் தமிழர்களை அதிகளவில் கொண்டிருக்கும் நாடுகள். இவ்விருநாடுகளிலும் வெகுகாலமாகத் தமிழ்க்கல்வி பின்பற்றப்படுகின்றது. பூமியின் வெவ்வேறு பகுதிகளில் அமைந்துள்ள இவ்விரண்டு நாடுகளிலும் கற்றுத்தரப்படும் தமிழ்க்கல்வி, அதன் பாடத்திட்டம், கற்றல்-கற்பித்தலில் நேரும் சிக்கல்கள், அவற்றுக்கான தீர்வுகள் ஆகியவை இந்த ஆய்வில் எடுத்துரைக்கப்படுகின்றன.

முன்னுரை

தமிழர்கள் அதிகளவில் வாழ்ந்து வரும் நாடுகளுள் மலேசியா-மொரிசியஸ் ஆகியவை குறிப்பிடத்தக்கன. காலனி ஆட்சிக்காலத்தில் இந்தியாவிலிருந்து கொண்டு செல்லப்பட்ட தமிழர்கள், மலேசியாவின் ரப்பர்த்தோட்டங்களிலும், மொரிசியஸின் கரும்புத்தோட்டங்களிலும் குடியமர்த்தப்பட்டனர். தோட்டப் புறங்களில் பாடுபட்ட தமிழ்த்தொழிலாளர்களின் பிள்ளைகளுக்காக கி.பி.18-19-ஆம் நூற்றாண்டுகளில் திண்ணைப்பள்ளிகள் ஏற்படுத்தப்பட்டன. அப்பள்ளிகளில் கங்காணிகளாலும், பூசாரிகளாலும் தமிழ்க் குழந்தைகளுக்குப் பாடங்கள் கற்றுத்தரப்பட்டன. ஆனால் இப்போதனைமுறை ஒருவகையில் முறைசாராக் கல்வியாகவே அமைந்திருந்தன.

காலப்போக்கில் தோட்டப்புறங்களில் தமிழ்ப்பள்ளிகளும், தமிழ்வகுப்புகளும் உருவாக்கப்பட்ட பின்னர்த் தமிழ்மொழியைக் கற்றல்-கற்பித்தல் ஆகியவற்றில் முறையான பாடத்திட்டம் மற்றும் கல்வித்திட்டங்கள் இருநாடுகளிலும் பின்பற்றப்பட்டன. காலனியாதிக்கத்திலிருந்து விடுதலை பெற்றபின் இருநாடுகளிலும் புதிய கல்விக்கொள்கைகளும், அணுகுமுறைகளும் ஏற்படுத்தப்பட்டன. இன்றைய அதிநவீன உயர் தொழில்நுட்ப வளர்ச்சிக் காலகட்டத்தில் இவ்விருநாடுகளின் தமிழ்மொழி கற்றல்-கற்பித்தல் முறைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் எண்ணற்றன. அவற்றை ஒப்பிட்டுக் காணும் நோக்கிலும், கற்றல்-கற்பித்தலில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் மற்றும் தீர்வுகளைச் சுட்டும் வகையிலும் இக்கட்டுரை அமைகிறது.

கட்டுரை நோக்கம்

ஆய்வுக்களங்களாக விளங்கும் இவ்விருநாடுகளும் புலம் பெயர்ந்த இந்தியத் தமிழர்களை அதிக எண்ணிக்கையில் கொண்டுள்ளவை. இருநாடுகளிலும் நிலவும்

பன்மொழிச்சூழல் இந்தியத் தமிழர்களின் தாய்மொழியான தமிழில் எத்தகைய பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது என்பதையும், தமிழ்மொழிக் கல்வி என்பதை எந்த நோக்கத்தில் அணுகுவதை இருநாட்டுக் கல்வித்திட்டங்களும் கொண்டுள்ளன என்பதையும், அதற்குக் கற்றல்-கற்பித்தல் முறைகளின் பங்களிப்பு ஆகியவை குறித்தும் இக்கட்டுரை விளக்குகிறது.

ஆய்வு அணுகுமுறை

ஆரம்பப்பள்ளி முதல் உயர்கல்வி வரை தமிழ்மொழிக் கல்வி குறித்து ஆராயும் இக்கட்டுரையில் இருநாட்டுக் கல்விக்கூடங்களிலும் நேரே சென்று சேகரித்த ஆய்வுத்தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அத்தரவுகள் அட்டவணைப்-படுத்தப்பட்டுக் கீழே தரப்பட்டுள்ளன. ஆய்வுத்தகவல்கள் விளக்கமாகவும், உரிய மேற்கோள்களுடனும் வரிசைப்படுத்தப்படுகின்றன.

கற்றலும் கற்பித்தலும்

அண்மைக்காலத்தில் கற்றல்-கற்பித்தல் குறித்துப் புதிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கற்றல்-கற்பித்தல் தொடர்பாகப் பல கருத்தரங்குகள் நிகழ்த்தப்பட்டு அவற்றின் வழி பெறப்படும் தீர்வுகள் நடைமுறைப்படுத்தப்பட்டும் வருகின்றன. எவ்வாறெனினும் கற்றல்-கற்பித்தல் ஆகிய இரு கொள்கைகளுக்கும் வேராக விளங்கக்கூடிய அடிப்படை என்பது தொடர்ந்து அப்படியே நீடிக்கின்றது.

கற்றலும் கற்பித்தலும் ஒன்றோடொன்று தொடர்புடைய இரு செயல்களாகும். கற்பித்தல் என்பது ஆசிரியருக்கும், கற்றல் என்பது மாணவருக்கும் பொருந்தும் பொதுவான குணங்களாகும். ஆனால் ஆசிரியருக்கு இங்கே கூடுதலான பொறுப்பு உள்ளது. அதாவது கற்பித்தல் என்னும் செயலை மேற்கொள்வதற்கு, ஒவ்வொரு நாளும் கற்றல் என்ற கோட்பாட்டைத் தொடர்ந்து பின்பற்ற வேண்டிய கடமைக்குரியவராக ஆசிரியர் திகழ்கிறார். மாணவர் மட்டுமின்றி, ஆசிரியரும் தம்மளவிலே தொடர்ந்து கற்றலை மேற்கொள்ளும்போதுதான், மாணவருக்குக் கற்பித்தலை ஊட்டும் செயலைச் செவ்வனே செய்யும் ஆற்றல் கிட்டுகிறது.

நன்னூல் என்னும் இலக்கணநூல், கற்றலுக்கும், கற்பித்தலுக்கும் உரியதெனத் தனித்தனியே சட்டமே வகுத்துள்ளது[1]. தொழில்நுட்பம் எத்தனை உயரத்தை எட்டினாலும், தலைமுறைகள் எவ்வளவு கடந்து போனாலும் ஆசிரியர்-மாணவர் ஆகிய இருவருக்கும் எப்போதும் பொருந்தும் இலக்கணமாக இக்கோட்பாடு விளங்குகிறது.

மலேசியா

தென்கிழக்காசிய மண்டலத்தில் அமைந்துள்ள தீபகற்பமான மலேசியாவுடன் தமிழர்கள் பண்டைக்காலந் தொட்டே தம்தொடர்புகளை வளர்த்து வந்துள்ளனர்.

இதனால் தமிழ்மொழியின் தாக்கம் மலேசியப் பண்பாட்டில் ஊடுருவியதே அன்றி தமிழ்மொழி நிலைத்து இங்கு வளரவில்லை. ஆங்கிலேய ஆதிக்கம் மலேசியாவில் விளங்கிய காலத்திலேயே, தோட்டப்புறங்களில் வாய்மொழி இலக்கியமாகவும் தமிழ்ப்பள்ளிகளின் வாயிலாகவும் தமிழ்மொழியின் செல்வாக்கு மேலோங்கியது. 1957-இல் நாடு அந்நியரிடமிருந்து விடுதலை அடைந்த பின்னர்க் கல்விமுறையில் மும்மொழித்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் வாயிலாகத் தமிழ்மொழியின் மூலமாகக் கல்வியைப் பெறும் வகையில் தமிழ்ப்பள்ளிகள் பல உருவாக்கப்பட்டன. இதற்கெனத் தனி வல்லுனர் குழுவின் மேற்பார்வையில் பாடத்திட்டங்கள் வகுக்கப்பட்டன. தமிழ்மொழி கற்றல்-கற்பித்தலில் கடந்த 50 ஆண்டுகளாக ஏற்பட்டு வரும் மாற்றங்கள் தமிழ்மொழி வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

மொரிசியஸ்

மொரிசியஸில் தமிழர்களின் முதல் குடியேற்றம் 1714-ஆம் ஆண்டு நிகழ்ந்தது. அன்றுதொட்டு, இருபதாம் நூற்றாண்டின் முதல் நாற்பது ஆண்டுகள்வரை இக்குடியேற்றங்கள் தொடர்ந்தன. கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேய ஆட்சிக் காலத்தில்தான் பெருமளவில் தமிழ்க் குடியேற்றங்கள் நடைபெற்றன. பிரெஞ்சுக் காலனியாகவும், ஆங்கிலேயக் காலனியாகவும் தொடர்ந்து சில நூற்றாண்டுகள் இருந்த காரணத்தினால் அன்றாடப் பயன்பாட்டில் தமிழ்மொழியின் செல்வாக்கு வெகுகாலத்துக்கு முன்பே இந்நாட்டில் மங்கத் தொடங்கிவிட்டது. எனினும் பள்ளிகளிலும், உயர்கல்வி நிலையிலும் தமிழ்மொழி கற்றல் இன்றளவும் நிகழ்ந்து வருவது குறிப்பிடத்தக்கது. 1969-ஆம் ஆண்டில் மொரிசியஸ் ஆங்கில ஆதிக்கத்திலிருந்து விடுபட்டுச் சுதந்திர நாடான பின்னர் உருவான கல்விக் கொள்கைகளும் தமிழ்மொழி கற்றலில் தாக்கங்களை உண்டாக்கியதை அறியமுடிகிறது.

பன்மொழிச்சூழல்

மலேசியா-மொரிசியஸ் ஆகிய இரண்டுமே பன்மொழிச்சூழல் நிலவும் நாடுகளாகும். வெவ்வேறு இனங்களைச் சேர்ந்தவர்களோடு இணைந்து வாழும் நிலையில் தமிழ்மொழி கற்றலிலும், பயன்பாட்டிலும் வேற்றுமொழிச் சொற்களின் ஊடுருவல் மிகுந்து காணப்படுவது இருநாடுகளிலும் தவிர்க்க இயலாததாக மாறியுள்ளது.

மலேசியாவில் தேசியமொழியான மலாய் மொழியிலேயே பெரும்பாலான பரிமாற்றங்கள் நடக்கின்றன. நாட்டின் மக்கள்தொகையில் சீனர்களின் எண்ணிக்கை இரண்டாவது இடத்தில் இருக்கின்றது. அம்மொழியின் பயன்பாடும் மிகுதியாகக்

காணப்பட்டாலும், உலகப்பொதுமொழியாக விளங்கும் ஆங்கில மொழியின் தாக்கம் அதிகமாகக் காணப்படுகிறது.

மொரிசியஸில் நிலவும் பன்மொழிச்சூழல் மேலும் மாறுபட்டது. அங்குப் பொதுவாக பிரெஞ்சிலிருந்து உடைந்த 'கிரியோல்' என்னும் ஒரு கிளைமொழியையே அனைவரும் பேசுகின்றனர். இது தவிர பிரெஞ்சு, ஹக்கா, மாண்டரின், ஆங்கிலம், இந்தி, உருது, போஜ்புரி, தெலுங்கு, மராத்தி, குஜராத்தி ஆகிய மொழிகளைப் பேசுவோரும் கணிசமான எண்ணிக்கையில் வாழ்கின்றனர்[2]. ஒரு சிறிய நாட்டில் இத்தனை மொழிகள் புழக்கத்தில் இருப்பது அரிதான ஒன்றே. இச்சூழலில் தான் அங்குள்ள தமிழ்ப் பிள்ளைகள் தாய்மொழி கற்றலை மேற்கொண்டு வருகின்றனர்.

மலேசியத் தமிழ்மொழி கற்றல்-கற்பித்தல் முறைகள்

மலேசியாவில் தமிழ்க்கல்வி என்பது ஏறத்தாழ இருநூறு ஆண்டு கால வரலாற்றுப் பின்னணியைக் கொண்டது. தமிழ்மொழி கற்றல்-கற்பித்தல் முறை என்பது ஆரம்பப்பள்ளி, இடைநிலைப்பள்ளி, ஆசிரியர் பயிற்சிக்கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பல்வேறு சூழல்களுக்கிடையே சவாலான முறையில் தமிழ்க்கல்வி இங்கு முன்னெடுத்துச் செல்லப்பட்டு வருவது கண்கூடு.

ஏறத்தாழ நாட்டிலுள்ள 11 மாநிலங்களில் உள்ள தமிழ்ப்பள்ளிகளில் ஒரு இலட்சம் மாணவர்கள் கற்கின்றனர். இவர்களைத் தவிர இடைநிலை மற்றும் ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றில் பயில்வோரின் எண்ணிக்கை கணிசமானதாகும். மலேசியத் தமிழ்ப்பள்ளிகளில் தகுதி வாய்ந்த 6000 தமிழாசிரியர்களும், இடைநிலைப்பள்ளிகளில் 300 தமிழாசிரியர்களும் பணியாற்றி வருகின்றனர்[3]. பத்தாண்டுகளுக்கு முன்பு வரை ஆசிரியராகப் பணியாற்றியவர்களில் பெரும்பாலானோர் சான்றிதழ் படிப்பினையே அதிகமாகப் பெற்றிருந்தனர். தற்போதைய மாறிவரும் சூழலில் இளங்கலை மற்றும் முதுகலைப்பட்டம் பெற்றவர்களே ஆசிரியர்களாகப் பணியாற்றும் நிலை காணப்படுகின்றது.

கற்றல்-கற்பித்தலுக்குப் பாடநூலே அடிப்படையாகத் திகழ்கிறது. தமிழ்மொழி கற்றல்-கற்பித்தலுக்குப் பிறகருவிகள் உதவினாலும் மூலக்கருவியாகப் பாடநூல் விளங்குவதைக் காண முடிகிறது. பாடநூல்கள் இன்றிக் கற்கும் மேற்கத்திய முறைக் கல்வித்திட்டத்தினைப் போலின்றி, பாடநூல்களைச் சார்ந்திருக்கும் ஆசியமுறைக் கற்றலை மலேசியத் தமிழ்மொழிக்கல்வி கொண்டுள்ளது.

மலேசியத் தமிழ்க்கல்விப் பாடநூல் அமைப்புமுறை

பாடநூல்களில் ஒவ்வொரு வகுப்புக்கும் ஏற்றவாறு பாடத்திட்டங்கள் அமைக்கப்பட்டு வரையறை செய்யப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக முதலாம் ஆண்டு பயிலும் மாணவருக்காக வடிவமைக்கப்பட்டுள்ள பாடத்தில் உள்ள பக்க அளவைக் காட்டிலும், இரண்டாம் ஆண்டு பயிலும் மாணவருக்கான பாடத்தின் பக்க அளவு அதிகரித்துக் காணப்படுகின்றது. ஒவ்வொரு ஆண்டுக்கும் தக்கவாறு பாட அளவு பொதுவாக அதிகரித்துக் கொண்டே செல்வது இயல்பாக உள்ளது. ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும், அப்பாடம் தொடர்பான கேள்விகள் கேட்கப்படுவது வழக்கமாகப் பின்பற்றப்படுகிறது.

அத்துடன் பாடம் தொடர்பான பயிற்சிகள் 'நடவடிக்கை, இடுபணி' ஆகிய தலைப்புகளில் கொடுக்கப்பட்டுள்ளன. மாணவர்கள் தாமே சிந்தித்துப் பதிலளிக்கும் வகையில் இப்பணிகள் அமைக்கப்பட்டுள்ளன. தமிழ்மொழியின் இலக்கிய-இலக்கண வகைகள் மாணவர்களின் வயதுக்கேற்பப் பிரித்து அமைக்கப் பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக ஆறு முதல் பன்னிரண்டு வயது வரை அடிப்படைக் கல்வியைக் கற்கும் மாணவர்களுக்காகப் 'புதிய ஆத்திசூடி, கொன்றைவேந்தன், உலகநீதி, வெற்றிவேற்கை, திருக்குறள், மூதுரை, பல்வகைச் செய்யுள்கள், நல்வழி, நீதிநெறிவிளக்கம், நாலடியார், நன்னெறி ஆகிய இலக்கியப் பாடங்களும், இலக்கணத்தில் எழுத்தியல், சொல்லியல், வாக்கியம், புணரியல், வலிமிகும் இடங்கள், வலிமிகா இடங்கள், நிறுத்தக்குறிகள் ஆகியவை பாடங்களாக வைக்கப்பட்டுள்ளன[4].

மலேசியக் கல்வி அமைச்சின் கீழ் இயங்கும் பாடநூல் ஆக்கப்பிரிவு மாணவர்களுக்கான பாடத்தை உருவாக்குகின்றது. கற்றலுக்குத் துணைநிற்கும் வகையில் மூலப்பாட நூல்களோடு, மாணவர்களுக்குப் பயன்தரும் வகையில் துணைநூல்கள், பயிற்சி ஏடுகள் மற்றும் பயிற்றிகள் ஆகியனவும் கல்வி அமைச்சினால் வெளியிடப்படுகின்றன.

இடைநிலைப்பள்ளிகள் மற்றும் உயர்நிலைப்பள்ளிகளில் தமிழ்க்கல்வி முறை தொடக்கநிலைப் பள்ளியிலிருந்து வேறுபட்டு அமைந்துள்ளது. திருக்குறள், மூதுரை போன்ற செய்யுட்பகுதிகள், கட்டுரை மற்றும் உரைநடை நூல்கள், நாடகம், நாவல் போன்ற இலக்கியப்பகுதிகள் ஆகியவை பாடங்களாக வைக்கப்பட்டுள்ளன. மேலும் பழமொழி, இணைமொழி, மரபுத்தொடர், உவமைத்தொடர் ஆகிய இலக்கணப் பகுதிகளும் பாடங்களாக உள்ளன[5].

பல்கலைக்கழக அளவில் தமிழை முதன்மைப்பாடமாக எடுத்துக் கற்பவர்களுக்கு முற்கால இலக்கியம், தற்கால இலக்கியம், பயன்பாட்டு இலக்கியம், இடைக்கால

இலக்கியம், காப்பிய இலக்கியம், பக்தி இலக்கியம், இலக்கியத்திறனாய்வு, ஒப்பிலக்கியம், நாட்டுப்புறவியல், மலேசியத் தமிழிலக்கியம், இலக்கிய வரலாறு, சித்தரிலக்கியம் ஆகிய இலக்கியப்பகுதிகள் பாடமாக வைக்கப்பட்டுள்ளன. இலக்கணத்தில் தமிழ் ஒலியனியல், உருபனியல், தொடரியல் மற்றும் யாப்பியல் வரலாறு ஆகியவையும் கற்றுத் தரப்படுகின்றன[6].

உயர்கல்வித்துறையில் தமிழ்க்கல்வியைக் கற்பிப்பதோடு, திறந்தவெளிப் பல்கலைக்கழகத்திலும், ஆசிரியர் பயிற்சிக் கழகங்களிலும் தமிழ்மொழிக் கல்வி கற்றுத்தரப்படுகிறது. மேலும் மாரா பல்கலைக்கழகம் (MARA), மலேசியப் புத்ரா பல்கலைக்கழகம் (UPM), மலேசிய அறிவியல் பல்கலைக் கழகம் (USM), மலேசிய சபா பல்கலைக்கழகம் (UMS) ஆகிய உயர்கல்வி நிறுவனங்களில் தமிழ் இரண்டாம் மொழியாகவும் கற்பிக்கப்படுகின்றது.

மொரிசியஸ் தமிழ்க்கல்விப் பாட அமைப்புமுறை

மொரிசியஸ் நாட்டில் மலேசியாவைப் போன்று தமிழ்ப்பள்ளிகள் என்று தனித்த ஒரு அமைப்பு இல்லை. அங்கு பள்ளிகளில் தமிழ் ஒரு பாடமாகக் கற்றுத் தரப்படுகிறது. இன்று பெரும்பாலான தமிழ்க் குடும்பங்களில் பேச்சுவழக்காகத் தமிழ் இல்லை. அங்கு வீட்டுமொழியாக கிரியோல் பேசப்படுகிறது. தமிழ் வீட்டுமொழி என்ற தகுதி வழக்கொழிந்துவிட்ட சூழலில், பள்ளிகளில் தமிழ் ஒருபாடமாகத் தமிழாசிரியர்களால் கற்பித்துத் தரப்படுகிறது.

ஆரம்பநிலைப் பாடமாகவும், இடைநிலையிலும் தமிழ்க்கல்வி உள்ளது. இப்பாடங்களுள் முக்கியமாகத் திருக்குறள் செய்யுட்கள், கொன்றைவேந்தன், மூதுரை போன்ற இலக்கியப் பகுதிகளும், பாரதியார், பாரதிதாசன், கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை முதலானோரின் எளிய கவிதைகளும் பாடங்களாக வைக்கப்பட்டுள்ளன.7 மொரிசியஸ், மகாத்மா காந்தி நிறுவனத்தில் தமிழ்ப் பட்டப்படிப்பு இளங்கலை கற்றுத் தரப்படுகிறது. ஆசிரியர் பயிற்சிக்கல்விப் படிப்பும் தமிழில் கற்பிக்கப்படுகிறது.

முடிவுரை

மலேசியா-மொரிசியஸ் நாடுகளில் பலகாலந்தொட்டு, தமிழ்மொழி பல்வேறு சூழ்நிலைகளிலும் மாற்றங்களிலும் கற்பிக்கப்பட்டு வந்துள்ளது. இருநாடுகளின் தமிழர் குடியேற்ற வரலாறு, பூவியல் அமைப்பு, மொழிச் சூழல், பேச்சு வழக்கு போன்றவை வேறுப்பட்டிருந்தாலும் இன்றுவரை தமிழ்மொழியைப் பேணுவதிலும் சமயம், கலை – பண்பாட்டுக் கூறுகளைக் காத்துவருவதிலும் ஒத்திருப்பதைக் காண முடிகிறது.

மேற்கோள் சான்றாதாரங்கள்

1. பவனந்திமுனிவர், நன்னூல் விருத்தியுரை கழகவெளியீடு.

2. பரமசிவம் முத்துசாமி.(2010) மொரிசியஸ்: மொழி-சமூகம்-பண்பாடு யுபிஎம் வெளியீடு-2010.

3. இராஜேந்திரன். என்.எஸ்.(2006) தமிழ் கற்றல் கற்பித்தலில் சவால்களும், பரிந்துரைகளும்(கட்டுரை) ஏழாவது உலகத் தமிழாசிரியர் மாநாடு-மாநாட்டு ஆய்வடங்கல், பக்.310

4. பாஸ்கரன் சுப்பிரமணியம் (2011) மலேசியத் தமிழ்ப்பள்ளிகளில் நடப்புநிலையும் சவால்களும் (கட்டுரை) மலேசியப் பன்மொழிச் சூழலில் தமிழ், மலாயாப் பல்கலைக் கழக வெளியீடு, பக்.88-89

5. நாராயணசாமி.கு.(2011) மலேசியாவில் தாய்மொழிக் கல்வியின் அமலாக்க மெய்ம்மையும் சவால்களும்: தொடக்கப்பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரையில் (கட்டுரை) மலேசியப் பன்மொழிச் சூழலில் தமிழ், மலாயாப் பல்கலைக் கழக வெளியீடு. பக்.74-76

6. மன்னர்மன்னன்.ம.(2011) உயர்கல்விக்கூடங்களில் தமிழ்: மெய்ம்மையும் சவால்களும் (கட்டுரை) மலேசியப் பன்மொழிச் சூழலில் தமிழ், மலாயாப் பல்கலைக் கழக வெளியீடு பக்.107

7. Thiroumalechetty.P.(1999) Tamil Cultural Identity in Mauritius: The Role of Language (Phd thesis) Tanjore Tamil University, pg.71

பொது அமர்வு 2

பொது அமர்வு 2

சிங்கப்பூர்த் தமிழர் இல்லங்களில் தமிழ்மொழிப் புழக்கம்

க. சண்முகம்
தமிழ்த்துறை, சிம் பல்கலைக்கழகம்
சிங்கப்பூர்.

<u>முன்னுரை</u>

உலகில் இன்று சுமார் 6,000 மொழிகள் வழங்கப்பட்டு வருகின்றன அல்லது வழங்கப்பட்டு வந்தன எனப் பொதுவாகக் கூறப்படுகின்றது. ஆனால், இன்று இவற்றுள்ளும் சுமார் 100 மொழிகள் மட்டுமே ஏறக்குறைய உலகின் 90 விழுக்காட்டு மக்களால் பேசப்பட்டு வருவதாக மொழியியலாளர் கூறுகின்றனர். ஒரு சில மொழிகளின் பயன்பாடு மிகக் குறைந்த அளவில் உள்ளது. இவ்வரிசையில் இருப்பவை செம்மொழிகளாகப் போற்றப்படும் கிரேக்கம், லத்தீன், சமஸ்கிருதம் போன்றவை. இவை இன்று குறிப்பிட்ட சில தளங்களில் (domains) அல்லாமல் பரவலாகப் பயன்பாட்டில் கிடையாது. இன்னும் சில மொழிகளோ மற்றவர்களுக்கு அவைபற்றிய விவரம் யாதொன்றையும் விட்டுச் செல்லாமலேயே காலவோட்டத்தில் அழிந்துவிட்டன. மற்றும் சில மொழிகள் பற்றிய ஒன்றிரண்டு தகவல்கள் மட்டும் அம்மொழியைப் பேசியவர்களோ மொழியியலாளர்களோ குறித்த வைத்த ஆவணக் குறிப்புகளாக மட்டும் அரும்பொருளகத்தில் இருக்கக் காணலாம். இன்னும் சில மொழிகளோ அம்மொழிகளின் பெயர்களைத் தவிர மேற்கொண்டு அவைபற்றிய விவரம் யாதொன்றையும் அறிய முடியவில்லை.

<u>மொழி அழிவும் மொழிச் சரிவும்</u>

மொழிகள் அழிவது சென்ற 200 வருடங்களில் துரிதமாகியுள்ளது. காலவோட்டத்தில் பல மொழிகளுக்கு உரிமையாளர் இருந்தும் பேசுவோர் எவருமின்றி இன்றும் அவை அழிந்துகொண்டே வருகின்றன என்பது ஒரு கவலைக்கிடமான செய்தியாகும். பல கண்டங்களில் அதிலும் குறிப்பாக, அமெரிக்கா, ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா ஆகிய கண்டங்களில் பல தலைமுறைகளாக வழங்கிவந்த பூர்வீக குடிமக்களின் பல மொழிகள் பல்வேறு காலக்கட்டங்களில் அழிந்துவிட்டன. எடுத்துக்காட்டாக, பிரிட்டிஷார் ஆஸ்திரேலியாவில் காலடி வைத்தபோது அக்கண்டத்தில் சுமார் 250 பூர்வீக குடிமக்களின் மொழிகள் பேசப்பட்டதாகவும் இன்று சுமார் 50 மொழிகளே எஞ்சி இருந்து பேசப்படுவதாகவும் அறிகிறோம்.

19ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் ஒரு நாட்டு மக்கள் அல்லது அந் நாட்டில் வாழ்ந்த ஒரு குறிப்பிட்ட இனத்தினர் இன்னொரு நாட்டிற்குப் பல்வேறு காரணங்களால் குடியேறுவது வழக்கமாகியது. இத்தகைய குடியேற்றம், நாட்டிலே அல்லது சமூகத்தினரிடையே ஏற்பட்ட பிரச்சனைகள், உள்நாட்டுப்போர், சமூக அமைப்பு, அரசியல், பொருளாதாரம் போன்ற காரணங்களால் ஏற்டலாயின. அதே வேளையில் வல்லரசு நாடுகளான பிரிட்டன், பிரான்சு, ஜெர்மனி, ஸ்பெயின் போன்றவை பல ஆப்பிரிக்க, ஆசிய நாடுகளைக் காலனித்துவ ஆட்சிக்குட்படுத்தியபோது வேலையாட்களாக இந்நாடுகளிலிருந்து வெவ்வேறு நாடுகளுக்கும் அழைத்துச் சென்றன.

'அக்கரை பசுமை' என்று நம்பிப் புலம்பெயர்ந்த இனத்தினர், தங்களின் பூர்வீக நாட்டுடன் ஒப்பிடுகையில் பொருளாதாரத்தில் நல்ல நிலையில் இருப்பினும் பெரும்பாலும் தாங்கள் பிழைப்புத் தேடிக் குடியேறிய நாடுகளில் சிறுபான்மையராகவே வாழ்ந்தனர்-இன்றும் வாழ்ந்தும் வருகின்றனர். புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும் இவர்களுள் இரண்டாம் அல்லது மூன்றாம் தலைமுறையினர் அதிலும் குறிப்பாக இளைய தலைமுறையினர் தங்களின் தாய்மொழிக்குப் பதிலாகக் குடியேறிய நாட்டில் பரவலாகப் பேசப்படுகின்ற மொழியைப் பல மொழியாட்சிப் பகுதிகளில் (domains) பயன்படுத்தத் தொடங்கினர். இதன் விளைவு சொந்த மொழியைப் படிப்படியாக அவர்கள் இழந்ததேயாகும். இத்தகைய போக்குக்குக் கூறப்படும் காரணமானது அவர்கள் சுயமதிப்பை (self-esteem) அந்நாடுகளில் இழந்ததேயாகும். அதுவும் குறிப்பாகச் சிறுபான்மை இளைய தலைமுறையினர் தம் இனத்தாரையே தாழ்வாக நினைத்துத் தங்களுக்குச் சமூக அங்கீகாரம் கிட்ட அந்நாட்டில் வழங்கும் ஆதிக்க மொழியை (dominant language) ஏற்றுக்கொண்டதேயாகும். இதன் காரணமாகத் தம் பிள்ளைகளுக்கும் தம் சொந்த மொழியைப் பேசக் கற்பிப்பதில்லை. இதற்குத் தக்க சான்று தென்னாப்பிரிக்காவில் வாழ்கின்ற இந்தியர்கள்.

<u>மொழி இழப்பிற்கான காரணிகள்</u>

மொழிப் பயன்பாட்டுச் சரிவு (Language Shift), மொழி இழப்பு (Language Loss) அதனைத் தொடர்ந்து ஏற்படும் மொழி இறப்பு (Language Death) ஆகியவற்றிற்குப் பல்வேறு காரணங்கள் சமூக மொழியியலில் கூறப்படினும் இக்கட்டுரையில் முக்கியமான சில காரணிகளை மட்டும் சுட்டிக்காட்ட விழைகிறேன்.

1. மக்கள் தொகை (Demography)

ஹாகன் (Haugen), போரிஸ் (Bourhis) என்பார் ஒரு மொழியை இழந்து போகாதவாறு தக்க வைத்துக் கொள்வதற்கும் (maintenance) அம்மொழியைப் பேசுகின்ற மக்கள் தொகை எண்ணிக்கைக்குமிடையே தொடர்பு இருப்பதாகக் கூறுகின்றனர். ஒரு

மொழியைப் பேசுகின்ற மக்களின் எண்ணிக்கை பெரும்பான்மையாக இருக்கும் நிலையில் இழப்பு அசாதாரணம் என்பது இவர்களது கருத்து. பொதுவாக ஒரு நாட்டில்/இடத்தில் வாழும் மக்கள் தொகையில் பத்து விழுக்காட்டிற்கு மேல் ஒரு குறிப்பிட்ட மொழி பேசும் இனம் வாழுமேயானால் மொழி இழப்பு நடக்க வாய்ப்பில்லை என்று ஹாகன் கருதுகிறார். ஆனால், இக்கருத்தைப் பலரும் ஏற்றுக்கொள்வதில்லை. ஒரு குறிப்பிட்ட மொழியைப் பேசக் கணிசமான மக்கள் இருந்தும் மொழி இழப்பு நடந்ததையும்- நடந்துகொண்டிருப்பதையும் நாம் இன்றும் காணலாம். தென்னாப்பிரிக்கா இதற்கு நல்ல சான்று.

2. இன அழிவு

ஒரு குறிப்பிட்ட மொழி பேசும் சமூகம் முற்றுமாக அழிந்துவிட்டாலும் அவர்களுடனேயே அவர்களின் மொழியும் அழிந்துவிடக்கூடும். போர், கடும் நோய்கள் போன்ற காரணங்களாலும் இயற்கைப் பேரிடர்களான பஞ்சம், கடுமையான வறட்சி, நில அதிர்வுகள், எரிமலை வெடிப்புகள், கடல்கோள்கள் போன்றவற்றாலும் இன அழிவு ஏற்படக்கூடும். சென்ற நூற்றாண்டில் நிகழ்ந்த ஐரோப்பியரின் ஊடுருவல்களும் அவர்கள் மூலம் பரவிய கொடுநோய்களும் பல இனத்தினர் அழியக் காரணமாகின.

3. மொழி வழங்கும் வாழ்க்கைச் சூழலில பாதிப்பு

ஒரு குறிப்பிட்ட இடத்தில் அதன் நிலவளம், தட்பவெட்பம் ஆகியவற்றிற்கேற்ப ஒரு குறிப்பிட்ட வகைத் தாவரங்கள் வளர்வது இயற்கையே. அதே போன்று அங்கு அதற்கே உரிய உயிர்வாழ்வனவும் அவ்வித இயற்கைச் சூழலலோடு வாழ்வதும் இயல்பே. ஆனாலும், அங்கு வளரும் தாவரங்களும், அதையொட்டி வாழும் விலங்கினங்களும் தட்ப வெப்பம் காரணமாகவும் தாம் வாழும் சுற்றுப்பறச் சூழலில் ஏற்படும் மாற்றங்களாலும் பாதிப்பக்குள்ளாகி அழிந்துவிட நேரிடலாம். எடுத்துக்காட்டாக, அந்த நில அமைப்புக்கு ஒவ்வாத வேறு விலங்குகளை அறிமுகப்படுத்தினால் அது ஏற்கனவே அங்கு இயற்கையாக வளரும் பயிர்பச்சைகளையும் இதர உயிர்வாழ்வனவற்றையும் பாதித்துக் கெடுதியை விளைவிக்கும்.

இதைப்போன்றே மொழிகளும் மாறிவரும் சமூக, பொருளாதார, அரசியல் மாற்றங்களால் தாக்கத்குள்ளாகின்றன. இயல்பாக ஒரு குறிப்பிட்ட கலாச்சார, சமூக கட்டமைப்புக்குள் பல தலைமுறைகளாக வழங்கிவரும் ஒரு மொழியும் இன்னொரு புதிய மொழியின் வருகையால் பாதிப்புக்குள்ளாகலாம். பயன்பாடு, கலாசார பரிவர்த்தனை, வர்த்தகத் தொடர்பு, காலனித்துவ ஆட்சி போன்ற காரணங்களால் ஊடுருவும் ஒரு புதியமொழி தாய்மொழி வழங்கும் இடத்தை நாளடைவில் ஆக்கிரமித்தநிலையை வரலாறு காட்டும். எப்படி ஒரு குறிப்பிட்ட சூழலுக்கு மாறான

விலங்குகளும் தாவரங்களும் மற்றொரு இடத்தில் இயல்பாக வளரும் இதர தாவர வகைகளையும் விலங்கினங்களையும் பாதிக்கின்றனவோ அது போன்றே புதிதாக இறக்குமதியாகும் மொழிகளும் மதங்களும் பண்பாட்டுப் பழக்கவழக்கங்களும் ஏற்கனவே அந்த இடத்தில் வழங்கிவரும் மொழிகளை அல்லது மதங்களைப் பாதிப்படையச் செய்கின்றன. இந்தியத் துணைக்கண்டம் இதற்கு நல்ல எடுத்துக்காட்டு. தமிழக வரலாற்றில் வெவ்வேறு காலக்கட்டம் இதனை நமக்கு உணர்த்தும். முதலில் தமிழ் வடமொழி; பின்னர்த் தமிழ் இந்தி; அதன்பின் தமிழ் ஆங்கிலம். இவ்வாறான மொழி மோதல்கள் நடந்தவண்ணம் இருக்கின்றன. காலம் செல்லச்செல்ல ஏற்கனவே அங்கு வழங்கிய மொழியின் இடத்தை ஆதிக்கமொழி எடுத்துக்கொள்ளும். அதுவே அச்சமூகத்தினரின் பயன்பாட்டு மொழியாகவும் நாளடைவில் விளங்கத் தொடங்கும்.

4. கலப்புத் திருமணங்கள்

கலப்புத் திருமணங்களின்போது, குறிப்பாக வெவ்வேறு மதங்களை அல்லது இனங்களைச் சேர்ந்தவர்கள் இல்லற வாழ்வில் இணையும்போது எவ்வாறு யாராவது ஒருவர் மற்றவர் மதத்தைத் தழுவும் நிலை ஏற்படுகிறதோ அதே போன்று வெவ்வேறு மொழி பேசுபவர்கள் மணமுடிக்கும்போது இருவரின் மொழிகளுள் ஏதாவது ஒன்றையே பொதுமொழியாகத் தேர்ந்தெடுக்கின்றனர். அதனையே தம் பிள்ளைகளுக்கும் தொடர்ந்து பேசக் கற்பிக்கின்றனர். இருவரின் மொழிகளுள் ஒன்றை இழக்கவேண்டிய சூழல் அங்கு ஏற்படுகிறது. எடுத்துக்காட்டாக நியூ கினி நாட்டுப் பூர்வ குடிமக்களை எடுத்துக் கொள்வோம். பல்வேறு குழுவாகப் பிரிந்து வாழும் அவர்களின் எண்ணிக்கை குறைவு என்றாலும் அங்கு வாழும் ஒவ்வொரு குழுவினரும் பல்வேறு மொழிகளைப் பேசுகின்றனர். இக்குழுவினருள் ஆடவர்கள் பொருள் ஈட்ட நகரப்புறங்களை இன்று நாடுகின்றனர். அப்போது அங்கு வேறொரு இனப்பெண்களை அந்த ஆண்கள் மணம் முடிக்கின்றனர். ஆனால், அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்குத் தந்தை தன் மொழியைக் கற்பிப்பதில்லை. அதே வேளையில் தத்தம் குழுவில் தனியே விடப்பட்ட பெண்கள் தன் குழுவில் போதுமான ஆண்கள் இன்மையால் அவர்களும் பிற குழுவிலுள்ள ஆண்களை மணமுடிக்க, அவர்தம் மொழியும் அங்கு இழக்கப்படுகின்றது. இவ்விதச் சூழலில் இரு குழுவினர்களின் இருமொழிகளும் காக்கப்படாமல் ஒரு மொழியே தக்கவைக்கப்படுகின்றது. இதற்குச் சிங்கப்பூர் இந்தியச் சமூகத்தினரிடையே அதிகரித்துவரும் இனக் கலப்புத் திருமணங்கள் ஓர் எடுத்துக்காட்டு. இம்மாதிரியான சூழலில் எஞ்சியிருக்கும் முதியவர்களின் வாழ்நாள் முடியும்போது கூடவே அவர்களின் பூர்வீகமொழியும் பேசுவோர் யாருமின்றி மறைந்துவிடும் அபாயநிலை உருவாகிறது.

5. மதிப்பு (Status)

மதிப்பு என்பது ஒரு மொழிக்கும் அம்மொழியைப் பேசும் ஓர் இனத்தினருக்கும் கொடுக்கப்படும் சமூக, பொருளாதார, அரசியல் அந்தஸ்தாகும். அம்மொழியானது மொழி வழங்கப்படும் நாட்டில் மட்டுமல்லாது அனைத்துலக ரீதியிலும் மதிக்கப்படவேண்டும். மேலும், அம்மொழியைப் பேசும் இனத்தினர் அதனைப் பேச வெட்கமோ கூச்சமோ படக்கூடாது. அது மட்டுமல்லாமல் சிறுபான்மை மொழியைப் பேசும் அவர்களே தம் மொழியைத் தாழ்மைப்படுத்தக்கூடாது. மொழிப்பற்று அவசியம். கிரேக்கர்கள் மேற்கத்திய தத்துவங்களுக்கும் பண்பாட்டுக்கும் தமது மொழியின் பங்களிப்பைப் பெரிதும் நினைவுகூர்வதால் அவர்களால் மொழி இழத்தலைத் தவிர்க்க முடிந்தது.

பொதுவாக, ஒரு மொழிக்கு அந்தஸ்து இல்லை என்பதைக் கீழ்க்கண்ட கூறுகளால் மதிப்பிடுகின்றனர் (பிரன்சிங்கர் மற்றும்:1991):

- கிராமப்புறங்களில் பேசப்படும் மொழி
- சிறுபான்மையினர் பேசும்மொழி
- மிகவும் தாழ்வான/பின்தங்கிய பொருளாதாரத்துடன் தொடர்புடையது
- அரசியலில் செல்வாக்கு இல்லாத நிலை
- பாரம்பரிய மதத்தோடு தொடர்புடையது
- பாரம்பரிய வாழ்க்கையோடு தொடர்புடையது
- தகவல் தொடர்புச் சாதனங்கள், மற்றும் முறையான கல்வி ஆகியவற்றில் பயன்படுத்தாத அல்லது பயன்பாடு குறைவான மொழி
- பின்தங்கிய பொருளாதார நடவடிக்கைகளுடன் தொடர்புடையது

பன்மொழி பேசும் சூழலில் வாழும் சிறுபான்மை இனத்தினரையும் அவர் தம் மொழியையும் பெரும்பான்மை இனத்தினர் அங்கீகரிக்கவேண்டும். இது சிறுபான்மை-யினருக்குப் பாதுகாப்பு உணர்வைத் தரும்.

6. கல்வி, தகவல் தொடர்புச் சாதனங்களில் மொழிப் பயன்பாடு

கல்வி, தகவல் தொடர்புச் சாதனங்கள், அரசாங்க அலுவலகங்கள், சமயம், கலாசாரம் போன்ற துறைகளில் மொழி பிரதிநிதிக்கப்படும் அளவைப் பொறுத்து மொழி பாதுகாக்கப்படுவதோடு பரவலாக அதன் பயன்பாடும் வளர்ந்தோங்கும். இன்றைய கணினியுலகிற்கு மொழி ஈடுகொடுக்கவேண்டும்.

7. தலைவர்கள்

ஹார்வூட் (Harwood) ஒரு மொழியைத் தக்கவைக்க மேலும் ஒரு கூற்றைக் குறிப்பிடுகின்றார். அது முறை சார்ந்த, மற்றும் முறை சாராத அமைப்புகளை (formal & informal organisations) நடத்திச் செல்லும் தலைவர்கள் ஒரு நாட்டில்/சமூகத்தில் இருந்தால் மொழி பாதுகாக்கப்படும் என்பதே. எடுத்துக்காட்டாகச் சிங்கப்பூரில் இக்கட்டான காலக்கட்டத்தில் தமிழ்மொழிக்கும் தமிழருக்கும் அருந்தொண்டாற்றித் தமிழுக்கும் ஓர் அதிகாரத்துவ மொழி அந்தஸ்தை ஈட்டித்தந்த தமிழவேள் கோ சாரங்கபாணியைக் குறிப்பிடலாம். அவருக்குப் பின் இளையர்களுக்குத் தமிழின்மீது ஓர் உத்வேகத்தைத் தந்த முனைவர் வீரமணியையும் குறிப்பிட வேண்டும்.

8. பொருளாதார அனுகூலங்கள்

ஒரு மொழியானது, சொந்த நாட்டிலும் சரி, அனைத்துலக ரீதியிலும் சரி மிகுதியான வேலை வாய்ப்புகள், கல்வி வசதி, நல்ல வருமானம், சமூக மதிப்பு போன்றவற்றை அம்மொழியினைப் பேசுவோருக்கு ஈட்டித் தருமானால் காலவெள்ளத்தில் அம்மொழி பெரும் செல்வாக்கை அடையலாம். அத்தகைய மொழியைத் தெரிந்துகொள்வதில் அனுகூலம் இருப்பதால் இருமொழித்திறன் பெற்றவர்களாகவும் மாறிவிடுவர். சில வேளைகளில் அதனால் தாய்மொழியை இழந்துவிடும் அபாயமும் உண்டு. மாறிவரும் சமூக, பொருளாதார, அரசியல் நிலைகளில் எதிர்நீச்சல் போட இயலாத மொழி நாளடைவில் காணாமல் போய்விடும். பல வாய்ப்புகளையும் வசதிகளையும் நல்காத தம்மொழியை அம்மொழியின் உரிமையாளர் நிராகரிக்கப் பேசுவோரின் எண்ணிக்கை படிப்படியாகச் சரிந்துவிடும். மொழிப்பற்று இங்குக் கேள்விக்குறியாகிவிடும். தம் மொழி மட்டுமே பேசத்தெரிந்த வயதானவர்கள் மட்டிலுமே தம் மொழிகளைப் பேசும் நிலை உருவாகிவிடும். அவர்களின் மறைவுக்குப் பின்னர் அம்மொழியைப் பயன்படுத்துவோர் யாருமில்லாத அவலநிலை ஏற்படும். இந்த நிலை இன்று ஆஸ்திரேலியா, சீனா, ஆப்பிரிக்கா போன்ற நாடுகளில் வாழ்கின்ற சிறுபான்மை தொன்முதுவர் இனத்தினரிடையே காணலாம்.

9. நகரமயமாக்கல்

இன்றைய நாகரிக உலகில் காளான்கள் தோன்றுவதுபோன்று அங்குமிங்கும் புதிய நகரங்கள் பல உதயமாகின்றன. நகரங்களில் பல்வேறு மொழிகளைப் பேசுபவர்களும் ஒன்றுகூடி வாழும் நிலை உருவாகிறது. இவர்களின் மொழிகள், பண்பாட்டுப் பழக்கவழக்கங்கள் போன்றவை வெவ்வேறானவை. இவர்களிடையே கருத்துப்பரிமாற்றம் ஏற்பட ஏதுவாக ஒரு பொது மொழி ஒன்றைத் தேர்ந்தெடுத்துக்கொள்கின்றனர். தேர்ந்தெடுக்கப்படும் மொழியும் அங்குப் பலராலும் பரவலாகப் பயன்படுத்தும் மொழியாகவே இருக்கும். நாளடைவில் தம் சொந்த மொழியைப் பயன்படுத்தாத நிலை உருவாகும். இது சிங்கப்பூர் போன்ற

நகரமயமாகிவிட்ட நாடுகளுக்கு சாலப் பொருந்தும். இங்கு மக்கள் தொகையில் சுமார் 80 விழுக்காட்டினர் அடுக்குமாடி வீடுகளில் வாழ்கின்றனர். ஒவ்வொரு அடுக்குமாடியிலும் வாழ்வதற்கு ஒவ்வொரு இனத்தினருக்கும் ஒரு குறிப்பிட்ட வரம்பு (Quota) உண்டு. இதன் விளைவாகப் பெரும்பாலும் ஒன்றிரண்டு இந்தியர்களே ஓர் அடுக்குமாடியில் வசிக்கும் நிலை உருவாகின்றது. இத்தகைய சூழலில் இரு குடும்பத்தினரும் சந்தித்துப் பேசும் சந்தப்பங்கள் மிகமிகக் குறைவு. சொந்த மொழியைப் பயன்படுத்த முடியாத நிலை அதிகம்.

10. வழிபாடு

வழிபாட்டு இடங்களில் பயன்படுத்தாத மொழியும் நாளடைவில் வழக்கில் இல்லாதொழியலாம். குடும்பத்திற்கு அடுத்த நிலையில் சொந்த மொழியைத் தக்க வைக்க முடிந்த மற்றொரு முக்கியமான மொழிப்பயன்பாட்டுத் தளம் ஆலயங்களே. கிறித்தவர்கள் ஆங்கிலத்தில் தேவாலயங்களிலும் இஸ்லாமியர் மசூதிகளில் அரபு மொழியிலும் வழிபடுகின்றனர். சமஸ்கிருதமே இந்துக் கோயில்களில் புழங்கப்படுகின்றது.

11. இரு மொழியம்

பொதுவாக இரு மொழித்திறன் உடையோர் சூழலுக்கு ஏற்ப ஏதாவது ஒரு மொழியை மட்டும் அதிகம் அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்துவர். குறிப்பாகச் சமூக அந்தஸ்தும் பொருளாதார வாய்ப்புகளும் உள்ளதொரு மொழி இருப்பின் அதுவே நாளடைவில் அதிகம் புழக்கத்திற்குள்ளாகும்.

சென்ற நூற்றாண்டில் புலம்பெயர்ந்தவர்கள் பிறிதொரு நாட்டுக்குச் செல்லும்போது ஒரு மொழி குறிப்பாகத் தங்களின் மொழியை மட்டும் அறிந்தவர்களாகச் சென்றார்கள். இன்றோ நிலைமை மாற அனைத்துலக மொழியான ஆங்கிலம் நன்கு அறிந்தவர்களாகச் செல்கின்றனர். புதிய நாட்டில் வழக்கத்தில் இருக்கும் ஒரு பொதுவான மொழியைக் கருத்துப் பரிமாற்றத்திற்கு அறிந்துகொள்வர். காலம் செல்லச் செல்லத் தங்களின் சொந்த மொழியைப் பேசுவதை அறவேவிட்டுவிட்டு அக்கண் புழக்கத்திலுள்ள ஆதிக்க மொழி ஒன்றைக் (dominant) கைவரப்பெறுவர். மற்றுமொரு கோணத்தில் பார்த்தால், சென்ற நூற்றாண்டில் புலம்பெயர்ந்தவர்கள் ஒரு மொழி அதிலும் தங்கள் மொழியைமட்டிலுமே பேசத்தெரிந்தவர்களாகச் சென்றனர். அவர்களுடைய பிள்ளைகளோ பின்னர் இரு மொழித்திறனுடையவர்களாக விளங்கினர். மூன்றாம் தலைமுறையினரோ ஒரு மொழி மட்டுமே அறிந்தவர்களாக/பேசுபவர்களாக இருக்கின்றனர். இவர்களுக்கு இருமொழிகளில் தேர்ச்சி இருப்பினும் நாட்டின் ஆதிக்கமொழியையே பேச்சுமொழியாக ஏற்றுக்கொள்வர்.

சிங்கப்பூரில் தமிழ்

இன்றைய 233 உலக நாடுகளுள் மூன்று நாடுகள் மட்டுமே (சுவிட்சர்லாந்து-4 மொழிகள், தென்னாப்பிரிக்கா -11 மொழிகள்) மூன்றுக்கு மேற்பட்ட மொழிகளை அரசாங்க மொழிகளாக (Official Languages) அங்கீகரித்துள்ளன. அவற்றுள் சிங்கப்பூரும் ஒன்று.

1834 ஆம் ஆண்டு முதல் சிங்கப்பூரில் தமிழ்க் கல்வி கற்பிக்க ஆவன செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து சுமார் 23 தமிழ்ப் பள்ளிகள் எல்லாப் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க உருவாகின. என்றாலும் படிப்படியாகப் பெற்றோர்கள் தம் பிள்ளைகளைத் தமிழ்ப் பள்ளிகளுக்கு அனுப்புவதைவிட ஆங்கிலப் பள்ளிகளுக்கு அனுப்புவதை விரும்பியதால் இப்பள்ளிகளில் மாணவர்கள் சேர்க்கை குறைய அதே வேளையில் ஆங்கிலப் பள்ளிகளில் இந்திய மாணவர்கள் சேர்க்கை அதிகரிக்கத் தொடங்கியது. 1956 இல் அனைத்துக் கட்சிகளின் பரிந்துரைப்படி, சிங்கப்பூரில் வாழும் மக்களில் பெரும்பான்மையோர் பேசும் மொழிகள் அடிப்படையில் நான்கு மொழிகளுக்கு (ஆங்கிலம், மாண்டரின், மலாய், தமிழ்) அரசாங்க மொழி அங்கீகாரமும் (Official Status), சம உரிமையும் (equal treatment) கொடுக்கப்பட்டன.

மக்கள் தொகை

சிங்கப்பூரின் மக்கள் தொகை சுமார 5 மில்லியன். அதில் சீனர் 74 விழுக்காடும், மலாய்க்காரர் 14 விழுக்காடும், இந்தியர் 9 விழுக்காடும் இருக்கின்றனர். இந்தியர் தொகையில் (சுமார் 350 ஆயிரம்) சுமார் 54 விழுக்காட்டினர் தமிழராவர். மொத்த மக்கள் தொகையில் சுமார் 37 விழுக்காட்டினரே தமிழ் பேசக்கூடியவர்கள் (Singapore Department of Statistics:2010).

இரு மொழிக் கல்வித் திட்டம்

சிங்கப்பூரின் இரு மொழிக் கல்விக் கொள்கை தனித்தன்மை வாய்ந்தது. அதாவது இந்நாட்டின் முக்கிய இனங்களையும் பல்வேறு மொழிகளையும் பின்புலமாகக் கொண்டது. இத்திட்டமானது ஏதாவது இரண்டு அதிகாரத்துவ மொழிகளைக் கற்பது அல்ல; மாறாக ஆங்கிலத்துடன் அந்தந்த இனத்தாரின் தாய்மொழியைக் கற்பதாகும். தாய்மொழிகளென்பது மாண்டரின், மலாய், அல்லது தமிழ். எனவே, முக்கியமான பள்ளிப்பாடங்கள் அனைத்தையும் முதல் மொழியான ஆங்கிலத்தில் கற்பது; இன அடிப்படையில் சீனர்களுக்கு மாண்டரின், மலாய்க்காரர்களுக்கு மலாய், இந்தியர்களுக்குக் குறிப்பாகத் தென்னிந்தியர்களுக்குத் தமிழ் மொழிகளும் இரண்டாம்

மொழி அடிப்படையில் கற்பிக்கப்படுகின்றன. 2010ஆம் ஆண்டுப் புள்ளி விவரப்படி, சிங்கப்பூரிடையே ஆங்கிலப் படிப்பறிவு (15 வயதும் அதற்கு மேற்பட்டோரும்) 80 விழுக்காடாக உயர்ந்துள்ளது. அதே போன்று இருமொழிக் கல்வித்திறனும் 71 விழுக்காடாக உயர்ந்துள்ளது. சீனர்களுள் 67 விழுக்காட்டினரும், மலாய்க்காரருள் 86 விழுக்காட்டினரும் இந்தியருள் 82 விழுக்காட்டினரும் இருமொழித்திறன் உடையவர்களாக இருக்கின்றனர் (Singapore Department of Statistics:2010). சிங்கப்பூர் இளைய தலைமுறையினரிடையே குறிப்பாக 5-14 வயதினரிடையே ஆங்கிலப் புழக்கம் பரவலாக உள்ளது. இவர்களுள் சீனர் 52 விழுக்காட்டினரும் இந்தியர் 50 விழுக்காட்டினரும் மலாய்க்காரர் 26 விழுக்காட்டினரும் இல்லங்களில் ஆங்கிலம் பேசுகின்றனர்.

சிங்கப்பூர் கனிவளம் இல்லாத மிகச் சிறிய ஒரு நாடு. 1965 ஆம் ஆண்டு நாடு சுதந்திரம் அடைந்தபோது போட்டிமிக்க உலகில் எப்படி எதிர்நீச்சல் போடுவது என்பது ஒரு கேள்விக்குறியாக இருந்தது. அதற்கு ஒரு வழி அறிவியல், தொழில்நுட்பம், வர்த்தகம் போன்றவற்றின்மூலம் பொருளாதார வாய்ப்புகளை நல்கும் ஆங்கிலக்கல்வியை வலியுறுத்தி உற்பத்தித் திறனை வளர்ப்பதேயாகும். அதுமட்டுமல்லாமல் ஆங்கில மொழி பல இன சமூகத்தினரிடையே கருத்துப் பரிமாற்றத்திற்கு ஒரு பாலமாகவும் இருக்கும் என்ற எண்ணத்தில் அதற்கு முக்கியத்துவம் தந்தனர். சிங்கப்பூர்ப் பின்னணியில் தாய்மொழி என்பது இன அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டுள்ளதே தவிர, அவரவரர் இல்லங்களில் புழக்கத்திலிருக்கும் மொழித் தொடர்பானதன்று. எனவே தாய்மொழி என்ற அடிப்படையில் பள்ளியில் பயிலும் மொழியானது அவர்களின் சொந்த மொழியாகவோ முதல்மொழியாகவோ இருப்பதில்லை (Gopinathan:1980). திராவிட இனம் என்ற அடிப்படையில் தெலுங்கர், மலையாளிகள் ஆகியோரும் தமிழைத் தாய்மொழியாகக் கற்றாலும் வீடுகளில் இவர்கள் தத்தம் மொழிகளையே குடும்ப உறுப்பினரிடையே பேசுகின்றனர்.

<u>மதிப்பு</u>

தமிழகத்திலிருந்து தமிழர்கள் 19ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் பெருமளவில் நல்வாழ்வு தேடி மலாயாவுக்கும் சிங்கப்பூருக்கும் பிழைக்க வந்தனர். அவ்வாறு வந்தவர்கள் கரும்பு, ரப்பர் தோட்டங்களில் வேலை செய்ய இங்குக் கொண்டு வரப்பட்ட பாட்டாளி மக்களேயாவர். இவர்களைத் தவிர சிங்கப்பூர் 1867 வரை இந்திய குற்றவாளிகளிகளைக் கிடத்தும் மையமாகவும் (Penal Colony) இருந்து வந்தது. தண்டனைக்காலம் முடிவுற்ற பின்னர் அவர்களுள் பலர் இங்கேயே தங்கிவிட்டனர். இதன் நிமித்தமாகத் தமிழ் இனத்தின் மதிப்பு சற்றுக் குறைவாகவே மதிப்பிடப்பட்டது. அவர்கள் பேசும் மொழி 'கூலிக்காரன் மொழி' (Coolie Language) என்றே மொழி ஆய்வாளர் பலர் கட்டுரைகளிலும், தம் நூல்களிலும் குறித்துள்ளது

வருந்தத்தக்கதொன்று. இங்குக் குடியேறிகளாக வந்த ஏனைய இனத்தவர் பலரும்கூடப் பிழைப்புத் தேடி, பஞ்சம் போக்க வந்தவர்கள் தாம். அவர்கள் பேசும் மொழிகளுக்குக் கிடைக்காத ஓர் அடைமொழி தமிழுக்கு இடப்பட்டது வியப்புக்குரியது - வருத்தற்குரியது.

கல்விக்கூடங்கள்

1834இல் தமிழ்க் கல்வி முதன்முதலில் சிங்கப்பூர் இலவசப் பள்ளியில் (Singapore Free School) தொடங்கப்பட்டது. பின்னர்ப் படிப்படியாகத் தமிழ்ப்பள்ளிகளின் எண்ணிக்கை கூடியது. குடியேறிகளாக வந்த தமிழர்கள் தம் பிள்ளைகளைத் தொடக்கக் காலத்தில் தமிழ்ப் பள்ளிகளில் கற்க அனுப்பினர். ஆனாலும் தமிழ்ப்பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கை படிப்படியாகக் குறையவே கடைசித் தமிழ்ப்பள்ளிக் கல்வி 1983இல் ஒரு முடிவுக்கு வந்தது. என்றாலும் அரசாங்கத்தின் இருமொழிக் கல்வித் திட்டத்தால் தமிழ்க் கல்வி ஆங்கிலப் பள்ளிகளில் இரண்டாம் மொழியாக-ஒரு பாடமாகக் கற்பிக்கப்பட்டு வர ஆவன செய்யப்பட்டது; இன்றும் அந்நிலை தொடர்ந்து வருகிறது.

கீழ்க்கண்ட அட்டவணை தமிழ் இரண்டாம் மொழியாகக் கற்பிக்கப்படும் விவரத்தைக் காட்டுகிறது.

பாலர் பள்ளி	தொடக்கப் பள்ளி	உயர்நிலைப் பள்ளி & தமிழ் நிலையம்	தொடக்கக் கல்லூரி	பல்கலைக் கழகம்
70	150	101	18	1

தகவல் தொடர்புச் சாதனங்கள்

வானொலி, தொலைக்காட்சி, நாளிதழ்

சிங்கப்பூரில் தமிழ் வானொலிச் சேவை (ஒலி 96.8) 24 மணி நேர இடைவிடாச் சேவையாற்றுகின்றது. வசந்தம் தொலைக்காட்சி வாரத்திற்கு 65 மணி நேர ஒளி பரப்பாக அதிகரித்துள்ளது. இது தவிர சன் டிவி மற்றும் விஜே டிவி, வண்ணத்திரை ஒளி பரப்புகளையும் இங்குள்ள மக்கள் கண்டுகளிக்க முடிகிறது.

ஒரே நாளிதழான தமிழ் முரசு 1880 முதல் இயங்கி வருகிறது. தமிழகத்தில் வெளிவரும் நூல்கள், நாளிதழ்கள், வார, மாத இதழ்கள் அனைத்தும் இங்கு விற்பனையாகின்றன. தமிழத்திலிருந்து இங்கு அவ்வப்போது வரவழைக்கப்படும் தமிழறிஞர்களின் சொற்பொழிவுகளும் நடைபெறுகின்றன. திரைப்படக் கலைஞர்கள் அவ்வப்போது

கலைநிகழ்ச்சிகளைப் படைத்து வருகின்றனர். தேசிய நூலகம், அதன் கிளை நூலகங்கள் அனைத்திலும் தமிழ் நூல்கள் வைக்கப்பட்டுள்ளன.

நடனம், சங்கீதம் போன்ற நுண்கலைகளை வளர்க்கும் பல அமைப்புகளும் இயங்கி வருகின்றன.

இது தவிர இந்நாட்டில் சுமார் 23 இந்துக் கோயில்கள் உள்ளன. கோயில்களில் அன்றாடம் வழிபாடும் விழாக்களும் தொடர்ந்து நடைபெற்ற வண்ணம் இருக்கின்றன. பெரும் விழாக்களாகத் தைப்பூசம், தீமிதி, ஆடிப்பெருக்கு, பங்குனி உத்திரம் போன்றவை மிக விமரிசையாகக் கொண்டாடப்படுகின்றன. வீட்டளவில் பொங்கல், தீபாவளி, திருமணச் சடங்குகள், ஈமச்சடங்கு, கருமக்கிரியை, கார்த்திகைத் திருநாள் போன்றவை கொண்டாடப்படுகின்றன/கடைபிடிக்கப்படுகின்றன. குறிப்பிட்ட சில பள்ளிவாசல்கள், தேவாலயங்கள் போன்றவற்றிலும் வழிபாடும், சமய சொற்பொழிவுகளும் தமிழிலேயே நடத்தப்பட்டு வருகின்றன.

உள்நாட்டு எழுத்தாளர்களின் கவிதை நூல்கள், சிறுகதை நூல்கள் போன்றவை தொடர்ந்து அரங்கேற்றம் காண்கின்றன. அரசைப் பொறுத்த வரை எல்லா அரசாங்க வெளியீடுகள், துண்டுப் பிரசுரங்கள், அறிக்கைகள், போன்றவை நான்கு அரசாங்க மொழிகளிலும் தவறாமல் வெளியிடப்படுகின்றன. நாணயங்களில் தமிழில் 'சிங்கப்பூர்' என்ற சொல்லையும் காணலாம். 'லிட்டில் இந்தியா' என்று அழைக்கப்படும் இந்திய வர்த்தகப் பகுதியில் சாலைப் பெயர்கள், கடைப்பெயர்கள் தமிழில் எழுதப்-பட்டுள்ளமையைக் காணலாம்.

<u>நாட்டு/சமூக தலைவர்கள்/ தமிழ் அமைப்புகள்</u>

மக்கள் தொகையில் சுமார் 8 விழுக்காட்டுச் சிறுபான்மையினராக இந்திய மக்கள் இருப்பினும் அரசியல் ரீதியில் நம் இனத்தினரின் பிரதிநிதித்துவம் மிகச் சிறப்பாக உள்ளது. நாடாளுமன்றத்தில் தமிழில் பேச வாய்ப்புள்ளது. தமிழ்ச் சமூக அமைப்புகளும் தொடர்ந்து மொழிப் போட்டிகளையும் விழாக்களையும் இயக்கங்களையும் தவறாது நடத்தி வருகின்றன.

<u>தமிழ்ப் புழக்கம்</u>

கட்டுரையின் நோக்கம் இந்நாட்டில், தமிழ்க்குடும்பங்களில் குறைந்துகொண்டு வரும் தமிழ்மொழிப் புழக்கம்பற்றிய விழிப்புணர்வை உணர்த்துவதேயாகும். உலகமய வருகையால் இன்று ஆங்கில மொழிக்குத் தனி மதிப்பும் அந்தஸ்தும் வந்துவிட்டது.

ஆங்கிலம் கற்றவர்கள் தாம் 'கற்றோர்' ஏனையவர் 'கல்லாதார்' என்ற எண்ணம் உருவாகியுள்ளது.

பொதுவாக மொழிப் புழக்கம் அரசாங்க அலுவலகங்கள், நீதி மன்றங்கள், பணியிடங்கள், வழிபாட்டு இடங்கள், அண்டை அயலகம், உறவு/தோழமை, குடும்பம் ஆகிய மொழி ஆட்சித் தளங்களில் நடைபெறும். 1985இல் எமி சோப்பிரிலோ (Amy Sobreilo) செய்த ஆய்வில் இரண்டு மொழி ஆட்சித் தளங்களில் மட்டுமே தமிழ்ப் புழக்கம் உண்டு எனத் தெரிந்தது. அவையாவன: ஒன்று வழிபாட்டு இடங்கள், மற்றது குடும்பம்.

அதன் பின்னர் முனைவர் வனிதாமணி சரவணன் (1998, 1999, 2000) செய்த ஆய்வுகள் இந்தியக் குடும்பங்களில் ஆங்கில மொழிப் பயன்பாடு அதிகரித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். 1980 முதல் 2010 வரை ஆங்கில மொழிப்பயன்பாடு அதிகரித்துள்ள வேளையில் தமிழ்ப் பயன்பாடு குறைந்து வருவதை இதர ஆய்வுகள் காட்டுகின்றன (Lau: 1993, Singapore Department of Statistics: 2000). இத்தகவல்களின் அடிப்படையில் முனைவர் வனிதாமணி சரவணன் 1999இல் சமூகத் தொடர்பு வட்டம் என்ற ஓர் அணுகுமுறையைப் (Li Wei's social network methodology: 1994) பயன்படுத்திச் செய்த ஆய்வில் தமிழ்ப் பெற்றோரும் அவர்தம் பிள்ளைகளும் குடும்ப நடவடிக்கைகளின்போது ஆங்கிலத்தைப் பயன்படுத்துவதாகக் குறிப்பிட்டுள்ளார். இருப்பினும் வழிபாடுகளிலும் உறவினர்களுடனும் கலந்து உரையாடுகையில் தமிழில் பேசுகின்றனர் என்றும் கூறியுள்ளார். முனைவர் இராமையாவின் ஆய்வு (1991), தமிழ்ப்புழக்கமானது தொடக்கப் பள்ளி மாணவரிடையே நண்பர்கள், உடன்பிறந்தோர், பள்ளி, வாசிப்பு மொழிப் பயன்பாட்டுத் தளங்களில் குறைந்திருப்பதாகக் கூறியுள்ளார். இவற்றையெல்லாம் உறுதி செய்யும் வகையில் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு (2010) மற்ற இனத்தினருடன் ஒப்பிடுகையில் தமிழர்களே, குறிப்பாக இளைய இந்தியரே (5 முதல் 14 வயதினர்) தமிழிலிருந்து ஆங்கிலத்துக்கு அதிகம் தாவுவதைக் காட்டுகின்றது. இதற்கிடையே தற்போது தென்னிந்தியர் என்ற அடிப்படையில் தமிழ் கற்று வந்த மலையாளிகள் அவர்தம் மொழியைக் கற்க வழிபிறந்துள்ளது. உயர்ந்த சமூக பொருளாதார மட்டத்தில் உள்ளவர்களும் உயர் கல்வித் தகுதி கொண்டவர்களும் இதில் அடங்குவர். தமிழகத்திலிருந்து இங்கு வரும் திறனாளர்களுள் பலர் இந்தியைத் தம் பிள்ளைகளுக்கு இரண்டாம்மொழியாகத் தேர்ந்தெடுக்கின்றனர்

என்றாலும் 1970, 1980, 1990, 2000 ஆகிய ஆண்டுகளில் குறிப்பாக 1990, 2000, 2010ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பின் புள்ளி விவரங்கள் தமிழ்ப் புழக்கம் குறைந்து வருவதையும் அதே வேளையில் ஆங்கிலம்

அதிகம் பேசப்படுவதையும் உணர்த்துகின்றன. இதற்கான முக்கியக் காரணம் 1965க்குப் (சுதந்திரம் அடைந்த) பின்னர் அரசாங்கம் ஆங்கிலக் கல்வியை அதிகம் வலியுறுத்தியதேயாகும். அதன் விளைவாகச் சிங்கப்பூரர்களின் வீடுகளில் ஆங்கிலக் கல்வியின் ஊடுருவல் அதிகரிக்கத் தொடங்கியது. ஆங்கிலம் சிங்கப்பூரரின் குறிப்பாக நன்கு கற்ற, இளைய தலைமுறையினரிடையே பொதுவானதொரு பேச்சுமொழியாக விளங்குகிறது.

கீழ்க்கண்ட அட்டவணை அதைத் தெளிவுபடுத்துகிறது. 5 வயதும் அதற்கும் மேற்பட்டோரின் இல்ல மொழி விவரம் வருமாறு:

மொழி	1990	2000	2010
தமிழ்	43.2	42.9	37
ஆங்கிலம்	32.3	35.6	42
மலாய்	14.5	11.6	8
இதர மொழிகள்	10.0	9.9	14

இது தவிர, கல்வி அமைச்சு 2005இல் மேற்கொண்ட பாடத்திட்ட மறுபரிசீலனைக்குழுவின் ஆய்வின்படி அவ்வாண்டில் தொடக்க வகுப்பு ஒன்றில் பதிந்த மாணவர்களுள் 55 விழுக்காட்டினர் வீடுகளில் ஆங்கிலம் பேசப்படும் குடும்பங்களிலிருந்து வந்தவர்கள் என்பதைக் காட்டுகிறது.

மேலும், 2005இல் இல்லங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு (Household Survey) ஒன்று இந்தியக் குடும்பங்களின் மொழிப்புழக்கத்தைக் காட்டுகிறது:

மொழி	2000	2005
ஆங்கிலம்	35.6	39.0
தமிழ்	42.9	38.8
மலாய்	11.6	10.6

1970ஆம் ஆண்டு முதல் இந்தியர்கள் மற்ற இனத்தினரைவிட ஆங்கிலத்தில் அதிகம் கல்வித் தேர்ச்சி பெறத் தொடங்கினர். சேகரிக்கப்பட்ட மக்கள் தொகைப் புள்ளி விவரங்களை நோக்கும்போது இன்று சிங்கப்பூர்த் தமிழர்கள் தங்களின் அன்றாடக் கருத்துப் பரிமாற்றத்திற்குத் தமிழை அதிகம் பயன்படுத்தவில்லை என்பது புலனாகின்றது. குடும்பம் உட்பட அனைத்து மொழியாட்சிப் பகுதிகளிலும் (domains) ஆங்கிலப் புழக்கம் அதிகரித்த வண்ணம் இருக்கின்றது. குடும்பம் போன்ற

முக்கியமான மொழி ஆட்சிப் பகுதிகளில் தமிழ்ப் பயன்பாடு குறைந்து வருகிறது. ஜோஸ்வா ஃபிஸ்மன் (Joshua Fishman) என்ற சமூக மொழியியலாளர் கூறுவதுபோல குடியேறிகளின் மொழி மூன்றாவது தலைமுறையினரோடு அழிந்துபோகக்கூடிய நிலை உள்ளது. இந்நிலையில் பெற்றோர், தமிழாசிரியர், சமூக அமைப்புகளின் பணி அளப்பரிது.

<u>தமிழாசிரியர்கள் எதிர்நோக்கும் சவால்கள்</u>

1. தமிழ் கற்க வரும் மாணவர்களின் பின்புலத்தை நன்கு அறிந்திருப்பது நல்லது.
2. தமிழ் இரட்டை வழக்கு மொழி. அதனால் கூடுமானவரை பேச்சுத் தமிழையும் வகுப்பில் ஆசிரியர் பயன்படுத்துவதோடு மாணவர்களின் பேச்சுத் திறனை வளர்க்க அதிகமான நடவடிக்கைகளைக் கற்பித்தலில் சேர்க்கவேண்டும்.
3. ஆசிரியர்கள் கற்பித்தலில் புதிய உத்திகள், அணுகுமுறைகளைக் கையாண்டு தமிழ் கற்பதில் ஆர்வத்தைத் தூண்ட வேண்டும்.
4. தகவல் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி மொழி கற்பிக்கப்படவேண்டும்.
5. ஆசிரியர்கள் தொடர்ந்து தங்களின் கல்வித் தகுதியையும் தொழிலமையையும் (professionalism) வளர்த்துக் கொள்ளவேண்டும்.
6. தமிழ் கற்ற பட்டதாரி ஆசிரியர்களே பணியில் அமர்த்தப்படவேண்டும்.
7. தமிழாசிரியர்கள் இலக்கியத்தில் மட்டும் ஆய்வினை மேற்கொள்ளாமல் மொழி அடிப்படையில் ஆய்வுகளை அவசியம் மேற்கொள்ளவேண்டும். சிங்கப்பூர்க் கல்வி, மொழிப்பயன்பாடுகளில் ஆய்வுகள் அமைதல் நலம்.
8. தமிழ் ஆசிரியர்கள் முன்னுதராணமாகவிருந்து முதலில் அவர்கள் தமிழில் பேசவேண்டும். தம் இல்லங்களில் தமிழில் பேசவேண்டும்.

கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்வதைத் தவிர்த்து, காற்றுள்ள போதே தமிழர்கள் அரசு தமிழுக்குக் கொடுத்துள்ள வாய்ப்பு வசதிகளைச் செவ்வனே பயன்படுத்திக்கொள்ள வேண்டும். 'தமிழ் இனி மெல்லச் சாகும்' என்பது ஒரு பேதையின் கூற்று என்றான் பாரதி. ஆனால், சிங்கப்பூரில் தமிழ்மொழியை ஓர் உயிரோட்டமுள்ள மொழியாக வைத்திருக்க நாம் ஆவன செய்யாவிடின் அந்தக் கூற்று, சிங்கப்பூரைப் பொறுத்தவரையில், பலிக்க வாய்ப்பிருக்கின்றது.

References

1. All Party Report. (1956). Report of the All-Party Committees of the Singapore Legislative Assembly on Chinese Education, Government Publications Bureau: Singapore.
2. Bourhis, Richard Y. (1984). Conflict and Language Planning in Quebec. Clevedon: Multilingual Matters.
3. Brenzinger, Matthias et al. (1991) Language Death in Africa. In Robins, Robert H. & Uhlenbeck, Eugenius M. (edited) Endangered Languages, BERG: Oxford. pp.19-44.
4. Census of Population 2010. Singapore Department of Statistics.
5. Fishman, A. Joshua. (1966). Language Maintenance and Language Shift as a Field of Inquiry: Revisited. In Fishman, A. Joshua (ed.) Language Loyalty in the United States, Mouton & Co. London. pp. 424-458.
6. General Household Survey. (2005). Socio-Demographic & Economic Characteristics. Singapore Department of Statistics.
7. Gopinathan. S. Language Policy in Education: A Singapore Perspective. In E. A. Afendas & C. Y. Khoo (eds) Language & Society in Singapore: Singapore University Press, Singapore. pp. 175-206.
8. Haugen. (1953). Language and its Ecology. Berlin, Mouton de Gruyter.
9. Kuo, C. Y. Eddie. (1977). The Status of English in Singapore: A Sociolinguistic Analysis. In Crewe, William (ed.) The English Language in Singapore, Eastern Universities Press. Sdn. Bhd: Singapore.

பேச்சுச் சூழல்களும் செயல்பாட்டு அடிப்படையில் மொழிக்கற்றல் முறையும்

Dr. வாசு அரங்கநாதன்
பென்சில்வேனியாப் பல்கலைக்கழகம்,
அமெரிக்கா

வகுப்பறையில் மாணவர்களின் செயல்முறைத் திட்ட அடிப்படையில் (Performance based instruction) மொழிக்கற்றலை வகுப்பது புதிய உத்தியாகக் கையாளப்படுகிறது.[4] பல்வேறு பேச்சுச் சூழல்களை வகுத்துக் கொடுத்து மாணவர்களை அப்பேச்சுச் சூழல்களில் ஈடுபடுத்துவது அவர்களின் மொழிக் கற்றல் திறமையைச் சிறந்த வகையில் வளர்க்கும் என்பதை எடுத்துக்காட்டுகின்றனர் மொழியாராய்ச்சியாளர்கள்! இலக்கணம் கற்றுக் கொடுத்தல் மட்டுமே மொழிக்கற்றல் என்பதோ மொழியைப் பற்றித் தெரிந்துகொள்வது மட்டுமே மொழியறிவு என்பதோ அல்லாமல் அதற்கும் மேலாக மாணவர்கள் மொழிச் சூழல்களில் தங்களைச் சிறப்பாக ஈடுபடுத்திக்கொள்கின்ற திறமையைப் பெறுவதே மொழிக்கற்றலின் மேன்மையான பங்கு எனலாம். இரண்டாம் மொழியாக ஒரு மொழியைக் கற்கும் போது பேச்சுத் திறமையையும் எழுத்துத் திறமையையும் நன்றாகக் கற்றுக்கொள்ள பெரும்பாலான மாணவர்கள் திணறுகின்றார்கள்! இரண்டாம் மொழியாகத் தமிழைக் கற்று முதல் மொழியாகத் தமிழைப் பேசுவோர் போன்று மொழித்திறமையை அவர்களால் பெற இயலுமா என்பது இன்னமும் கேள்விக்குறியாகவே இருக்கிறது.

ஒரு மொழியில் சரளமாகப் பேசவேண்டும் எனில் மொழியின் சொற்களையும் வாக்கிய அமைப்புகளையும் திறம்படக் கற்றுக்கொள்வதோடு நிறுத்திக்கொள்ளாமல் பல்வேறு மொழிச் சூழல்களைப் பற்றி அறிவது அவற்றின் நுண்மையை ஆய்வது அச்சூழல்களில் திறம்பட தங்களை ஈடுபடுத்திக்கொள்ளும் வழிவகைகளை அறிவது போன்றவை மொழிக்கற்றலின் சிறப்பு அம்சங்களாகும். மொழிச் செயல்பாட்டு முறையில் மொழி கற்கும் பொழுது மாணவர்களின் பங்கு மற்ற முறைகளைவிட அதிகமாக இருக்கும் காரணத்தால் மாணவர்களின் மொழியை அறிந்துகொள்ளும் திறன் வளர்கிறது. அதோடு மாணவர்கள் இம்முறைகளில் மொழிக் கற்றல் உத்திகள் பலவற்றைத் தாங்களாகவே உருவாக்கிக்-கொள்ளும் வழிவகைகள் இருக்கின்றன. மொழிக் கற்றலுக்கான உத்திகளை ஆசிரியர்கள் வகுத்து மாணவர்களை அவற்றில் ஈடுபடுத்தும் முறையை விட, மாணவர்களே இவ்வுத்திகளை ஏற்படுத்திக்கொள்ளும் திறைமைகளை ஏற்படுத்தித்தருவது இவ்வழி மொழிக்கற்றல் மற்றும் கற்பித்தலின் முக்கியக் கூறாகும்.

---

[4] பார்க்க Kawamura (2007), Miller (2008) etc.

இக்கட்டுரை தமிழ் மொழியின் பேச்சுச் சூழல்கள் சிலவற்றை எடுத்தியம்பி அச்சூழல்களில் மாணவர்கள் தங்களை ஈடுபடுத்திக்கொள்ளும் செயல்பாடுகளைப் பற்றி விளக்குகிறது. http://www.thetamillanguage.com என்னும் இணையப்பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள தமிழ்ப்பேச்சுச் சூழல்களை எங்கனம் வகுப்பறையில் திறம்பட பயன்படுத்துவது என்பது பற்றி விளக்குகிறது இக்கட்டுரை.[5] குறிப்பாக இரண்டாம் மொழியாகத் தமிழை பயிலும் மாணவர்களின் குறிப்பிடத்தக்கச் சிக்கல்கள் பற்றியும் அச்சிக்கல்களின் அடிப்படையில் தமிழ் பயிற்று முறை அமைப்பது பற்றியும் இக்கட்டுரை எடுத்தியம்புகிறது. இணைய வளர்ச்சி உலகமயமான ஒருங்கிணைப்புக் கருவூலமாக இருக்கும் இக்காலக்கட்டத்தில் தமிழ் மொழியின் பேச்சுச் சூழல்களையும் அவற்றை மாணவர்கள் உலகலாவிய ஒருங்கிணைப்போடு பயன்படுத்தும் வண்ணமும் அமையும் காணொளிகளை ஏற்படுத்தித்தருவது மிகவும் எளிது. இவ்வகையிலான முயற்சியில் ஏற்படுத்தியதே மேற்கூறிய இணையப்பக்கம். உலகலாவிய தமிழ்க் கற்றல் மற்றும் கற்பித்தல் முறைக்கு இத்தகைய இணையப்பக்கங்களின் பங்கு பற்றியும் இங்கு விளக்கப்படுகிறது.

<u>மொழிச்சூழலும் மொழிக் கற்றலும்</u>

மொழிச்சுழல் (language in context) என்பதைப் பல கோணங்களில் விளக்கலாம். மொழியைக் கற்பது என்பது மொழியின் இலக்கணம் மற்றும் சொற்களைப் பற்றி அறிவதோடன்றி அவை பேச்சுச் சூழலில் எங்கனம் பயன்படுத்தப்படுகிறது என்பதை அறிவதும் ஆகும். "நீங்களும் வந்துவிட்டீர்களா?" என்னும் வினாவை இலக்கண அடிப்படையில் அறிந்து கொண்டால் மட்டும் இத்தொடரை எல்லா மொழிச் சூழலிலும் பயன்படுத்த முடியும் என்பதாகிவிடாது. ஒவ்வொரு சூழலுக்கும் ஒவ்வொருவிதமாக இத்தொடரைப் புரிந்துகொள்ளலாம்.[6] இந்த வகையில் "விடு" என்ற விகுதியின் பல்வேறு பயன்பாடுகளை அதைப் பயன்படுத்தும் சூழல்கள் மூலம்தான் நன்கு அறிய முடியும். என்னென்ன சூழலில் எப்படியெல்லாம் இந்த விகுதியைப் பயன்படுத்தலாம் என்பதை அறுதியிட்டும் கூறிவிடமுடியாது. மொழியை முதல் மொழியாக அறிந்தவர்கள் இவ்வகை பொருள் நுண்மைகளை பல சூழல்களில் தங்களை ஈடுபடுத்திக்கொண்டு இவ்விகுதிகள் குறித்தான பயன்பாட்டை நன்கு அறிந்து-கொள்கின்றனர். இத்தகைய பொருள் நுண்மைகளை எங்கனம் இரண்டாம் மொழியாகத் தமிழ் மொழியைக் கற்கும் மாணவர்களுக்குக் கொடுக்க முடியும்? முதல் மொழியாக ஒருவர் மொழியை எங்கனம் கற்றுக்கொண்டாரோ அதே சூழலை மொழி கற்றல் முறையில் கொடுப்பதே பயன்பாட்டு அடிப்படையில் மொழிக் கற்பித்தல் என்பது. மாணவர்களிடையே மொழிச் சூழல்கள் பலவற்றைக் கொடுத்து மொழியைச்

---

[5] பார்க்க Renganathan (2011).

[6] "விடு" என்னும் விகுதியின் பயனைச் சூழலின் அடிப்படையில் காண்க: http://www.thetamillanguage.com/unit_07/section_A/lesson02.asp

சரியாகப் பயன்படுத்தும் திறமையை வளர்க்கச் செய்யவேண்டும். இதையும் இலக்கண அடிப்படையிலான மொழிக்கற்றல் முறை என விவாதிக்கலாம்! ஆனால் இலக்கணம் பற்றி நிறைய சிந்தனை இல்லாமலே மொழியைச் சூழலுக்கு ஏற்றவாறு கற்பித்தல் பயன்பாட்டு முறை மொழிக்கற்பித்தலின் சிறப்பு அம்சம் எனலாம்.

இலக்கண அடிப்படையிலான மொழிக் கற்பித்தலின் சிக்கல்கள்

மொழிக்கற்றல் துறையின் ஆரம்பகாலங்களில் கட்டமைப்பு மொழியியில் கோட்பாடுகள் (structural linguistics) பலவற்றையே பயன்படுத்திவந்தனர். இதனால் பல மொழியாசிரியர்கள் மொழியியில் கோட்பாடுகளைப் பயன்படுத்தியே மொழி கற்பிக்கும் வகையை அறிந்தனர். இதனால் மாணவர்கள் மொழியைக் கற்கும் போது பெரும்பாலும் இலக்கணத்தையே கற்றுக்கொண்டனர். இதன் பின்விளைவு மாணவர்களால் மொழியை முதல் மொழியாகப் பேசுபவர்கள் போன்ற திறமையைப் பெற முடியவில்லை! மேலும் தமிழ் மொழியைப் பொறுத்தவரையில் இன்னமும் செம்மொழி இலக்கணத்தையும் இலக்கியத்தையும் கற்பிப்பதே முதன்மையாக இருத்தல்வேண்டும் என்பதில் சிலர் கவனமாக இருக்கின்றனர். தமிழ் இலக்கியம் கற்பிப்பது என்பது வேறு தமிழ் மொழி கற்பிப்பது என்பது வேறு. இலக்கியம் மூலமாகத் தமிழ் மொழியைக் கற்பித்தல் வேண்டும் என்பதும் சிலரின் கருத்து. அதோடு மொழியாசிரியர்களுக்கு செயல்பாட்டு அடிப்படையிலும் (performance based approach), சூழல் அடிப்படையிலும் (context based approach), உரையாடல்கள் அடிப்படையிலும் (communicative approach), தேவை அடிப்படையிலும் (task based approach) மொழியை எவ்வாறு கற்பிப்பது என்பது போன்ற பயிற்சிகள் போதுமான அளவில் கிடைக்காமல் போய்விட்டது. இவ்வகைகளில் தமிழ் மொழியைக் கற்பிப்பதற்கான பயிற்சி நூற்கள் பல இல்லாதது தமிழ் மொழிக் கற்றல் முறைகளில் போதுமான மாற்றங்களை ஏற்படுத்த இயலாத நிலை!

புலம்பெயர்ந்த தமிழ் மாணவர்களின் தமிழ் மொழித் தேவைகள்

புலம்பெயர்ந்த தமிழ் வம்சாவளி மாணவர்களுக்கான மொழித்தேவை என்ன என்பதை ஆய்ந்தால் அவர்கள் தங்களின் மொழிக்கற்றல் சூழல் அடிப்படையில் பல்வேறு வகையான தமிழ் மொழித்திறைமையைப் பெற்றுள்ளார்கள் என்பதை அறியலாம். அமெரிக்கப் பல்கலைக் கழகங்களில் தமிழ் பயிலும் மாணவர்களைப் பொறுத்த வரையில் கொஞ்சம் கூட தமிழ் தெரியாமல் வருபவர்கள் முதல் நன்கு பேசும் திறமைப் பெற்று வரும் மாணவர்கள் வரை இம்மாணவர்களைப் பல வகையில் பிரிக்கலாம். இருப்பினும் மிகக் குறைந்த தமிழ் மாணவர்களே தங்களின் பெற்றோர்கள் மூலமும், தொலைக்காட்சி, திரைப்படம் போன்றவை மூலமும் தமிழை நன்கு புரிந்து கொண்டு பேசக் கூடிய திறமையைப் பெற்றவர்களாக இருக்கிறார்கள். பெரும்பாலான மாணவர்கள் தமிழை நன்கு புரிந்து கொள்கிறார்கள் ஆனால் அவர்களுக்குப் பேசவும்

திறம்பட எழுதவும் இயலாத நிலையில்தான் இருக்கிறார்கள். இவர்களையும் மற்றவர்கள் போல் தமிழ் மொழி பேசவும் எழுதவும் செய்யவேண்டுமெனில் பாடத்திட்டங்களை மேற்கூறிய வகையில் செயல்பாட்டுத்திறனில் அமைப்பதே சிறந்த வழியாகும். இத்தகைய புலம்பெயர்ந்த வம்சாவழி மாணவர்களுக்கு இலக்கண அடிப்படையிலோ வேறு எந்தவித வழக்கமான அடிப்படையிலோ மொழிக் கற்பித்தல் என்பது சரியான விளைவைக் கொடுக்குமா என்பது கேள்விக்குறியே!

சில தமிழ் மாணவர்கள் வீட்டில் பேசும் தமிழைக் கற்றுக் கல்லூரிக்கு வரும் போது அங்கு கற்றுக்கொடுக்கப்படும் இலக்கணம் மற்றும் இலக்கியங்கள் அவர்களுக்குப் புரியாத புதிராகவே இருக்கின்றன. இவற்றைத் தங்களின் வீட்டில் கற்றுக்கொண்ட தமிழறிவோடு இணைத்துப்பார்க்கும் வகை இவர்களுக்கு இயலாமல் போய்விடுகிறது.

தமிழ் வம்சா வழி மாணவர்களுக்குத் தமிழ் உள்ளுணர்வு (Tamil intuition) கிடைக்கச்செய்தல் வேண்டும். இந்த உள்ளுணர்வு என்பது தமிழ்மொழியின் நுண் பொருள்களைப் பற்றிய மற்றும் மொழியை முறையாகப் பயன்படுத்தும் திறமை பற்றிய அறிவாகும். இந்த உள்ளுணர்வு கிடைக்காத பட்சத்தில் அவர்கள் தமிழ் மொழியைப் பள்ளியறிவாகவே காண்பர். என்றும் மொழிச் சூழலுக்குத் தகுந்தவாறு பேசும் திறமையைப் பெறாதவர்களாவே இவர்கள் இருப்பர். தமிழ் மொழியில் உள்ள பல சிக்கல்களை அவர்கள் அறியாமலும் பயன்படுத்தத் தெரியாமலுமே இருப்பர். உதாரணமாக "நீங்களாவது வாங்கித்தருவதாவது"[7], "வந்தோமா படித்தோமா போனோமா என்று இல்லாமல்..."[8], "வாங்க போங்கங்றீங்க..."[9] போன்ற வழக்குகளை முறையாகப் பயன்படுத்த ஒருவருக்கு இவற்றைப் பற்றிய முழு பயன்பாட்டு அறிவு தேவை! மொழிச்சூழல் அடிப்படையிலான இப்பயன்பாடுகளை அறிந்து கொள்வதிலும் பயன்படுத்துவதிலும் அவர்களுக்குச் சிரமமாகவே இருக்கும். இவ்வகையிலான பயன்பாடுகளை விளக்கினால் மட்டும் அவர்களுக்கு முழுமையாகப் புரியும் வாய்ப்பு இருக்கும் என்று கூறிவிட முடியாது. மாறாக இவற்றை அவர்கள் இச்சூழல்களில் பயன்படுத்தும் வாய்ப்பு கிடைக்கும் போதுதான் இவற்றின் நுண்பொருள்களும் பயன்பாடுகளும் அவர்களின் உள்ளுணர்வில் பதிய வாய்ப்பிருக்கும். குறிப்பாக இவ்வகை பயன்பாடுகள் மொழியைப் பேசும் போது இயல்பாக அவர்களுக்கு வரவேண்டும் என்பது மிக முக்கியம். இவ்வகைத் திறனை அவர்களுக்குப் பள்ளியறிவு மூலமே கொடுத்துவிட முடியுமா என்பது கேள்விக்குரியதே!

---

[7] காண்க http://www.thetamillanguage.com/unit_08/section_A/lesson01.asp

[8] காண்க http://www.thetamillanguage.com/unit_09/section_B/lesson02.asp

[9] காண்க http://www.thetamillanguage.com/unit_09/section_A/lesson01.asp

தமிழை இரண்டாம் மொழியாகக் கற்போருக்குத் தமிழைப் பயன்படுத்துவதற்கான நல்ல மொழிச்சூழல் ஈடுபாடு (language immersion) கிடைக்காத தருணத்தில் அவ்வகை ஈடுபாட்டை மொழிக்கல்வி வகுப்புகளில் கொடுக்க முனைவதே மொழிப் பயன்பாட்டு உத்தியின் பெரும்பங்காகும்.

தமிழ் மொழிக் கற்றல் மற்றும் கற்பித்தலில் வேண்டிய மாற்றங்கள்

பெரும்பாலான வம்சாவழி தமிழ் மாணவர்களுக்குத் தமிழைக் கேட்டுப் புரிந்துகொள்ளும் திறன் முழுமைப் பெற்ற நிலையில் இருப்பார்கள். அதாவது எவ்வளவு வேகமாக அவர்களிடம் தமிழில் பேசினாலும் அவர்களால் மிக நன்றாகப் புரிந்து கொள்ளமுடிகின்ற திறன் அவர்களிடம் இருக்கும். இத்தகைய மாணவர்களுக்கு மேற்கூறிய சிறப்பு மொழிப் பண்புகள், வழக்குத் தொடர் மற்றும் பல சிக்கலான அமைப்புகள் பலவற்றைப் புரிந்துகொள்கிற திறன் நன்கு இருக்கும். ஆனால் அவற்றையெல்லாம் தக்க மொழிச் சூழலில் பயன்படுத்தும் திறன் கொஞ்சம் கூட இருக்காது. புரிந்து கொள்ளும் திறன் மற்றும் செயல் திறன் என்னும் இருவகைத் திறனைப் பற்றி மொழிக்கற்பிப்போரின் மனதில் இருக்கவேண்டியிருக்கிறது. அவர்களிடம் இருக்கும் புரிந்துகொள்ளும் திறனைக் கொண்டு அவர்களிடம் இல்லாத செயல் திறனை வளர்க்க வேண்டியதே தமிழ் கற்பிப்போரின் முழுக்கவனத்தில் இருக்கவேண்டும். அவர்களின் புரிந்துகொள்ளும் திறனை முறையாகப் பயன்படுத்தாத எந்த வித பாடத்திட்டமும் அவர்கள் மத்தியில் எடுபடாமல் போய்விட வாய்ப்பிருக்கும். இந்தவகையில் பல மொழிச் சூழல்களைக் காணொலிகள் மூலம் பார்க்கச் செய்து அவ்வுரையாடல்களைக் கேட்கச் செய்து அவ்வுரையாடல்கள் போலவே வகுப்பில் சகமாணவர்களோடு செயற்கைச் சூழலை ஏற்படுத்திப் பயன்படுத்த வைப்பதே இப்பயன்பாட்டு அடிப்படையிலான தமிழ் மொழிக் கற்றல் முறையின் முக்கிய அம்சமாகும். அவர்கள் சில செயற்கைச் சூழலை ஏற்படுத்தவேண்டியிருக்கும். இருப்பினும் அத்தகையச் சூழல்களில் தங்களை ஈடுபடுத்திக்கொள்ளும் போது தங்களின் கேட்கும் திறனை பேசும் திறனாகக் கொண்டுவர வாய்ப்பிருக்கும்.

மொழிப் பயன்பாடு மற்றும் மொழிச் சூழல்கள் அடிப்படையில் அமைக்கப்பட்ட இணையப் பக்கம்
(http://www.thetamillangauge.com, mirror: http://www.southasia.upenn.edu/tamil)

இவ்வகையில் மேற்கூறிய இணையப் பக்கத்தில் எழுபத்திரண்டு மொழிச் சூழல்கள் காணொளிகளாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. வீடு, கடைவீதி, பேருந்து நிலையம், பழக்கடை, காய்கறிக்கடை, துணிக்கடை, சாப்பாடு, உடை போன்ற பல வகையான மொழிச் சூழல்கள் இக்காணொளிகள் வழியாகக் கொடுக்கப்பட்டுள்ளன. இவை தமிழ்மொழிப் பயன்பாடு பற்றி மற்றுமல்லாமல் தமிழ்ப்பண்பாடு மற்றும் எதார்த்தமான

சூழ்நிலைகள் போன்ற விளக்கங்களையும் மனதில் கொண்டு அமைக்கப்பட்டவை! இக்காணொளிகளும் அவற்றோடு கொடுக்கப்பட்டுள்ள பாடத்திட்டங்களும் பயிற்சிகளும் எளியன முதல் மிகச் சிரமமானவை என ஒரு வரையரைக்குள் கொடுத்துள்ளோம். முதற் காணொளியைக் காணும் போது அது மிக எளியதான வரவேற்பு மற்றும் ஒருவருக்கொருவர் பழகிக்கொள்ளும் சூழலை விளக்குவதாக இருக்கும். பாடங்கள் தொடரத் தொடர அவை பல சிக்கலான சூழல்களை விளக்குவதாக இருக்கும். வம்சாவழி மாணவர்கள் தங்களின் மொழித் திறமையின் அடிப்படையில் இப்பாட வரிசையில் எந்தப் பாடத்திலிருந்து வேண்டுமானாலும் படிக்கத் தொடங்கலாம். இப்பாடத்திட்டங்களைப் படிக்கவேண்டும் என்று சொல்வதைவிட இவற்றோடு தங்களைப் பழக்கப்படுத்திக்கொள்ளலாம் என்று சொல்வதே மிகப் பொருந்தும். இவ்வகையில் ஒவ்வொரு உரையாடலிலும் வருகிற புது இலக்கண விளக்கங்கள் மற்றும் பண்பாட்டு அடிப்படையிலான விளக்கங்கள் அப்பாடத்திலேயே அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும்.

உதாரணமாக http://www.thetamillanguage.com/unit_02/section_B/lesson01.asp என்ற பக்கத்தில் தமிழகப் பண்பாட்டின் விருந்து பற்றிய விளக்கத்தைக் காணொளி வாயிலாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. விருந்தினராக ஒரு வீட்டுக்குச் செல்லும் போது அவர்களை நிறைய சாப்பிடச் சொல்லும் பழக்கம் தமிழர்களுக்கு உண்டு. அதே சமயத்தில் விருந்தினர்களும் தங்கள் வீட்டில் மனம்போன போக்கில் நிறைய சாப்பிடுவதையும் அவர்கள் விரும்புவதில்லை. இப்படியான சூழலில் தமிழ் மொழி வாக்கியங்கள் மற்றும் சொற்கள் ஆகியனவற்றை எப்படியெல்லாம் பயன்படுத்த-வேண்டும் என்ற ஒரு நியதி இருக்கிறது. விருந்தினர் “போதும்! போதும்! வேண்டாம்! வேண்டாம்!” என அடிக்கடி சொல்லவேண்டும். வீட்டினரோ! “இன்னும் கொஞ்சம்! இன்னும் கொஞ்சம்!” என அடிக்கடி சொல்லவேண்டும். இப்படியான விருந்து மொழிப்பயன்பாட்டோடு பல்வகையிலும் தொடர்பு கொண்டிருப்பதைக் காணலாம். அமெரிக்கா போன்ற நாடுகளில் பிறந்த தமிழ்க் குழந்தைகளுக்கு இவ்வையான பழக்கம் இருக்க வாய்ப்பில்லை! அவர்கள் வீட்டிலேயே அமெரிக்கப் பண்பாட்டோடு வளர்ந்தவர்கள்! உணவும் உறவும் அவர்களின் விருப்பத்திற்கே விடவேண்டும் எனும் கொள்கையில் வளர்ந்தவர்கள்! அவர்கள் தமிழகக் குடும்பத்தோடு தமிழகத்தில் கலக்கும் தருணத்தில் விருந்து போன்ற தமிழ்ப்பண்பாட்டை எதிர்கொள்ள-வேண்டியிருக்கும்! இந்த வகையில் மொழியும் பண்பாடும் தமிழ்ச் சூழலும் பிண்ணிப் பிணைந்தவாறு கொண்ட பாடத்திட்டங்களை அமைத்துத் தருவது தமிழ்க் கற்பித்தலின் நோக்கமாக இருக்கவேண்டியிருக்கிறது. மேற்கூறிய பாடம் இந்தவகையில் அமைக்கப்பட்டதே! இங்கனமே இவ்விணையப்பக்கத்தில் கொடுக்கப்பட்ட ஒவ்வொரு பாடமும் தமிழ்ப்பண்பாடு, தமிழ்மொழிப் பயன்பாடு, மொழிச் சூழல் என்பனவற்றை மையமாகக் கொண்டு கொடுக்கப்பட்டிருக்கும்!

முடிவு

தமிழர்கள் புலம்பெயர்ந்து வேறு நாடுகளில் குடியுரிமைப் பெற்று வாழ்ந்து வருவதன் வரலாற்றை நோக்கும் போது புலம்பெயர்ந்த வம்சாவழி தமிழ் மாணவர்களுக்கான தமிழ்க்கல்விக்காகத் தமிழ் பயிற்றுவோர் அதிகக் கவனம் செலுத்தவேண்டியதன் முக்கியத்துவத்தைக் காணலாம். சிங்கப்பூர், மலேசியா ஆகிய இரு நாடுகளைத் தவிர மற்ற நாடுகளில் வம்சாவழித் தமிழ்க்கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்டாத நிலையைத்தான் காணமுடிகிறது. மொரீஷியஸ், தென்னாப்பிரிக்கா போன்ற நாடுகள் மற்றும் சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளில் கிட்டத்தட்ட தமிழ்நாடு போன்று மொழிச்சூழல் ஈடுபாட்டுக்கான (language immersion) வசதிகள் இருக்கின்றன. ஆனால் அமெரிக்கா, ஐரோப்பா, கனடா போன்ற இடங்களில் இத்தகைய ஈடுபாட்டுக்கான வசதிகள் இல்லை! இத்தகைய ஈடுபாடு இல்லாத பட்சத்தில் தமிழகத்தில் கற்றுக்கொடுக்கப் பயன்படும் தமிழ்ப் பாடத்திட்டங்கள் எந்தவகையிலும் இவ்வகை நாடுகளில் பயன்படுத்த இயலாது. மாறாகத் தமிழ் மாணவர்களுக்குத் தமிழறிவு மட்டுமல்லாமல் தமிழ் உள்ளுணர்வு கொடுக்கும் வகையிலான தமிழ்ப்பாடத்திட்டத்தை வகுக்கவேண்டியதும் மிக அவசியம். முதல் நிலை தொடங்கி பத்தாம் நிலை, பதினொன்றாம் நிலையென தமிழ் வகுப்பைப் பிரித்துத் தமிழ்ப் பாடத்திட்டங்களை வகுக்கும் நிலை மாறி வம்சாவழித் தமிழ் மாணாக்கர்களின் இல்லத்தினின்று பெற்றத் தமிழறிவை மனதில் கொண்டு வெவ்வேறு வகையான பாடத்திட்டத்தை அமைப்பதில் தமிழ்க்கல்வியாளர்கள் கவனம் கொள்ளவேண்டியிருக்கிறது.

வம்சாவழி மாணாக்கர்களுக்கான தமிழறிவு புகட்டலில் இருக்கும் பல வருட அனுபவ அடிப்படையில் அவர்களை வயதை வைத்து வெவ்வேறு நிலைகளில் பிரித்துத் தமிழ்க்கல்வி கொடுக்க இயலாது என்பதை உணர முடிகிறது. இல்லத்தினின்று அவர்கள் பெற்ற தமிழ்க்கல்வியினடிப்படையில் அவர்களைப் பார்க்கும் போது ஒவ்வொரு மாணவரும் ஒவ்வொரு விதமான சூழலில் தமிழறிவு பெற்றிருப்பார்கள் என்பது தெரியவரும். இந்த வகையில் இவர்கள் அனைவரையும் ஒருங்கிணைய நோக்கி அவர்களது மொழியறிவை ஒரே தன்மையானது என கணிக்க இயலாது.

பெரும்பாலான வம்சாவழி மாணவர்களின் தமிழறிவின் தேவையைக் கணிக்கும் போது அவர்களுக்குத் தமிழ் உள்ளுணர்வு கொண்ட பேச்சுத் திறனும் எழுதும் திறனும் புகட்டவேண்டியது மிக அவசியம் என்பதை அறியலாம். இவ்வகையில் இக்கட்டுரை மொழிச் செயல்முறைத் திட்டத்தில் எங்கனம் பாடத்திட்டத்தை அமைக்கலாம் என்பதை இதற்காக ஏற்படுத்தப்பட்ட தமிழ் இணையப் பக்கத்தின் அடிப்படையில் விளக்குகிறது. தமிழ் மொழி, மொழிச் சூழல்கள் மற்றும் தமிழ்ப் பண்பாடு ஆகியன ஒருங்கிணைந்த பாடத்திட்டத்தைத் தமிழ் வம்சாவழி மாணவர்களுக்கு அமைக்கவேண்டியதன் முக்கியத்துவத்தை இக்கட்டுரை விளக்குகிறது.

மேற்கோள் நூற்கள்

Kawamura, Hiroaki. 2007. Participant Observation for Language Learners: A Performance-Based Approach to Language Learning during Study Abroad. *Japanese Language and Literature*. Vol. 41. No. 2. Oct. 2007.

Miller, Cleve, 2008. Performance-based learning for teaching one-to-one classes (http://peo.cambridge.org/index.php?option=com_content&view=section&layout=blog&id=2&Itemid=8_)

Renganathan, Vasu 2011. *The Tamil Language in Context: A Comprehensive Approach to Tamil Learning*. Department of South Asia Studies, University of Pennsylvania. In Press.

Renganathan, Vasu 2009. Enhancing the processes of Learning Tamil with Synchronized Media, Paper presented at the 8th International Tamil Internet Conference, Cologne, Germany. (http://www.infitt.org/ti2009/papers/vasu_renganathan_final.pdf)

Renganathan, Vasu 1998. Formalizing the Knowledge of Heritage Language Learners: A Technology-Based Approach. Journal of the South Asia Language Pedagogy and Technology (http://salpat.uchicago.edu/index.php/salpat).

தமிழர் வாழ்புலங்களில் தமிழ்மொழிக் கல்வி
கற்றல் கற்பித்தல் - சிக்கல்களும் தீர்வுகளும்

பொன்னையா விவேகானந்தன்
விரிவுரையாளர் – அண்ணாமலைப் பல்கலைக்கழகம் - கனடா வளாகம்
தாய்மொழி கல்வித்திட்ட இணைப்பாளர் - அறிவகம்
கனடா.

பிறநாடுகளை நோக்கிய தமிழர் புலப்பெயர்வு, இரண்டு நூற்றாண்டுகளைக் கடந்து இன்றும் நிகழ்ந்துகொண்டிருக்கின்றது. மாறுபட்ட பண்பாட்டு. இயற்பியற்; சூழலில், புதிய வாழ்களங்களை அமைத்து வேரூன்றி எழுகின்றது புலப்பெயர் தமிழ்ச்சமூகம். குடியேறிய பல்வேறு ஆட்புலங்களிலும் தம் வாழ்வை நிலைநிறுத்தப் போராடும் தமிழ்ச்சமூகம் வலிமையான எதிர்நிலைகளுக்கு முகம் கொடுத்தவாறு தம் இருப்பைத் தக்கவைக்க பல பணிகளை முன்னெடுத்து வருகின்றது. அப் பணிகளில் ஒன்றாக, தாய்மொழிக் கல்வியினை நாம் கருதலாம்.

ஐரோப்பிய, வடஅமெரிக்கப் புலங்களில் கால் நூற்றாண்டு வாழ்வியல் வரலாற்றைக் கொண்டிருக்கும் எம் இனம் தாய்மொழிக் கல்வியில் மேம்பட்டுவரும் அதேவேளை, பல பாரிய எதிர்நிலைகளையும் தொடர்ச்சியாகச் சந்தித்து வருகின்றது. எமது தாய்மொழிக்கல்வி எதிர்கொள்ளும் சிக்கல்களைக் கண்டறிந்து, அவற்றிற்கான தீர்வுகளைத் தேடும் ஆய்வாக இக்கட்டுரை அமைகின்றது.

<u>தாய்மொழிக் கல்வியின் தேவையை உணர்தல்</u>

<u>இனவழி வரலாற்று மொழி</u>

தாய்மொழி எனும் தொடர், பல்வகை விளக்கங்களைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. எனினும், “ஓர் இனமானது, தமக்கென உரித்தான ஒரு நிலத்தில், போற்றுதற்குரிய பண்பாட்டு விழுமியங்களைக் கொண்டு, தாம் உருவாக்கிக்கொண்ட ஒருமொழியை தலைமுறை தலைமுறையாகப் பயன்படுத்தி வருமாயின், அந்த மொழி அவ்வினத்தின் தாய்மொழி என அழைக்கப்படும்,” என்ற விளக்கமே பொருத்தமாக அமைகின்றது. எம் இனத்தினது வரலாற்று வழி வந்த உயர்மொழி தமிழ்| எனும் உணர்வைக் காலந்தோறும் வாழும் தலைமுறைகளுக்கு உணர்த்துதல் வேண்டும்.

<u>இன அடையாளம்</u>

பல்லினச் சூழலில் ஓர் இனத்தினது முதன்மை அடையாளம் அதன் தாய்மொழியாகும். மொழியைக் கொண்டு இனத்தை அடையாளப்படுத்தும் வழக்கமே பெரிதும்

நிலவுகின்றது. வாழும் நாடுகளில் இனத்தின் பெயரால் அழைக்கப்படும் நாம், மொழியாலேயே ஏனையோருக்கு அறிமுகமாகின்றோம். மொழியே எம் முகவரி ஆகின்றது. தன்னாட்சி கொண்ட ஒரு நாடு எமக்கில்லாதிருக்கும் ஒரு பொழுதில், எம் முழுமை அடையாளம் மொழியே என்பதை உணர்தல் வேண்டும். இவ்வுணர்வினைத் தாய்மொழிக்கல்வியூடாக, இளந்தலைமுறையினருக்கு ஊட்டுதல் முதன்மையான பணிகளில் ஒன்றாகும்.

தொடர்பாடல் மொழி

வாழ்புலங்களில், தாய்மொழி வாயிலான தொடர்பாடல் குறைந்து செல்கின்றது என்பது கண்கூடு. நாம் வாழும் நாடுகளில் முதன்மை மொழிகளாக வெள;வேறு மொழிகள் உள்ளன. அவ்வாறான மொழிகளில் தேர்ச்சி பெறும் எம் அடுத்த தலைமுறை, தாய்மொழியில் தொடர்பாடும் ஆற்றல் அற்றிருக்குமாயின், ஏனைய நாடுகளில் வாழும் தமிழரோடு எப்படி உறவாட முடியும்? பல நாடுகளிலும் வாழும் தமிழர் தம்மிடையே தொடர்பைப் பேணுகின்ற பொதுமொழி தாய்மொழியாகும். தாய்மொழியில் தொடர்பாடவல்ல ஆற்றலை இழந்துவிடுவோர், காலவோட்டத்தில், ஏனைய ஆட்புலங்களில் வாழும் தமிழரது தொடர்புகளை இழந்து, இனஅடையாளம் மறந்து, தாம் வாழும் நாட்டுக்குரிய குடிமக்களாகவே மாறிவிடுவர்.

வாழ்வியல் மொழி

தாய்மொழியானது, பல்வகையிலும் மக்களால் பயன்படுத்தப்படும் நிலையில் வாழ்வியல் மொழி எனப்படுகின்றது. மக்கள், தேவைகளுக்கு ஏற்ப, மொழியையும், மொழிவழி கற்றறிந்த, உற்றுணர்ந்த விடயங்களையும் பயன்படுத்துதல் இதன் வழிப்படும். மக்கள் தம்மிடையேயான தொடர்புகளைத் தாய்மொழியில் தடையின்றி மேற்கொள்ளுதல், தாய்மொழி வழி, உணர்வுகளைப் புரிந்து வெளிப்படுத்துதல், தாய்மொழியைத் தேவைக்கேற்ப முறையாகப் பயன்படுத்துதல், பல்வகை வடிவங்களிலான சிறந்த படைப்புகளை உருவாக்குதல் என்பன, வாழ்வியல் மொழியின் சிறப்புநிலைகளாகும்.

பண்பாட்டுமொழி

பண்பாட்டுமொழி எனும் சிறப்பு, எல்லா மொழிகளுக்கும் கிடைத்துவிடுவதில்லை. மிக நீண்ட வரலாற்றைக் கொண்ட ஒரு இனம், தொடர்ச்சியாகப் பயன்படுத்தி வரும் ஒரு மொழியே பண்பாட்டு மொழி எனும் சிறப்பைப் பெறும். தொடர்பாடல் எனும் எல்லை கடந்து, மரபுகள், விழுமியங்கள், பண்பாடு, கலை, வரலாறு, நம்பிக்கைகள் வழிபாடுகள் என்பன போன்ற, இனத்தின் சீர்மைகளைத் தன்னகத்தே தாங்கி நிற்கும் ஒப்பற்ற தொல்சீர்மொழி தமிழாகும்.

எம் மூதாதையர் காலங்காலமாக, உருவாக்கிச் சேகரித்து வைத்திருக்கும் செல்வக்களஞ்சியத்தின் வாயில் தமிழ்மொழியே. மொழியை விட்டு விலகிச் செல்வோர், எம் அரிய செல்வக்களஞ்சியத்தையும் துறந்தே செல்கின்றனர். எமது வாழ்வியல் எங்கும் நிறைந்து கிடக்கும் உயரிய செல்வங்களை, நமதுடைமையாகக் கொண்டு வாழ வேண்டுமெனில், மொழிக்கல்வி மிக முதன்மையானதாகும்.

இவைபோன்ற பல கரணியங்கள் உலகெங்கும் தாய்மொழிக்கல்வியை முதன்மைப்-படுத்துகின்றன. மொழிசார்ந்த கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர், இவற்றைப் புரிந்து கொள்ளுதல் மிக அவசியமாகும்.

தாய்மொழிக்கல்வி எதிர்நோக்கும் சிக்கல்கள்

புதிய புலங்களில் தாய்மொழிக்கல்வியின் தேவை நன்கு உணரப்பட்டு, கற்பித்தல் செயற்பாடுகள் பலவாறாக முன்னெடுக்கப்படுகின்றன. எனினும் கற்பித்தல் முயற்சிகளானது, தொடக்கநிலையில் இருந்தே பல்வகைச் சிக்கல்களை எதிர்கொண்டுவருகின்றன.

இச் சிக்கல்களைப் பொதுச்சிக்கல்கள், வகுப்பறைச் சிக்கல்கள் என இருவகையாக வகுக்கலாம். இக்கட்டுரைக்கு ஏதுவாக பொதுச்சிக்கல்கள் சிலவற்றை அடையாளம் காண்போம்.

தாய்மொழிக் கல்வியில் போதிய ஆர்வமின்மை

வாழ்புல தமிழ்ச்சமூகத்தினரின் எண்ணிக்கையோடு ஒப்பிடுகின்றவேளை, தமிழ் கற்கும் மாணவர் தொகை குறைவாகவே காணப்படுகின்றது. ஏறக்குறைய ஐம்பது விழுக்காட்டினர் தாய்மொழி கற்றலில் ஆர்வம் காட்டாதிருக்கின்றனர். தாய்மொழி கற்பித்தற் துறையானது வலுவான வளர்ச்சியைப் பெறுவதற்கு சமூக அளவிலான முழுமையான ஆர்வமின்மை தடையாகவுள்ளது.

வாழ்புல கற்பித்தற் சூழல் பற்றிய தெளிவின்மை

பண்பாட்டிலும், இயற்கை அமைப்பிலும் மாறுபட்ட வாழ்புலமானது. கற்பித்தலில் பல்வகைப புதுமைகளைக் கொண்டுள்ளது. நம் மாணவர் நாளாந்தம் நவீனத்துவமானதும், புதிய உத்திகளைக் கொண்டதுமான கற்பித்தல் சூழலுக்குப் பழக்கப்பட்டவராவர். இவ்வாறான கற்றல் கற்பித்தல் சூழல் தாய்மொழிக் கல்விக்கு இதுவரை முழுமையாகக் கிட்டவில்லை. வாழ்புலத்திற்கான கற்பித்தற் சூழலை நன்கு புரிந்து கொண்டபின்னரே தாய்மொழிக்கல்விச் சூழலைச் சிறப்பாகக் கையாளமுடியும். வாழ்புலங்களில் தமிழ் கற்பிப்போர் பெரிதும் தாயகச் சாயலைக் கொண்ட கற்பித்தற்

சூழலையே பின்னணியாகக் கொண்டுள்ளனர். தாய்மொழிக்கல்வி மேம்பாட்டில் இந்நிலை குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

சூழலுக்கேற்ப புதிய கற்பித்தல் உத்திகள் இல்லாமை

மேற்குலக நாடுகள் கற்பித்தலில் பல நவீனத்துவமான உத்திகளைக் கையாளுகின்றன. குறிப்பாக மொழி கற்பித்தலில் ஆரம்பநிலை தொடக்கம் உயர்நிலைவரை சிறப்பான உத்திகள் பயன்படுத்தப்படுகின்றன. அத்தகைய நாடுகளின் முதன்மொழிகள் இவ்வாறான உத்திகளைப் பயன்படுத்தியே கற்பிக்கப்படுகின்றன. இவ்வுத்திகள் பெரும்பாலும் எம் தாய்மொழிக்கல்விக்குக் கிட்டுவதில்லை. தாய்மொழி கற்கும் மாணவர், கற்றல் முறைமைகளை வாழிட மொழிக்கல்வியுடன் ஒப்பிட்டு நோக்குவர். மாணவரை ஈர்க்கும்வகையில் புதிய கற்பித்தல் உத்திகள் பெருமளவில் உருவாக்கப்படுதல் அவசியமாகும்.

அரச சமூக உதவிகள் போதியளவு கிட்டாமை

வாழ்புலங்களில் தாய்மொழிக்கல்வித்துறையானது, நீண்டகால நோக்கில் தீர்க்கமுறத் திட்டமிடப்பட்டு, படிமுறைகளினூடாக, வளர்த்தெடுக்கப்படவேண்டியதொன்றாகும். சமூகம் சார்ந்து இக்கல்வித்துறை உயர்தரத்துடன் வளர்ச்சிபெற, பொருளாதார அடித்தளம் மிக அவசியமானதாகும். கனடா, நோர்வே போன்ற மேற்குலக நாடுகள் தாய்மொழிக்கல்விக்குக் களம் கொடுத்திருந்தாலும், வளம் போதியதாக இல்லை. சமூகத்தின் உள்ளார்ந்த ஈடுபாட்டுடனான உதவிகளும், தாயக அரசுகளின் உதவிகளும், தாய்மொழிக் கல்வித்துறைக்குக் கிடைக்குமானால், உறுதியான தளத்தில் இத்துறை வளர்ச்சியுறும்.

சேவை நோக்கத்தின் முதன்மையில் தங்கிருத்தல்

மேற்குலக நாடுகள் பலவற்றில், தொண்டுசேவை அடிப்படையிலேயே தாய்மொழி கற்பித்தல் நடைபெறுகின்றது. சமூக அக்கறை கொண்ட, வருவாயை முதன்மை நோக்கமாகக் கொண்டிராத ஆசிரியர்களே பெரும்பாலும் தாய்மொழிக்கல்வியில் ஈடுபடுகின்றனர். இந்த நிலைமையானது, கற்பித்தல் தொடர்பான ஆசிரியரின் முழுமையான ஈடுபாட்டிற்கு இடையூறாக இருக்கவல்லது. தொண்டுநோக்கிலான கற்பித்தல் சேவையில் பெரிதும் தங்கிருப்பது, காத்திரமான தொடர் வளர்ச்சியைப் பாதிக்கும் ஒன்றாகவே கருதப்படுகின்றது. எம் சமூகத்தினர் நுண்கலைக்கல்விக்கு வழங்கும் முதன்மையினை தாய்மொழிக் கல்விக்கும் வழங்குவார்களேயானால் இந்நிலையிலிருந்து ஓரளவு மீள முடியும்.

தாயக, அரசியல், சமூக பின்னணிகள்

தமிழர்களின் உறுதியற்ற அரசியற் பின்னணிகள் தமிழ் சமூகத்தின் வளர்ச்சித்துறைகளில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன. ஈழத்தமிழரைப் பெருமளவில் கொண்ட மேற்குலக தமிழ்ச் சமூகத்தில் தாயகப் போக்குகள் குறிப்பிடத்தக்கதான தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. இத்தாக்கங்களின் விளைவாக முழுமையான ஒருங்கிணைவுக்குட்படாத, முரண்கருத்துகளைக் கொண்ட சமூகச் செயற்பாடுகளும் தாய்மொழிக்கல்வி வளர்ச்சிக்குத் தடங்கலாகவே உள்ளன.

கற்பித்தலுக்கான மூலவளங்கள் போதியளவு இல்லாமை

வாழ்புலங்களில் தாய்மொழிக்கல்வித்துறை தொடங்கப்பட்டு, கால்நூற்றாண்டைக் கடந்துவிட்டபோதும், கற்பித்தலுக்கான மூலவளங்கள் போதியளவு இல்லாதிருப்பது, தமிழ்க்கல்வி மேம்பாட்டுக்குத் தடையாகவே உள்ளது. மாணவரும் ஆசிரியரும் தேவைக்கேற்ப நூல்களைப் பெற்றுக்கொள்ளவும், புதிய கற்பித்தல் உத்திகளுக்கேற்ப, துணைக்கருவிகளைப் பயன்படுத்தவும், வரலாற்று ஆவணங்களைச் சேகரிப்பதற்குமான போதிய மூளவள நிறுவனங்கள் வாழ்புலங்களில் இன்றுவரை முழுத்தோற்றம் பெறவில்லை.

தாய்மொழிக்கல்வி தொடங்கப்பட்ட காலம்தொட்டு இன்றுவரை எதிர்கொள்கின்ற சிக்கல்களுக்குள் அடையாளங் காணப்பட்ட சிலவே தொட்டுக்காட்டப்பட்டுள்ளன. இச் சிக்கல்கள் தொடர்பாக தீர்வு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. எனினும் இன்றளவிலும் முழுமையான தீர்வுகள் எட்டப்படவில்லை.

தாய்மொழி கற்பித்தலில் மாற்றங்களை ஏற்றல்

தாயக வாழ்வியற்சூழலில் இருந்து பெரிதும் மாறுபட்ட புலத்திற் குடியேறி, அப் புலத்திற்கான வாழ்வியல் வரலாற்றைத் தொடங்கும் ஓர் இனமானது, தம் இன இயல்பில், விட்டுக்கொடுப்புகளுக்கு இசைவுறுவதோடு, பல ஏற்புகளுக்கும் தன்னை அணியப்படுத்திக்கொள்கின்றது. கடினத்தன்மை கொண்ட இச் செயல் நிகழாவிடின் புதிய புலத்திலான இன இருப்பு நிரந்தரமற்று அழிவுறும். இதற்கேற்ப, கற்பித்தல் முறைமைகளிலும், சூழலுக்கு ஏற்ப, மாற்றங்களைக் கொண்டுவர வேண்டியது மிக அவசியமாகும்.

கற்பித்தலின் தொடக்கநிலையில், கீழ்வரும் விடயங்களை உணர்ந்திருத்தல் கற்பித்தலுக்குத் துணை செய்வதாக அமையும்,

- தாயகம் சார்ந்த கற்பித்தல் முறைமையின் பொருத்தமின்மையை உணர்தல்.

- கற்பித்தற் சூழலை நன்கு புரிந்துகொள்ளுதல். சூழலுக்கு ஏற்ப, கற்பித்தலில் மாற்றங்கள் தேவை என்பதை உணர்தல்.
- மாற்றங்கள் தேவை என்பதை உணர்த்தும் முதன்மைக் கரணியங்கள்.
- தாய்மொழியை இரண்டாம் மொழியாகக் கற்கும் சூழல்.
- மொழியைத் தொடர்பாடல் மொழியாகவும், பண்பாட்டு மொழியாகவும் கற்பிக்க வேண்டிய முதன்மை நோக்கு.
- தன்னடையாளம் தாய்மொழியே என்பதை உணர்ந்து செயற்படத் தூண்டுவதன் தேவை.
- மரபுசார் வாழ்வியலோடு, கலை, இலக்கிய, வரலாற்றையும் கற்பிக்கவேண்டியதன் அவசியம்.
- வாழ்புலக் கல்விச்சூழலோடு, ஒத்தியைவு கொண்டதான கற்பித்தல்.
- பல்லினச்சூழலில் கைக்கொள்ளப்படும் புதிய மொழிக்கல்வி உத்திகளை ஏற்றல்.
- பெருமைமிக்க தமிழினத்தின் வழித்தோன்றல்கள் என்பதை உணர்த்த வேண்டியதன் அவசியம்.

கற்பித்தலில் மாற்றங்கள் தேவை என்பதை அறிந்து கொள்வதற்கான கரணியங்கள் பல இருந்தாலும் இவையே முதன்மைக் கரணியங்களாக் கொள்ளலாம்.

<u>கற்பித்தலின் தொடக்கம் - எதிர்கொள்ளும் சிக்கல்கள்</u>

தாய்மொழிக்கல்வியின் தேவையை நன்கறிந்த பின்னர், கற்பித்தற்; சூழலைப் புரிந்துகொண்டு, மாற்றங்களை உள்வாங்கி கற்பித்தற் செயற்பாட்டினைத் தொடங்கும்போது, வகுப்பறை சார்ந்து பல சிக்கல்கள் தோற்றம் கொள்கின்றன. இச் சிக்கல்கள் பலவகைப்பட்டனவாக அமைகின்றன. இச் சிக்கல்களை எதிர்நோக்குகின்றவர் பெரும்பாலும் ஆசிரியராவர். அவற்றை எதிர்கொள்ளும் வகையில், ஆசிரியர் தம்மை அணியப்படுத்திக்கொள்ளுதல் அவசியமாகும். கற்பித்தலுக்கு முன்பாகவும், கற்பித்தலின்போதும், கீழ்க்காணும் விடயங்களில் ஆசிரியர் முன்னேற்பாடுகளைச் செய்துகொள்வாரெனில், எதிர்ப்படும் சிக்கல்களில் இருந்து சற்றேனும் விடுபட முடியும்.

- தாய்மொழிக்கற்றலில் ஆர்வத்தை ஏற்படுத்துதல்
- மாணவர்களின் உளவியலை மதிப்பிடுதல்.
- மாணவர்களின் மொழித்தரத்தை மதிப்பிடுதல்
- கற்பித்தலின் படிநிலைகளைக் கண்டறிதல்.

- கற்பித்தலுக்கான ஒழுங்கமைக்கப்பட்ட பாடநெறிகளைக் கொண்டிருத்தல்.
- புதிய கற்பித்தல் உத்திகளைக் கொண்டிருத்தல்.
- வகுப்பறையைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் ஆற்றலைப் பெற்றிருத்தல்.
- கற்பித்தலுக்கான போதிய மூலவளங்களைப் பெறுதல்.
- மாணவர் வரவைப் பேணுதல்
- பெற்றோருடனான தொடர்புகள்.

கற்பித்தலின் தொடக்கநிலையில், வெற்றிகரமாக கற்பித்தலைக் கொண்டு செல்ல இவ்வழிகளிலான முன்னேற்பாடுகள் பெரிதும் உதவும்.

வாழ்புலங்களில் முதன்மைபெற்றுத் திகழவேண்டிய தாய்மொழிக்கல்வி இன்றளவும் உயரிய வளர்ச்சியைப் பெறாதிருப்பதற்கான ஏதுக்கள் பல, கற்பித்தற் சிக்கல்களாக இக் கட்டுரையில் அடையாளம் காணப்பட்டுள்ளன. நிறைவில் தீர்வுக்கான சில வழிமுறைகளும் கூறப்பட்டுள்ளன. குறிப்பாக ஐரோப்பிய, வட அமெரிக்க வாழ்புலங்களைப் பின்னணியாகக் கொண்டே மேற்கூறப்பட்ட விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன. கடந்த பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக வாழ்புலங்களில் தாய்மொழிக்கல்விப் பணியில் ஈடுபட்டுவரும் ஆசிரியர்களின் பட்டறிவினை அடிப்படையாகக் கொண்டே இக் கட்டுரை வரையப்பட்டது.

பொது அமர்வு 3

பொது அமர்வு 3

தமிழ் மின்னகராதி – அமைப்பும் செயல்பாடும்

Dr. ந. தெய்வசுந்தரம்
மேனாள் தமிழ்த்துறைத் தலைவர், சென்னைப் பல்கலைக்கழகம்,
இந்தியா.

இன்றைய கணினி உலகில் பல மொழிகளுக்கு மின்னகராதிகள் உருவாக்கப்பட்டு வெளிவந்துள்ளன. ஒரு மொழி அகராதி, பன்மொழி அகராதி என்று பல வகைப்பட்ட மின்னகராதிகள் பல்வேறு பயன்பாடுகளோடு உருவாக்கப்பட்டுள்ளன.

ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ், கோலின்ஸ், மாக்மில்லன் போன்ற புகழ்பெற்ற வெளியீட்டு நிறுவனங்கள் எல்லாம் தங்களது நூல்வடிவிலான பலவகை அகராதிகளைத் தற்போது மின்னகராதிகளாகவும் தயாரித்து வெளியிட்டுள்ளன. கையடக்க மின்னகராதிகள் மட்டுமல்லாமல், செல்பேசி, மின்புத்தகம் , ஐபேடு போன்ற மின்னணுக்கருவிகளிலும் தரவிறக்கம் செய்து பயன்படுத்தக்கூடியவகையிலும் மின்னகராதிகள் தயாரிக்கப்-படுகின்றன.

தமிழ்மொழிக்கும் இதுபோன்ற ஒரு மின்னகராதி உருவாக்கப்படவேண்டும். தற்போது சில வெளியீட்டு நிறுவனங்கள் தங்களது நூல்வடிவ தமிழ் அகராதிகளை மென்-பொருள் வடிவத்திலும் தயாரித்துள்ளன. செல்பேசியிலும்கூட அவற்றைத் தரவிறக்கம் செய்யும் வசதி அளிக்கப்பட்டுள்ளது. பல வகையில் பயன்படக்கூடிய ஒரு தமிழ் மின்னகராதியில் என்னென்ன அமையவேண்டும் என்பது பற்றிய ஒரு ஆய்வாக இந்த உரை அமைகிறது.

இன்றைய எழுத்துத்தமிழை அடிப்படையாகக்கொண்ட ஒரு தமிழ் அகராதியாக இது அமையும். ஒரு தமிழ்ச்சொல்லைத் தட்டச்சு செய்தவுடன், அதனுடைய

(1) இலக்கண வகைப்பாடு

(2) அதனுடைய பொருள்(கள்)

(3) பயன்படுத்த எடுத்துக்காட்டுகள்

(4) இணைச்சொற்கள்

(5) எதிர்ச்சொற்கள்

(6) அச்சொல்லை அடிப்படையாகக்கொண்ட மரபுத்தொடர்கள்

(7) அவற்றிற்கான பயன்படுத்த எடுத்துக்காட்டுகள் போன்ற பொதுவாக ஒரு அகராதியில் அமையக்கூடிய கூறுகளும் இந்த அகராதியில் அமையும்.

(8) அத்துடன் குறிப்பிட்ட தமிழ்ச்சொல்லுக்கான ஆங்கிலச் சொற்களும் அளிக்கப்படும். தமிழ் - ஆங்கில மொழிபெயர்ப்புக்கு இது பயன்படும்.

(9) குறிப்பிட்ட தமிழ்ச்சொல்லுக்குரிய பேச்சு வடிவத்தையும் பயன்பாட்டாளர் கேட்கமுடியும்.

மேற்குறிப்பிட்ட பயன்பாடுகளோடு, இந்த அகராதியில் பின்கண்ட சிறப்புச் செயல்பாடுகள் இடம் பெறும்.

(10) சொற்பிழை திருத்தி

(11) சந்திப்பிழை திருத்தி

(12) எழுத்துத்தமிழ் - பேச்சுத்தமிழ் மாற்றம்

(13) பேச்சுத்தமிழ் – எழுத்துத்தமிழ் மாற்றம்

(14) சொல்பகுப்பி சொற்பிழை திருத்தியில் வேர்ச்சொல், பெயர்த்தொகை, விகுதி ஏற்ற சொல் ஆகிய அனைத்து நிலைகளிலும் தட்டச்சு செய்யும்போது பிழை ஏற்பட்டிருந்தால், அது திருத்தித் தரப்படும்.

தொகை அல்லது வேர்ச்சொல்லும் விகுதியும் இணைந்த சொல் ஆகியவற்றில் உள்ள அகச்சந்திப் பிழையும் திருத்தித் தரப்படும். சொற்களுக்கு இடையிலான தொடர்ச்சந்திப் பிழைகளும் திருத்தித் தரப்படும். விகுதி ஏற்ற தமிழ்ச்சொல்லை வேர்ச்சொல், விகுதிகள் என்று பகுத்து, அவற்றிற்குரிய இலக்கண வகைப்பாடுகளும் தரப்படும்.

சிங்கப்பூர் போன்ற அயல்நாடுகளில் தற்போது பேச்சுத்தமிழின் பயன்பாடும் முக்கியத்துவமும் உணரப்பட்டுவருகிறது. அங்கு முறைசார் கல்வியில் எழுத்துத்தமிழ் கற்றுக்கொடுக்கப்படுகிறது. கற்றுக்கொண்ட எழுத்துத் தமிழிலிருந்து பேச்சுத்தமிழை மேலும் கற்றுக்கொள்ள உதவும்வகையில் எழுத்துத்தமிழ் – பேச்சுத்தமிழ் மாற்றத்திற்கான ஒரு செயல்பாடு இதில் இடம்பெறும்.

இலை என்ற எழுத்துத்தமிழ்ச்சொல்லை அளித்தால், எலெ என்ற பேச்சுத்தமிழ் வடிவம் கிடைக்கும். அதுபோன்று எலெ என்ற பேச்சுத்தமிழ் வடிவம் அளிக்கப்பட்டால், இலை என்ற எழுத்துத்தமிழ் வடிவம் கிடைக்கும். இங்குப் பேச்சுத்தமிழ் வழக்காக அனைவரும் பயன்படுத்தும் பொதுப் பேச்சுத்தமிழ் இடம்பெறும்.

எழுத்து - பேச்சு மாற்றி (Text to Speech - TTS) ஒன்றும் இடம்பெறும். வேர்ச்சொல்லை உச்சரித்துக் காட்டுவதோடு மட்டுமல்லாமல் விகுதிகள் ஏற்ற சொல்லையும் உச்சரித்துக் காட்டும் வசதி இதில் இடம் பெறும்.

இந்த மின்னகராதி செல்பேசி, மின்னூல், கையடக்க வன்பொருள், ஐபேடு போன்ற பல நிலைகளில் பயன்படும் ஒரு மென்பொருளாக உருவாக்கப்படும்.

தரவுத்தொகுப்பின் வழித்
தேடலை நோக்கிய மொழிக் கல்வி

Dr. எல். இராமமூர்த்தி
இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம் - மைசூர்
இந்தியா.

மொழியின் பயன்பாடும், மொழிசார் விழுமியங்களும் சமூக மாற்றங்களுக்கேற்ப மாறுபடும். மாறிவரும் சமூகத் தேவைகளுக்கு ஈடுகொடுக்கும் வகையில் மொழியும் தகவமைக்கப்பட வேண்டும். தொழில் நுட்ப வளர்ச்சியால்ஏற்படும்சமூக மாற்றம், மொழியில், மொழிப் பயன்பாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தும். புதிய எழுது பொருட்களும், புதிய எழுத்து ஊடகங்களும், தமிழ்மொழி எழுத்தில் ஏற்படுத்திய மாற்றங்களை அறிவோம். மரபுசார் விழுமியங்களைக் கொண்ட சமூகம், தொழிற்புரட்சி காலத்தைக் கடந்து இன்றைய தகவல் தொழில்நுட்பப் புரட்சி காலத்திற்கு வந்துள்ளது.

தகவல் தொழில் நுட்பப் புரட்சிக்கு அடிப்படையாக அமைவது கணினித் தொழில் நுட்பமாகும். கணினி ஒரு தொழில் நுட்பமாகவும், ஒரு ஊடகமாகவும், மொழிசார் பயன்பாட்டில் பல மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. கணினியின் செயல்பாடுகள் பெரும்பாலும் ஆங்கிலம் போன்ற மொழிகளை மையமிட்டு அமைக்கப்பட்டுள்ளன. பன்மொழி வழக்குச் சூழல் உள்ள நாடுகளிலும், ஆங்கில அறிவு குறைந்த சமூகங்களிலும், கணினி மிகப்பெரிய சமூகப் பாகுபாட்டை ஏற்படுத்தியுள்ளன. இத்தகைய பாகுபாட்டை நீக்க, எல்லா மொழிகளிலும் மொழித் தொழில் நுட்பம் வளர வேண்டும். தகவல் தொழில் நுட்பப் புரட்சியில் தகவல்களைத் தரவாகப் பயன்படுத்தும் செயல் பெருகியுள்ளது. இத்தகவல்களைப் பெறுவதற்கும், தகவல்கள் மீது வினைபுரிவதற்கும் மொழி ஒரு தடையாக அமையக்கூடாது. எனவே, தகவல் தொழிற்நுட்பத்திற்கேற்ப மொழித் தொழில் நுட்பத்தை உருவாக்குவது இன்றைய காலத்தின் கட்டாயத் தேவையாகும்.

மொழித் தொழில் நுட்பம் என்பதைக் கணினிக்கான மொழியமைப்பைக் கட்டமைப்பதும், கணினி வழியான இயற்கை மொழி ஆய்வும் இணைந்த ஒன்று எனலாம். எனவே, மொழித் தொழில் நுட்பத்திற்கு அடிப்படையாக அமைவது மொழி அமைப்பாகும். ஒரு மொழியின் அமைப்பை விளக்குவது இலக்கணம். மொழியின் மரபு சார்ந்த இலக்கணங்கள், உற்று நோக்கி உணர்ந்தவற்றை வெளிப்படுத்துவதாக உள்ளன. ஒரு சில மொழிகளில் இலக்கணங்கள் செய்யுள் வடிவில் அமைந்த இலக்கியத்தரவுகளின் அடிப்படையில் எழுதப்பட்டிருக்கின்றன. மொழியியல் வளர்ச்சியால், தரவுகள் சேகரிக்கப்பட்டு மொழியியல் கோட்பாடுகளின் அடிப்படையில் புத்திலக்கணங்கள் எழுதப்பட்டன. இவை பேச்சு மொழி, எழுத்து

மொழி என்ற இரண்டையும் விளக்கினாலும், மொழியின் அமைப்பு முழுவதையும் விளக்கியுள்ளாதா? என்பது ஐயத்திற்குரியது. மனிதக் கருத்துப்பரிமாற்றத்திற்கு இத்தகைய புத்திலக்கணங்கள் உதவலாம். ஆனால், இயற்கை மொழியைப் புரிந்து கொள்ளச் செய்ய கணினிக்கு இத்தகைய புத்திலக்கணங்கள் போதுமானதாக இல்லை.

கணனிக்கான இலக்கணம் என்பது மொழிக் கூறுகளின் பண்புகளை விளக்கி, மொழிக் கூறுகளின் வருகை முறை, வருகை எண்ணின் அடிப்படையில் விளக்குவதாக அமையும். மொழிக் கூறுகளின் எல்லா வித வருகை முறையைக் குறிப்பிட்ட அளவுள்ள தரவுகளால் விளக்க முடியாது. இதற்கு மொழிப் பயன்பாட்டின் எல்லா வித அமைப்புக்களைக் கொண்ட பெருந்தரவுகள் தேவைப்படுகின்றன. அதேபோல, மொழித் தொழில் நுட்பக் கருவிகளான பிழைதிருத்தி, உருபனியல் ஆய்வி போன்றன மொழி அமைப்பின் வழி அமைக்கப்பட்டாலும், அவற்றின் செயல்திறனைக் சோதனை செய்வதற்கும் பெருந்தரவு தேவையாகிறது.

தகவல் தொழில் நுட்பப் புரட்சி காலகட்டத்தில் கற்றல் கற்பித்தல் செயல்பாடுகளிலும் பெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. கணினி வழிக் கற்றல், குறுவட்டுகள், இணையதளங்கள் போன்ற கற்றலுக்கான தளத்தை விரிவுபடுத்தியுள்ளன. கற்றல் சூழல் வகுப்பறையைத் தாண்டி வளர்ந்துள்ளது. ஆசிரியரை மையமிட்ட கல்வி என்பது இன்றைய தொழில் நுட்ப வளர்ச்சியில் மாணவர்மையமிட்ட கல்வியாக வளர்ந்துள்ளது. தரமான கல்விக்கு ஆசிரியர்களும், கணினியும் துணைபுரிவர்களாக மாறியுள்ளனர்.

தேடல் என்பது இன்றைய கல்வியின் ஆதாரமாக உள்ளது. எந்த ஒன்றைப் பற்றிய தகவல்களும் கணினி வழியாகத் தேடிப்பெற முடியும். மாணவர்களுக்கான பாடங்கள், மின்புத்தகங்கள், மின்நூலகங்கள், மின்னிதழ்கள், கட்டுரைகள் மற்றும் செய்திகள் ஆகியவற்றில் வேண்டிய தகவல்களை பெற முடியும். தகவல்கள் மொழியில் இருந்தாலும் அவை கருத்தையே முன்னிறுத்தி நிற்கின்றன. மொழிக் கல்விக்கான அடிப்படை மொழியின் வடிவத் தகவல்கள், மொழிக் கூறுகள் பற்றிய தகவல்களாகும். கணினி வழித் தேடிக் கிடைக்கும் கருத்துத் தகவல்கள் பிற ஆய்விற்கு தரவுகளாக அமைகின்றன. ஆனால், மொழிக் கல்வியில் கணினிவழி கிடைக்கும் மொழி வடிவமே தரவாக இருக்கிறது. இத்தரவுகள்மீது உரிய மதிப்புக்கூட்டல் செய்து, வேண்டிய தகவல்களைப் பெற முடியும். இத்தகைய தரவுபற்றி இனி விரிவாகக் காணலாம்.

மொழியைப் பிரதிநிதித்துவப்படுத்துகிற மொழிப்பயன்பாட்டின் எல்லாவித வெளிப்பாடுகளின் தொகுப்பே தரவுத்தொகுப்பு எனலாம். ஒவ்வொரு படைப்பாளியும் தனது கருத்துக்களுக்கும், கற்பனைகளுக்கும் மொழிவடிவம் கொடுக்கிறான். ஒரே கருத்தைப் பலர் வெளிப்படுத்தும் பொழுது, அந்த வெளிப்பாடுகள் அவரவரின் மொழி

ஆளுமையைப் பொறுத்து மாறுபட்டு அமையும். இந்த வேறுபாடுகள் சொல்தேர்விலும், சொற்சேர்க்கையிலும், வாக்கிய அமைப்பிலும் இருக்கும். இவ்வெளிப்பாடுகள் அனைத்தும் மொழியின் வரம்புக்குள்தான் இருக்கும். இத்தகைய வெளிப்பாடுகள், கணினிவழி உள்ளீடுசெய்யப்பட்டு, மின்தரவாக மாற்றப்படும். இவ்வாறு அமையும் மின்தரவுகளின் தொகுப்பே தரவுத்தொகுப்பாகக் கருதப்படுகிறது.

தரவுத்தொகுப்பு, மொழியைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகக் கொண்டால், அது கால, இட, சூழல் வேறுபாடுகளுடன் அமையவேண்டும். ஒரு குறிப்பிட்ட துறையில் உள்ள மொழிவெளிப்பாடுகளை மட்டும் கொண்ட தரவைச் சமச்சீர் தரவு எனக் கூற இயலாது. அத்தரவு அந்தத்துறைச் சொற்களையும் வாக்கிய அமைப்பையும் முன்னிறுத்தியிருக்கும். இத்தரவு அம்மொழியைப் பிரதிநிதித்துவப் படுத்துவதாகக் கொள்ளமுடியாது. தரவுத்தொகுப்பு என்பது ஒரு மொழிச் சமூகத்தினரின் மொழி அமைப்பு பற்றிய ஆழ்மன வெளிப்பாடுகளின் தொகுப்பாக அமையவேண்டும். மொழிப்பயன்பாட்டின் அனைத்துப் பரிமாணங்களையும் கொண்டதாக இருக்கவேண்டும்.

இத்தரவுத் தொகுப்புக்கள் குறிப்பிட்ட பயன்பாடு சார்ந்தும் தொகுக்கப்படலாம். பொதுவாகத் தரவுத் தொகுப்புக்களைப் பின்வரும் வகைகளில் பாகுபாடு செய்யலாம்.

1. எழுத்துத் தரவுத்தொகுப்பு
2. பேச்சுத் தரவுத்தொகுப்பு
3. சைகைமொழித் தரவுத்தொகுப்பு
4. வரலாற்று ஆவணங்கள் தரவுத்தொகுப்பு
5. இணைத் தரவுத்தொகுப்பு

எழுத்துத் தரவுத்தொகுப்பு என்பது எழுத்துவழி வெளியிடப்பட்ட புத்தகங்கள், நாளிதழ்கள், வார இதழ்கள் மற்றும் இணைய வெளியீடுகள் சேர்ந்த தொகுப்பாகும். அதேபோல இணை தரவுகள் என்பது ஒரே கருத்துப் பலமொழிகளில் வெளியிடப்பட்டிருந்தால், அதன் தொகுப்பு இணைத் தரவுகள் தொகுப்பாகும். இவ்விரண்டு தரவுத் தொகுப்புகளும் எந்திர மொழிபெயர்ப்பிற்கு பயன்படுவன.

பேச்சுத் தரவும், பிற தரவுகளைப் போல குறிப்பிட்ட பயன்பாட்டின் அடிப்படையில், தொகுக்கும்முறை வேறுபடும். பொதுவாக இப்பேச்சுத்தரவுகள், மனிதப் பேச்சைக் கணினி உணர்ந்து பதில்கள்தரும் பேச்சுணரி அமைப்பை உருவாக்குவதற்குப் பயன்படுத்தப்படும். அதேபோல பனுவலைப் பேச்சாக மாற்றுவதற்கும், பேச்சைப்

பனுவலாக மாற்றுவதற்குமான அமைப்பை உருவாக்குவதற்கும் இத்தரவுகள் பயன்படும்.

எழுத்துக்களின் பல்வேறு வடிவ வேறுபாடுகளைக் கொண்ட கையெழுத்துப் பிரதிகளும், வரலாற்று ஆவணங்களான கல்வெட்டு, செப்பேடு, ஓலைச்சுவடி போன்றவற்றின் தொகுப்பே வரலாற்று ஆவணத் தரவுத்தொகுப்பு. இத்தரவுகள் எழுத்துணரியை உருவாக்கப் பயன்படும். அதேபோல சைகை மொழித்தரவுத் தொகுப்பு, சைகை மொழிக்கான இலக்கணம் எழுதுவதற்கும், மாற்றுத் திறனாளிகளின் கல்விக்காகவும் பயன்படுத்தப்படலாம்.

கணினிவழியாகச் சேமிக்கப்பட்ட பனுவல்களின் தொகுப்பு மட்டுமே தரவுத்தொகுப்பாக ஆகாது. இவ்வாறு உள்ளீடு செய்யப்பட்ட பனுவல்களிலிருந்து தேவையான தகவல்களைப் பெறுவதற்குச் சில நெறிமுறைகள் தேவையாகின்றன. இந்நெறிமுறைகள் இரண்டு நிலைகளில் மேற்கொள்ளப்படுகின்றன. அவற்றைத்

1. தொகுப்பு நெறிமுறைகள்
2. சீரமைப்பு நெறிமுறைகள்

எனப் பிரிக்கலாம்.

ஒரு பனுவலை மின்தரவாக மாற்றும்பொழுது, இரண்டு விதமான குறிப்புக்கள் தரவுத்தகவலில் இடம்பெற வேண்டும். குறிப்பிட்ட பனுவல் எங்கேயிருந்து எடுக்கப்பட்டது, அதன் ஆசிரியர், வெளியீடு, ஆண்டு, பதிப்பகம் போன்ற தரவு பற்றிய குறிப்புக்களும், அப்பனுவலை உள்ளீடு செய்தவர், மெய்ப்புத்திருத்தியவர், பனுவல் கணினியில் அமையும் இடம், வடிவம் போன்ற குறிப்புகளும் இடம்பெற வேண்டும். இத்தகைய குறிப்புக்கள், தகவல்களைக் குறிப்பிட்ட பயன்பாட்டிற்குத் தேடுவதற்கு வாய்ப்பாக அமையும்.

தரவுத் தொகுப்பு பல்வேறுபட்ட பனுவல்களிலிருந்து பல்வேறுபட்ட படைப்பாளர்களால் எழுதப்பட்ட பனுவல்களின் தொகுப்பு. எனவே, இத்தகைய தொகுப்பில் ஒரு சீர்மையைக் காண்பது அரிது.

ஒவ்வொருவரும் ஒவ்வொருவகையான நடையைப் பின்பற்றலாம். தனிப்பட்ட சொற்களின் பயன்பாடு வாக்கிய அமைப்பு போன்றன அப்படைப்பாளியின் தனிமொழி ஆளுமையைக் காட்டும். அதே வேலையில் அப்பனுவலில் எழுதும்முறை, ஒற்றுப் பிழைகள், அச்சுப் பிழைகள் தோன்றுவதற்கு வாய்ப்புகள் உள்ளன. எனவே, தரவுத் தொகுதியைச் சீரமைப்பது என்பது மிக முக்கியமான பணியாகும். தரவுத் தொகுதியில் உள்ள சிறிய எழுத்துப் பிழை கூட கணினி எந்திர மொழிபெயர்ப்புக்குப்

பெரும் தடையை ஏற்படுத்தும். இத்தகு சீரமைப்பைப்பனுவலுக்கு நேர்மையான சீரமைப்பு, அடையாளப்படுத்தலுக்கான சீரமைப்பு என இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

உள்ளீடு செய்யப்பட்ட பனுவலைச் சீரமைக்கும் பொழுது, பனுவலில் எவ்வாறு உள்ளதோ அவ்வாறே சீரமைப்பது பனுவலுக்கு நேர்மையான சீரமைப்பு ஆகும். ஒரு படைப்பாளனின் எழுதும் முறை, எழுத்துத் தேர்வு போன்றவற்றை அறிந்து கொள்ள இத்தகைய சீரமைப்பு உதவும்.

தரவுத்தொகுப்பு உருவாக்குவதற்கான முக்கிய நோக்கமே அதிலிருந்து தகவல்களைப் பெறுவதுதான். கணினியில் உள்ளீடு செய்யப்பட்டு சீரமைக்கப்பட்ட தரவுகளில் இருந்து சொற்களையும், வாக்கிய அமைப்புக்களையும் பிரித்தெடுத்து ஆய்வு செய்யலாம். ஆனால் குறிப்பிட்ட சொல் எத்தகைய சொல் வகையைச் சேர்ந்தது, குறிப்பிட்ட வாக்கியம் எந்தத் தொடர்களால் ஆனது போன்ற தகவல்களைப் பெற, தரவுத்தொகுப்பை அடையாளப்படுத்த வேண்டும். இதை மதிப்புக்கூட்டல்எனலாம்.

இந்த மதிப்புக்கூட்டல் என்பது தரவின் மீது மனித இடையீட்டால் செய்யப்படுகின்ற மொழிக் கூறுகளைப் பற்றிய அடையாளப்படுத்துதல் ஆகும். இத்தகைய அடையாளப்படுத்தல் பல்வேறு நிலைகளில் நடைபெறலாம். எடுத்துக்காட்டாக உருபன் அடையாளப்படுத்தல், சொல் வகை அடையாளப்படுத்தல், தொடர்களை அடையாளப்படுத்தல், பொருண்மை அடையாளப்படுத்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். மனித முயற்சியால், தொகுக்கப்பட்ட எல்லா தரவுகளையும், அடையாளப்படுத்துதல் இயலாத செயல். எனவே, இதையும் கணினி வழியாகத் தானியங்கி அடையப்படுத்தல்பொறி உருவாக்கப்பட்டு, பெரும் தரவுகளை அடையாளப்படுத்தலாம். இத்தகைய அடையாளப்படுத்தலே, எந்திர மொழிபெயர்ப்-பிற்கும், குறிப்பிட்ட தகவல்களை வேறு பயன்பாட்டிற்குத் தேடுவதற்கும் பயனுள்ளதாக இருக்கும்.

முன்னர் குறிப்பிட்டது போல, தரவுத்தொகுப்பு ஒரு பன்முக வெளிப்பாடாக இருக்கும்பொழுது அதில் சீர்மையைக் காண்பது அரிது. சொற்களை எழுதும் முறையில் விடப்படும் இடைவெளி அடையாளப்படுத்துதலில் மிகப் பெரிய சிக்கல்களை உருவாக்கும். எடுத்துக்காட்டாக துணை வினைகள், கூட்டு வினைகள், சொல்லுருபு போன்றவற்றை எழுதும் முறையில் ஒருமித்த நடையமைப்பு இல்லை. எனவே, பனுவலில் படைப்பாளி எவ்வாறு எழுதியிருந்தாலும் அதைப் பயன்பாட்டிற்காக, குறிப்பாக அடையாளப்படுத்தலுக்காகச் சீரமைப்பு செய்ய வேண்டும். இதை அடையாளப்படுத்துதலுக்கான சீரமைப்பு எனலாம். சொற்கள்,

தொடர்களை இடைவெளி விட்டும், சேர்த்தும், படைப்பாளின் நடை பிழைக்களைத் திருத்தியும் தரவு சீரமைக்கப்படுவது மிக முக்கியமான செயலாகும்.

தரவுத்தொகுப்பில் மதிப்புக்கூட்டல் என்பது பயன்பாடு நோக்கிய செயல்படாகும். சொல்வகை அடையாளப்படுத்தலில் சொல்வகைக்கு எத்தனை அடையாளங்கள் கொடுப்பது என்றும், எடுத்துக் கொண்ட நோக்கத்தின் அடிப்படையில் மாறுபடும். மரபிலக்கணங்கள் சொல் வகையைப் பெயர், வினை, இடை, உரி எனப் பாகுபடுத்தின. இந்தப் பாகுபாடு கணினிப் பயன்பாட்டில் போதுமானதாக இல்லை.

கணினிப் பயன்பாட்டிற்கு மொழிக்கூறுகளை அடையாளப்படுத்துபவர்களிடையே, அடையாளங்கள் பற்றியும், அடையாளங்களின் எண்ணிக்கை பற்றியும், ஒருமித்த நிலை இல்லை. அடையாளங்கள் பல்வகையில் குறிக்கப்படுதலும், முக்கிய அடையாளங்களைத் தேர்வு செய்வதிலும் வேறுபாடுகள் உள்ளன. எனவே, தரவுகள் எல்லாம் தொகுப்பதற்கு ஒருங்குறி (Unicode) ஏற்படுத்தியது போல, அடையாளங்களைத் தரப்படுத்தி இந்திய தர அடையாளம் என்ற தரப்படுத்தும் பணி, மிக அவசியமானதாகிறது.

அடையாளப்படுத்தப்பட்ட தரவுத் தொகுப்பும், தரவுத்தொகுப்பில் இருந்து தேடுவதற்கான மொழித்தொழில்நுட்பக்கருவிகளும் உள்ளடக்கிய தரவுத்தொகுப்பே, பிறபயன்பாட்டிற்கு உதவும் தரவுத் தொகுப்பாகும்.

இவ்வாறு அமைக்கப்பட்டத் தொகுப்பின் பண்புகளாகப் பின் வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. அனைத்து மொழி வெளிப்பாடுகளின் மாதிரி
2. மொழியின் வளமைத்தொகுப்பு: மூலவளம்
3. துறைவழக்குகளின் தொகுப்பு
4. மொழி அமைப்பில் உயர்நிலை ஆணையம்
5. மொழிப்பயன்பாட்டின் உறுதிப்பாடு நம்பகத்தன்மைக் காட்டும் அமைப்பு
6. மொழிப்பயன்பாட்டின் காலப்பெட்டகம்

தரவுத் தொகுப்பின் ஒவ்வொரு நிலையிலும் மனித இடையீட்டுடன் கணினி வழி சேகரிப்பும், அடையாளப்படுத்தமும், இதை மொழிப்பயன்பாட்டைக் காட்டக்கூடிய நம்பகத்தன்மை வாய்ந்த ஆணையமாகக் கருத இடமளிக்கிறது. மொழிபற்றிய ஆழ்மன வெளிப்பாடுகளை உறுதிசெய்து கொள்ள இத்தரவுத் தொகுப்புகள் பெரிதும் துணை செய்யும்.

தரவுத் தொகுப்பை மொழி ஆய்விற்கும் கற்றல் – கற்பித்தலுக்கும் பயன்படுத்தும் போக்கு மேலை நாடுகளில் பரவலாகக் காணப்படுகிறது. இந்திய மொழிகளில் தரவுத் தொகுப்புத் திட்டம் 1990களில் தொடங்கப்பட்டு சுமார் 30 லட்சம் சொற்களைக் கொண்ட தரவுத்தொகுப்பு அட்டவணை மொழிகளுக்கு உருவாக்கப்பட்டது. அடையாளப்படுத்தப்பட்ட தரமான தரவுத்தொகுப்புத்திட்டம் தற்போது இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனத்தில் நடைபெற்று வருகிறது.

தரவுத்தொகுப்பில் இருந்து பெறப்படும் மொழிசார் தகவல்களின் வலிமையே அதனுடைய புள்ளியல் தன்மையும், மொழியாய்வின் காரண காரிய விளக்கமும்தான் என்று மெக்னேரி(2001) குறிப்பிடுவார். அத்தோடு ஏராளமான மக்களின் மொழிசார் ஆழ்மன வெளிப்பாடாகவும் தரவுத்தொகுப்பு அமைவதால், அது உண்மையான மொழிப்பயன்பாட்டை விளக்குவதாக இருக்கும் என்றும் குறிப்படுவார்.

கற்றல் சூழலில், ஒரு மொழக்கூறு பற்றி நாம் கொடுக்கும் எடுத்துக்காட்டுக்கள் பெரும்பாலும் இட்டுக்கட்டியதாக இருக்கும் எனக் கூறி, பள்ளியில் அயல் மொழிச் சூழலில் கற்கும் ஆங்கிலம், நிஜவாழ்கையில் தாய்மொழியாளருடன் பேசுவதற்கு ஏற்ற திறனை வளர்க்கவில்லை என்று மிட் (1996) குறிப்பிடுவார். ஆனால், தரவுத்தொகுப்பு வழி கற்பித்தலில் உண்மையான பயன்பாட்டு மொழியைக் கற்பிக்க முடியும் என்பது தரவுத்தொகுப்புவழி கற்றலின் சிறப்புக் கூறாகும்.

மொழி கற்றலையும் தரவுத் தொகுப்பையும் இணைத்து லீச் (1997) என்பவர் கற்றல் சூழலில் மூன்று விதமான போக்குகளைக் குறிப்பிடுவார். அவற்றை

1. தரவுத்தொகுப்பின் நேரடிப் பயன்பாடு
2. தரவுத்தொகுப்பின் மறைமுகப் பயன்பாடு
3. மொழிகற்றல்சார் தரவுத்தொகுப்பு

எனப் பிரிப்பார்.

தரவுத்தொகுப்பின் நேரடிப்பயன்பாடு என்பது தரவுத்தொகுப்பையே ஒரு பாடமாகக் கற்பதாகும். தரவுத்தொகுப்பைப் பற்றிய கல்வி, தரவுத்தொகுப்பை எவ்வாறு பயன்படுத்துவது, எவ்வாறு உருவாக்குவது என்பதானதாக அமையும். ஆனால் இத்தகைய கல்வி, கணினி வசதி, தரவுத்தொகுப்பு கிடைக்கும் நிலை, நேரக் கட்டுப்பாடு, பாடத்திட்டத் தேவை போன்ற காரணங்களால் முன்னிறுத்தப்-படுவதில்லை. (லீச், 1997)

தரவுத்தொகுப்புக்கள் மிக முக்கியமாக அகராதிகள் உருவாக்குவதற்கும், நோக்கீட்டு இலக்கணங்கள் எழுதுவதற்கும் பயனுள்ளதாக அமையும். தரவுகள் எல்லாம்

கணினிபடிப்பதற்கு ஏற்ற நிலையில் அடையாளப்படுத்தப்பட்டிருக்கும் சூழலில், அகராதியியலாளருக்கு ஒரு சொல்லைத் தேடுவதற்கும், அச்சொல் எந்த மொழிச் சூழலில் எத்தகைய பொருளைக் கொடுக்கிறது என்பதை அறிவதற்கும், அதற்கான எடுத்துக்காட்டுக்கள் தருவதற்கும் ஏற்றதாக அமைகிறது. தரவுத்தொகுப்பைப் பற்றிய சிந்தனையே இல்லாதவர்கள் கூட இன்றைய காலகட்டத்தில்,தரவுத்தொகுப்பு வழியாக உருவாக்கப்பட்ட அகராதிகளைப் பயன்படுத்துவதைப் பொதுவாகக் காணலாம். மேலைநாடுகளில் வெளியிடப்பட்டிருக்கும் பல அகராதிகள், தமிழில் வெளிவந்த கிரியாவின் தற்கால அகராதி போன்றன தரவுத் தொகுப்பின் அடிப்படையில் வெளியிடப்பட்டவை.

தரவுத் தொகுப்பின் வழியாகப் பெறப்படும் தகவலின் அடிப்படையில் மொழிக்கல்வியில் மொழிப்பற்றிய ஏராளமான புதிய தகவல்களை கண்டறிய முடியும். இத்தகவல்கள் மொழிப் பாடங்கள் தயாரிப்பதற்கும், பாடத்திட்டம் உருவாக்குவதற்கும், மதிப்பீடு செய்வதற்கும் பயன்படுத்த முடியும். மொழிக் கல்வியில் பொதுவாகப் படிநிலைப்பாடத்திட்டம் மரபுநிலையிலும், ஊகத்தின் அடிப்படையிலுமே உருவாக்கப்படுகிறது. ஒரு மொழியின் அடிப்படை சொற்கள் எவை என்பனவும், அவை பாடத்தில் எந்த நிலையில் அறிமுகம் செய்ய வேண்டும் என்பதும், இலக்கணக் கூறுகளின் அறிமுக வரிசையும் ஒரு ஊகத்தின் அடிப்படையிலேயே அமைகின்றன. ஆனால், தரவுத்தொகுப்பின் வழி கிடைக்கும் வருகையெண் பற்றிய தகவல்கள் அடிப்படையில் அமையும் பாடத்திட்டம் ஆதார பூர்வமாக அமையும். தரவுத் தொகுப்பின் வழியாக

1. ஒரு மொழிக்கூறு எத்தனை முறை மொழியில் பயன்படுத்தப்படுகிறது? இம்மொழிக்கூறு எழுத்து, சொல், அடை என எந்த நிலையிலும் இருக்கலாம்.
2. அடையாளப்படுத்தப்பட்ட தரவுத்தொகுப்பிலிருந்து இலக்கணக் கூறுகளின் வருகை முறையையும், வருகையெண்ணையும் அறிந்து கொள்ள முடியும்.
3. ஒரு படைப்பாளி மொழியைக் கையாண்ட விதம் எவ்வாறு அமைந்துள்ளது என்பதையும், அவரின் நடையையும் கண்டறிய முடியும்.
4. தரவுத்தொகுப்புப் பல்வேறு துறையைச் சார்ந்த பனுவல்களின் தொகுப்பாக அமைவதால் ஒரு குறிப்பிட்ட சொல், ஒவ்வொரு துறையிலும் எத்தனை முறை பயன்படுத்தப்பட்டுள்ளது, அத்துறைகளில் அதன் பொருள் என்ன என்பதைக் கண்டறியலாம்.
5. சொற்களும், இலக்கணக் கூறுகளும் வரும் மொழிச் சூழல், தரவுத்தொகுப்பின் வழி எளிதில் கண்டறிய முடியும்.
6. ஒத்த பொருளுடைய சொற்கள், மொழிச் சூழலில் பயன்படுத்தப்படும் பொழுது தோன்றும் வேறுபாடுகளை எடுத்துக்காட்டுகளுடன் விளக்கலாம்.

இந்திய மொழிகளின் மொழியியல் தரவுக்குழுமத்திட்டத்தில் தொகுத்து அடையாளப்படுத்தப்பட்ட ஒரு லட்சம் சொற்களைக் கொண்ட தமிழ் தரவுத்தொகுப்பில் இருந்து கண்டறியப்பட்ட தகவல்கள் பின்னிணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன. தமிழ்த் தரவிலிருந்து பின்வரும் தகவல் பெறப்பட்டன.

1. தமிழ் எழுத்துக்களில் உயிர் எழுத்துக்கள் அ,இ,எ,ஒ என்ற இறங்கு நிலையில் அதிகம் பயன்படுத்தப்படுகின்றன. நெடில் உயிர்களில் "ஆ"வைத்தவிரப் பிற நெடில்களின் பயன்பாடு குறைவாக உள்ளது.
2. ஒரு லட்சம் சொற்கள் கொண்ட தரவில் "ஔ" ஒருமுறைகூட பயன்படுத்தப்படவில்லை.
3. மெய்யெழுத்தின் பயன்பாட்டு நிலை ம், ன், க், ல், த் என்ற வரிசையில் உள்ளன. மொழிக்கு இறுதியில் க்,த் வராத சூழலில், இதைச் சந்தித் தகவல்களாகக் கொள்ளலாம்.
4. பிரதிப் பெயர்களும், செயல்பாட்டுச் சொற்களும் அதிகம் வந்துள்ளன.
5. சொல் நிலையில் பெயர்ச்சொற்களில் குறிப்பாகவே பொதுப்பெயர் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.
6. வினைச்சொற்களில் எச்ச வினையின் பயன்பாடு, முற்றுவினையைவிட அதிகமாக உள்ளது.

தரவுத்தொகுப்பு மொழியின் ஒரு ஆதாரவளமாக இருப்பதால், எந்த ஒரு தகவலையும் தேடிக் கண்டறியமுடியும். மொழிபற்றிய புதிய உண்மைகளைத் தேடி உணர்வது ஒரு புதிய அனுபவமாக அமையும். இத்தகைய சூழலில் மாணவன் ஒரு ஆய்வாளனாகவும், ஒரு புதிய அனுபவத்தைத் தேடிச் செல்லும் பயணியைப் போலவும் இத்தரவுத்தொகுப்பு உணரச்செய்யும்.

அதே நேரத்தில் தரவுத்தொகுப்பு வழி கற்றலில் உள்ள சில விமர்சனங்களையும் கருத்தில் கொள்ள வேண்டும். வருகையெண்ணின் அடிப்படையில் அமையும் மொழிக்கூறுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் பொழுது அரிதாக, சிறப்பாக வரும் மொழிக்கூறு தவிர்க்கப்படும் வாய்ப்புகள் இருக்கின்றன என்பதும் (கூக், 1998) அதிகமான எண்ணிக்கையில் பயன்படுத்தப்படும் மொழிக்கூறு எண்பதைவிட ஆற்றல் வாய்ந்த, பண்பாடு சார்ந்த மொழிக்கூறுகள்தான் கற்றலில் முன்னிறுத்தப்படவேண்டும் என்பதும் (ஹன்ஸ்டன் 2002), மொழிக்கல்வியில் குறிப்பிடத்தக்கன. அதேபோல மொழிச்சூழலில் மொழிக்கூறின் வருகையெண்ணும் பொருளும் நம்பகத்தன்மையானது என்றாலும், பேச்சுச் சூழலில் அக்கூற்றின் பொருண்மை சரியாக அமையாது என்று விடோசன் (2000) குறிப்பிடுவார்.

தரவுத்தொகுப்பைப் மொழிக்கல்விக்கு பயன்படுத்தும்பொழுது சில சிக்கல்கள் இருந்தாலும், அதன் பயன்பாடு மொழிக்கல்வியைப் புதிய தளத்திற்குகொண்டு செல்லும் என்பதில் ஐயமில்லை.

பார்வை நூல்கள் :

- Cook, G. (1990). 'The use of Reality: A reply to RomoldCaker'. ETL0Journal 52/1:57-64
- Hunston. S, (2002) Corpora in Applied Linguistics Cambridge: CUP
- Leech, G. (1997) 'Teaching and Language Corpora: A convergence: In a witchmannet all (eds.) Teaching and Language Corpora, Longman: London.
- McEnery, T. & Wilson, A. (2001) Corpus Linguistics. Edinburgh: EUP
- Mindt, D (1996) 'English Corpus Linguistics and foreign Language Teaching Syllabus' In J. Thomas (ed.) Using Corpora for language Research. Harlow: Longman
- Widdowson, H. (2000) "The limitations of linguistics Applied". Applied Linguistics 21/1:3-25

பின்னிணைப்பு-1

Character	Frequency
அ	8184
ஆ	2935
இ	7131
ஈ	140
உ	2993
ஊ	281
எ	5922
ஏ	965
ஐ	239
ஒ	2014
ஓ	381
ஔ	0
க்	14409
ங்	4556
ச்	2987
ஞ்	474
ட்	6867
ண்	5169
த்	11806
ந்	7086
ப்	9811
ம்	16983
ய்	2012
ர்	10712
ல்	12089
வ்	553
ழ்	1335
ள்	6813
ற்	5095
ன்	14872

பின்னிணைப்பு-2

MOST FREQUENTLY OCCURRING 50 WORDS

Words	Frequency	Percentage
ஒரு	821	0.8194267
என்று	691	0.68967582
என்ற	424	0.42318748
வேண்டும்	388	0.38725647
இந்த	252	0.25151709
ஆனால்	227	0.226565
பல	223	0.22257266
கொண்டு	220	0.21957841
அவர்	211	0.21059566
நான்	200	0.19961674
அது	195	0.19462632
சில	195	0.19462632
தமிழ்	189	0.18863782
அந்த	184	0.1836474
தன்	183	0.18264931
என்பது	180	0.17965506
இது	171	0.17067231
போன்ற	167	0.16667997
எம்	163	0.16268764
என்னும்	161	0.16069147
மற்றும்	160	0.15969339
முதல்	157	0.15669914
என்றும்	154	0.15370489
அவன்	148	0.14771638
அவர்கள்	145	0.14472213

Words	Frequency	Percentage
உள்ள	141	0.1407298
என்	139	0.13873363
இல்லை	137	0.13673746
படம்	128	0.12775471
எஸ்	127	0.12675663
செய்து	125	0.12476046
ஆம்	123	0.12276429
அல்லது	122	0.12176621
ஆண்டு	120	0.11977004
என	118	0.11777387
என்ன	117	0.11677579
மக்கள்	116	0.11577771
ஒன்று	114	0.11378154
ஆங்கில	113	0.11278346
வந்து	111	0.11078729
இரண்டு	110	0.1097892
தான்	108	0.10779304
பி	107	0.10679495
கே	104	0.1038007
இல்	100	0.09980837
டி	98	0.0978122
கதை	94	0.09381987
இருக்கும்	92	0.0918237
தனது	92	0.0918237
மாதம்	91	0.09082561

பின்னிணைப்பு-3

Frequency of POS Categories and their attributes based on Hierarchical Tagset from the corpus

Total Tokens: 28733

SNo	POS Tag	Frequency	Percentage
1	PU	4801	16.70901055
2	NC.0.0.0.0.0.0.0.0.0.0.0.0	3854	13.41314864
3	LV.pst.0	1159	4.033689486
4	LRL.pst.0.0	559	1.945498208
5	NP.0.0.0.0.0.0.0.0.0.0.0.0	489	1.701875892
6	PP.0.0.0	488	1.698395573
7	CSB	455	1.583545053
8	NC.0.0.0.0.0.loc.0.0.0.0.0	450	1.566143459
9	LNF	446	1.552222184
10	NC.0.0.pl.0.0.0.0.0.0.0.0	435	1.513938677
11	JJ	411	1.430411026
12	NC.0.0.0.0.0.acc.0.0.0.0.0	392	1.364284969
13	V.0.0.0.0.0.n	387	1.346883375
14	NC.0.0.0.0.0.0.0.adv.0.0.0	373	1.298158911
15	JQ.0.ord.0.0.0.0.0.0	328	1.141544565
16	LRL.fut.0.0	301	1.047575958
17	V.0.0.0.0.y.n	273	0.950127032
18	AMN.0.0.0	268	0.932725438
19	NC.0.0.0.0.0.0.0.0.0.0.0.0.incl	263	0.915323844
20	JQ.0.nnm.0.0.0.0.0.0	260	0.904882887
21	V.neu.sg.3.pst.0.n	256	0.890961612
22	NC.0.0.pl.0.0.acc.0.0.0.0.0	246	0.856158424
23	NP.0.mas.sg.0.0.0.0.0.0.0.0	222	0.772630773
24	NC.0.0.0.y.0.loc.0.0.0.0.0	221	0.769150454
25	NC.0.hum.pl.0.0.0.0.0.0.0.0	218	0.758709498
26	ALC.0.0	216	0.75174886
27	V.neu.sg.3.prs.0.n	209	0.727386629
28	NV.fut.0.0.0.0.0.0.0.0.0	191	0.66474089
29	UNK	188	0.654299934
30	V.hum.sg.3.pst.0.n	186	0.647339296
31	NC.0.0.0.y.0.acc.0.0.0.0.0	181	0.629937702
32	JQ.0.crd.0.0.0.0.0.0	168	0.584693558
33	NC.0.mas.sg.0.0.0.0.0.0.0.0	167	0.581213239
34	NC.0.0.0.0.0.gen.0.0.0.0.0	165	0.574252602
35	NC.0.hum.sg.0.0.0.0.0.0.0.0	164	0.570772283
36	NC.0.0.0.0.0.dat.0.0.0.0.0	161	0.560331326
37	NC.0.0.0.0.0.0.0.0.adj.0.0	151	0.525528138
38	V.0.0.0.fut.0.n	150	0.52204782
39	CCD	144	0.501165907
40	PPR.hum.sg.1.0.0.0.0.0.0.0.0.0	130	0.452441444
41	LC.0	126	0.438520168
42	V.neu.pl.3.prs.0.n	122	0.424598893
43	NC.0.0.pl.0.0.loc.0.0.0.0.0	121	0.421118574
44	NP.0.hum.sg.0.0.0.0.0.0.0.0	114	0.396756343
45	V.hum.pl.3.prs.0.n	114	0.396756343
46	PWH.0.0.0.0.0.0.0.0.0	112	0.389795705
47	DAB.prx	111	0.386315386
48	NC.0.0.0.0.0.0.0.0.0.0.pp	110	0.382835068
49	NC.y.0.0.0.0.0.0.0.0.0.0	107	0.372394111
50	NC.0.0.0.0.0.0.0.0.0.0.0.emp1	106	0.368913793
51	V.hum.pl.3.pst.0.n	106	0.368913793
52	V.neu.pl.3.pst.0.n	105	0.365433474

பின்னிணைப்பு- 4

Unique Tagset frequency Report

Total Tokens: 28733

Tag Name	Freq
Noun Common(NC)	10131
Punctuation (PU)	4801
Verb(V)	2683
Pronoun Pronominal (PPR)	1322
Participle Verbal (LV)	1295
Noun Proper(NP)	1272
Participle Relative (LRL)	1173
Nominal Modifier Quantifier (JQ)	894
Noun Verbal(NV)	829
Postposition (PP)	545
Particle Subordinating (CSB)	499
Participle Infinite (LNF)	473
Nominal Modifier Adjective (JJ)	411
Adverb Manner (AMN)	351
Adverb Location(ALC)	335
Demonstrative Absolutive (DAB)	209
Wh-pronoun (PWH)	207
Unknown	188

Tag Name	Freq
Participle Conditional (LC)	162
Particle Co-ordinating (CCD)	157
Pronoun Reflexive (PRF)	135
Numeral Real (NUMR)	99
Nominal Modifier Intensifier (JINT)	90
null	75
Particle Delimiting (CDLIM)	41
Residual Foreign Word (RDF)	36
Wh-demonstrative (DWH)	31
Reduplication (RDP)	27
Numeral Calendric (NUMC)	21
Particle (Dis)Agreement (CAGR)	14
Particle Interjection (CIN)	11
Particle Confirmative (CCON)	11
Particle Others (CX)	10
Numeral Ordinal (NUMO)	10
Residual Symbol (RDS)	5
Numeral Serial (NUMS)	1

பின்னிணைப்பு-5

TriGram Tag Value Report

Prev Tag Value 1	Current_Tag Value	Next Tag Value2	Score
NC	NC	NC	1017
NC	V	PU	952
PU	NC	NC	615
NC	NC	V	472
NC	LRL	NC	389
NC	NC	PU	360
LV	V	PU	302
NC	NC	LV	287
PU	NC	PU	283
PU	PPR	NC	242
LRL	NC	NC	241
JQ	NC	NC	221
NC	NC	LRL	214
NC	LV	V	206
LNF	V	PU	189
NC	JQ	NC	185
PPR	NC	NC	175
NP	NC	NC	172
NC	NC	NV	145
NC	LV	NC	135
PU	JQ	NC	128
NC	LNF	V	126
PU	NP	NC	123
JJ	NC	NC	118
PU	NP	PU	116

PrevTagValue1	Current_Tag Value	Next Tag Value2	Score
LRL	NC	PU	115
NC	NP	NC	114
NV	V	PU	110
NC	PP	NC	109
NC	NC	PP	108
NC	PPR	NC	108
NC	NC	LNF	106
NC	JJ	NC	103
PPR	V	PU	101
PU	NC	LRL	97
NC	NC	JQ	93
NC	NV	NC	89
JQ	NC	V	86
NC	NC	PPR	83
NC	LV	LV	83
PPR	NC	V	82
PU	NC	LV	80
LRL	NC	V	80
NC	NV	PU	79
PU	DAB	NC	79
NC	NC	NP	78
NC	V	NC	76
LV	NC	NC	75
DAB	NC	NC	73

தரவுத்தொகுப்பால் உருவாகும் பயிற்றுப் பாடங்களும் மாணவர் தரவுத்தொகுப்பும்

Dr. ந. நடராசப்பிள்ளை
மேனாள் ஆய்வாளர், இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம் - மைசூர் இந்தியா.

'கணினி இன்றி வாழ்க்கை இல்லை' என்று கூறும் அளவிற்குக் கணினியின் பயன்பாடு மிகவும் வளர்ந்திருக்கின்ற இக்கால கட்டத்தில் 'தரவுத்தொகுப்பு' என்னும் துறையும் 'தரவுத்தொகுப்பு மொழியியல்' என்னும் துறையும் வளர்ச்சி கண்டிருப்பதை நாம் அறிவோம். ஆயினும், 'தரவுத்தொகுப்பு' எந்த அளவுக்கு மொழி கற்பித்தல்-கற்றல் செயற்பாட்டுக்கு உதவுகிறது என்று கேட்டால் அதன் பதில் எதிர்மறையாகவே அமைகிறது. ஆங்கிலம் போன்ற ஐரோப்பிய மொழிகளில் 'தரவுத்தொகுப்பின்' பயன்பாடு கூடுதலாகவே இருக்கின்றது. எனினும் இந்திய மொழிகளில் எடுத்துக்காட்டாகத் தமிழில் அதன்பயன்பாடு மிகமிகக் குறைவாகவே இருக்கிறது என அறுதியிட்டுக் கூறி விடலாம். இவ்வாறான சூழ்நிலையில் 'தரவுத்தொகுப்பை' எவ்வாறெல்லாம் கல்விக்காகப் பயன்படுத்தலாம் என்பதை இக்கட்டுரை விளக்குகிறது.

பல்வேறு விதமான 'தரவுத்தொகுப்புகள்' தமிழில் உள்ளன. அவை பெரும்பாலும் மொழியின் 'தரவுத்தொகுப்பை' உயர்த்த வேண்டும் என்ற குறிக்கோளையே அடிப்படையாகக் கொண்டவை. நாளிதழ்கள், பல்வேறு இதழ்கள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்ட தரவுத்தொகுப்புகளும் 'பொது'த் தரவுத்தொகுப்புகளும் சுமார் 36 மில்லியன் சொற்கள் கொண்டவைகளாகவும் அமைந்துள்ளன.

இவற்றை மொழிக் கல்விக்காக எவ்வாறு பயன்படுத்தலாம்? என்பது ஒரு முக்கியமான கேள்வியாகும். சொற்களின் வருஎண்ணிக்கை அடிப்படையிலான சுமார் '5000' சொற்களைத் தரும்படி கணினிக்கு ஆணைகொடுக்கும் போது நமக்குத் தேவையான அடிப்படைச் சொற்களைத் தருவதில்லை. பல்வேறுபட்ட பனுவல்களிலிருந்து, செய்தித்தாள், இதழ்கள், பாடநூல்கள், இலக்கியங்கள், போன்ற பலவற்றிலுமிருந்து தரவுத் தொகுக்கப்பட்டதால் செய்தித்தாளில் பயனாகும் கூடுதல் சொற்களும், பல்வேறு மொழிசார்ந்த சொற்களும் கிடைக்கும். இவற்றை ஓரளவுக்குத்தான் கட்டுப்படுத்த இயலும். ஆகவே, கல்விக்கெனப் பாடநூல்கள் சார்ந்த ஓர் ஐம்பது ஆண்டுக்கால பாடநூல்கள் சார்ந்த - ஒரு தரவுத்தொகுப்பு தேவையாகிறது. எடுத்துக்காட்டாக, தமிழ்மொழி கற்றுக் கொடுக்கப்படும் - முதல்மொழியாக அல்லது

இரண்டாம் மொழியாக - பாடநூல்கள் தொடக்கப்பள்ளி முதல் முதுகலைப்பட்டக் கல்வி வரையிலானவை, அதோடு பல்வேறு நாடுகளிலும் பயன்படுத்தப்படும் அச்சு, ஒலி, ஒளி, பல்லூடகங்களிலும் பயன்படுத்தப்படும் 'தரவுகள்' தொகுக்கப்பட வேண்டும். இவ்வாறான தொகுப்பு மட்டுமே கல்விக்கான தரவுத்தொகுப்பாக முடியும். இத்தரவுத்தொகுப்பைப் பயன்படுத்திப் பாடநூல்கள் எழுதும் போது ஒரு நிலைபேறாக்கத்தை அல்லது ஒரு பொதுமையைக் கொண்டு வர முடியும். சொற்கள், வாக்கியங்கள், போன்றவற்றிலும் அமைகின்றவை இயற்கைச் சூழலை அடிப்படையாகக் கொண்டவையாக அமையும்.

பாடப்பொருள் தயாரிப்பின் கொள்கைகளாக வருகின்ற தெரிவு செய்தல், படியமைப்பு செய்தல், வழங்குதல், மதிப்பீடு செய்தல் ஆகிய நான்குமே ஓரளவு கட்டுப்படுத்தப்பட்ட வாக்கிய அமைப்பிற்காகத் தெரிவு செய்யப்படும் சொற்களஞ்சியமும் பனுவலும் இயற்கைப் பயன்பாட்டை அடிப்படையாகக் கொள்வதில்லை. ஒரே 'தலைப்பில்' இருவேறு ஆசிரியர்கள் பாடம் எழுதும் போது ஏற்படுகின்ற வேறுபாடுகளுக்கு அவர்களின் பட்டறிவும் மொழியறிவும் தாம் காரணங்களாகின்றன. ஆனால் 'தரவுத்தொகுப்பை' அடிப்படையாகக் கொள்ளும்போது இவ்வாறு அமைவதற்கு வழி கிடைப்பதில்லை.

எந்த விதமான தரவுத்தொகுப்பு அமைய வேண்டுமென்ற கேள்வியும் இதோடு இணைவது, எழுத்து அல்லது பேச்சு தரவுத்தொகுப்பு என்ன என்பதும் ஆகும். பேச்சுத்தரவுத் தொகுப்பின் வாயிலாக ஒலிகளின் ஒலிப்புத்தன்மை, சொற்கள் / தொடர்கள் போன்றவற்றின் வாக்கிய இசை ஆகியவற்றைப் பொதுமைப்படுத்த இயலும். ஆக, வகுப்பறையில் நடக்கும் பாடம் தொடர்பான உரையாடல்கள், கற்பிக்கின்ற - கேள்விகள் கேட்டு மாணவர்கள் கூறுகின்ற பதில் - போன்ற கல்விசார் பேச்சுகளைத் தரவுதொகுப்பாக்க வேண்டும்.

தரவுத்தொகுப்பு மொழியியலின் ஆய்வு முடிவுகள் மொழிக் கல்வியில் - கற்பித்தல் - கற்றல் செயல்பாட்டில் பயனாகும் வகையில் தெளிவாக்கப்பட வேண்டும். எடுத்துக்காட்டாக, சொல்வகை அடையாளப்படுத்தல் என்னும் கூறு கல்வியில் மிக முதன்மையான இடத்தைப் பெறுகின்றது. இலக்கணக் கூறுகளின் வகை அறிதலும் பயன்படுத்துதலும் இலக்கண அறிவை வளர்ப்பதோடு அவற்றைப் பயன்படுத்துகின்ற அறிவை அல்லது அனுபவத்தை மாணவர்கள் தரவுத்தொகுப்பு வாயிலாக அறிந்து கொள்ளலாம். எடுத்துக்காட்டாக, 'கை' என்னும் சொல்லை எடுத்துக் கொண்டால் கை, கைப்பிடி, கைபிடி, கையாடு, கைவை, கையொப்பம், கைராசி, கையூட்டு, கையாலாகாத, கைமேல் பலன், போன்ற பல சொற்களும் அவற்றின் பயன்பாடும் இயற்கையான சூழலில் கிடைக்கும் என்ற உத்திரவாதம் இங்கு உண்டு.

ஒவ்வொரு வினைக்கும் அதற்கென ஒரு வேற்றுமை வரும் சட்டம் உண்டு என்பதை அறிவோம். எடுத்துக்காட்டாக, 'கொடு' என்னும் வினைக்கு இரண்டாம் வேற்றுமை + நான்காம் வேற்றுமை கண்டிப்பாகத் தெரிவு செய்து கொள்ள வேண்டிய வேற்றுமைச் சட்டமாகும். இது போன்ற பல கூறுகளை இட்டுக்கட்டிய வாக்கிய அமைப்புகளாக இல்லாமல் இயற்கையாகப் பயன்படுத்தும் சூழல்களின் வழி அறிந்து கொள்ள தரவுத்தொகுப்பு மிகவும் உதவும்.

பாடநூல்களில் 7-ஆம் வகுப்புவரை (தமிழ்நாட்டில்) மாணவர்களின் மொழிஅறிவு, மொழித்திறன்களுக்கேற்ப பாடங்கள் எழுதப்படுகின்றன. அவற்றின் வாக்கிய அமைப்புகள், பத்திகள், முழு பனுவல்கள் ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டவையாகும். அக்கட்டுப்படுத்தப்பட்ட பனுவல்களிலிருந்து பரந்த வானில் பறப்பதற்கான படியமைப்பு எட்டாம் வகுப்பிலிருந்து தொடங்குகிறது எனலாம். இக்காலக்-கட்டத்திலிருந்து முழுவதுமாகச் சிறகடித்துப் பறப்பதற்கு மாணவர்களுக்குத் தரவுத்தொகுப்பை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதற்கான பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டும்.

பேச்சுத் தரவுத்தொகுப்பு முழுவதுமாகக் கிடைக்கும் போது பல்வேறு சமுதாய-வட்டார வழக்கு வேறுபாடுகளை அறிந்து கொள்ளவும் சொற்களின் பயன்பாட்டு வேறுபாடுகளை அறிந்து கொள்ளவும், இத்தரவு உதவும். இத்தரவுத் தொகுப்பிலிருந்து ஒரு 'பொதுமைப்படுத்தப்பட்ட அல்லது நிலைபேறு பெறும் வழக்கை'ச் சிறப்பாக உருவாக்க முடியும். இன்று 'பொதுமைப் பேச்சு வழக்கைக்' கற்பிக்கும் இரண்டாம் மொழிப் பாடநூல்களில் இப்பொதுமைப் பேச்சு வழக்கு எவ்வாறெல்லாம் வேறுபட்டுக் கிடக்கின்றது என்பதை அறிவோம். இவ்வேறுபாட்டிற்கும் ஒரு முடிவு கட்ட வேண்டிய சூழ்நிலை இது. ஏராளமாகக் கிடைக்கின்ற தரவுத்தொகுப்புகளின் வாயிலாக மொழியை ஆராயும் 'தரவுத்தொகுப்பு மொழியியல்' இன்று கல்வியியல், அகராதியியல், மொழி-பெயர்ப்பியல் போன்ற துறைகளுக்கு மிகவும் உதவும் துறையாகும். கோட்பாட்டு அடிப்படைகளையும் ஆய்வாளரின் மொழியறிவையும் தவிர்த்துக் களங்களில் கிடைக்கும் தரவுகளின் வாயிலாக ஆராய்வதால் மிக முதன்மையிடம் பெற்றிருக்கிறது; இன்றைய தேவையுமாகும்.

அடுத்து, மாணவர் 'தரவுத்தொகுப்பு' ஒன்றை பன்னாட்டுத் தமிழ் ஆசிரியர் சங்கம் செய்ய வேண்டும். அது கற்பித்தல் - கற்றல் செயல்பாட்டுக்கு மிகவும் துணையாக அமையும்.

'மாணவர் தரவுத்தொகுப்பில்' முதன்மொழியாக அல்லது இரண்டாம் மொழியாகத் தமிழ் கற்கும் மாணவர்களின் விடைத்தாள்களும் பயிற்சி ஏடுகளும் அமையும்.

இத்தரவுத்தொகுப்பு, மாணவர்கள் செய்கின்ற பிழைகளோடு அமையும் என்பதால் அவர்கள் எதிர்நோக்கும் சிக்கல்கள், மீண்டும் கற்பித்தலுக்கான அணுகுமுறைகள் போன்ற பலவற்றையும் மீள்பார்வை செய்யப்பயனாகும். தமிழ் மாணவர்களைப் பொறுத்தவரை அவர்கள் செய்கின்ற பிழைகளைக் கண்டறிந்து விட்டால் பாடப் பொருள்களிலும் கற்பிக்கும் உத்திகளிலும் பயிற்சிகளிலும் மாற்றங்களை எளிதாக ஏற்படுத்திவிடலாம். இத்தரவுத் தொகுப்பையும் பல கல்விநிலைகளில் அமைத்துக் கொள்ளலாம். இது புரட்சிகரமான ஒரு புதிய அணுகுமுறைக்கும் சிறந்த மாணவர்களை உருவாக்குவதற்கும் முதற்படிக்கட்டாக அமையும். ஆக, இத்தரவுத்தொகுப்பு தமிழ் கற்பித்தல் - கற்றல் செயல்பாடுகளில் பெரிதும் உதவும் என்பதில் எந்ததொரு ஐயமும் இல்லை.

மாணவர் தரவுத்தொகுப்பின் பயன்பாட்டைக் கீழ்வரும் படத்தின் வழி விளக்கலாம்.



தமிழ் (பயில்மொழி) மற்றும் தாய்மொழி (ஆங்கிலம், எடுத்துக்காட்டாக) கொண்டுள்ள கற்பித்தல் - கற்றல் செயல்பாட்டு உதவும் இன்னொன்று 'இணை தரவுத்தொகுப்பு' ஆகும்.

இந்த இணை தரவுத்தொகுப்பு தாய்மொழி - பயில்மொழிக்கிடையிலான இலக்கண மற்றும் பயன்பாட்டு வேறுபாடுகளையும் மொழிக்கூறுகளின் பல்வேறு பயன்பாடுகளையும் அறிந்து கொள்ள இயலும். இதைப்பற்றியும் நாம் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டிய நிலையில் உள்ளோம்.

இத்தரவுத் தொகுப்புகளை எவ்வாறு உறுதியாகவும் நம்பகத்தன்மை உள்ளதாகவும் மாற்றி எப்படி மொழிக்கல்விக்குப் பயனாக்குவது என்பது முதன்மையான கேள்வியாகும்.

1. புதியதொரு இணையத் தளத்தை உருவாக்குதல்.
2. தரவுத்தொகுப்பு பற்றிய செய்திகளையும் அணுகுமுறைகளையும் பற்றிய தகவல்களைத் தொகுத்துத் தருதல் - அதுவும் ஆசிரியர், மாணவர்கள் போன்றோருக்கு உதவும் வண்ணம் தருதல்.
3. புதிய ஆய்வு முடிவுகளையும் தரவுச் சேர்க்கைகளையும் அவ்வப்போது மேலேற்றுதல்.
4. புதிதாக உருவாக்கப்பட்ட பாடப்பொருள்கள் பற்றிய சுருக்கத்தை வெளியிடல்.
5. தரவுத்தொகுப்பைக் கற்றல் - கற்பித்தல் செயல்பாட்டில் எவ்வாறெல்லாம் பயன்படுத்தலாம் என்பதற்கான குறிப்புகள். எடுத்துக்காட்டாக,

அ. பிழைகளைத் திருத்திக் கொள்வதற்கும் பயனாகும் பனுவல்களைப் பதிப்பிப்பது எப்படி?

ஆ. ஒரு சில தேடல் மென்பொருள்கள்.

இ. சொற்கள் வருஎண்ணிக்கை.

ஈ. மொழியின் வெவ்வேறு இலக்கணக் கூறுகளைக் கண்டறிதல்.

உ. மரபு சார்ந்தவை - மொழியியல் ஆய்வு சார்ந்தவை.

ஊ. தேர்வுகளும் மதிப்பீடு செய்தலும்.

எ. ஆசிரியர் - மாணவர் இணைந்து தரவுத்தொகுப்பை எவ்வாறு பயன்படுத்துவது?

ஏ. தகவல் தயாரித்தலும் - பரவலாக்கலும்

ஐ. மொழியின் பல்வேறு நிலைகள் பற்றிய செய்திகள்: ஒலியனியல், உருபனியல், புணர்ச்சி, தொடரியல், பொருண்மையியல் போன்ற பல தகவல்களையும் மாணவர் தரவுத்தொகுப்பு உள்ளடக்கியிருக்க வேண்டும்.

ஒ. வகுப்புசார் சொற்களஞ்சியங்கள்.

ஓ. துறைவழக்குகள், சமுதாய - வட்டார - நாடுசார் வழக்குகள், போன்றவை பற்றிய தகவல்கள்.

ஔ. மொழிநடை தொடர்பானவை.

நிறைவாக, மாணவர் தரவுத்தொகுப்பு மிகமிகத் தேவையானது; அது கற்பித்தல் - கற்றல் செயல்பாட்டில் மிக முக்கிய இடம் வகிக்கும் என்பதோடு 'பிழை அடையாளப்படுத்தப்பட்ட' மாணவர் தரவுத் தொகுப்பு மாணவர்களின் மொழித்

திறன்களை மேன்மைபடுத்தும்; கணினியாக்கப்பட்ட மாணவர்களின் மொழி வெளிப்பாடுகள் பாடத்திட்டத்தையும் பாடப்பொருள்களையும் மேம்படுத்தும். தரவுத்தொகுப்பு பற்றிய தகவல் அறியாதவர்கள் கூட இனி தரவுத்தொகுப்பு ஆய்வின் முடிவுகளைத் தெரிந்துகொள்ள வேண்டும், அவற்றைத் தம் கற்பிக்கும் திறனை வளர்த்துக்கொள்ள பயன்படுத்த வேண்டும். அது கணினியுகத்தில் மிகத் தேவையான ஒன்றாகும்.

உலகமயமாதலும் சிங்கப்பூரில் தமிழாசிரியர் பயிற்சியும்

Dr. ஆ ரா சிவகுமாரன்
தலைவர், தமிழ்மொழி பண்பாட்டுப் பிரிவு
தேசியக் கல்விக்கழகம்
நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம்
சிங்கப்பூர்

உலக அரங்கில் தமிழ்மொழி செம்மொழி தகுதிபெற்றுச் செம்மாந்து உலா வருகிறது. அம்மொழி பல நாடுகளிலும் பயிற்சிபெற்ற ஆசிரியர்களைக் கொண்டு கற்பிக்கப் படுகிறது. சிங்கப்பூரில் தமிழாசிரியர் பயிற்சி குறித்துச் சுட்டிக்காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தேசியக் கல்விக்கழகம்

சிங்கப்பூரில் அனைத்துப் பாட ஆசிரியர்களுக்கும் பயிற்சி தரும் இடமாகத் தேசியக் கல்விக்கழகம் அமைகிறது. இக்கல்விக்கழகம் ஆசிரியருக்கான பயிற்சிகளையையும் (*Pre service)* பணியிடைப் பயிற்சிகளையும் (*In service)* நடத்தி வருவதோடு ஆசிரியர் இயல் தொடர்பான பல பட்டப்படிப்புகளையும் நடத்தி வருகிறது.

ஆசியமொழிகள் மற்றும் பண்பாடுகள் துறை

சீனம், மலாய், தமிழ் ஆகிய மூன்று மொழி ஆசிரியர்களுக்கும் பயிற்சி அளிக்கும் துறை ஆசிய மொழிகள் மற்றும் பண்பாடுகள் துறை *Asian Languages and Cultuers Accademic Group (ALC)* ஆகும். இத்துறையில் சீனம், மலாய், தமிழ் ஆகிய மூன்று மொழிப்பிரிவுகளும் உள்ளன.

தமிழ்மொழி வகுப்புகள்

தேசியக் கல்விக்கழகத் தமிழ்மொழிப் பிரிவு கீழ்க்கண்ட வகுப்புகளை நடத்தி வருகின்றது.

பட்டயக்கல்வி (தொடக்கநிலை) *Diploma in Education (Primary)*

பட்டயக்கல்வி (உயர்நிலை) *Diploma in Education (Secondary)*

பட்டத்திற்குப் பிந்திய பட்டயக் கல்வி *Post Graduate in Diploma in Education,*

பள்ளிகளில் மேலாண்மையும் தலைமைத்துவமும் *Management and Leadership in schools,*

முதுகலை (தமிழ்) *M A ,*

முதுகலை கல்வியியல் *M.Ed,*

முனைவர் பட்டம் *PhD,*

பணியிடைப் பயிற்சி வகுப்புகள் (*Inservice Courses),*

<u>பட்டயக்கல்வி தமிழாசிரியர் பயிற்சிப்பெறத் தேவையான கல்வித்தகுதி</u>

சிங்கப்பூரில் பட்டயக் கல்வி (*Dip.Ed)* நிலையில் தமிழாசிரியர் பயிற்சி பெற விரும்புவோர் *GCE* மேல்நிலை *H2* நிலையில் தமிழில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். அல்லது பலதுறைத்தொழில்நுட்பக் கல்லூரியில் பட்டயக் கல்வி (*Diploma)* பெற்றிருக்க வேண்டும். *GCE 'O'* நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்றுத் தமிழாசிரியர் பயிற்சி பெறுவோர்கான வகுப்புகள் *2010*ஆம் ஆண்டோடு முடிவடைந்தது. சிங்கப்பூர் கல்வி அமைச்சு தமிழாசிரியர் பயிற்சி பெறுவதற்குரிய மாணவர்களைத் தேர்வுசெய்து பயிற்சி பெறாத தமிழாசிரியராக (*Untrained Contract Teacher)* முதலில் நியமனம் செய்கிறது. அதன் பின்னர் அவர்களைத் தமிழாசிரியர் பயிற்சிக்கு ஒவ்வொரு ஆண்டும் (ஜூலை/ஆகஸ்ட்டு மாதங்களில்) கல்விக் கழகத்திற்கு அனுப்புகிறது. எனவே தமிழாசிரியர் பயிற்சிபெறுகின்ற ஒவ்வொரு மாணவரும் ஒவ்வொரு மாதமும் சம்பளம் வாங்கிக்கொண்டே தம்முடைய பயிற்சியைத் தொடர்கின்றனர். பள்ளி சார்ந்த பயிற்சியையும் சேர்த்துப் பட்டயப் பயிற்சி காலம் இரண்டு ஆண்டுகள் ஆகும்.

<u>பாடத்திட்டம்</u>

ஆசிரியப் பயிற்சி பெறுகின்ற தாய்மொழி (சீனம், மலாய், தமிழ்) ஆசிரியர்களுக்குரிய பாடங்கள் பெரும்பாலும் ஒன்று போலவே அமையும். அவர்களுக்கு ஒதுக்கப்படுகின்ற நேரமும் ஒன்றாகவே அமையும். சீன, மலாய் பயிற்சி ஆசிரியர்கள் ஒவ்வொரு பாடத்திற்கும் செலவிடும் நேரத்தையே பயிற்சித் தமிழாசிரியர்களும் செலவிடுவர். ஓர் ஆண்டில் இரண்டு பருவங்கள் (*Two terms)* ஒரு பருவத்திற்கு *13* வாரங்கள். பட்டயக் கல்வி வகுப்பில் தொடக்கப்பள்ளித் தமிழாசிரியராகப் பயிற்சி பெறும் பயிற்சி ஆசிரியர்கள் கீழ்க்கண்ட பாடங்களைப் படிப்பர்.

ICT for meaningful learning (ஆங்கிலத்தில் படிப்பர்)

Teaching and manging learners (ஆங்கிலத்தில் படிப்பர்)

தமிழ்மொழி *1, 2, 3. (Tamil Language 1, 2 3)*

தமிழ் இலக்கியம் *1, 2, 3 (Tamil Literature 1, 2, 3)*

தமிழ்மொழிக் கற்பித்தல் *1, 2, 3, 4 (Teaching of Tamil Language 1, 2, 3,4)*

தமிழ்மொழிப் பயன்பாடு *1, 2 (Use of Tamil 1, 2)*

அறநெறிக் கல்வி கற்பித்தல் *1, 2 (Teaching of Moral Education 1, 2)*
தாய்மொழி வழி அறிநெறிக் கல்வி கற்பித்தலின் முக்கியத்துவம் (*The importance of Teaching of Moral Education in Mother Tongue)*

*'*பட்டயக் கல்வி உயர்நிலைப்*'* பிரிவில் பயிலும் மாணவர்கள் அறநெறிக் கல்விக்குப் பதிலாகத் தமிழ் இலக்கியம் கற்பித்தல் *1 & 2'* தற்காலத் தமிழ் இலக்கியம் கற்பித்தல் *1* என மூன்று வேறு பாடங்களைப் படிப்பர். உயர்நிலை, தொடக்கநிலை என இரு நிலைகளிலும் பயிலும் மாணவர்கள் பள்ளிசார்ந்த பயிற்சிகளைப் பெறுவதற்கு இரு முறை பள்ளிகளுக்குச் செல்வர். முதலாம் ஆண்டு *5* வாரங்களும் இரண்டாம் ஆண்டு *10* வாரங்களும் பயிற்சியில் ஈடுபடுவர். பட்டத்திற்குப் பிந்திய பட்டயக் கல்வி பயிலும் மாணவர்கள் *10* வாரப் பள்ளி சார்ந்த பயிற்சியையும் சேர்த்து ஓர் ஆண்டு பயிற்சிகளில் ஈடுபடுவர். இவர்கள் தமிழ்மொழி கற்பித்தல், தமிழ் இலக்கியம் கற்பித்தல், தமிழ்மொழிப்பயன்பாடு, ஆகிய பாடங்களைத் தமிழ்மொழியில் படிப்பர். *Communication skills, Social studies, Educational pscycology 1 & 2* ஆகிய பாடங்களை ஆங்கிலத்தில் படிப்பர்.

<u>பயிற்சி ஆசிரியர்கள் எதிர்நோக்கும் சவால்கள்.</u>

உலகமயமாகி வருகின்ற இக்காலக் கட்டத்தில் சிங்கப்பூரில் தமிழை முதன்மொழியாகப் படித்துவிட்டு வரும் மாணவர்கள் இல்லை என்றே கூறலாம். *1982*இல் தமிழை முதன்மொழியாகக் கொண்டு கற்பித்து வந்த உமறுப்புலவர் தமிழ்மொழி பள்ளி மூடப்பட்டது. அதன் பின்னர்ச் சிங்கப்பூரிலேயே பிறந்து வளர்ந்த மாணவர்கள் தமிழை இரண்டாம் மொழி/ தாய்மொழி நிலையிலேயே கற்று வருகின்றனர். *GCE 'A'* நிலைத்தேர்வில் உச்ச தேர்ச்சி பெற்ற மாணவர்களில் பெரும்பாலோர் தமிழாசிரியராக வருவதற்கு விரும்புவதில்லை. ஒரு சிலர் பல ஆண்டுகள் வெவ்வேறு துறைகளில் வேலசெய்துவிட்டுப் பின்னர்த் தமிழாசிரியராக மறுவேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் (*Mid carrier scheme)* வருகின்றனர். பொதுவாக அனைத்து மாணவர்களும் தமிழ்ப்புலமையில் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. சில மாணவர்களின் தமிழ்ப்புலமை பயிற்சியின் ஆரம்பத்தில் சற்றுக் குறைவாக உள்ளது. இப்படிப்பட்டவர்களின் தமிழ்ப் புலமையை உயர்த்த, கூடுதல் காலஅவகாசம் தேவைபடுகிறது. ஆனால் இவர்களும் மற்றவர்களைப்போல் இரண்டு ஆண்டுகளிலேயே பயிற்சியை முடிக்க வேண்டும். பயிற்சி ஆசிரியர்கள் தங்களின் தமிழின் தரத்தை உயர்த்திக் கொள்ளவும் அதே நேரத்தில் கற்பித்தல் உத்திமுறைகளைக் கற்றுக் கொள்ளவும் முற்படுகின்றபொழுது இரண்டிலும் சிறந்து விளங்குவதில் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். ஒரு தமிழாசிரியர்க்குக் கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் ஆகிய அடிப்படைத் திறன்கள் அமைந்த பாடத்தை

மாணவர்களுக்கு நடத்தத் தெரிந்திருக்க வேண்டும். இது மட்டும் அல்லாது வினாத்தாட்கள் தயாரிக்கவும், கட்டுரைகளைத் திருத்தவும், மதிப்பெண் வழங்குவதில் ஒருமைப் பாட்டைக் கடைப்பிடிக்கவும் அறிந்திருக்க வேண்டும். இப்படிப்பட்ட அடிப்படைத் திறன்கள் பற்றிய செய்திகளைப் பயிற்சி ஆசிரியர்கள் முதன் முதலில் ஆசிரியப் பயிற்சியில்தான் அறிகிறார்கள். எனவே அவர்களுக்கு அவை பற்றிய அடிப்படைச் செய்திகளைக் கற்பிக்க வேண்டியது அவசியம். அதே நேரத்தில் நாளுக்கு நாள் மாற்றம் கண்டு வருகின்ற புதுப்புது உத்தி முறைகளையும் மாணவர்கள் கற்றுக்கொள்ள வேண்டியதும் அவசியம். அடிப்படைத் தெரியாமல் புதிய உத்திமுறைகளை அறிந்து கொள்வதால் மட்டும் ஓர் ஆசிரியர் சிறந்து விளங்க முடியாது. புதிய உத்திமுறைகளைக் கற்றுக்கொள்ள வேண்டியது எவ்வளவு அவசியமோ அதுபோல அடிப்படைக் கூறுகளை அறிந்திருக்க வேண்டியதும் அவசியம். எனவே கற்றல் கற்பித்தல் சமூகத்தில் எதிர்பார்க்கும் புதிய எதிர்பார்ப்புகளுக்கு இடையே அடிப்படையாக ஓர் ஆசிரியர்க்கு இருக்க வேண்டிய கூறுகளைக் கற்பிக்க வேண்டிய சவாலை ஆசிரியப் பயிற்சி எதிர்நோக்குகிறது. மேலும் இன்றைய நிலையில் ஆசிரியத்தொழில் என்பது வகுப்பறையில் பாடம் கற்பிப்பதோடு மட்டும் முடிவடைந்துவிடுவதில்லை. வகுப்பறைக்கு அப்பாற்பட்டுப் பல்வேறு குழுக்களில் பணியாற்றவேண்டிய பொறுப்புகளும் உள்ளன. குறிப்பாகச் சிங்கப்பூர் ஆசிரியர்களுக்கு வகுப்பறையில் பாடம் கற்பிக்கும் பொறுப்புகளோடு வேறு பள்ளிப்பணிகள் நிர்வாகத்தினரால் வழங்கப்படுகின்றன. அவற்றைச் சமாளிக்கும் திறனும் ஆசிரியர்களுக்குத் தேவைப்படுகிறன. ஆனால் இந்தக் குழுக்களில் எப்படிப் பணியாற்றுவது என்பதைக் கற்றுக்கொடுக்க எந்த வகுப்பும் ஆரம்ப ஆசிரியர்களுக்குக் கிடையாது. இருப்பினும் தேசியக் கல்விக்கழகத் தமிழ்த்துறை, பள்ளி முதல்வர்களையும், துணை முதல்வர்களையும், துறைத் தலைவர்களையும் மற்றும் கல்வியாளர்களையும் வெளிநாடுகளிலிருந்து வரும் பேராசிரியர்களையும் கல்விக்கழகத்திற்கு வரவழைத்து அடிக்கடி சொற்பொழிவுகளை நடத்துகிறது. இது கல்விக்கழகத்தில் படிக்கும் பயிற்சி ஆசிரியர்களுக்குக் கலங்கரை விளக்கமாக அமைகிறது.

சிங்கப்பூரைப் பொறுத்த மட்டில் தமிழாசிரியர் என்பவர் தமிழ்ப் பண்பாடுகளைக் கற்பிக்கவேண்டிய ஆசிரியராகவும் இருக்கிறார். இந்தப் பண்பாடு என்பது சிங்கப்பூர் பண்பாடா? இந்தியப் பண்பாடா? சிங்கப்பூர் இந்தியப் பண்படா? இவற்றில் எது என்பதை அறிவதில் குழப்பம் உள்ளது. சிலர் தமிழ்ப் பண்பாட்டையும் இந்து சமயப் பண்பாட்டையும் ஒன்றாகக் கருதித் தமிழ்ப் பண்பாட்டைக்கூடப் பயிற்றுவிக்கத் தயங்குகின்றனர். சிங்கப்பூரில் பிறந்து வளர்ந்த ஆசிரியர்கள் பழமொழி, மரபுத்தொடர் முதலானவற்றின் பொருளை அறிந்துகொள்வதில் மிகுந்த சவாலை

எதிர்கொள்கின்றனர். மேலும் நூல்கள் படிக்க நேரம் இல்லை என்று குறைபட்டுக்கொள்வோரும் உண்டு

உலகமயமாகி வருகின்ற இன்றை நிலையில் தமிழ்மொழி கற்பித்தலில் நாட்டுக்கு நாடு, ஆசிரியருக்கு ஆசிரியர் வேவ்வேறு கருத்துகளைக் கொண்டுள்ளனர். ஒற்றுப்பிழை என்பதை ஒருபிழையாகக் கருதத் தேவையில்லை என்னும் மனப்போக்குக் கொண்ட ஆசிரியர்களும் உள்ளனர். சிலர் அதுவும் பிழைதான் ஆனால் அவை சிறுபிழைகள் என்பர். சிலரோ பிழையில் என்ன சிறுபிழை பெரும்பிழை எல்லாம் பிழைதான்; தமிழ்மொழியின் இலக்கணத்திற்கு ஒவ்வாத அனைத்தும் பிழைதான் அவற்றை நாம் அனுமதிக்கக்கூடாது என்று வாதிடுவர். இத்தகைய கூறுகளில் ஒருமைப்பாட்டைக் காணாதபொழுது கணினி, இணையம் தொடர்பான வன், மென் பொருள்களை உருவாக்குவதில் சிரமங்கள் உள்ளன.

ஆங்கில மோகத்தினால் அல்லது தாக்கத்தினால் தமிழ் எழுதும் மாணவர்களிடையே சில தவறுகள் ஏற்படுகின்றன. எடுத்துக்காட்டுக்கு 'மாத்திரை எடுத்தேன்'; 'தேர்வுக்கு உட்கார்ந்தேன்'. 'பஸ் எடுத்தேன்' என்பன. தமிழாசிரியர் இவ்வாக்கியங்களைத் தவறு என்று கூறும்போது ஊடகங்கள் (செய்தித்தாள், வானொலி) இவற்றைத் திரும்பத் திரும்ப இவ்வாறே பயன்படுத்துகின்றன. எனவே தமிழாசிரியரின் பணி மேலும் சுமையாக அமைகிறது. ஆசிரியர்கள் சிலர் திருக்குறளை அல்லது சிறுசிறு பழமொழிகளை மனப்பாடம் செய்வது நல்லது என்று கூறும்போது ஐபோன் இருந்தால் போதும் அவற்றின்வழி அனைத்தையும் தெரிந்துகொள்ளலாம்; இதற்கென்று தனியாகப் மனப்பாடம் செய்யத் தேவையில்லை என்று கூறி மனப்பாடத்தை வலியுறுத்தாத ஆசிரியர்களும் உள்ளனர். தனித்தமிழ் பற்றாளர்கள் பேசும்பொழுது தொடர்வண்டி, மின்தூக்கி, பனிக்கூழ் என்று பயன்படுத்துகிறார்கள். முற்றிலும் ஆங்கிலம் கலக்காமல் பேசுவதுதே சரி என்னும் நிலையில் உள்ள தனித்தமிழ் பற்றார்களுக்கிடையே சில ஆங்கிலச் சொற்களை அதுவும் பெயர்ச் சொற்களை மட்டுமே கலந்து பேசும் மாணவனைச் சோதிப்பதில் ஆசிரியர்கள் சவாலை எதிர்நோக்குகின்றார். பேச்சுத்தமிழ் வளர வேண்டும் என்று கூறிடும் ஆசிரியர் எதனைச் சரி என்று கூறுவார்?

"தமிழ்நாடு அரசு" எனத் தமிழ்நாடே சொல்லும்போது தமிழ்நாட்டுப் பண்பாடு, "தமிழ்நாட்டுப் பாடப்புத்தகம்" என்று தமிழாசிரியர் ஒற்று இரட்டித்துச் வர வேண்டும் என்று கூறுகிறார் இதில் எது சரி? என்பது தமிழாசிரியர்கள் எதிர்நோக்கும் சவாலாகும்.

ஆய்வுகள்

சிங்கப்பூர்த் தேசியக் கல்விக்கழகத்தில் பணி புரியும் பேராசிரியர்கள் விரிவுரையாளர்கள் இருவருக்கும் கற்பித்தல் பணியோடு ஆய்வு செய்ய வேண்டிய கட்டாயமும் உள்ளது. பேராசிரியர்கள் கற்பித்தல், ஆய்வு இரண்டிலும் அதிக கவனம் செலுத்த வேண்டும். விரிவுரையாளர்கள் ஆய்வைவிடக் கற்பித்தலில் அதிக கவனம் செலுத்த வேண்டும். இதன் காரணமாகக் கல்விக் கழகத்தில் பணிபுரிவோர் ஆய்வு தொடர்பான நடவடிக்கைகளில் தங்களை இணைத்துக் கொள்ள வேண்டியது அவசியமாகிறது. மேலும் இவர்கள் கல்வியியல், சமூகவியல் தொடர்பான ஆய்வுகளில் ஈடுபட வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார்கள். குறைவான நேரத்தில் அதிக ஆய்வுகளில் ஈடுபடும் பொழுது ஆய்வுலகம் எதிர்பார்க்கும் தரத்தை அடைவதில் சவாலை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

உலகம் எவ்வளவுதான் வேகமாக மாறி வந்தாலும் ஒவ்வொரு இனத்தவரும் அவரவருக்குரிய பண்பாடுகளைக் கட்டிக்காத்துக்கொண்டுதான் வருகிறார்கள். அந்த வரிசையில் மொழி ஆசிரியர்கள் அவர்களது மொழியையும் பண்பாடுகளையும் கட்டிக் காக்க வேண்டிய கட்டாயத்தின் முதல் வரிசையில் இருக்கிறார்கள். தமிழ்மொழியின் சிறப்பையும் இனிமையையும் மாணவர்களுக்கு விளங்குகின்ற விதத்தில் எடுத்துச் சொல்லி தமிழ்மொழியின் வளர்ச்சிக்குப் பாடுபட வேண்டியது மொழி ஆசிரியர்களின் கடமையாகும்.

கற்பித்தல் என்பது ஒரு இசைக் கருவியை வாசிப்பது போன்றது. யார் வேண்டுமானாலும் இசைக் கருவியை வாசிக்கலாம். ஆனால் அக்கருவியிலிருந்து பிறக்கும் நாதம், நாம் எவ்வளவு காலம் பயிற்சி செய்தோம் என்பதைப் பொறுத்தும், எந்தக் குருவிடமிருந்து எப்படிக் கற்றுக்கொண்டோம் என்பதைப் பொறுத்தும் அமையும். அதுபோலத்தான் கற்பித்தல் நடவடிக்கையும் நாம் எந்த அளவிற்கு உலகத்தோடு ஒத்து சென்று, சவால்களுக்கு ஏற்பத் திட்டமிட்டுக் கடினமாக உழைக்கின்றோம் என்பதைச் சார்ந்தே அமைந்திடும்.

சவால்களை எதிர்கொள்வோம்! சாதனை புரிவோம்!!

இணை அமர்வுகள் 1

இணை அமர்வுகள் 1

சிங்கப்பூர்ப் பள்ளிகளில் 10'T சிகரம்
- தகவல் தொடர்புத் தொழில்நுட்பம் சார்ந்த கற்பித்தலியல்

மகாதேவி பாலசுந்தரம்
சுமதி சிவகுமார்
சிங்கப்பூர்க் கல்வி அமைச்சு - கல்வித் தொழில்நுட்பப் பிரிவு

அறிமுகம்

இன்றைய காலக்கட்டத்தில் தகவல் தொடர்புத் தொழில்நுட்பம் முக்கிய இடம் வகிக்கிறது. நமது அன்றாட வாழ்க்கை முறையில், குறிப்பாகக் கல்வித் துறையில் இத்தொழில்நுட்பம் பெரும் பயன்களை அளித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது (Walters & Fehring, 2009). இதனைக் கவனத்திற்கொண்டே, இன்றைய கல்வியாளர்கள் கற்றல் கற்பித்தலில் தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்திற்கு முக்கியத்துவம் அளித்து வருகின்றனர். தகவல் தொடர்புத் தொழில்நுட்பம் ஆசிரியரை மையமாகக்கொண்டு அமைந்த கற்றல் கற்பித்தல் நிலையை மாற்றி, மாணவர்களை மையமாகக்கொண்டு அமைந்த கற்றல் கற்பித்தல் சூழலை உருவாக்க உதவுகிறது (Trucano, 2005).

சிங்கப்பூர்க் கல்வி அமைச்சின் கல்வித் தொழில்நுட்பப் பிரிவு Educational Technology Division 10'T சிகரம் என்னும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பம்சார்ந்த கற்பித்தலியலைத் தொடக்கப்பள்ளிகளில் அமல்படுத்தியுள்ளது. இக்கற்பித்தலியலின் நோக்கம், தமிழ் மாணவர்களிடம் தமிழ்மொழியின் மீதுள்ள ஆர்வத்தைத் தூண்டுவதும் அவர்களின் பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய மொழித்திறன்களை மேம்படுத்துவதும் ஆகும்.

பின்னணி

2008-ஆம் ஆண்டில் கல்வித் தொழில்நுட்பப் பிரிவு, 10 பள்ளிகளில் 10'C என்னும் கற்பித்தலியலை முதன்முதலாகச் சீன மொழியில் நடைமுறைப்படுத்தியது. மாணவர்களை அகன்ற வாசிப்பிலும் (extensive reading) அதனையொட்டிய எழுதுதல் பயிற்சிகளிலும் ஈடுபடுத்தவேண்டும் என்பதே இதன் முதன்மை நோக்கங்களாக இருந்தது. அதே ஆண்டில் அப்பள்ளிகள் மேற்கொண்ட செயலாய்வுகள் இக்கற்பித்தலியலின் அடிப்படையில் கற்பிக்கப்பட்ட மாணவர்களது மொழித்திறன்

மேம்பட்டிருந்ததைச் சுட்டின. இதனை அடிப்படையாகக்கொண்டு, 2010-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் 10 பள்ளிகளில் மலாய் மொழியிலும், அதே ஆண்டில் மூன்றாம் தவணையில் 11 பள்ளிகளில் தமிழ்மொழியிலும் முறையே 10'M, 10'T கற்பித்தலியல் அறிமுகம் கண்டது.

2011-இல் இக்கற்பித்தலியலைச் செயல்படுத்தும் பள்ளிகளின் எண்ணிக்கை மூன்று மொழிகளுக்கும் அதிகரித்துள்ளது. தமிழ்மொழிக்கு மட்டுமே இக்கற்பித்தலியலை மேற்கொண்டுள்ள பள்ளிகளின் எண்ணிக்கை 26-ஆக உயர்ந்துள்ளது. இப்பள்ளிகளில் பயிலும் தொடக்கநிலை ஒன்றாம் வகுப்பு மாணவர்களுக்கு இக்கற்பித்தலியலையொட்டிய பாடங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இம்மாணவர்கள் இக்கற்பித்தலியலையொட்டிய செயலாய்வுகளிலும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

தொடக்கத்தில் வாசிப்பு, எழுதுதல் திறன்களில் மட்டுமே கவனம் செலுத்தப்பட்டன. தற்போது, 10'T சிகரக் கற்பித்தலியலில், பேசுதல் திறனை வளர்ப்பதற்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. சிங்கப்பூர் இல்லங்களில் தமிழ்மொழி பேசும் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்து வருவதால் பேச்சுத்தமிழில் பேசக்கூடிய வாய்ப்பை அவர்களுக்கு அளிப்பது அவசியமாகிறது. இதனால், பட உரையாடல் பயிற்சிகள் இக்கற்பித்தலியலில் இணைக்கப்பட்டுள்ளன.

<u>10'T சிகரக் கற்பித்தலியல்</u>



10'T சிகரக் கற்பித்தலியலில் ஒவ்வொரு பாட நேரமும் 50-50 விழுக்காடாக வகுத்துக்-கொள்ளப்பட்டுள்ளது. பாடங்கள் 50 விழுக்காடு ஆசிரியரின் வழிகாட்டுதலுடன்

நடத்தப்படும் கற்பித்தல் நடவடிக்கைகளுக்கும் அடுத்த 50 விழுக்காடு மாணவர்களை மையமாகக்கொண்டு அமைந்த சுய கற்றலுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன.

ஆசிரியருக்கு ஒதுக்கப்பட்ட 50 விழுக்காடு நேரத்தில் 'தமிழோசை' பயிற்றுகருவிகளில் உள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்-படுகின்றன. இந்நடிவடிக்கைகள் அனைத்தும் பாட அறிமுகம், பாட வளர்ச்சி, பாட முடிவு ஆகிய கூறுகளின் அடிப்படையில் நடத்தப்படும். குழுவேலை, இணைவேலை, பலதரப்பட்ட கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள், மதிப்பீடு போன்றவை இந்நடிவடிக்கைகளில் அடங்கும். மாணவர்களைச் சுய கற்றலுக்குத் தயார்படுத்தும் நோக்கில் இந்நடவடிக்கைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

மாணவர்களை மையமாகக்கொண்ட நடவடிக்கைகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் 50 விழுக்காட்டில் முதல் 25 விழுக்காடு அகன்ற வாசிப்புக்கு அல்லது பட உரையாடலுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. அகன்ற வாசிப்பின்போது மாணவர்கள் தங்கள் கற்றல் நிலைக்கு ஏற்ப வேறுபடுத்தப்பட்ட பகுதிகளைப் (Differentiated texts) படிப்பர். மாணவர்களுக்கு வாசிப்பில் உதவும் பொருட்டு, பதிவுசெய்யப்பட்ட குரல் வாசிப்புப்பனுவலை வாசித்துக்காட்டும்போது ஒவ்வொரு சொல்லும் ஒளியூட்டப்படும் (karaoke style). மேலும், ஒவ்வொரு சொல்லும் தனித்தனியே ஒலிக்கப்படும் வசதியும் இதில் இணைக்கப்பட்டுள்ளது. பட உரையாடலின்போது மாணவர்கள், பதிவுசெய்யப்பட்ட குரலைக் கேட்டுப் பயிற்சி பெறுவர்.

மீதமுள்ள 25 விழுக்காடு, மாணவர்கள் வாசித்துப் பழகிய பகுதியையோ பேசிப் பழகிய உரையாடலையோ ஒலிப்பதிவு செய்வதற்கும், படித்த சொற்களைத் தொடராகவோ வாக்கியங்களாகவோ அமைத்துத் தட்டச்சு செய்வதற்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. எல்லாப் பயிற்சிகளையும் பாட நேரத்துக்குள் செய்து முடிக்கும்படியாக 10'T சிகரம் என்னும் இணையத்தளம் உருவாக்கப்பட்டுள்ளது. இக்கற்பித்தலியலைச் செம்மையாக அமல்படுத்தும் நோக்கத்தில் மாணவர்களுக்குத் தேவையான பல பயிற்றுவளங்கள் இவ்விணையத்தளத்தில் ஏற்றம் செய்யப்பட்டுள்ளன.

<u>10'T சிகரத்தின் சிறப்பியல்புகள்</u>

10'T சிகர இணையத்தளத்தில் உள்ள ஒலிப்பதிவு செய்யும் வசதி மாணவர்களின் சுய மதிப்பீட்டிற்கு வகை செய்கிறது. மாணவர்கள் தங்களின் வாசிப்பை மட்டுமன்றிப் பேச்சையும் ஒலிப்பதிவுசெய்து அதனை மீண்டும் மீண்டும் கேட்டுத் தங்களைத் திருத்திக்கொள்ளும் வாய்ப்புக் கிடைக்கிறது. இதனால், அவர்கள் தங்களது வாசிப்புத் திறனையும் பேச்சுத்தமிழையும் மேம்படுத்திக்கொள்ள இயலுகிறது. இந்த ஒலிப்பதிவு வசதி மாணவர்கள் தாங்கள் படித்தவற்றை மீள்வலியுறுத்திக்கொள்ளப் பயன்படுகிறது.

மேலும், மாணவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனிக் கணினி நடவடிக்கைகளில் (1:1 computing) ஈடுபடுவதால் அவர்களது கற்றல் நிலைக்கு ஏற்ப ஆசிரியர்கள் பனுவல்களின் எண்ணிக்கையைக் கூட்டியும் குறைத்தும் கொடுக்கிறார்கள். இதனால், மாணவர்களால் தங்களது கற்றல் வேகத்திற்கேற்பக் கற்க இயலுகிறது. அதுமட்டுமன்றி, மாணவர்கள் தனிநிலையிலும் இணைநிலையிலும் தங்களது படைப்புகளை மதிப்பீடு செய்யவும் வகை செய்கிறது.

10'T சிகர இணையத்தளத்தில், திருத்துதல் (editing), கருத்துத் தெரிவித்தல் (feedback - commenting), தகுதிநிலை வழங்குதல் (rating) போன்ற வசதிகளும் இணைக்கப்பட்டுள்ளன. முரசு அஞ்சல் (MOE-Singapore) மென்பொருளில் உள்ள திரை விசைபலகையின் மூலம் (visual keyboard) மாணவர்கள் தாங்கள் கற்ற எழுத்துகள் / சொற்கள் ஆகியவற்றைக்கொண்டு சொல்/தொடர்/வாக்கியம் ஆகியவற்றை அமைப்பர். இது படித்தவற்றை உடனே பயன்படுத்தித் தெளிவுபெறத் துணைபுரிகிறது.

நிறைவான கற்றலுக்கு அளவான கற்பித்தல் (Teach Less Learn More) என்பதற்கேற்ப இக்கற்பித்தலியல் அமைந்துள்ளது. தகவல் தொடர்புத் தொழில்நுட்பம்சார்ந்த கற்பித்தலியல் என்றாலும், சிங்கப்பூர்க் கல்வி அமைச்சின் பரிந்துரைபடியே தேசிய பாடக்கலைத்திட்டத்தையொட்டிப் பாடங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. 'தமிழோசை' ஆசிரியர் கையேட்டிலும் பாடநூலிலும் பயிற்சிநூலிலும் பரிந்துரைக்கப்பட்ட அனைத்து நடவடிக்கைகளும் இக்கற்பித்தலியலில் இணைத்து நடத்தப்பட்டு வருகின்றன.

<u>10'T சிகர அமலாக்கம்</u>

10'T சிகரக் கற்பித்தலியலுக்கு ஒரு வாரத்தில் 80% பாடங்கள் (8-9 பாடவேளைகள்) கணினிச் சூழலில் கற்பிக்கப்பட வேண்டியது முக்கியம். வகுப்பறை நேரத்தின்போது ஒவ்வொரு மாணவருக்கும் தனித்தனி கணினி வசதி தேவை என்பதால் கணினிக்கூடங்களோ மடிக்கணினி வசதியோ அவர்களுக்குச் செய்துதரப்படவேண்டியது அவசியமாகிறது.

மேலும், 10'T திட்டத்தில் ஈடுபட்டுள்ள பள்ளிகளின் தமிழாசிரியர்களுக்கு வாசிப்பு, பட உரையாடல் பகுதிகளை உருவாக்குதல், பாடக்குறிப்பு எழுதுதல், வாராந்திரப் பாடத்திட்டத்தில் 10'T சிகரப் பாடக்கூறுகளை ஒருங்கிணைத்தல், செயலாய்வுத் திட்டதுக்குத் தயார்செய்தல் போன்ற பயிலரங்கங்களும் நடத்தப்பட்டு வருகின்றன. இக்கற்பித்தலியலை மேற்கொள்ளும் பள்ளிகளின் தமிழாசிரியர்கள் அனைவரும்

இவற்றில் முழுமையாகக் கலந்துகொள்வது அவசியமாகும். அதுமட்டுமன்றி, இந்தக் கற்பித்தலியலைச் சிறப்பாக அமல்படுத்தக் கல்வித் தொழில்நுட்ப அதிகாரிகள் அவ்வப்போது, ஆசிரியர்கள் நடத்தும் பாடங்களைச் சென்று பார்த்து அவர்களுக்குத் தேவைப்படும் உதவிகளையும் வழங்கவேண்டும். இந்த 10'T சிகரத்தை வெற்றிகரமாக அமல்படுத்தவேண்டுமெனில் பள்ளித் தலைமைத்துவ ஆதரவும் பள்ளி நிர்வாகத்தின் ஒத்துழைப்பும் புரிந்துணர்வும் இருத்தல் மிகவும் இன்றியமையாததாகும்.

10'T சிகர ஆசிரியர்கள் கூறிய கருத்துகளில் சில

10'T சிகரக் கற்பித்தலியலையொட்டிச் செயலாய்வுத்திட்டத்தை இப்போது ஆசிரியர்கள் மேற்கொண்டு வருகிறார்கள். அமலாக்கத்தின் முதல் 7 மாதங்களில் ஆசிரியர்கள் கண்ட விளைவுகள்பற்றிக் கூறினர். தங்கள் மாணவர்கள் தமிழ்மொழியைக் கற்பதில் ஆர்வம் காட்டியுள்ளதாகவும் மாணவர்களின் கற்றல் பயணத்தில் இக்கற்பித்தலியல் புதிய அனுபவங்களைப் பெற வாய்ப்புகளை ஏற்படுத்தியிருப்பதாகவும் அவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். கற்றலில் பின்தங்கிய மாணவர்களும்கூடத் தயக்கமின்றிப் பேசவும் கொடுக்கப்பட்டுள்ள பகுதிகளைச் சுயமாக வாசிக்கவும் முயல்கிறார்கள் என்பதையும் ஆசிரியர்கள் கூறினர். தொடக்கநிலை ஒன்றாம் வகுப்பு மாணவர்களது சொல்வளம் பெருகியுள்ளதாகவும் ஒளியூட்டப்பட்ட வாசிப்புப் பகுதிகளைப் படிப்பதால் மாணவர்களால் எளிதில் தாங்கள் கற்ற எழுத்துகளையும் சொற்களையும் நினைவில் பதியவைத்துக்கொள்ள முடிவதாகவும் ஆசிரியர்கள் கூறினர். அதுமட்டுமன்றி, தொடக்கநிலை ஒன்றாம் வகுப்பிலேயே மாணவர்கள் இயல்பாகத் தட்டச்சு செய்வதையும் ஆசிரியர்கள் சுட்டினர். இக்கற்பித்தலியல் மாணவர்களிடம் புத்தாக்கத்திறனையும் பேச்சுத்திறனையும் வளர்த்துள்ளதாகவும் ஆசிரியர்கள் கருதுகிறார்கள்.

ஆரம்பக்கட்ட வெற்றியின் காரணமாக அடுத்த ஆண்டு தொடக்கநிலை இரண்டாம், மூன்றாம் வகுப்புகளுக்கும் இக்கற்பித்தலியலை அறிமுகம் செய்யும் திட்டம் உள்ளது.

முடிவுரை

இந்தக் கற்பித்தியலுக்குக் கூடுதலான நேரமோ தயாரிப்போ தேவையில்லை. இது பாடக்கலைத்திட்டத்தைச் சார்ந்து அமைந்துள்ளதைப் பள்ளிகள் வரவேற்கின்றன. மாணவர்கள் சிலர் வீட்டிலும் இவ்விணையத்தளத்திற்குச் சென்று வாசிப்பில் ஈடுபட்டுள்ளனர் என்பதைப் பெற்றோர்கள் சிலர் குறிப்பிட்டிருந்தனர். சுருங்கக்கூறின், இந்த 10'T சிகரக் கற்பித்தலியல் மாணவர்களுக்குத் தமிழ்மொழி கற்றலில் ஒரு மகிழ்ச்சியான சூழலையும் அனுபவத்தையும் ஏற்படுத்தித் தந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

பண்பாடு தழுவிய கற்றலும் கற்பித்தலும்

Dr. ந. செல்லக்கிருஷ்ணன்
விரிவுரையாளர்
நன்யாங் தொடக்கக்கல்லூரி
சிங்கப்பூர்

பண்பாடு தழுவிய கற்றலும் கற்பித்தலும்

இன்றைய உலகமயமாக்கச் சூழலில் இளையர்களின் வாழ்க்கை திசைமாறிப் போகாமல் இருப்பதற்கும் மானுடப் பண்புகள் நிலைபெற்று வாழ்வதற்கும் பண்பாடு தழுவிய கற்றல் கற்பித்தல் அவசியமாகிறது. இத்தகைய முதன்மையும் சிறப்பும் பெற்ற பண்பாட்டைக் கற்பிப்பதற்கும் கற்பதற்கும் தாய்மொழிக் கல்வியே சிறந்த தளமாக அமைந்துள்ளது. இளையர்களுக்குப் பண்பாட்டுக் கல்வியின் இன்றியமையாமையை எவ்வாறு உணர்த்துவது என்பது பற்றியும் தமிழ் கற்றல் கற்பித்தலில் பண்பாட்டுக் கல்வியைக் கற்பிப்பதற்கு எத்தகைய உத்திகளைப் பயன்படுத்தலாம் என்பது பற்றியும் இக்கட்டுரை ஆராய முயலுகின்றது.

இன்றைய சூழலில் பண்பாட்டின் அவசியம்

'இளையர்களிடையே பரவிவரும் குற்றச்செயல்கள், பண்பாட்டுச் சீரழிவுகள் குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் 2010 ஆம் ஆண்டுப் புள்ளிவிவர ஆண்டறிக்கை வெகுவாகக் கவலை தெரிவித்துள்ளது'[10]. வன்முறைக் கலவரங்கள், போதைப்புழக்கம், பாலியல் வன்முறை, கொலை, திருட்டு, ஒழுக்கச்சிதைவுகள், கணினிக் குற்றங்கள், குண்டர் கும்பல் நடவடிக்கைகள், குடும்பப் புறக்கணிப்பு, முதியோர்களைக் கைவிடுதல் போன்ற சீரழிவுகள் இன்று உலகளாவிய அளவில் இளையர்களிடையே வெகுவேகமாகப் பரவிவருகின்றன. மேலும், மணமுறிவுகள், ஒற்றைப்பெற்றோர் குடும்பச்சூழல் போன்ற சமுதாயச்சூழல்களும் இளையர்களின் இப்போக்கிற்கு மற்றொரு வகையில் அடிப்படையாய் அமைந்து வருகின்றன. இத்தகைய மோசமான போக்கினைத் தடுத்து நிறுத்துவதும் அறநெறிப் பண்புகளை இளையர்கள் மனங்களில் ஆழமாக வேரூன்றச்செய்வதும் அரசாங்கம் மற்றும் கல்வியாளர்களின் முக்கியக் கடமையாக அமைந்துள்ளது. எனவேதான், அறிவு பெறுவதும் அறநெறியில் நிற்பதை வற்புறுத்துவதுமாகத் தாய்மொழிக்கல்வியின் முக்கியக் குறிக்கோள்கள் அமைந்துள்ளன.

> 'அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
> மக்கட்பண்பு இல்லா தவர்'[11]

[10]. http://www.unhabitat.org

[11]. திருக்குறள், 997

என்னும் வள்ளுவப் பேராசானின் கருத்தும் 'தனிமனித நடத்தை சிதறிப் போகாமல் தடுக்க வேண்டுமானால், அறநெறிக் கருத்துகளைச் சுற்றி அப்பாடங்கள் அனைத்தும் ஒன்றிணைக்கப்படவேண்டும்.'[12] என்னும் ஒரு ஜப்பானிய அறிஞர் கருத்தும் இங்கு நோக்கத்தக்கதன. எனவேதான், பல இன மக்கள் வாழும் சிங்கப்பூரில் தாய்மொழிக்கல்வி சிங்கப்பூர் அரசால் இங்குக் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. எனவேதான் இந்த வகையில் சிங்கப்பூரில் தமிழ்மொழி வாழும் மொழியாகவும் அரசாங்கத்தின் அதிகாரத்துவ மொழிகளில் ஒன்றாகவும் கோலோச்சி வருகின்றது. பலஇனச்சூழல் வாழ்க்கை முறையில் தமிழருக்கு அடையாளமாகவும் தமிழ்ப்பண்பின் பெட்டகமாகவும் தமிழ்மொழியே அமைந்துள்ளது. இவ்வாறு, தமிழ்மொழி கற்றலின் முக்கிய நோக்கங்கள் பண்பாட்டின் அடிப்படையில் அமைந்திருத்தலால் தனிமனிதப் பண்புகள் சிறந்தமுறையில் நிலைபெறுவதற்கும் சீரிய நாட்டுருவாக்கம் அமைவதற்கும் பண்பாடு தழுவிய கற்றலும் கற்பித்தலும் மிகவும் அவசியமாகின்றது.

பண்பாடு தழுவிய கற்றல் கற்பித்தல்

கருப்பொருள்கள் அடிப்படையில் சிங்கப்பூரில் தமிழ்மொழிப் பாடத்திட்டங்கள் அமைந்திருந்தாலும் வகுப்பறைகளில் நெகிழ்வுத்தன்மை மிக்க சுயசிந்தனைப்போக்கு மிகுந்த புத்தாக்கப் போதனை முறைகளை ஆசிரியர்கள் கையாளுவதற்கு எவ்விதத்தடையுமில்லை என்பது மிகவும் குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் பண்பாடு தழுவிய கற்றல் கற்பித்தலைத் தொடக்கக்கல்லூரி தமிழ் முதலாமாண்டு மாணவர்களுக்கு எவ்வாறு கற்பிக்கலாம் என்பதை இக்கட்டுரை விவரிக்கின்றது.

தேடலும் கூடலும்

மாணவர்கள் பண்பாட்டின் தேவையை அறிவதற்கும் பண்பாட்டு இழப்பினால் ஏற்படக்கூடிய பின்விளைவுகளையும், துன்பங்களையும் அறியச் செய்வதற்குத் 'தேடலும் கூடலும் என்னும் உத்தியைப் பயன்படுத்தலாம். மாணவர்கள் மத்தியில் அதிகமாககப் பரவிவரும் குற்றநடவடிக்கைகள் பற்றிய செய்திகளைச் செய்தித்தாள்களிலும் இணையப்பக்கங்களிலும் சேகரித்து வரச் சொல்லுதல் வேண்டும். அவ்வாறு சேகரித்த செய்திகளைக் குற்றங்கள் வாரியாகத் தொகுத்து அவை பற்றிய கலந்துரையாடல்களைக் குழுமுறையில் படைக்கச் செய்து விவாதங்கள் நடத்தி அத்தகைய குற்றங்களுக்கான அடிப்படைகளையும் பின்னணிகளையும் ஆராய்தல் வேண்டும். இத்தகைய செயல்களினால் தனிமனிதர்களுக்கும் சமூகத்திற்கும் ஏற்பட்டுள்ள பாதிப்புகளையும் பின்னடைவுகளையும் அலசி ஆராய்தல் வேண்டும். எதிர்காலங்களில் இவை போன்ற வன்முறைக்குற்றங்கள் ஏற்படாமல் தடுக்கக்

---

[12]. சுனேஸபுரோமகிகுச்சி, 'புத்தாக்க வாழ்வியல் கல்வி', ப.250

குடும்பமும் பள்ளியும் அரசாங்கமும் எத்தகைய நடைமுறைகளைக் கையாள வேண்டும் என்னும் மாணவர்களின் ஆலோசனைகளாக் கேட்டு ஆராய்தல் வேண்டும். இறுதியாக, ஆசிரியரின் தீர்வும் அதை அடைவதற்கான வழிமுறைகளும் மாணவர்களுக்கு நன்கு உணர்த்தப் பண்பாட்டு நெறிகளைக் கைக்கொள்ளுதலின் இன்றியமையாமையை வற்புறுத்தும் அடிப்படையில் அமைதல் வேண்டும்.

காட்சியும் மாட்சியும்

'காட்சியும் மாட்சியும்' என்னும் இந்த நடவடிக்கை பண்பாட்டுக் கூறுகளையும் குடும்ப உறவுமுறைச் சிக்கல்களையும் சமூக வாழ்க்கையின் நெறிமுறைகளையும் அடிப்படைகளாகக் கொண்ட குறும்படங்கள், காணொளித்துணுக்குகள் ஆகியவற்றைக் கொண்டது. யூட்யூப் (youtube) எனப்படும் ஊடகம் இன்றைக்கு இளையர்கள் மத்தியில் பெரிதும் செல்வாக்குப் பெற்ற ஒரு சாதனமாகத் திகழ்கின்றது. ஏராளமான தமிழ்க்குறும்படங்கள் தமிழ்த்திரைப்படத்துணுக்குகள், தமிழ்த் தொலைக்காட்சி நிகழ்ச்சித் துணுக்குகள், இணையம் முழுவதும் பரவிக் கிடக்கின்றன. இத்தகைய தரவுகளை ஒன்று திரட்டி அவற்றினை மாணவர்களைக் காணச் செய்தல் வேண்டும். பிறகு அந்தக் காட்சிகளின் மையக்கருத்துகளையும் பண்பாட்டுக் கூறுகளையும் அவை பற்றிய கலந்துரையாடல்கள் மூலம் மறந்து போகும் வாழ்வின் மாட்சிகளை மாணவர்களை உணரச் செய்தல் வேண்டும்.

இலக்கும் இலக்கியமும்

தொடக்கக் கல்லூரித் தமிழ் மாணவர்களுக்குப் பாடப்புத்தகங்கள் இல்லை என்பதால் கருப்பொருள்களுக்கேற்பப் பாடங்களைத் தேர்வு செய்து தாமே சுயமாக அமைத்துக் கொள்ளத் தொடக்கக்கல்லூரி ஆசிரியர்களுக்கு நிறைய வாய்ப்பு வசதிகள் உள்ளன. எனவே, இந்த அடிப்படையில் திருக்குறள் போன்ற நீதி இலக்கியங்கள், இராமாயணம் போன்ற காப்பியங்கள் முதலாக அன்றைய இலக்கியங்களும், சிறுகதை, நாவல், நாடகம், புதுக்கவிதை முதலிய இன்றைய இலக்கியங்களும் வற்புறுத்தும் பண்பாட்டுக் கூறுகளைத் தேர்ந்தெடுத்த பாடங்கள் மூலம் மாணவர்களை வாசிக்கச் செய்தும் கலந்துரையாடல் நிகழ்த்தியும் அவற்றின்மூலம் மாணவர்க்குப் பண்பாட்டின் மேன்மையினை அறியச் செய்யவேண்டும்.

முடிவுரை

பண்பாடுதழுவிய கற்றல் கற்பித்தல் மாணவர்களுக்கு இன்றைய சூழலில் எவ்வளவு அவசியமானது என்பது பற்றியும் அத்தகைய கற்றல் கற்பித்தலுக்குத் தமிழ்மொழி எவ்வாறு அடிப்படையாக அமைந்துள்ளது என்பது பற்றியும், பண்பாட்டுக் கல்வியைத் 'தேடல் கூடல்', 'காட்சியும் மாட்சியும்', 'இலக்கும் இலக்கியமும்' என்னும் நடவடிக்கைகள் மூலம் எவ்வாறு வகுப்பறைகளில் போதிக்கலாம் என்பது பற்றியும் இவவ்வாய்வுக் கட்டுரையில் தரப்பட்டுள்ளன.

எழுதுதல் திறனை வளர்த்தல்

தவமணி மோகனகிருஷ்ணன்
யீஷுன் தொடக்கப்பள்ளி

Understanding by Design பாடவரைவின்வழி, தொடக்கவகுப்பு 2 மாணவர்களுக்குக் கதை எழுதும் பாடம் நடத்தப்பட்ட விதமும் அதன் விளைவுகளும்பற்றி இப்பகிர்வு அமைகிறது.

1. Understanding by Design பாடவரைவைத் தழுவிப் பாடங்களைத் திட்டமிட்ட முறை.
2. ஒவ்வொரு கதைக்கும் தேவையான மொழித்திறன்கள், கற்றுக்கொள்ளக்கூடிய மொழிக்கூறுகள், அருஞ்சொற்கள், அறநெறிப்பண்புகள், சிந்தனைத் திறன்கள் மற்றும் கற்றல் நடவடிக்கைகள் ஆகியவை திட்டமிடப்பட்ட முறை.
3. தாம் படித்த கதைகளை மாணவர்கள் தங்கள் மொழிநடையில் திரும்ப எழுதிய கதைகள் காட்டப்படும். இக்கதைகளில் சில மின் கதைகளாக (e-stories) அமையும்.
4. மாணவர்களின் கதைகள் எல்லாம் ஒரே மாதிரி அமையாமல் இருப்பதற்காகக் கதைகளின் ஆரம்பம், முடிவு போன்றவற்றை மூலக் கதையிலிருந்து வேறுபடுத்தி எழுத மாணவர்கள் ஊக்குவிக்கப்பட்டதால் கதைகள் ஒன்றுக்கொன்று வேறுபட்டிருக்கும். மாணவர் தங்கள் திறனுக்கேற்ப எழுத ஆற்றுப்-படுத்தப்பட்டனர்.

மாணவர்கள் மேல்வகுப்புகளில் கட்டுரை எழுதும்போது தேவையான, பொருத்தமான சொற்களும் சொற்றொடர்களும் தெரியாமல் சிரமப்படுகின்றனர். மேலும், உணர்வுகளை விளக்குவதிலும் கதையைத் தொடர்ச்சியாக எழுதுவதிலும் அவர்களுடைய சிரமத்தைக் களைவதற்காக இம்முயற்சி மேற்கொள்ளப்பட்டது. படித்து, கலந்துரையாடிய கதையை அவர்கள் எழுதுவதால் இந்தச் சிரமம் குறைவதுடன் எழுதும் திறனையும் வளர்த்துக்கொள்ள ஏதுவாகிறது. இது மேல் வகுப்புகளில் எழுத்துத்திறனை இன்னும் மேம்படுத்திக்கொள்ள வழிவகுக்கிறது.

தமிழ்மொழியை இரண்டாம் மொழியாகக் கற்கும் சிங்கப்பூர் மாணவர்கள் பலருக்குக் கட்டுரை எழுதுதல் என்பது சிரமமான ஒரு செயலாகவே உள்ளது. கொடுக்கப்பட்ட படம் அல்லது தலைப்பை ஒட்டிய கருத்துகளைப் போதுமான அளவு எழுதுவது, பொருத்தமான சொற்களையும் சொற்றொடர்களையும் பயன்படுத்திச் சுவையாக

எழுதுவது என இரு நிலைகளிலும் அவர்கள் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். பெரும்பாலான மாணவர்களுக்கு எழுதுவதற்குக் கருத்துகள் இருந்தாலும் அவற்றைச் சரியாகவும் சுவைபடவும் எழுதுவதில்தான் சிரமம் உள்ளது. என்னுடைய இந்த முயற்சியில் கதையை மாணவர்கள் முன்னரே அறிந்திருப்பதால் அதை மீண்டும் எழுதும்போது நிரல்படவும் சுவைபடவும் இலக்கண மொழிக்கூறுகளைச் சரியாகவும் எழுதுவதில் மட்டும் அவர்கள் கவனம் செலுத்துவார்கள். இது அவர்களுடைய சிரமத்தைக் குறைத்து எழுதுவதில் ஆர்வத்தை ஏற்படுத்தும் என்று நம்பினேன். மேலும், மேல் வகுப்புகளில் நல்ல மொழிவளம் மிக்கக் கட்டுரைகளை எழுத இது பாலமாக அமையும்; வழிவகுக்கும் என்றும் எதிர்பார்க்கிறேன்.

"To begin with the end in mind means to start with a clear understanding of your destination. It means to know where you're going so that you better understand where you are now so that the steps you take are always in the right direction."
- Stephen R. Covey, The 7 Habits of Highly Effective People, 1989, p.98

வடிவமைப்பு வழியே புரிந்துகொள்ளுதல் - 'Understanding by Design' (Wiggins and McTighe, 1988) என்பது முடிவைக் கருத்தில்கொண்டு தொடங்கும் பாடவரைவாகும். இந்தப் பாடவரைவு மூன்று படிநிலைகளைக் கொண்டது. சிங்கப்பூர்த் தொடக்கப்பள்ளி ஆங்கில வகுப்புகளில் பெரிய கதைப் புத்தகங்களைப் பயன்படுத்தி வாசிப்பும் மொழியும் கற்பிக்கப்படுகின்றன. (STELLER - Strategies for English Language Learning and Reading) இந்த உத்திகளில் சிலவற்றைப் பயன்படுத்தக் கருதிய நான், இந்தப் படிநிலைகளை வழிகாட்டியாகக் கொண்டு என் பாடத்தைத் திட்டமிட முயற்சி செய்தேன். என் மாணவர்கள் தொடக்கநிலை நிலை இரண்டாம் வகுப்பில் பயிலுபவர்கள் என்பதால் பாடவடிவமைப்பின் கூறுகளை முழுமையாகப் பயன்படுத்தாமல் இதிலுள்ள மூன்று படிநிலைகளை மட்டும் இந்த முயற்சிக்குப் பயன்படுத்திக்கொண்டேன். தேர்வு அடிப்படையில் இல்லாமல் மாணவர்களது கற்றலுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவர்களது முழுமையான வளர்ச்சிக்கு உதவும் வகையில் இம்முயற்சியை மேற்கொண்டேன்.

படிநிலை 1 : விரும்பத்தக்க விளைவுகளை அடையாளம் காணுதல்

Stage 1 : Identify Desired Results

பாடமுடிவில் மாணவர்கள் என்ன அறிந்திருக்கவேண்டும்; என்னென்ன திறன்களைப் பெற்றிருக்கவேண்டும் என்று நிர்ணயித்தல். அதாவது என்னுடைய இலக்கு என்ன என்பதையும் அந்த இலக்கை அடைய மாணவர்கள் பெறவேண்டிய திறன்களையும் முடிவு செய்தல்.

படிநிலை 2 : கற்றலுக்கான ஆதாரம்

Stage 2 : Assessment Evidence

பாடமுடிவில் மாணவர்கள் நான் எதிர்பார்ப்பனவற்றைக் கற்றுக்கொண்டார்கள் என்பதை உறுதி செய்யும் ஆதாரங்கள் யாவை என்று முடிவு செய்தல்.

படிநிலை 3 : பாடத்திட்டம் / கற்றல் நடவடிக்கைகள்

Stage 3 : Plan Learning Experiences and Instruction

நான் கொண்ட இலக்கை நிறைவேற்றவும் மாணவர்களுக்கான கற்றல் விளைவுகளை அவர்கள் அடைய வழி செய்யும் கற்றல் அனுபவங்களை உறுதிப்படுத்தவும் கற்றலை எப்படிப் பயனுறுதி மிக்கதாகவும் முனைப்புடனும் நடத்துவது என்று திட்டமிடுதல்.

இதற்கு **WHERE TO** வடிவமைப்புச் சிறந்த வழிகாட்டியாக அமைந்துள்ளது.

W - *Where* is the project heading?
கற்றல் எதை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது?

H - How will the pupils be *"hooked"* (engaged)?
மாணவர்களைக் கற்றலில் ஈடுபடுத்துவது எவ்வாறு?

E - What opportunities will there be to be *equipped*, and to *experience* and *explore* key ideas?
முக்கியக் கருத்துகளைத் தெரிந்துகொள்ள மாணவர்களுக்கு என்னென்ன வாய்ப்புகள் தரப்படுகின்றன? அவர்கள் எவ்வாறு தயார் செய்யப்படுகிறார்கள்?

R - What will provide opportunities to *rethink*, *rehearse*, *refine* and *revise*? மாணவர்கள் சுயமாகச் சிந்திப்பதற்கும் பயிற்சி பெறுவதற்கும் செம்மைப்-படுத்துவதற்கும் மீள்நோக்குவதற்கும் வாய்ப்பு உள்ளதா?

E - How will pupils *evaluate* their work?
மாணவர்கள் எவ்வாறு தங்கள் வேலையை மதிப்பிடுவார்கள்?

T - How will the work be *tailored* to individual needs, interests and styles?
தனி மாணவரின் தேவைக்கும் விருப்பத்துக்கும் கற்றல் பாணிக்கும் ஏற்றவாறு கற்றல் நடவடிக்கைகள் அமைக்கப்பட்டுள்ளனவா?

O - How will the work be *organized* for maximal engagement and effectiveness?
முழுமையான ஈடுபாட்டுக்கு ஏதுவாகவும் பயனுறுதி உடையதாகவும் பாடம் எவ்வாறு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது?

Understanding By Design - Backward Design

<table>
<tr><th colspan="2">படிநிலை 1 : எதிர்பார்க்கும் விளைவுகள்</th></tr>
<tr><td colspan="2">▪ படித்த கதையை மீண்டும் எழுதுதல்
▪ கற்றுக்கொண்ட சொற்களைத் தாம் எழுதும் கதையில் சரியாகப் பயன்படுத்துதல்
▪ கற்றுக்கொண்ட இலக்கணம் மற்றும் மொழிக்கூறுகளைச் சரியாகப் பயன்படுத்துதல்
▪ மேல் வகுப்புகளில் நல்ல கற்பனைவளமும் மொழிவளமும் மிக்கக் கட்டுரை / கதை எழுதுதல்</td></tr>
<tr><td><u>நிர்ணயக்கப்பட்ட இலக்குகள்</u>
மாணவர்கள் கற்றுக்கொள்ள வேண்டியவை
▪ கதை படிப்பதற்குச் சுவையாக இருக்கவேண்டும்
▪ பிழைகள் இல்லாமல் எழுதவேண்டும்
▪ கற்றுக்கொண்ட சொற்களையும் சொற்றொடர்களையும் பயன்படுத்தவேண்டும்</td><td><u>அத்தியாவசியமான கேள்விகள்</u>
▪ கதையை மாற்றி எழுதச் செய்வதா? வேண்டாமா?
▪ மாணவர்கள் என்னென்ன திறன்களைப் பெறவேண்டும்?
▪ எந்தெந்தச் சொற்களையும் சொற்றொடர்களையும் வலியுறுத்தவேண்டும்?</td></tr>
<tr><th colspan="2">படிநிலை 2: கற்றலுக்கான ஆதாரங்கள்</th></tr>
<tr><td><u>மாணவர்களின் செயல்பாடுகள்</u>
▪ கதையில் உள்ள சொற்களை அடையாளம் கண்டு சரியாக வாசித்தல்
▪ படித்த கதையைத் திரும்பக் கூறுதல்
▪ கதையைக் கூறும்போது கதையில் வரும் சொற்களைச் சரியாகப் பயன்படுத்துதல்
▪ கற்றுக்கொண்ட இலக்கண, மொழிக்கூறுகளைச் சரியாகப் பயன்படுத்திப் பேசுதல்; கதை கூறுதல்; நடித்துக் காட்டுதல்
▪ எழுதும்போது சொற்களையும் இலக்கணம் மற்றும் மொழிக்கூறுகளைச் சரியாகப் பயன்படுத்துதல்
▪ அனைவரும் கற்றல் நடவடிக்கையில் ஆர்வத்துடனும் தன்முனைப்புடனும் பங்கெடுத்தல்
▪ மதிப்பீடு செய்து கருத்துரைத்தல்</td><td><u>பிற ஆதாரங்கள்</u>
▪ எழுதுவதற்கு முன்பான நடவடிக்கைகளில் மாணவர்களின் செயல்திறன்கள்
▪ எழுதும்போது மாணவர்களுடைய செயல்பாடுகள்
▪ மாணவர்கள் எழுதிய கதைகள்
▪ மாணவர்களின் மதிப்பீடுகள்
▪ ஆசிரியர் மதிப்பீடுகள்</td></tr>
</table>

படிநிலை 3: கற்றல் திட்டம்

பாடத்தில் இடம்பெற்ற கற்றல் நடவடிக்கைகள்

- முன் நடவடிக்கை

  - கதையை அல்லது கதாபாத்திரங்களை அறிமுகப்படுத்தும் வகையில் ஒவ்வொரு கதைக்கும் வேறுபட்ட முன்நடவடிக்கையை நடத்துதல்.

- ஆசிரியரும் மாணவர்களும் சேர்ந்து கதையை வாசித்தல், உரையாடுதல்

  - மாணவர் கதையின் தலைப்பு, அட்டைப்படம் ஆகியவற்றைப் பார்த்துக் கதையைப்பற்றி முன்னுரைப்பார்கள்; கதையைப் படிக்கும்போது அடுத்தடுத்து நடக்கப்போவதைப்பற்றி ஊகித்துப் பேசுவார்கள்.

- மாணவர்கள் அருஞ்சொற்களை அறிந்துகொள்ளுதல்

  - இரண்டாவது முறை கதையை வாசிக்கும்போது ஆசிரியர் மறைத்து இருக்கும் சொற்களை ஊகித்துச் சரியாகச் சொல்லுவார்கள். ஆசிரியர் உதவியுடன் சொற்களின் பொருள் அவற்றைப் பயன்படுத்தும் முறை முதலியவற்றை அறிந்துகொள்வார்கள்.

- மாணவர்கள் இலக்கணம் மற்றும் மொழிக்கூறுகளை அறிந்துகொள்ளுதல்

  - மிக எளிமையான இலக்கணம் மற்றும் மொழிக்கூறு சார்ந்த அம்சங்களைக் கற்றுக்கொள்வார்கள்.

- மாணவர்கள் கதையின் கருத்து, முடிவுபற்றிச் சிந்தித்தல், கலந்துரையாடுதல்

  - கதையிலிருந்து அறிந்துகொள்ளக்கூடிய கருத்துகள்பற்றிப் பேசுவார்கள். கதையின் முடிவுபற்றிக் கருத்துக் கூறுவார்கள். வேறு எவ்வாறு மாற்றலாம் என்று கூறுவார்கள். மாணவர்கள் செய்யும் மாற்றங்கள் நன்னெறிக் கருத்துக்கு முரணாக இருந்தால் அதுபற்றி மாணவர்களுடன் கலந்துரையாடிச் சரியான நன்னெறிக்கருத்தை ஆசிரியர் வலியுறுத்துவார். மாற்றம் செய்யவேண்டும் என்பது கட்டாயமில்லை. முக்கியமாக, எழுதும்போது அவர்கள் தாங்கள் விரும்பியவாறு முடிவை அமைக்கலாம். கதைத் தொடக்கமும் மாறுபடலாம்.

- மாணவர்கள் விரும்பியவாறு மாற்றம் செய்தோ செய்யாமலோ கதையைத் திரும்பக் கூறுதல்.

- மாணவர்கள் கதையை நடித்துக்காட்டுதல்

  - மாணவர்கள் தங்கள் குழுவினருடன் கலந்துரையாடிய பிறகு கதையை நடித்துக்காட்டுவார்கள். ஒவ்வொரு குழுவினரும் எவ்வாறு தங்கள் கதையை அமைக்க விரும்புகின்றனர் என்று அறிந்து ஆசிரியர் உதவுவார்.

- மாணவர்கள் சொல்லும் கதையை ஆசிரியர் பெரிய தாளில் கதை எழுதுதல் (வகுப்பு உருவாக்கக் கதை)
  - மாணவர்கள் கூறுவதை ஆசிரியர் எழுதும்போது இலக்கணம், மொழிக்கூறு சார்ந்த அம்சங்களை வலியுறுத்துவார்.
- ஆசிரியரும் மாணவர்களும் சேர்ந்து எழுதிய கதையை வாசித்தலும் உரையாடுதலும்
  - ஆசிரியரும் மாணவர்களும் கதையை வாசிப்பார்கள். முதல் கதைக்கும் இந்தக் கதைக்கும் இடையிலுள்ள வித்தியாசங்களை மாணவர்கள் கூறுவார்கள் அல்லது ஆசிரியர் அறிந்துகொள்ளச் செய்வார்.

- மாணவர்கள் குழுவாகக் கதை எழுதுதல்
  - மாணவர்கள் தங்கள் குழுவினருடன் சேர்ந்து பெரிய தாளில் கதை எழுதி அதற்கு ஏற்ற படம் வரைவார்கள். கதையை எழுதி முடித்த பிறகு அந்தக் கதையை மற்றவர்களுக்கு வாசித்துக் காட்டுவார்கள்.

- மாணவர்கள் தனியாகக் கதை எழுதுதல்
  - மாணவர்களின் திறனுக்கு ஏற்ப தனியாகவோ இணையாகவோ கதையை எழுதுவர்.

- திறன் அடிப்படையிலான கற்பித்தலுக்கான நடவடிக்கை
  - திறன் குறைந்த மாணவர்களுக்கு ஆசிரியர் கூடுதல் உதவி செய்வார். மாணவர்கள் கூறும் கதையை ஆசிரியர் பெரிய தாளில் எழுதியபிறகு ஆசிரியரின் உதவியுடன் கதையை வாசிப்பார்கள். பின்னர் மாணவர்கள் கதைக்கு ஏற்ற படத்தை வரைவார்கள்.

  - மீள்திறன் மாணவர்களுக்குக் கூடுதல் தெரிவுகள் கதையை ஒரு கதாபாத்திரத்தின் கண்ணோட்டத்தில் எழுதுதல்; தன்னை ஒரு கதாபாத்திரமாகப் பாவித்து எழுதுதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். ஆனால், தொடக்கநிலை இரண்டாம் வகுப்பு மாணவர்களாக இருப்பதால் இந்தத் தெரிவுகள் இம்முயற்சியில் பயன்படுத்தப்படவில்லை.

- மாணவர் மீண்டும் கதையைப் படிக்கப் பார்வைக்கு வைத்தல்
  - முதலில் படித்த கதைப்புத்தகமும் மாணவர்கள் எழுதிய கதைகளும் வகுப்பறையில் மாணவர்கள் படிப்பதற்கு வைக்கப்படும்.
- கதையை அச்சிட்டுக் கொடுப்பதன் மூலம் வகுப்பறைக்கு அப்பாலும் வாசிக்க வாய்ப்பளித்தல்
  - ஆசிரியர் கதைகளை அச்சிட்டு எல்லா மாணவர்களுக்கும் கொடுப்பார். மாணவர்கள் வகுப்பறைக்கு அப்பாலும் வீட்டில் குடும்ப உறுப்பினர்களோடும் கதையை வாசிப்பார்கள்.

- கதையை மதிப்பீடு செய்து கருத்து உரைத்தல்

  - ஆசிரியர், சக மாணவர்கள், சுய மதிப்பீடு என மூன்று நிலைகளில் மாணவர்கள் எழுதிய கதைகள் மதிப்பீடு செய்யப்படும். மாணவர்களுக்கான மதிப்பீட்டு வழிகாட்டி மிக எளிய முறையில் அமைந்திருக்கும். மாணவர்கள் மதிப்பீடு செய்த பிறகு ஆசிரியர் தம் கருத்தைக் கூறுவார். ஆசிரியருக்கும் மாணவர்களுக்கும் இடையில் வேறுபாடு இருந்தால் அதுபற்றி ஆசிரியர் மாணவர்களுக்கு விளக்கிச் சரியாக மதிப்பீடு செய்ய வழிகாட்டுவார்.

  மாணவர்களுக்குரிய மதிப்பீட்டு வழிகாட்டி

கதை எப்படி இருந்தது?	
▪ கதை முழுமையாக இருந்தது ▪ கதை நன்றாக இருந்தது ▪ படித்த சொற்கள் நிறைய இருந்தன ▪ பிழைகள் இல்லை	மிக நன்று ☆ ☆ ☆ ☆
▪ கதை முழுமையாக இருந்தது ▪ கதை நன்றாக இருந்தது ▪ படித்த சொற்கள் சில இருந்தன ▪ பிழைகள் குறைவு	நன்று ☆ ☆ ☆
▪ கதை முழுமையாக இல்லை ▪ கதை ஓரளவு நன்றாக இருந்தது ▪ படித்த சொற்கள் மிகவும் குறைவாக இருந்தன ▪ நிறையப் பிழைகள் இருந்தன	முயற்சி செய் ☆ ☆
▪ கதை முழுமையாக இல்லை ▪ கதை புரியவில்லை ▪ படித்த சொற்கள் மிகவும் குறைவாக இருந்தன ▪ நிறையப் பிழைகள் இருந்தன	நிறைய முயற்சி செய் ☆

- மின்கதை உருவாக்குதல்

  - மாணவர்கள் தனியாகவோ இணையாகவோ தட்டச்சு செய்து தேவையான படங்களை இணைத்து மின்கதைகள் தயாரிப்பர்.

பயன்கள்

- படித்திராத எழுத்துகள் அமைந்த சொற்களை அடையாளம் கண்டு வாசிக்கவும் சொற்களின் பொருளை அறிந்து பயன்படுத்தவும் மாணவர்கள் அறிந்து-கொண்டார்கள்.

- மாணவர்கள் கதைபற்றி உரையாடியபோதும் கதையைத் திரும்பக் கூறியபோதும் நடித்துக்காட்டியபோதும் எழுதியபோதும் பேசுவதற்கு நிறைய வாய்ப்புகள் ஏற்பட்டதோடு புத்தாக்கத்திறனுக்கும் வழி இருந்தது.

- படித்த கதையை மீண்டும் எழுதியதால் கருத்துகள் மாணவர்களுக்குப் பழக்கமானவையாக அமைந்தன. இதனால், கருத்துகளைச் சேகரித்தல், நிரல்படுத்துதல் போன்ற சிரமங்கள் வெகுவாகக் குறைந்தன. இதனால், கற்றுக்கொண்ட சொற்களையும் இலக்கண, மொழிக்கூறுகளையும் சரியாகப் பயன்படுத்துவதில் கூடுதல் கவனம் செலுத்த முடிந்தது.

- சிங்கப்பூர்ப் பள்ளிகளில் தகவல் தொடர்புத் தொழிற்நுட்பத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. அதற்குத் தயாராகும் வகையில் மாணவர்கள் புத்தகத்தைத் தட்டச்சு செய்து தயாரித்தார்கள்.

- மாணவர்கள் பலதரப்பட்ட கதைகளைப் படிக்கவும் மதிப்பீடு செய்யவும் முடிந்தது.

- மதிப்பீடு செய்து கருத்துரைக்கும் நடவடிக்கையால் மாணவர்கள் தங்கள் திறன் நிலையை அறிந்துகொள்ளவும் மேம்படுத்திக்கொள்ளவும் முடிந்தது. மேலும், மதிப்பீடு செய்யும்போது முழுமையாக எழுதப்பட்ட கதை மட்டும் அல்லாமல் மாணவர் அறிந்துகொண்ட சொற்கள், இலக்கணக்கூறுகள், கதையைத் திரும்பக் கூறுதல், குழுவாக இணைந்து செயல்படும் பண்புகள் முதலியவையும் மதிப்பீடு செய்யப்பட்டதால் மாணவர்களுக்கு முழுமையானதொரு மதிப்பீடு கிடைத்தது.

- மாணவர்கள் தங்கள் திறனுக்கு ஏற்ற வேறுபட்ட கற்றல் நடவடிக்கையில் ஈடுபட்டார்கள்.

- மாணவர்களுக்குத் தமிழ்மொழிக் கற்றலில் ஈடுபாடு இயல்பாக அதிகரித்தது.

- விளைவுகளையும் அவற்றுக்கான ஆதாரங்களையும் ஆசிரியர் முன்னரே நிர்ணயம் செய்திருந்ததால் மாணவர்களின் கற்றலை ஒவ்வொரு நடவடிக்கையின்போதும் ஆசிரியரால் உடனுக்குடன் மதிப்பீடு செய்ய முடிந்தது. தேவைப்பட்டால் மாற்றங்கள் செய்துகொள்ளவும் மீண்டும் கற்பிக்கவும் ஏதுவாக இருந்தது.

- தேவையான பயிற்றுகருவிகளை முன்கூட்டியே தயார் செய்துகொள்ள முடிந்தது.

மேற்கோள் சான்றாதாரங்கள்

1. http://xnet.rrc.mb.ca/glenh/understanding_by_design.htm
2. http://pixel.fhda.edu/id/six_facets.html
3. http://www.uintahbasintah.org/papers/ububydpresentation.pdf
4. http://www.mcgill.ca/files/ost/understanding_by_design_unit_template.doc

கற்பனை வளத்தையும் படைப்பாக்கத் திறனையும் பயன்படுத்தி எழுதுதல் - செயல் ஆய்வுத் திட்டம்

E6 குழுமப் பள்ளிகளின் ஆசிரியர்கள்
சிங்கப்பூர்.

பாரதி மனோன்மணி	-	தெம்பினிஸ் வடக்குத் தொட்டக்கப்பள்ளி
விரோனிக்க நாயுடு	-	செயிண்ட் ஹில்டாஸ் தொடக்கப்பள்ளி
புஷ்பலதா யாதவன்	-	ஈஸ்ட் வியூ தொடக்கப்பள்ளி
புஷ்பலதா வேலு	-	பாசிர் ரிஸ் தொடக்கப்பள்ளி
மகாதேவி பாலசுந்தரம்	-	மேனாள் E6 குழும செயல் ஆய்வுத் திட்டக் குழுத் தலைவி - செயிண்ட் ஹில்டாஸ் தொடக்கப்பள்ளி

ஒரு செயல் ஆய்வு திட்டத்தை மேற்கொள்வதற்கு முக்கியமான கூறு ஒரு பிரச்சினையை அடையாளம் காணுதல் ஆகும். அடையாளம் காணும் பிரச்சினைக்குத் தீர்வு காண சில படிகளையும் ஆராய்ச்சிகளையும் மேற்கொள்வதே ஒரு செயலாய்வுத் திட்டமாகும்.

பிரச்சினையை அடையாளம் கண்ட பிறகு ஆய்வில் யார் பங்கெடுக்கிறார்கள், ஏன் பங்கெடுக்கிறார்கள், எத்தனை பேர் பங்கெடுக்கிறார்கள் என்பதைத் தீர்மானிக்க வேண்டும். மேலும், ஏன் இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது என்றும் நியாயப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இத்துடன் இந்த ஆய்வை எந்தக் காலக்கட்டத்தில் மேற்கொள்வது என்பதையும் தீர்மானிக்க வேண்டும். அதற்கான காரணத்தையும் நிர்ணயித்துக் கொள்வது அவசியமாகும்.

இவை அனைத்தையும் அலசி ஆராய்ந்த பிறகு, ஆய்வை மேற்கொள்வதற்கான வினாக்களை ஊகித்துத் திட்டமிட வேண்டும். இவ்வினாக்களைக் கருத்தில் கொண்டு, இவ்வாய்வை மேற்கொள்வதற்கு உறுதுணையாக அமையும் மதிப்பீட்டுக் கருவிகளைப் பரிசீலிக்க வேண்டும். ஆய்வை அமல்படுத்தும் கால அளவில் இவ்வினாக்களே வழிகாட்டிகளாக அமையும். ஆகவே, இவ்வினாக்களைத் தீவிரமாகக் கலந்தாலோசித்துத் தீர்மானிப்பது இன்றியமையாததாகும்.

ஆய்வின் இறுதியில் இவ்வினாக்கள் இவ்வாய்வை விமர்சனம் செய்ய உதவும் கருவியாகப் பயன்படுத்தப்படும். நடத்தப்படும் விமர்சனத்தின்வழி இவ்வாய்வு எந்த

நிலையில் உள்ளது, என்ன விளைவுகளை விளைவித்து உள்ளது, தற்போது உள்ள நிலையிலிருந்து அடுத்த நிலைக்கு எவ்வாறு செல்வது போன்றவற்றைப் பகுத்து ஆராய உதவும்.

ஆய்வின் முன்னோடியாக துணைநூல்களைப் படித்தல்

ஓர் ஆய்வில் ஈடுபடுவதற்குமுன் அந்த ஆய்வுக்குச் சம்மந்தப்பட்ட முன்னோடித் துணைநூல்களைப் படித்தல் அவசியமாகும். இது ஓர் ஆய்வில் ஈடுபடுவதற்குமுன் மேற்கொள்ள வேண்டிய முக்கியமான நடவடிக்கையாகும். இதற்குமுன் யாரேனும் இதுபோன்ற அல்லது இதனையொத்த ஆய்வை மேற்கொண்டிருந்தால் அது பற்றிய முழு விவரமும் இந்த நூல்களில் குறிப்பிடப்பட்டிருக்கும். அது நாம் இந்த ஆய்வைச் சிறந்த முறையில் மேற்கொள்வதற்குத் துணைபுரியும்.

ஆய்வின் முன்னோடியாகத் துணைநூல்களைப் படிப்பதற்குக் முக்கிய காரணம் அந்த ஆய்வு பற்றிய நுணுக்கங்களையும் உத்திகளையும் திரிபர அறிய இது வழி வகுப்பதே ஆகும். மேலும் ஆய்வில் ஈடுபடுவதற்கு முன் மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகள், கருத்திற் கொள்ள வேண்டிய விவரங்கள், செய்ய வேண்டியவை என்னென்ன, செய்யக்கூடாதவை என்னென்ன என்பன போன்ற அனைத்து விவரங்களும் இதில் அடங்கியிருக்கும்.

முன்னோடித் துணைநூல்களைத் தேர்ந்தெடுக்கும்போது நம் ஆய்வுக்கு ஏற்ற தகவல்களைத் தேர்ந்தெடுத்து வாசிக்க வேண்டும். அது மட்டுமல்ல, தேர்ந்தெடுக்கப்பட்ட நூல்களில் உள்ள எல்லா கருத்துகளும் நம் ஆய்வுக்கு உரியதாக அமைந்துவிடாது. அதனால், ஆய்வுக்கு வேண்டிய விவரங்களை நாம் கண்டறிந்து வாசித்து மனத்தில் நிறுத்திக்கொள்ள வேண்டும். அவ்வாறு வாசிக்கும்போது அவற்றில் உள்ள குறை நிறைகளையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். மேலும், அதன் விளைவுகளைச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். அதன் பின்னரே ஆய்வில் இறங்க வேண்டும்.

முன்னிலைக் கருத்துக்கணிப்பு / பின்னிலைக் கருத்துக்கணிப்பு
(Pre-Intervention Survey / Post – Intervention Survey)

மாணவர்களின் பின்புலனை அறிய முன்னிலைக் கருத்துக்கணிப்பு (Pre-Intervention) Survey) நடத்தப்பட்டது. பெற்றோரின் கல்வித் தகுதியை மையமாகக் கொண்டு, அவர்களின் ஆதரவு, பிள்ளைகளின் தமிழ் ஆர்வம், தன்னம்பிக்கை போன்றவற்றைக் கணிப்பதே இதன் முக்கிய நோக்கம் ஆகும். மேலும் ஒரு மாதத்தில் மாணவர்கள் எத்தனை தமிழ்க் கதைப்புத்தகங்களை இரவல் பெறுவார்கள், அவர்களுக்குத்

தமிழ்மொழி கற்பதற்கோ கட்டுரை எழுதுவதற்கோ கடினமாக இருக்கிறதா போன்ற கேள்விகள் அடங்கிய பாரம் பூர்த்தி செய்யக் கொடுக்கப்பட்டது.

மூன்று பாடத் தொகுதிகளை (Lesson Packages) நடத்திய பிறகு அதே கேள்விகள் அடங்கிய பின்னிலைக் கருத்துக்கணிப்பு (Post – Intervention Survey) மேற்கொள்ளப்பட்டது. இதில் சில முக்கிய கேள்விகளான மாணவர்களின் தமிழ்மொழி ஆர்வம், கட்டுரை எழுதுவதில் தன்னம்பிக்கை, செயல் ஆய்வுத் திட்டத்திற்குப் பின் அவர்கள் கட்டுரை மேல் கொண்டிருக்கும் எண்ணங்களும் மனப்போக்கும் தெரிய வந்தது.

கேள்விகளின் அமைப்புப் பின்வருமாறு:

பகுதி 1

கேள்விகளைப் படித்து, முறையாக புட்குறியிட வேண்டும்.

ஆம் அல்லது இல்லை.

பகுதி 2

கேள்விகளைப் படித்து, முறையான கட்டத்தில் புட்குறியிட வேண்டும்.

வலுவாக உடன்படுகிறேன் (5) / உடன்படுகிறேன் (4) / நடுநிலை (3/ மறுக்கிறேன் (2) / வலுவாக மறுக்கிறேன் (1)

பின்வரும் அட்டவணையில் முன்னிலைக் கருத்துக்கணிப்பிலிருந்தும் பின்னிலைத் தேர்வுக்கணிப்பிலிருந்தும் ஒரு கேள்வியின் முடிவை ஆராயலாம்.

முன்னிலைக் கருத்துக்கணிப்பு (Pre-Intervention Survey)						
• உனக்குத் தமிழ்மொழி பிடிக்குமா?						
	பள்ளி 1	பள்ளி 2	பள்ளி 3	பள்ளி 4	மொத்தம்	மொத்தம் %
ஆம்	6	8	8	11	33	94
இல்லை	0	0	0	2	2	6

பின்னிலைக் கருத்துக்கணிப்பு (Post-Intervention Survey)						
• உனக்குத் தமிழ்மொழி பிடிக்குமா?						
	பள்ளி 1	பள்ளி 2	பள்ளி 3	பள்ளி 4	மொத்தம்	மொத்தம் %
ஆம்	6	8	8	13	35	100
இல்லை	0	0	0	0	0	0

இவ்விரண்டு அட்டவணைகளையும் ஆராயும்போது, இச்செயல் ஆய்வுத் திட்டத்திற்குப் பின் மாணவர்களுக்குத் தமிழ்மொழி மேல் ஆர்வமும் தன்னம்பிக்கையும் ஏற்பட்டிருக்கிறது என்பது தெள்ளத் தெளிவாகிறது.

மற்றும், "என்னால் கட்டுரையைத் தன்னம்பிக்கையோடு எழுத முடியும்," என்ற கேள்வி முதலில் முன்னிலைக் கருத்துக்கணிப்பில் கேட்டபோது, 3% மாணவர்கள் எந்தவொரு பதிலையும் அளிக்கவில்லை. அதிலிருந்து மாணவர்களுக்குக் கட்டுரை எழுதுவதில் சிரமம் இருந்திருக்கக்கூடும் எனத் தெரிய வந்தது. ஆனால் இதே கேள்வியைப் பிறகு பின்னிலைக் கருத்துக்கணிப்பில் கேட்டபோது, அதே மாணவர்கள், "என்னால் கட்டுரையை இப்போது எழுத முடியும்," என்று கருத்துத் தெரிவித்திருந்தார்கள். மேலும் எல்லா மாணவர்களும், "படக்கட்டுரையின் முடிவைத் தன்னிச்சையாகப் பல உத்திகளைக் கொண்டு எழுத முடியும்," என்றும் விடை அளித்திருந்தார்கள். இவ்விரண்டு கருத்துக் கணிப்புகளின்வழி மாணவர்கள் இந்த ஆய்வு முறையின் மூலம் தங்கள் கட்டுரைகளைக் கற்பனை வளத்துடன் எழுத முடிந்தது என்பதை வலியுறுத்தியுள்ளனர்.

<u>செய்முறை</u>

மாணவர்களின் தரம் அறிய ஒரு முன்னிலைத் தேர்வு கொடுக்கப்பட்டது. ஆசிரியர்கள் துணையின்றி மாணவர்கள் 100 சொற்களுக்குக் குறையாமல் ஒரு படக்கட்டுரையை எழுதினர். ஆசிரியர்கள் முழுக் கட்டுரையைத் திருத்தித் தேர்வு மதிப்பீட்டு முறையில் மதிப்பெண்கள் வழங்கினர்.

மாணவர்களுக்குப் படக்கட்டுரையில் ஏற்படும் சிரமங்களைப் போக்குவதற்காகவும் கட்டுரையின் முடிவுகளை மேம்படுத்தி எழுதுவதற்காகவும் மூன்று பாடங்கள் தயாரிக்கப்பட்டன. ஒரு கதையைப் பலதரப்பட்ட முடிவுகளைக் கொண்டு எழுதலாம் என்ற பொது நோக்கத்துடன் இம்மூன்று பாடங்கள் அமைக்கப்பட்டிருந்தாலும், சிறப்பு நோக்கங்கள் வேறுபட்டிருந்தன.

<u>பாடம் 1</u>

மாணவர்கள் புத்தாக்கச் சிந்தனையுடனும் இனிய சொற்றொடர்களுடனும் தங்கள் கட்டுரையின் முடிவை எழுத கற்பர் என்ற சிறப்பு நோக்கத்துடன் இப்பாடம் தயாரிக்கப்பட்டது. மாணவர்கள் `நற்செயல்` என்ற படக்கட்டுரையை எழுதினர். சக மாணவர்களின் கருத்துகளையும் கற்பனைகளையும் ஏற்க மாணவர்கள் கற்றறிந்தனர். மேலும், ஒரு கதைக்குப் பலதரப்பட்ட முடிவுகள் உள்ளன என்பதையும் அவர்கள் அறிந்து செயல்பட்டனர். மூன்று படிநிலைகளைக்கொண்ட நடவடிக்கைகளில் மாணவர்கள் மிக ஆர்வத்தோடு ஈடுபட்டனர். முடிவுகளை மேம்படுத்தும் நோக்கில்

நடவடிக்கைகள் அமைந்திருந்தன. படக்காட்சி, உணர்ச்சிகளின் வெளிப்பாடு, தயாரிப்பாளர் பாத்திரமேற்று நடித்தல் போன்ற நடவடிக்கைகள் 'Round Robin', 'Think-Pair-Share' போன்ற கூடிக்கற்றல் உத்திகள் வழி மாணவர்கள் பல கோணங்களில் சிந்தித்தனர். கற்பனை திறனுடன் படங்களின் சம்பவங்களைக் கோர்வைப்படுத்திக் கதையை உருவாக்கினர். பாட முடிவாக, மாணவர்கள் தங்களைக் கவர்ந்த முடிவைத் தேர்ந்தெடுத்து அல்லது மாறுபட்ட முடிவை உருவாக்கித் தங்கள் கட்டுரைகளை எழுதினர்.

பாடம் 2

மாணவர்கள் கதைக்கு ஏற்ற பொருத்தமான முடிவுகளை எழுதக் கற்றுக்கொண்டனர். பாட அறிமுகத்தில் ஆசிரியர் ஒலிப்பதிவு செய்துள்ள கதைப் பகுதியை மாணவர்கள் கேட்டுக் கதையின் முடிவை ஊகித்தனர். பிறகு ஒரு கதைக்கும், கட்டுரைக்கும் முடிவு எவ்வளவு முக்கியம் என்பதைக் கற்றனர். முன்னுரைக்கும் முடிவுரைக்கும் தொடர்பு இருக்க வேண்டும், கதைக்குப் பொருத்தமான முடிவாக இருக்க வேண்டும் என்ற அடிப்படையான திறனை உணர்ந்து செயல்பட்டனர். மாணவர்கள் குழுவாகவும் இணையாகவும் தனியாகவும் செயல்பட்டுக் கதையின் முடிவைச் சிரமமின்றி எழுத மூன்று படிநிலைகளைக்கொண்டு அமைந்த நடவடிக்கைகள் துணைபுரிந்தன. Rubrics என்ற மதிப்பீட்டுத் தாளைக் கொண்டு மாணவர்கள் வழங்கப்பட்ட மூன்று முடிவுகளும் பெறும் தகுதிநிலையை குழு நிலையில் கலந்துரையாடி முடிவு செய்தனர். குழுத்தலைவர் முடிவுக்கு வழங்கியிருக்கும் தகுதிநிலையையும் கூறி அதற்கான காரணத்தையும் கூறினார். மற்ற குழுவினர் அந்தக் குழு வழங்கியிருக்கும் தகுதிநிலை தங்களது தகுதிநிலையுடன் ஒத்துள்ளதா என்று பார்த்துக் கருத்துத் தெரிவித்தனர். ஒரு கதைக்குப் பலதரப்பட்ட முடிவுகளைக் கொடுக்கலாம் என்பதை உணர்ந்து மாணவர்கள் தன்னம்பிக்கையுடன் கட்டுரையை எழுதினர்.

பாடம் 3

முதல் இரண்டு பாடங்கள் ஒரு கதைக்குப் பலதரப்பட்ட முடிவுகளைக் கொடுக்கலாம் என்ற அடிப்படையில் தயாரிக்கப்பட்டன. மூன்றாம் பாடத்தொகுதியில் மாணவர்கள் தங்கள் முடிவையும் ஆசிரியர் காட்டிய முடிவையும் ஒப்பிட்டுப் பார்த்து எது சிறந்த முடிவு என்று மதிப்பீடு செய்து கட்டுரையை எழுதினர். முன் நடவடிக்கையாக, ஒரு படக்கட்டுரையின் முடிவை அதாவது ஆறாம் படத்தைப் பார்த்து மாணவர்கள் கதையின் கருப்பொருளை ஊகித்தனர். முதல் ஐந்து படங்கள் எவ்வாறு அமைந்திருக்கும் என்பதை மாணவர் சிந்தித்துக் கதையை உருவாக்கினர். ஆசிரியர் குறுக்குவெட்டுப் புதிர் அமைப்பிலுள்ள படங்களை ஒவ்வொன்றாகக் காட்டி, சம்பவங்களைக் கோர்வைப்படுத்த வழிநடத்தினார். இந்தப் பாடத்தில் முடிவுக்கு

ஏற்புடைய சம்பவங்களை ஊகிக்கக் கற்றுக்கொண்ட மாணவர்கள், ஒரு கட்டுரையின் முன்னுரையையும் முடிவுரையையும் தொடர்புபடுத்த வேண்டிய முக்கியத்துவத்தையும் அறிந்தனர். படத்தில் காணும் கதாமாந்தர்களைக் கொண்டு சம்பவங்களை ஊகிக்கும் திறனாக இப்பாடம் அமைந்தது.

மூன்று பாடங்களுக்குப் பிறகு மாணவர்கள் 100 சொற்களுக்குக் குறையாமல் ஒரு பின்னிலைத் தேர்வுக்கட்டுரையை எழுதினர். இம்முறை மாணவர்களின் கட்டுரை எழுதும் தரம் கூடியது. மாணவர்களின் ஊகிக்கும் திறன், கற்பனைத்திறன், தன்னம்பிக்கையுடன் எழுதும் ஆற்றல் ஆகியவை வளர்ந்திருக்கின்றன என்பனவற்றை மாணவர்களின் பின்னிலைக் கருத்துத் திரட்டிலும் தெள்ளத்தெளிவாக உணர்த்தப்பட்டுள்ளது.

இம்மூன்று பாடங்களில் பலதரப்பட்ட துணைக்கருவிகளும் கூடிக்கற்றல் உத்திகளும் கையாளப்பட்டன. ஊடகங்கள் வழி கற்பிக்கப்படும் பாடங்கள் மாணவர்களின் கவனத்தையும் ஆர்வத்தையும் ஈர்த்தன. மேலும், மாணவர்கள் சுயமாகவும் தன்னம்பிக்கையுடனும் கட்டுரையை எழுதினர். “மாணவர்களின் ஆர்வமே பாடத்திட்டத்தின் அடித்தளமாகும்,” என்ற கல்வியாளரின் கருத்துக்கேற்ப இம்மூன்று பாடங்களும் அமைந்தன.

<u>முன்னிலைத் தேர்வு / பின்னிலைத் தேர்வு (Pre-Test / Post Test)</u>

மாணவர்களின் கருத்துக் கணிப்புக்குப் (Pupil Survey) பிறகு, தரவுகள் ஆராயப்பட்டு, மாணவர்களுக்கு ஒரு முன்னிலைத் தேர்வு (Pre-Test) கொடுக்கப்பட்டது. `படக்கட்டுரையின் முடிவை மேம்படுத்தி எழுதுக’ என்ற அடிப்படையில் மாணவர்கள் ஆசிரியரின் உதவியின்றி, அவர்களுக்குள் உள்ள அனுபவத்தை வைத்துச் சுயமாக எழுதினர். (கீழ்க்காணும் படம்)



மூன்று பாடத்தொகுதிங்களுக்குப் பிறகு, மாணவர்கள் பின்னிலைத் தேர்வை **(Post-Test)** செய்தனர். இம்முறை அதே அடிப்படையில் இன்னொரு படத்தொடர்

கொடுக்கப்பட்டது. இக்கட்டுரையை மாணவர்கள் ஆசிரியரின் உதவியின்றி சுயமாக எழுதினார்கள். (கீழ்க்காணும் படம்)



<u>தரவுகளைச் சேகரித்தல்</u>

முன்னிலைத் தேர்வு முடிவுகள் (Pre-Test Results)					
மதிப்பெண்கள்	0-4 சராசரிக்கும் கீழ்	5-8 சராசரி	9-12 சராசரிக்கும் மேல்	மொத்தம்	மொத்தம் %
மாணவர்களின் எண்ணிக்கை	6	24	3	33	100

மேற்கண்ட முடிவுகள் 4 பள்ளிகளையும் சேர்ந்தது.

18.2% (6 மாணவர்கள்) முதல் கட்டத்தில் உள்ளனர். இதற்கு முக்கியக் காரணம் அவர்களுக்குப் போதுமான மொழி வளம் இல்லாததாலும் மற்றும் ஒரு சிலர் ஓரிரு வாக்கியங்களில் தம் கட்டுரையின் முடிவை எழுதியுள்ளனர்.

72.7% (24 மாணவர்கள்) சராசரி நிலையில் உள்ளனர். இம்மாணவர்கள் பொதுவாகத் தம் கட்டுரையை முறையாக ஓரளவு கற்பனை வளத்தோடு எழுத முயற்சி செய்துள்ளனர்.

9.1% (3 மாணவர்கள) சராசரிக்கும் மேல் நிலையில் உள்ளனர். இவர்கள் மீள்திறன் மாணவர்கள் என்பதால் எப்போதும் போல் இம்முறையும் கட்டுரையை கற்பன வளத்துடனும் சொல் வளத்துடன் விரிவுபடுத்தி எழுதியுள்ளதால் இம்மேல் நிலையை அடைந்துள்ளனர்.

பின்னிலைத் தேர்வு முடிவுகள் (Post-Test Results)					
மதிப்பெண்கள்	0-4 சராசரிக்கும் கீழ்	5-8 சராசரி	9-12 சராசரிக்கும் மேல்	மொத்தம்	மொத்தம் %
மாணவர்களின் எண்ணிக்கை	1	16	18	35	100

மேற்கண்ட முடிவுகள் 4 பள்ளிகளையும் சேர்ந்தது.

2.9% (1 மாணவன்) முதல் கட்டத்தில் உள்ளான். இது நல்ல செய்தி. இம்முடிவிலிருந்து. சராசரிக்கும் கீழ் இருந்த மாணவர்கள் தம் கட்டுரைகளில் முன்னேற்றம் கண்டு இரண்டாவது நிலையை அடைந்துள்ளனர். ஆனால் ஒரு மாணவனால் மட்டும் இன்னும் கட்டுரையைக் கற்பனையோடு எழுத இயலவில்லை. இந்த மாணவனுக்கு இன்னும் கூடுதல் உதவியை வழங்கலாம்.

45.7% (16 மாணவர்கள்) சராசரி நிலையை அடைந்துள்ளனர். இதிலிருந்து இன்னும் அதிகமான மாணவர்கள் சராசரிக்கும் மேல் நிலையில் இருக்கின்றனர் என்பது புலனாகிறது.

51.4% (18 மாணவர்கள்) சராசரிக்கும் மேல் நிலையில் உள்ளனர். இது மகிழ்ச்சிக்குரிய செய்தி. இக்கணிப்பிலிருந்து, இந்த 3 பாடத்தொகுதிகளுக்குப் பிறகு மாணவர்கள் தம் கட்டுரை எழுதும் முறையில் நிச்சயம் முன்னேற்றமும் தன்னம்பிக்கையும் அடைந்துள்ளனர் என்பதை உறுதியாக நம்பலாம்.

நிர்வாகச் செயல்பாடுகள்

முன்மொழிதல்

குழு நிலையில் எந்த நோக்கில் செயலாய்வுத்திட்டத்தை மேற்கொள்வது என்ற கலந்துரையாடல் நிகழ்த்தப்பட்டது. அதன் அடிப்படையில் கருத்தறிதல், வாய்மொழி, கட்டுரை போன்ற தலைப்புகள் முன்மொழியப்பட்டன. தீரக்கலந்துபேசிய பிறகே, கட்டுரையின் முடிவுரையைச் செயல் ஆய்வுத்திட்டத்திற்கு மேற்கொள்ளலாம் என்று தீர்மானிக்கப்பட்டது.

கடிதங்கள்

செயலாய்வுத்திட்டத்தை மேற்கொள்ள முடிவெடுத்த பிறகு ஆய்வில் பங்குபெறவிருக்கும் மாணவர்களின் பெற்றோர்களுக்கு அது பற்றிய ஒரு கடிதம்

வரைந்து அனுப்பப்பட்டது. அக்கடிதத்தில் செயலாய்வுத்திட்டத்தின் நோக்கத்தைத் தெளிவாக விவரித்து அவர்களின் ஒப்புதலை பெற்றது இன்றியமையாததாகும்.

கூட்டக்குறிப்புகள்

ஆய்வு குறித்து அவ்வப்போது கூட்டம் நடத்துவது அவசியமாக அமைந்தது. அந்தக் கூட்டத்தில் செயலாய்வுத்திட்டத்தின் படிநிலைகள், ஆசியர்களின் பங்கேற்பு, பாடத்திட்டத்தை வரைதல் போன்ற பலதரப்பட்ட பணிகள் இடம்பெற்றன. ஒவ்வொரு கூட்டத்தின்போதும் அது சம்பந்தப்பட்ட குறிப்புகள் எடுக்கப்பட்டன. அவற்றை ஒரு கோப்பில் சேகரித்து வைப்பது செயலாய்வுத்திட்டத்திற்கு இன்றியமையாததாக அமைந்தது.

கால அளவு

செயலாய்வுத்திட்டத்தைத் தொடங்குவதற்குமுன் அதன் கால அளவை வரையறுத்துக்கொள்ள வேண்டியிருந்தது. ஆசிரியர்கள் எத்தனை பாடங்கள் நடத்த வேண்டும், மாணவர்களுக்கு எத்தனைக் கட்டுரைப் பயிற்சிகள் அளிக்கப்படவேண்டும் என்பன போன்ற விவரங்களை முடிவு செய்துகொண்டு கால அளவு நிர்ணயத்துக்கொள்ளப்பட்டது.

எண்ணப்பிரதிபலிப்பு

எண்ணப்பிரதிபலிப்புகள் இருவகைப்படும். ஒன்று மாணவரின் எண்ணப்பிரதிபலிப்பு, மற்றொன்று ஆசிரியரின் எண்ணப்பிரதிபலிப்பு. செயல்திட்ட ஆய்வைத் தீர ஆராய்ந்து, குறைநிறைகளை அறிந்து, அடுத்தடுத்த செயலாய்வுத்திட்டங்களில் முன்னேற்றம் காண்பதே இந்த எண்ணப்பிரதிபலிப்புகளின் நோக்கமாகும்.

பாடத்தொகுப்பு

மூன்று பள்ளிகளைச் சேர்ந்த ஆசிரியர்கள் செயலாய்வுத்திட்டத்திற்குத் தேவையான பாடத்தொகுப்பைத் தயாரித்தனர். ஒவ்வொரு பள்ளி ஆசிரியர்களும் ஒவ்வொரு பாடத்தொகுப்புக்குப் பொறுப்பேற்றனர். முதலில் அப்பள்ளிகளைச் சேர்ந்த ஆசிரியர்கள் பாடத்தொகுப்பின் வளர்ச்சி நிலையைப் பற்றிக் கலந்துரையாடினர். அதற்கு ஏற்ற படத்தொடர்களை முன்வைத்து அதன் ஏற்புடைமையை கலந்து பேசினர். அதன் பின்னர் அந்த வளர்ச்சி நிலைக்கு ஏற்ப பாடத்தொகுப்பைத் தயாரித்தனர்.

மற்றொரு கூட்டத்தின்போது அந்த மூன்று பாடங்களையும் தயாரித்த ஆசிரியர்கள் அப்பாடத்தை எவ்வாறு நடத்திச் செல்வது என்று விளக்கினர். மற்ற ஆசிரியர்கள் பாடத்தொகுப்பில் காணப்பட்ட குறை நிறைகளைச் சுட்டிக்காட்டி அப்பாடம் மேலும் சிறப்பாக அமைய ஆலோசனை வழங்கினர். அதன் பின்னரே இக்கட்டுரைப் பாடங்கள் மாணவர்களுக்கு நடத்தப்பட்டன.

மாதிரிகள்

பொதுவாகவே மாணவர்கள் செய்யும் அத்தனை கட்டுரைப் பயிற்சிகளையும் திருத்துவதற்கு முன் ஒரு பிரதியும் திருத்திய பின்னர் ஒரு பிரதியும் ஆசிரியர்களால் தொகுத்து வைத்துக்கொண்டு மாணவர்களின் வளர்ச்சி நிலையை ஆராய்ந்துகொண்டே வரப்பட்டது. இவ்வாய்வின் வெற்றி தோல்வியை நிர்ணயிப்பதற்கு இவைச் சான்றுகளாக அமைந்தன.

நான்கு பள்ளிகள்

இவ்வாய்வில் மொத்தம் நான்கு பள்ளிகள் பங்குபெற்றன. நான்கு பள்ளிகளையும் சேர்ந்த ஒன்பது ஆசிரியர்கள் இந்த ஆய்வின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்தனர் என்றே சொல்ல வேண்டும்.

பொதுக் கூட்டம்

முதலில் ஒரு பொதுகூட்டம் நடத்தப்பட்டது. அந்தக் கூட்டத்தில் மாணவர்கள் கற்றலில் எத்தகைய பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர் என்று ஆராயப்பட்டது. அவற்றுள் எது முதலில் களையப்பட வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டது. அதாவது மாணவர்கள் கட்டுரையில் முடிவுரை எழுதும்போது கற்பனை வளம் இன்றி எழுதுகின்றனர் என்று அறியப்பட்டது. மாணவர்களின் கற்பனை மற்றும் படைப்பாக்கத் திறனை வளர்க்க வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டது.

தலைப்பு நிர்ணயம்

அதன் பின்னரே செயல் ஆய்வுத் திட்டத்தின் தலைப்பு நிர்ணயிக்கப்பட்டது.

படங்கள்

கட்டுரைப் படங்களைத் தேர்ந்தெடுக்கும்போது அவை மாணவர்களின் அனுபவத்திற்கு உட்பட்டதாக அமைந்துள்ளதா என்பதை உறுதி செய்த பின்னரே அவை தேர்ந்தெடுக்கப்பட்டன. மேலும் மாணவர்களின் கற்பனையைத் தூண்டக்கூடிய தொடர்படங்களாக அமைந்திருப்பது உறுதிசெய்துகொள்ளப்பட்டது.

மாணவர்களின் எண்ணிக்கை

பங்குபெற்ற நான்கு பள்ளியிலும் பயின்ற அனைத்து ஐந்தாம் வகுப்பு மாணவர்களும் இவ்வாய்வில் பங்குபெற்றனர்.

ஆய்வு அறிக்கை கட்டுரை எழுதும் செயல்முறைகள்

ஓர் ஆய்வை மேற்கொள்வதற்கு முன்பதாக, அந்த ஆய்வின் நோக்கத்தைப் பற்றி முன்மொழிதல் இன்றியமையாததாகும். அதை மையமாகக் கொண்டே, அவ்வாய்விற்கான மைய வினாக்கள் எழுப்பப்பட வேண்டும். அதைத் தொடர்ந்து, அவ்வினாக்களுக்கான விடைகளைக் கண்டறியும் வகையில் பொருத்தமான அணுகுமுறைகளைக் கலந்தாலோசித்துப் பட்டியலிட வேண்டும். மிகப் பொருத்தமான அணுகுமுறைகளைத் தேர்ந்தெடுத்த பிறகே, எழுப்பிய வினாக்களுக்கும் தேர்ந்தெடுத்த அணுகுமுறைகளுக்கும் ஏற்றவாறு அவற்றிற்குத் தொடர்பான இலக்கியங்களை வாசித்து அவற்றை ஆய்வின் நோக்கத்தோடும் மைய வினாக்களோடும் அணுகுமுறைகளோடும் மதிப்பீடு செய்ய வேண்டும்.

அதன்பிறகு, மாணவர்களின் பின்னணியை அறிந்து கொள்வதற்குத் தகவல் திரட்டுப் படிவத்தைப் பயன்படுத்த வேண்டும். திரட்டும் தகவல்வழி மாணவர்கள் கற்றல் நிலையில் எந்நிலையில் உள்ளனர் என்பதைப் பரிசீலிட்டுக் கொள்ள முடியும். மேலும், அதற்கு ஏற்றாற்போல் ஆய்வில் இடம்பெறவிருக்கும் பாடத்தொகுப்புகளையும் அமைத்துக் கொள்ள இயலும்.

ஆய்வில் இடம்பெறவிருக்கும் பாடத்தொகுப்புகள் ஆய்வின் நோக்கத்தையும் மைய வினாக்களையும் மையமாகக் கொண்டு அமைதல் மிக முக்கியமாகும். ஏனெனில், பாடத்தொகுப்பை அமைப்பதில் அதிக நேரத்தையும் சிந்தனையையும் செலவழிப்பது ஏற்புடையதாகும். அதைத் தொடர்ந்து நடத்தப்படும் பாடத்தொகுப்புகளை ஒட்டிச் சேகரிக்கப்படும் தரவுகளைக் கவனத்தில் கொள்ள வேண்டும். இத்தரவுகளை உன்னிப்பாகக் கணக்கிட்டுக் கொள்வது, ஆய்வின் இறுதியில் தரவுகளைப் பகுப்பாய்வதற்கு உறுதுணையாக அமையும்.

ஆய்வின் இறுதியில், வரையறைகளையும் பரிந்துரைகளையும் அறிந்துகொள்வதற்கு எண்ணப் பிரதிபலிப்புகள் வழி வகுக்கும். ஆகவே, எண்ணப் பிரதிபலிப்புகளைப் பட்டியலிடுவது முக்கியமாகும். ஆய்வில் எழும்பிய வரையறைகள் என்ன, அவற்றிற்கான காரணங்கள் யாவை போன்றவற்றைப் பட்டியலிடுவதின்மூலம் பரிந்துரைகள் பிறக்கின்றன. இந்தப் பரிந்துரைகள் அடுத்துத் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் ஆய்வுகளுக்கு மையமாக அமைய வாய்ப்புகளை உருவாக்கும்.
இவையே ஆய்வு அறிக்கை கட்டுரையை எழுதும் செயல்முறைகள் ஆகும்.

மலேசியாவில் தமிழ்க்கல்வி

Dr. சாமிக்கண்ணு ஜபமணி
சுல்தான் இட்ரிஸ் கல்வியியல் பல்கலைக் கழகம்
மலேசியா.

முன்னுரை

பழந்தமிழருக்குத் தென்கிழக்கு ஆசியப் பகுதியுடன் 2500 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தொடர்பு இருந்து வந்திருந்தாலும், ஆங்கிலேயர்கள் பினாங்குத் தீவை 1786இல் தன் வசம் கொண்டு வந்த பின்னரே அதிகமான தமிழர்கள் மலாயாவிற்குக் கொண்டுவரப்பட்டனர். ஆங்கிலேயர்கள் 1840ஆம் ஆண்டுகளில் கரும்பு, காப்பித் தோட்டங்களில் வேலை செய்வதற்கு இந்தியத் தொழிலாளர்களை மலாயாவிற்குக் கொண்டுவந்தனர். 1890ஆம் ஆண்டுகளில் ரப்பர் தோட்டங்களில் வேலை செய்வதற்கு அதிகமான இந்தியத் தொழிலாளர்கள் கொண்டுவரப்பட்டனர். இவர்களின் குழந்தைகளின் நலனைக் கருத்திற்கொண்டு, மலாயாவில் தமிழ்க்கல்விப் பயிற்றியல் தொடங்கப்பட்டது. மலேசியாவில் தொடக்கப்பள்ளி, இடைநிலைப்பள்ளி, ஆசிரியர் பயிற்சி கழகம், பல்கலைக்கழகம் ஆகிய நான்கு நிலைகளில் இடம்பெற்றுள்ள தமிழ்க்கல்வியின் நிலையை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

மலேசியத் தொடக்கப்பள்ளிகளில் தமிழ்க்கல்வி

1816ஆம் ஆண்டு, பினாங்கு மாநிலத்தில், பினாங்கு இலவசப் பள்ளி தொடங்கப்பட்டபோது, அப்பள்ளியில் தமிழ்மொழி கற்பிக்கப்பட்டதென்று, வரலாறு காட்டுகிறது. இதுவே மலாயாவில் தொடங்கப்பட்ட முதல் தமிழ்மொழி வகுப்பாகும். ஆனாலும் இவ்வகுப்பு இடையில் நிறுத்தப்பட்டது. 1850களில் மலாக்கா, சிங்கப்பூர், பினாங்கு ஆகிய இடங்களில் ஆங்கிலோ தமிழ்ப்பள்ளிகள் தொடங்கப்பட்டன. இருப்பினும் இப்பள்ளிகள் தொடர்ந்து நீண்ட காலம் செயல்படவில்லை. 1870களில் மலாக்கா, பினாங்கு, ஜோகூர், சிங்கப்பூர், செபராங் பிறை ஆகிய இடங்களில் தமிழ்ப்பள்ளிகள் சமயச் சார்புடைய இயக்கங்களால் நிறுவப்பட்டன.

1900ஆம் ஆண்டில் பாகான் செராய், சிரம்பான், மலாக்கா ஆகிய இடங்களில் ஆங்கிலேய அரசால் தமிழ்ப்பள்ளிகள் நிறுவப்பட்டன. மேலும் 1902ஆம் ஆண்டு முதலே ஆங்கிலேய அரசு தோட்டங்களிலும் நகர்ப்புறங்களிலும் தமிழ்ப்பள்ளித் தொடக்கம் காண்பதற்கு ஊக்குவிப்பு வழங்கியுள்ளது. 1912ஆம் ஆண்டு இயற்றப்பட்ட தொழிலாளர் சட்டத்தின் கீழ், ஒரு தோட்டத்தில் ஏழு முதல் பத்து அகவை வரையிலான மாணவர் பதின்மர் இருந்தால், ஒரு தமிழ்ப்பள்ளி அமைக்கப்பட வேண்டுமென்ற

சட்டம் இயற்றப்பட்டதால், நாட்டில் மிகுதியான தமிழ்ப்பள்ளிகள் உருவாக்கப்பட்டன. இதன்வழி மலாயாவில் தமிழ்க்கல்வி வளர்ச்சிக்கண்டது.

மலேசியத் தமிழ்க் கல்வி வரலாற்றில், தொடக்க காலத்தில் தமிழ்க் கல்வி ஒன்று முதல் நான்கு வகுப்புகளாக மட்டுமே இருந்தது. இதனைத் தொடர்ந்து தமிழ்க்கல்வி 1920ஆம் ஆண்டுகளில் ஐந்தாம் வகுப்பு வரையும், 1930ஆம் ஆண்டுகளில் ஆறாம் வகுப்பு வரையும் உயர்வு பெற்றது. இக்காலக்கட்டத்தில் தமிழ்ப் பள்ளியில் எல்லா பாடங்களும் தமிழ்மொழியிலேயே கற்பிக்கப்பட்டன. இக்காலக் கட்டத்தில் தமிழ்ப்பள்ளியில் படித்த மாணவர்கள் இடைநிலைப்பள்ளியில் தங்கள் கல்வியைத் தொடர முடியாத நிலை இருந்தது.

பின் 1946ஆம் ஆண்டு முதல் முறையாக ஏழாம் வகுப்புத் தொடங்கப்பட்டது. உயர்த்தரத் தமிழ்க்கல்வி என்னும் முறையிலும் தரமான ஆசிரியர்களை உருவாக்கும் நோக்கில் தமிழ் ஏழாம் வகுப்புத் தொடங்கப் பெற்றது. இவ்வகுப்பில், தமிழ்மொழி, நில நூல், வரலாறு, நலக்கல்வி ஆகிய பாடங்கள் கற்பிக்கப்பட்டன. பாடத்திட்டம் பாடநூல் யாவும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவையாகும். இவ்வகுப்பில் பயிலும் மாணவர்கள் ஈராண்டு பயின்று தேர்வு எழுத வேண்டும். ஆசிரியர் ஆயத்தத் தேர்வு என அழைக்கப்பட்ட இவ்வகுப்பு, தரமான ஆசிரியர்கள் உருவாக அடிப்படையாக அமைந்தது. நாட்டின் விடுதலைக்குப் பின் புதிய கல்விக் கொள்கைகள் வகுக்கப்பட்டதால் இவ்வகுப்பு 1957இல் தடைப்பட்டது. இருப்பினும், தமிழ்ப்பற்றுமிக்க சில அதிகாரிகளின் அருமுயற்சியால் ஆசிரியர் ஆயத்தப் பரீட்சை என்ற பெயரில் சில மாற்றங்களுடன் இவ்வகுப்புத் தொடர்ந்தது. இறுதியாக, 1959இல் இவ்வகுப்பு நிறுத்தப்பட்டது. நாடு விடுதலை அடையும் வரை மலாயாவில் தமிழ்க்கல்வி கற்ற மாணவர்கள் ஏழாம் ஆண்டு வரையிலேயே கல்வி கற்றனர்.

தற்போது, மலேசியாவில் 523 தமிழ்ப் பள்ளிகள் செயல்படுகின்றன. இப்பள்ளிகளில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் தமிழ் பயில்கின்றனர். மலாய் மொழி, ஆங்கில மொழி தவிர்த்து மற்ற எல்லாப் பாடங்களும் தமிழ்மொழியிலேயே கற்பிக்கப்படுகின்றன. 2003ஆம் ஆண்டு முதல் அறிவியல், கணிதப் பாடங்கள் முதலாம் ஆண்டு தொடங்கிப் படிப்படியாக ஆங்கிலத்தில் கற்பிக்கப்பட்டு வந்தன. ஆனாலும் இத்திட்டம் எதிர்ப்பார்த்த வெற்றியைத் தராததால் 2012ஆம் ஆண்டு முதல் இவ்விருபாடங்களும் மீண்டும் தாய்மொழிகளிலேயே கற்பிக்கப்படவிருக்கின்றன.

மேலும் 47 விழுக்காட்டு இந்திய மாணவர்கள் தேசியப் பள்ளிகளில் தொடக்கக் கல்வியைப் பயில்கின்றனர். இவர்கள் மூன்றாம் ஆண்டு பயிலுகின்ற போது இவர்களின் பெற்றோர்களில் பதினைந்து பேர் எழுத்துமூலம் கேட்டுக்கொண்டால்,

தமிழ்மொழி கற்பிக்கப்படும் என்று 1961ஆம் ஆண்டின் கல்விச் சட்டத்தில் சட்டமாக்கியுள்ளது. இவ்வகுப்புகள் பள்ளிக் கால அட்டவணைக்கு வெளியில் பகுதி நேர ஆசிரியர்களைக் கொண்டு நடைபெறுவதால் தமிழ்மொழிக் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள் சிறப்பாக நடைபெறவில்லை.

தேசியப் பள்ளிகளை வலுப்படுத்தும் நோக்குடன் கடந்த 2006 முதல் அரசாங்கம் முதலாம் ஆண்டிலேயே படிப்படியாகத் தமிழ்மொழியை அறிமுகம் செய்து வருகிறது. இவ்வகுப்புகளில் வேற்று இன மாணவர்களும் தமிழ்மொழியைக் கற்க வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இவ்வகுப்புகளும் பள்ளிக் கால அட்டவணைக்கு வெளியிலும் சனிக்கிழமைகளிலும் நடத்தப்படுவதால் இத்திட்டமும் எதிர்ப்பார்த்த வெற்றியை அடையவில்லை என்றே கூறவேண்டும்.

மலேசிய இடைநிலைப் பள்ளிகளில் தமிழ்மொழி

மலாயாக் கல்வி வரலாற்றில், 1956ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ரசாக் அறிக்கையில்தான் ஒரே வகையான இடைநிலைப்பள்ளி உருவக்கப்பட்டுள்ளது. இவ்வறிக்கை 1957ஆம் ஆண்டு கல்விச் சட்டமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் வழி எல்லாத் தொடக்கப்பள்ளி மாணவர்களும் ஒரே வகையான இடைநிலைப்பள்ளிக் கல்வியைத் தொடர வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இச்சட்டம் இயற்றப்பட்ட பின்னரே, தமிழ்ப்பள்ளி மாணவர்கள் இடைநிலைப்பள்ளிகளில் கல்வியைத் தொடர வாய்ப்பு ஏற்பட்டது. மேலும் இச்சட்டம் மாணவர்கள் கேட்டுக்கொண்டால் சீனம், தமிழ் ஆகிய தாய்மொழிகள் கற்பிக்கப்படும் என்று கூறுகிறது. இச்சட்டத்தை மேலும் வலுவாக்கும் வகையில் 1961ஆம் ஆண்டின் கல்விச் சட்டத்தில் தேசியப் பள்ளிகளிலும் இடைநிலைப் பள்ளிகளிலும் பயிலும் சீன, தமிழ் மாணவர்களின் பெற்றோர் பதினைந்து பேர் எழுத்துமூலம் தம் விருப்பதைத் தெரிவித்தால் தாய்மொழி (தமிழ், சீனம்) கற்பிக்கப்படும் என்று சட்டமாக்கியுள்ளது. அதனைத் தொடர்ந்து 1996-ஆம் ஆண்டுக் கல்விச் சட்டத்தின் இரண்டாம் பிரிவும் இதனையே வலியுறுத்துகிறது. இச்சட்டங்களின் வழி தேசியப் பள்ளிகளிலும் இடைநிலைப்பள்ளிகளிலும் தமிழ்மொழிக் கல்விக்கு உரிய அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இச்சட்டத்தின் வழி இடைநிலைப்பள்ளிகளில் ஒரு வாரத்திற்குப் புகுமுக வகுப்பிற்கு 160 நிமிடங்களும் முதலாம் படிவத்திலிருந்து ஐந்தாம் படிவம் வரையில் 120 நிமிடங்களும் தமிழ்மொழி கற்பிக்கப்படுகிறது. முழுநேர தமிழாசிரியர்கள் இருக்கும் இடைநிலைப்பள்ளிகளில் பாட நேரத்திலேயே தமிழ்மொழி கற்பிக்கப்படுகிறது. முழுநேர தமிழாசிரியர்கள் இல்லாத இடைநிலைப்பள்ளிகளிலும் குறைவான தமிழ்

மாணவர்கள் இருக்கும் இடைநிலைப்பள்ளிகளிலும் பாட நேரத்திற்கு வெளியில் பகுதிநேர தமிழாசிரியர்களால் தமிழ்மொழி கற்பிக்கப்படுகிறது.

மேலும், இடைநிலைப் பள்ளி இறுதியில் நடைபெறும் மலேசியக் கல்விச் சான்றிதழ் என்னும் தேர்வில் தமிழுடன் தமிழ் இலக்கியத்தையும் ஒரு பாடமாகத் தெரிவு செய்யலாம். இத்தேர்வுக்கான பாட நூல்களை மலேசியத் தேர்வு வாரியம் நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்வு செய்கின்றனர். அத்தேர்வு கவிதை, புதினம், நாடகம் ஆகிய மூன்று கூறுகளைக் கொண்டதாகும். இத்தேர்வுக்குரிய பாடங்கள் தமிழ்மொழி வகுப்புகளில் நடைபெறுவதில்லை. மாணவர்கள் சொந்தமாகக் கற்று இத்தேர்வை எழுதவேண்டும். இடைநிலைப் பள்ளிகளுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட பாடத்திட்டம் அறிமுகம் செய்த பின் இப்பாடம் இடைநிலைப் பள்ளிகளுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட பாடத்திட்டத்திற்கு வெளியிலுள்ள பாடமாக கருதப்படுகிறது.

இடைநிலைக் கல்வியான ஐந்தாம் படிவம் முடித்த மாணவர்கள் உயர்நிலைத் தேர்வில் தமிழையும் ஒரு பாடமாக எடுக்கலாம். ஆனால், பல பள்ளிகளில் இப்பாடம் கற்பிக்கப்படுவதில்லை. இப்பாடம் இரண்டு தாள்களைக் கொண்டதாக அமைக்கப்-பட்டுள்ளது. முதல் தாள் மாணவர்களின் மொழித் திறனையும் இரண்டாவது தாள் இலக்கியத் திறனையும் சோதிப்பதாக அமைந்துள்ளது. வளமான மொழி, இலக்கியத் திறன் கொண்டவரே இத்தேர்வில் வெற்றிபெற இயலும். பல்கலைக்கழக நுழைவுத் தகுதிக்கு இத்தமிழ்த் தேர்ச்சிப் புள்ளிகளும் கணக்கிடப்படுகிறது.

இத்தேர்வில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு, மலாயாப் பல்கலைக்கழத்தில் இடம் கிடைத்தால் அவர்கள் தமிழை ஒரு முதன்மைப் பாடமாக பயின்று பட்டம் பெறலாம். 2010ஆம் ஆண்டு தொடங்கி, சுல்தான் இட்ரிசு கல்வியியல் பல்கலைக்கழகத்திலும் ஆசிரியர் துறையில் பட்டம் பெறும் மாணவர்கள் தமிழைப் பயிலும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

<u>மலேசிய ஆசிரியர் பயிற்சிக் கழகங்களில் தமிழ்மொழி</u>

மலேசியாவில் 1936இல் தமிழாசிரியர்களைப் பயிற்றுவிக்கும் அடிப்படை ஆசிரியர் பயிற்சி வகுப்புத் தொடங்கப்பட்டது. இப்பயிற்சியில் கலந்துகொள்ள தொடக்கமாக ஐந்தாம் வகுப்புத் தேர்ச்சி பெற்றவர்களும் தொடர்ந்து ஆறாம், ஏழாம் வகுப்புத் தேர்ச்சி பெற்றவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இப்பயிற்சி வகுப்புகள் வார இறுதியில் மூன்று ஆண்டுகள் நடத்தப்பட்டன. 1957ஆம் ஆண்டு நாடு விடுதலை பெற்ற பின், கீழ்நிலைக் கல்விச் சான்றிதழ் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்கள் மட்டுமே தமிழாசிரியர் பயிற்சியில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். 1960ஆம் ஆண்டுகளில் முதன் முறையாக

முழுநேர தமிழாசிரியர் பயிற்சி கோலாலம்பூரிலுள்ள தின ஆசிரியர் கல்லூரியில் தொடங்கப்பட்டது. 1970ஆம் ஆண்டுகளில் தற்காலிக தமிழாசிரியர்களுக்குப் பள்ளித் தவணை விடுமுறைக் காலங்களில் தமிழாசிரியர் பயிற்சி தொடக்கத் தமிழ்ப்பள்ளி என்ற பயிற்சி நடத்தப்பட்டது. 1976ஆம் ஆண்டு முதல் முழு நேர தமிழாசிரியர் பயிற்சிகள் ஆசிரியர் பயிற்சிக் கழகங்களில் நடத்தப்பட்டு வருகின்றன. தொடக்க கட்டத்தில் தமிழ் இலக்கணம், தமிழ் இலக்கியம், தமிழ்க் கற்பிப்பியல் முறை ஆகிய பாடங்கள் தமிழ்மொழியில் கற்பிக்கப்பட்டன.

தற்போது, மலேசியாவில் ஏழு ஆசிரியர் பயிற்சிக் கழகங்களில் தமிழாசிரியர்களுக்கான பயிற்சி வழங்கப்படுகிறது. இப்பயிற்சிக் கழகங்களில் பட்டப்படிப்பிற்குப் பிந்திய ஆசிரியர் பயிற்சி, விடுமுறைக் கால ஆசிரியர் பயிற்சி மற்றும் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கான கல்வியியல் இளங்கலைப் பட்டப்படிப்பு வழங்கப்படுகிறது. இவை யாவும் தமிழ்ப்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சியாகும். இங்கு இலக்கணம், மொழியியல், இலக்கியம் மற்றும் கற்பிப்பியல் தொடர்புடைய 15 பாடங்கள் தமிழ்மொழியில் கற்பிக்கப்படுகின்றன.

<u>மலேசியப் பல்கலைக்கழகங்களில் தமிழ்மொழி</u>

மலாயாப் பல்கலைக்கழகத்தில் 1956ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இந்திய ஆய்வியல் துறையில் தற்காலத் தமிழ் இலக்கியம், பக்தி இலக்கியம், சங்க இலக்கியம், இலக்கணம் ஆகியவைக் கற்பிக்கப்படுவதோடு மலாய் மொழியில் தமிழ் இலக்கியம், தமிழர் பண்பாடு நாகரிகமும் கற்பிக்கப்படுகிறது. இதோடு 1998இல் மலாயாப் பல்கலைக்கழகத்தின் மொழி மொழியியற் புலத்தில் தமிழ்மொழி, மொழியியல் துறையில் இளங்கலைப் பட்டப்படிப்புத் தொடங்கப் பட்டுள்ளது.

மேலும், மலாயாப் பல்கலைக்கழகத்தில் தமிழ் இலக்கியம், இலக்கணம், மொழியியல், கற்பிப்பியல் மற்றும் குமுகாயவியல் ஆகிய துறைகளில் முதுகலை மற்றும் முனைவர் பட்டத்திற்குப் பயிலுவதற்கான வாய்ப்புகள் உள்ளன. ஆய்வுகளைத் தமிழ்மொழியில் மேற்கொண்டாலும் ஆய்வு முடிவுகளை மலாய் அல்லது ஆங்கில மொழியில்தான் எழுதவேண்டும்.

மலாயாப் பல்கலைக்கழகத்தைத் தவிர்த்து மலேசியப் புத்ரா பல்கலைக்கழகம், மலேசிய அறிவியல் பல்கலைக்கழகம், மலேசியச் சபா பல்கலைக்கழகம் ஆகிய பல்கலைக்கழகங்களில் அடிப்படைத் தமிழ்மொழிப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வகுப்புகளில் தமிழ்ப் பேசத் தெரியாத மாணவர்கள் பயின்று வருகிறார்கள். இதனோடு மலேசியப் புத்ரா பல்கலைக்கழகத்தில் தமிழ்மொழி,

மொழியியல் துறையில் முதுகலை, முனைவர் பட்டத்திற்குப் பயிலுவதற்கான வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், சுல்தான் இட்ரிசு கல்வியியல் பல்கலைக்கழகம் 2010ஆம் ஆண்டு முதல் தமிழ்மொழியில் இடைநிலைப்பள்ளி தமிழாசிரியர்களுக்கான கல்வியியல் இளங்கலைப் பட்டப்படிப்பை வழங்குகின்றது. இப்பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவர்கள் முதன்மை பாடமாகத் (Major) தமிழ்மொழியையும் துணைப்பாடமாகத் (Minor) தமிழ் இலக்கியத்தையும் எடுத்துப் பயில வேண்டும். இங்குப் பயிலும் மாணவர்கள் தமிழ் இலக்கணம், மொழியியல், இலக்கியம், கற்பிப்பியல் மற்றும் குமுகாயவியல் ஆகிய கூறுகள் அடங்கிய 25 பாடங்களைத் தமிழ்மொழியிலேயே கற்பார்கள். நான்கு ஆண்டு கல்விக்குப் பின் இம்மாணவர்கள் இடைநிலைப்பள்ளிகளில் தமிழாசிரியர்களாகப் பணி அமர்த்தம் செய்யப்படுவார்கள்.

இதனோடு இவ்வாண்டு தொடங்கி இப்பல்கலைக்கழகத்தில் தற்கால இலக்கியத்திலும் மலேசியத் தமிழ் இலக்கியத்திலும் முதுகலைப் பட்டத்திற்குப் பயிலுவதற்கான வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

<u>முடிவுரை</u>

தமிழ் நாடு, இலங்கை ஆகிய நாடுகளை அடுத்து, மலேசியாவில் தமிழ்மொழி சிறந்த நிலையில் காணப்படுகிறது. இங்குத் தமிழ்மொழி ஏற்றுக்கொள்ளப்பட்ட நான்கு மொழிகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

பண்பாடு தழுவிய தமிழ் கற்றலும் கற்பித்தலும்

நல்லாமூர் Dr. கோ. பெரியண்ணன்
இயக்குநர், தமிழக் கல்வி ஆராய்ச்சி வளர்ச்சி நிறுவனம்
இந்தியா.

இந்திய நாகரிகத்தின் எல்லாக் கூறுகளும் தமிழ்ப் பண்பாட்டையும் மொழியையும் அடிப்படையாகக் கொண்டது. மனித சமுதாயத்தின் அறிவு, அறம், ஒழுக்கம், பழக்கவழக்கம், நம்பிக்கை போன்ற பல தன்மைகளைக் கொண்ட வாழ்க்கை முறையே பண்பாடாகும் என்று மானிடவியல் அறிஞர் ஈ.பி. டைலர் கூறுகிறார். அப் பண்பாட்டுக் கூறுகளைச் செழுமை மிக்க தமிழ் இலக்கியங்களில் பொதிந்து வைத்துச் சென்றுள்ளனர் புலவர் பெருமக்கள். அவர்கள் கூறிய பண்பாட்டுக் கூறுகளை மாணவர்கள் கற்பதற்கும், ஆசிரியர்கள் கற்பிப்பதற்கும் உரிய அணுகுமுறையை மேற்கொள்வதற்கும் உரிய நுட்பக் கருத்துகள் இக்கட்டுரையில் ஆராயப்படுகின்றன.

பண்பாடு - விளக்கம்

பண்படுவது பண்பாடு. திருந்திய நிலத்தினைப் பண்பட்ட நிலம் என்கிறோம். திருந்திய உள்ளத்தினைப் பண்பட்ட உள்ளம் எனவும், திருந்திய தமிழைப் பண்பட்ட செந்தமிழ் எனவும் கூறுகிறோம்.

பண்பாடு என்பதைத் திருந்திய ஒழுக்கம் என மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் வரையறுத்துள்ளார். “பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல்” எனக் கலித்தொகை கூறுகிறது. இவ்வறையரையின் அடிப்படையில் தமிழ்ப் பண்பாட்டினை விருந்தோம்புதல், ஈதல், மானம் கெடின் உயிர் விடுதல், ஒருவன் ஒருத்தி என்ற பண்பாட்டு நெறியோடு வாழ்தல் முதலியனவற்றைக் குறிக்கலாம்.

இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு (குறள். 81)

எனக் கூறியுள்ளார் திருவள்ளுவர்.

கோவலனைப் பிரிந்த கண்ணகி, இல்லற வாழ்க்கையின் சிறந்த பயனைத் தான் இழந்ததாக,

அறவோர்க் களித்தலும் அந்தணர் ஓம்பலும்
துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை (சிலப்பதிகாரம் கொலைக்களக் காதை 71-73)

எனக் கூறுகிறாள்.

இராமனைப் பிரிந்த சீதை, "விருந்து கண்டபோது என்னுறுமோ" (சுந்தரகாண்டம் - 344) என்று வருந்துகிறாள்.

தரையினைத் தூய்மைசெய்து வாழைக் குருத்தினை விரித்து அதனையும் கழுவி, அடிசில் படைத்த அரிய காட்சியை இளங்கோவடிகள்,

தண்ணீர் தெளித்து, தன்கையால் தடவி
குமரி வாழையின் குருத்தகம் விரித்தீங்கு
அமுதம் உண்க அடிகள் ஈங்கென (சிலப்பதிகாரம் கொலைக்களக் காதை 41-43)

எனக் காட்சிப்படுத்துகிறார்.

செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு (குறள். 86)

இக்குறளில் செல்விருந்து, வருவிருந்து எனத் திருவள்ளுவர் கூறுவதை,

தென்னை இலைபரப்பி சென்றாரைக் கையமர்த்தி
தேடிவிருந்து வைக்கும் திசைக்கருணர் பேரனோ
வாழைஇலை பரப்பி வந்தாரைக் கையமர்த்தி
வருந்திவிருந்து வைக்கும் மகராசர் பேரனோ

எனத் தாலாட்டுப் பாடல் கூறுகிறது.

ஈதல்

இல்லையென இரப்பார்க்கு இல்லை என்று சொல்லாமல், அவர் விரும்பியதைக் கொடுத்தலே நல்ல குடியில் பிறந்தவர் பண்பாகும்.

இலன்என்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலன்உடையான் கண்ணே உள (குறள். 223)

என்பது திருக்குறள்.

செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்பேம் எனினே தப்புந பலவே (புறநானூறு - 189)

என்பது நக்கீரர் அருளிய புறநானூற்று வரிகள்.

ஈயென இரத்தல் இழிந்தன்று அதனெதிர்

ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று (புறநானூறு - 204)

எனப் புறநானூறு மேலும் கூறுகிறது.

இல்லை என்று உரைப்பவர்க்கு

இல்லை என்று உரையா

இதயம் நீ அளித்தருள் (வில்லிபுத்தூரார் பாரதம், கன்னபருவம்)

எனக் கண்ணனிடம் கன்னன் வேண்டினான் எனப் பாரதம் கூறுகிறது.

ஞாலமளாவிய பார்வை

போரும் பூசலும் தன்னலமும் மலிந்த இன்றைய உலகம் உய்ய வேண்டுமானால் குறுகிய நோக்கம் தவிர்த்து ஞாலம் அளாவிய பார்வையின் தேவையினை ஐக்கிய நாட்டவை வலியுறுத்தத் தொடங்கியுள்ளன. இந்த அரிய பண்பினை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே,

யாதும் ஊரே யாவரும் கேளிர் (புறநானூறு - 192)

என்று கணியன் பூங்குன்றனார் முழங்கியுள்ளார்.

பொறையுடைமை (கண்ணோட்டம்)

தன்னைச் சார்ந்தோர் இடத்துக் காட்டும் கண்ணோட்டமே பண்பாடு என நற்றிணை நவில்கிறது. பொறுமை மனிதப் பண்பாட்டின் மதிக்கத்தக்க ஒன்று. வடமொழியில் தோன்றிய இராமாயணம், பாரதம் ஆகிய இலக்கியங்களில் பொறுமைக்கு இலக்கணமாக முறையே இராமரும் தருமரும் காட்டப்படுகின்றனர். ஆனால் அவர்களின் பெருமையும் மேன்மையும் போரின் வெற்றிவழி வெளிப்படுத்தப்படுகின்றன. ஆனால் தொன்மை மிக்க தமிழரின் பொறையுடைமை அருள் சார்ந்தது. அறம் சார்ந்தது.

கொன்றன்ன இன்னா செய்யினும் அவர்செய்த

ஒன்று நன்று உள்ளக் கெடும் (குறள். 109)

என்றும்,

பெயக்கண்டும் நஞ்சுண்ட மைவர் நயத்தக்க

நாகரிகம் வேண்டு பவர் (குறள். 580)

என்றும் வள்ளுவர் தமிழரின் பொறையுடைமையைப் பதிவு செய்துள்ளார். இதனையே, நற்றிணையும்

முந்தை யிருந்து நட்டோர் கொடுப்பின்

நஞ்சு முண்பர் நனிநா கரிகர் (நற்றிணை. 355)

என நவில்கிறது.

வாழ்வியல் நெறி

இன்சொல்லோடு, உண்மைபேசி என்றும் ஒருவன் ஒருத்தியோடு வாழ்வதே வாழ்வியல் நெறி எனப்பட்டது.

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது (குறள். 45)

என, இல்வாழ்க்கை என்னும் ஓர் அரிய பண்பை உடைத்தாக்கி அதிலிருந்து பயனைப் பெற்றனர் பண்டையோர். ஆறறிவுடையோர் உணர்வதற்காக ஐந்தறிவு கொண்ட விலங்கினத்திலும் இல்வாழ்க்கை சார்ந்த அன்பையும் அறனையும் கண்டு உணர்ந்தனர்.

கருங்கண் தாக்கலை பெரும்பிறி துற்றெனக்
கைம்மை உய்யா காமர் மந்தி
கல்லா வன்பறழ் கிளைமுதற் சேர்த்தி
ஓங்குவரை அடுக்கத்துப் பாய்ந்துயிர் செகுக்கும் (குறுந்தொகை 69)

ஆண்குரங்கு இறந்துபடுகிறது. பெண்குரங்கு "கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல்" என்ற அறிவுரையை உளங்கொண்டது. கைம்மை நோன்பு ஏற்றுக் கூட வாழ விரும்பவில்லை. கல்லாக் குட்டியை, தன் சுற்றத்தாரிடம் விட்டுவிட்டு, ஓங்கிய மலையிலிருந்து பாய்ந்து மாய்ந்தது. இதுதான் அன்றைய சமுதாயம் காட்டிய வாழ்வியல் நெறியாகும். இவ்வாறாக, இயற்கை நிகழ்வுகளையெல்லாம் கணவன் மனைவி இன்ப வாழ்க்கையின் படிமங்களாகப் பண்டையோர் படைத்தனர். அப்படைப்பிற்கு இயற்கையிலேயே அமைந்த அன்றில் பறவை வாழ்க்கை முறையையும் கூர்ந்து கவனித்துள்ளனர். கூர்த்த அப்பார்வையை "அன்றில்பறவை ஆண் பிரிய வாழாது" என்ற வரிகளில் காணலாம்.

கணவன் மனைவி பாசப் பிணைப்பு என்றும் நீக்க முடியாதவாறு இருக்க வேண்டுமெனத் தமிழ்ச் சான்றோர்கள் விரும்பியதை,

இம்மை மாறி மறுமை யாயினும்
நீயாகியர் என கணவனை
யானாகியர் நின் நெஞ்சுநேர் பவளே (குறுந்தொகை 49)

எனக் குறுந்தொகைப் பாடல் தெரிவிக்கிறது. பல்கிவரும் பிறவிகள்தோறும் கணவன் மனைவியாய் வாழ வேண்டுமென்ற ஏக்கம் தமிழர் கண்ட வாழவியல் நெறியின் உச்சமாகும்.

கணவன் மனைவி என்ற இருவரின் தொடர்பை,

உடம்பொடு உயிரிடை என்ன மற்றன்ன

மடந்தையொடு எம்மிடை நட்பு (குறள். 1122)

என்று வள்ளுவர் கூறுகிறார்.

நீரின் றமையா வுலகம் போலத்

தம்மின் றமையா நந்நயந் தருளி (நற்றிணை - 1)

என்று கணவனின் இன்றியமையாமையை நற்றிணையில் ஓர் உவமை மூலம் கபிலர் விளக்குகிறார்.

பண்பாடு காத்த நயமான நாட்டுப்புறப் பாடல்

பண்பாடு சிதையத் தொடங்கிய காலத்திலும் சிதையவிடாமல் நாட்டுப்புற மக்கள் எழுதாப் படைப்புகளால் பண்பாட்டைப் பதித்தமைக்குச் சான்றுகள் உள்ளன.

ஆணொருவன் இரவுப் பொழுதில் வருகிறான். நாய் குரைக்கிறது. அதனால் வர முடியவில்லையென வீட்டிலுள்ள பெண்ணிடம் கூறுகிறான். தாம் சந்திப்பதற்கு இடையூறு செய்த நாய்க்கு இனிக் கஞ்சி ஊத்தமாட்டேன். அது செத்துப் போகட்டும் என்கிறாள் அவள். அது கேட்ட நாயும், "நீ கஞ்சி ஊத்தாவிட்டாலும் போகிறது. அடுத்த வீட்டுக்காரனை அண்ட விட மாட்டேன்" என்கிறது நாய்.
கற்பனை தான் இது. எனினும் பண்பாட்டைப் பதிப்பது. இதோஅப்பாடல்,

ஆண்: கதவாலைத் தட்டிப் பார்த்தேன், கல்லை விட்டெறிஞ்சிப் பார்த்தேன், உங்க வீட்டு நாய்க்குட்டி ஓயாமல் குலைக்குதடி.

பெண்: கஞ்சியும் ஊத்தமாட்டேன் கரிப்பத்தும் போடமாட்டேன். கட்டன கட்டோட செத்துப்போ நாய்க்குட்டி.

நாய்: கஞ்சியும் ஊத்த வேண்டாம் கரிப்பத்தும் போட வேண்டாம். அசவீட்டுக் காரனை நான் அண்டவிட மாட்டேண்டி

கற்றல் - கற்பித்தல் நுட்பங்கள்

அச்சு ஊடகங்கள் சாதிக்க முடியாத கற்றல் கற்பித்தல் முறைகளைக் கணினி இணைய நுட்பங்கள் சாதிக்கவியலும். ஆசுபெல் (Ausubul)பெஞ்சமின் புளூம் (Benjamin Bloom) முதலானோர் எத்தகைய கடினமான கற்றல் பகுதியையும் கற்கவியலும் என்பதை

உளவியல் மூலம் விளக்கம் தந்துள்ளனர். மாணவர்களின் விருப்பத்திற்கேற்றவாறு, மனநிலைக்கேற்றவாறு எளிமையிலிருந்து கடினம் என்னும் கோட்பாட்டின் அடிப்படையில் பண்பாட்டுக் கற்றல் பனுவல்களை வழங்க இணைத்தள நுட்பம் வழி செய்கிறது. ஆசிரியர், மாணவரின் கற்றல்திறன், கற்றல்தேவை ஆகியவற்றின் அடிப்படையில் தயாரிக்கக் கூடியதாகக் கணினி இணையதள நுட்பங்கள் அமைந்துள்ளன.

கணினி வளர்ச்சியுற்ற இக்காலத்தில் கற்றல் - கற்பித்தலை வன்னுரு மென்னுரு ஆகியன அடிப்படையில் காண முடிகிறது. கணினி நுட்பத்தைப் பயன்படுத்தி பண்பாட்டுக் கூறுகளை விளக்கும் வகையில் ஆசிரியர்களே மென்னுருக்களை (Software) உருவாக்க வேண்டும். உயிரோட்டமுடைய பண்பாட்டுக் கூறுகளைக் கற்பிப்பதற்கு 'பவர் பாயிண்ட்' (Powerpoint)-இன் பல்வேறு நுட்பங்களையும் பயன்படுத்த வேண்டும். இவற்றில் இயக்கமிகு காட்சிகளைப் பதித்து வலைத்தள நுட்பங்களையும் இணைத்து பண்பாட்டுக் கூறுகளைக் கற்பிப்பின் மாணவர்கள் எளிதில் உணர்ந்து கொள்வர். கற்பித்தல் வளமுறும். கற்றல் வலுப்பெறும். பண்பாட்டுக் கூறுகளை ஒலி, ஒளிக் காட்சிகளை அமைத்தல், வரைகலை (Graphics) இயங்குபடம் (Animation) போன்றவற்றின் மூலமாகக் கற்பித்தல் உத்திகளைக் கையாண்டால் மாணவர்கள் எளிதில் புரிந்து கொள்வார். அவர்களின் விருப்பத்திற்கேற்றவாறு தயாரிக்க இயலும்.

இன்றைய சமுதாயச் சூழலில் கணினிஅறிவு இளைய தலைமுறையினரிடத்துப் பெருகி வருவதைக் கண்கூடாகக் காண்கிறோம். நாள்தோறும் கணினியின் முன்னமர்ந்து தகவல்கள் திரட்டுதலில் மிகுந்த ஆர்வம் காட்டி வருகின்றனர். அவர்களின் ஆர்வத்திற்கேற்றவாறு, இலக்கியங்களில் காணப்பெறும் பண்பாட்டு விழுமப் பதிவுகளை, வலைத்தளங்களில் பதிந்து, கற்பித்தல் நுட்பங்களை உருவாக்குவது தமிழ்க் கல்வியாளர்களின் பெரும் பொறுப்பாகும். தமிழ்க் கல்வியாளர்கள் கூறும் விழுமப் பதிவுகளைக் கணினி வல்லுநர்கள் வலைத்தள நுட்பத்துடன் இணைத்தால் பண்பாட்டுப் பதிவுகள் வலுப்பெறும். கற்றல் கற்பித்தல் எளிதில் நடைபெறும்.

பண்பாட்டு விழுமங்களை வெளிப்படுத்துவதோடு, இயற்கையோடிணைந்த கற்பனை வளங்களை உணர்த்துதல், செறிவான சொற்பொருள் நயங்களை உள்ளூடச் செய்தல், தமிழுக்கே உரிய சந்த நயங்கள், நாட்டுப்புறப் பாடல் இசை அமைப்புகள் ஆகியவற்றை அறியச் செய்தல், எண்வகை மெய்ப்பாடுகளைக் காட்சிப்படுத்துதல், மெய்ப்பாடுகளுக்கேற்ப முத்தமிழ் வளத்தில் மூழ்கச் செய்தல் என்பவனவற்றிற்கெல்லாம், உலகளாவிய நிலையில், தமிழ் கற்றல் கற்பித்தலுக்கு ஆசிரியர்கள் வலைத்தளங்களை உருவாக்க வியலும்.

தமிழ் கற்பித்தலில் புதிய புதிய முறைகளைக் கண்டறிந்து தமிழுக்கெனப் பயிற்றுக் கருவிகள் பலவற்றை உருவாக்கி சிங்கப்பூர் தமிழ்க் கல்வி உலகில் தனக்கென ஒரு தனியிடம் பெற்றுத் திகழ்கிறது.

அரிச்சுவடி கல்வி முதல் ஆராய்ச்சி படிப்பு வரை பண்பாட்டுக் கூறுகளை வகைப்படுத்தி கற்றல் கற்பித்தலைச் செம்மையாக்கலாம். தமிழ்க் கல்வியாளர்கள், கணினி வல்லுநர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் இணைந்த செயல்பாடுகளே இன்றைய தேவையாகக் கருதப்படுகின்றன.

சான்று நூல்கள்

1. நாட்டுப்புறவியல் சிந்தனைகள், டாக்டர் அ.ந. பெருமாள், (1987), ஐந்திணைப் பதிப்பகம்.
2. கிராமியப் பாடல்கள் கள ஆய்வு, டாக்டர் கோ. பெரியண்ணன், (1982), விசாலாட்சி பதிப்பகம்.
3. 7வது உலகத் தமிழாசிரியர் மாநாட்டு ஆய்வடங்கல், (2006), கோலாலம்பூர்.
4. 8வது உலகத் தமிழ் ஆசிரியர் மாநாட்டு மலர், (2008), சென்னை.
5. திருக்குறள் பெரியண்ணன் உரை, டாக்டர் கோ. பெரியண்ணன், (2000), வனிதா பதிப்பகம்.
6. பொதுத்தமிழ், மேல்நிலை - இரண்டாமாண்டு, டாக்டர் தெ. ஞானசுந்தரம், (1990), தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்.

தமிழ் கற்றல் கற்பித்தலில் தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தின் பயன்பாடு

கோட்டி திருமுருகானந்தம் - கத்தோலிக்க தொடக்கக் கல்லூரி
விக்டர் ஜான் தாசையா - தேசியத் தொடக்கக் கல்லூரி
சிங்கப்பூர்.

எங்கள் கட்டுரை உயர்தரம் படிக்கும் மாணவர்களிடம் தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதை விளக்கும் முகத்தான் அமைகிறது. அதாவது எங்கள் கட்டுரை உயர்தரம் படிக்கும் மாணவர்களை மையமாகக் கொண்ட கட்டுரையாகும்.

தமிழ் கற்றல் கற்பித்தலில் தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதால் உண்டாகும் நன்மைகள் பல. தகவல் தொழில்நுட்ப உலகத்தில் வாழும் நாம் அதனைப் பயன்படுத்தாவிட்டால் பின்னுக்குத் தள்ளப்பட்டுவிடுவோம். மேலும் மாணவர்களிடம் கற்றலை எளிமையாக்கவும் மேம்படுத்தவும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த வேண்டியதாகிறது. கல்வியமைச்சின் கொள்கைகளைப் பின்பற்ற வேண்டியதும் அவசியமாகிறது. இத்தகைய நோக்கங்களை நிறைவேற்றும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயமாகவும் அமைகிறது.

இன்றைய மாணவர்கள் தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தை அதிகம் பயன்படுத்துகிறார்கள். பலர் சிறந்த தேர்ச்சி பெற்றவர்களாகவும் விளங்குகிறார்கள். அதனால் அவர்களிடம் தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தமிழைக் கற்பிக்கும் போது கற்றல் எளிமையாகிறது, இனிமையாகிறது. மேலும் மாணவர்கள் தங்கள் வீட்டிலிருந்தபடியே தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஆசிரியர்களுடன் தொடர்பு கொள்ள, பாடங்களைச் செய்ய இச்சாதனங்கள் வெகுவாகப் பயனளிக்கின்றன. இத்தகவல் தொடர்புத் தொழில்நுட்பம் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் உறவுப் பாலமாகிறது. அதனால் அதனைப் பயன்டுத்த வேண்டியது அத்தியாவசியமாகிறது.

இணையம், தொலைக்காட்சி, வானொலி, கையடக்கத் தொலைபேசி முதலான கருவிகள் இக்காலத்தில் தகவல் தொடர்புத் தொழில்நுட்பச் சாதனங்களான விளங்குகின்றன. பொதுவாக இளையர்கள் இச்சாதனங்களை அதிகம் பயன்படுத்துகிறார்கள். இன்னொரு வகையில் கூறினால் இளையர்களையும் இச்சாதனங்களையும் பிரிக்க முடியாது என்றே கூறலாம். குறிப்பாக மாணவர் கரங்களில் இத்தகைய அதி நவீன சாதனங்கள் தவழ்வதை இங்குக் கண்கூடாகக்

காணமுடிகிறது. இதை ஒரு வழியில் மொழி கற்றல் கற்பித்தலுக்கு ஒரு வரப்பிரசாதம் எனக் கூறலாம். அதனால் இவற்றின் வாயிலாக அவர்களுக்கு மொழியை கற்றுக்கொடுப்பது மிகவும் பயனுள்ளதாகவும் எளிமையாகவும் விளங்குகிறது. அதுமட்டுமல்லாமல் அவர்களை அதில் இணைத்து கற்றுக் கொடுக்கவும் முடிகிறது.

இக்கால இளையர்கள் பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டியவர்களாக இருக்கிறார்கள். (சான்றாக சிறப்புப் பாடங்கள் - எச் 3 மற்றும் பள்ளி நடவடிக்கைகளை ஏற்பாடு செய்தல் - Councilors, திட்ட வேலைகள் - PW). இவை ஒரு புறமிருக்க அறிவியல், கணிதம் போன்ற சில குறிப்பிட்ட பாடங்கள் பெரும்பாலும் காலை வேளைகளில் அமைந்து விடுகின்றன. எனவே பொதுவாக மொழி கற்கும் மாணவர்களுக்குப் பாடவேளைகள் பல நேரங்களில் மதியம் அல்லது மாலை நேரங்களில் அமைந்து விடுகின்றன. இத்தகைய சூழலில் மொழிப்பாடம் கற்க வரும் மாணவர்களுக்கு மேலே குறிப்பிட்டுள்ள தகவல் தொடர்புக் கருவிகள் ஒரு வரப்பிரசாதமாய் அமைந்துள்ளன என்றே கூறவேண்டும். சோர்வோடு வகுப்பிற்கு வரும் மாணவர்களின் சோர்வை அகற்றி ஆர்வத்தோடு கற்றலில் அவர்களை ஈடுபடுத்த இக்கருவிகள் பல வழிகளில் உதவியாய் அமைகின்றன.

அடுத்து வரும் பகுதியில் கற்றல் கற்பித்தலில் பயன்படும் கருவிகள் பற்றிக் காண்போம்.

தொலைக்காட்சி: இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் சில, மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் அமைகின்றன என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. குறிப்பாக வேட்டை போன்ற நாடகத் தொடர்களைக் குறிப்பிடலாம். மேலும் மாணவர்களின் மொழியறிவை நேரடியாக வளர்க்கக் கூடிய நிகழ்ச்சிகள் பலவும் ஒளிபரப்பப்பட்டு வருகின்றன. காட்டாக சொற்களம், சொற்சிலம்பம் போன்ற போட்டிகளைக் கூறலாம். இவ்வகை நிகழ்ச்சிகளை மையமாகக் கொண்டு வகுப்பறைகளில் கலந்துரையாடல் நிகழ்வுகளும் திறனாய்வு பாடவேளைகளும் அமைக்கப்படுகின்றன.

வானொலி: தகவல் தொடர்புக் கருவிகளில் பழமை வாய்ந்த கருவியாக வானொலி இருந்தாலும் அதன் பயன்பாடு இன்னும் அதிகரித்துக் கொண்டுதான் இருக்கிறது. கற்றல் கற்பித்தலில் வானொலி இன்றும் தன் பங்கை ஆற்றி வருகிறது என்றுதான் கூறவேண்டும். வானொலியில் ஒலிபரப்பப்படும் பல நிகழ்ச்சிகள் கேட்டல் கருத்தறிதல், கலந்துரையாடல், நாட்டு நடப்புகளை அறிந்து கொள்ளுதல் போன்ற பல வகுப்பறை நிகழ்வுளுக்குப் பங்களிக்கின்றன.

சில வானொலி நிகழ்ச்சிகள் மாணவர்களுக்கென்றே அமைவதையும் இன்று நாம் காணமுடிகிறது. மாணவர்கள் நேரடியாகப் பங்கு பெறுகின்ற இத்தகைய நிகழ்ச்சிகளின் வாயிலாக மாணவர்கள் மத்தியில் மொழியைப் பேசுவதில் தன்னம்பிக்கையும் ஆர்வமும் வளர்கிறது. அண்மை காலமாக ஒலிபரப்பப்பட்டு வரும் தள ஒலிபரப்பு நிகழ்ச்சி - Compass Broadcast - என்ற வானொலி நிகழ்ச்சியை இதற்குச் சான்றாகக் கூறலாம். விவாதம் செய்தல், நடித்தல், பாடுதல், பேசுதல் போன்ற பல தரப்பட்ட திறன்களையும் உள்ளடக்கியனவாக அமையும் இந்நிகழ்ச்சியில் கல்லூரி மாணவர்கள் பலரும் ஈடுபட்டிருப்பதை நாம் குறிப்பிடலாம்.

கணினி & இணையம்: மாறிவரும் இன்றைய சூழலில் ஒவ்வொரு நிறுவனமும் - கல்வி நிறுவனம் உட்பட - தங்களுக்கென்று தனி இணைய கட்டமைப்பை ஏற்படுத்திக் கொண்டு அதன் வாயிலாகக் கருத்துப் பரிமாற்றம் செய்து வருகின்றன. அந்த வகையில் ஒவ்வொரு கல்வி நிறுவனமும் தங்களுக்கென்று ஒரு கட்டமைப்பை ஏற்படுத்தி வைத்திருக்கின்றன. இக்கட்டமைப்பு கருத்துப் பரிமாற்றம் செய்தல் என்ற நிலையைத் தாண்டி இன்று கற்றல் கற்பித்தலும் நேர்த்தியாகப் பங்கு வகிக்கின்றது, தாய்மொழி கற்றலுக்குப் பேருதவியாய் அமைகின்றது. ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனி பிரிவுகளை ஏற்படுத்திக் கொண்டு அதன் வாயிலாகக் கற்றல் கற்பித்தலை நடத்த முடிகின்றது. தேவை, திறமை, சூழல் இவற்றிற்கேற்ப இக்கட்டமைப்பை மொழி கற்றல் கற்பித்தலுக்கு நாம் பயன்படுத்த முடிகிறது. இத்தகைய பயனை வலைப்பூக்கள் வாயிலாகவும் நாம் செவ்வனே செய்ய முடிகிறது.

மின்னஞ்சல்: கடிதம் வாயிலாகக் கருத்துப் பரிமாற்றம் நடந்து வந்த காலம்மாறி இன்று மின்னஞ்சல் வாயிலாகக் கருத்துப் பரிமாற்றம் செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது. இது இன்றைய வாழ்வில் தவிர்க்க முடியாத ஓர் அங்கமாக மனித வாழ்வில் மாறி விட்டது. எளிதாகவும் விரைவாகவும் கருத்துகளைப் பரிமாறிக் கொள்வதற்கு இதைவிடச் சிறந்ததொரு சாதனம் வேறில்லை என்றுதான் கூறவேண்டும். மொழி கற்றல் கற்பித்தலிலும் இன்று மின்னஞ்சலுக்குத் தனியிடம் உள்ளது. வகுப்பறை பாடங்கள் தொடர்பாக ஆசிரியர் மாணவர்களோடு தொடர்பு கொள்ளவும் மாணவர்கள் ஆசிரியரோடு தொடர்பு கொள்ளவும் மின்னஞ்சல் பேருதவி புரிகிறது. தமிழில் தட்டச்சு செய்தல் என்ற நிகழ்வு மாணவர்களிடம் நடந்து கொண்டேயிருக்க மின்னஞ்சல் என்பது ஒரு பெரிய வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கிறது என்றுதான் கூறவேண்டும்.

இணைய பக்கங்கள்: இணையம் மனித குலத்திற்கு ஆற்றி வரும் சேவை மகத்தானது. மனிதன் தன் தேவைக்கேற்ப ஆழமான செய்திகளை விரைவாகப் பெற்றுக்கொள்ள இணையம் வழிகோலுகின்றது. குறிப்பாக, ஆசிரியர்கள் மொழிப்பாடம் கற்பிக்கும் பொழுதும் மாணவர்கள் மொழிப்பாடம் கற்கும் பொழுதும் ஏற்படும் ஐயங்களைப்

போக்குவதற்கும் தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கும் இணையப் பக்கங்கள் உதவி புரிகின்றன. சொற்களுக்குப் பொருள் காணுதல், விளக்கம் தெரிந்து கொள்ளுதல் போன்ற அடிப்படைத் தேவைகள் முதற்கொண்டு புத்தக வடிவில் கிடைக்கப் பெறாக பல நூல்களை முழுமையாகப் பெற்றுக் கொள்வது வரை பல வழிகளிலும் இப்பக்கங்கள் நமக்குச் சேவை புரிகின்றன. இவை தவிர்த்து மாணவர்கள் தரத்திற்கும் தேவைக்கும் காலச்சூழலுக்கும் ஏற்ப பல்வேறு கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளைப் பல்வேறு இணைய பக்கங்களை மையமாக வைத்து மொழிப்பாடங்களை இன்று நாம் நடத்த முடிகிறது. இவ்வாறு இணைய பக்கங்கள் மற்றும் பிற தகவல் தொடர்புச் சாதனங்களின் பயன்பாட்டை நாம் அடுக்கிக் கொண்டே போகலாம்.

தமிழ் கற்றல் கற்பித்தலில் தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதால் வாசிக்கும் திறன், கேட்கும் திறன், உரையாடும் திறன், எழுதும் திறன், சிந்தனைத்திறன் முதலிய திறன்கள் மாணவர்களிடம் அதிகரிக்கின்றன. மேலும் மாணவர்களின் தமிழ்மொழி கற்றலை எளிமையாக்குகின்றன. மொழிக் கற்றலில் தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவோம்! பயன் பெறுவோம்!

சுய அனுபவக் கற்றலின் வாயிலாக உயர்நிலைப் பள்ளி மாணவர்களின் பேச்சுத் திறனை மேம்படுத்துதல்

Dr வேல்முருகன் வசந்தி
வீரப்பன் புவனேஸ்வரி
ஹொங் கா உயர்நிலைப் பள்ளி
சிங்கப்பூர்.

முன்னுரை

மொழி என்பது மனிதனின் ஆன்மா பயணிக்கும் பாதை என்றும், ஒரு தலைமுறை அடுத்துவரும் தலைமுறைக்குத் தனது பெருமையும் சிறப்பும் கொண்ட பாரம்பரிய பண்பாட்டை எடுத்துச் செல்லும் பாதை என்றும் முனைவர் கிரிகிரி ஜேம்ஸ் என்ற மொழி அறிஞர் கூறுகிறார். அத்தகைய வல்லமை பெற்ற எந்த ஒரு மொழியும் கருத்துப் பரிமாற்றக் கருவியாகச் செயல்படும்போது பல மாற்றங்களைப் பெறுவது இயல்பு. வாழும் மொழியாக வலம் வந்துகொண்டிருக்கும் மொழிகளில் தமிழ் மொழி இன்று உயர்தனிச் செம்மொழியாக ஓங்கி உயர்ந்து நிற்கிறது. இத்தகைய சிறப்பு வாய்ந்த தமிழ் மொழி பேச்சு, எழுத்து என இரு நிலைகளாக அமைந்துள்ளன. பேச்சு மொழியில் மாணவர்களைச் சரளமாகப் பேச வைப்பதற்காகப் பல்வேறு முயற்சிகள் ஆசிரியர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஹோங் கா உயர்நிலைப் பள்ளி மாணவர்களின் பேச்சுத் திறனை மேம்படுத்தப் பள்ளி சார்ந்த ஆய்வு ஒன்று நடத்தப்பட்டது. கீழ்க்காணும் படம் ஆய்வுத் திட்டத்தை விளக்குகிறது.



உற்றுநோக்கல் (பிரச்சினையைக் கண்டறிதல்)

ஹோங் கா உயர்நிலைப் பள்ளியில் உயர்நிலை ஒன்று வழக்கம், ஒன்று விரைவு நிலையில் பயிலும் மாணவர்கள் இவ்வாண்டுத் தொடக்கத்தில் தொடக்க நிலை இறுதி

ஆண்டில் பெற்ற மதிப்பெண்களைக் கொண்டு அவர்கள் தமிழில் மிகச் சிறப்பாகச் செய்ய முடியும் என்ற மித மிஞ்சிய தன்னம்பிக்கையுடன் காணப்பட்டனர். ஆனால் உயர்நிலைக்கு வந்தபோது இதற்கு முற்றிலும் மாறுபட்ட நிலை காணப்பட்டது. வகுப்பில் கொடுக்கப்படும் பேசுதல் நடவடிக்கைகளிலும், ஆண்டிடைத் தேர்வின்போது கொடுக்கப்பட்ட வாய்மொழித் தேர்விலும் மாணவர்கள் தயக்கத்துடனும், தன்னம்பிக்கையின்றியும், ஆங்கில மொழி அதிகம் கலந்தும் பேசுவதை ஆசிரியர்களால் உணர முடிந்தது. இத்தகைய குறைகள் இன்றி மாணவர்கள் தன்னம்பிக்கையுடனும், தயக்கமின்றியும் பேச்சுத் தமிழில் இயன்ற வரை நன்றாகப் பேச வைப்பது எப்படி? என்ற வினாவிற்கு விடை காண முற்பட்டதன் விளைவே அனுபவம் சார்ந்த கற்றல் வழிப் பேச்சுத் திறனை மேம்படுத்துதல் என்னும் பள்ளி சார்ந்த ஆய்வாகும். இதனால் மாணவர்கள் அடைந்த முன்னேற்றத்தையும் ஆசிரியர்கள் மேற்கொண்ட அணுகுமுறைகளையும் பற்றி இக்கட்டுரை விளக்குகிறது.

பொதுவாக மாணவர்கள் பேசும்போது கீழ்க்காணும் குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

1. சொல்வளம் குறைவாக இருந்ததால் சொல்ல விரும்பும் கருத்தை முழுமையாகக் கூற முடியாது இருத்தல்
2. ஆங்கிலத்தில் சிந்தித்துத் தமிழில் பேச முற்படும் போது தவறான வாக்கிய அமைப்பில் கருத்துகளைக் கூறுதல்
3. மற்றவர்கள் முன்பு தான் பேசுவதில் தவறு ஏற்படும் என எண்ணியதால் பேசத் தயங்குவதோடு பிறர் தன்னைக் கேலி செய்வார்கள் என்ற எண்ணத்தில் பேச மறுத்தல்
4. தவறான உச்சரிப்புடன் பேசுதல்

திட்டமிடல்

இந்த ஆய்வில் உயர்நிலை ஒன்று விரைவு நிலை, வழக்க நிலை மாணவர்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். 13 முதல் 14 வயதிற்கு இடைப்பட்ட 19 மாணவர்கள் இந்த ஆய்வில் பங்கு பெற்றனர்.

ஆய்வுக்கு உட்படுத்தப்ட்ட மாணவர்களைத் தேர்ந்தெடுத்ததற்கான காரணங்கள்

1 நடுத்தர நிலையில் (Medium Ability) உள்ள மாணவர்களை ஊக்கப்படுத்தி அவர்களை உயர்நிலைக்கு உயர்த்தும் முறை எங்கள் பள்ளியில் நடைமுறையில் இருக்கிறது. அதன் காரணமாகவும்

2 விரைவு நிலையில் ஒன்பது மாணவர்கள் மட்டுமே இருந்ததால் வழக்க நிலையில் இருந்து பத்து மாணவர்களையும் இந்த ஆய்வில் ஈடுபடுத்தினால்

ஆய்வு சிறப்பாக அமையும் என்ற எண்ணத்தாலும் நாங்கள் விரைவு மற்றும் வழக்க நிலை மாணவர்களைத் தேர்ந்தெடுத்தோம்.

மாணவர்களின் தற்போதைய தமிழ் பேசும் சூழலைக் கண்டறியும் வகையில் மாணவர்களுக்கு 10 கேள்விகள் அடங்கிய கருத்தறி படிவமும், 3 தனிக் கேள்விகளும் கொடுக்கப்பட்டன. 40% விழுக்காட்டு மாணவர்கள் மட்டுமே வீட்டில் தமிழில் பேசுவதாகக் கூறினார்கள். 60% விழுக்காட்டு மாணவர்கள் வீட்டில் தமிழ் பேசுவதில்லை எனக் குறிப்பிட்டிருந்தனர். இக்கால மாணவர்கள் தகவல் தொழில் நுட்பத்தை அதிகம் சார்ந்து வாழ்பவராக இருக்கின்றனர். அவர்கள் பெரும்பாலும் தங்களது கருத்துப் பரிமாற்றத்திற்கு ''பேஸ் புக்'', டுவிட்டர், குறுஞ்செய்தி, கைத்தொலைபேசி போன்றவற்றை அதிகமாகப் பயன்படுத்துவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். இதனால் மாணவர்கள் தமிழில் பேசுவது மிகச் சுலபமான செயல் அல்ல.

இந்த ஆய்வில் மாணவர்களே பெரும்பாலும் கற்பித்தலில் ஈடுபடும் வகையில் பல்வேறு கற்பித்தல் உத்திகளைப் பயன்படுத்தி ஆய்வை மேற்கொள்ளத் திட்டமிட்டோம்.

முன்னோட்டத் தேர்வு

முன்னோட்டத் தேர்வில் மாணவர்களுக்கு ஆர்வத்தைத் தூண்டும் வகையில் அனுபவம் சார்ந்த தலைப்புக் கொடுக்கப்பட்டது. (நட்பு - உன்னுடைய வாழ்க்கையில் நட்பு மிகவும் அவசியம்) சிந்தி – இணை – பகிர் என்ற கூடிக் கற்றல் அணுகுமுறையைப் பயன்படுத்தி இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

விரைவு மற்றும் வழக்க நிலை மாணவர்கள், தங்களுக்குக் கொடுக்கபட்ட தலைப்பு அனுபவத்திற்கு உட்பட்டதாக இருந்ததால் ஆர்வத்துடன் ஈடுபட்டனர்.

இருப்பினும் விரைவு நிலை மாணவர்கள் தலைப்பை நன்கு புரிந்துகொண்டு பேசிய போதிலும் ஆங்கிலச் சொற்களின் தாக்கம் அதிகம் காணப்பட்டது.

வழக்க நிலை மாணவர்கள் ஒருசிலரைத் தவிர பெரும்பாலானவர்களுக்குப் போதிய சொல்வளம் இல்லாததால் சொல்ல வந்த கருத்தை விவரித்துப் பேச இயலவில்லை.

செயல்முறை

முதல் வாரத்தில் ஒளிப் படக் காட்சியினை (ஒலி நீக்கப்பட்ட) பார்த்து மாணவர்கள் படக்காட்சி தொடர்பான செய்திகளை ஊகித்துப் பேச்சுத் தமிழில் பேசினர். ஒவ்வொரு குழுவும் மற்ற குழுவினரின் பேச்சுத் திறனை மதிப்பீடு செய்தனர். (குழு மதிப்பீடு – AFL Group Observance) மதிப்பீட்டுப் படிவம் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு அதனை மதிப்பீடு செய்யும் முறையும் விளக்கப்பட்டது. மாணவர்களின் மதிப்பீட்டுப் படிவம்

ஆசிரியரின் தகுதி நிலை மதிப்பீட்டுப் படிவத்துடன் ஒப்பீடு செய்யப்பட்டுக் குறை நிறைகள் விளக்கப்பட்டன.

முதல் வாரத்தில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின்போது மாணவர்களின் திறனை அறிந்துகொண்டு வேறுபடுத்தப்பட்ட கற்பித்தல் அணுகுமுறையை (Differentiated Instruction) அடிப்படையாகக் கொண்டு வழக்க நிலை மாணவர்கள் இரண்டு குழுக்களாகவும் விரைவு நிலை மாணவர்கள் இரண்டு குழுக்களாகவும் திறன் அடிப்படையில் பிரிக்கப்பட்டனர். மூலிகைத் தோட்டத்தில் உள்ள செடிகளின் பெயர்களை மீத்திறன் குறைந்த மாணவர்கள் பட்டியலிட்டு வகுப்பில் படைத்தனர். மீத்திறன் மிக்க மாணவர்கள் மூலிகைத் தோட்டத்தில் உள்ள செடிகளின் பயன்களை இணையத் தளத்தில் கண்டறிந்து வகுப்பில் படைத்தனர். இவ்வாறு ஒரு குழு படைக்கும்பொழுது மற்ற குழு அவர்களைக் குழுநிலையில் மதிப்பீடு செய்தனர்
மூன்றாம் வாரத்தில் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் குடும்பம் தொடர்பான புகைப்படங்கள் எடுத்துவரச் செய்து அதைத் தேர்ந்தெடுத்ததற்கான காரணத்தையும் அது தொடர்பான கருத்துகளையும் வகுப்பில் பகிர்ந்து கொண்டனர். ஒவ்வொருவரும் பகிர்ந்துகொள்ளும்போது மாணவர்கள் இணை மதிப்பீடு செய்தனர். இணை மதிப்பீடு செய்த பிறகு எவ்வாறு மதிப்பீடு செய்தார்கள் என்பது பற்றிக் கேட்டுத் தெரிந்து கொண்டு ஆசிரியர்கள் அவர்கள் செய்த மதிப்பீட்டைப் பற்றிப் பகிர்ந்து கொண்டனர்.
நான்காவது வாரம், வார நாட்களிலும் வார இறுதியிலும் எத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள் என்பது தொடர்பான அனுபவங்களைப் பற்றிப் பேசினர். (RP வட்ட வரிசைக் கருத்துப் பரிமாற்ற முறையில் தங்களுடைய அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர்) அப்பொழுது மாணவர்கள் இணைநிலையில் மதிப்பீடு செய்யப்பட்டனர்.

தொடக்கத்தில் தனிப்பட்ட நிலையில் கொடுக்கப்பட்ட பேசுதல் நடவடிக்கை பின்பு குடும்பத்தை அடைந்து பின்பு தோட்டத்தைச் சென்றடைந்து அதன் பின்னர் பள்ளிக்கு வெளியே அவர்களை அழைத்துச் சென்றது. பள்ளியின் அருகில் இருக்கும் காய்கறிச் சந்தை, உணவுக்கடைக்கு மாணவர்கள் அழைத்துச் செல்லப்பட்டால். உடன் பயிலும் மாணவர்களுடன் வெளியே செல்லும் மகிழ்ச்சியான மனநிலை அவர்களின் தமிழ் பேசும் ஆர்வத்தை மேலும் அதிகப்படுத்தும் என்ற தளராத நம்பிக்கையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

ஐந்தாவது வார நடவடிக்கையில் மாணவர்கள் உணவுக்கடை, காய்கறிச் சந்தை போன்ற இடங்களுக்கு மாணவ நண்பர்களோடு செல்லும்போது மனதளவில் அவர்கள் பெறும் ஊக்கமும் உற்சாகமும் அவர்களைத் தமிழில் பேசத் தூண்டும் என்ற எண்ணத்தில் மாணவர்கள் ஆர்வத்துடன் கற்றல் பயணத்தை மேற்கொண்டனர்.

இந்நடவடிக்கையில் அவர்கள் கடைகளுக்குச் சென்று அங்குள்ள பொருட்கள், உணவுகள், காய்கறிகள் தொடர்பான செய்திகளைக் கடைக்காரர்களுடன் தமிழில் உரையாடித் தகவல்களைத் திரட்ட வேண்டும். பின்னர் கற்றல் பயணத்தில் கற்றுக் கொண்டவைகளையும், அதனால் பெற்ற அனுபவங்களையும் வகுப்பில் விளக்கமாகவும், தெளிவாகவும் பேசவேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது.

மேலும் வழக்கநிலை மாணவர்கள் சொல்வளத்தின் அவசியத்தை சற்றுக் கவனத்தில் கொள்ளவேண்டும் என்றும், விரைவு நிலை மாணவர்கள் சற்றுக் கூடுதல் நடவடிக்கையாகக் கற்றல் பயண அனுபவம் எவ்வாறு பேசுதல் நடவடிக்கைக்கு மேலும் உதவி செய்யும் என்பதைக் கருத்தில் கொள்ளவேண்டும் என்றும் பொருட்களின் பெயர்களையும் , அவை தொடர்பான கேள்விகளையும் இயன்ற அளவில் தமிழில் கேட்டு உரையாட வேண்டும் என்றும் கூறப்பட்டது.

மாணவர்கள் தங்கள் கைத்தொலைபேசியைப் பயன்படுத்தி உரையாடலைப் பதிவு செய்யவும், படம் எடுக்கவும் அனுமதிக்கப்பட்டனர். இதனால் இந்நடவடிக்கை மேலும் அவர்களின் ஆர்வத்தை அதிகப்படுத்துவதாகவும், தமிழ் பேசும் தன்னம்பிக்கையை ஊக்கப்படுத்தும் நிலையிலும் அமைந்தன.

கற்றல் பயணத்திற்குப் பின் வழக்கநிலை மாணவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் புதியசொற்களைக் கற்றுக் கொண்டு பேசுதல் நடவடிக்கையில் பங்குகொள்ள முடிவதாகக் கூறினர். விரைவுநிலை மாணவர்கள் அறிமுகம் இல்லாத ஒருவரிடம் பேசும்போது மிகுந்த கவனத்துடனும், வினாக்களைக் கேட்கும்போது புரியும் வகையில் கேட்கவேண்டும் என்பதைத் தாங்கள் அறிந்ததாகக் கூறினார்கள்.

தாங்கள் பேசுவதை ஒலிப்பதிவு செய்வது மேலும் தாங்கள் தமிழில் பேச உதவுவதாகவும் கருத்துத் தெரிவித்தனர். தாங்கள் பதிவு செய்த உரையாடலை மீண்டும் கேட்கும் அனுபவம் தங்களுக்கு மகிழ்ச்சி அளிப்பதாகவும் கூறினர்.

ஆறாவது வாரம் மாணவர்கள் பண்பாடு தொடர்பான சூழலை (ஒரு குழு மங்கலப் பொருள்கள் பற்றியும் மற்றொரு குழு சமையல் பொருள்கள் பற்றியும் சூழலை வகுப்பறையில்) உருவாக்கி அது பற்றிப் பேசினர்

வழக்கநிலை, விரைவுநிலை மாணவர்கள் ஒவ்வொருவரும் மங்கலப் பொருட்கள், பாரம்பரிய உடைகள், உணவுகள், அணிகலன்கள் என்று நம் பண்பாட்டை எடுத்துக்கூறும் பொருட்களைக் கொண்டு ஒரு கண்காட்சி அமைத்தனர்.

கண்காட்சியில் இடம்பெற்ற பொருட்களின் பெயர்கள், அவற்றின் பண்பாட்டுச் சிறப்பு போன்ற தகவல்களை இணையத்தின் உதவியாலும், பெற்றோர்களின் உதவியாலும், தாத்தா பாட்டியின் உதவியாலும் பெற்று அவற்றை வகுப்பில் பேசினர். பண்பாட்டுச்

சூழலைத் தாங்களே உருவாக்கிப் பேசியதை அவர்கள் பெருமையாகவும், மகிழ்ச்சியாகவும் நினைத்ததை ஆசிரியர்கள் அறிய முடிந்தது.

இது போன்ற நடவடிக்கைகளால் தமிழில் பேசுவது கடினம் என்ற நிலைமாறி மாணவன் நினைத்தால் நடத்திக் காட்டலாம் என்ற உயர்ந்த நோக்கோடு வகுப்பில் பேசும் எண்ணமே மேலோங்கி நின்றது.

கடந்த ஆறு வாரத்தில் மாணவர்கள் பெற்ற அனுவங்களைப் பற்றியும் அது தொடர்பான செய்திகளையும் பற்றி மாணவர்கள் வாயிலாகக் கேட்டறியப்பட்டன.
இவ்வாறு ஆறு வாரங்களுக்குத் தொடர்ந்து மாணவர்களின் வாய்மொழித் திறனை மேம்படுத்தும் பல்வேறு விதமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மாணவர்கள் கருத்துப் பரிமாற்றம் செய்யக்கூடிய வகையில் அவர்கள் தனியாகவும் குழுவாகவும் இணையாகவும் பலவிதமான நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இதனை அடிப்படையாகக் கொண்டு மாணவர்களுக்குப் பின்னிலைத் தேர்வு ஒன்று நடத்தப்பட்டது.

முடிவு

ஆறு வார நடவடிக்கைகளுக்குப் பிறகு மாணவர்களின் தமிழ் பேசும் ஆர்வம் அதிகரித்திருந்ததை உணர முடிந்தது.
ஆர்வம் கூடியிருந்ததோடு தங்களாலும் தமிழில் பேச முடியும் என்ற தன்னம்பிக்கை ஏற்பட்டதைக் காண முடிந்தது.
ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமிடையேயான புரிந்துணர்வு மேம்பட்டிருந்தது. எழுத்துத் தமிழிலில் பேசுவதிலிருந்து மாணவர்கள் பேச்சுத்தமிழில் பேசுவதற்கு முயன்று அதில் வெற்றிபெற்றிருக்கிறார்கள் என்பதை ஆசிரியர்களால் உணர முடிந்தது.
மாணவர்களிடையே குழு உணர்வும், போட்டி மனப்பான்மையுடன் செயல்படும் திறனும் இருந்ததை அறிய முடிந்தது.
வேறுபட்ட சூழலில் மாணவர்கள் பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபடும்போது அவர்கள் ஆர்வமுடன் செயல்பட்டதைக் காண முடிந்தது.
அனுபவம் சார்ந்த கற்றிலின் வாயிலாக வகுப்பில் மேற்கொள்ளப்பட்ட இத்தகைய நடவடிக்கைகள் வழியாக பேசுதலில் மாணவர்களின் ஆர்வத்தையும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கச் செய்ததுடன் பேச்சுத் தமிழில் திறம்படப் பேச முற்பட்டனர் என்பதை ஆசிரியர்களால் அறிய முடிந்தது.

அட்டவணை

ஒன்று வழக்கம்	Pre – Test முன்னிலைத் தேர்வு	15.8 Mean Mark
	Post – Test பின்னிலைத் தேர்வு	18.8 Mean Mark
ஒன்று விரைவு	Pre – Test முன்னிலைத் தேர்வு	17 Mean Mark
	Post – Test பின்னிலைத் தேர்வு	19.6 Mean Mark

உயர்நிலை ஒன்று வழக்கம் மாணவர்களின் முன்னிலைத் தேர்வின் சராசரி முடிவுகள் 15.8 ஆகவும் பின்னிலைத் தேர்வின் சராசரி முடிவு 18.8 ஆகவும்இருந்தது.
உயர்நிலை ஒன்று விரைவு மாணவர்களின் முன்னிலைத் தேர்வின் சராசரி முடிவுகள் 17 ஆகவும் பின்னிலைத் தேர்வின் சராசரி முடிவு 19.6 ஆகவும் இருந்தது.

விளைவுகளும் இடர்பாடுகளும்

1. ஆங்கிலத்தில் பேசுவதையே வழக்கமாகக் கொண்டிருக்கும் மாணவர்கள் நடவடிக்கைகளில் ஈடுபடும்போது ஆர்வமின்றி இருந்தனர்
2. தகவல் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தும்போது ஏற்படும் இடர்பாடுகளைச் சரி செய்ய ஆசிரியர்களுக்குப் பயிற்சி தேவைப்பட்டது.
3. குழு நடவடிக்கைகளில் ஈடுபடும்போது மாணவர்கள் ஆங்கிலத்தையும் பயன்படுத்தவே செய்தனர்.
4. போதுமான சொல்வளம் இல்லாதபோது மாணவர்களிடையே தயக்கம் ஏற்பட்டது
5. ஆங்கிலத்தில் சிந்தித்துத் தமிழில் பேசும்போது தவறான வாக்கிய அமைப்பில் பேசினர்.

பரிந்துரைகள்

பள்ளிகளும் சமூக அமைப்புகளும் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு மேலாகத் தங்கள் பிள்ளைகள் தாய்மொழி கற்பதற்கு உகந்த சூழலை உருவாக்கிக் கொடுக்கும் பெரும் பொறுப்பு பெற்றோர்களுக்கு இருக்கிறது என்ற கல்வி அமைச்சின் 2010 தாய்மொழிகள் மறு ஆய்வுக் குழு அறிக்கையில் கூறப்பட்ட கருத்துப்படி

''மாணவர்கள் தமிழ்மொழியை ஆர்வத்துடன் பேசப் பள்ளிகளும் சமூகமும் மட்டுமல்லாது பெற்றோர்களும் இணைந்து செயல்படுவதோடு, தங்கள் பிள்ளைகளிடம் தமிழில் பேசி, அவர்களையும் தமிழில் பேச ஊக்குவித்தால் தமிழ் மொழி என்றும் வாழும் மொழியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை''.

முடிவுரை

இதுபோன்ற பள்ளி சார்ந்த ஆய்வுகளை மேற்கொள்வதால் மாணவர்கள் தயக்கமின்றியும், சொல்வளத்துடனும், ஆங்கிலச் சொற்களை அதிகம் கலக்காமலும் பேசுவர் என்பது திண்ணம்.

பயன்பட்ட நூல்கள்

1. இராமையா கா தமிழில் மாணவர்கள் செய்யும் மொழிப் பிழைகள் – ஓர் ஆய்வு ஸ்டாம்ஃபோர்டு அச்சகம், சிங்கப்பூர்,1998
2. திண்ணப்பன் ,சு.ப சிங்கப்பூரும் தமிழ் மொழியும் இலக்கியமும் தேசியக் கல்விக் கழகம், சிங்கப்பூர்- 1993
3. திருமலை, எம்.எஸ் மொழி கற்பித்தல்,மாணிவாசகர் நூலகம், சிதம்பரம்,1978
4. பரமசிவம் கு, இக்காலத் தமிழ் மரபு, அன்னம் வெளியீடு, சிவகங்கை.
5. Vidwan. K, Tamil Teaching and Learning Today and Tomorrow: A South African Perspective – First World Tamil Teacher's conference, Singapore.
6. தாய்மொழிகள் மறு ஆய்வுக் குழு அறிக்கை - MOE 2010.
7. Teaching and Learning of Tamil Language in a Fun Way – Volume 1 Dr Seetha Lakshmi 2009

இரண்டாம்மொழி / அந்நியமொழி நிலையில் தமிழ் கற்றலும் கற்பித்தலும்

Dr. அனுஷ்யா சத்தியசீலன்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

முன்னுரை

மொழி என்பது சிந்தனையின் மூலஊற்று. சமுதாயத்தை இணைக்கும் சங்கிலி. மனித உறவுகளை ஆக்கும், ஆற்றல் படைத்த ஆயுதம். பண்பாட்டின் குறியீடு. இலக்கியப்பின்னங்களின் நூலிழை. மொத்தத்தில் மொழி அறிவின் ஊற்று. உணர்வின் அடிநாதம். நம்மை நமக்கு உணர்த்தி நாம் நமக்காக வாழ்வதற்கு வழி கோலுவது. இம்மொழியை இரு வகையில் பயிலலாம். 1. மொழிக்கல்வி 2. மொழிவழிக்கல்வி. 1.மொழிக்கல்வி என்பது மொழியை அறிவதற்காகக் கற்பது. 2. மொழிவழிக்கல்வி என்பது குறிப்பிட்ட ஒரு மொழியினூடாக வேறோர் அறிவுத்துறையைக் கற்பது. இவ்விரு வகை காணப்படினும் இக் கட்டுரையில் மொழிக்கல்வி பற்றிய கருத்தாடல்களே இடம்பெறுகின்றன.

தமிழ் மொழியானது இன்று இராட்சத வேகத்துடன் வளர்ந்து வரும் உலகமயமாதலினால் பல இன்னல்களுக்குட்படுவதனை அவதானிக்க முடிகிறது. உலகமயமாதலுக்கு காரணமாக இருப்பவைகளில் முதன்மையானது கணனியும் அதனோடிணைந்த இணைய வசதிகளுமாகும். இச்சாதனங்களின் தாய்மொழியாக இருப்பது ஆங்கிலமே. இன்றைய கற்கை நெறிகளும் வேலைவாய்ப்புக்களும் இதனோடிணைந்த வகையிலே பெருகிச் செல்லும் போது ஆங்கிலக் மொழியின் விருத்தியும் அதிகரித்துச் செல்கின்றது. அதனால் ஏனைய மொழிகளின் செல்வாக்கும் வளர்ச்சியும் குறைந்துவிட்டன. இத்தாக்கமானது தமிழ்மொழியை பாதிக்கவே செய்கின்றது. இத்தாக்கம் தமிழ்மொழியை தாய்மொழியாகக் கற்பவர்களிடத்திலும் பார்க்க இரண்டாம் மொழியாகக் கற்பவர்களிடையே அதிகம் உள்ளது. புலம்பெயர் தமிழர்களே இரண்டாம் மொழியாகத் தமிழைக் கற்கிறார்கள். இவர்கள் உலகின் பல்வேறு நாடுகளிலும் வாழ்கின்றனர். அங்கே அவர்கள் கல்விமொழியாக அவ்வவ் நாட்டு மொழியையே பயன்படுத்துகின்றனர். அதனால் தமது உண்மையான தாய்மொழியைக் கற்க முயலும் போது பல இடர்பாடுகளை எதிர்நோக்குகின்றனர். இந்நிலையிலிருந்து தமிழ்மொழியை காப்பாற்ற வேண்டுமாயின் புலம்பெயர் நாடுகளில் தமிழ்மொழியை கற்கும் - கற்பிக்கும் போது ஏற்படுகின்ற இடர்பாடுகளையும் அவற்றிலிருந்து விடுபவதற்கான உத்திகளையும் அடையாளம் காணுதல் மிக அவசியமானது. ஊடகங்களினூடும் நேர்காணல்களினூடும் கிடைத்த தரவுகளின் அடிப்படையில் இவ்விபரண ஆய்வுக்கட்டுரை இடம்பெறுகிறது.

அந்த வகையில் முதலில் கற்றல் கற்பித்தலிலான இடர்பாடுகளை நோக்கி, கற்றல் கற்பித்தலை மேம்படுத்துவதற்கான உத்திகளை ஆராயலாம்.

கற்றல் கற்பித்தலிலான இடர்பாடுகள்-

1. தமிழ் மொழியைக் கற்க முற்படும் போது அதற்கான அடிப்படைத்திறன்கள் (கேட்டல்,பேச்சு,வாசிப்பு,எழுத்து) பிள்ளைகளிடம் முதலில் விருத்தி செய்யப்படல் அவசியம். பேச்சுத் தமிழுக்கும் எழுத்துத் தமிழுக்கும் அமைப்பில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. எழுத்துத் தமிழை பிள்ளைகள் புதிய மொழியாகவே கருதுகின்றமையை உணர முடிந்தது. ஒரு பிள்ளை பொதுவாக தனது மொழித் தேட்டத்தை ஆறு வயதிற்குள் பூரணமாக்கி விடுகின்றது. ஆனால் புலம் பெயர் நாடுகளிலுள்ள பிள்ளைகள் அவ்வயதுப் பருவத்தை தாண்டிய பின்னரே தமிழ் மொழியைக் கற்க ஆரம்பிக்கின்றனர். அதனால் அவர்களிடம் மொழித்திறன் விருத்தி குறைவாகவே ஏற்படுகின்றது.
2. தமிழைக் கற்க, கற்பிக்க முயலும் போது மொழியமைப்பு, இலக்கண அமைப்பு, இலக்கிய அமைப்பு, ஒலியனியல் வேறுபாடு, உருபனியல் வேறுபாடு மயங்கியல் வேறுபாடு போன்றனவற்றை இனங்காண சிரமப்படுகின்ற தன்மையும், தமது கல்விமொழி, இரண்டாம் மொழியை ஒன்றுடன் ஒன்று கலந்து தூய்மையற்ற மொழிப் பிரவாகத்தை வெளிப்படுத்த முனையும் தன்மையும் அது பிழையென உணரும் சந்தர்ப்பங்கள் கிடைக்கும் போது தமிழை கற்பதலிருந்து விலகிச் செல்லும் நிலையினையும் காணமுடிகிறது. அதற்கு ஆசிரியரின் மொழியறிவு போதாமை காரணமாகின்றது.
3. தமிழ் மொழியைக் கற்பிக்கின்ற கல்வி நிலையங்களில் பொருத்தமான சூழல்கள் அமைந்திருக்காமையைப் பெறப்பட்ட தகவல்களிலிருந்து அறிய முடிகிறது. உதாரணமாக - கலைத்திட்ட பொருத்தப்பாடின்மை, ஆசிரியவளம் காணப்படாமை போன்றவற்றைக் குறிப்பிடலாம். பேச்சுத்தமிழைக் கற்பதற்கு போதனைகள் பெரிதாகத் தேவைப்படுத்துவதில்லை, வீட்டிலோ, சகபாடிகளிடத்திலிருந்தோ கற்றுக்கொள்ள முடியும். ஆனால் எழுத முற்படும்போது தமிழின் இலக்கண அமைப்பு பின்பற்றப்படுவதற்குரிய பொதுமைகளினதும், விதிகளினதும் அடிப்படையில் கற்பிக்கக்கூடிய ஆசிரியவளம் கிடைக்கப் பெறாமை சுட்டிக்காட்டப்படத்தக்கது.
4. கற்பித்தலை மேற்கொள்ளும் போது பொருத்தமற்ற உபகரணப் பயன்பாடு அல்லது அவற்றிலிருந்து உச்சப்பயனைப் பெறக்கூடிய சிறப்புத் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள் இல்லாமை போன்ற பின்னடைவுகளும் காணப்படுகின்றன. அதனால் சரியான மொழி நகர்வு அங்கு இடம் பெறுவதில்லை.

5. மாணவர்களைத் தனித்தனியாக இனங்காணக் கூடியவல்லமை கற்பிப்பவர்களிடையே இருக்க வேண்டும் என மொழியறிஞர்கள் கூறுகிறார்கள். அத்தகைய தன்மை வெளிநாடுகளில் காணப்படுவதில்லை என்ற உண்மையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.
6. நவீனமொழியியல், உளவியல், ஆராய்ச்சி முறைகள் என்பன ஓங்கி வளர்ந்து வரும் இந்நாட்களில் தமிழ்மொழி கற்றல் கற்பித்தலுக்கான தரமான பாடநூல்கள், பயிற்சி நூல்கள் எழுதுதப்படுவதும், வெளியிடுடப்படுவதும் புலம்பெயர் நாடுகளில் போதுமானதாக இல்லை. பாடநூல்களில் உள்ளடக்கம், பயிற்சிகள் மொழி கற்றலை விருத்தி செய்வனவாக போதியளவில் இல்லாமையும் இங்கு கருத்தில் கொள்ளப்படத்தக்கன.
7. மொழியைக் கற்பிப்பவர்கள் மாணவர்களின் பயிற்சிக் கொப்பிகளை திருத்துவதும், பின்னூட்ட்டல்களைச் செய்வதும் குறைவு என்பதை அறியமுடிகிறது மேலும் தொடர்செயற்பாடு/ தொடர்மதிப்பீடு என்பனவற்றில் அக்கறை காட்டப்படுவதில்லை என்பதும் கள அனுபவங்கள் வழங்கப்படுவதில்லை என்பதும் சுட்டிக்காட்டப்படுகின்றன.
8. எழுத்துக்களை எழுத ஆரம்பிக்கும்போது முறையான ஒழுங்குமுறை பின்பற்றப்படாமை, உச்சரித்து எழுதாமை, போன்றவற்றினால் எழுத்துக்களை உறுப்பின்றி எழுதுதல், எழுத்துப்பிழை விடுதல் போன்ற குறைபாடுகளும் மிகுந்தளவில் காணப்படுகின்றன.
9. மொழியைக் கற்பிப்பவர்களுக்கான வழிகாட்டல்கள், கருத்தரங்குகள், செயலமர்வுகள் போன்றன அந்நாடுகளில் இடம்பெறுவது மிகக்குறைவு அதனால் கற்பித்தலில் ஈடுபடுபவர்களால் ஒரு மாணவனின் உளவயது, உளவயதுக்கான பாட எல்லை, கற்பித்தல் முறைமைகள், உபகரணப்பயன்பாடு, மாணவர்களது வாழ்க்கைப்பின்னணி என்பனவற்றில் அக்கறை காட்டப்படுவதில்லை இந்நிலைப்பாடுகளும் பின்னடைவை ஏற்படுத்துகின்றன.
10. எந்தவொரு செயன்முறையிலும் திட்டமிடல், ஒழுங்குபடுத்தல் பொருத்தமாக இடம்பெறும்போதுதான் உத்தமவிளைவை எதிர்பார்க்க முடியும். இதனையே "முகாமைச்செயன்முறை" என்பர். ஆனால் புலம்பெயர் நாடுகளில் இம்முகாமைச் செயன்முறை இல்லாமல், அல்லது ஓரளவு இருக்கின்ற நிலையில் கற்றல் – கற்பித்தல் இடம்பெறுகின்றது. அதனால் மாணவர்களும் ஆசிரியர்களும் தமது நோக்கம் / இலக்கு எதுவெனத் தெரியாமலே கற்றல் கற்பித்தல் செயன்முறையில் ஈடுபடுகின்றனர்.

மேற்கூறியது போன்ற இன்னோரன்ன போதாமைகள் புலம்பெயர் நாடுகளில் தமிழ்மொழியை இரண்டாம் மொழியாகக் கற்றல் – கற்பித்தலின் போது

காணப்படுகின்றமையை அறிய முடிகிறது. அந்த வகையில் மேம்பாட்டிற்கான உத்திகளை அடையாளம் காணுதல் இங்கு பொருத்தமானதாகும்.

கற்றல் – கற்பித்தலை மேம்படுத்தலுக்கான உத்திகள்

புலம்பெயர் தமிழர்களின் மொழி கற்றல்கற்பித்தலில் கூடிய அக்கறை செலுத்தப்படவேண்டும். தாய்மொழியின் அவசியம் உணரப்படவேண்டும். முதலில் ஒரு மாணவனுக்கு ஏன் மொழியைக் கற்கின்றோம் / கற்பிக்கின்றோம் என்பது பற்றிய தெளிவு ஏற்படுத்தப்படல் வேண்டும். மொழித்திறன்களின் அவசியம் உணர்த்தப்படவேண்டும். மொழி கற்பதற்கு அடிப்படையாக அமைவது மொழித்திறன்களாகும். அவையாவன ஏற்கெனவே குறிப்பிடப்பட்டது போல– கேட்டற்றிறன், பேச்சுத்திறன், வாசிப்புத்திறன், எழுத்துத்திறன் என்பவையாகும். ஆரம்பநிலையில் கேட்டல், பேச்சுத்திறன்களை வளர்த்துக்கொள்வதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும். ஏனெனில் கேட்டல், பேச்சு எனும் மொழித்திறன்களினூடே மொழித்தாடனம் ஏற்படுகிறது. கேட்டலின் மூலம் எழுத்து, சொற்களின் உச்சரிப்பு வேறுபாடுகளை, ஒலியன்களின் இயல்புகளை அறியமுடிகிறது. கேட்டற்திறன் நன்கு அமையும் ஒரு மாணவனால் நன்கு சிந்திக்கமுடியும். எண்ணக்கருக்களை உள்வாங்க முடியும். உள்வாங்கியவற்றை வெளிப்படுத்த முனைகையில் பேச்சுத்திறன் விருத்தியாகின்றது. இவ்விரண்டும் மொழித்திறன்களில் இலகுவானவையாகும். பின்புதான் “எழுத்து” எனும் மொழித்திறன் தொழிற்பாடு பயிற்றப்பட வேண்டும். எழுதத்தொடங்குமுன் “எழுத்து” எனும் உடற்தொழிற்பாட்டுக்கான நடைமுறைகளை, தசைக்கட்டுப்பாட்டை வளர்த்துக்-கொள்ளல் வேண்டும். வட்டமும் கோடும் போட முடியாத பிள்ளையால் எழுதமுடியாதாகையால் அவற்றினை அடிப்படையாகக் கொண்டு எழுத்தைப்பழக்குதல் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

“எழுத்து என்பது பேச்சினை நிரந்தரம் ஆக்கும் ஒரு முயற்சி எனலாம். பேச்சு திட்டவட்டமற்ற மனநிலையிலிருந்து தோன்றுவது. எழுத்து அம்மனநிலையிலிருந்து திட்டவட்டமான மனநிலையை வெளிப்படுத்துவதற்கு தன்னை ஒழுங்குபடுத்திக்-கொள்ளும் முறைமையைக் குறிப்பது” என பேரா.க.சிவத்தம்பி குறிப்பிடுவதும் இங்கு மனங்கொள்ளத்தக்கது.

இந்த அடிப்படையில் ஒவ்வொருதிறன்களையும் வளர்ப்பதற்கான உத்திகள் சிலவற்றை இனங் காணலாம்.

கேட்டல், பேச்சு திறன் வளர்த்தல் -

1. சிறந்த பேச்சாளர்களது நன்கு உச்சரிக்கப்பட்ட தெளிவான பேச்சுக்களை கேட்க ஒவ்வொரு மாணவனுக்கும் வாய்ப்புக்கள் வழங்கப்படல்.

2. தானே பேசிப்பழக வாய்ப்புக்கள், நேர அவகாசம் வழங்கப்படல்.

3. தாம் பேசும் மொழியை ஒலிப்பதிவு செய்து மீளக் கேட்பதற்கும் உச்சரிப்புப் பிழைகளை இனங்காண்பதற்கும் சந்தர்ப்பங்கள் வழங்கப்படல்.
   ஒவ்வொரு மாணவனும் இச்செயற்பாடுகளின்போது தனித்தனியே கவனிக்கப்படல்.

4. பொருத்தமான, தெளிவான உச்சரிப்புக்களைக் கொண்ட மொழி நாடாப்பதிவுகள் சேகரிக்கப்படல், பயன்படுத்தப்படல்.

5. செயற்பாட்டுக்கல்வி, அனுபவக்கல்வி என்ற கற்பித்தல் முறைமைகளே இன்று அதிக பிரசித்தி பெற்றுள்ளன. அந்த வகையில் மாணவர்களிடையே செயற்பாடுகளினூடாக அனுபவம் பெறப்படல். இத்திறன்களை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல். இத்தகைய திறன்களில் (கேட்டல், பேச்சு) புலம்பெயர் நாடுகளிலுள்ள பிள்ளைகள் தேர்ச்சி பெறுவது சிறிது குறைவானதாகவே இருக்கும் என்பதால் மொழியைக் கற்பிக்க முற்படும்போது தரவுகளை வழங்குவதனை முக்கியமாகக் கொள்ளாது அவற்றைத் தாமாக கற்றுக்கொள்வதற்கான புறச்சூழல் உருவாக்கப்படல் வேண்டும்.

எழுத்து, வாசிப்புதிறன்களை கற்பிப்பதற்கான உத்திகள்-

1. ஒலிக்குறிகளை கேட்டுப் பொருளுணரும் திறன் வளர்ச்சி பெற்ற பின்னர் அச்சிடப்பட்ட எழுத்துக்களை வாசித்து பொருளுணரும் திறனுக்கான பயிற்சிகள் வழங்கப்படல்.

2. தமிழ் மொழியிலுள்ள எழுத்து நிலையிலுள்ள சில தனிக்கூறுகள் சிக்கல்களை தோற்றுவிக்கலாம். தமிழில் ஒவ்வொரு ஒலிக்கும் நிகரான வரி வடிவமில்லை. ஒரு வடிவம் மூன்று ஒலிகளுக்கு பயன்படுத்தப்படலாம். உ.ம்-“க” என்ற வடிவம் ஒலிப்பிலா அடைபொலிக்கும், ஒலிப்புடை அடைப்பொலிக்கும், உரசொலிக்கும் பயன்படுத்தப்படுகிறது. பகல், தங்கம், கனி என்பவற்றை எடுத்துக்காட்டலாம். இது போன்ற நுணுக்கங்கள் ஆசிரியர்களால் இனங்காணப்பட்டு மிகுந்த தெளிவுடன் கற்பிக்கப்படல்.

3. எழுத்துக்கள் எழுதுவதற்காக இலகுவான படிமுறையமைப்பில் அறிமுகப்படுத்தப்படல். உதாரணம்- 1. முதலில் உயிர் எழுத்துக்களையும், பின்

மெய்யெழுத்துக்களையும், அதன்பின் உயிர்மெய் எழுத்துக்கயையும் எழுதப்பழக்குதல். 2. அதன்பிற்பாடு “நெடுங்கணக்கு அட்டவணை” கொண்டு சொல்லாக்கங்களை உருவாக்க உதவுதல். 3.சொற்களைக் கொண்டு தனிவாக்கியங்கள், பிற்பாடு கூட்டுவாக்கியங்கள், கலப்புவாக்கியங்கள் எழுதப்பழக்குதல். அடுத்த படிநிலையில் தத்தமது வாக்கிய மொழிவடிவில் எழுத பயிற்றுவித்தல்.

4. வாசிப்பின் போது பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்தப்படலாம். வாக்கியங்கள் ஆக்குவதிலிருந்து ஆக்கங்கள் படைக்கும் வரையிலான நிலைகளில் பொருத்தமான இடங்களில் இலக்கணம் தொடர்பான விளக்கங்கள் அளிக்கப்படல் வரவேற்கத்தக்கதாகும். தனித்து இலக்கணம் கற்பித்தல் என்பது பொருத்தப்பாடானதாகவும், வினைத்திறன்மிக்கதாகவும் அமையாது. உச்சரிப்பு, தொனிவேறுபாடு, தெளிவு, என்பனவற்றில் அக்கறை செலுத்தப்பட வேண்டும். மேலும் மௌனவாசிப்பு, உரத்துவாசிப்பு, மேலேட்டவாசிப்பு, பொருளுணர் வாசிப்பு என்பனவற்றிலும் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

5. வாசிப்புத்திறனை மேலும் ஊக்குவிக்க ஏற்ற நூல்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள், நாவல்கள், சிறுகதைகள் என்பவற்றையும் இலத்திரனியல் ஊடகங்களையும் பாவிக்கும் பழக்கம் மாணவர்களிடம் ஏற்படுத்தப்படல் அவசியம்.

தமிழ்மொழி கற்பித்தலின்போது பொதுவாக கவனத்திற் கொள்ளப்பட வேண்டியவை.

1. கற்றல் கற்பித்தற் செயற்பாடுகளைச் சிறந்த முறையில் ஒழுங்குபடுத்திக் கொள்வதன் மூலம், வகுப்பறையில் உகப்பானதொரு சூழ்நிலை உருவாக்கப்படல்.
2. சினேகபூர்வமான வகையில் சிறப்பான விதத்தில் ஆசிரியர் – மாணவர் இடைத் தொடர்புகள் பேணப்படல்.
3. மாணாக்கர் இலகுவாகக் கிரகித்துக் கொள்ளக் கூடியவிதத்தில், கற்பிக்கவிருக்கும் பாட உள்ளடக்கத்தை அமைப்பாக்கி, ஒழுங்குபடுத்தி, இலகுவாக்கி வழங்குவதன் மூலம் கற்றலை இலகுபடச்செய்தல்.
4. கற்றலுக்கு வழிகோலும் வகையிலான மெச்சுதல்(புகழ்தல்), வரவேற்றல் போன்ற ஊக்குவிப்பு பயன்படுத்தப்படல்.
5. கற்பிக்கும் விடயங்கள் நன்கு தெளிபடுத்திக் காட்டப்படல்.
6. மாணாக்கர் சுயகற்றலில் ஈடுபடுமாறு தூண்டப்படல்.
7. தேடியறிவதற்கும், கண்டறிந்து கற்பதற்கும், பிரச்சினைதீர்க்குந் திறன் விருத்திக்கும் தேவையான சந்தர்ப்பங்கள் வழங்கப்படல்.

8. செயற்பாடுகள், விளையாட்டுக்கள், பாத்திரமேற்று நடித்தல் முதலியவற்றி-னூடாகக் கற்பிக்க முயலுதல்.
9. கற்போர் ஈடுபடக்கூடிய வகையில் படிநிலை வரிசையில் அறிவு வழங்கப்படல்.
10. பொருத்தமான மீளவலியுறுத்தல்கள், பின்னூட்டல்கள் வழங்கப்படல்.

முடிவுரை

கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து எனும் நான்கு மொழித்திறன்களையும் ஆரம்ப நிலையிலிருந்து படிப்படியான முறையில் நன்குதிட்டமிட்டு, போதிய வளங்களின் துணைகொண்டு, பல்வேறு கற்பித்தல் முறைகளையும், நுட்பங்களையும் பயன்படுத்தி, கற்பித்தல் இடம் பெறும் பொழுது தமிழ்மொழி கற்றல் என்பது மிக எளிதான ஒரு காரியமாகவே அமையும். அதற்கு ஆசிரியர் அர்ப்பணிப்போடும் ஈடுபாட்டோடும் கற்பிப்பதும் மாணவன் ஆர்வத்தோடும், மகிழ்ச்சியோடும் கற்பதும் மிகவும் வேண்டற்பாலன. புலம்பெயர் நாடுகளிலுள்ள தமிழர்கள் தமிழ்மொழியை "வாழும்மொழி" ஆக வைப்பதற்கு மேற்கூறப்பட்ட அம்சங்களில் கவனம்செலுத்தப்படுதல் வினைத்திறன்மிக்க, விளைதிறன்மிக்க இரண்டாம் மொழி கற்றல் –கற்பித்தலுக்கு வழிவகுக்கும்.

<u>துணைநூல்கள்</u>

1. Dakin Julian and Others, (1968) Language in Education: The Problems in Common Wealth Asia and Indo-Pakistan Sub Continent, London.
2. Harry Abeygunawardne, (1999) "Some Thoughts on Language" Week End Express, Colombo.
3. Pattanayak D,P (1981)Multilingualism and Mother Tongue Education ,Oxford University Press, Bombay, Calcutta, Madras.
4. WWW.geocities.com
5. WWW.und.ac.za.
6. சத்தியசீலன் ச.(1996) இலங்கை அரசியலில் மொழியும் மதமும்; யாழ்ப்பாணம்.
7. நேர்காணல்மூலம் பெறப்பட்டவை.

தமிழ் மொழியில் எழுத்தாற்றலை வளர்ப்பதில் செய்தித்தாளின் பங்கு

சரசு பூபதி
அஸ்மது பீவி
சிராங்கூன் கார்டன் உயர்நிலைப் பள்ளி, சிங்கப்பூர்

முன்னுரை

தமிழ் மாணவர்கள் எழுத்துத் தமிழ், பேச்சுத் தமிழ் இரண்டிலும் திறமை பெற வேண்டும். அப்போதுதான் அவர்களுடைய மொழி ஆற்றல் நிலைத்து நிற்கும்" (தமிழ்மொழிப் பாடத்திட்ட மறு ஆய்வுக் குழு அறிக்கை 2005 பக்கம் 26). எழுதுதலுக்கு ஒரு தனி சக்தி உண்டு. நேரடியாகப் பேசத் தயங்கும் மாணவர்கள்கூட துணிச்சலோடும், தன்முனைப்போடும், தன்னம்பிக்கையோடும் தங்கள் கருத்துகளை வெளிப்படுத்த எழுத்து துணைபுரிகிறது. This power that writing has to increase students' self esteem is attributed to the fact that most pupils are more courageous in their compositions than in their speech. Writing affords the time necessary to cultivate confidence and ideas (p211,Cathy Collins Block).

மொழிக்கல்வியில் சமூகம், குடும்பம், தனியார் நிறுவனங்கள், தொடர்புச் சாதனங்கள் அனைத்திற்கும் பெரும்பங்கு உண்டு (சரவணன் கோபிநாதன்). தமிழை மாணவர்கள் விரும்பிக் கற்கும் வகையில் நடைமுறைக்கு ஏற்றவாறு புதுப்புது உத்திகளைப் பயன்படுத்தி கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொண்டால் மாணவரிடையே தமிழ்மொழியைப் படிக்க வேண்டும் மற்றும் அன்றாடம் பேச வேண்டும் என்ற ஆர்வம் மேலோங்கும். இதனைக் கருத்திற்கொண்டு, ஆய்வாளர்கள சிங்கப்பூரில் வெளிவரும் தமிழ் முரசு செய்தித்தாளைப் பயன்படுத்தி, மாணவர்களின் எழுத்தாற்றலை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு இவ்வாய்வினை மேற்கொண்டுள்ளனர்.

சிக்கலைக் கண்டறிந்த விதம்

தற்போதுள்ள சூழ்நிலையில் நம் மாணவர்களில் பெரும்பாலோர் தமிழ் நூல்களையோ அல்லது செய்தித்தாளையோ விரும்பிப் படிப்பது கிடையாது. இதன் விளைவாக மாணவர்களின் எழுத்தாற்றல் பாதிக்கப்பட்டிருந்தது.

தங்கள் மனதில் உதித்த எண்ணங்களை வெளியிட தேவையான சொல்வளம் குன்றி இருந்தது. இதனைக் கருத்திற்கொண்டு எங்கள் பள்ளியில் உயர்நிலை இரண்டாம் படிவத்தில் பயிலும் 27 மாணவர்களிடையே ஒரு கருத்துக்கணிப்பு நடத்தப்பட்டது. இக்கருத்துக்கணிப்பின் படி 95% மாணவர்கள் தமிழ் நூல்களைப் படிப்பதில்லை. மேலும் 98% வீடுகளில் தமிழ் செய்தித்தாளும் வாங்கப்படுவதில்லை என்று தெரிய வந்தது.

இம்மாணவர்களிடையே செய்தித்தாள் வாசிக்கும் பழக்கத்தை அறிமுகப்படுத்தி அவர்களின் எழுத்தாற்றலை மேம்படுத்த ஒரு செயல் திட்டம் உருவாக்கப்பட்டது. இச்செயல் திட்டத்தில் தமிழ் முரசில் ஒவ்வொரு வாரமும் வெளிவரும் இளையர் முரசு பகுதி தேர்ந்தெடுக்கப்பட்டது.

இளையர் முரசு

இன்றைய காலக்கட்டத்தில் ஊடகங்களின் துணையோடு கல்வி கற்றல் என்ற நிலை உருவாகிக்கொண்டிருக்கிறது. ஊடகம் கற்பித்தலில் பல மாற்றங்களை ஏற்படுத்தி நல்ல கற்றல் விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது (பிரபாகரன், 2006). ஊடகத்தைப் பயன்படுத்தும்போது, அது வெறுமனே பாடத்துக்கு ஒரு துணைக்கருவியாக இல்லாமல், அதுவே அப்பாடத்தின் முக்கிய அங்கமாகத் திகழவேண்டும். மேலும் கூறப்போனால், ஊடகத்தைக் கொண்டு கற்பிக்கும்போது, அது பாடத்துடன் இரண்டறக் கலந்திருக்கவேண்டும். அதனால், எந்த ஊடகத்தை, எவ்வாறு, பாடத்தின் எப்பகுதியில் இணைப்பது, என்பது முன்கூட்டியே திட்டமிடப்பட்டிருக்கவேண்டும் (பிரிண்டன் Brinton, 2001). ஊடகங்கள் கற்றலுக்கு ஒரு முக்கியக் காரணமாக இருப்பதால் அதன் பொருளடக்கம் பாடத்துக்குப் பொருத்தமாக இருத்தல் அவசியம்.

இவ்வகையில் சிங்கப்பூரில் வெளியாகும் தமிழ் முரசு செய்தித்தாளின் ஓர் அங்கமான இளையர் முரசு இவ்வாய்விற்குப் பயன்படுத்தப்பட்டது. இப்பகுதியில் வெளியிடப்படும் செய்திகள் மாணவர்கள் விரும்பிப் படிக்கும் வகையில் அமைந்திருப்பதோடு அவர்களின் அனுபவத்திற்கு உட்பட்டதாகவும் இருப்பதால்தான் ஆய்வாளர்கள் இதனைத் தேர்ந்தெடுத்தனர்.

கருத்துப் பரிமாற்ற நூல்

புவாலா ருதஃபோர்ட் (Paula Rutherford) என்பவரால் ஸ்கில்போல் டீச்சர் (Skilful Teacher) என்ற பயிற்றுமுறை அறிமுகம் கண்டது. இப்பயிற்றுமுறையில் ஆசிரியர்களுக்கான கற்றல் கற்பித்தல் சிறப்பாக அமைய பல அணுகுமுறைகளும்

நடவடிக்கைகளும் எடுத்துறைக்கப்பட்டுள்ளன. அதில் இடம்பெற்ற ஒன்றுதான் இந்தக் கருத்துப்பரிமாற்ற நூல் நடவடிக்கையாகும்.

இந்நடவடிக்கை அறிவியல் மற்றும் வரலாறு போன்ற பாடங்களுக்கு ஏற்புடையதாகும். ஏனெனில் இந்நூலின் வலது பக்கத்தில் ஆசிரியர் கொடுக்கும் பாடத்தை ஒட்டிய உதவிக்குறிப்புகள் இடம்பெறும். மாணவர்கள் அதனைப் படித்துப் புரிந்துகொண்டு, முக்கியத் தகவல்களை உள்வாங்கிக்கொள்வர். அதன் பின், கருத்துப்பரிமாற்ற நூலின் இடது பக்கத்தில் தங்களின் திறனுக்கும் விருப்பத்திற்கும் ஏற்ப மன வரைப்படம் செய்தல், சுருக்கி வரைதல், படங்கள் வரைதல் மற்றும் சிறு சிறு குறிப்பகள் எழுதுதல் போன்றவற்றைச் செய்வர். இந்நடவடிக்கையின் மூலம், மாணவர்கள் ஆசிரியர் கற்றுக்கொடுத்த பாடத்தைப் புரிந்துகொண்டனரா என்பதை வெளிப்படுத்துவர்.

இந்தக் கருத்துப்பரிமாற்ற நூல் உத்தியையே மாணவர்களின் எழுத்துத்திறனை மேம்படுத்துவதற்கு ஆய்வாளர்கள் பயன்படுத்தியுள்ளனர்.

செய்முறை

இந்த ஆய்வுக்கு உயர்நிலை இரண்டு விரைவு மற்றும் வழக்கநிலையில் பயிலும் 27 மாணவர்கள் உட்படுத்தப்பட்டனர். இம்மாணவர்களுக்கு ஆய்வாளர்கள் இரண்டு வருடங்களாகக் கற்பித்து வருகிறார்கள். தமிழ்மொழியைப் பொறுத்த வரை இவ்விரண்டு பிரிவிலும் பயிலும் மாணவர்கள் ஒரே தரத்தில் இருந்தனர். அதுமட்டுமின்றி, இவ்விரு வகுப்பினரின் பாடவேளைகளும் ஒரே சமயத்தில் அமைந்திருந்ததாலும். ஆய்வை மேற்கொள்ள ஏதுவாக இருந்தது.

<u>முன் நடவடிக்கை (ஆய்வுக்கு முந்திய நடவடிக்கை)</u>

<u>படி 1</u>

கருத்துக்கணிப்பு ஒன்று நடத்தப்பபட்டது. அதில் மாணவர்களின் வீடுகளில் தமிழ் செய்தித்தாள் வாங்குவது மற்றும் அதனை வாசிப்பது குறித்தும் கண்டறியப்பட்டது. மேலும் மாணவர்களின் எழுத்துத் திறனைக் கணிக்க ஒரு கருத்துக்கணிப்பும் நடத்தப்பட்டது.

<u>படி 2</u>

மாணவர்களுக்குச் செய்தித்தாள் வாசிக்கும் முறை மற்றும் திறன் குறித்து பட்டறை ஒன்று நடத்தப்பட்டது. இப்பட்டறை சிங்கப்பூர் தேசிய நூலக வாரியத்தின் அதிகாரி ஒருவரால் நடத்தப்பட்டது. இப்பட்டறையில் இளையர் முரசு

அறிமுகப்படுத்தப்பட்டது. செய்திப்பகுதியைப் படித்து, அதிலிருந்து முக்கியத் தகவல்களை எவ்வாறு அடையாளம் காண்பது என்பது குறித்து குறிப்புகள் வழங்கப்பட்டன.

படி 3

மாணவர்களுக்குக் கருத்துப் பரிமாற்ற நூல் அறிமுகம் செய்யப்பட்டது, கருத்துப் பரிமாற்ற நூலில் எவ்வாறு மன வரைபடம் செய்வது என்று ஆய்வாளர்கள் உதாரணங்களுடன் எடுத்துக் கூறினர். மாணவர்கள் தங்களின் கருத்துப் பரிமாற்ற நூலின் முகப்பு அட்டையை வடிவமைத்தனர்.

ஆய்வு முறைமை

படி 1

பத்து வாரங்களுக்கு இளையர் முரசில் வெளிவந்த செய்திகளைப் படித்து மாணவர்கள் அச்செய்திகளையொட்டி மனவரைபடம் செய்தனர். மாணவர்கள் இம்மனவரைபடத்தை கருத்துப் பரிமாற்ற நூலில் (interactive book) செய்தனர்.

இளையர் முரசில் வெளிவந்த தலைப்புகள்

வாரம்	தலைப்பு	தேதி
1	இளையர்களிடையே நாகரிகமாகி வரும் மதுப் பழக்கம்	03/03/2011
2	இழப்பு,சிரமங்கள் இடையே சிறந்த தேர்ச்சி பெற்ற மஹேஸ்வரி	10/03/2011
3	பக்குவம் பெறும் முன் பாலியல் உறவு	24/03/2011
4	தடம் மாறிச் செல்லும் இளையர்கள் குற்றச் செயல்களில் சிக்காமல் தப்பிக்கலாம்	31/03/2011
5	விருது பெற்றுத் தந்த அறிவியல் ஆர்வம்	07/04/2011
6	ஆட்டத்தை நாடும் இளையர் போக்கு சரியா?	14/04/2011
7	புயலாகத் திறன் காட்டிய இளையர்கள்	21/04/2011
8	இளையர் கைகளில் தவழும் தமிழ்	28/04/2011
9	மறக்க உடியாத ஏழு நாட்கள்	07/07/2011
10	$20,000 செலவில் 21வது பிறந்தநாள் செய்வது சரியா? தவறா?	14/07/2011

படி 2

மாணவர்கள் கருத்துப் பரிமாற்ற நூலில் அவர்கள் படித்த செய்தியின் மனவரைபடத்தைச் செய்ததோடு தங்கள் எண்ணப் பிரதிபலிப்பையும் செய்தனர்.

படி 3

ஒவ்வொரு வாரமும் ஆய்வாளர்கள் மாணவர்களின் படைப்புகளைத் திருத்தி மதிப்பெண்களை வழங்கியதோடு, மேம்படுத்துவதற்கான குறிப்புகளையும் வழங்கினர்.

முடிவுகள்

- **கருத்துக்கணிப்பு**

ஆய்வுக்கு முந்திய நிலை

கேள்வி: **இளையர் முரசைப் படிக்க ஆரம்பிக்காதபோது:**	**ஆம் (%)**	**இல்லை (%)**
1) உன்னால் சிறப்பாக எழுத முடிகிறதா?	15	85
2) உன்னால் திட்டமிட்டு எழுத முடிகிறதா?	19	81
3) மனதில் தோன்றிய எண்ணங்களை வெளிப்படுத்த முடிகிறதா?	33	67
4) எழுதுவதற்குப் போதிய கருத்துகள் இருக்கின்றனவா?	22	78
5)நீ ஏதாவது மன வரைபட உத்திகளைப் பயன்படுத்தி எழுதுகிறாயா?	22	78
6) உன்னால் தன்னம்பிக்கையோடு எழுத முடிகிறதா?	33	67

ஆய்வுக்குப் பிந்திய நிலை

கேள்வி: **இளையர் முரசைப் படிக்க ஆரம்பித்த பிறகு:**	**ஆம் (%)**	**இல்லை (%)**
1) உன்னால் சிறப்பாக எழுத முடிகிறதா?	89	11
2) உன்னால் திட்டமிட்டு எழுத முடிகிறதா?	81	19
3) மனதில் தோன்றிய எண்ணங்களை வெளிப்படுத்த முடிகிறதா?	96	4
4) எழுதுவதற்குப் போதிய கருத்துகள் இருக்கின்றனவா?	93	7
5)நீ ஏதாவது மன வரைபட உத்திகளைப் பயன்படுத்தி எழுதுகிறாயா?	70	30
6) உன்னால் தன்னம்பிக்கையோடு எழுத முடிகிறதா?	96	4

- **மாணவர்களின் எழுத்தாற்றல்**

கருத்துப் பரிமாற்ற நூலில் மாணவர்களின் எண்ணப் பிரதிபலிப்புகளின் மூலம் ஆய்வாளர்கள் அவர்களின் எழுத்தாற்றல் மேம்பட்டிருப்பதைக் கண்டறிந்தனர். அதுமட்டுமின்றி, அவர்கள் எழுதிய கட்டுரைகளிலும் முன்னேற்றத்தைக் காண முடிந்தது. ஆய்வின் முடிவுகள் மேலும் வலுவடைய ஆய்வாளர்கள் ஆண்டிறுதித் தேர்வு 2010 மற்றும் ஆண்டிடைத் தேர்வு 2011 ஆகிய இரு பள்ளித் தேர்வுகளின் கட்டுரை மதிப்பெண்களை ஒப்பிட்டுப் பார்த்தனர்.

மாணவர்	ஆண்டிறுதித் தேர்வு 2010 (100%)	ஆண்டிடைத் தேர்வு 2011 (100%)
1	66	72
2	43	55
3	67	52
4	64	72
5	70	67
6	41	70
7	49	70
8	54	65
9	46	63
10	54	68
11	57	75
12	60	52
13	50	70
14	44	68
15	6	45
16	56	67
17	43	72
18	49	75
19	39	68
20	43	73
21	56	65
22	54	73
23	40	58
24	27	42
25	47	73
26	59	50
27	61	62

இக்கட்டுரை மதிப்பெண்களை ஒப்பிட்டுப் பார்க்கையில், 85% மாணவர்கள் தங்களின் எழுத்தாற்றலில் மேம்பட்டுள்ளனர் என்பது தெரிய வருகிறது. அதுமட்டுமின்றி,

அவர்களின் வகுப்பு கட்டுரைப் பாடங்களிலும் மாணவர்கள் படிப்படியாக முன்னேறியுள்ளனர் என்பதும் தெரிய வருகிறது.

ஆய்வின் வரம்புகள்

ஆய்வாளர்கள் மேற்கொண்ட இந்த ஆய்வு ஒரு சிறு ஆரம்பக்கட்ட முயற்சிதான். 27 மாணவர்களைக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வு சில வரம்புகளுக்கு உட்பட்டதாக உள்ளது.

- மாணவர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளதால் முடிவுகளை வைத்து ஒட்டு மொத்த முடிவுக்கு வந்து விட முடியாது.
- இவ்வாய்வு குறுகிய காலக்கட்டத்தில் நடத்தப்பட்ட ஒன்று என்பதால் இதன் முடிவுகளைப் பொதுமை படுத்த முடியாது.
- பாடவேளையின்போது தமிழ்ப் பாடத்தின் மற்றக் கூறுகளையும் கவனிக்க வேண்டி இருந்ததால் நேரப் பற்றாக்குறை ஒரு பிரச்சினையாகவே இருந்தது.
- இவ்வாய்விற்கு உட்படுத்தப்பட்ட மாணவர்கள் வெவ்வேறு பிரிவுகளைச் சேர்ந்தவர்களாக இருந்ததால், மதிப்பெண்களை வழங்க ஆய்வாளர்கள் ஒரே மாதிரியான மதிப்பீட்டுக் குறிப்பைத் (rubrics) தயார் செய்யும் சூழ்நிலை உண்டானது.
- புதிய அணுகுமுறையில் மாணவர்களின் எழுத்துத் திறன் மற்றும் செய்தித்தாள் வாசிக்கும் பழக்கத்தை மேம்படுத்துவது ஒரு சவாலாகவே அமைந்தது.

முடிவுரை:

ஆசிரியர்கள் வகுப்பறையில் பலவித பயிற்றுக் கருவிகளைப் பயன்படுத்திக் கற்பித்தலை இனிமையாக்க வேண்டும். செய்தித்தாள்களையும், இதழ்களையும், தொடர்புச் சாதனங்களையும் பயன்படுத்தி ஆசிரியர்கள் கற்பிப்பது நல்லது (சரவணன் கோபிநாதன்).

ஆனாலும், வெறும் செய்தித்தாளை வாங்கிக் கொடுத்து படிக்கச் சொன்னால்மட்டும் போதாது. அது தொடர்பாக நடவடிக்கை ஒன்றை நடத்தினால்தான் பயன் கிட்டும். இதற்கு எங்கள் செயல் திட்டம் சான்று பகரும்.

இளையர் முரசில் இடம்பெற்ற செய்திகள் மாணவர்களின் அனுபவத்திற்கு உட்பட்டிருந்ததாலும் இந்தக் கருத்துப்பரிமாற்ற நூல் அணுகுமுறை புதுமையான ஒன்றாக இருந்ததாலும், மாணவர்கள் இந்நடவடிக்கையில் மிகவும் ஆர்வத்துடன் ஈடுபட்டனர். அதுமட்டுமின்றி, செய்தித்தாள்களில் வெளியாகும் செய்திகளைப் பயன்படுத்தி மாணவர்களுக்குப் பாடம் நடத்தும்போது, அது அவர்களிடையே சமூக வழிப்புணர்வை உண்டாக்குகிறது மற்றும் அவர்களின் வாழ்க்கையைச் சரியான பாதையில் இட்டுச் செல்வதற்கு அவர்களைச் சிந்திக்கத் தூண்டுகிறது.

உதாரணத்திற்கு, மூன்றாம் வாரத்தில் வெளிவந்த “பக்குவம் பெறும் முன் பாலியல் உறவு” என்ற தலைப்பையொட்டிப் பெற்றோர்களிடம் மனம் திறந்து பேச முடியாத சில விஷயங்கள் குறித்து மாணவர்கள் வெளிப்படையாக எழுதியிருந்தனர்.

படித்த செய்திகளையொட்டி தங்களின் கருத்துக்களைக் கூற தயங்கிய மாணவர்கள் கூட, தங்களின் கருத்துப்பரிமாற்ற நூலில் வெளிப்படையாகவும் தெளிவாகவும் பல கருத்துக்களை எழுதியிருந்தனர். இதன் மூலம், படித்ததை மாணவர்கள் புரிந்து கொண்டனரா என்பதை ஆய்வாளரகளால் எளிதாகக் கணிக்க முடிந்தது.

துணைநூல்கள் மற்றும் கட்டுரைகள் பட்டியல்

1. தமிழ் மொழிப் பாடத்திட்டம் கற்பித்தல்முறை மறு ஆய்வுக் குழு அறிக்கை. (2005). கல்வி அமைச்சு. சிங்கப்பூர்.
2. பிரபாகரன், உ. (2006). தமிழ் மொழி கற்பித்தலில் ஊடகங்களின் பங்கு. தமிழியலின் எதிர்காலவியல். பாகம் 1. தொகுப்பாசிரியர்கள்: ஜெயதேவன், வ, உன்னிஸா நாசர், சிராஜ். கலைஞன் பதிப்பகம். சென்னை.
3. சரவணன் கோபிநாதன், முதன்மை உரை, புத்தாயிரமாம் ஆண்டில் தாய்மொழி கற்பதில் உள்ள சவால்களும் வாய்ப்புகளும், அடிப்படைக் கல்வியியல் திட்டங்கள், தேசியக் கல்விக் கழகம், நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம், சிங்கப்பூர்
4. Brinton, Donna. M. (2001). The Use of Media in Language Teaching. In Teaching English as a Second Language or Foreign Language. Ed: Celce - Murcia Marianne. Heinle & Heinle. USA.
5. Cathy Collins Block; 2001; Teaching the Language Arts – Expanding Thinking Through Student –Centered Instruction; Pearson, Allyn & Bacon
6. Rutherford, P. (2008); Instruction for All Students, Second Edition. Just Ask Publications & Professional Development, USA

தமிழ் கற்றல் கற்பித்தலில் சொல்வளப் பெருக்கம் தயாரிப்பும் பயன்பாடும் - பயிலரங்கு

விஜயராணி கோவிந்தசாமி, குவின்ஸ்டவுன் உயர்நிலைப் பள்ளி
சிலம்பாயி முத்துசாமி, கல்வி அமைச்சு
சிங்கப்பூர்.

முன்னுரை

சிங்கப்பூரில் இருமொழிக் கல்விக் கொள்கையின் அடிப்படையில் ஆங்கிலமும் தாய்மொழிகளும் சிங்கப்பூர்க் கல்விமுறையின் முக்கியக் கூறுகளாக இருந்து வருகின்றன. இருப்பினும் அனைத்துலக வணிகத்திற்கு ஆங்கிலம் அவசியம் என்பதால் சிங்கப்பூர்க் குடும்பங்களில் ஆங்கிலம் ஆதிக்கம் செலுத்துவதையும் தாய்மொழிகளின் புழக்கம் குறைந்து வருவதையும் எல்லா இனக் குடும்பங்களிலும் காண முடிகிறது.

2010 தாய்மொழிகள் மறு ஆய்வுக்குழு அறிக்கை

வீடுகளில் மாறிவரும் மொழிச் சூழலும் உலகமயமாதலின் தாக்கமும் தகவல் தொழில்நுட்பத்திலும் மென்பொருள்களிலும் ஏற்பட்டுள்ள புத்தாக்கமும் சிங்கப்பூரில் தாய்மொழிக் கற்றல் கற்பித்தலில் ஏற்படுத்தியுள்ள வளர்ச்சியையும் தாக்கத்தையும் கணிப்பதற்கென 2010 தாய்மொழிகள் மறு ஆய்வுக்குழு ஒன்று அமைக்கப்பட்டது. அக்குழு 2005ஆம் ஆண்டு நடத்தப்பட்ட தாய்மொழிகள் மறு ஆய்வின் பரிந்துரைகளுக்கு ஏற்ப திருத்தியமைக்கப்பட்ட பாடக்கலைத்திட்டங்கள், பரிந்துரைக்கப்பட்ட கற்பித்தல் அணுகுமுறைகளின் விளைவுகள் ஆகியவற்றைச் சீர்த்தூக்கிப் பார்த்ததோடு பல்வேறு வழிகளில் பலதரப்பட்டவர்களிடமிருந்து தகவல்களைத் திரட்டியும் ஆராய்ந்தும் தாய்மொழிக் கற்றல் கற்பித்தலின் நிலையைக் கண்டறிந்தது.

கடந்த இருபது ஆண்டுகளாகத் தொடக்கநிலை முதலாம் வகுப்புப் பதிவின்போது ஆண்டுதோறும் திரட்டப்பட்ட தரவுகள் இல்லங்களில் ஆங்கிலத்தின் புழக்கம் முதன்மை நிலையில் இருப்பதையும் சமூகத்தினரிடையே ஆங்கிலத்தின் பழக்கம் ஏறுமுகமாக இருப்பதையும் காட்டுவதை மறு ஆய்வுக்குழு கண்டறிந்தது. மேலும், ஆங்கிலத்தின் புழக்கம் வீட்டுமொழியில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதையும் இத்தாக்கம் மாணவர்களின் மனப்பான்மையிலும் தாய்மொழித் திறனிலும் பிரதிபலிப்பதையும் ஆய்வுக்குழு குறிப்பிடத் தவறவில்லை.

மாற்றமடைந்துள்ள வீட்டு மொழிச்சூழல்

சிங்கப்பூரில் வீடுகளில் பெரும்பாலான பெற்றோர்கள் தம் பிள்ளைகளுடன் ஆங்கிலத்திலேயே பேசுகின்றனர் என்பதையும் சில குடும்பங்களில் தாய்மொழியோடு ஆங்கிலத்தைக் கலந்து பயன்படுத்துகின்றனர் என்ற உண்மையையும் ஆய்வுக்குழு புள்ளி விவரங்களுடன் எடுத்தியம்பியுள்ளது. இப்படிப் பலதரப்பட்ட வீட்டுமொழிப் பின்னணியுடன் தொடக்கப்பள்ளி முதலாம் வகுப்பில் வந்து சேரும் மாணவர்களின் மொழித் திறன்களும் பலதரப்பட்டதாகவே உள்ளன. அவர்களின் தொடங்குநிலைகளும் வேறுபட்டிருக்கின்றன. சில மாணவர்கள் தாய்மொழியின் பேச்சொலிகள், அமைப்புகள் பற்றிய அறிவுடன் வருகின்றனர். இவர்களால் தாய்மொழியில் எவ்விதச் சிரமமுமின்றிக் கருத்துப் பரிமாற்றம் செய்ய முடிகிறது. இப்படிப்பட்ட மாணவர்களுக்குக் கல்வியமைச்சின் பாடத்திட்ட வரைவு மற்றும் மேம்பாட்டுப் பிரிவு உருவாக்கி வழங்கிவரும் பயிற்றுகருவிகளைத் தாராளமாகப் பயன்படுத்திக் கற்பிக்க இயலும். ஆனால், தாய்மொழியில் கொஞ்சமும் அடிப்படையறிவு இல்லாத மாணவர்களுக்கும் மிகவும் குறைவான அடிப்படையறிவுடைய மாணவர்களுக்கும் இப்பயிற்றுகருவிகளைப் பயன்படுத்தி மொழித்திறன்களை வளர்த்திட முற்படுவதற்கு முன் அவர்களுக்கு அடிப்படையை அமைத்துக் கொடுக்கவேண்டிய நிலை உள்ளது. அதனைச் செய்திட ஆசிரியர்களுக்கு அதிக உதவியும் ஆதரவும் தேவைப்படுகிறது என்பது தமிழாசிரியர்களிடம் நடத்தப்பட்ட கருத்துக்கணிப்பில் தெரிய வந்தது.

தேவை ஒரு தரவகம் (corpus data)

மாணவர்களின் வேறுபட்ட தொடங்குநிலைகளைக் கண்டறிந்து அவர்களுக்குத் தன்னம்பிக்கையை ஏற்படுத்தித் தமிழ்மொழியறிவைப் பெறச் செய்ய ஆவனச் செய்யப்பட வேண்டிய தேவை இருப்பதையும் அதற்குத் தமிழாசிரியர்களுக்கு உதவி தேவை என்பதையும் ஆய்வாளர் உணர்ந்தார். எனவே, தமிழ்மொழிப் புழக்கம் இல்லாத சூழலிலிருந்து வரும் மாணவர்கள் தமிழில் கருத்துப் பரிமாற்றம் செய்வதற்கு எப்படி உதவலாம் என்பதை அறிந்துகொள்ளும் நோக்கில் சில தமிழாசிரியர்களிடம் கருத்துக்கணிப்பு நடத்தப்பட்டது. அந்தக் கருத்துக்கணிப்பிலிருந்து பல கருத்துகள் அறியப்பட்டன. அவற்றுள், “மாணவர்கள் அடிப்படையாகத் தெரிந்துகொள்ள வேண்டிய சொற்களின் பட்டியல் ஒன்று இருந்தால் சிறப்பாக இருக்கும்,” என்ற தமிழாசிரியர்களின் கருத்து மேலோங்கிக் காணப்பட்டது.

எனவே, தமிழ்மொழிப் புழக்கம் இல்லாத சூழலிலிருந்து வரும் மாணவர்களுக்கு உதவிட ஒரு தரவகம் (corpus data) தேவை என்பதை ஆய்வாளர் வலுவாக நம்பினார். அத்தரவகம் தமிழாசிரியர்களுக்குப் பேருதவியாக இருக்கும் என்றும் அவர் கருதினார். சிங்கப்பூரில், ஒருவர் தமிழில் கருத்துப் பரிமாற்றம் செய்வதற்குத் தேவையான

சொற்களின் தொகுப்போ அடிப்படைச் சொற்பட்டியலோ உள்ளதா என்று கண்டறிய முனைந்தபோது, அப்படி ஒரு பட்டியலை உருவாக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன என்பதும் ஆனால், அப்பணி இன்னும் நிறைவு பெறவில்லை என்பதும் தெரிய வந்தன. எனவே, ஆய்வாளர் ஒரு தரவகத்தை உருவாக்கும் பணியில் ஈடுபட்டார்.

புலனாய்வு

ஒரு குறிப்பிட்ட விளைவை ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தோடு மேற்கொள்ளப்பட்ட இந்த முயற்சியை இடையீடு நோக்கிய ஓர் ஆய்வாகவே ஆய்வாளர் கருதினார்.

புலனாய்வு செய்வதற்கென சில கருவிகள் வடிவமைக்கப்பட்டன. அக்கருவிகளைக் கொண்டு தமிழ்மொழியில் கொஞ்சம்கூட அடிப்படையறிவு இல்லாத மாணவர்கள், தமிழ்மொழியில் மிகக் குறைவான அளவு அடிப்படையறிவு உடைய மாணவர்கள், அவர்தம் குடும்பத்தினர், பாலர்ப்பள்ளித் தமிழாசிரியர்கள், தொடக்கப்பள்ளித் தமிழாசிரியர்கள் ஆகியோரிடம் கருத்துக்கணிப்பு நடத்தப்பட்டது. மேலும், இம்மாணவர்கள் தமிழில் பேசக்கூடிய சூழல்களில் சில நடவடிக்கைகளில் ஈடுபட்டபோது அந்தந்த இடங்களில் நடைபெற்ற உரையாடல்களும் சம்பந்தப்பட்டவர்களின் அனுமதியுடன் ஒலிப்பதிவு (audio recording) செய்யப்பட்டன. மாணவர்கள் குறிப்பிட்ட சூழலில் தமிழில் பேசிட அவர்களுக்குத் தேவையான அடிப்படையான சொற்கள் யாவை என்பதை அறியவும் சில கருவிகள் (tools) உருவாக்கப்பட்டு மாணவர்களிடமும் தமிழாசிரியர்களிடமும் வழங்கப்பட்டன. அவற்றின்வழி அவர்கள் கொடுத்த தகவல்களின் துணைகொண்டு தரவகம் உருவாக்கும் முயற்சி தொடங்கியது.

தரவுகளைப் பகுப்பாய்வு செய்தல்

கருத்துக்கணிப்பின்வழி சேகரிக்கப்பட்ட தரவுகளுடன் ஒலிப்பதிவு செய்யப்பட்ட உரையாடல்கள் வரிவடிவத்தில் பதிவு செய்யப்பட்டு ஆராயப்பட்டன. இவற்றுடன் புலனாய்வில் கலந்துகொண்ட இம்மாணவர்களிடமும் அவர்தம் பெற்றோர்களிடமும் தமிழாசிரியர்களிடமும் வாய்மொழியாகக் கேட்டறியப்பட்ட கருத்துகளும் ஆராயப்பட்டன. இவையே இந்தப் புலனாய்வுக்கு முக்கியத் தரவுகளாக அமைந்தன. இத்தரவுகளின் துணைகொண்டு மாணவர்களால் அடிக்கடிப் பயன்படுத்தப்பட்ட சொற்கள் யாவை என்பது அடையாளம் காணப்பட்டுத் தொகுத்துப் பட்டியலிடப்பட்டன.

சொற்களின் தெரிவும் ஏற்புடைமையும்

ஏறக்குறைய இருநூறுக்கும் மேற்பட்ட சொற்கள் தமிழில் வாய்மொழிக் கருத்துப் பரிமாற்றத்திற்கு அடிப்படையானவை என்று அடையாளம் காணப்பட்டன. அவை பயன்பாட்டுத் தேவை அடிப்படையில்,

- வீட்டில் குடும்பத்தினருடன் தமிழில் பேசுவதற்குப் பயன்படும் சொற்கள்
- விளையாட்டுப் பூங்காவில் நண்பர்களுடன் தமிழில் பேசுவதற்குப் பயன்படும் சொற்கள்
- வகுப்பில் ஆசிரியருடனும் சக மாணவர்களுடனும் தமிழில் பேசுவதற்குப் பயன்படும் சொற்கள்
- பொது இடங்களில் தமிழில் பேசுவதற்குப் பயன்படும் சொற்கள்

என்று இடங்களுக்கு ஏற்ப அடிப்படைச் சொற்கள் தொகுக்கப்பட்டன. தொகுக்கப்பட்ட சொற்களில் பலமுறை, பல இடங்களில் அதிகமாகப் பயன்படுத்தப்பட்ட சொற்களை முதலிலும் மிகக் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொற்களை இறுதியிலும் வைத்தல் என வரிசைப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டது. அடுத்து அச்சொற்கள் பெயர்ச்சொற்கள், வினைச்சொற்கள் என்று பிரிக்கப்பட்டன.

இவ்வாறாக உருவாக்கப்பட்ட சொல்வளப்பட்டியல், பொருள் விளக்க நிலையிலும் கருத்துப் பரிமாற்ற நிலையிலும் எந்த அளவிற்கு உதவும் என்பது தமிழாசிரியர்களிடமும் பெற்றோர்களிடமும் கொடுத்துச் சோதித்துப் பார்க்கப்படவிருக்கிறது. இந்த முயற்சி ஆய்வாளர் மேற்கொள்ளும் முனைவர் பட்டத்திற்கான ஆய்வின் ஒரு பகுதியாகும் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

பேச்சுத் தமிழுக்கு முக்கியத்துவம்

தமிழ்மொழியில் கொஞ்சம்கூட அடிப்படையறிவு இல்லாத மாணவர்களுக்கும் தமிழ்மொழியில் மிகக் குறைவான அளவு அடிப்படையறிவு உடைய மாணவர்கக்ளுக்கும் வாய்மொழி அடிப்படையிலான கற்பித்தல் முறையே சிறந்தது என்பதை மறுப்பதற்கில்லை.

பேசுதல் என்பது ஓர் ஆக்கத்திறன் (productive skill). ஆகவே, கொள்திறனான (receptive skill) கேட்குந்திறனை ஓரளவுக்கு வளர்த்த பின்னரே பேசுந்திறனை வளர்ப்பதற்குரிய பாடங்களைத் தரவேண்டும் (திருமுருகன்,1998:218)

தமிழில் வாய்மொழிக் கருத்துப் பரிமாற்றம் செய்யச் சிரமப்படும் மாணவர்களுக்குத் தமிழாசிரியர்களே முன்மாதிரியாக இருந்து அவர்களிடம் அதிகமாகப் பேச்சுத் தமிழில்

பேசியும், தமிழில் பேசக்கூடிய மாணவர்களைப் பேசச் செய்தும் அவர்களுடைய கேட்குந்திறனை ஓரளவுக்கு வளர்க்க முற்பட வேண்டும். இவை யாவும் பொருத்தமான சூழமைவுகளில் இடம்பெற வேண்டும். இவ்வாறு செய்வதால் மாணவர்கள் தம் சொல்வளத்தை வளர்த்துக்கொள்ள இயலும் என்பது ஆய்வாளரின் கருத்து.

இரட்டை வழக்கு மொழி

தமிழ் இரட்டை வழக்கு மொழி என்பதால் இம்மொழியைக் கற்றுக்கொள்வது சிரமம் என்ற எண்ணம் எழாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது மிகவும் முக்கியம். அதனால் மாணவர்களுக்கு தமிழை முதலில் பேச்சு வழக்காக மட்டுமே அறிமுகப்படுத்த வேண்டும். வீட்டில் நல்ல சரளமான தமிழ்ப் பேச்சைக் கேட்க வாய்ப்பில்லாத குழந்தைகளுக்கு ஆசிரியரின் பேச்சுதான் சிறந்த வழிகாட்டியாக அமையும். எனவே, ஆசிரியரின் பேச்சு மாணாக்கர் பின்பற்றுவதற்கு ஏற்றதோர் எடுத்துக்காட்டாக அமைதல் வேண்டும்.

தரவகத்தின் ஏற்புடைமையைச் சோதித்துப் பார்க்கச் சில கற்பித்தல் அணுகுமுறைகள்

மாணவர்கள் தங்கள் கருத்துகளை எடுத்தியம்ப போதுமான வாய்ப்புகளை வகுப்பறையில் வழங்குவது அவசியம். கற்றல் சூழல் மாணவர்களுக்கு ஊக்கமூட்டக்கூடியதாக இருப்பதைத் தமிழாசிரியர்கள் உறுதி செய்ய வேண்டும். கருத்துகளை எடுத்துக்கூறக் கூச்சப்படும் மாணவர்களுக்கு ***முன்னறிவு மேம்பாட்டு உத்தி*** மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். முன்னறிவு மேம்பாட்டு உத்தி என்பது மாணவர்கள் கற்றல் படிநிலைகளில் சிரமத்தை எதிர்நோக்கும்போது தாமாகவே கற்றுத் தேர்ந்துவர ஆசிரியர்கள் வழங்கக்கூடிய படிநிலை உதவியைக் குறிக்கிறது. இந்த உதவியை ஆசிரியர் ஒவ்வொரு மாணவருக்கும் தேவைப்படும்போது வழங்குதல் அவசியம்.(Hogan, Kathleen,Ed.; Pressley, Michael, Ed 1997). இதற்கு, மாணவர்களுக்குத் தமிழில் ஒரு சொல்லை அறிமுகப்படுத்தும்போது சூழ்நிலைக்குத் தக்கவாறு, ஆசிரியர் அம்மாணவர்களின் ஆங்கிலமொழி அறிவைப் பயன்படுத்திக்கொள்வதை எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம்.

பேச்சுத்தமிழை வரிவடிவத்தில் மாணவர்களின் பார்வைக்குக் கொண்டுவராமல் இருப்பது நன்மை பயக்கும். தரவகத்தில் தொகுக்கப்பட்டுள்ள சொற்களை ஆங்கிலத்தில் வழங்கி அதன் பொருளைப் பக்கத்திலேயே இடம்பெறச் செய்யலாம்.

Naan - I
Nee - You
Yaar - Who
Vaa - Come

தரவகத்தில் தொகுக்கப்பட்டுள்ள சொற்களைச் சிறு சிறு தொகுப்புகளாகப் பிரித்து, அவற்றைச் சிறு அட்டைகளில் அச்சிட்டு மாணவர்களிடம் கொடுக்கலாம். இவ்வகையான முயற்சி மாணவர்களின் ஆங்கிலமொழி அறிவைப் பயன்படுத்தி அவர்களின் சொல்வளத்தைப் பெருக்க உதவுவதோடு அவர்களுக்கு ஊக்கமூட்டுவதாகவும் அமையும்.

வகுப்பறையில் நடைபெறும் நடவடிக்கைகள் யாவும் மாணவர்களின் கற்றல் அனுபவங்களில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாகும் என்று மிமி ஸ்டீட்மன் தமது ஆய்வின்வழி கண்டறிந்து கூறுகிறார். (Mimi Steadman 1998).
மாணவர்கள் போலச் செய்தல் (imitation) மூலம் அதிகம் கற்கின்றனர் என்பது உளவியல் உணர்த்தி நிற்கும் உண்மையாகும். (சுப்புரெட்டியார், 1957: 194).
ஒவ்வொரு தமிழ் வகுப்பறையிலும் தமிழில் பேசக்கூடிய சில மாணவர்கள் இருக்கவே செய்வர். இம்மாணவர்களைத் தமிழில் பேசச் சிரமப்படும் மாணவர்களுடன் இணை சேர்த்து, நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் நற்பலனை அளிக்கும் என்பது ஆய்வாளரின் எண்ணமாகும்.

மாணவர்களின் வகுப்பறை அனுபவங்கள் ஒவ்வொன்றும் அவர்களுக்கு இனிய அனுபவமாக அமைவதை ஆசிரியர்கள் உறுதி செய்யும்வண்ணம் கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள் கவனமாகத் திட்டமிட்டுச் செயல்படுத்தப்பட வேண்டும்.

தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தின் பயன்பாடு

மாணவர்களின் சொல்வளத்தைப் பெருக்கவும் தமிழ்மொழியில் பேச ஊக்குவிக்கவும் தகவல்தொடர்புத் தொழில்நுட்பம் மிகவும் பயன்படும்.

பல்வேறு காரணங்களுக்காக உலகில் பல்வேறு நாடுகளுக்குப் புலம்பெயர்ந்து சென்று வாழ்ந்துகொண்டிருக்கும் தமிழர்கள் தம் மொழியையும் பண்பாட்டையும் நாகரிகத்தையும் தம் பிள்ளைகள் மறவாமல் கற்றுப் பயன்பெற வேண்டும் என்ற எண்ணத்தில் பற்பல முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர். அவற்றுள் ஒன்று தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தைச் சிறப்பாகப் பயன்படுத்தித் தமிழ்மொழியைக் கற்பிக்கும் முயற்சியாகும். அவர்களில் ஒரு சிலர், “யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்,” என்ற நல்லெண்ணத்துடன் மேற்கத்திய நாடுகளில் தம் பிள்ளைகளுக்குத் தமிழ் பேசக் கற்பிக்க தாம் உருவாக்கிய மென்பொருள்களைப் பெருந்தன்மையோடு இணையத்தளங்களில் பகிர்ந்துகொண்டுள்ளனர். கோபிபிரியா என்பார் உருவாக்கியுள்ள, ‘i Speak Tamil,’ மரியா சிஸ்டம்ஸ் உருவாக்கியுள்ள ‘mTamil-1’,அ இளங்கோவனின் *‘மழலைப் பாடம்’,* ஐபாடசாலாLLC உருவாக்கியுள்ள ‘Tamil Numbers’ கன்டெக் பப்ளிகேஷன்ஸ் சொலுஷன்ஸLLC இன்

‘TamilSpeakEasy’, யூரோ டாக் லிமிடெட்டின், ‘uTalk HD Tamil’ ஆகியவை அவற்றுள் சிலவாகும். இவை போன்று இன்னும் எத்தனையோ எண்ணற்ற மென்பொருள்களும் செயலிகளும் தமிழ் பயில விரும்பும் அனைவருடைய பயன்பாட்டுக்காக இணையத்தளத்தில் குவிந்து கிடக்கின்றன. அவற்றிலிருந்து பொருத்தமானவற்றைக் கவனமாகத் தெரிவு செய்து ‘ஐஃபோன்’ போன்ற நவீன ‘ஸ்மார்ட்ஃபோன்களிலும்’ கைத்தொலைபேசிகளிலும் கணினியிலும் இலவசமாகவோ மிகச்சொற்ப விலைக்கோ கீழிறக்கம் செய்து, தேவைக்கேற்பப் பயன்படுத்தித் தமிழ்மொழி கற்றல் கற்பித்தலைச் சுவையான அனுபவமாக்கலாம்.

தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியையும் சிங்கப்பூரில் மாணவர்களுக்கு உள்ள தகவல் தொழில்நுட்ப வாய்ப்புகளையும் வசதிகளையும் நன்கு பயன்படுத்தித் தமிழ்மொழியைச் சிறப்பாகக் கற்பிக்க ஆசிரியர், பெற்றோர் என அனைத்துத் தரப்பினரும் முயற்சி செய்ய வேண்டும்.

தமிழ்மொழியில் சிறிதளவும் அடிப்படையறிவு இல்லாத மாணவர்களுக்காகவும் தமிழ்மொழியில் மிகக் குறைவான அளவு அடிப்படையறிவு உடைய மாணவர்களுக்காகவும் ஆய்வாளர் தொகுத்துள்ள அடிப்படைச் சொல்வளப் பட்டியலில் இடம்பெற்றுள்ள சொற்களை எளிய பயிற்சிகளாக உருவாக்கிக் கைத்தொலைபேசியிலும் கணினியிலும் பதிவு செய்து மாணவர்களுக்கு வழங்கலாம். ஆய்வாளர் தரவகத்தில் ஏறக்குறைய இருநூறு சொற்களைத் தொகுத்துள்ளார். அவற்றைச் சூழலுக்கு ஏற்பப் பிரித்து, ஒலிப்பதிவு செய்தோ, பொருத்தமான படங்களுடனும் ஒலியுடனும் ஒளிப்பதிவு செய்தோ மாணவர்களுக்கு வழங்கலாம். மாணவர்கள் இச்சொற்களை மீண்டும் மீண்டும் ஒலிக்கச் செய்து, கேட்டும் பார்த்தும் பயிற்சி பெறச் சொல்லலாம். அதற்கு உதவிட ‘ஒடசிட்டி’ (audacity) போன்ற மென்பொருளை இலவசமாகவே இணையத்தளத்திலிருந்து கீழிறக்கம் செய்து கொள்ளலாம். இவ்வாறு தகவல் தொழில்நுட்பத்தைச் சிறப்பாகப் பயன்படுத்தித் தமிழ்மொழியைக் கற்பித்து மாணவர்கள் தங்களுடைய கற்றலுக்குத் தாங்களே பொறுப்பேற்க உதவலாம்.

முடிவுரை

தமிழ்மொழியில் கொஞ்சம்கூட அடிப்படையறிவு இல்லாத மாணவர்கள், தமிழ்மொழியில் மிகக் குறைவான அளவு அடிப்படையறிவு உடைய மாணவர்கள் ஆகியோருக்கு உதவக்கூடிய ஒரு தரவகத்தை உருவாக்க ஆய்வாளர் எடுத்துக்கொண்ட முயற்சி, ஒரு கன்னி முயற்சியே. இந்த முயற்சி பெருமளவில் நடைபெற வேண்டும். அடிப்படைச் சொற்களோடு நின்றுவிடாமல் அடுத்தடுத்த

நிலைகளுக்குத் தேவையான சொல்வளப்பட்டியல்கள் உருவாக்கப்பட வேண்டும். அவை சிங்கப்பூரில் வெவ்வேறு நிலைகளில் தமிழ் பயிலும் மாணவர்களுக்கு உதவும்படி இருத்தல் வேண்டும். ஒரு மாணவன் தான் கற்கும் மொழியின் மீதும் அம்மொழியைப் பேசுவோரின் பண்பாட்டின் மீதும் எந்த வகையான மனப்பாங்கு (attitude) கொண்டிருக்கிறான் என்பது அவன் மொழியைக் கற்கும் வேகத்திற்கு உகந்ததாகவோ பாதகமாகவோ அமையக்கூடும் என்று திருமலை (பக்கம் 47) குறிப்பிடுகிறார். எனவே, மாணவர்களுக்குத் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்களுடன் பெற்றோரும் தமிழ் சமூகத்தினரும் ஒன்றுசேர்ந்து சரியான மனப்பாங்கினை ஏற்படுத்த தம் பங்கினை ஆற்றிட வேண்டும். அனைவரும் ஒன்றுபட்டுத் தமிழை வாழும் மொழியாக்குவோம்.

வாழ்க தமிழ். வாழ்க வளமுடன்.

தொடர்புநூல்/ துணைநூல் பட்டியல்

Kress,G (2003). Literacy in the media age. London Routledge

Hogan, Kathleen,1997 ED422375 - ***Scaffolding Student Learning: Instructional Approaches & Issues. Advances in Teaching and Learning Series.*** (Available online http;//eric.ed.gov/ERICWebPortal/custom/portlets/recodDetails/detailmini.jsp?nfpb)

Mimi Steadman 1998. ***Using Classroom Assessment to Change Both Teaching & Learning: New Directions for Teaching and Learning***. Jossey – Bass Publishers

தமிழ் நூல்கள்:

திருமலை மா சு, 1998. ***தமிழ் கற்பித்தல்***. மாணிக்கவாசகர் பதிப்பகம்.

சுப்புரெட்டியார், ந. 2000. ***தமிழ் பயிற்றும் முறை.*** மெய்யப்பன் தமிழாய்வகம்

பாடத்திட்ட வரைவு மற்றும் மேம்பாட்டுப் பிரிவு, 2011. கல்வி அமைச்சு.***தமிழ்மொழிப் பாடத்திட்டம் (தொடக்கநிலை)***

பாடத்திட்ட வரைவு மற்றும் மேம்பாட்டுப் பிரிவு, 2008. கல்வி அமைச்சு: ***தமிழோசை 1A, பாடநூல், பயிற்சிநூல், ஆசிரியர் கையேடு, உயர்நிலைப் பள்ளித் தமிழ்ப்பாடநூல் வரிசை***

பாடத்திட்ட வரைவு மற்றும் மேம்பாட்டுப் பிரிவு, கல்வி அமைச்சு. 2010: தமிழ்மொழிகள் மறு ஆய்வுக் குழு அறிக்கை ***– ஆர்வத்துடன் கற்றுத் திறம்படப் பயன்படுத்துவோரை உருவாக்குதல்***

இணை அமர்வுகள் 2

இணை அமர்வுகள் 2

ஆரம்பத் தொடக்கநிலைத் தமிழ் வகுப்புகளில் ஆங்கிலமொழிப் பயன்பாடு

Dr. சீதா லட்சுமி
தேசியக் கல்விக்கழகம், நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம்
சிங்கப்பூர்.

சிங்கப்பூரில் இரண்டாம் மொழி நிலையில் கற்பிக்கப்படும் தாய்மொழிப் பாடங்களில் ஒன்றான தமிழ் மொழியைப் பெரும்பாலான இந்திய மாணவர்கள் கற்கிறார்கள். இவர்களில் தொடக்கநிலை ஒன்றில் பயிலும் மாணவர்களில் 60 விழுக்காட்டினர் ஆங்கிலம் பேசும் பின்னணியிலிருந்து வருகிறார்கள் (ஈஸ்வரன், எஸ்., 2010). இந்நிலையில் இம்மாணவர்களுடன் தமிழைச் சரளமாகப் பேசும் சிங்கப்பூரர்களும் தமிழகத்திலிருந்து வந்து பயிலும் இயல்பு மொழியாளர்களும் பயில்கிறார்கள். தமிழைப் பேசாத மாணவர்கள் பாலர் பள்ளிகளில் தமிழைப் படித்துவிட்டும் வரும் நிலையும் தமிழைப் பேசினாலும் பாலர் பள்ளிகளில் தமிழ் வகுப்புக்குச் செல்லாத நிலையும் தொடக்கநிலை ஒன்றில் நாம் காணும் ஒரு காட்சியாகும். இந்நிலையில் அண்மைக்காலமாகச் சீனமொழி வகுப்புகளில் ஆங்கிலத்தை முதல் மொழியாகப் பயிலும் மாணவர்கள் தம் இல்லங்களிலும் ஆங்கிலமொழியைப் பயன்படுத்தும் பின்னணியில் பள்ளிகளில் தாய்மொழி வகுப்பில் ஆங்கில மொழியை ஒரு படிக்கல்லாகப் பயன்படுத்தும் நிலை(கோ எங் செங், 2010) இடம்பெற்று வருகிறது. இம்முறை சிங்கப்பூரில் ஆய்வு நோக்கில் நிரூபிக்கப்பட்டுத் தற்போது குறிப்பிடத்தக்க பள்ளிகளில் புழக்கத்தில் உள்ளது. தாய்மொழியில் கற்றுத்தருவது புரியாத நிலையில் மாணவர்களுக்கு அவர்களுக்குப் புழக்கமான ஆங்கிலமொழியில் கற்றுத்தந்து தாய்மொழிவழிக்குக் கொண்டுவரும் நிலையை இது எடுத்துரைக்கிறது. தமிழ் வகுப்புகளில் இத்தகு ஆய்வுகள் அதிகம் இடம்பெறவில்லை. மேலும் தமிழ்க்கல்வித்துறையில் கல்வியியல் ஆய்வுகள் அதிகம் இல்லை என்ற ஒரு பின்னணியில், தமிழ் ஆசிரியர்கள் ஆரம்பத்தொடக்கவகுப்புகளில் எந்த அளவிற்கு ஆங்கிலமொழியைப் பயன்படுத்துகின்றனர் என்பதையும் தமிழ் மாணவர்கள் எந்த அளவிற்கு ஆங்கிலத்தைத் தம் தாய்மொழி வகுப்புகளில் பயன்படுத்துகிறார்கள் என்பதையும் அவற்றுக்கான பின்னணிக் காரணங்களையும் எடுத்துக்கூறுகிறது இக்கட்டுரை. இக்கட்டுரை, சிங்கப்பூரில் ஆரம்பத் தொடக்கப்பள்ளியில் பாடத்திட்ட நடைமுறைப் படுத்தல் (Curriculum Implementation in Early Primary Schooling in Singapore-CIEPSS: Stage 1) என்ற தேசியக்கல்விக்கழகக் கல்வியியல் ஆய்வுத்திட்டத்தின் ஒரு பகுதியாகத்(OER47/08 MS) தமிழ் வகுப்புகளில் ஒலி,

ஒளிப்பதிவு செய்யப்பட்டு, ஒலிபெயர்க்கப்பட்டு, மொழிபெயர்க்கப்பட்ட தரவுகளின் பகுப்பாய்வாக அமைகின்றது.

முன்னுரை

சிங்கப்பூரில் தமிழ் மொழி, அதிகாரத்துவ மொழிகளில் ஒன்றாக இருக்கிறது. இது கல்வித்துறையில் தொடக்கவகுப்புகள் முதல் பல்கலைக்கழகப் புகுமுகவகுப்புகள்வரை மாணவர்கள் பயிலும்வகையில் தாய்மொழிப் பாடம் என்ற பெயரில் இரண்டாம் மொழிப் பாடமாக அமைந்திருக்கிறது. குறிப்பிட்ட சில பாலர் பள்ளிகளிலும் கற்பிக்கப்பட்டுவரும் தமிழ் மொழி, சிங்கப்பூரில் தனக்கென ஒரு செய்தித்தாளாகத் தமிழ் முரசையும் 24மணிநேர வானொலி நிலையமாக ஒலி96.8 ஒலிவழியையும் தனித் தொலைக்காட்சி ஒளிவழியாக வசந்தம் செண்ட்ரலையும் பெற்றுள்ளது. பொது இடங்களில் தமிழ் மொழியிலும் அரசாங்கக் கட்டடங்கள் பள்ளிகள், அதிகாரத்துவப் பெயர்ப்பலகைககளில் பிற அதிகாரத்துவ மொழிகளுடன் தனக்கும் ஓர் இடம் பெற்றுத் திகழ்கிறது. சமூகத்தின் ஆதரவுடன் ஆண்டுக்கொருமுறை தமிழ் மொழி விழா கொண்டாடப்படுகிறது. அதில் பல தமிழ் அமைப்புகள் இணைந்து சமூகத்திற்குத் தமிழ்ச்சேவை ஆற்றிவருகின்றன.

மேற்கூறப்பட்ட பின்புலத்தைக் கொண்டிருக்கும் தமிழ மொழி, 18ஆம் நூற்றாண்டிலிருந்து ஒரு மொழித் தொடக்கப் பள்ளிக்கூடங்களையும் தென்கிழக்காசியாவில் ஒரே தமிழ் உயர்நிலைப் பள்ளியான உமறுப் புலவர் தமிழ்ப் பள்ளியையும் பெற்றிருந்தது. அரசாங்கத்தின் தொலைநோக்குடன் கூடிய இருமொழிக் கல்விக் கொள்கை 1966இல் தொடக்கப்பள்ளிகளிலும் 1969இல் உயர்நிலைப் பள்ளிகளிலும் அறிமுகப்படுத்தப்பட்டன (Manfred Wu Man-Fat, 2005). நாட்டின் மாணவர்கள் இருமொழி ஆற்றல் படைத்தவர்களாக விளங்க வழிசெய்த இருமொழிக் கொள்கை, நாடு தொடர்ந்து உலக நாடுகளுடன் போட்டியிட்டு பொருளியல், அரசியல், தேசிய வெற்றிகளைப் பெறும் வகையில் முக்கியக் கொள்கையாக விளங்கியது. அதனைத் தொடர்ந்து தமிழ்மொழி ஆங்கிலப்பள்ளிகளில் இரண்டாம் மொழிநிலையில் தாய்மொழிப் பாடமாகக் கற்றுத்தரப்பட்டது.

பின்னணி

சிங்கப்பூரின் மக்கள் தொகையில் தமிழ்ச்சமூகம் 4.5விழுக்காடு என்ற அளவில் உள்ளது. சீன, மலாய் மாணவர்களுடன் ஒப்பிடும்போது தமிழ் மாணவர்களுக்குப் பெருவிரைவு ரயிலில், கடைகண்ணிகளில் அல்லது நமது அக்கம்பக்கங்களில் தமிழறிந்த தங்கள் நண்பர்களுடன் தமிழில் பேசக் கிடைக்கும் வாய்ப்புகள் மிகவும் குறைவு (தர்மன் சண்முகரத்தினம், 2005). இந்நிலையில் அவர்கள் தங்களது இல்லத்தில் தமிழ் பேசக்கிடைக்கும் வாய்ப்புகளும் தற்போது குறைந்து வருகின்றன.

1982இல் தொடக்கநிலை 1 மாணவர்களின் மொழிப்பின்னணி எனும்போது, இந்திய சமூகத்தில் பத்தில் மூன்று பேர் ஆங்கிலம் பேசியநிலை தற்போது 2010ல் பத்தில் ஆறு பேர் என்று மாறியுள்ளது. 2005இல் 58 விழுக்காட்டு இந்திய மாணவர்கள் ஆங்கிலம் பேசும் இல்லங்களிலிருந்து வருகின்றனர் (MOE,2004). 2010இல் நடைபெற்ற ஆய்வு ஒன்றில், இந்தியர்கள் இல்லங்களில் தமிழ் மட்டும் அல்லது அதிகம் தமிழில் பேசுவோர் 30 விழுக்காட்டினராகவும் ஆங்கிலமும் தமிழும் பேசுவோர் 33 விழுக்காட்டினராகவும் ஆங்கிலம் மட்டும் அல்லது அதிகம் ஆங்கிலத்தில் பேசுவோர் 38 விழுக்காட்டினராகவும் உள்ளனர் (கல்வி அமைச்சு, 2011). இவ்வகையில் ஆங்கிலமொழி தமிழ் இல்லங்களில் தன் தாக்கத்தைத் தொடர்ந்து அதிகரித்துவருகிறது. இது கல்விக்கூடங்களிலும் குறிப்பாகத் தமிழ் வகுப்புகளில் குறிப்பிடத்தக்க விளைவுகளை ஏற்படுத்திவருகிறது. எனினும் பேச்சுத்தமிழை அதிகமாகப் பயன்படுத்தும்வகையில் 2006 முதல் தமிழ் வகுப்புகள் செயல்பட்டு வருகின்றன.

தமிழ்ச்சமூகத்தின் மொழிப் பயன்பாடு தொடர்ந்து மாறி வரும் நிலையில், தமிழ் மொழி தொடர்ந்து தன்னைப் பலவகைகளில் மேம்படுத்தி வரப் பல முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. 1980கள் தொடங்கிப்பல ஆய்வுகள் தமிழ்மொழிக் கல்வி தொடர்பாக இடம்பெற்றாலும், கடந்த 1996இல் முக்கியமான ஒரு மறுஆய்வும் (Mahizhnan A, 1996), 2005ஆம் ஆண்டு பெரிய அளவிலான தமிழ் மொழிப் பாடத்திட்டம் மற்றும் ஆசிரியவியல் குறித்த மறுஆய்வுக்குழு நடத்திய ஆய்வும் (கல்வி அமைச்சு, 2005), 2010 தாய்மொழிகள் குறித்த மறுஆய்வுக்குழுவின் அறிக்கையும் (கல்வி அமைச்சு, 2011) தமிழ் மொழிக் கல்வி வரலாற்றில் குறிப்பிடத்தக்கவை. சமூகத்தின் மொழிப் புழக்கப் பின்னணி மாறிவருவதால் தமிழ் மொழி வகுப்பில் பேச்சுத்தமிழுக்கான தேவை அதிகரித்தமையும் அது எழுத்துத்தமிழுக்கு இட்டுச்செல்லும் பாலமாக அமைவதையும் தன்னம்பிக்கையுடன் பேசும் தமிழ் மாணவர்களை உருவாக்குவதையும் ஆய்வுகளின் முடிவுகள் வலியுறுத்துகின்றன. எதிர்காலச்சிங்கப்பூர் இந்தியத் தமிழர் பற்றிய சிந்தனையும் அதனை நனவாக்கும் வகையில் மாணவர்களைத் தமிழில் நன்கு பேசவைப்பதும் தமிழாசிரியர்களின் தற்போதைய நோக்கங்களாக இருந்துவருகின்றன. இந்நிலையில் தொடக்கப்பள்ளியில் ஒன்றாம் வகுப்பிலும் இரண்டாம் வகுப்பிலும் தமிழ் வகுப்புகளில் மொழிக்கலப்பு, மொழி மாற்றம் ஆகியன எந்த அளவிற்கு இடம்பெற்றுள்ளன என்று இந்தக் கட்டுரை நோக்குகிறது. இங்கு மொழி மாற்றம், கலப்பு எனும்போது ஆங்கிலமொழியின் பயன்பாடு எவ்வாறு அமைந்துள்ளது, ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் தமிழ்வகுப்பில் ஆங்கிலத்தைப் பயன்படுத்துவது எவ்வாறு அமைந்துள்ளது என்று கட்டுரை நோக்குகிறது. இப்போது மொழிக்கலப்பு, மொழி மாற்றம் குறித்துப் பார்ப்போம்.

மொழி மாற்றம்(Code Switching), மொழிக் கலப்பு(Code Mixing)

மொழி மாற்றம் என்பது, பேசும்போது இரண்டு வகையான இலக்கண முறைகளிலிருந்து பெறப்பட்ட பலவேறு மொழியியல் கூறுகளை(சொற்கள், தொடர்கள், வாக்கியங்கள் போன்றன) வாக்கியங்களுக்கிடையே ஒருவர் பயன்படுத்துவது என்ற பொருளில் பாட்டியா தரும் விளக்கம் அமைகிறது. இன்னும் கூறப்போனால், மொழி மாற்றம் என்பது, வாக்கியங்களுக்கு இடையே நிகழும் ஒன்று என்பதுடன் இது உரைக்கோவை சார்ந்த கொள்கைகளுடன் தொடர்புடையது. இது சமூக, உளவியல் காரணங்களால் ஊக்குவிக்கப்படுகிறது(Ritchie W.C. and Bhatia, T.K. 2004: 337). மொழிக்கலப்பு என்பது, பலவேறு மொழியியல் கூறுகளை(சொற்கள், தொடர்கள், வாக்கியத்தின் உட்பிரிவான சிறு வாக்கியம் வாக்கியங்கள்)ஒரு வாக்கியத்துக்குள் பயன்படுத்துதல் என்ற பொருளில் பயன்படுத்துகிறோம். இன்னும்கூறப்போனால் வாக்கியத்திற்கு உள்ளேயே இடம்பெறும் இது இலக்கண விதிகளால் பிரச்சினைகளைச் சந்திக்கும் தன்மையது. அதேநேரம் இதுவும் சமூக, உளவியல் காரணங்களால் ஊக்குவிக்கப்படலாம்.(Ritchie W.C. and Bhatia, T.K. 2004:337). மொழிக்கலப்பு என்பது ஒருவர் தம் வாழ்வில் எப்போதும் பயன்படுத்தக்கூடியது என்று கூறமுடியாது. அதே நேரம் அது தாமாக ஒருவரது விருப்பத்தின்பேரில் இடம்பெறும். வற்புறுத்தி வரவழைக்கமுடியாது. பெரும்பாலோர் பேசும் மொழி மொழிக்கலப்பில் பயன்படுத்தப்படும்போது அங்கே யாரும் அதற்காகக் கவலை கொள்வதில்லை. அதுவே சிறுபான்மை மொழியில் இடம்பெற்றால் உளவியல் அழுத்தம் உண்டாகும்.(Katja F Cantone, 2007).மொழிக்கலப்பு என்பது சூழலுக்கு ஏற்ப, பேசும் தலைப்புக்கு ஏற்ப சமூக மொழியியல் விதிகளின்படி, இலக்கணச்சிக்கலகளை மீறாமல் இடம்பெறுவதாகும்(மெய்செல்.Meisel(1994:415 in Katja F Cantone, 2007).

தமிழ்ச்சமூகத்தில் தமிழ்மொழிப் பயன்பாடு, தமிழ்மொழிப்பராமரிப்பு, மாற்றம், வகுப்பறையில் மாணவர்களின் கற்றல், தமிழின் பலவகைகள் குறித்த தமிழர் ஆசிரியர்களின் மனப்போக்குகள் எனப் பல தலைப்புகளில் ஆய்வுகள்(Chitra Shegar and Ridzuan Bin Abdul Rahim, 2005. Mani, A., and Gopinathan, S. 1983, Saravanan V., 1998,1999,2001,2001, Saravanan V., Lakshmi, S., & Caleon, I., (2007), Schiffman, H, F. (1995,2002, 2008) வந்திருந்தாலும், தமிழ் வகுப்புகளில் மொழி மாற்றம், மொழிக்கலப்பு குறித்து அதிக அளவிலான கல்வியியல் ஆய்வுகள் இடம்பெறவில்லை. ஆங்காங்கே பள்ளிகளில் பல செயல்முறை ஆய்வுகள் இடம்பெற்றாலும் அவற்றின் பதிவுகள் ஆய்வாளருக்கு அதிகமாகக் கிடைக்கவில்லை. இராமையா கா(1998) தமது பிழை ஆய்வு குறித்த நூலில், மாணவர்களிடையே மொழி இடையீடு என்பது எழுட்ம் கட்டுரைகளில் இருப்பதையும் அது தாய்மொழியை

இரண்டாம் மொழியாகப் பறாக்கும் தமிழ் மாணவர்களுக்கு அதிகமாக இல்லை என்றும் குறிப்பிடுகிறார். பள்ளியில் அதிகநேரத்துக்கு ஆங்கிலம்பயில்வது, தொலைக்காட்சியில் ஆங்கில அலைவரிசைகள், வானொலியில் ஆங்கில அலைவரிசைகள் அதிகம் இருப்பது, செய்தித்தாளில் ஆங்கிலச்செய்தித்தாள்கள் அதிகம் இருப்பது, அவற்றில்பக்கங்கள் தமிழ்ச் செய்தித்தாளை விட அதிகம் இருப்பது, வெளியில் பிற இனத்தவருடன் பழகும்போதும் தம் இனத்தவரில் இளையருடன் பழகும்போதும் ஆங்கிலத்தில் உரையாடுதல், பள்ளிக்குச் சென்றது முதல் சிந்தனை மொழியாகப்பெரும்பாலும் ஆங்கிலம் அமைவதும் இத்தகு மொழி இடையீட்டுப் பிழைகளுக்குக் காரணம் என்பது அவர் கருத்து. காலப்போக்கில் இத்தகு பிழைகள் அதிகரிக்கும் என்பதும் அவரது எச்சரிக்கையாகும். அதேபோல் ஆங்கிலத்தில் சிந்தித்துத் தமிழில் எழுதும் வாக்கிய அமைப்புமுறையான அமைப்புமுறையில் மாற்றம்(Transfer of Structure) குறித்தும் அவர் தெரிவித்திருக்கிறார். சீனமொழியில் தற்போது தாய்மொழி வகுப்புக்கு வரும் மாணவர்களின் குடும்பப் பின்னணி மாறிவரும் நிலையில், ஆங்கிலத்தைத் தாய்மொழியைப்பயன்படுத்த உதவும் ஒரு பாலமாகக் கொண்டு ஆய்வு நிகழ்த்தித் தற்போது ஆசிரியர்கள் அம்முறையைப் பயன்படுத்தப் பயிற்சி பெறுவதை கோ எங் செங்(Goh Yeng Seng, 2010) தெரிவித்துள்ளார். மொழி மாற்றம், மொழிக்கலப்பு ஆகியன குறித்துப் ஆய்வாளர்கள் பல தேற்றங்களை எடுத்துரைத்தாலும் இங்கு Ritchie W.C. and Bhatia, T.K. 2004 குறிப்பிட்ட தேற்றத்தைப் பயன்படுத்திப் பகுப்பாய்வு இடம்பெறுகிறது.

ஆய்வு நெறிமுறை:

இந்தக் கட்டுரைக்கான ஆய்வு, சிங்கப்பூரில் ஆரம்பத்தொடக்கப்பள்ளியில் பாடத்திட்ட நடைமுறைப் படுத்தல்(Curriculum Implementation in Early Primary Schooling in Singapore-CIEPSS: Stage 1) என்ற தேசியக்கல்விக்கழகக் கல்வியியல் ஆய்வுத்திட்டத்தின் ஒரு பகுதியாகத்(OER47/08 MS) தமிழ் வகுப்புகளில் எட்டு வகுப்பறைகளில் ஆய்வுக்கான தரவுகள் திரட்டப்பட்டன. ஒலி, ஒளிப்பதிவு வழியே பதிவு செய்யப்பட்ட வகுப்பறைப் பதிவுகள் ஒலிபெயர்க்கப்பட்டு பின் மொழிபெயர்க்கப்பட்டன. தொடக்கநிலை 1ஆம் வகுப்புகளிலும் தொடக்கநிலை 2ஆம் வகுப்புகளிலும் இடம்பெற்ற பதிவுகளிலிருந்து ஒரு வகுப்பில் இடம்பெற்ற பதிவின் பகுப்பாய்வு இங்கு இடம்பெறுகிறது. இங்கு கட்டுரைக்குத் தரப்பட்ட பக்க அளவு கருதி கட்டுரை, சுருக்கமாக இடம்பெறுகிறது. வாய்மொழிப் படைப்பில் முழுமையான பகுப்பாய்வு இடம்பெறும். மேலும் மொழிக்கலப்பு, மொழி மாற்றம் குறித்து ஆசிரியர்களிடமும் நேர்முகம் காணப்பட்டது. இங்கு இப்போது, தொடக்கநிலை ஒன்றாம் வகுப்பில் இடம்பெற்ற பாடப்பதிவின் ஒலிபெயர்ப்பின்

வழியே அங்கு இடம்பெற்ற மொழிக்கலப்பு, மொழி மாற்றம் குறித்து விரிவாகப் பார்ப்போம்.

இந்த வகுப்பு, ஒன்பது மாணவர்களைக் கொண்ட வகுப்பு. சுமார் ஓராண்டாகப் பள்ளியில் கற்பித்துவரும் பெண் ஆசிரியருக்கு உள்ள மாணவர்களில் ஒருவர் தவிர மற்றவர்கள் பெண்கள். அவர்களில் மூவர் தமிழகத்திலிருந்து வருகை தந்தவர்கள். மூவர் சிங்கப்பூரில் பிறந்தவர்கள் எனினும் இல்லத்தில் ஆங்கிலத்தில் தொடர்பை நிகழ்த்துபவர்கள். மீதமுள்ள மூவர் சிங்கப்பூரில் பிறந்தவர்கள், இல்லத்தில் தமிழ் பேசுபவர்கள். வகுப்பறையில் இரண்டு மேசைகளில்முறையே 4 மற்றும் 5 மாணவர்கள் என ஆசிரியரின் வலது பக்கத்திலம் இடதுதூக்கத்திலும் அமர்ந்திருந்தனர். இவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர் தங்களது தமிழ்ப் பாடத்தில் எவ்வாறு ஆங்கிலத்தைக் கலந்து பேசினார் என்பதைப் பார்ப்போம்.

ஒலிபெயர்ப்பு 1:

பிறமொழியினர் இருப்பதால் பயன்படுத்தல்

> **ஆசிரியர்:** சரி, அப்படியே நில்லுங்க. பின்னால திரும்பி பாத்தீங்களா? இரண்டு விருந்தாளிங்க வந்திருக்காக்க. நம்ம வகுப்புக்கு. சரியா? அவங்களுக்கு வணக்கம் சொல்லணும். சரியா? வணக்கம் ஆசிரியை and good afternoon Mam . சொல்லுங்க சரியா? சொல்லுங்க
> **மாணவர்கள்**: வணக்கம் ஆசிரியை. Good afternoon..Mam

இங்கு வகுப்பில் ஒலிப்பதிவு, ஒளிப்பதிவு ஆகியவற்றிலும் ஓர் அட்டவணையின்கீழ் வகுப்பறை நிகழ்வுகளைப் பதிவு செய்தல் (coding) என்ற முறையிலும் பதிவில் ஈடுபட்ட பிற ஆங்கில ஆய்வு உதவியாளர்கள் இருந்ததால் ஆசிரியர் மாணவர்களிடம் ஆங்கிலத்திலும் வணக்கம் கூறும்படி தெரிவித்தார். இது சமூக மொழியியல் தேற்றத்தின்படி accommodation என்று பொருள்படும்.

ஒலிபெயர்ப்பு 2:

மாணவரின் மொழியைத் தொடர்தல். அதன் வாயிலாகத் தமிழில் சொல்லை வரவழைத்தல்

> **ஆசிரியர்:** சரி, அப்படியே நில்லுங்க. பின்னால திரும்பி பாத்தீங்களா? இரண்டு விருந்தாளிங்க வந்திருக்காக்க. நம்ம வகுப்புக்கு. சரியா? அவங்களுக்கு வணக்கம் சொல்லணும். சரியா? வணக்கம் ஆசிரியை and good afternoon Mam . சொல்லுங்க சரியா? சொல்லுங்க
> **மாணவர்கள்**: வணக்கம் ஆசிரியை. Good afternoon..Mam

மாணவி: என் birthday வர மாதிரி இருக்கு

ஆசிரியர் உன்னோட birthday வர மாதிரி இருக்கா? ஆஹ். . . birthday என்ன சொல்லுவாங்க.

வகுப்பு(மாணவர்கள்): பிறந்த நாள். . பிறந்தநாள்.

இங்குக் குறிப்பிடப்பட்டுள்ள மாணவி, வீட்டில் ஆங்கிலம் பேசுபவர் என்பதால் அவரைப் பேச வைக்கவேண்டும் என்பது ஆசிரியரின் முக்கியநோக்கம். அதே நேரம் அவர் தாமே வலிய வந்து பேசுவதை நிறுத்தக்கூடாது. இந்நிலையில் மாணவி பயனப்டுத்தும் ஆங்கிலச்சொல்லுக்கும் தமிழ் தெரியவேண்டும். மாணவியும் பேசவேண்டும், மற்ற மாணவர்களும் இந்த உரையாடலில் தொடர்ந்து பங்கேற்க வேண்டும் என்ற அடிப்படையில் மாணவியின் மொழியைத் தொடர்ந்து பயன்படுத்திப் பின் அதற்கான மொழிபெயர்ப்பைப்ம் வகுப்பில் கேட்கிறார். ஆசிரியரின் இந்த உத்தி மாணவர்களுக்குத் தெரிந்திருப்பதால் அவர்கள் உடனடியாகப் பிறந்தநாள் என்கிறார்கள். அவர்களது உற்சாகத்தின் வெளிப்படையாக அங்கே பிறந்தநாள் என்ற சொல் இரட்டித்து வருகிறது.

அதனைப் பின்வரும் பகுதியிலும் காணலாம்.

மாணவி: வந்து என் birthday மாதிரி தோணுது

ஆசிரியர்: என்ன சொல்வாங்க தமிழ்ல. . . பிறந்தநாள்

மாணவர்கள்: பிறந்தநாள்.

மேலே இடம்பெற்றுள்ள உரையாடலில் ஆசிரியர் முன்பு பயன்படுத்திய உத்தியை மீண்டும் பயன்படுத்தி தமிழில் மாணவர்களில் சொல்லாற்றலையும் தமிழ்ச் சொற்களைத் தொடர்ந்து நினைவில் பதிக்கும் முயற்சியும் இடைவினையாடலில் தொய்வு ஏற்படாத வகையில் பபூன்படுத்துகிறார். இவ்வாறு மீணடும் மீண்டும் வாய்ப்பு என்பது கிடைக்கும்போதெல்லாம் பயன்படுததுவது அவரது உத்தியாக அமைகிறது

ஒலிபெயர்ப்பு 3:

தமது உரையாடலைத் தொடரும் சொற்கள்:

மாணவி: எனக்கு வந்து, நான் வந்து முன்னாடி என்னோட birthday celebration மாரி எனக்கு தோணுது. என் birthday அப்ப

நறிய celebrate பண்ணேன், எனக்கு பொறந்தநாள்னு ஒன்ன கிடைச்சது

ரொம்ப சந்தோஷமா இருக்கு

ஆசிரியர்: பொறந்த நாள்னு ஒன்னு கிடச்சது ரொம்ப சந்தோஷமா இருக்கு, உனக்கு? So, அது கொண்டாடுற மாதிரி தோணுது உனக்கு. சரி XXXXXX.

மேலே குறிப்பிடப்பட்ட உரையாடலில் பேசும் மாணவி, தமிழகத்திலிருந்து வருகை தந்த இயல்புமொழியாளர். அம்மாணவி நன்கு தமிழ் பேசுகிறார். எனினும் சில சொற்களை ஆங்கிலத்தில் பயன்படுத்துகிறார். அவருக்குப் பதில் கூறும்போது ஆசிரியர் மாணவி கூறியதை உறுதிப்படுத்தும்வகையில் கருத்துகளைக் கேட்கிறார். எனினும் அவர் So என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார். இது குறித்து ஆசிரியர் கருத்துரைக்கும்போது, தமக்குத் தாம் பேசும்போது சில ஆங்கிலச்சொற்கள் கட்டாயம் இடம்பெறுவது தமது பேச்சுப்பாணியின் ஒரு பகுதி என்று தெரிவிக்கிறார்.

" எனக்கு அடிக்கடி வரும். சிலசமயம் ஓகே ன்னுவேன். சில சமயம் சரின்னுவேன்" என்று கூறும் அவர், ok, Ah. . என்பவற்றையும் தமது இடைவினையாடலில் அல்லது கற்பித்தலில் பயன்படுத்துகிறார். அதிகமாக ok என்பதை 10 முறையும் Ah என்பதை 7 முறையும் பயன்படுத்தியிருக்கிறார். சில சமயங்களில் 'சரி' என்றும் அந்த ok என்ற சொல்லின் பொருள்படும் தமிழ்ச்சொல்லைப் பயன்படுத்துகிறார்.

ஒலிபெயர்ப்பு 5:

சரியான தமிழ்ச்சொல் தெரியவில்லை

> **மாணவர்:** எனக்கு என்னன்னா இப்போ. . .(not so clear). ரெண்டு பேரோட birthday. அவங்க வந்து என்னோட friend ஓட baby birthday cut cake குடுத்தாங்க. இன்னொன்னு வந்து ரெண்டாவது பெரிய cake
> **ஆசிரியர்:** பெரிய cake குடுத்திருக்காங்க

இங்கு இடம்பெறறுள்ள வகுப்பறை இடைவினையாடலில் மாணவர் தமிழை வீட்டில் பயன்படுத்துபவர் என்றாலும் ஆங்கிலத்தில் சில சொற்களைப் பயன்படுத்துகிறார். அதில் முக்கிய இடம்பெறும் cake என்ற ஆங்கிலச்சொல்லை ஆசிரியர் மாணவர் பேசியதைத் திரும்பக்கூறி உறுதிப்படுத்தும் வகையில் தாமும் பயன்படுத்துகிறார். இங்கே cake என்ற சொல்லுக்குத் தாம் படித்த காலத்திலிருந்து தமிழில்சொல் எதையும் அறியவில்லை என்றும் வீட்டிலும் பள்ளியிலும் தொடர்புச்சாதனத்திலும் அவ்வாறே கேட்டறிந்த நிலையில் தாமும் பயன்படுத்தியதாகவும் கருத்தைத் தெரிவித்தார், ஆசிரியர். "கேக் என்பதற்குத் தமிழில் தெரியவில்லை. எனக்கு வந்து சரியான வார்த்த இருக்கான்னு தெரியல. இங்க ஆறாம் வகுப்புல படிக்கிற பிள்ளைங்க கூட வாய்மொழித்தேர்வுலாம் வரும்போது பிறந்தநாள் பத்திப் பேசும்போது கேகனுதான் சொல்றாங்க" என்றவர், தொடர்ந்து, "ஒன்றாம் வகுப்பு மாணவர்களுக்கு கேக் அப்படிங்கறத தமிழ்ல சொல்லலாமான்னு தெரியல. அதனால கேக்னே சொல்லிட்டன்" என்கிறார்.

இவ்வாறு pencil, burger, stapler, pancake எனப் பல சொற்களுக்குத் தமிழில் சொல் தெரியவில்லை என்பதை வகுப்பறை உரையாடல்கள்வழி அறியலாம்.

ஒலிபெயர்ப்பு 6:

தமிழில் மொழிபெயர்ப்பைத் தருதல்

ஆசிரியர்: ஆஹ். Pinkyயுடைய பிறந்தநாள் இன்னிக்க. ஆனா Pinky ஏன் பாக்க சோகமா இருக்கு? நெனைக்றீங்க? XXXXXr சொலலு. ஏன் சோகமா இருக்கு?

மாணவர்: Friend

ஆசிரியர்: நண்பர்களே வர்ல. XXXXX சோகமா இருக்கு?

மாணவர்கள்: Presents

ஆசிரியர்: Presents. பரிச பொருளே இல்ல. பிரியா?

மாணவர்கள்: Cakeஏ(கேக்கே) இல்ல

ஆசிரியர்: Cakeஏ((கேக்கே) இல்ல. நண்பர்கள் இல்ல. பரிசு பொருள் இல்ல. (கேக்கே) இல்ல. XXXXX

மாணவி: Party

ஆசிரியர்: ஆஹ். . party. ஒரு கொண்டாட்டம் இல்ல. Xxxxx?

இங்கு இடம்பெற்ற இடைவினையாடலில் முதலில் கேள்வியை ஆசிரியர் தமிழ் பேசும் மாணவியிடம் கேட்கிறார். அவர் ஆங்கிலத்தில் பதில் தந்ததும் ஆசிரியர் தமிழில் மொழிபெயர்ப்பைத் தருகிறார். பிறகு, அதன் தொடர்ச்சியை இல்லத்தில் ஆங்கிலம்பேசும் மாணவியிடம் கேட்கிறார. அவர் ஆங்கிலத்தில் presents என்று பதில் கூற உடனடியாக அந்தக் கேள்வியின் தொடர்ச்சியை மற்றொரு மாணவியிடம் அதாவது தமிழ்பேசும் மாணவியிடம் கேட்டு உறுதிப்படுத்துகிறார். அதற்கு மாணவர்கள் “கேக்கே இல்லை” என்கிறார்கள். ஆசிரியர் கேட்டவற்றை ஆங்கிலத்தில் paraphrase என்ற முறையில்தம் வழியில் திரும்பச்சொல்கிறார். தொடர்ந்து மற்றொரு பதிலாக மாணவி party என்கிறார். இங்கே வகுப்பில் தமிழ் தெரிந்த மாணவர்களும் இல்லத்தில் தமிழ் பேசாத மாணவர்களும் ஆங்கிலத்தைப் பயன்படுத்துவதை அறியமுடிகிறது. எனினும் ஆசிரியர் உடனடியாக உரையாடலின் துடிப்பு மாறாதவகையில் தமிழில் சொற்களைக் கூறி மாணவர்களுக்குப் புரியவைக்கிறார். அதற்கு அவர் காரணங்களும் வைத்திருக்கிறார். அவற்றைப் பார்ப்போம்.

பொதுவாக மாணவர்கள் தமிழில் முழுமையாகப் பேசவும் கேட்கவும் சிரமப்படுகிறார்கள். அவர்களிடம் நாம் “முழுக்க முழுக்கத் தமிழில்பேசினால் மாணவர்கள் பேசச் சிரமப்படுகிறார். அவர்களிடம் தமிழில் தான் பேசவேண்டும் என்றால் கருத்துகளைத் தாமே கூற முன்வரமாட்டார்கள் என்பது ஆசிரியர் கருத்து. இந்தநிலையை அறிந்த அவர் அங்கிருந்து அவர்களை வகுப்பில் தொடர்ந்து உரையாடல் நடைபெறும் வகையில் எப்படிக் கொண்டு சென்றார்?

“Present பரிசுப்பொருள் இல்லியா என்று நான் பேசும்போது தமிழ்ல அறிமுகப்படுத்துவேன். இதக்கேட்டதும் அவங்க தமிழ்ல பரிசுப்பொருள்னு பயன்படுத்துவாங்க.” என்று குறிப்பிடும் ஆசிரயிர், இது போல் party, sad என்ற சொற்களுக்கும் தமிழில் மொழிபெயர்ப்பைக் கூறுகிறார். இது குறித்துக் கேட்கும்போது, இதை ஒரு கற்பித்தல் உத்தி என்கிறார். “ஏன்னா சில சமயம் அவங்களுக்குத் தெரியாதுன்னு நெனச்சா நான் தமிழில் சொல்வேன். அப்படி தெரியாதுன்னா அத கேள்வியா கேட்பேன்” என்றார். இது எப்படிச்சாத்தியம் என்றால் அவர் தமது பிள்ளைகளின் மொழிப்புழக்கம், பேச்சுப் புழக்கம், வகுப்பறை மொழி, வீட்டுமொழி ஆகியன சார்ந்த சொற்களின் பயன்பாட்டுப் புழக்கம் ஆகியவற்றைத் தாம் அறிந்துவைத்திருப்பதாகத் தெரிவித்தார். “என்னோட “பிள்ளைங்களோட தமிழ் பத்தி நான் தெரிஞ்சி வச்சிருக்கேன்” என்றார், அவர்.

ஒலிபெயர்ப்பு 6:

கடினமான சொற்களாகத் தமிழ் மொழிபெயர்ப்புச் சொல் அமையும்போது ஆங்கிலத்தில் தொடர்தல்

> **மாணவர்:** மயில், கரடி
> **ஆசிரியர்:** இத எல்லாமே வந்து வீட்ல வளக்க முடியாதே
> **மாணவர்:** இதெல்லாம் wild animals
> **ஆசிரியர்**: Wild animals புடிக்கும்
> **மாணவர்:** ஆசிரியை, எனக்கு வந்து சிங்கம், அணில், கிளி, மயில், கரடி, யானையும் புடிக்கும். யான இருக்கா?

மேலே இடம்பெற்றுள்ள இடைவினையாடலில் மாணவர் wild animals என்று கூறியதை ஆசிரியர் அவ்வாறே திரும்பக்கூறுகிறார். இதற்குக் காரணம் கொடிய மிருகங்கள் என்ற தூய தமிழ்ச்சொல் மாணவர்களுக்கு இயல்பாக மனத்தில் பதிந்த சொல்லாக இல்லை என்பதையும் ஆங்கிலத்தில் உள்ள சொல்லுக்குக் கிடைக்கும் அல்லது மனக்கண்ணில் கிடைக்கும் உடனடிப்பொருள், காட்சி ஆகியன தமிழ்ச்சொல்லை இங்கு இவர்களுக்குச் சொல்வதால் கிடைக்காது என்று அறிந்து தாம் கூறியதாகத் தெரிவிக்கிறார்.

“வைல்ட் அனிமல்ஸ் அப்டிங்கறத கொடிய மிருகங்கள் அப்படின்னு சொல்றதவிட ஆங்கிலத்துல இருக்கறது உரையாடலுக்கு உதவியா இருக்கு. கொடிய மிருகங்கள்னு சொல்லும்போது கொடிய அப்டிங்கற சொல்லுக்கு அர்த்தம் புரிஞ்சிருக்காது. ஆனா வைல்ட் அனிமல்ஸ்னு சொன்னா அவங்களுக்கு சீக்கிரமா புரியும்” என்பது ஆசிரியர்தம் கருத்து.

இங்கு ஆசிரியர் உரையாடலின் தொய்வு குறையாதிருக்கச் சில இடங்களில் ஆங்கிலச்சொல் பயன்பாடு இருப்பது பயனுடையது என்பதுடன் அங்கு புதிதாகச்சேர்க்கப்படும் அல்லதுமொழிபெயர்ப்பாக வரும் ஒரு தமிழ்ச்சொல் புதிதாக அல்லது அன்னியமாக இருந்தாலும் மாணவர்களின் இடைவினையாடல் தடைப்படும் என்றும் கருத்துரைப்பது சிந்திக்கத்தக்கது.

ஒலிபெயர்ப்பு:7

இடைவினையாடலின் வேகம், விறுவிறுப்புக்காக ஆங்கிலம் பயன்படுத்தல்; பலமுறை பயன்படுத்திய சொல்மீண்டும் வரும்போது தமிழில் மொழிபெயர்ப்பைத் தரல்

> **ஆசிரியர்:** எங்க பாக்கலாம் பன்றிய?
>
> **மாணவர்கள்:** Farm
>
> **ஆசிரியர்**: Farmல பார்க்கலாம். வேற? சிங்கப்பூர்ல எங்கே பார்க்கலாம்? ஒரு . . .
>
> **மாணவர்கள்:** Zoo
>
> **ஆசிரியர்:** விலங்கியல் தோட்டத்துல பார்க்கலாம். சரி, அடுத்தது, இந்தக் குழுவ நாம பார்க்கலாம்.

இங்கு farm என்பதை அவ்வாறே பயன்படுத்தும் ஆசிரியர், இது பெரும்பாலும் சிங்கப்பூரில் இருக்காது என்ற வாழ்வியல் அனுபவத்தின் அடிப்படையில் உள்நாட்டில் எங்கே பார்க்கலாம் என்கிறார். மாணவர்கள் Zoo என்கிறார்கள். இப்பாடத்தில் இதற்கு முன்பு இதே ஆங்கிலச்சொல் வந்தபோது அவ்வாறே பயன்டுத்தியவர் இப்போது விலங்கியல் தோட்டம் என்கிறார். அவ்வாறு பயன்படுத்துவதற்கு என்ன காரணம் என்று கேட்டபோது, முதலில் farm என்ற சொல்லுக்கு அவ்வாறே ஆங்கிலச்சொல்லைப் பயன்படுத்தியதையும் பின் zoo என்ற சொல்லுக்குத் தமிழ்ச்சொல் பயன்படுத்தியதையும் பற்றிப் பின்வருமாறு விவரிக்கிறார்:

“ஃபார்ம் அப்டிங்கறதுக்கு பண்ணைன்னு எனக்கு அப்போ தமிழ்ல வரல. அந்த நேரத்துல எனக்கு வரல. கொஞ்சம் கொஞ்சம் வராம இருந்திருக்கலாம்.” என்றவர் Zoo என்ற சொல்லைப் பற்றிப் பேசும்போது, தமிழில் விலங்கியல் தோட்டம் என்பதை நினைக்கும்போது, “அது கொஞ்சம் ரொம்ப பெரிய வார்த்தை. அதனால zooன்னு சொல்லிட்டேன். நிறைய பேசிட்டு வர்றாங்க. அடுத்தது என்னத பாத்தேன்னு சொல்வாங்க. ‘தமிழ்ல சொல்லு’ன்னா அவங்க பேசுறதுல தடை வரும். அதனால அவுங்கள ரெஸ்ட்ரிக்ட் பண்ணவேண்டான்னு தான் அப்படியே விட்டுட்டேன்.” என்கிறார். பிறகு குறிப்பிட்ட சொல் அவ்வப்போது வருவதால், “அடிக்கடி zoo ன்னு வர்றதால விலங்கியல் தோட்டம்னு சொல்றது நல்லதுன்னு சொல்லிட்டேன்” என்றார்.

ஒலிபெயர்ப்பு 8

உள்ளூர் வாழ்வியல் அனுபவம், வெளியூர் வாழ்வியல் அனுபவம் – இரண்டையும் இணைத்துப் பாடத்தில் மொழியைப் பயன்படுத்தல்

மாணவர்: அணில் வந்து மரத்துலே இருக்கும்

ஆசிரியர்: ஆஹ். . nuts கச்சான்னு சொல்வாங்கலியா, கடல மாதிரி, அது சாப்டும்

மேலே வந்துள்ள உரையாடலில் ஆங்கிலத்தில் nuts என்ற சொல்லுக்கு, 'கச்சான்' என்ற சிங்கப்பூர் மொழிப் பயன்பாட்டுச்சொல்லையும் கடலை என்று தமிழ்ச்சொல்லையும் அறிமுகப்படுத்துகிறார். அதற்குக் காரணம், உள்ளூர்ப் பின்னணியில் மலாய்மொழியில் பயன்படுத்தும் கச்சான் என்பதை மாணவர்கள் தம் முன்னறிவுடன் ஒப்பிட்டுப் அறியவும் தமிழகத்துப் பிள்ளைகள் கடலை என்று தாங்கள் கேட்ட சொல்லைக் கொண்டு கருத்தை அறியவும் இங்கு அவர் அவ்வாறு பயன்படுத்தினார். இதைப் பற்றிப் பேசும்போது, "Nuts- கச்சான்னு நம்ப சிங்கப்பூர்ல சொல்றோம். அது தமிழ்ச்சொல் இல்லன்னு நினைக்கறேன். கடலைன்னா ஊர்ப்பிள்ளைங்களுக்கு தெரியும். ஏன்னா கடலைன்னு சொன்னா அவக்க புரிஞ்சிப்பாங்க." என்றார். இங்கு ஆசிரியருக்கு ஆங்கிலச்சொல்லுக்கு உரிய தினசரிப் புழக்கத்தில் உள்ள சிங்கப்பூர்ச் சொல்லும் தமிழகத்தில் பயன்படுத்தும் சொல்லும் தெரிந்திருப்பதால் இவர் தொடக்கநிலை ஒன்றில் தமிழ் தெரிந்த சிங்கப்பூர் மாணவர்கள், தமிழ் நன்கு தெரிந்த தமிழக மாணவர்கள், தமிழ் அதிகம் பேசாத சிங்கப்பூர் மாணவர்கள் ஆகிய மூவரையும் இணைக்கும் உத்தியை அறிந்து வைத்திருக்கிறார் எனலாம்.

ஒலிபெயர்ப்பு 9:

குழப்பமான நிலையில் மாணவர்களின் சிந்தனைப்போக்குக்கு ஏற்ப ஆங்கிலத்தைப் பயன்படுத்துதல்

ஆசிரியர்: ஆஹ். . xxxxxx வா! Xxxx சொல்லு. உனக்கு என்ன தெரியும். Xxxxxx நீ வந்து எதாவது நரியப் பத்தி ஆஹ்.. சொல்லு எதாச்சும் எங்களுக்கு.

மாணவர்: நரி வந்து வீட்ல வளக்க முடியாது. ஏன் வளக்க முடியாதுன்னா ஏன்னா, அது வந்து காடடுல இருக்கும்.

ஆசிரியர்: அது வந்து காட்டுல இருக்கும். நீ பாத்திர்கியா நரிய?

மாணவர்: ஆமாம் பாத்துர்கேன், TVல.

ஆசிரியர்: TVல பாத்திர்கியா? என்ன செஞ்சுச்சு நரி?

மாணவர்: Red Wolf பாத்துர்கேன்.

ஆசிரியர்: Red Wolf பாத்துர்க்க. சிவப்பு நரி. அப்புறம் என்ன செஞ்சுச்சு அந்த நரி

மாணவர்: நாம ஒரு கத படிச்சொம்ல

ஆசிரியர்: ஆஹ். . பாருங்க. Xxxxxக்கு நியாபகம் இருக்கு பÊச்ச ஒரு கத. முயலும்

மாணவர்: நரி டீச்சர். அந்தக் கதைல நரி வரும். ஆஹ். . அந்தக் கதைல நரி வரும்

ஆசிரியர்: நீ வளப்பியா, வீட்ல?

மாணவர்: இல்ல, வளக்கவே மாட்டேன்.

இந்த வளமான தொடர் உரையாடலில் பல செய்திகளை நாம் அறியமுடிகிறது. இந்த உரையாடலில் பங்கேற்கும் மாணவன்தான் அங்கிருக்கும் ஒரே ஆண். மேலும் அவன் ஆங்கிலம் பேசும் இல்லப்பின்னணியைச் சேர்ந்தவன். இருந்தாலும் அங்கே அவனால் தொடர்ந்து தன்னை உரையாடலில் ஐக்கியப்படுத்தவும் ஆசிரியருக்குப் பதில் கூறவும் அதிலும் தமிழில் பேசவும் முடிகிறது. அவன் எங்கும் முழுமையான வாக்கியத்தைப் பயன்படுத்தவில்லை.

இங்கு ஆசிரியர் நரி என்பதை Red Wolf என்றுமாணவன் இணைத்துப் பேசியதற்கு எவ்வகையிலும் மறுப்போ ஆட்சேபமோ தவறு என்று கருத்தோ கூறவில்லை. "அந்த நேரத்துல கலந்துரையாடல் போய்ட்ருக்கறதால நான் சொல்லல" என்ற ஆசிரியர் இரண்டுக்குமான தமிழ்ச்சொற்களைச் சொல்லவில்லை என்றாலும், ஆசிரியரும் மாணவரும் சிவப்பு ஓநாயைத் தமிழில் அதிகம் கேள்விப்பட்டதில்லை. பார்த்ததுமில்லை என்கின்றனர். ஆய்வாளரும்கூடப் பார்த்தில்லை. இது பாம்பும் கீரியும் பற்றிய சிறுவர் கதையில் வரும் கீரிப் பிள்ளையைப்பற்றிப் பேசுவதுபோல. உண்மைவாழ்வில் அதன் உயிர்ப்பைப் பார்க்காததாலும் மாணவர்கள் ஆங்கிலக் கதைப்புத்தகங்கள், படங்ள் ஆகியவற்றில் அடிக்கடி இத்தகைய ஓநாயைப் பார்ப்பதாலும் பார்க்க நரி போன்றிருப்பதால் தமிழில் உள்ள நரியை அவர் சிவப்பு ஓநாய்க்குக் பயன்படுத்துகிறார். இது குறித்துக் கருத்துரைக்கும்போது ஆசிரியர், "Wolf - எனக்கு தமிழ்ல தெரியல. மேல, மாணவர்கள் நரியும் ஓநாயும்ன்ற இரண்டுக்கும் இடையே குழம்பிடுறாங்க. ஏன்னா தமிழ்ல கதையில நரின்னுதான் வருது" என்கிறார்.

இதுவரை நாம் பார்த்த பல பகுதிகளில் அதிகமாக ஆசிரியரின் ஆங்கிலமொழிப் பயன்பாட்டைப் பார்த்தோம். இங்கு அதிகமாக சொல் அளவில் ஆங்கிலம் இடம்பெறுகிறதே ஒழிய வாக்கிய அளவில் ஆங்கிலம் இடம்பெறவில்லை. இவ்வகையில் ஆசிரியர் தமிழையே பேசுகிறார் என்றும் தேவைக்கு ஏற்ப ஆங்கிலத்தைப் பயன்படுத்துகிறார் என்று உணரமுடிகிறது. அதே நேரம், தமிழில்

நிறைய செய்திகளையோ சொற்களையோ தெரியாத நிலையில் இவர் இருக்கிறார் என்றோ மாணவர்களை வேண்டுமென்றே ஆங்கிலத்தின்வழிச் செலுத்துகிறார் என்றோ கூற இயலாது.

இங்கு ஆசிரியர் சில சமயங்களில் ஆங்கிலத்தில் சிந்தித்து அதே போக்கில் தமிழ் வாக்கிய அமைப்பைப் பயன்படுத்துகிறார். அவர் பள்ளியில் ஆங்கிலவழிப் படித்ததும் சிங்கப்பூரில் தற்போதைய சராசரி இளையர்களிடையே இடம்பெறும் தொடர்புமொழியான ஆங்கிலத்தின் தாக்கம் அவரிடம் இருப்பதும் தெரியவருகிறது.

மாணவர்களிடம் அதிலும் தொடக்கநிலை ஒன்று மாணவர்களடிடம் பேசும்போது இத்தகு ஆங்கிலச்சொற்களைப் பயன்படுத்துவது அவர்களுடன் உள்ள நெருக்கத்தை அதிகப்படுத்துவதுடன் பாடம் நன்கு புரியவும் இரு சாராருக்கும் இடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படவும் வழிதருகிறது. மேலும் பலதரப்பட்ட பின்னணியிலிருந்து வரும் மாணவர்கள் தங்கள் நண்பர்களுடன் நட்பை வளர்த்துக்கொள்ள வேண்டியவர்களாகவும் இருக்கிறார்கள். ஆங்கிலவழிப் பாலர் பள்ளியில் படித்துவரும் அவர்களிடம் இவ்வாறு தேவையான இடங்களில் அவர்கள் பயன்படுத்தும் ஆங்கிலச் சொற்களைக் கொண்டு அவர்களிடம் உரையாடலைத் தொடர்வது, வகுப்பில் மகிழ்ச்சியையும் அவர்களுக்கு நிறைய பேசுவதில் ஊக்குவிப்பையும் தருகிறது. அதனால் நாம் அவர்கள் வழியிலே போவது முடிவில் நல்ல 'பயனைத்' தரும் தன்மையது என்று இவ்வகுப்பின் உரையாடல்வழியே அறிய முடிகிறது.

"நான் ரொம்ப பாத்துட்டேன். அவங்க வீட்ல நடக்றது, வகுப்புல நடக்கற விஷயம் - அவங்க மனசு விட்டு பேசறாங்க. என்மனசுல தோன்னத வகுப்பல சொல்லிக்கலாம்னு நெனக்கிறாங்க. இல்லாட்டி ரொம்ப பயப்படுறாங்க. ஏன்னா நம்ம எதுக்கெடுத்தாலும் பேசாத, தமிழ்ல பேங்கன்னா எப்பவும் நல்ல மாணவர்களே ஆட்சி பண்ணிட்டுருப்பாங்க. அதனால எல்லாரும் பேச" இப்படியொரு அணுகுமுறை தேவை என்பதை எடுத்துக்கூறும் ஆசிரியர், "இந்த வக்ப்புலதான அவங்களுக்கு மொழிமேல இருக்குற ஆசைலாம் வளர ஆரம்பிக்குது. அதனாலதான் நான் இப்படி நடத்துறேன்" என்று காரணத்தை வெளிப்படுத்தினார்.

இதுவரை நாம் பார்த்த பகுப்பாய்விலிருந்து ஆசிரியரின் ஆங்கிலப்பயன்பாட்டை ஒட்டிப் பின்வரும் கருத்துகளை அறியமுடிகிறது:

- தமிழ் வகுப்பில் மொழிக்கலப்பு இடம்பெறுகிறது. மொழி மாற்றம் இடம்பெறவில்லை
- ஆசிரியர்-மாணவர் உறவைப்பொறுத்தே வகுப்பறையில் ஆங்கிலச்சொல் பயன்பாடு, தமிழில் அவற்றை அறியும்போக்கு, தொடர்ந்து தமிழில் சொற்கோவையை வளர்த்தல் ஆகியன இடம்பெறுகின்றன.

- பாடத்தின் ஈர்ப்புத்தன்மையும் ஆசிரியரின் புரிந்துணர்வும் சற்றுநீக்குப்போக்கான மொழிப் பயன்பாடும் மாணவர்களுக்குத் தமிழில் ஆர்வத்தை உண்டுபண்புகின்றன.
- மாணவர்கள் நிறையப்பேச ஆசிரியர்கள் அதற்கு ஏற்பப்பாடத்தினைக் கொண்டுசெல்லவேண்டும். இதன் உதவியால் வகுப்பில் தமிழில் அதிகம் பேசாத பின்னணியைச் சேர்ந்த மாணவர்களை நன்கு பேசவைக்கமுடியும்.
- ஆசிரியரின் நல்ல தமிழறிவு பாடத்தில் மாணவர்களைப்பலவகைகளில் கேள்விகளைக் கேட்கவும் பேசவும் தொடர்ந்து உரையாடவும் வைக்கும்.
- ஆசிரியரும் சில சொற்களுக்குத் தமிழில் மொழிபெயர்ப்புத் தெரியாத நிலையில் உள்ளார்.
- மாணவர்களின் தேவைக்காக இங்கே ஆசிரியர் மொழிக்கலப்பை ஆதரிக்கவும் ஆங்கிலச்சொற்களைத் தொடர்ந்து பயன்டுத்தவும் தேவை இருக்கும்போது தமிழில் மொழிபெயர்ப்பைத் தந்து ஊக்குவிக்கவும் ஏற்ற உத்திகளைப் பயன்படுத்துகிறார்.

இவர் தமது கற்பித்தலிலும் தமது மாணவர்களிடத்திலும் கொண்டுள்ள ஆர்வம், கடப்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் தொடர்ந்து பல புதிய உத்திகளைக் கண்டறிவார் எனலாம்.

தமிழ் வகுப்பில் ஆசிரியர்தம் ஆங்கில மொழிப் பயன்பாடு என்பது பின்வரும் காரணங்களுக்காக அமைந்திருக்கிறது என்பதை இந்தப் பகுப்பாய்வின்வழி அறியமுடிகிறது.

- தமிழ்ச்சொல் தெரியவில்லை
- இடைவினையாடலுக்காகப் பயன்படுத்தல்
- மாணவரின் மொழியைத் தொடர்தல்
- ஆங்கிலத்தைத் தொடர்ந்து தமிழைப்பயன்படுத்தல்
- மாணவர்களின் கருததுகளை அவ்வாறே உடனே மொழிபெயர்த்தல்
- பேசும் பழக்கத்தின் ஒரு பகுதியாக அமைதல்
- பிறமொழியினர் இருப்பதால் பயன்படுத்தல்
- தெரிந்ததலும் அந்த நேரத்தில் நினைவுக்கு வரவில்லை/ வாயில் வரவில்லை
- தமிழைத் தொடர்ந்து ஆங்கிலம் வருதல்(மாணவர்களின் சிறந்த புரிந்துணர்வுக்காக)

இக்காரணங்களில் சிலவற்றைக் குறித்து மேலே ஒலிபெயர்ப்புகளின் துணையோடு பார்த்தோம்.

மாணவர்களின் ஆங்கிலமொழிப் பயன்பாடு

மாணவர்களின் ஆங்கில மொழிப்பயன்பாடு எனும்போது பெரும்பாலும் அவர்களுக்குத் தமிழில் தெரியாத சொற்களை ஆங்கிலத்தில் பயன்படுத்துகின்றனர். மேலும் எளிமையாக உள்ள சொற்களாக இருப்பின் ஆங்கிலச்சொற்களைத் தமிழ்ச்சொற்களுக்குப் பதிலாகப் பயன்படுத்துகின்றனர். தினசரி வாழ்வில் அவர்கள் பயன்படுத்தும் சொற்கள்(bye bye) அவர்களது இடைவினையாடலில் இடம்பெறுகிறது. இவர்களில் தமிழகத்திலிருந்து வந்த மாணவர்களும் சிங்கப்பூரைச் சேர்ந்த மாணவர்களும்(birthday, present) குறிப்பாக தமிழில் பேசும் மாணவர்களும் இல்லத்தில் ஆங்கிலத்தில் பேசும் மாணவர்களும் வகுப்பறை எனும்போது அவர்களது கல்வி மொழியை விட வாழ்வியல் மொழியை(முறை சாராச் சூழலில் பயன்படுத்தும் மொழி)ப் பின்பற்றி ஆங்கிலத்தில் சொற்களைப் பயன்படுத்துகின்றனர். எனினும் தொடக்கநிலை ஒன்றில், அக்டோபர் மாதம் இரண்டாம் வாரத்தில் ஒலிப்பதிவு செய்யப்பட்ட பாடத்தின் அடிப்படையில் பார்க்கும்போது அவர்களது ஆங்கிலமொழிப் புழக்கம் குறைவாக இருப்பதும் பேச்சுத்தமிழில் பேசுவதும் மகிழ்ச்சியைத்தருகிறது.

இதுவரை பார்த்த அளவில் ஆசிரியர்தம் பேச்சிலும் மாணவர்களின் பேச்சிலும் மொழிக்கலப்பு, நிகழ்ந்திருக்கிறது. ஆனால் மொழிமாற்றம் நிகழவில்லை. வாக்கிய அளவில் ஆங்கிலத்தைப் பயன்படுத்தும் பாங்கு இடம்பெறவில்லை. எனினும் அவர்களது ஒட்டுமொத்த ஆங்கிலம் மொழிப் பயன்பாட்டைப் பார்ப்போம்!

அட்டவணை: ஆசிரியர்-மாணவர் மொழிப்பயன்பாடு

பேசுபவர்/ பேசுவோர்	**மொத்தச் சொல் பயன்பாடு**	**ஆங்கிலச் சொல் பயன்பாடு**	**மலாய்ச்சொல் பயன்பாடு**	**தமிழ்ச் சொற்களின் பயன்பாடு**
ஆசிரியர்	2515	64(2.5%)	1(.1%)	2450(97.4%)
மாணவர்கள்	958	75(7.8%)	-	883(92.6%)

இந்த அட்டவணை ஒரு வகுப்பின் இடைவினையாடலில் இடம்பெறும் மொழிக்கலப்பை எடுத்துக்காட்டுகிறது என்பதுடன் அதில் இரு சாராரும் பயன்படுத்திய தமிழ்மொழியின் அளவையும் அறிய முடிகிறது. ஆசிரியர் முறையே 64 ஆங்கிலச் சொற்களையும் 2450 தமிழ்ச்சொற்களையும் ஒரு மலாய்ச்சொல்லையும் பயன்படுத்தியுள்ளார். மாணவர்கள் தாம் பயன்படுத்திய மொத்தச் சொற்களான 958 சொற்களில் 75 ஆங்கிலச்சொற்களையும் 883 தமிழ்ச்சொற்ளின் அளவுடன் ஒப்பிடும்போது மாணவர்கள் 38 விழுக்காடு அளவுக்குத் தமிழைப் பயன்படுத்தியுள்ளனர். இங்கு மாணவர்களின் தமிழ்மொழிப் புழக்கத்துக்கு ஏதுவாக

ஆங்கிலக்கலப்பு இடம்பெற்றிருக்கிறது என்று கூறலாம். இந்தக் கட்டுரை சிங்கப்பூர்த் தமிழ் மொழி வகுப்பு ஒன்றில் இடம்பெற்ற ஒரு நாள் பாடத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்திருந்தாலும் இதை எலலாவகுப்புகளிலும் இடம்பெறும் நிகழ்வு என்று கொள்ள இயலாதவகையில் இந்தப் படைப்பின் வரையறை இங்கு குறிப்பிடத்தக்கதாக இருந்தாலும் இதன் கருத்துகள் இரண்டாம் மொழியாகத் தமிழ் கற்பிக்கும் வகுப்புகளுக்கும் பொருந்தும் என்பது குறிப்பிடத்தக்கது.

முடிவுரை:

தமிழ் மொழிப் பாடத்திட்டம் (கல்வி அமைச்சு, 2007) தொடக்கநிலை வகுப்பு மாணவர்களின் பேசுதல் பற்றிக் குறிப்பிடும்போது, மாணவர்கள் பேச்சுத்தமிழில் பேசப் போதிய பயிற்சியையும் ஏற்ற சூழலையும் ஆசிரியர் ஏற்படுத்தித்தரவேண்டும் என்றும், மாணவர்கள் பேசும்போது, "பிறமொழிச் சொற்கள் ஆங்காங்கே பேச்சுத்தமிழில் இடம்பெறுவதை ஓரளவு அனுமதித்தல்"(ப.24) என்றும், "சரளமாகவும் தன்னம்பிக்கையோடும் பேசும் திறனை வளர்த்தல்"(ப.24), "மாணவர்கள் பேச்சுத்தமிழில் செய்யும் தவறுகளை உடனுககுடன் திருத்தாமல் அவர்களைத் தொடர்ந்து பேசவிடுதல்"(ப.24) என்றும் கூறுகிறது. இங்கு வகுப்பறையில் இடம்பெற்ற உரைக்கோவையில் மேற்கூறிய கருத்துகள் உயிர்பெற்றிருப்பதை அறியமுடிகிறது. மாணவர்களுக்காக ஆசிரியர் உரிய இடங்களில் மொழிக்கலப்பையும் உரையாடலில் தொய்வு ஏற்படாதிருக்கவும் மாணவர்களின் தன்னம்பிக்கை குறையாதிருக்கவும் அவர் ஆங்கிலமொழிச் சொற்களைப் பயன்படுத்தியிருக்கிறார் என்றும் கூறலாம்.

இன்றைய சிங்கப்பூரில் மாணவர்களை மையமாகக் கொண்டே பாடங்கள் இடம்பெறுகின்றன. கருப்பொருள்களும் அவ்வாறு அமைவதே மாணவர்களை ஈர்க்கின்றன. இந்நிலையில் மாணவர்கள் வகுப்பில் முன்னிலை பெற அவர்கள் வழியில் போய் அவர்களை ஈர்ப்பது இன்றியமையாதது. அதிக அளவில் குடும்பங்களில் ஆங்கிலம் இடம்பெறும் வழக்கம் அதிகரிப்பதும் குறைந்த அளவு காரணமாக தமிழ் வகுப்பில் தம் மொழியினரை அதிகமாகப் பார்க்கும் தமிழ் மாணவர்களுக்குள் மொழிப்பற்று, தமிழின்மீது ஆர்வம், தம் பாரம்பரிய பண்புகள் மீதான விழிப்புணர்வு, தன்னம்பிக்கையுடன் தமிழில் பேசபவர்களாக உயர்தல் ஆகிய இலக்குகள் நிறைவேற, மொழிக்கலப்பு என்பது இன்றைய இருபத்தோராம் நூற்றாண்டில் தேவையாக உள்ளது எனலாம். எனவே அதை இன்றைய உலகளாவிய நிலையில் நம் மாணவர்களிடையே தொடர்ந்து பண்படுத்தி வளர்த்துவரவேண்டும் (இங் எங் ஹென், 2009). அப்போதுதான் இவர்கள் உலகளாவிய சிங்கப்பூரர்களாக உயரவும் பன்னாட்டினருடன் துணிவுடன் பேசவும் தம் கருத்துகளை நன்கு

வெளிப்படுத்தவும் இயலும். அறையில் ஆடித்தானே அம்பலத்தில் ஆடமுடியும்! சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்! மேலும், மொழி என்பது இன்றியமையாத ஒரு திறன்.

மேற்கோள் நூல்கள்/கட்டுரைகள்:

1. இராமையா, 1998. தமிழில் மாணவர்கள் செய்யும் மொழிப்பிழைகள்: ஓர் ஆய்வு. சிங்கப்பூர்: ஆசிரியர்.
2. கல்வி அமைச்சு, 2007. தாய்மொழிப் பாடத்திட்டம் 2008 தொடக்கநிலை, சிங்கப்பூர்: கல்வி அமைச்சு.
3. கல்வி அமைச்சு, 2011. ஆர்வத்துடன் கற்றுத் திறம்படப் பயன்படுத்துவோரை உருவாக்குதல்: 2010 தாய்மொழிகள் மறுஆய்வுக்குழு அறிக்கை. சிங்கப்பூர்.: கல்வி அமைச்சு.
4. Chitra Shegar and Ridzuan Bin Abdul Rahim, 2005. Tamil Language Instruction in Singapore: A preliminary report on findings of classroom pedagogical practice. Research Report. Singapore: Centre for Research in Pedagogy and Practice, National Institute of Education, 1-27.
5. Goh Yeng Seng, 2010. The Bilingual Approach (BA) for Primary School Chinese Language Teachers TE21 Summit - Sharing on AG Pedagogical Practices, National Institute of Education, Singapore.
6. Katja F Cantone, 2007. Code-switching in Bilingual Children. Netherlands: Springer
7. Mahizhnan, A. 1996. Report of the Tamil Education Review Committee, SINDA, Singapore.
8. Manfred Wu Man-Fat, 2005. A Critical Evaluation of Singapore's Language Policy and its Implications for English Teachinghttp://www3.telus.net/linguisticsissues/singapore.html
9. Mani, A., and Gopinathan, S. 1983. Changes in Tamil Language Acquisition and Usage in Singapore: A Case of Subtractive Bilingualism. Southeast Asian Journal of Social Science, 11(1), 104-117.
10. MOE, 2004. Malay Language and Tamil Language Curriculum and Pedagogy Review Committees Set Up, Media Releases(14 December 2004), Singapore. Website: http://www.moe.gov.sg/media/press/2004/pr20041214a.htm
11. Ng Eng Heng. Speech by Dr Ng Eng Hen, Minister for Education and Second Minister for Defence, at the MOE Work Plan seminar 2009, 17 Seminar 2009, 11.00 am at the http://www.news.gov.sg/public/sgpc/en/media_releases/agencies/moe/speech/S-20090917.html
12. Saravanan,.V. (1998). Language maintenance and language shift in the Tamil community. In Gopinathan, S., Pakir, A., Kam, H. W., & Saravanan, V.(Eds). Language, society, and education in Singapore: Issues and trends (2nd ed.). Singapore: Times Academic Press. 155–178.
13. Saravanan, V. (1999). Bilingual Chinese, Malay and Tamil children's language choices in a multilingual society. Early Child Development and Care, 152, pp. 43–54.
14. Saravanan, V. (2001). The significance of bilingual Chinese, Malay and Tamil children's English

network patterns on community language use patterns. Early Child Development and Care, 166, 81 – 91.

15. Saravanan, V. (2002). Effects of socio-economic status and social networks on linguistic behaviour:
16. Focus on Singapore. In Methodological Issues in Language Maintenance and Language Shift Studies. M K David.(Ed.), Berlin: Peter Lang.
17. Saravanan V., Lakshmi, S., & Caleon, I., (2007). Attitudes towards literary Tamil and standard spoken Tamil in Singapore. International Journal of Bilingual Education and Bilingualism, 10(1), 58–79.
18. Schiffman, H. F. (1995). Language shift in the Tamil communities of Malaysia and Singapore: The paradox of Egalitarian language policy. Language loss and public policy, I, Bills G. (Ed). Southwest Journal of Linguistics, 14(1&2). Retrieved August 21, 2009, from http://ccat.sas.upenn.edu/~haroldfs/540/handouts/sparadox/sparadox.html
19. Schiffman, H, F. (2002). Tongue-tied in Singapore: A language policy for Tamil? Journal of Language, Identity and Education, 2(2), 105–125.
20. Schiffman, H, F. (2008). Tamil language policy in Singapore: The role of implementation. Language, capital, culture: Critical studies of language in education in Singapore (209–226). Rotterdam: Sense Publishers.
21. Ritchie W.C. and Bhatia, T.K. 2004. "Social and Psychological Factors in Language Mixing", In *The handbook of bilingualism* T.K. Bhatia and W.C. Ritchie (Eds.), (pp. 336-352), Oxford: Blackwell Publishing Ltd.
22. Tharman Shanmugaratnam . 2005. Speech by Mr Tharman Shanmugaratnam, Minister for Education, at the 54th Thamizhar Thirunaal Community Fund Dinner, on Sunday, 20 November 2005, at 7pm at Ceylon Sports Club. http://www.trc.org.sg/resources/archive/20Nov05.htm

குறிப்பு: XXXXX (மாணவரின் உண்மைப்பெயருக்குப் பதில் இவ்வாறு தரப்பட்டுள்ளது)

Acknowledgements:

- I wish to acknowledge Prof Renu Gupta's guidance and support in writing this paper and my sincere thanks to her for her immense interest in my paper.
- I wish to express my heartfelt thanks to the Tamil teachers for their interviews for this paper.
- This paper makes use of data from the research project "Curriculum Implementation in early primary schooling in Singapore (CIEPSS) -stage 1(OER 47/08 MS) - Research project funded by the Office of Educational Research, National Institute of Education, Singapore. The views expressed in this paper are the author's and do not necessarily represent the views of the Office of Educational Research or the Institute.

சமூகத்தொடர்பு வழியாக 21-ஆம் நூற்றாண்டுத் திறன்களைப் பெறுதல்

சம்பந்தன் மோகன் & ஷாமினி ராஜகுமார்
தட்சணாமூர்த்தி & உமாராணி
கிரசண்ட் பெண்கள் பள்ளி, சிங்கப்பூர்.

செயலாய்வுச் சுருக்கம்

சமூகத் தொடர்புகளை மையமாகக் கொண்ட கற்றல் நடவடிக்கைகளை மாணவர்களுக்கு ஏற்படுத்தித் தருவதன் மூலம் மாணவர்கள் 21 ஆம் நூற்றாண்டுத் திறன்களைப் பெறமுடிகின்றதா என்பதைக் கண்டறிவதே இச்செயலாய்வின் நோக்கமாகும். உயர்நிலை மூன்றில் உயர்தமிழ் பயிலும் 24 மாணவர்கள் இச்செயலாய்வில் பங்குபெற்றனர். முன்னிலைக் கருத்துக்கணிப்பு, முன்னிலைத்தேர்வு, இடையீட்டுத் திட்டப் பாடங்கள், பின்னிலைத் தேர்வு, பின்னிலைக் கருத்துக்கணிப்பு ஆகியன நடத்தப்பட்டன. இடையீட்டுத் திட்டப்பாடங்கள் முறைப்படுத்தப்பட்டன. மாணவர்களுக்குச் சமூகத்தொடர்பு ஏற்படும் வகையில் வகுப்பறையிலும் வகுப்பறைக்கு வெளியேயும் பல்வேறு நடவடிக்கைகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டு அவற்றை மேற்கொள்ள முறையான பயிற்சிகளும் வழங்கப்பட்டன. கொடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்குத் தகுதிநிலை விளக்கக்குறிப்புகளும் வழங்கப்பட்டன. அவற்றைக்கொண்டு ஆறு வார இடையீட்டுப் பாடதிட்டங்களின் செயல்பாடுகள் அளவிடப்பட்டன. மாணவர்கள் 21 ஆம் நூற்றாண்டின் செயல் திறன்களைப் பெறுவதற்கு இந்நடவடிக்கைகள் பெரிதும் உதவியிருக்கின்றன. மாணவர்களின் மொழித்திறன், சமூகத்தொடர்பு, படைப்பாக்கத்திறன் ஆகியவை மேம்பட்டிருப்பதை ஆய்வுத் தரவுகள் காட்டுகின்றன.

முன்னுரை

இந்த 21 ஆம் நூற்றாண்டில் மாணவர்களுக்கு அடிப்படையான பாடஅறிவு, மொழித்திறன்கள் ஆகியவற்றில் போதிய அறிவும் பயிற்சியும் இருந்தால் மட்டும் போதாது. அவர்கள் கல்வி சார்ந்த திறன்களோடு ஏனைய செயல் திறன்களையும் வளர்த்துக் கொள்ள வேண்டிய தேவை பெருகியுள்ளது. வாழ்க்கைச் சவால்களைச் சந்திக்கவும் எதிர்கொள்ளவும் அவர்களுக்குப் பாட அறிவு, மொழித்திறன்களோடு 21-ஆம் நூற்றாண்டுச் செயல் திறன்களும் மிகவும் அவசியமாகின்றன. மாணவர்களின் மொழித்திறன்களை வளர்ப்பதோடு மற்ற செயல்திறன்களிலும் கவனம் செலுத்திப் பயிற்சியளிக்க வேண்டிய கடப்பாடு ஆசிரியர்களைச் சார்ந்துள்ளது. இத்திறன்களைத் தனித்துக் கற்பிக்காமல், மொழிப்பாட நடவடிக்கைகளின் மூலமாக இணைத்துக் கற்பிப்பது பொருத்தமாகும்.

பின்னணி

2010 ஆம் ஆண்டு தாய்மொழி மறுஆய்வுக் குழுவின் பரிந்துரையில் மாணவர்கள் தாய்மொழியை ஆர்வத்துடன் கற்று மொழியைத் திறம்பட பயன்படுத்தும் ஆற்றலை வளர்க்க வேண்டும் என்பது முக்கிய நோக்கமாகும். சிங்கப்பூரில் தாய்மொழிகள் வாழும்மொழியாக விளங்க அரசு, சமூக அமைப்புகள், பள்ளிகள் ஆகியன தொடர்ந்து பாடுபட்டு வருகின்றன. பள்ளிகள் மாணவர்களுக்கு முழுமையான கல்வியை வழங்க பல்வேறு பணித்திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன. அவற்றுள் 21 ஆம் நூற்றாண்டுத் திறன்களைப் பெறுவது முக்கியக்கூறாகும்.

சிக்கலைக் கண்டறிந்த விதம்

இந்த 21 ஆம் நூற்றாண்டில் மாணவர்கள் கல்வி அறிவோடு அனுபவ அறிவும் பெறும்போதுதான் அவர்கள் இந்தக் காலகட்டத்திலும் எதிர்காலத்திலும் சிறந்து விளங்க முடியும். மாணவர்கள் குழுநிலையில் பணியாற்றும்போதும் புத்தாக்க முறையில் படைப்புகளை உருவாக்கிப் படைக்கும்போதும் தன்னம்பிக்கை இல்லாமல் மொழித்திறன் குறைந்தும் விளங்கியதைக் காணமுடிந்தது. மாணவர்கள் குழுநிலையில் தங்கள் கருத்துகளைத் தயக்கம் இல்லாமல் எடுத்துச்சொல்லவும் ஒரு படைப்பைச் சிறப்பாக வெளிப்படுத்த அவர்களுக்கு வகுப்பறைக்கு அப்பாலும் சில கற்றல் நடவடிக்கைகள் தேவை என்பது கண்டறியப்பட்டது.

நோக்கம்

21 ஆம் நூற்றாண்டுத் திறன்களைச் சமூகத்தொடர்பு வழியாகப் பெறுவதற்குப் பல்வேறு சமூகம் சார்ந்த நடவடிக்கைகளை மாணவர்களுக்கு எற்படுத்தி தருவதோடு அதன்மூலம் அவர்கள் தங்கள் எதிர்கால சவால்களைச் சமாளித்து வெற்றி பெறுவதற்கு உரிய திறன்களை வளர்த்துக்கொள்ளச் செய்வது இச்செயலாய்வின் நோக்கமாகும்.

கருதுகோள்

பிரச்சனைக்குத் தீர்வு காணுதல், காரண காரியம், தொடர்புபடுத்துதல் ஆகிய கூறுகளில் போதுமான பயிற்சிகளையும் சமூகம் சார்ந்த பல்வேறு நடவடிக்கைகளை மாணவர்களுக்கு ஏற்படுத்தித் தருவதன் மூலம் மாணவர்கள் 21 ஆம் நூற்றாண்டு திறன்களை வளர்த்துக்கொள்ள முடியும் என்பது இச்செயலாய்வின் கருதுகோளாகும்.

ஆய்வு வினாக்கள்

1. சமூகத் தொடர்புகளை மையமாகக் கொண்ட கற்றல் நடவடிக்கைகள் மூலம் மாணவர்களின் 21 ஆம் நூற்றாண்டுத் திறன்களை வளர்க்க முடியுமா?

2. சமூகத்தொடர்புடைய நடவடிக்கைகளை மாணவர்களுக்கு எவ்வாறு ஏற்படுத்திக் கொடுப்பது?

செயல் முறை

முன்னிலைக் கருத்துக்கணிப்பு, முன்னிலைத் தேர்வு, இடையீட்டுத் திட்டப் பாடங்கள், பின்னிலைத் தேர்வு பின்னிலைக் கருத்துக்கணிப்பு ஆகியவை இச்செயலாய்வில் முறைப்படி நடத்தப்பட்டன. முன்னிலைக் கருத்துக்கணிப்பில் மாணவர்களின் பின்புலத்தை அறிந்துகொள்ளப் பல கேள்விகள் கேட்கப்பட்டன. அவற்றுள் படைப்பாற்றல், மற்றும் சமூகம் சார்ந்த செயல்பாடுகள், நடவடிக்கைகள், ஆகியவற்றில் மாணவர்களின் பங்களிப்பை அடிப்படையாகக் கொண்ட வினாக்கள் இடம்பெற்றன.

பெரும்பாலான மாணவர்கள் செய்தித்தாள், வானொலி, தொலைக்காட்சி போன்ற சமூக ஊடகங்களின் படைப்புகளைப் பற்றி அறிந்திருந்தாலும் அவற்றில் பங்குபெற்று தங்கள் கருத்துகளை வெளிப்படுத்தியதில்லை என்பதும் அவர்களின் படைப்பாக்கத்திறன் வெளிப்பட போதுமான தன்னம்பிக்கை அவர்களுக்கு இல்லை என்பதும் தெரிந்தது. எனவே , அதன் அடிப்படையில் இச்செயலாய்வுக்கான கருதுகோளை உருவாக்குவது எளிதாக இருந்தது. இதனைக் கருத்திற்கொண்டு மேற்கொள்ளப்படவேண்டிய ஆதார நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டன. மேலும், அவர்களின் படைப்பாக்கத்திறனை வளர்க்க துணைபுரியும் தகுதிநிலை விளக்கக்குறிப்புகளும் உருவாக்கப்பட்டன.

ஆய்வுக்கருவிகள்

இந்த ஆய்வினை மேற்கொள்வதற்கு முன்னர், முதலில் முன்னிலைக் கருத்துக்-கணிப்புப் படிவம் தயாரிக்கப்பட்டது. முன்னிலைத்தேர்வு மற்றும் பின்னிலைத் தேர்வு ஆகியவற்றுக்குப் மாணவர்களின் மொழிநடவடிக்கைகள் கவனமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டன. அவை சமூகத்தோடு நாள்தோறும் சந்திக்கின்ற நிகழ்வுகளை-யொட்டி அமைக்கப்பட்டன. மேலும் அவை வகுப்பறைக்கும் அப்பால் மாணவர்கள் வெளியுலக அனுபவத்தைப் பெறும் வகையில் அமைக்கப்பட்டன. கொடுக்கப்படும் நடவடிக்கைகளைச் சிறப்பாகச்செய்து முடிக்க தகுதிநிலை விளக்கக்குறிப்புகள் அளிக்கப்பட்டன. அக்குறிப்பை மாணவர்கள் அறிந்துகொள்வதற்கும். முன்னிலைத் தேர்வின் போது மாணவர்களின் செயல்பாடுகள் குறித்த விளக்கமும் அளிக்கப்பட்டன. மாணவர்களின் புரிந்துணர்வையும் அவர்களின் மற்ற எதிர்பார்ப்புகளையும் அறிந்துகொள்வதற்கு பின்னிலைக் கருத்துக்கணிப்புப் படிவம் தயாரிக்கப்பட்டது. இறுதியாக மாணவர்களின் இச்செயலாய்வு குறித்த எண்ணங்களை அறிந்துகொள்ள

கூகுல் தளத்தில் கருத்துக்களம் அமைத்துத் தரப்பட்டது. அவற்றில் மாணவர்கள் தங்கள் எண்ணங்களைப் பதிவு செய்தனர்.

இடையீட்டுத் திட்டம்

இடையீட்டுத் திட்ட அடிப்படையிலான பாட நடவடிக்கைகள் மூன்று மாதங்களுக்கு நெகிழ்வுத்தன்மையோடு அமைக்கப்பட்டன. மாணவர்களின் முன்னிலைக் கருத்துக் கணிப்பு மற்றும் முன்னிலைத் தேர்வுகள் இவற்றின் அடிப்படையில் மாணவர்கள் சமூகத்திறன் பெறும் வகையில் நடவடிக்கைகள் தேர்ந்தெடுக்கப்பட்டன. இதற்கு அவர்களுக்குத் தகுதிநிலை விளக்கக்குறிப்புகளும் மற்றும் பயிற்சி வகுப்புகளும் உதவும் வகையிலும் அவர்களின் ஆர்வநிலையைத் தூண்டும் வகையிலும் அமைந்திருந்தன.

1. பள்ளி நடவடிக்கைகள் –கேளிக்கைச்சந்தை நிறுவுதல் -, வாடிக்கையாளர்களிடம் பேசி பொருள்களை வாங்கச்செய்தல், புகைப்படமெடுத்தல், பேட்டிக்காணுதல், பார்வையாளர்களை ஈர்த்தல், செய்தித்தாளுக்குச் செய்தி உருவாக்குதல்-)
2. வானொலி நிகழ்ச்சியில் பங்கெடுத்தல் – வானொலி படைப்பாளரோடு உரையாடுதல் தன்னம்பிக்கையோடு தங்கள் கருத்துகளைப் பகிர்ந்துகொள்ளுதல் ஒலி 96.8 இல்மை ஜங்ஷன் நிகழ்ச்சி (26-7-2011 இரவு 9-10மணி வரை பங்கேற்பு)
3. தொலைக்காட்சி செய்தி உருவாக்குதல் (நியூஸ்மேக்கர் மென்பொருளில் செய்திகளைத் தொலைக்காட்சி பாணியில் உருவாக்குதல்)
4. கதை கூறுதல்-தொடக்கப்பள்ளி மாணவர்களுக்குப் பல்வேறு உத்திமுறைகளைப் பயன்படுத்தி கதை சொல்லுதல்)
5. தமிழ் முரசு கல்விப்பயணம் (தமிழ் முரசில் செய்தி உருவாக்குதல் அதன் அச்சுசெய்யும் முறை, வடிவமைப்பு போன்ற தகவல்களை அறிந்துகொள்ளுதல்
6. சிறுகதை பயிலரங்கு (சிறுகதை ஆசிரியரின் அனுபவங்களையும் அவரின் படைப்புகளைத் திறனாய்வு செய்யும் நோக்கிலும் படைப்புகளை உருவாக்கும் நுணுக்கங்களையும் ஆராய்தல்)
7. நாடகப்பயிலரங்கு (நாடக உத்தி முறை , நாடக வசனங்களை எழுதுதல், அவற்றுக்கு ஏற்ப காட்சிகளை அமைத்தல், நடிப்புத்திறன் போன்றவை)
8. விளம்பரம் தயாரித்தல் (தொலைக்காட்சி, வானொலி, செய்தித்தாள் ஆகியவற்றுக்கு விளம்பரம் தயாரித்தல்)
9. கணினி கண்காட்சி நிறுவுதல் (மாணவர்களின் படைப்புகளை மற்றவர்களுக்கு எடுத்துக்கூறுதல், பயன்படுத்தப்படும் மென்பொருள்கள், அவற்றின் பயன்கள் போன்றவை – உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்றல்)

10. அழைப்பிதழ் உருவாக்குதல் (பல்வேறு நிகழ்ச்சிகள் குறித்த அழைப்பிதழ் உருவாக்குதல் திருமணம், பிறந்தநாள், சமூக மன்ற நிகழ்ச்சிகள் போன்றவை)

முடிவுகளின் பகுப்பாய்வு

இடையீட்டுத் திட்ட நடவடிக்கைகளில் பெற்ற அனுபவம் அடைந்த பயன்கள் ஆசிரியர் மாணவர்களிடையே உடன்பாடான கருத்துகளை வெளிப்படுத்தின. தகுதிநிலை விளக்கக்குறிப்புகள் தங்களைத் தயார் படுத்திக்கொள்ள உதவியதை மாணவர்கள் எடுத்துக்கூறினர். இடையீட்டுத்திட்ட நடவடிக்கைகள் மாணவர்களின் மொழித்திறன்களையும் மற்றவர்களுடன் குழுநிலையில் இணைந்து பணியாற்றவும் படைப்பாற்றல் திறனை வளர்க்கவும் சிந்தனைத் திறனை வளர்க்கவும் உதவின என்பதற்கு இச்செயலாய்விலிருந்து பெறப்பட்ட முடிவுகள் ஆதாரமாக உள்ளன

முன்னிலை, பின்னிலைத் தேர்வு முடிவுகள்



கட்டுப்படுத்திய கூறுகள்

21 ஆம் நூற்றாண்டுத் திறன்கள் 2010 ஆம் ஆண்டு பரிந்துரைக்கப்பட்ட பாடத்திட்டத்தின் அடிப்படையில் இச்செயலாய்வு முதல் முயற்சியாக மேற்கொள்ளப்பட்டது. ஆகவே, அதற்கான ஆய்வுத் தரவுகளும் நடவடிக்கைகளையும் தேர்வு செய்வது சற்று சிரமமாக இருந்தது. மேலும், உயர்நிலை 3 மாணவர்கள் இருவகுப்பாகப் பிரிக்கப்பட்டிருந்தனர். ஆகவே அவர்களுக்குரிய பயிற்சி நடவடிக்கைகளையும் அதனைத் தொடந்து நடவடிக்கைகளையும் இரண்டு

வகுப்புகளுக்கும் தனித்தனியே மேற்கொள்ள வேண்டியிருந்தது. மேலும், வானொலி, செய்தித்தாள், கதை கூறுதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அதற்குரிய இடங்களில் ஒப்புதல் பெறவேண்டிய நிலை இருந்தது. அதற்குரிய நாட்களைத் தெரிவு செய்வதில் கால நீட்டிப்பு ஏற்பட்டது.

பரிந்துரைகள்

இச்செயலாய்வு முழுமையாக வெற்றி அடைந்துள்ளதா என்பதை அறிய மேலும் ஆறு மாத காலத்திற்கு மாணவர்களின் செயல்பாடுகளை உற்றுநோக்க வேண்டும். மாணவர்களின் மொழித்திறன்களைக் கவனித்து வரவேண்டும்.

பொதுவாக கற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது தகுதிநிலை விளக்கக்குறிப்புகளைப் பயன்படுத்தலாம். அதன்மூலம் மாணவர்கள் சரியான இலக்கை நோக்கி கற்றல் திறனை வளர்த்துக் கொள்ள முடியும்.

உயர்நிலை 3 மாணவர்கள் இச்செயலாய்வில் பங்குபெற்றனர். இதே போன்று உயர்நிலை 1 மற்றும் 2 மாணவர்களுக்கு பாட நடவடிக்கையோடு கூடுதலாக வகுப்பறைக்கு வெளியே பல்வேறு நடவடிக்கைகளை ஏற்படுத்திக் கொடுக்கலாம்.

முடிவுரை

21 ஆம் நூற்றாண்டுத் திறன்கள் கல்வி அமைச்சால் குறிப்பிடப்பட்டிருந்தாலும் இவ்வாய்வில் மாணவர்கள் தம் சமுகத்தோடு இணைந்து செயல்படவும் மொழியின் எதிர்கால தேவை அறிந்துகொள்ளவும் தங்களின் புத்தாக்கத்திறனை வளர்த்துக்கொள்ளவும் இத்தகைய ஆய்வுகள் கைகொடுக்கும். சிங்கப்பூரில் தமிழ்மொழியை வாழும் மொழியாக்கவும். தமிழ் மொழியை ஆர்வத்துடன் கற்று அதைத் திறம்பட பயன்படுத்தவும் இதுபோன்ற கற்றல் நடவடிக்கைகள் உதவும் என்பது இச்செயலாய்வின் வழி அறிந்துகொள்ள முடிந்தது.

எண்	திறன்கள்	1	2	3	4	5	6	குறிப்பு
	ஒருங்கிணைந்த சமூகத் திறன்கள்	மற்றவர்களுடன் கலந்துரையாட குறைந்த முயற்சியைக் கொண்டிருத்தல்	மற்றவர்களுடன் ஓரளவு கலந்துரையாடுதல் வார்த்தைகள் சைகைகளில் கவனக்குறைவு	பொருத்தமான வார்த்தைக்களையும் சைகைகளையும் பயன்படுத்தி மற்றவர்களுடன் கலந்துரையாடுதல்	பல்வேறு சமூகத் தொடர்புகளில் பொருத்தமாக உரையாடுதல்	பல்வேறு சமூகத் தொடர்புகளில் உரையாடும்போது பொருத்தமான கூர்வுணர்களைப் பயன்படுத்த முயற்சி செய்தல்	பல்வேறு சமூகத் தொடர்புகளில் உரையாடும்போது பொருத்தமான கூர்வுணர்களைப் பயன்படுத்த அறிதல்	
		மற்றவர்களுக்கு வளைந்து கொடுக்கவும் குழு வேற்றுமைகளை அனுசரிக்கவும் குறைந்த முயற்சி	மற்றவர்களுக்கு வளைந்து கொடுக்கவும் குழு வேற்றுமைகளை அனுசரிக்கவும் ஓரளவு முயற்சி செய்தல்	மற்றவர்களுக்கு வளைந்து கொடுக்கவும் குழு வேற்றுமைகளை அனுசரிக்கவும் தெரிந்திருத்தல்	மற்றவர்களுக்கு வளைந்து கொடுக்கவும் விட்டுக்கொடுத்து குழு வேற்றுமைகளை அனுசரிக்கவும் நன்றாகத் தெரிந்திருத்தல்	மற்றவர்களுக்கு வளைந்து கொடுக்கவும் விட்டுக்கொடுத்து குழு வேற்றுமைகளை கட்டுக்குள் வைத்து பொதுவான குறிக்கோளை அடைய முயற்சி செய்தல்	மற்றவர்களுக்கு வளைந்து கொடுக்கவும் விட்டுக்கொடுத்து குழு வேற்றுமைகளை கட்டுக்குள் வைத்து பொதுவான குறிக்கோளை அடைதல்	
		குழு வேலையில் பங்களிப்பு குறைவு	குழு வேலையில் ஓரளவு பங்களிப்பு	குழு வேலையில் பங்களித்தல்	குழு வேலையில் பங்களித்து தனக்கு உரிய பொறுப்பை ஏற்றல்	தனக்குரிய பொறுப்பையும் சிறந்த பங்களிப்பையும் கொண்டு இலக்கை அடைவதன் வாயிலாக பொதுவான குறிக்கோளை அடைய முயற்சித்தல்	தனக்குரிய பொறுப்பையும் சிறந்த பங்களிப்பையும் கொண்டு இலக்கை அடைவதன் வாயிலாக பொதுவான குறிக்கோளை அடைதல்	

பின்னிணைப்பு 2

சமூகத்தொடர்பு வழியாக 21ஆம் நூற்றாண்டின் திறன்களைப் பெறுதல்

ஆய்வுக்கு முந்திய கருத்துக்கணிப்பு

வலுவாக உடன்படுகிறேன்	உடன்படுகிறேன்	ஓரளவு உடன்படுகிறேன்	மறுக்கிறேன்	வலுவாக மறுக்கிறேன்
1	2	3	4	5

பொருத்தமான வட்டத்தை ●நிழலிடவும்

		1	2	3	4	5
1	தமிழ்ப்பாடம் எனக்கு விருப்பமான பாடமாகும்.	○	○	○	○	○
2	பள்ளியில் தாய்மொழியாகத் தமிழ்மொழியைப் படிப்பது அவசியம்.	○	○	○	○	○
3	தாய்மொழியின் வழியாக நான் என் திறனை வளர்க்க முடியும்	○	○	○	○	○
4	நான் தமிழ் செய்தித்தாள் படிப்பேன்	○	○	○	○	○
5	எனக்குத் தமிழ்ச் செய்தித்தாளுக்குப் படைப்புகளை அனுப்ப விருப்பம் உண்டு.	○	○	○	○	○
6	தமிழ்ச் செய்தித்தாளுக்கு என்னால் படைப்புகளை அளிக்க முடியும்.(செய்தி, கதை, கவிதை)	○	○	○	○	○
7	நான் தமிழ் வானொலி நிகழ்ச்சிகளைக் கேட்பேன்	○	○	○	○	○
8	எனக்கு தமிழ் வானொலியில் நிகழ்ச்சிகளைப் படைக்க ஆர்வம் உண்டு.	○	○	○	○	○
9	என்னால் தமிழ் வானொலிக்கு நிகழ்ச்சிகளை படைக்க முடியும்	○	○	○	○	○
10	நான் தமிழ்த் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்ப்பேன்	○	○	○	○	○
11	நான் தமிழ்த் தொலைக்காட்சி நிகழ்ச்சியில் பங்கேற்க ஆசைப்படுகிறேன்	○	○	○	○	○
12	ஊடகங்களில் எனக்கு விளம்பரங்கள் பிடிக்கும் (தொலைக்காட்சி, வானொலி, செய்தித்தாள்)	○	○	○	○	○
13	தமிழ் மொழியில் என்னால் விளம்பரங்களை உருவாக்க முடியும்	○	○	○	○	○
14	மற்ற பள்ளி மாணவர்களுடன் நான் இணைந்து நடவடிக்கைகளில் ஈடுபடவிரும்புகிறேன்	○	○	○	○	○
15	மற்ற பள்ளி மாணவர்களுடன் நான் இணைந்து படைப்புகளை உருவாக்க விரும்புகிறேன்	○	○	○	○	○
16	தமிழ் சமூக அமைப்புகள் நடத்தும் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வேன்	○	○	○	○	○
17	திருமணம் போன்ற என் வீட்டு நிகழ்ச்சிளுக்கு என்னால் அழைப்பிதழைத் தமிழில் உருவாக்க முடியும்	○	○	○	○	○
18	தமிழ்பேசும் கடைக்காரர்களிடம் நான் தமிழில் பொருள்களைக் கேட்டு வாங்க முடியும்.	○	○	○	○	○
19	என்னால் ஆங்கிலத்தில் உள்ளவற்றைத் தமிழில் மொழிபெயர்க்க முடியும்	○	○	○	○	○
20	சிங்கப்பூரில் தமிழ்மொழிபெயர்ப்பு சேவைக்கு என்னால் உதவ முடியும்.	○	○	○	○	○

மலேசியத் தமிழ்ப்பள்ளிகளுக்கான கலைத்திட்டத்தில் பண்பாட்டுக் கூறுகள்

கோவி.சந்திரன்
செலாமா
பேரா, மலேசியா

மொழியும் பண்பாடும் ஓர் இனத்தின் உயிர்ப்பாகச் சொல்லப்படுகின்றன. அவ்வகையில் மலேசியத் தமிழ்க்கூறு நல்லுலகில் பண்பாட்டுக் கூறுகள் காலந்தோறும் பேணப்பட்டு வருகின்றன. பண்பாடு தொடர்பான கூறுகள் மலேசியத் தமிழ்ப்பள்ளிகளுக்கான கலைத்திட்டத்தில் பயன்படுத்தப்பட்டும் வலியுறுத்தப்பட்டும் வருகின்றன. மலேசியத் தமிழ்ப்பள்ளிகளுக்கான கலைத்திட்டம் மூன்று காலக் கட்டங்களைக் கடந்து வந்துள்ளது. தொடக்கத்தில், தொடக்கப் பள்ளிகளுக்கான கலைத்திட்டம் (KLSR), அடுத்துத் தொடக்கப்பள்ளிகளுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட கலைத்திட்டம் (KBSR), தற்பொழுது தொடக்கப்பள்ளிகளுக்கான கலைத்திட்டத் தர ஆவணம் (KSSR) என மூன்று கலைத்திட்டங்கள் இதுவரையில் பயன்படுத்தப்-பட்டுள்ளன. மலேசியாவில் பயன்படுத்தப்படும் தமிழ்மொழி பாடக் கலைத்திட்டத்தில் காணப்படும் பண்பாட்டுக் கூறுகளை இக்கட்டுரை ஆராய்கின்றது.

மலேசியத் தமிழ்ப்பள்ளிகளுக்கான கலைத்திட்ட உருவாக்கத்தில், மொழி, இனம், பண்பாட்டுக் கூறுகள் ஆகியவை கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இதன் வழி தமிழரின் தனிப்பெரும் பண்பாடுகளையும் வரலாறுகளையும் மாணவர் தலைமுறை அறிந்துகொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. மலேசியக் கலைத்திட்டமானது முழுமையான மனிதனை உருவாக்குவதுடன் நன்னெறிப்பண்பு, மனவுறுதி, நாட்டுப்பற்று, சமூகப் பண்பாடு போன்ற கூறுகளை உள்ளடக்கிய மாணவர்களை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

<u>பாடப்பொருள் வழி பண்பாடு</u>

மலேசியத் தொடக்கப்பள்ளிகளுக்கான கலைத்திட்டத்தில் தமிழர் பண்பாடு சார்ந்த பல்வேறு தகவல்கள் பாடப்பொருள்களாக உள்ளன. தமிழர் மருத்துவம், தமிழர் கலைகள், தமிழர் இசை, கோலாட்டம், பொங்கல் போன்ற பண்பாடு சார்ந்த கூறுகள் பாடப்பொருளாக உள்ளடக்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, சிலப்பதிகாரம் தொடர்பான வாசிப்புப் பனுவல் 3-ஆம் ஆண்டுக்கான கலைத்திட்டத்தில்

வலியுறுத்தப்பட்டுள்ளது. மொழித்திறன் 2.2(3) இல் இக்கூறு வலியுறுத்தப்படுகிறது. மேலும் தமிழர் மருத்துவம் தொடர்பான பனுவல் ஐந்தாம் ஆண்டுப் பாடநூலில் இடம் பெற்றுள்ளது. (காண்க : பக்கம் 111 தமிழ்மொழி பாடநூல் ஆண்டு 5). இதன்வழி மாணவர் குமுகாயம் தமிழர்களின் பல அரிய கலைப்பண்பாட்டை அறிந்து கொள்வதற்கு வாய்ப்பாக அமைகின்றது. மேலும் தமிழரின் பண்பாட்டின் அடையாளமாக விளங்கும் சிலப்பதிகாரக் காப்பியத்தை மாணவர்கள் அறிந்து கொள்ளவும் வழிகோலுகிறது. இரண்டாம் ஆண்டுக்கான கலைத்திட்டதில் பொங்கல்
திருநாளைப் பற்றிய வாசிப்புப் பனுவல்களும் இடம்பெற்றுள்ளன. (காண்க: பக்கம் 12 &13 தமிழ்மொழி பாடநூல் ஆண்டு 2) இவை அனைத்தும் மாணவர்கள் தமிழர்களின் பண்பாட்டை அறிந்து கொள்ளப் பெரும் பங்காற்றுகின்றன.

<u>மொழியணிகள் வழி பண்பாடு</u>

தமிழ்மொழி கலைத்திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ள மொழியணிகள் என்ற பகுதியின் வழியாகவும் பண்பாடு சார்ந்த கூறுகள் கற்பிக்கப்படுகின்றன. முதலாம் ஆண்டு தொடங்கி இடைநிலைப்பள்ளி வரை கற்பிக்கப்படும் கலைத்திட்டத்தில் மொழியணிகள் என்ற பகுதி இணைக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் ஆத்திசூடி, புதிய ஆத்திசூடி, கொன்றை வேந்தன், உலக நீதி, வெற்றி வேற்கை, திருக்குறள், மூதுரை, நன்னெறி, பழமொழிகள், உவமைத்தொடர்கள், இணைமொழிகள் போன்ற கூறுகள் இடம்பெற்றுள்ளன. கலைத்திட்டத்தில் இடம்பெற்றுள்ள இப்பகுதிகள் பண்பாட்டை வளர்ப்பதற்கு ஊன்றுகோலாக அமைகின்றன. இதன் வழி நாம் நமது பண்பாட்டுக் கூறுகளை அறிந்து கொள்ள முடிகின்றது.
காட்டாக :
திறன் 2.11 கவிதை, பாடல், செய்யுள் ஆகியவற்றின் பொருள் அறிவர்.
1.17 சந்தப்பாடல், கவிதை, செய்யுள் ஆகியவற்றை ஒப்புவித்து மகிழ்வர்.

மேற்கண்ட மொழித்திறன் வழி நமது இலக்கியத்தில் உள்ள செய்யுள்கள், கவிதைகள் போன்றவை மலேசியத் தொடக்கப்பள்ளிகளுக்கான கலைத்திட்டத்தில் இடம்பெற்றுள்ளன. காட்டாக, உலகப் பொதுமறையாம் திருக்குறள் முதலாம் ஆண்டு தொடங்கி ஆறாம் ஆண்டு வரையிலும், பின்னர் இடைநிலைப்பள்ளியிலும் கற்பிக்கப்படுகின்றது. (காண்க :பக்கம் 69 தமிழ்மொழி பாடநூல் ஆண்டு 4) இதன் வழி மலேசியத் தமிழ்ப்பள்ளிகளுக்கான கலைத்திட்டம் பண்பாட்டுக் கூறுகளை உள்ளடக்கியிருக்கின்றது என்பது வெள்ளிடைமலை.

நாடகம் வழி பண்பாடு

பண்பாட்டை வளர்ப்பதில் நாடகங்களும் முக்கியப் பங்கு வகிக்கின்றன. இலக்கிய நாடகங்கள், புராண நாடகங்கள், இதிகாச நாடகங்கள் முதலானவற்றில் நாம் நமது பண்பாட்டுக் கூறுகளைக் காணலாம். அவ்வகையில் தமிழ்மொழி கலைத்திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ள பாடப்பொருள்களில் பல்வேறு நாடகங்கள் இடம்பெற்றுள்ளன. காட்டாக :

திறன் 2.12 கதை, உரையாடல், நாடகம் ஆகியவற்றின் கதாபாத்திரங்களின் பண்புகளை விளக்குவர்.

மேற்கண்ட மொழித்திறன் வழி குமணவள்ளல், மகாபாரதம் போன்ற இலக்கிய நாடகங்கள் கலைத்திட்டத்தின் வழி கற்பிக்கபடுகின்றன. (காண்க: பக்கம் 83 தமிழ்மொழி பாடநூல் ஆண்டு 4). இதன் வழி மாணவர்கள் நமது பண்பாடுகளைத் தெரிந்து கொள்ளவும் இலக்கியச் சுவையினைச் சுவைக்கவும் வாய்ப்பாக அமைகின்றது.

நீதி நெறிக் கதைகள் வழி பண்பாடு

பண்பாட்டை வளர்ப்பதில் நீதி நெறிக் கதைகளும் முக்கியப் பங்கு வகிக்கின்றன. கலைத்திட்டதில் இடம்பெற்றிருக்கின்ற மொழித்திறன் 1.1 1.8 ஆகியவை இக்கூறுகளை வளர்ப்பதற்குக் அடிப்படையாக அமைந்துள்ளன. காட்டாக,

1.1 பல்வேறு சூழல்களில் பண்புடன் பேசுதல், வயதில் முதிர்ந்தவருடன் பண்புடன் பேசுதல் போன்ற திறன்கள் பண்பாட்டைத் திறம்பட வலியுறுத்துகின்றன.

1.8 செவிமடுத்தவற்றை விவரித்துக் கூறுவர்

என்ற திறனின் வழி மாணவர்கள் தாங்கள் செவிமடுத்த நீதி நெறிக் கதைகளை மீண்டும் கூறுவர். இரண்டாம் ஆண்டுக்கான பாடநூலில் கொடை வள்ளல் கர்ணன் தொடர்பான நீதி நெறிக் கதை இடம்பெற்றுள்ளது. (காண்க: பக்கம் 40& 41 தமிழ்மொழி பாடநூல் ஆண்டு 2) இதன் வழி பண்பாட்டுக் கூறுகள் மாணவர்களிடையே புகுத்தப்படுகின்றன.

முடிவுரை

மலேசியக் கலைத்திட்டத்தில் பண்பாட்டுக் கூறுகள் பல்வேறு நிலைகளில் புகுத்தப்படுகின்றன. மாணவர்கள் தமிழர்தம் வாழ்வியல் கூறுகளையும் பண்பாட்டுக் கூறுகளையும் போற்றிப் புரந்துகொள்ள மலேசியக் கலைத்திட்டம் வழியமைக்கிறது என்றால் மிகையாகாது.

கணினி விளையாட்டுகள் வழி மொழி கற்பித்தல்

அமுதா மணி
விட்லி உயர்நிலைப் பள்ளி
சிங்கப்பூர்

முன்னுரை

நம் நாட்டில் தமிழ்மொழியை இரண்டாம் மொழியாகக் கற்கும் மாணவர்களின் அடிப்படைத் திறன்கள் கேட்டல், பேசுதல், எழுதுதல், சிந்தித்தல் ஆகியவற்றை முறையாகக் கற்பிப்பதே தமிழ்மொழி கற்பிப்பதின் நோக்கமாகும். இத்திறன்களை மாணவர்களிடம் கொண்டு சேர்ப்பதற்கு ஆசிரியர்களான நாம் பல உத்திகளைக் கையாளவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். ஆசிரியர்களான நாம் நடத்தும் பாடங்களில் மாணவர்களைக் கவரும் கூறுகள் இல்லாவிடில் அவை மாணவர்களைச் சென்றடைவதில்லை என்று ஆய்வுகள் கூறுகின்றன.

மாணவர்களின் பின்னனி

இக்கால மாணவர்கள் கணினி வாசிகள். கணினியைப் போல் எதையும் துரிதமாகச் செய்து முடிக்கும் இயல்பைக் கொண்டவர்கள். புதுமையையும் போட்டித்தன்மையையும் விரும்புபவர்கள். விரைவாகச் சலிப்படையும் தன்மையையும் பெற்றவர்கள்.

பாடப்பகுதி

கல்வி அமைச்சின் பாடநூலில் மரபுத்தொடர்கள், இணைமொழிகள், உவமைத்தொடர்கள் மற்றும் இலக்கணப் பகுதிகள் சிறுபகுதிகளாக இடம்பெற்றுள்ளன. சிறு பகுதிகளாக இருப்பினும் இலக்கணமும், மரபுத்தொடர் இணைமொழிகளுமே மாணவர்களுக்கு அதிக சலிப்பைத் தரும் பாடங்களாக விளங்குகின்றன. மேலும், இவற்றை மாணவர்களுக்குக் கற்பிக்கப் போதுமான வளங்கள் இல்லாததால், ஆசிரியர்களுக்கு இப்பாடத்தைக் கற்பிப்பது என்றுமே பெரும் சவாலா இருந்து வந்துள்ளது.

சிக்கலைக் கண்டறிந்த விதம்

உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்கு மரபுத்தொடர்களும் இணைமொழிகளும் தேர்வில் ஒரு கூறாகவே வருகிறது. இலக்கணப் பகுதிகள் தனியே

தேர்வில் வராவிட்டாலும், அது தமிழ்மொழியின் முதுகெழும்பு என்பதை நாம் அறியாதில்லை.

சென்ற வருடம் உயர்நிலை இரண்டு பயிலும் மாணவர்களுக்கு இப்பகுதிகளைக் கற்பிப்பது எனக்கும் பெரும் சவாலாகவே இருந்தது. மரபுத்தொடர்கள், இணைமொழிகளின் பொருளை விளக்கிவிட்டு அவற்றை வாக்கியத்தில் அமைத்துக் காட்டச் சொன்னேன். அது மாணவர்களுக்கு மிகுந்த சலிப்பைக் கொடுத்தது. மேலும் படித்ததும் மறந்தும் போனது. அவர்களால் படித்ததை நினைவில் வைத்துக்கொள்ள முடியவில்லை. எனவே, வேறொரு அணுகுமுறையை நாடினேன்.

மாணவர்களுக்கு மரபுத்தொடர்கள், இணைமொழிகளின் பொருளை முன்கூட்டியே கூறாமல் அவர்களைச் சொந்தமாகக் கண்டுபிடித்து வகுப்பின்முன் பகிர்ந்துகொள்ளும்படிக் கூறினேன். அதுவும் பயனளிக்கவில்லை. மாணவர்கள் ஒன்று, கண்டுபிடிக்க முயல்வதில்லை அல்லது அவர்களுக்குக் கண்டுபிடிக்கத் தெரியவில்லை.

<u>புதிய அணுகுமுறை</u>

வகுப்பில் கற்றல் நடைபெற வேண்டும், கற்பித்தல் அல்ல என்பது கல்வியமைச்சின் நோக்கமாகும். இதை அடிப்படையாக வைத்துக்கொண்டு மாணவர்களின் அடிப்படைத் திறன்களையும் மனத்தில் வைத்துக்கொண்டு விளையாட்டுகள்மூலம் அவர்களுக்கு இந்தப் பாடத்தை நடத்த முடிவுசெய்தேன். அதற்கு எனக்குக் கைகொடுத்தது இணையத்தில் நான் கண்டெடுத்த இலவச *"Powerpoint Game Templates*".

இவற்றைக் கொண்டு எவ்வாறு எளிமையான விளையாட்டுகளைத் தயாரிக்கலாம் என்பதைக் கற்றுக்கொண்டேன். இந்த அமைப்புகளை வைத்து நான் 'கண்டுபிடி கண்டுபிடி', 'சொல்லுங்கள் வெல்லுங்கள்', 'என் கேள்விக்கு என்ன பதில்' போன்ற விளையாட்டுகளைத் தயாரித்தேன்.

இவ்விளையாட்டுகள் அனைத்தும் மரபுத்தொடர்கள், இணைமொழிகள் மற்றும் இலக்கணப் பகுதிகளை மாணவர்களுக்குச் சுவாரஸ்யமாகவும் கற்பனைத்திறனுடனும் கற்பிக்கப் பெரிதும் துணைபுரிந்தன.

விளையாட்டுகளின் இயல்பு

பொதுவாகவே விளையாட்டுகள் பிள்ளைகளின் சிந்தனையை ஒருநிலைப் படுத்துகின்றன என்று ஆய்வாளர் Lepper & Cordova (1992) கூறியிருக்கிறார். அதோடு அவர்களின் சிந்தனை ஆற்றலும் மேம்படுகிறது. அதுமட்டுமன்றி, ஆரோக்கியமான போட்டித்தன்மையும் அவர்களிடையே வளர்கிறது.
குழுஉணர்வும், வெல்ல வேண்டும் என்ற ஆர்வமும் மாணவர்களுக்கு அதிகமான ஊக்கத்தை அளிக்கின்றன என்பது ஆய்வாளர்களின் கருத்து. மேலும விளையாட்டுகளின் மூலம் ஆசிரியர்கள் உடனுக்குடன் மாணவர்களின் தவற்றைச் சுட்டிக்காட்டி அவர்களை வழிநடத்த முடிகிறது.

மாற்றம்

இந்த கணினி விளையாட்டுகளை நான் பாட அறிமுகம், முறைசாரா மதிப்பீடு, மாணவர்களின் முன்னறிவைச் சோதித்தல, பாடத்திருப்பம் ஆகியவற்றுக்குப் பயன்படுத்தியுள்ளேன். மாணவர்களின் முகத்தில் சலிப்பையும், அவர்களின் தவிப்பையுமே மொழிப் பாடங்களில் கண்ட எனக்கு, இந்தக் கணினி விளையாட்டுகள் புதியதொரு மாற்றத்தை ஏற்படுத்தின. மாணவர்களின் மதிப்பெண்களும் நல்ல முன்னேற்றத்தைக் கண்டன.

ஆசிரியர்களான நமது நோக்கம் வகுப்பறையில் கற்றல் நடைபெற வேண்டும் என்பதே ஆகும். வெறும் பயிற்சித்தாள்களில் நிறைவேறாத அந்த நோக்கம் எனக்கு இந்தக் கணினிவிளையாட்டுகளின் மூலம் நிறைவேறியது.

இரண்டாம் மொழிநிலையில்
தமிழ் கற்றல் கற்பித்தலில் நிலவும் சிக்கல்கள்

Dr. சரோஜினி செல்லக்கிருஷ்ணன்
குவாங்யாங் மொழி நிலையம்

இரண்டாம் மொழிநிலையில் சிங்கப்பூரில் தமிழ் இருந்து வரும் இன்றைய சூழலில் தமிழ் கற்றல் கற்பித்தலில் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் உள்ள சிக்கல்களும் சவால்களும் எத்தகையன என்பதையும், அவற்றின் விளைவுகள் யாவை என்பதையும் இக்கட்டுரை ஆராய முயலுகின்றது.

இரண்டாம் மொழிநிலையில் தமிழ் கற்றல் கற்பித்தலில் நிலவும் சிக்கல்கள்

பல இனச் சமுதாய மக்கள் வாழுகின்ற சிங்கையில் வீட்டில் பேசும் தாய்மொழியை வெளியில் பயன்படுத்த முடிவதில்லை. எல்லோருக்கும் பொதுவான மொழியாக ஆங்கிலமே நிலவுகின்றது. தற்போதைய குடும்பங்களில் பிள்ளைகளும் பெற்றோர்களும் வீட்டிலும் பொதுமொழியான ஆங்கிலத்திலேயே உரையாடுகிறார்கள். வீட்டின் உள்ளேயும் வெளியேயும் தமிழ்ப்புழக்கம் இல்லாத சிங்கையில் தமிழ் கற்றலும் கற்பித்தலும் இருசாராருக்கும் சவாலாகவே விளங்குகின்றன.

2010 ஆம் ஆண்டு, கோவையில் நடைபெற்ற 'உலகத் தமிழ் இணைய மாநாட்டில்' சிங்கப்பூரின் அன்றைய தொழில் வர்த்தகம் மற்றும் கல்வித்துறை துணை அமைச்சர் திரு எஸ். ஈஸ்வரன் அவர்கள் கலந்து கொண்டு பேசுகையில், 'சிங்கையில் தமிழ் பயிலும் மாணவர்களிடையே தமிழ் ஆர்வத்தை வளர்ப்பதும், அன்றாட வாழ்க்கையில் தமிழைக் கருத்துப் பரிமாற்றத்துக்குப் பயன்படுத்த அவர்களை ஊக்குவிப்பதும் நாம் எதிர்நோக்கியுள்ள முக்கியச் சவால்'[13] என்று கூறினார். 'அண்மைய கணக்கின்படி சிங்கப்பூரர்களில் 3.1% பேர் தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்டுள்ளனர்'[14]. இவ்வளவு குறைவான விழுக்காட்டினைக் கொண்ட தமிழர்களின் மத்தியிலும் தாய்மொழியில் பேசுவதில் சிக்கல் இருக்கிறது. இந்நிலைமைக்கான காரணம், கலப்புத் திருமணங்களின் எண்ணிக்கை 2,000 ஆம் ஆண்டில் 12 விழுக்காடாக இருந்தது. கடந்த ஆண்டு அது 20 விழுக்காட்டைத் தொட்டது. சீனர், மலாய், இந்தியர் அல்லாதோரை

[13]. http://www.alaikal.com/news?p=40982
[14]. http://www.ta.wikipedia.org/wiki

மணமுடித்த சீன மணமகன்கள் (மொத்தக் கலப்புத் திருமண விகிதத்தில்) 51.9 விழுக்காடு என்று புள்ளி விவரத்துறை தனது வெளியீட்டில் தெரிவித்துள்ளது'[15] இத் தகவல் அடிப்படையில் பார்க்கும்போது வீட்டுச்சூழலில் தாய்மொழியில் பேசுவது என்பது அனைத்து இனத்தாருக்கும் சவாலாகவே விளங்குகிறது.

'தமிழ் இரட்டை வழக்கு மொழி. நாம் பேசுவது ஒன்று. எழுதுவது ஒன்று. அதுவும் நாம் பேச்சிலும் எழுத்திலும் ஒரே போக்கினைக் கடைப்பிடிப்பதில்லை'.[16] இவ்வாறு, எழுதுவது ஒன்றாகவும் பேசுவது வேறாகவும் இருக்கும் நிலையில் சிங்கப்பூர் மாணவர்கள் இவற்றினைத் தனித்தனியே கற்க வேண்டிய சூழல்களில் உள்ளனர். இப்படிக் கற்றல் சுமை அதிகரிக்கும்போது இயல்பாக மாணவர்களுக்கு அம்மொழியின் மீது உள்ள ஆர்வம் குறையும் வாய்ப்பு அதிகரிக்கிறது. மேலும், தமிழ்மொழி கற்றல், தங்கள் வாழ்வை வளப்படுத்த உதவாது என்றும் மாணவர்கள் திடமாக நம்புகின்றனர்.

<u>சவால்களை எதிர்கொள்ளும் செயல் திட்டங்கள்</u>

இத்தகைய சூழலில் வகுப்பறைக்கு வரும் மாணவர்களுக்கு வகுப்பறையில் மொழிப்புழக்கத்தை அதிகரிக்க ஊடகங்களின் உதவியை நாட வேண்டியுள்ளது. தகவல் தொழில் நுட்பத்தில் தலைசிறந்த நாடான சிங்கப்பூரில் வகுப்பறைக்கே ஊடகங்களைக் கொண்டுவர வேண்டியுள்ளது. சமூகவலைத்தளங்களான முகப்புத்தகம், ட்வீட்டர், வலைப்பூக்கள், முதலியவற்றின் மூலம் கற்றலை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இணையப்பக்கங்கள் சார்ந்த வீட்டுப்பாடங்களைத் தருவதன் மூலமும் இணையப்பக்கங்களில் தகவல்களைத் திரட்டி ஒப்படைப்புச் செய்யச் சொல்லுவதன் மூலமும் கற்றலை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

கல்வி அமைச்சின் கல்விப் பக்கமான 'எடியுமால் 02' வலைத்தளத்தில் பல்லூடகவளங்கள், கேட்டல், பார்த்தல், திறன்கள் ஒளியேற்றப்பட்டுள்ளன. பாடம் தொடர்பான, சமூகம் தொடர்பான, வாழ்வியல் தொடர்பான இணையப்பக்கங்களை உபயோகப்படுத்திக் கற்றலும் கற்பித்தலும் நிகழ்கின்றது. ("E Learning") என அழைக்கப்படும் மின்னியல் பாடங்களின் வழியும் தாய்மொழிக்கற்றல் நிகழ்கின்றது. பள்ளிகளில் உள்ள 'எஸ் லிங்' ('S Link') என அழைக்கப்படும் இணையத்தளத்தில் பாடங்களை மேலேற்றம் செய்து மாணவர்களுக்குத் தாய்மொழிக் கல்வி புகட்டப்படுகிறது.

---

[15] . http://tamilmurasu.com.sg/story/2494

[16] . http://veatkai.wordpress.com/2008/12/08

கம்பி வடத் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படும், 'நீயா? நானா?', 'மக்கள் அரங்கம்', 'அரட்டை அரங்கம்' போன்றவற்றின் சில பகுதிகளை இணையத்தில் தரவிறக்கம் செய்து அவற்றில் வரும் பங்கேற்பாளர்களின் வாதிடும் திறனும் அவர்களது சரளமான மொழிப்புழக்கமும் சுட்டிக் காட்டப்படுகின்றன. மேலும்,எழுத்து வழக்கில் அமைந்துள்ள மொழி, பேச்சு வழக்காக மாறும்போது அடைகின்ற வேறுபாடுகளும் மாணவர்களுக்கு உணர்த்தப்படுகின்றன.

நாவுகளில் நடமாடாத மொழி நாளடைவில் அழிந்து போகும் என்னும் அச்சத்தின் காரணமாகத் தற்போது கல்வி அமைச்சு, பேச்சுமொழிக்கு அதிக முக்கியத்துவம் அளித்துள்ளது. விரைவுநிலை, வழக்கநிலை மாணவர்களுக்கு 20 விழுக்காடும், வழக்கநிலை தொழில்நுட்ப மாணவர்களுக்கு வாசித்தல், பேசுதல் திறன்களுக்கான மதிப்பெண்கள் 50 விழுக்காடும் வரையறுக்கப்பட்டுள்ளன.

மாணவர்கள், நடைமுறை வாழ்வில் தமிழைப் பயன்பாட்டு மொழியாகக் கொள்ளவேண்டுமாயின் அவர்களை வகுப்பறைச் சூழலில் பேச்சுமொழிக்குத் தயார் செய்ய வேண்டியது ஆசிரியரின் கடமையாகின்றது. மாணவர்கள், தங்களுக்கு இயல்பான, பழக்கமான மொழியான ஆங்கிலத்தில் சிந்தித்து அதை அப்படியே எழுத்தாகவும் பேச்சாகவும் மாற்றும்போது மொழிச்சிதைவு ஏற்படுகின்றது. வாக்கியங்களின் கட்டமைப்புக் குலைகின்றது.

தன்மைப் பன்மையான 'நாங்கள்' என்னும் சொல்லைப் பயன்படுத்தப்பட வேண்டிய இடங்களில் எல்லாம் மாணவர்கள், 'நாம்' என்னும் உளப்பாட்டுத் தன்மைப் பன்மையையே பயன்படுத்துகின்றனர். 'நாங்கள் கடற்கரைக்குச் சென்றோம்' என்பதற்குப் பதிலாக, 'நாம் கடற்கரைக்குச் சென்றோம்' என எழுதுகின்றனர். இந்தத் தவற்றினை அவர்களுக்கு விளக்குவதற்குப் பழைய வரலாற்றுத் திரைப்படங்களில் பயன்படுத்தப்பட்ட எழுத்து வழக்கு நடையோடும் உரையாடல்களையும், தற்காலப் பேச்சு வழக்கில் அமைந்த திரைப்பட உரையாடல்களையும் திரையிட்டு அவற்றில் உள்ள மாற்றங்களைச் சுட்டிக்காட்டும்போது அவர்களால் வேறுபாடுகளை உணரமுடிகின்றது.

பேச்சு வழக்கில் அமைந்த திரைப்படப் பாடல்களைத் திரையிட்டு எழுத்து வழக்கு, பேச்சு வழக்கிலிருந்து மாறுபட்டு உள்ளது என்பதை உணர்த்தும்போது மாணவர்கள் உணர்ந்து

கொள்கின்றனர். எழுத்து வழக்கில் அமைந்துள்ள உரையாடல்களை மாணவர்களிடம் தந்து அவற்றைப் பேச்சுமொழியைப் பயன்படுத்திப் பேசச்செய்வதன் மூலம் பேச்சுமொழிக்கும் எழுத்துமொழிக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் உணர்த்தப்படுகின்றன. அதேநேரம், பேச்சுமொழி மாணவர்களின் எழுத்தில் வந்துவிடாதவாறு காக்க வேண்டிய கடமையும் ஆசிரியர்களுக்குண்டு.
தமிழ் இலக்கியக்கதைகளின் சிறப்புகளைக் காணொளித் துணுக்குகள் மூலம் (video clippings) காண்பித்து உரையாடுவதன்வழி அவர்களால் இலக்கியங்களின் சிறப்பை அறியமுடியும்.

1935 ஆம் ஆண்டு முதல் வெளிவரும் ஒரே தமிழ் நாளிதழான 'தமிழ்முரசு' தனது 'மாணவர்முரசு' என்னும் பகுதியின் பக்கங்களில் மாணவர்களது படைப்புகளான கவிதை, கட்டுரை, முதலியவற்றை வெளியிட்டு மாணவர்களுக்கு ஊக்கமளித்து வருகிறது.

'ஒலி 96.8' என்னும் வானொலி அலைவரிசை, செய்திகளையும் பாடல்களையும் தருவதோடு கல்வி சார்ந்த பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளையும் படைத்து வருகிறது. 'வசந்தம்' என்னும் தொலைக்காட்சி ஒளிவழி, ஆண்டு தோறும் தமிழுக்கான ஒளிபரப்பு மணி நேரங்களை நீட்டித்துக் கொண்டே வருகிறது. இவற்றின்மூலம் தமிழுக்கான எதிர்காலம் சிங்கப்பூரில் வளமாக இருக்கும் என்னும் நம்பிக்கையும் மாணவர்களுக்கு அறிவுறுத்தப்படுகின்றது.

<u>திட்டங்களும் பயன்களும்</u>

கல்வி அமைச்சு, 'முரசு அஞ்சல் 10' என்னும் தமிழ் மென்பொருளை வெளியிட்டு அதை உள்ளீட்டு மின்னஞ்சல் முறையாகவும் ஆக்கியுள்ளதால் இணையத்தில் தமிழில் தேடல் சுலபமாகி வருகிறது. சிங்கப்பூரில் பயன்பாட்டில் உள்ள 'முரசு அஞ்சல்' என்னும் தமிழ் மென்பொருளை, 2004 ஆம் ஆண்டில் ஆப்பிள் கணினி நிறுவனம் பெற்று அம்மென்பொருளை ஆப்பிள் கணினிகளோடு இணைத்துக் கொண்டது. 'ஐஓஎஸ்4' (IOS4) என்னும் செயலியைப் பயன்படுத்தும் ஆப்பிள் கைத்தொலைபேசிகளிலும் ஆந்திராய்டு (Android) செயலியைப் பயன்படுத்தும் கைத்தொலைபேசிகளிலும் திருக்குறள், ஆத்திச்சூடி, லிப்கோ அகராதி போன்ற நூல்களைப் பதிவிறக்கம் செய்து வகுப்பறையில் பயன்படுத்தும் வாய்ப்பும் தற்போது அமைந்துள்ளது. இம்முயற்சியையும் சிங்கப்பூர் ஆசிரியர்கள் வகுப்பறைகளில் செய்து வருகிறார்கள். தமிழில் மின்னஞ்சல்

அனுப்பவும், தமிழ் விசைப்பலகை கற்றுத்தரப்படுகின்றது. தமிழில் 'செல்லினம்' என்னும் செயலியின் மூலம் தமிழில் குறுஞ்செய்தி அனுப்புதல் ஊக்குவிக்கப்படுகின்றது.

'சொற்சிலம்பம்', 'சொற்களம்' போன்ற விவாதப்போட்டிகள் ஆண்டுதோறும் மாணவர்களிடையே பெற்று வரும் செல்வாக்கு, 'கவிமாலை', 'தமிழ்எழுத்தாளர் கழக' நிகழ்ச்சிகள் 'இலக்கியவட்டம்', 'இந்தியக்கலை மையம்', 'சிங்கப்பூர் நுண்கலைக்கழகம்', 'தமிழ்மொழி மற்றும் கலாசாரசங்கம்', 'சிங்கப்பூர்த் தமிழ் ஆசிரியர் கழகம்', 'சிங்கப்பூர்த் தமிழ் இளையர்மன்றம்', 'தமிழர் பேரவை' போன்ற சமூக அமைப்புகளால் நடத்தப்படும் தமிழ் நிகழ்ச்சிகளின் பெருக்கம் ஓர் எதிர்கால நம்பிக்கையைத் தருகின்றது. மாணவ எழுத்தாளர்களின் படைப்புகள் மாணவர்முரசில் வாரந்தோறும் பெருகி வருவதும் மனநிறைவைத் தருகின்றது.

அண்மையில் 'சிம் பல்கலைக்கழகம்' தொடங்கியுள்ள தமிழ் இளங்கலைப் பட்டப்படிப்பு, 'தேசியக் கல்விக்கழகத்தில்' தமிழாசிரியர் பட்டயப்படிப்பிற்கும், முதுகலைச் சான்றிதழுக்கும் சேரும் மாணவ ஆசிரியர்கள் எண்ணிக்கை, தமிழ்த்துறைக்கு வந்து சேர்ந்துள்ள இளம் ஆசிரியர்களின் எண்ணிக்கை போன்றவையெல்லாம் தமிழுக்கான வளமையான எதிர்காலத்தைத் தரும் என்பதில் ஐயமில்லை.

மொரீசியஸில் காணப்படும் பன்மொழிச் சூழலில் தமிழ்மொழி கற்றல் கற்பித்தல்

M. சந்தானலட்சுமி வேலையன்
சுவாமி சிவானந்தா மாநில உயர்நிலைப் பள்ளி
மொரீசியஸ்.

மொரீசியஸில் காணப்படும் பன்மொழிச்சூழலில் தமிழ் மொழியும் பண்பாடும் தனிப்பட்ட இடங்களை வகிக்கின்றன. 18 ஆம் நூற்றாண்டில் தமிழர்கள் மொரீசியஸ் மண்ணில் குடியேறினர். இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழர்கள் நல்ல வளர்ச்சியை அடையத் தொடங்கியிருந்தனர். 1968-இல் மொரீசியஸ் விடுதலை அடைந்த பிறகு நடைமுறைப்படுத்தப்பட்ட கல்விக் கொள்கையின் அடிப்படையில் தமிழ்மொழியானது பள்ளிகளில் கற்றுத்தரப்படுகிறது. தற்பொழுது நாட்டிலுள்ள ஆரம்பக்கல்வி முதல் மேனிலைக்கல்வி வரை தமிழ் மொழி பிற கீழை மொழிகளுடனும் ஆங்கில மொழியும் மற்றும் பிரெஞ்சு மொழியும் ஆகிய மொழிகள் பரவலாகக் கற்பிக்கப்படுகின்றன. மாணவமணிகளின் மொழியார்வத்தை மேம்படுத்தும் பணியிலும் ஆசிரியர்கள் உருவாக்கும் பணியிலும் எங்கள் நாட்டு அரசு செயல்பட்டு வருகின்றது. இக்கணினி உலகில் தகவல் தொழில் நுட்பம் போன்ற துறையிலும் ஈடுபட்டு அதிக வேக வளர்ச்சியைக் கண்டு வருகின்றது. உலகமயமாதலின் சூழலில் நம் இளைய தலைமுறையினர்களிடையே தமிழார்வத்தை ஊக்குவிப்பதற்காகவும் மொழித்திறனை மேம்படுத்துவதற்காகவும் பெரும் சாவல்களாகும். இக்கட்டுரையில் மூலமாக மொரீசியஸ் நாட்டில் உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றுவதில் எனக்கு ஏற்பட்ட அனுபவங்களை விவரிக்க முயல்வேன்.

மொரீசியஸ் - ஒரு பார்வை

மொரீசியஸ் ஆப்பிரிக்கக் கண்டத்திற்குத் தென்கிழக்கில் இந்திய பெருங்கடலில் காணப்படுகின்ற சிறு தீவாகும். அது இந்திய மாக்கடலில் திறவுகோல் என்று புகழ்வர். அதைச் சுற்றிலும் கடல் சூழப்பட்டுள்ளது. அதன் நிலப்பரப்பளவு சுமார் எழுநூற்றுஇருபது சதுரக் கல்லாகும். நாட்டின் மொத்த மக்கட் தொகை 1,200,000 (CSO 2000) என்று கணக்கிடப்பட்டுள்ளது. மொரீசியஸ் குடியேறியவர்களின் நாடு. அதில் பல இனமக்கள் கூடி வாழ்கிறார்கள். இங்கே இந்தியர்கள், ஐரோப்பியர்கள், ஆப்பிரிக்க,

சீனர்கள் ஒற்றுமையுடன் சேர்ந்து வாழ்கிறார்கள். இச்சிறிய தீவுக்கு வந்து குடியேறிய பல்வேறு இனமக்கள் பல்வேறு மொழிகளுடன் வந்தனர்.

மொரீசியஸில் பல்வேறு இனமக்கள் குடியேறியதே இந்நாட்டின் பன்மொழிச் சூழலுக்குக் காரணமாகும். பல்லின மக்களைக் கொண்ட மொரீசியஸில் ஒவ்வோர் இனத்தவருக்கும் தம் மொழி, பண்பாடு, சமயம் ஆகியவற்றை வளர்ப்பதற்குச் சம உரிமை உண்டு. இப் பன்மை சமுதாயத்தில் மொழிக் கல்வி எல்லா மொழியினர்க்கும் அவரவர் விரும்புகின்ற வகையிலே கிடைப்பதற்கு மொரீசியஸ் அரசு இன்று வழி வகுத்துள்ளது.

பன்மொழியம்

மொரீசியஸ் சூழமைவில் தாய்மொழி, முதல்மொழி, இரண்டாம் மொழி, மூன்றாம் மொழி என்ற பாகுபாடுகளை வகுத்துள்ளனர். ஆப்ரோ மொரீசியர்களின் தாய்மொழியாகிய கிரியோல் பெருநிலை மொழி எனலாம். ஆனால், மொரீசியஸ் நாட்டில் தோன்றி வளர்ந்து இன்று பெரும்பாலான மக்களால் பேசப்பட்டுவரும் கிரியோல் தகுநிலை பெறா மொழி (non- standard language) என்ற காரணத்திற்காக ஆட்சிமொழித் தகுதியைப் பெறாமல், ஆங்கிலம் ஆட்சி தகுதியையும் பெற்றுள்ளது. மொரீசியசு கிரியோலுக்கும் போஜ்புரி மொழிக்கும் கல்விமொழிக் கொள்கையில் உரிய இடம் அளிக்கப்படவேண்டும் என பலர் வற்புறுத்தி வருகின்றனர். ஆகையால், ஒரு காலத்தில் பேச்சு வழக்காக மட்டும் இருந்து வந்த மொரீசியஸ் கிரியோல், மொரீசியர்களால் அன்று எழுத்து வழக்கில் நுழைந்த கிரியோல் இன்று தொடக்கநிலை பள்ளியில் பாடமாகத் திகழப் போகிறது. ஆங்கில மொழி ஒரு பயன்பாட்டு மொழியாகப் பின்பற்றப்படுகிறது. மேலும் கற்றல் கற்பித்தலும் இந்த மொழி வாயிலாகதான் நடக்கப்படுகிறது. பிரஞ்சுமொழியும் மொரீசியஸ் வாழ்க்கையில் முக்கிய பங்கு வகிக்கிறது. நடைமுறைகளில் பிரெஞ்சு மொழியும் அதிகமாகப் பயன்படுத்துகிறது. இம்மொழிகளை அடுத்து இந்தி, தமிழ், தெலுங்கு, மராத்தி, உருது, மாண்டா¢ன், போஜ்புரி ஆகிய மொழிகள் பரவலாகப் பேசப்படுகின்றன. கல்வித்திட்டத்தில் கீழைமொழிக்கல்வி கட்டாயப் பாடமாக்கப்பட்டது. இரு மொழியக் கல்வியைவிடப் பன்மொழியக் கல்வி பரந்த மனப்பான்மையைச் சிறு வயதிலேயே வளர்ப்பதற்கு நம் நாட்டரசு நம்புகிறது. மொழி பிரச்சினைகளைத் தவிர்க்க, மொழிக் கொள்கைகளை மொரீசியஸ் அரசு வகுத்துள்ளது.

கல்வி மொழிக் கொள்கையைப் பொறுத்தவரையில் பொதுவான கருத்துகள்:

1. எந்த ஓர் இனத்தின் மொழி உணர்வையும் பாதிக்கும் வகையில் கல்விமொழிக் கொள்கை உருவாதல் கூடாது.

2. ஆங்கிலம், பிரஞ்சு ஆகிய மொழிகளோடு கீழை மொழிகளில் ஒன்றும் கட்டாய மொழியாக இருக்க வேண்டும்.

3. ஆங்கிலம், பிரஞ்சு, கீழை மொழிகளில் ஒன்று என்ற மும்மொழித்திட்டமாக இருத்தல் வேண்டும்.

4. ஒவ்வொரு மொழியும் படிப்படியாக அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

5. ஆங்கிலமே பயிற்று மொழியாக இருத்தல் வேண்டும்.

6. முந்திய வகுப்புகளில் மாணவர்களின் தாய்மொழி அல்லது சுற்றுப்புறச்சூழலில் கற்ற மொழி, பயிற்று மொழியாக இருக்க வேண்டும்.

எனவே, கல்வித் திட்டத்திற்கேற்ப ஒரே நேரத்தில் மூன்று மொழிகளைக் கற்க வேண்டியுள்ளதாகும். ஆக, ஒரு தமிழ் மாணவன் பன்மொழியாளனாக மாறிவிடுகிறான். அதாவது, கிரியோல், ஆங்கிலம், பிரஞ்சு, தமிழ் ஆகிய நான்கு மொழிகளில் போதிய அறிவு இப்பிள்ளைகளுக்குக் கிடைத்துவிடுகிறது. பன்மொழியறிவு ஒரு தனி மனிதனின் பலமாகக் கருதப்படுவதோடும் தேவையாகவும் நினைக்கப்படுகிறது. ஆனால் மொரீசியஸில் வீட்டிலோ சுற்றுப்புறச் சூழலிலோ பெரும்பாலான தமிழ்ச் சிறார்களுக்குத் தமிழ் பேசுகிற வாய்ப்பு இல்லை. எனவே, மொழிப் பாடத்திட்டம் இந்நடைமுறை உண்மையைக் கருத்திற்கொண்டு உருவாக்கப்பட வேண்டும்.

<u>தமிழ் கற்றல் கற்பித்தல்</u>

தொடக்கநிலைப் பள்ளி -

1968-இல் மொரீசியஸ் விடுதலை பெற்ற பிறகு நடைமுறைபடுத்தப்பட்ட கல்விக் கொள்கையின் அடிப்படையில், பள்ளிகளில் தமிழ் ஒரு பாடமாகப் சொல்லிக்-கொடுக்கப்படுகிறது. இன்று இருநூறு அரசு தொடக்கநிலைப் பள்ளிகளில் இருநூற்று முப்பத்தைந்து முழுநேரத் தமிழாசிரியர்கள் பணியாற்றி வருகின்றார்கள் (MOE,2011). தொடக்கப் பள்ளிகளில் முதல் வகுப்பு முதற்கொண்டு ஆறாம் வகுப்பு வரை மற்ற

துறைகளுடன் ஏதாவது ஒரு கீழை மொழியும் கற்பிக்கப்படுகின்றது. கல்வித் திட்டத்தில் தமிழ் தற்போது மூன்றாம் மொழியாக இருக்கிறது.

உயர்நிலைப் பள்ளி -

1983 ஆம் ஆண்டில் அரசு உயர்நிலைப் பள்ளிகளில் தமிழ் மொழியைக் கற்றுத்தரப்படுகிறது. தற்காலத்தில் 65 அரசினர் உயர்நிலைப் பள்ளிகளிலும் மகாத்மா காந்தி நிறுவனத்து உயர்நிலைப் பள்ளிகளிலும் தமிழ் மொழியைக் கற்கும் வாய்ப்பு அளிக்கிறது (MOEHR 2010). தமிழ் மொழி கற்பித்தல் பெரும்பாலான பட்டதாரிகளால் போதிக்கப்படுகிறது. உயர்நிலைப் பள்ளியில் மொழி, இலக்கணம், மொழி பெயர்ப்பு இம்மூன்றும் பாடத்திட்டத்தில் அமைந்துள்ளன. தமிழ் மாணவர்கள் பலர் முதல் படிவத்தில் தொடங்கி மூன்றாம் படிவம்வரை ஆர்வத்துடன் தமிழ் மொழியைக் கற்றுக்கொள்கிறார்கள். ஆனால் மெல்ல மெல்ல அவர்கள் அக்கறை மங்கிவிடுகிறது. சிலர் அக்கறையின்மையாலோ திறமையின்மையாலோ அந்த மொழியைப் படிக்காமல் விட்டுவிடுகிறார்கள். வேறு சிலருக்கு 'பள்ளிச் சான்றிதழ்' (School Certificate) படிக்கும்போது தமிழ் மொழியை ஒரு துறையாகப் பயிலுவதற்குப் பள்ளி முதல்வர் அனுமதி தருவதில்லை. தற்போது, நான்காம், ஐந்தாம், ஆறாம் படிவங்களுக்கான பாடநூல்கள் இன்னும் தயாரிக்கப்படவில்லை. ஆகவே, தமிழாசிரியர்கள் சீங்கப்பூர், மலேசியா, தமிழ்நாடு போன்ற நாடுகளில் தயாரிக்கப்பட்ட நூல்களை உபயோகிக்கிறார்கள். இந்நிலையில், நான் தகவல் தொழில்நுட்பத்தைக் கற்றலுக்கும் கற்பித்தலுக்கும் பொருத்தமாகப் பயன்படுத்தி மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டிப் பாடத்தை நன்கு புரிந்து கொள்ள முயற்சி செய்கிறேன். மேலும், உயர்நிலைப் பள்ளிகளில் தமிழைச் சொல்லிக் கொடுக்கின்ற தமிழாசிரியர்களுக்கு வழிகாட்டவும் அவர்கள் செய்கின்ற பணியை மேற்பார்வை செய்யவும் இன்றுவரை மேற்பார்வையாளர் நியமிக்கப்படவில்லை.

மாலைப்பள்ளி -

பல தனியார் மாலைப் பள்ளிகளில் தமிழ் மொழியையும் இலக்கியத்தையும் இலவசமாகச் சொல்லித்தருகின்றனர். அரசாங்கப் பள்ளிகளில் பணியாற்ற தமிழாசிரியர்கள் மாலை நேரங்களில் தமிழைக் கற்பிக்கிறார்கள். இவ்வகுப்புகள் கோவில்களிலும், சங்கக்கட்டிடங்களிலும் நடத்தப்படுகின்றன. இத்தகைய பள்ளிகளில் தமிழைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு ரூபாய் 1000 -2000 வரை உதவித் தொகையாக மாதந்தோறும் அரசாங்கத்தால் வழங்கப்படுகிறது. மொரீசியஸ் ஐக்கியச் சங்கம், அகில மொரீசியஸ் தமிழ்த் தேர்வுக்குழு, தமிழ்க்கல்வி மன்றம் போன்ற குழுக்களால் தமிழ்

கற்கும் மாணவர்களுக்கு ஆண்டு கடைசியில் தேர்வு நடத்தி, சான்றிதழும் வழங்கப்படுகிறது.

உயர்நிலைக் கல்வி -

மகாத்மா காந்தி நிறுவனத்தில் மூன்றாண்டுக் கால அளவில் பட்டய வகுப்பு கற்றுத் தரப்படுகிறது. தமிழ் உட்பட கீழ்த்திசை மொழிகளில் இளங்கலைப் பட்ட வகுப்பு நடத்தப்படுகிறது. தமிழில் முதுகலைப் பட்டப்படிப்பும் இன்னும் அரம்பிக்கப்படவில்லை. மேலும், தேசிய கல்வி நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் மகாத்மா காந்தி நிறுவனத்தில் ஆசிரியர் பயிற்சிக் கல்விப் படிப்பும் தமிழில் சொல்லிக்கொடுக்கப்படுகிறது.

பேச்சுத் தமிழ் -

ஒரு சில தமிழ்க் குடும்பங்களைத் தவிர பெரும்பாலான குடும்பங்களில் கிரியோல் மொழி பயன்படுத்தப்பட்டு வருகிறது. குழந்தைப்பருவம் முதல் தமிழைப் தாய்மொழியாக்க் கைவரப் பெறும் சூழ்நிலை இன்றைய மொரீசியசில் இல்லை என்றே கூறலாம். தமிழர்கள் பேசும்போதுகூட கிரியோல் மொழியில் உரையாடுவதையே வழக்கமாகக் கொண்டுள்ளனர். பள்ளிகளில் தமிழைப் படிக்கவும் எழுதவும் பயிற்சி அளிக்கிறார்கள். ஆனால் பேச்சுத்தமிழைச் சிறிதளவும் பழகுவதில்லை. இந்நிலை மேம்பட, நம் பள்ளி மாணவர்களுக்குப் பேச்சுத் தமிழைக் கற்றுத் தருவது நம் பாடத்திட்டத்தில் இடம்பெறவேண்டும். பேச்சுத்தமிழின் பயன்பாட்டையும் வளர்ச்சியையும் கண்ணும் கருத்தமாகப் பாதுகாக்கவேண்டும். எந்தச் சமுதாயத்தில் பேச்சுமொழி வழக்கின் பயன்பாடு மங்கிப்போகிறதோ, அந்த மொழி அழிவை விரைவில் காணப்போகிறது என்பது ஆர்த்தம். எனவே, பேச்சுத்தமிழை மாணவர்கள் கைவரப்பெறுவது ஆசிரியர்கள் கையில்தான் உள்ளது. வகுப்பில் பேச்சுத்தமிழே கருத்துப் பரிமாற்றத்திற்கும் பயன்படும் ஊடகமாக இருக்கவேண்டும். அதற்கு, ஆசிரியர் நல்லதொரு முன்மாதிரியாக விளங்குவது முக்கியம்.

பேச்சுத்தமிழை அழவிலிருந்து காப்பாற்றும்வண்ணம் மொரீசியஸின் கலை மற்றும் கலாச்சார அமைச்சு செயல்பட்டு வருகிறது. 2008 ஆம் ஆண்டில், தமிழ் பேசுவோர் ஒன்றியம் (Tamil Speaking Union) என்ற அமைப்பு நிறுவப்பட்டு, முனைவர் ஜீவன் செம்மன் என்பாரின் தலைமையில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறது. (MOAC,2008) பள்ளிமாணவர்களுக்கும் பொது மக்களுக்கும் பேச்சுத்தமிழ்ப் பயிற்சி

வகுப்புகளை நாடெங்கும் நடத்துகிறார்கள். அவர்கள் தமிழை மீட்டுருவாக்கம் செய்யும் முயற்சிகளில் ஈடுபடுகிறார்கள். (MTSU,2010)

உலகமயமாதலால் தமிழ் கற்றல் கற்பித்தல்

உலகமயமாதல் ஆங்கிலத்தில் பரவிய 'globalisation' என்பது பொருளாகும். அது 1981 ஆம் ஆண்டிலே பொருளாதாரம் தொடர்புக்காகப் பயன்படுத்தத் தொடங்கியது. தொலைத்தொடர்பு, போக்குவரத்து, தகவல், தொழில்நுட்பம், அரசியல், பண்பாடு, ஆகிய துறைகளின் முன்னேற்றங்கள் அடைவதற்கும் உலக சமூகங்களுக்கிடையே தொடர்பு மேற்கொள்வதற்கும் உலகமயமாதல் எனலாம். ஆனால், உலகமயமாதல் என்பதை வெறும் பொருளாதாரப் பார்வையில் மட்டும் நாம் பார்க்கக்கூடாது. உலகமயமாதலால் கலாச்சாரங்களும் கல்வி முறைகளும் பலவிதமான தாக்கங்களுக்கு உள்ளாகின்றன. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று சங்க காலத்திலேயே ஓர் உலகமயமாக்கச் சிந்தனையை தோற்றுவித்தவர்கள் தமிழர்கள். உலகமயமாதல் இன்று நம் உலகத்தையே ஒரு குக்கிரமமாகச் சுருக்கிவிட்டது என்பதில் யாருக்கும் ஐயம் இருக்கமுடியாது. நாம் தேடும் தகவல்களை உடனுக்குடன் நம் கண்முன் கொண்டுவந்து நிறுத்த இணையத்தைவிட சிறந்த வேறு ஒரு வாகனம் இருக்கமுடியாது. இயல், இசை, நாடகம் என்று வகுத்துத் தமிழை முத்தமிழ் என வழங்கினோம். இக்கணினி யுகத்தில் நான்காவது தமிழ் உருவாகியிருக்கிறது. அது கணினித் தமிழ் ஆகும். தமிழ் இணையப் பல்கலைக்கழகம் உலகம் முழுதும் வாழும் தமிழ் மக்களுக்கு அளிக்கும் கல்வித் திட்டத்தின் கீழ் அரிச்சுவடி முதல் ஆராய்ச்சி வரை இணையவழி தமிழ்க் கல்வி வழங்கப்படுகிறது. ஆகவே, தமிழ் இளையர்களுக்காகத் தகவல் தொழில்நுட்பம் வழித் தமிழ் கற்றலை ஒரு பாடமாக அவசியம் சேர்க்க வேண்டும். இல்லையெனில் இங்கே தொழில்நுட்பத் தமிழ் வளராது. உலகமயமாக்கல் சூழலில் தமிழைக் காக்க நாம் அவசியம் செய்யவேண்டிய காரியங்கள் பல உள்ளன. படித்த தமிழர்கள் மத்தியிலே தமிழ் உணர்வை ஊட்ட வேண்டியது அவற்றில் தலையாய காரியமாகும். அதிலே இந்த உலகத் தமிழாசிரியர் மாநாடு ஒரு முக்கிய பங்களிப்பைச் செய்திருக்கிறது என்பது உண்மை. இது தொடர வேண்டும்.

முடிவுரை

இன்று மொரீசியசில் மூன்றாம் மொழி நிலையில் தமிழ் காப்பாற்றப்பட்டு வருவதற்கு ஒவ்வொரு மொரீசியஸ் தமிழனும் மொரீசியஸ் அரசுக்குக் கடமைப்பட்டுள்ளான். பல்வேறு சிக்கலுக்களுகிடையே தமிழை நாம் இன்று வளர்த்து வரும் அதே நேரத்தில் பன்மொழிச்சூழல் தமிழின் எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக்கி வருகிறது.

மேற்குறிப்பிட்டவற்றை நாம் தீவிரமாக யோசிக்கும் காலம் வந்துள்ளதை உணர்ந்து விரைவில் செயல்படவேண்டும். இம்மாநாட்டின் மூலமாக உலகத் தமிழாசிரியர்களிடையே தமிழ் கற்றல் கற்பித்தல் தொடர்பான கருத்துப் பரிமாற்றங்களும் பகிர்வுகளும் நிகழ வகைசெய்ய வேண்டும். இவ்வாறு செய்தால், உலகெங்கும் தமிழை வாழ்வாங்கு வாழ வைக்க முடியும்.

<u>பார்வைநூல்களின் பட்டியல்</u>:

Central Statistics Office (2004) Population & Vital Statistics [online]. Available at:
< URL: http://www.gov.mu/portal/sites/ncn/cso/service.htm> [access date: 25 July 2011]

Chetty P (2004). National Seminar on Strategic Plan for the Tamil Community: A Strategy for Tamil Language Maintenance.

Chinnammai S. (2005). Effects of Globalisation on Education & Culture. University of Madras, Chennai, Tamil Nadu, India.

Education Act (1957) . An act to consolidate and amend the law relating to Education. No. 42(3b)

Hookoomsing, V.Y(1989) A Brief History of the Tamil Language in the Multilingual Mauritius. Paper presented at the International Tamil Studies Conference, University of Mauritius, Mauritius.

MIE (1975-6). Languages in Mauritius: Aims of Languages and Teaching in Mauritius. (Annex2,iii)
Mauritius Tamil Speaking Union (2010) Spreading Tamil Language and Culture in Mauritius.

Ministry of Arts and Culture (2008). The Tamil Speaking Union Bill. Explanatory Memorandum.(No.X11 of 2008)
Ministry of Education and Human Resource (2010). Statistics for State Secondary Schools and State Colleges

மொரீசியஸ் கல்வியமைச்சு. (2011) தகவல் : அரசுத் தொடக்க நிலைப் பள்ளிகள்

முத்துசாமி, (2010). மொரீசியஸ் தமிழர்: மொழி- பண்பாடு- சமூகம். புத்ரா பல்கலைக்கழக அச்சகம், மலேசியா

National Curriculum Framework- Primary (2009). Asian Languages. Ministry of Education and Human Resource, Mauritius p.65

இராசாராம், சு (1991). மொரீசியஸ் தமிழரும் தமிழும். தமிழ்ப் பல்கலைக்கழக அச்சகம், தஞ்சாவூர்.

Richards A (2009) Mauritius: Rodrigues, Reunion. Bradt Travel Guides Ltd, England.

பண்பாடு தழுவிய தமிழ் கற்றலும் கற்பித்தலும்

சு. இராசரத்தினம்
கனடா

அகிலம் முழுவதும் பரவி வாழும் தமிழ் இனத்திற்கான தமிழ்மொழி கற்பித்தலின்போது - கற்போர் எமது பிள்ளைகள், கற்பிக்க முற்படுவோர் பெற்றோர்கள். இவ்விரு தரப்பினரும் இச்செயலில் முழுமனதோடு, விருப்போடு ஈடுபடுகின்றார்களா? என்பதிலும் - தமிழ்மொழி கற்பித்தலின் வெற்றி தங்கியுள்ளது. எனவே அவற்றை முதலில் உற்று நோக்குவோம். தமிழ் இனத்தின் ஒரு பகுதியினர் மத்தியில் இன்று எழுந்துள்ள கேள்வி 'எமது அடுத்த தலைமுறையினர் தொழில்சார் கல்விக்காகப் பெரும் நேரத்தைச் செலவிடுவதுடன், தாம் வாழும் நாடுகளில் உள்ள பெரும்பான்மை இனங்களுடன் போட்டியிட்டுத் தொழில் வாய்ப்பினைப் பெறவேண்டிய இன்றைய நடைமுறை உலகில்; எமது பிள்ளைகள் தமிழை ஏன் கற்க வேண்டும்? அதற்காக நேரத்தையும் பணத்தையும் ஏன் செலவிட வேண்டும் ?என்பதே". இத்தவறான கருத்தானது பெரும்பகுதியாகப் பரவாமல் இருப்பதற்கான நடவடிக்கைகளைக் கருத்தியல் ரீதியாக முன்னெடுக்க வேண்டிய அவசியம் ஒருபுறம் இருக்கின்றது. அவற்றை வேறுதளத்திற்கு விட்டு விடுவோம்.

புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில தமிழை ஏன் கற்க வேண்டும்? என்பதற்குப் பல காரணங்கள் இருந்தபோதும் இக்கட்டுரைக்கு ஏற்புடைய காரணத்தை மட்டும் முன்வைக்க நினைக்கிறேன்.

<u>பல்லின பண்பாட்டுச்சூழல்</u>

இன்றைய தமிழன் பல் இனப்பண்பாட்டுச் சூழலில் வாழ்வதனால் பெற்றோர்களுக்கும், அடுத்த தலைமுறையினராகிய பிள்ளைகளுக்கும் இடையே புரிந்துணர்வும், இசைந்து வாழும் தன்மையும் மிகக்குறைவாகவே காணப்படுகின்றன. இந்நிலை புலம்பெயர் தமிழர் வாழ்வில் பல வாழ்வியற் சிக்கல்களைத் தோற்றுவித்து உள்ளது.

இச்சிக்கல்களுக்கு தமிழர் வாழ்விற் பண்பாடு பற்றி இரு தரப்பினரும் கொண்டுள்ள நம்பிக்கையும், புரிந்துணர்வின் தன்மையுமே காரணமாக அமைகின்றது.

நம் மனதில் எழும் சிந்தனையின் வெளிப்பாட்டிற்கும், நம் பிள்ளைகளின் சிந்தனை வெளிப்பாட்டிற்குமிடையே வேறுபாடு உள்ளது. இதுவே சகல முரண்பாடுகளுக்கும் அடிப்படையாக இருக்கின்றது.

இவ்வேறுபாடுகளுக்கு மேலும் பல காரணகாரியங்கள் இருந்தபோதும் பண்பாடு மிக முக்கியமானதாக அமைந்திருந்தது. அதுவே நம் உள்ளத்தே உறைந்துள்ள வாழ்வியல்

முறையாகும்.

எனவே பல்லினப் பண்பாட்டுச் சூழலில் வாழும் எமது பிள்ளைகள் தமிழர் வாழும் முறைமையை நன்கு அறிந்துகொள்ளல் அவசியமாகிறது. இன்று அவர்கள் தமிழர் வாழ்வியலைத் தமிழ்மொழிக் கல்வியினூடாகவே விளங்கிக்கொள்ள முடியும். அப்போதுதான் அவர்களால் தம் மூத்தோரின் சொல்லையும், செயலையும் பூரணமாக விளங்கிக்கொள்ள முடியும் என்பதனால் அவர்களுக்குப் பண்பாடு தழுவிய தமிழ்மொழிக்கல்வி மிகமிக அவசியமாகின்றது. புலம்பெயர்ந்த வாழ்வில் தமிழ்மொழிக்கல்வி ஏன் என்பதற்கு இதுவும் ஒரு முக்கியப் பதிலாக அமைகிறது.

பாடத்திட்டம்

தமிழ்மொழிக்கான பாடத்திட்டமானது தமிழர்களது பண்பாட்டை (வாழ்வியலை) அடிப்படையாகவும், பிறஇனங்களின் பண்பாட்டை ஒப்பியல் நோக்கில் பொதுப்படையாகவும் கொண்டு அமைக்கப்படல் வேண்டும். எமது பண்பாட்டில் உள்ள அறிவியற் கூறுகள், விழுமியங்கள் என்பவை மாணவர்களிடம் எடுத்துச் சொல்லப்படல் வேண்டும். நாம் கற்பிக்கும் இலக்கியங்கள், கலைகள், மொழிவழக்கு என்பன பண்பாட்டையும் வரலாற்றையும் நன்கு புலப்படுத்துவதாக அமைய வேண்டும்.

ஆசிரியர்களின் பங்கு

பண்பாடு தழுவித் தமிழைக் கற்பிக்க முற்படும் ஆசிரியர் பங்கு மிக அளப்பரியது. தமிழர்களினது பண்பாட்டில் அமைந்துள்ள சடங்குகள், பண்டிகைகள், விழாக்கள் நாளாந்தக் குடும்ப வாழ்வியல் முறைகள் அவற்றைச் சுட்டி நிற்கும் பழமொழிகள், மரபுத்தொடர்கள் என்பவற்றில் பொதிந்துள்ள அறிவியற்காரணங்கள், விழுமியங்கள், பயன்கள் என்பவற்றை நன்கு விளங்கிக்கொள்ளல் வேண்டும். ஆசிரியர்கள் எதிர்நோக்கும் சவால்கள் என்னவென்றால் இவற்றில் ஒரு பகுதிக்கான காரணங்களும் விளக்கங்களும் தவறாகத் தமிழர் சமூகத்தில் கூறப்பட்டும், எழுதப்பட்டும் வந்துள்ளது. எனவே இவற்றின் உண்மைப் பொருளை கண்டறிதல் ஆகும்.

அத்துடன் பல்வேறு ஊடகங்கள் வாயிலாகப் பலவிதமான உலகியல் நடைமுறைகளை அறிந்து கொண்டுள்ள மாணவர்களே கற்போர் என்பதனை நாம் மனதிற் கொள்ளல் வேண்டும். மாணவர்களின் மனதிற் தோன்றும் கேள்விகள், அவர்கள் பார்க்கும் கோணம் முற்றிலும் வேறுபட்டதாக அமைகின்றது. கனடாவில் உள்ள ஒரு ஆசிரியர் எதிர்கொண்ட ஒரு சம்பவத்தை எடுத்துக்காட்டாகச் சுருக்கமாகக் கூற விரும்புகிறேன்.

தைப்பொங்கற் பண்டிகை பற்றிக் கற்பித்த ஆசிரியர் - அது சமயம் கடந்த தமிழர் திருநாள், உழவர் பெருநாள், நன்றி நவிலும் நன்நாள், தமிழர்கள் எல்லோரும் கொண்டாடும் நாள் என்றார்.

இதைக்கேட்ட மாணவர் ஒருவர், சமயம் சார்ந்த பண்டிகை அல்லவாயின் பொங்கலின்போது ஏன் பிள்ளையார் பிடித்து வைக்கிறார்கள்? என்று கேட்டார் - ஆசிரியர் என்ன பதில் அளிக்க வேண்டும் என்பதை உங்கள் சிந்தனைக்கே விட்டு விடுகிறேன்.

இதே போன்று சிறு சொற்றொடர்களைக் கற்பிக்கும் போது கூட மாணவர்களிடம் கேள்வி எழுகின்றது. எடுத்துக்காட்டாக -
'புல்வெளி பச்சை நிறமாகத் தோற்றம் அளித்தது" உடனே மாணவன் நிறத்தையும் 'பச்சை" என்கிறீர்கள் நன்கு அவியாத கிழங்கையும் அம்மா 'பச்சை"யாக இருக்கு அவியவில்லை என்கிறார்" அது என்ன 'பச்சை" இது என்ன 'பச்சை", என்று கேட்டார்?

எனவே புலம்பெயர் நாடுகளில் தமிழ்மொழியைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் பண்டிகைகள், விழாக்கள், சடங்குகள் என்பவற்றை ஏன் கொண்டாடுகிறார்கள்? அந்நிகழ்வு ஏன் அந்நாளில் நடத்தப்படுகிறது? அது எவ்வாறு நடத்தப்படுகிறது? ஒவ்வொரு நிகழ்விலும் நடக்கும் சடங்குகளின் உள்ளார்ந்த அர்த்தம் என்ன? போன்ற பல விடயங்களை அறிவியற் பார்வையில் தெரிந்து வைத்திருக்க வேண்டும். அவற்றிற் பொதிந்துள்ள விழுமியங்களை நன்கு விளங்கிக் கொண்டிருக்க வேண்டும். அத்துடன் பெயர்ச் சொற்கள், வினைச் சொற்கள் என்பவற்றிற்கான வேர்ச்சொற்களை அறிந்திருக்க வேண்டிய தேவை ஏற்படுகிறது.

<u>'பண்பாடு" பற்றிய தெளிவு</u>

'பண்பாடு" பற்றி நாம் கொண்டுள்ள தெளிவும், நமது பண்பாட்டில் நாம் கொண்டுள்ள பற்றுமே எம்மிடையே உள்ள முரண்பாடுகளுக்கு அடிப்படையாக அமைகிறது, அதற்கு முதற்படியாக நாம் 'பண்பாடு" என்றால் என்ன என்பதனைப் புரிந்து கொள்ள வேண்டும்.
'பண்பாடு" என்பது தமிழர் மொழியியல் நோக்கில் மனிதகுலத்தை உயர்த்த, மேம்படுத்தக்கூடிய, சிறப்பிக்கக்கூடிய, பழக்க வழக்கங்களையே எடுத்துக்கூறும் சொல்லாக உள்ளது. ஆதலால் இலக்கியவழி நின்று பண்பாட்டைக் கூறுவோர் மக்களின் சிறப்பு வாய்ந்த உயர் பண்புகளை மட்டும் (பண்பு) பண்பாடு எனக் கொள்வது வழமை.
ஆனால் இன்றைய உலகில் சமூக, மானிடவியலாளர்கள் ஓர் இனத்தினதோ, மனிதனதோ உளப்பாங்கின் வெளிப்பாடுகளான பழக்கவழக்கங்கள், ஒழுக்கலாறுகள் (வாழ்வியல்) நடைமுறைகள் சகலவற்றையும் 'பண்பாடு" என அழைப்பர் அவை எத்தகைய மூடநம்பிக்கை உடையனவாயினும் அவ்வினத்தை மேம்படுத்தத் துணை நிற்காததாயினும் 'பண்பாடு" என்றே குறிப்பிடுவர்.

பண்பாட்டின் தோற்றம்

மனிதனின் இயங்கு கருவியான 'உடல்" அக்கருவியை இயக்கும் மின்சாரம் போன்ற 'உயிர்" அவ்வியக்கத்திற்குக் கட்டளை பிறப்பிக்கும் 'மனம்" இம்மூன்றிற்கும் முறையே ஆதாரமானவை உணவு, அன்பு, அறிவு ஆகும்.

உடல், உயிர், மனம் என்பவை தனித்தனியே, இயல்பாகவே உந்து சக்திகளைத் தோற்றுவிப்பவை.

தேவை	**-**	**மனிதர்**	**-**	**இயல்பான உந்து சக்திகள்**
உணவு	← →	உடல்	← →	உடல்சார் உந்து சக்திகள்: பசி, தாகம், நித்திரை, மூமலசலம் கழித்தல், பாலுணர்வு போன்றவை.
அன்பு	← →	உயிர்	← →	உயிர்சார் உந்து சக்திகள்: பாதுகாப்புணர்வு, ஆர்வம் உடைமை, பற்றுள்ளம், நன்றி, இரக்கம், துக்கம், கோபம், கடமை, தியாகம் போன்ற உணர்வுகளின் தூண்டல், உடல் நோய்.
அறிவு	← →	மனம்	← →	அறிதல்சார் உந்து சக்திகள் ஆக்கசக்தி, மூஆராயும் இயல்பு, எண்ணங்கள், மூகனவுகள், கற்பனைகள், மூகலை இலக்கிய மெய்யியல் போன்ற வெளிப்பாடுகள்.

இயல்பாகத் தோன்றும் இவ்வுந்து சக்திகள் மனிதனின் உள்ளத்து உணர்வுகளை

ஆட்டிப்படைக்க வல்லன. அத்தேவைகளை நிறைவு செய்யாதவரை அந்த உள்ளம் அமைதி கொள்ளாது.

எனவே இயல்பாகத் தோன்றிய உந்து சக்திகளை ஒவ்வொரு மனிதனும், ஒவ்வோர் இனமும் எங்கு? எவ்வாறு? எப்படி? தணித்துக் கொள்கின்றனர் அல்லது போக்கிக் கொள்கின்றனர் என்பதே அம்மனிதனின் அல்லது அவ்வினத்தின் பண்பாடு (வாழ்வியல்) எனக் கொள்ளலாம்.

மேற்கூறிய தமது தேவைகளை ஒவ்வோர் இனமும் நிறைவு செய்து கொள்வதற்காகத் தான் வாழும் சூழலில் மனிதர்களிடையே உறவுகளை மேம்படுத்தக்கூடிய ஒழுங்கு முறைகள், சடங்குகள், நடைமுறைகள், கடமைகள், விழுமியங்கள் என்பவற்றை வகுத்துக்கொண்டு தமது வாழ்வை மேம்படுத்திக் கொண்டனர் அதுவே அவர்களது பண்பாடு ஆயிற்று.

இப்பண்பாட்டை எடுத்துச் செல்ல அதன் வழி பிறந்த மொழிவழக்குகளை அமைத்துக் கொண்டனர். எடுத்துக்காட்டாக உறவுகள் (பெரியப்பா, மாமா, மாமி, சித்தி, சித்தப்பா .....) தன் சூழலில் உள்ள காலங்கள், பருவகாலங்கள், பொருட்கள், பிறஉயிர் இனங்கள், ... அவற்றின் வளர்ச்சி நிலைகள், போன்றவற்றைப் பகுத்துப் பார்க்கக்கூடியதாகச் சொற்களை அமைத்துள்ளார்கள்.

மனித மனங்களை, மனித உறவுகளை மேம்படுத்தவும், ஒன்றாக்கவும், இசைவாக்கவும் கூடிய சடங்குகள், விழாக்கள், பண்டிகைகள், என்பவற்றை உருவாக்கிக்கொண்டனர்.

மேலும் தன் சூழலில் வாழும் மனிதர்களை அழைப்பதற்குரிய மொழிவழக்குகள் முதல், ஒவ்வோர் நிகழ்விலும் உபயோகிக்க வேண்டிய சொற்பதங்கள் வரை துல்லியமாகப் பகுத்து வைத்துள்ளான். எடுத்துக்காட்டாக வயது மூத்தவரை 'நீங்கள்" என்று அழைப்பது நாம் வாழும் நாடு முதல் கல்லூரி வரை 'எங்கள் நாடு", 'எங்கள் கல்லூரி" என்றழைப்பது.

ஒரு மகிழ்ச்சிகரமான விழா முடிவின்போது 'இறுதி நிகழ்வாக' / 'கடைசியாக' என்று கூறாது 'நிறைவாக வரும் அடுத்த நிகழ்ச்சி' என்று கூறுவது. ஒரு நல்ல நிகழ்வு நடக்கும் (திருமணம்) இடத்திற்குச் சென்று விடைபெறும் போது 'வருகிறேன்" என்று கூறுவது. (இதன்பொருள் இதுபோன்று நல்ல நிகழ்வுகள் மேலும் மேலும் நடக்கட்டும் என்று வாழ்த்துவதாக அமையும்)

ஒரு துக்க நிகழ்விற்குச் (மரணச்சடங்கு) சென்று விடைபெறும்போது 'போகிறேன்" என்று கூறி விடைபெறுவது (இதன்பொருள் இதுபோன்று துக்க நிகழ்வு மேலும் நடைபெற வேண்டாம்) என வாழ்த்துவதாக அமையும். இங்கு இலக்கணவழி நில்லாது பண்பாட்டுவழி நிற்பதைப் புரிந்து கொள்ளவேண்டும்.

இவ்வாறு தமிழர் வாழ்வியல் ஒவ்வோர் இடத்திலும் பண்பாட்டு வழிவந்த சொற்களே நிறைந்துள்ளன. பிறமொழி மூலம் கல்வி கற்கும் சூழலிலுள்ள எம் மாணவர்கள் கருத்துவழி மாத்திரம் மொழிபெயர்த்துப் பார்க்காது பண்பாட்டுவழி மொழிபெயர்த்துப் பார்த்தல் வேண்டும். இவை பண்பாட்டுவழி தமிழ்மொழி கற்றல், கற்பித்தலில் முக்கிய பங்கு வகிக்கின்றது.

<u>நோக்கம்</u>

பண்பாட்டு வழி தமிழ்மொழியைக் கற்பித்தலின் முக்கிய நோக்கங்களாக பின்வருவனவற்றைக் கொள்ளலாம்.

- ஒருவரைத் தன் குடும்பத்துடனும், தன் இனத்துடனும், இசைந்து வாழக்கூடியவராக உருவாக்குவது

- தன் இனம் கொண்டுள்ள வாழ்வியல் (பண்பாட்டு) முறைகளைப் போன்றே மற்றைய இனங்களும் கொண்டுள்ளன என்பதனால், மற்றைய இனங்களின் வாழ்வியல் முறைகளையும் நாம் மதிக்கவேண்டும் என்ற எண்ணத்தை உண்டாக்குவதன் மூலம் மற்றைய இனங்களையும் மதித்து வாழும் பண்பினை உருவாக்குதல்.

- பண்பாட்டின் ஒரு கூறாக நாகரீகம் விளங்கும்.
  நாகரீகம் - அறிவியல் (விஞ்ஞான) வளர்ச்சியைக் காட்டும்.

பண்பாடு - மனவளர்ச்சியையும், அறிவியல் வளர்ச்சியையும் காட்டும் இணைந்த நிலை

உலகு நாகரீகம் இல்லாத பண்பாட்டாளரை ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் பண்பாடு இல்லாத நாகரீகம் உடையவரை ஏற்றுக்கொள்வது எப்படி? எனவே அறிவியற் கல்வியோடு பண்பாட்டுவழித் தமிழ்மொழி கற்றலும் அவசியம் ஆகின்றது.

செயல்

இந்நோக்கத்தினை அடைய நாம் தமிழ்மொழியைக் கற்பிக்கும்போது பின்வரும் வகையிற் பகுத்துக் கொண்டு, பல்வேறு வடிவங்களில் பாடத்திட்டத்தை அமைத்துக் கொள்ளலாம்.

1. பண்பாட்டு வழிபிறந்த சொற்களைக் கதைகள், உரையாடல்கள், நாடகங்கள் மூலம் அறிமுகப்படுத்தல். எடுத்துக்காட்டாக உறவுமுறைச்சொற்கள், மரியாதைப் பன்மைச்சொற்கள், காலங்கள், பருவகாலங்கள், உயிர் இனங்களின் வளர்ச்சிப் பருவங்கள் போன்றவை.

2. தமிழர் சடங்குகள், பண்டிகைகள், விழாக்கள் இவை எப்போது? ஏன்? எப்படி? கொண்டாடப்படுகின்றன என்ற அடிப்படை.

3. விழுமியங்கள் - விழுமியங்கள் உலகப்பொதுவானவை. அவை உலகிலுள்ள எல்லா இனங்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டவை. எடுத்துக்காட்டாகப் 'பொய் சொல்லக் கூடாது" என்பது ஒரு விழுமியம். இதனை உலகில் உள்ள எல்லா இனங்களும் ஏற்றுள்ளன.

4. தமிழர்தம் கொள்கைகள் - கொள்கைகள் இனத்துக்கினம் மாறுபடும், வேறுபடும் எடுத்துக்காட்டாக 'ஒருவனுக்கு ஒருத்தி" என்பது தமிழர் கொள்கை இது இஸ்லாமியச் சமூகத்திற்கு ஏற்புடையது அல்ல.

5. நம்பிக்கைகள் - நம்பிக்கைகளும் இனத்துக்கினம் வேறுபடும். ஒவ்வோர் இனமும் சகல நிகழ்வுகளை ஒட்டிப் பல்வேறு நம்பிக்கைகளை உடையவர்கள். (எடுத்துக்காட்டாக இறந்தவர்களுக்கு எட்டாம் நாள் உணவு படைத்தல்.)

நம்பிக்கையின் அடிப்படையிலேயே சகல நிகழ்வுகளிலும் உள்ள சடங்குகள் அமைந்துள்ளன.

6. குடிவழக்கு (வழக்கடிபாடு, குறியீடு) - இவை அந்தந்த இனங்கள் தமது வாழ்வின் சகல நிகழ்வின்போது, நடைமுறைகளாகப் பின்பற்றும் - எடுத்துக்காட்டாக மகிழ்ச்சிகரமான நிகழ்வின்போது மாவிலையை உள்பக்கமாகவும், தோரணத்தை மேல்நோக்கியும், கதலி வாழையைக் குலையுடனும் கட்டுவார்கள். துக்க நிகழ்வானால் மாவிலையைப்

பிறப்பக்கமாகவும், தோரணத்தை கீழ்நோக்கியும், கறி (மொந்தன்) வாழையையும் கட்டுவார்கள்.

குத்துவிளக்கில் மகிழ்வான நிகழ்விற்கு 5 திரிகளையும் ஏற்றி வைப்பார்கள். இறந்தோர் சடங்கின்போது 3 திரிகளை மாத்திரம் ஏற்றி வைப்பார்கள். இவைகள் எல்லாம் என்ன நிகழ்வு என்று அறியாது வருவோருக்கும் அறிவிக்கும் குறியீடுகள்.

7. மரபுத்தொடர்கள், பழமொழிகள் - இவைகள் தமிழர்களது நம்பிக்கைகள், கொள்கைகள் அடிப்படையில் அமைந்த வாழ்வின் வழிகாட்டிச் சொற்றொடர்கள். அவற்றை நன்கு அறிமுகப்படுத்தல் வேண்டும்.

8. விடுகதைகள் - இவை தமிழர்கள், தாம் வாழ்ந்த சூழலை வைத்துக்கொண்டு உருவாக்கப்பட்டவை.

9. கலைகள் - சிற்பம், ஓவியம், இசை, நடனம், நாடகம், சிலம்பாட்டம் போன்ற இன்னோரன்னவற்றின் வரலாறு, வளர்ச்சி, சிறப்பு என்பவற்றை எடுத்துக்கூறல்.

10. தமிழர் தம் மருத்துவம், யோகக்கலை - இவற்றின் சிறப்பியல்புகள், மருந்தே உணவாகக் கொண்ட இன்றைய உலகில், உணவே மருந்தாகக் கொண்ட தமிழர் வாழ்வியல்பு, உடலைச் சிறப்பாகப் பேணும் யோகக்கலையின் சிறப்பியல்புகள்.

மேற்கூறப்பட்டவையை எடுத்துக்காட்டக்கூடிய இலக்கியங்கள், இலக்கணங்கள், கதைகள், காப்பியங்கள், வரலாறுகள் என்பவற்றைப் பல்வேறு வடிவங்களில் இன்றைய தொழில்நுட்ப உதவியோடு கற்பித்தலை முன்னெடுத்தல் பண்பாட்டுவழி தமிழ்மொழி கற்றல் கற்பித்தலுக்குச் சிறப்பாக அமையும்.

பண்பாடு பற்றியும், மானிடர்வாழ்வியல் பற்றியும் விரிவாக 2008ம் ஆண்டு தமிழக அரசின் முதற்பரிசு பெற்ற நூலான 'பண்பாடு - வேரும் விழுதும்" என்னும் எனது நூலிற் குறிப்பிட்டு உள்ளேன்.

'தமிழின் வாழ்வே தமிழரின் வாழ்வு'

மாணவர்களின் எழுத்துப்படைப்பில் வருணிக்கும் திறனை வளர்த்தல்

கு. உத்தமன், மூத்த ஆசிரியர்
அண்டர்சன் உயர்நிலைப் பள்ளி
சிங்கப்பூர்.

வருணனை என்பதன் விளக்கம்

வருணனை என்பதற்கு நேரில் பார்ப்பது போன்ற உணர்வை ஏற்படுத்தும் பேச்சு அல்லது எழுத்து என்று பொருள்.*[17] கவிஞன் தான் காணும் காட்சியை அதன் இயல்பு சற்றும் திரிபுபடாமல் சொல்திறம் மேம்பட அழகுணர்வுடன் வெளிப்படுத்தும்போது அவ்வுத்திமுறை வருணனை என்னும் பெயரைப் பெறுகிறது.*[18] அதாவது எதையும் கூர்ந்து கவனித்து நுட்பமாக விளக்குதலே வருணனை என்று பொருள் கொள்ளலாம்.

பின்னணி

சிங்கப்பூரில் தமிழ்மொழிப் பாடத்தில் உச்சத் தேர்ச்சி பெறுவதோடு ஏனைய பாடங்களிலும் உச்சத் தேர்ச்சி பெறுகின்ற தொடக்கப்பள்ளி மாணவர்கள் உயர்நிலைப் பள்ளியில் உயர்தமிழ் படிக்கும் வாய்ப்பைப் பெறுகின்றனர்.

சிக்கலைக் கண்டறிந்த விதம்

மாணவர்கள் தம் படைப்பில், ஓர்இடம், ஓர்உணர்ச்சி முதலியவற்றை, நுட்பமாக விளக்கி எழுதுவதில்லை. உதாரணமாக, தன் தோழி சோகமாக இருந்தாள் என்பதை எழுத்தில் வெளிப்படுத்தும்போது, அவள் 'கண்ணீரும் கம்பலையுமாகக் காணப்பட்டாள்' என்றும், மகிழ்ச்சியாக இருக்கும் நிலையை எழுதும்போது, 'ஆனந்தக் கடலில் மூழ்கினாள்' என்றும் எழுதுவர். இத்தகைய தொடர்கள், மாந்தர்கள் அனுபவிக்கும் இன்பதுன்ப உணர்வுகளை, நுட்பமாக விளக்கிக்காட்டவில்லை. எனவே, இச் சிக்கலைக் களைந்து மாணவர்களின் எழுத்தாற்றலை மேம்படுத்த, வருணித்து எழுதும் உத்தியை

---

[17] லட்சுமியின் மாணவர் தமிம்மொழி அகராதி
*
[18] பாவேந்தரின் அழகின் சிரிப்பு அறிமுகம்

அறிமுகப்படுத்தலாமே எனும் எண்ணம் உதித்தது. எனவே, ஆய்வாளர் இதனை ஆய்வுப்பொருளாகக் கொண்டார்.

நோக்கங்கள்

இடம், சூழல், உணர்ச்சி முதலானவற்றை நுட்பமாக விளக்கி எழுதக் கற்பித்தல்.

- கருத்தைப் பொருத்தமான அடைமொழிகளாலும், உவமைகளாலும் இன்ன பிற தொடர்களாலும் வருணித்து எழுதும் திறனை வளர்த்தல்.
- வருணனைப் பகுதிகளும் அவை தொடர்பான கற்றல் கற்பித்தல் உத்திகளும் மாணவரின் எழுத்தாற்றலை மேம்படுத்த கைகொடுக்கின்றனவா எனக் கண்டறிதல்.

கருதுகோள்

'மாணவர்களை அனுபவக் கற்றல் சுழற்சி அணுகுமுறை (Experiential Learning Approach) வழிக் கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தி, வருணித்து எழுதப் பயிற்சி அளித்தால் அவர்களின் கட்டுரை எழுதும் திறன் மேம்படும்' என்பது ஆய்வாளரின் கருதுகோள் ஆகும்.

அனுபவக் கற்றல் சுழற்சி அணுகுமுறை என்பது, அர்த்தமுள்ள அனுபவங்களைப் பெறுதல், உற்றுநோக்கிப் பிரதிபலித்தல், எடுத்த முடிவின் அடிப்படையில் நடைமுறைப்படுத்திப் பார்த்தல், தர்க்க ரீதியாக ஒரு முடிவுக்கு வருதல் என்னும் நான்கு கால்வட்டப் பகுதிகளைக் கொண்ட ஒரு முழுவட்டமாகும்.

ஆய்வு வினாக்கள்

- மாணவர்கள் எழுத்துப் படைப்பில் வருணனையைப் பயன்படுத்தாது ஏன்?
- வருணித்து எழுதும் திறனைக் கற்பிக்கும் முறைகள் யாவை?
- மாணவர்களிடையே வருணித்து எழுதும் திறனை வளர்ப்பதால் எத்தகைய நன்மைகள் விளையும்?

ஆய்வுக்கு உட்பட்டோர்

உயர்நிலை இரண்டில் உயர்தமிழ் பயிலும் பதின்மூன்று மாணவர்கள் இந்த ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டனர். இவர்கள், ஆய்வாளர் கற்பிக்கும் பள்ளியில் ஒரே வகுப்பில் உயர்தமிழ் பயில்கின்றனர். பெண்கள் எட்டு பேரும் ஆண்கள் ஐவரும் அடங்குவர்.

மாணவர் பின்புலம்

இச்செயலாய்வில் பங்கேற்ற மாணவர்கள் பல்வேறு குடும்பச் சூழலைச் சேர்ந்தவர் ஆவர். இவர்களுள் நான்கு பேர் தமிழல்லாத பிறமொழிகளைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள். 30.8% ஆங்கிலம் மட்டும் பேசும் குடும்பச் சூழலையும் 46% ஆங்கிலமும் தமிழும் பேசும் குடும்பச் சூழலையும் கொண்டவர் ஆவர். 15% தமிழையும் 8% பிறமொழியையும் பேசும் குடும்பச் சூழலைக் கொண்டவர் ஆவர்.

ஆய்வுக் கருவிகள்

பல்வேறு நூல்களிலிருந்தும், இணையத்திலிருந்தும், கடந்த காலத்தில் சிங்கப்பூரில் தமிழ் கற்பித்தலுக்குத் துணை நின்ற வளங்களிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகள் ஆய்வுக் கருவிகளாகப் பயன்படுத்திக்கொள்ளப்பட்டன.

செய்முறை

முன்னிலைத் தேர்வு, இடையீட்டுக் கற்பித்தல், பின்னிலைத் தேர்வு என்னும் முறையில் ஆய்வின் வடிவமைப்பு அமைந்தது. மாணவர்களின் பின்புலமும் தமிழ்மொழி கற்றல் குறித்த அவர்களது மனப்போக்கும் கருத்துக்கணிப்புப் படிவம் மூலம் திரட்டப்பட்டது. அடுத்து மாணவர்களுக்கு முன்னிலைத் தேர்வு நடத்தப்பட்டது. அத்தேர்வு முடிவுகளின் அடிப்படையில் சிக்கல் கண்டறியப்பட்டது. கருதுகோளும் ஆய்வு வினாக்களும் உருவாக்கப்பட்டன. ஆய்வு வினாக்களுக்கு விடை கண்டறியும் நோக்கில் ஆய்வாளரால் தொடர்புநூல் திறனாய்வு மேற்கொள்ளப்பட்டது. இடையீட்டுக் கற்பித்தல் வாரத்திற்கு ஒரு மணிநேரம் என ஒன்பது வாரங்களுக்கு, அனுபவக் கற்றல் சுழற்சி அணுகுமுறையைப் (Experiential Learning cycle Approach) பின்பற்றி நடைபெற்றது. ஆண்டிறுதித் தேர்வில் கொடுக்கப்பட்ட கட்டுரை வினா, பின்னிலைத் தேர்வாகக் கொள்ளப்பட்டது. திரட்டப்பட்ட தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு, கற்றல் கற்பித்தல் மேம்படப் பரிந்துரைகள் வழங்கப்பட்டன. எனவே, இது ஒரு செயலாய்வாகும்.

பாடங்களும் நடவடிக்கைகளும்

வருணித்து எழுதும் திறனை வளர்க்க, வருணனைப் பகுதிகளை வாசித்தல், கண்மூடிக் கேட்டல், பாடல்காட்சியை உற்றுநோக்கல், பகுதியில் படித்த வருணனைக் காட்சியை நடித்தல், உதவிச் சொற்களைப் பயன்படுத்தி வருணனைப் பகுதிகளை உருவாக்குதல்,

படங்களைப் பார்த்து உதவிச்சொல் இல்லாமலே வருணித்துப் பேசுதல் முதலான நடவடிக்கைகளில் மாணவர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். ஒவ்வொரு பாடத்தின்போதும் கடைசி நடவடிக்கையாக மாணவர்கள் ஒவ்வொரு வருணனைப் பகுதியை உருவாக்கினார்கள்.

<u>தரவுகளின் பகுப்பாய்வு</u>

மாணவர்களிடம் கருத்துக்கணிப்பு திரட்டுவதற்கு வழங்கப்பட்ட வினாக்களுள் சில பின்வருமாறு:

1. எனக்குத் தமிழ் விருப்பமான பாடம்.
2. பள்ளியில் தாய்மொழியாகத் தமிழ்மொழியைப் படிப்பது அவசியம்.
3. நம் பண்பாட்டை அறிந்து கொள்ள நமக்குத் தமிழ் அறிவு அவசியம்.
4. தமிழில் தன்னம்பிக்கையுடன் கட்டுரை, கதை முதலிய எழுதுவேன்.
5. என்னால் ஒரு பொருளை, ஓர் இடத்தை, ஓர் உணர்ச்சியை வருணித்து எழுத முடியும்.

இவற்றுக்குப் பெரும்பாலான மாணவர்கள் வலுவாக உடன்படுகிறேன் என்ற தெரிவைத் தேர்ந்தெடுக்காமல், உடன்படுகிறேன் என்பதையோ, ஓரளவு உடன்படுகிறேன் என்பதையோ தான் தேர்ந்தெடுத்திருந்திருந்தனர். இது மாணவர்களது மனப்போக்கைக் காட்டுவதாக உள்ளது.

அட்டவணை

முன்னிலைத் தேர்விலும் பின்னிலைத் தேர்விலும் மாணவர்கள் பெற்ற மதிப்பெண்களை ஒப்பிட்டு வேறுபாடுகளைக் கண்டறிதல்.

மாணவர்	முன்னிலைத் தேர்வு மதிப்பெண்கள் 100%	பின்னிலைத் தேர்வு மதிப்பெண்கள் 100%	வேறுபாடு %
1.	57	64.2	7.2
2.	70	70	0
3.	65.7	77	11.3
4.	65.7	65.7	0
5.	50	54.2	4.2
6.	77	91	14
7.	70	80	10
8.	57	88.5	31
9.	68.5	68.5	0
10.	68.5	81.4	12.9
11.	68.5	70	1.5
12.	45.7	50	2.3
13.	57	64.2	7.4

இங்குக் கொடுக்கப்பட்டுள்ள ஒப்பீட்டு அட்டவணையைப் பார்க்கையில் மூன்று மாணவர்களின் மதிப்பெண்களில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. ஆனால், மற்றவர்கள் முன்னேற்றம் அடைந்திருப்பது தெளிவாகத் தெரிகிறது.

முன்னிலைத் தேர்வில் 70% முதல் 77% வரை பெற்றவர் மூவர் ஆவர். 65% முதல் 69% வரை பெற்றவர் ஐந்து பேர். 55%முதல் 57% வரை பெற்றவர் மூவர். 50% மதிப்பெண்கள் பெற்றவர் ஒருவர். 45.7% பெற்றவர் ஒருவர். ஆனால், பின்னிலைத் தேர்வில் 80% முதல் 90% வரை பெற்றவர் நான்கு பேர். 70% முதல் 77% வரை பெற்றவர் மூவர். 65% முதல் 69%வரை பெற்றவர்கள் இருவர். 64% மதிப்பெண்கள் பெற்றவர் இருவர். 50%முதல் 54% வரை பெற்றவர் இருவர் ஆவர்.

முன்னிலைத் தேர்வில் பெற்ற முடிவுகளின் அடிப்படையில் வகுப்பின் சராசரி மதிப்பெண் 63.1% உள்ளது. ஆனால், பின்னிலைத் தேர்வில் பெற்ற முடிவுகளைப்

பார்க்கும்போது, வகுப்பின் சராசரி மதிப்பெண் 71.1% ஆகத் தெரிகிறது. இரு சராசரி மதிப்பெண்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது 8% முன்னேற்றம் தெரிகிறது.

முடிவுரையும் பரிந்துரைகளும்

மாணவர்க்குப் பல்வேறு வழிகளில் வருணனைகளை அறிமுகப்படுத்திக் கற்பித்தால், மாணவர்களிடம் வருணித்து எழுதும் ஆற்றலை வளர்க்க முடியும் எனக் கண்டறியப்பட்டது. மாணவர்களுக்கு வருணனையின் முக்கியத்துவம் தனியே எடுத்துச் சொல்லப்படாததோடு, மாணவர்கள் வருணனைப் பகுதிகளை அவ்வளவாகப் பார்த்தறியாததும் அவர்கள் தம் படைப்பில் வருணனையைப் பயன்படுத்தாதற்குக் காரணம் எனலாம்.

மாணவர்களிடையே வருணித்து எழுதும் திறனை வளர்ப்பதால், உருவத் தோற்றங்களையும் பொருள்களின் தன்மைகளையும் மனித உணர்வுகளையும் உரிய வகையில் விளக்கி எழுத அறிந்துகொள்கிறார்கள். அவர்களின் எழுத்தாற்றல் தனி மதிப்பைப் பெறுவதோடு அதன் பலனாக மதிப்பெண்களும் கூடுகின்றன. குழு நடவடிக்கைகளில் ஈடுபடுகையில் சகமாணவரிடமிருந்தும் அந்தந்தச் சூழலுக்கேற்ற புதிய சொற்களையும் தொடர்களையும் மாணவர்கள் கற்றுக்கொள்வதால் அவர்களின் சொல்வளம் பெருகுகிறது. தவிர, ஆய்வுக்குப் பின்னர் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பில் பெரும்பாலான மாணவர்களது மனப்போக்கு விரும்பத்தக்க முன்னேற்றத்தை எட்டியிருந்ததைக் காணமுடிந்தது.

மாணவர்கள் வருணனை செய்வதில் உள்ள நுட்பங்களைப் புரிந்துகொண்டு மிகப்பொருத்தமாக அமைத்து எழுதக் கற்றுக் கொண்டபோதும் , தக்க இடங்களில் வருணனையை அமைக்கச் சில நேரங்களில் தவறிவிடுகின்றனர். தவிர, ஆய்வுக் காலக் கட்டத்தில் ஒரு மாணவர், வருணனையை அளவோடு பயன்படுத்திக் கருத்தை விளக்காமல், வருணனைக்கே அதிக முக்கியத்துவம் தந்து எழுதிவிட்டார். ஆய்வின் முடிவிலும் இவ்வாறே ஒரு மாணவர் எழுதிவிட்டார். கற்றலில் இதுபோன்ற தவறுகள் ஏற்படுவது இயல்புதான். எனவே, இதில் கவனத்துடன் இருந்து மாணவர்களை நெறிப்படுத்த வேண்டியதும் அவசியமாகிறது.

எனவே, அந்தந்தப் பள்ளியில் உயர்தமிழ் பயிலும் மாணவர்களின் திறனறிந்தும் ஆய்வாளர் தம் பள்ளியில் வருணனை குறித்த பாடங்களை அமைத்து நடத்தியதுபோல மற்றப் பள்ளிகளும் செய்துபார்த்துப் பயனடையலாம்.

ஆய்வுக்குத் துணை நின்ற நூல்கள்:

1. முத்தையா, எஸ்., லட்சுமியின் மாணவர் தமிம்மொழி அகராதி.
2. டாக்டர் கோபாலன், ப., பாவேந்தரின் அழகின் சிரிப்பு அறிமுகம்.
3. நாமக்கல் கவிஞர் பாடல்கள். தலைப்பு "அவள்"
4. டாக்டர் வரதராசன்,மு., இலக்கிய மரபு
5. தொகுப்பாசிரியர் டாக்டர். இராமையா, க., சிங்கப்பூரில் தமிழ் - கற்றல் கற்பித்தல் தொடர்பான ஆய்வுகள் தொகுதி 1,2,3,4.
6. தமிழ் அமுது பாடநூல்கள் . சிங்கப்பூர் பாடத்திட்ட மேம்பாட்டுக் கழகம்.
7. தமிழ் மாலை பாடநூல்கள் . சிங்கப்பூர் பாடத்திட்ட மேம்பாட்டுக் கழகம்.
8. அயலகத் தமிழ் இலக்கியம். சாகித்ய அகாதமி வெளியீடு.
9. டாக்டர் வரதராசன், மு., காற்றாடி – கட்டுரை
10. சுந்தரராமசாமி, சிறுகதை : பக்கத்தில் வந்த அப்பா
11. இளங்கண்ணன், மா., சிறுகதை: பரிதியைக் கண்ட பனி
12. ராம கிரி, அறிவை வளர்க்கும் கருத்துரைக் கதைகள்
13. http://www.youtube.com
14. http://www.thinnai.com
15. http://www.thamilworld.com
16. http://archives.aaraamthinai.com
17. http://www.tamiloviam.com

மலேசியத் தமிழ்மொழிப் பாடத்திட்டமும் பண்பாடு தழுவிய கற்றலும்

Dr. பார்வதி நல்லியண்ணன்
செலயாங் பாரு இடைநிலைப் பள்ளி, பத்து கேவ்ஸ்
மலேசியா.

மலேசியாவின் தமிழ்மொழிப் பாடத்திட்டம் சிறப்பானதொரு பண்பாடு தழுவிய தமிழ் கற்றல் கற்பித்தலுக்கு வழிவகுக்கிறது; உலகமயத்தை எதிர்கொள்ளத்தக்க தமிழ்மாந்தனைத் தயார் செய்கிறது.

மலேசியக் கல்வித் தத்துவம், நாட்டுப்பற்று, குடிமையுணர்வு, பல்லின ஒற்றுமை, இணக்கப்போக்கு, சமூகப் பண்பாட்டுக்கோட்பாடு, ஆரோக்கிய வாழ்வு, தற்காலக் கல்வியில் காணப்படும் அறிவுப்புலம், புதிய நூற்றாண்டிற்குத் தேவையான தூர நோக்குச் சிந்தனை, வாழ்நாள் கற்றல் போன்றவற்றை வலியுறுத்துகிறது. உடல், உளம், ஆன்மீகம், அறிவாற்றல் ஆகிய கூறுகளிலும் மாணவர்கள் சமன்நிலை வளர்ச்சி அடைவதை மலேசியக் கல்வியேற்பாடு வலியுறுத்துகிறது. முழுமையான மலேசிய மக்களை உருவாக்கும் வேளையில் அவர்களைத் தொழில் துறைக்கும் தயார்படுத்தும் பொருட்டு பாடத்திட்டம் வரையறுக்கப்பட்டுள்ளது. இத்துணைக் கூறுகளை உள்ளடக்க வேண்டிய சூழலில், மலேசிய தமிழ்மொழிப் பாடத் திட்டமானது இந்நூற்றாண்டுக்குத் தேவையான முழுமையான மனித ஆற்றலை உருவாக்கவல்ல மேற்கண்ட கூறுகளோடு ஆக்கச்சிந்தனை, தொடர்புத்துறை திறன்கள், எதிர்காலவியல், தகவல் தொழில்நுட்பம், உலகமயச் சவால்களை எதிர்கொள்ளல் ஆகிய திறன்களையும் ஒருங்கிணைக்கின்றது. அதில் பண்பாடு தழுவிய தமிழ் கற்றல் கற்பித்தலுக்கும் சிறப்பாக வழிவகுத்துள்ளது. இதற்கு ஆரம்ப, இடைநிலைப் பள்ளிகளுக்காகத் தயாரிக்கப்பட்ட தமிழ்ப்பாடப் புத்தகங்களே சான்றாக அமைகின்றன.

<u>ஆரம்பப்பள்ளியின் தமிழ்மொழிப் பாடத்திட்டம்</u>

அனைத்தும் உலகமயமாகிக் கொண்டிருக்கும் இந்நூற்றாண்டில் தமிழ்ப் பண்பாடும் தமிழரும் காணாமல் போய்விடும் சாத்தியக் கூறுகள் நிறையவே உள்ளன. இவ்வாறான சூழலில் பல சவால்களை எதிர்நோக்கும் நம் மாணவர்கள் தங்களின் தாய்மொழிக் கல்வியைச் செவ்வனே பயிலும் வகையில் ஆரம்பப்பள்ளிகளுக்கான பாடநூல்கள்

அமைக்கப்பட்டிருக்கின்றன. மாணவர் வயதுக்கேற்ப பரிந்துரைக்கப்பட்ட கேட்டல். பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகிய மொழித்திறன்களை அடிப்படையாகக் கொண்டு பாடநூல்கள் எழுதப்பட்டுள்ளன. நாட்டுப்பற்று, இலக்கியம், இயற்கை, பண்பாடு, விளையாட்டு, நன்னெறி, தகவல் தொழில் நுட்பம், உலக மயம் ஆகிய கூறுகள் ஆரம்பப்பள்ளியின் பாடப்பொருளில் புகுத்தப்பட்டுள்ளன என்றாலும் மொழியும் பண்பாடும் மறையாமல் நிலைத்திருக்கப் பாட நூலாசிரியர்கள் பெரிதும் பங்காற்றியுள்ளனர் என்று கூறுவது மிகையாகாது.

இடைநிலைப்பள்ளியின் தமிழ்மொழிப் பாடத்திட்டம்

மலேசிய நாட்டின் கல்விச்சட்டத்திற்கேற்ப, இடைநிலைப் பள்ளிகளில் தமிழ்மொழி ஒரு கூடுதல் மொழிப்பாடமாகக் கற்பிக்கப்படுகிறது. இதற்குரிய கல்வியேற்பாடு தொடக்கப்பள்ளித் தமிழ்க்கல்வியேற்பாட்டின் வளர்ச்சியாக விரிவடைகிறது. தமிழ் வழங்கும் நாடுகளுக்கிடையே சமூக, பண்பாடு, வணிகத் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளவும் நட்புறவை வளர்த்துக்கொள்ளவும் இக்கல்வியேற்பாடு வகைசெய்கிறது. சமுதாயத் தொடர்பினை மேம்படுத்துதல், தகவல்களை முறையாகப் பெற்றுக் கையாளுதல், தமிழ்மொழியினைப் போற்றிப் பேணுதல் ஆகியவற்றில் மாணவர் சிறந்து விளங்க நல்ல தமிழறிவைப் பெறவேண்டும் என்பதே இப்பாடத்திட்டத்தின் குறியிலக்காகும். அதேவேளையில், தனி மனித ஆற்றலின் வளர்ச்சிக்கு வாய்ப்பளித்தல், இறை நம்பிக்கைமிக்க, தனக்கும் தன் குடும்பத்திற்கும் தான் வாழும் சமுதாயத்திற்கும், நாட்டிற்கும் பொறுப்புணர்வு மிக்க நற்குடிமகனை உருவாக்குதல், தன் சூழலோடு இயைந்து வாழும் நற்பண்புள்ள குடிமக்களை உருவாக்குதல் போன்ற கூறுகள் இப்பாடநூலில் இடம்பெற்றிருக்கின்றன.

கட்டுரையின் நோக்கம்

பண்பாடு தழுவிய மொழி கற்றல் மொழியின் அசல் வடிவத்தையும் ஓர் இனத்தின் அடையாளத்தையும் பேணிக்காக்கவல்லது. மலேசியத் தமிழ்ப்பாடப் புத்தகங்களில் அடிப்படை மொழித்திறன்களான கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகிய மொழித்திறன்களோடு தற்காலக் கல்வியில் காணப்படும் அனைத்துத் திறன்களையும் ஒருங்கிணைத்திருக்கிறார்கள். அவற்றைக் கற்பிக்கப் பாடத்தலைப்புகள் ஓர் ஊடகமாகத் திகழ்கின்றன. இப்பாடங்கள் எவ்வாறெல்லாம் தமிழ்ப்பண்பாட்டினையும் மொழியின் பால் ஆர்வத்தையும் விதைக்க வல்லன என்பதை எடுத்துக்காட்டுகளின் மூலம் அறியலாம். இப்பாடங்கள் வழி தமிழர்களின் சிறப்புகள், சிந்தனைகள் போன்றவை

மாணவர்களால் உய்த்துணரப்படுகிறது. பாடங்கள் இயல், இசை, நாடகம் என்று முத்தமிழில் அமைந்திருக்கின்றன. படங்கள், பாடல்கள், கவிதைகள், பனுவல்கள், நாடகங்கள் என அமைந்திருக்கும் இவற்றைப் பார்த்தும் பாடியும் வாசித்தும் மகிழலாம். நாடகங்களை மாணவர்கள் நடித்தும் மகிழலாம். அதே வேளையில், தமிழ்ப்பண்பாட்டுக் கூறுகளையும் மனதில் பதிக்க இப்பாடநூல்கள் எவ்வாறெல்லாம் வழிசெய்கின்றன, பண்பாடு தழுவியவை எத்தனை விழுக்காடு, தமிழ் மொழியணிகள் எத்தனை விழுக்காடு, அவை என்னென்ன என்பதை ஆராய்வதுதான் இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பண்பாடு என்றால் என்ன?

மனிதர்களுடைய மொழி, எண்ணங்கள், நம்பிக்கைகள், பழக்கங்கள், தடைகள், விதிமுறைகள், செயல்முறைகள், கலைகள், சடங்குகள், விழாக்கள், அடையாளச் சின்னங்கள் போன்ற அம்சங்களின் கலவையே பண்பாடு. மனிதனின் பரிணாம வளர்ச்சியில் இந்தப் பண்பாடு ஒரு முக்கியப் பங்கை வகிக்கிறது. கற்றுக்கொள்வதற்கான ஆற்றலும், தான் கற்றதை அடுத்த சந்ததியினருக்கு எடுத்துச் செல்லும் ஆற்றலும் மனிதருக்கு இயல்பானவை. இந்த ஆற்றல்களின் விளைவாக அவனுக்கு ஏற்படக்கூடிய அறிவு, நம்பிக்கை, நடவடிக்கைகள் ஆகியவற்றின் கலவையே பண்பாடு எனப்படுகிறது.

பண்பாடு என்பது உயர்ந்த நாகரிகம். கல்வியால் ஏற்படும் மேம்பாடு என்று அகராதியில் பொருள் சொல்லப்படுகிறது. சேம்பர்லேன் (2005) என்பவர், பண்பாடு என்பது வாழ்வியல் மதிப்புகள், வழக்கங்கள், பாரம்பரியம் இவற்றை உள்ளடக்கியது என்கிறார். மேலும், அது ஒரு குறிப்பிட்ட பிரிவினர் எவ்வாறு சிந்திக்கின்றனர், நினைக்கின்றனர், அவர்களுக்கிடையில் உறவாடுகின்றனர், உலகத்தைப் பற்றி முடிவெடுக்கின்றனர் என்பதைக் குறிக்கிறது என்கிறார். பண்பாடு என்பது மனிதர்களின் நடத்தை, எண்ணம், தொடர்பு, உறவுமுறை ஆகியவற்றை உள்ளடக்கியது என்று டெய்லா (1996) கூறுகிறார். நைன்-கேர்ட்(1984) என்பவரோ பண்பாடு என்பது மனிதர்களின் நடத்தை, நம்பிக்கைகள், எண்ணங்கள், மதிப்பீடுகள், அனுபவங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியது என்று குறிப்பிடுகிறார்.

கலைகள், இலக்கியங்கள், நன்னெறிகள், கற்றலில் நாட்டம் போன்றவற்றின் உன்னத நிலை; கல்வி அல்லது பயிற்சி வழி மனதை வளப்படுத்துதல் அல்லது சீர்படுத்துதல்; ஒரு

குறிப்பிட்ட சமூக இன அல்லது வயது பிரிவினரிடம் காணப்படும் பழக்க வழக்கங்கள் மற்றும் நம்பிக்கைகள் ஆகியவையே பண்பாடு என்றும் பொருள் கொள்ளப்படுகிறது.

தமிழ்ப் பண்பாடு

உலகெங்கும் வாழும் தமிழர்களின் வாழ்க்கை முறையிலும் அன்றாட பழக்க வழக்கங்களிலும், வேறூன்றியுள்ள மொழி, இலக்கியம், பாரம்பரிய கலைகள், சடங்கு சம்பிரதாயங்கள், திருவிழாக்கள், உணவு, உடை போன்றவற்றின் பிரதிபலிப்பாகும். பேசுகின்ற மொழி, இலக்கியம், இசை, நடனம், பாரம்பரிய கலைகள், நாடகம், தற்காப்புக் கலைகள், ஓவியம், சிற்பக்கலை, கட்டட வடிவமைப்பு, விளையாட்டுகள், உணவு, உடை, திருவிழாக்கள், தத்துவங்கள், சடங்கு சம்பிரதாயங்கள், கிராமியக் கலைகள், அறிவியல், தொழில் நுட்பம் போன்ற அனைத்திலுமே தமிழ்ப் பண்பாட்டின் கூறுகளைப் பார்க்கலாம்.

மலேசிய தமிழ்ப்பாடத்திட்டமும் தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகளும்

மலேசியாவின் தமிழ்மொழிப் பாடத்திட்டமானது தமிழ்ப்பண்பாட்டையும் மலேசியக் கல்வித் தத்துவத்தையும் உள்ளடக்கியுள்ளது. மேலும், தற்காலக் கல்வியில் காணப்படும் அனைத்துத் திறன்களையும் உள்ளடக்கி புதிய நூற்றாண்டுக்குத் தேவையான முழுமையான மனித ஆற்றலை உருவாக்கவல்ல திறன்களை ஒருங்கிணைப்பதோடு, நாட்டுப்பற்று குடிமையுணர்வு போன்ற கூறுகளையும் வலியுறுத்துகிறது. மேலும், தமிழ் மொழியைக் கற்கும் மாணவர்கள் அடிப்படைத் தமிழ் இலக்கணத்தை அறிந்து கருத்தைச் செம்மொழியில் வெளிப்படுத்தவும் வகைசெய்கின்றது.

தமிழ்ப் பாடப்புத்தகங்களில் காணப்படும் பாடக் கூறுகள்

கூறுகள்	**ஆரம்பப் பள்ளி**	**இடைநிலைப் பள்ளி**	**உட்பொருளாக மட்டுமே**
தமிழ்ப் பண்பாடு	13 %	13 %	14 %
தமிழ் மொழியணி	7 %	7 %	10 %
மலேசியக் கூறுகள்	12 %	12 %	8 %
தொழில் நுட்பம்/ அறிவியல்	6 %	6 %	19 %

கூறுகள்	ஆரம்பப் பள்ளி	இடைநிலைப் பள்ளி	உட்பொருளாக மட்டுமே
பொது	24 %	24 %	7 %
உடல் நலம்	6 %	6 %	15 %
உளம்/நன்னெறி	20 %	20 %	12 %
இயற்கை	12 %	12 %	3 %
எதிர்காலவியல்	1 %	1 %	5%
உலகமயம்	-	-	7%

மொழியணி மற்றும் தமிழ்ப்பண்பாட்டுக் கூறுகள் பாடங்கள் அடிப்படையில் தொல்பொருளில் இவ்வாறு பகுக்கப்பட்டிருந்தாலும், மறைபொருளாக மேலும் அதிகமான தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகள் மலேசியத் தமிழ்க்கல்வித் திட்டத்தில் அமைந்துள்ளன. அத்துடன், உலகமயத்திற்கு மாணவர்களைத் தயார் செய்யும் கூறுகளும் அதிகம் காணப்படுகின்றன. இப்பாட நூலில் துறைகள் ஒருங்கிணைக்கப்படும் அதே வேளையில் மொழித்திறன்களுக்கிடையிலான ஒருங்கிணைப்புகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆசிரியரின் கற்பித்தல் திறனுக்கேற்பவும் கற்பனைத் திறனுக்கு ஏற்பவும் நல்ல விளைபயன்மிக்க பாடங்களாக இவற்றை மாற்ற இயலும்.

<u>இலக்கியத்துறைக்கான கற்றல்பேறு</u>

பல்வேறு இலக்கிய வகைகளைப் பொருளுணர்தல்; எழுத்துப் படிவங்களை வாசித்து அவற்றுள் காணப்படும் மொழிச்சிறப்பை உய்த்துணர்தல். ஆக்கப்பூர்வமான அடிப்படையில் எழுத்துப்படிவங்களை உருவாக்குதல், மற்ற எழுத்துப் படிவங்களைப் பற்றிய தன் கருத்தைக் கூறுதல், இலக்கியங்களின் நலம் பாராட்டுதல் போன்றவை இலக்கியத்துறைக்கான கற்றல்பேறுகளாக இப்பாடத்திட்டத்தில் அமைகின்றன.
இலக்கிய நாடகங்கள், கதைகள், காப்பியங்ககள், இதிகாசங்ககள், பல்வகைச் செய்யுள்கள், கவிதைகள் பாடங்களாக அமைக்கப்பட்டிருக்கின்றன. தமிழரின் நாகரிக முதிர்ச்சியையும் மொழியின் ஆழத்தையும் நம் பண்பாட்டினையும் சுவைபட உணர்த்தியிருக்கின்றன இப்பாடங்கள். உதாரணமாக:

சோழன், கம்பர் நாடகம். அதில் வரும் கதைப்பாத்திரங்களான சோழமன்னன், கம்பர், ஒட்டக்கூத்தர், சடையப்பவள்ளல் இவர்களின் பண்புநலன்களை மதிப்பிட வகைசெய்கிறது. இராமாயணம், மகாபாரதம், நள தமயந்தி போன்ற காவியங்கள் மொழி வளம், அக்காலத் தமிழர்களின் சிறப்புகள், சிந்தனைகள், மன்னர்களின் ஒப்பற்ற ஆட்சிமுறைகள் போன்றவற்றைப் போற்றவும் உய்த்துணரவும் வழிசெய்கின்றன. மேலும், அவற்றையொட்டிச் சொந்தக்கருத்தைக் கூறவும் உயர் சிந்தனைத் திறன்களைத் தூண்ட வல்லதாகவும் அமைகின்றன.

சிலப்பதிகாரம், மணிமேகலை, கம்ப இராமாயணம், நளவெண்பா போன்ற பண்டைய காப்பியங்களில் கையாளப்பட்ட மொழிச்சிறப்பை உய்த்துணர முடிகிறது. பல்வகைச் செய்யுள் பகுதியில் தரப்பட்ட மூதுரை, திருமுறை, நாலடியார், அறநெறிச்சாரம் பாடல்கள் மாணவர்கள் பல்வேறு இலக்கிய வகைகளைப் பொருளுணரவும் போற்றவும் வகைசெய்கிறது. தவிரவும், கதைமாந்தர்களின் பண்பு நலன்களை மதிப்பிடுதல், தூண்டல் வினாக்கள் போன்றவை சிந்தனைத் திறன், பண்புக்கூறுகள் போன்றவற்றை அடையும் வண்ணம் சிறப்புற உருவாக்கப்பட்டுள்ளன.

வீரபாண்டிய கட்டபொம்மன் வரலாறு, நம் முன்னோர் உயிரினும் மேலாக மதித்த மானத்திற்கும் வீரத்திற்கும் எடுத்துக்காட்டாக விளங்குகிறது. கடையெழு வள்ளல்களான சிபி சக்ரவர்த்தி, குமணன், பாரி, அதியமான், கிள்ளி வளவன் அவர்களைப்பற்றிய சிறப்புக் கதைகளும் விடுபடவில்லை என்றே கூறவேண்டும். கொடையில் சிறந்த கர்ணனைப் பற்றி அதிகமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இப்பாடங்கள் நம் முன்னோரின் சிறப்பைக் கூறுவதோடு நம் முன்னோர்கள் எவ்வாறான பாரம்பரியத்தைக் கொண்டிருந்தனர் என்பதையும் நம் இளைய தலைமுறையினர் உணரச் செய்கின்றன. மாணவர்கள் அவர்களை முன்மாதிரியாகக் கொள்ளவும் வழியமைக்கின்றன.

<u>பாடங்களில் காணப்படும் திறன்களும் பண்பாடும்</u>

எதிர்காலவியலும் சிக்கல் களைதலும் -

எதிர்காலவியல் என்பது கடந்த கால, நிகழ்கால, எதிர்கால நடப்புகளையும் சிக்கல்களையும் உணரும் வகையில் மேற்கொள்ளப்படும் கற்றல் அணுகுமுறையாகும். இதன் வழி மாணவர் நடந்த மற்றும் நடக்கவிருப்பதை அனுமானித்து விளைவை ஊகித்து மாற்றுத் திட்டங்களை உருவாக்குதல் ஆகும். சிந்தனைக்கு, எதிர்காலவியல் போன்ற தலைப்பின் கீழ் பாடநூலில் கொடுக்கப்பட்டுள்ள கட்டுரைகள், கேள்விகள்,

கூற்றுகள் மாணவர்கள் ஏரணமாகச் சிந்திப்பதற்கும் தமிழர் பண்பாட்டினை ஆழமாக அறியவும் வழிவகுக்கின்றன. பொருத்தமான, ஏற்புடைய, மாறுபட்ட கருத்துகள், விளக்கங்கள் கூறுவதற்கும் இப்பாடத்திட்டம் வழிசெய்கிறது. அதற்கான எடுத்துக்காட்டுகள் சிலவற்றைப் பார்ப்போம்.

தமிழ், இந்திய நாகரிகங்கள் - பழைமையும் தொன்மையும் வாய்ந்த இந்திய நாகரிகம் பற்றிய பாடம் இப்பாடத்திட்டத்தில் இடம்பெற்றுள்ளது. இந்திய நாகரிகம் எவ்வாறு கம்போடியாவிற்குப் பரவியிருக்கக் கூடும் என்ற கேள்வியும், ஏன் இப்பொழுது அங்கோர் வாட் பாழடைந்து கைவிடப்பட்டுக் கிடக்கிறது என்ற கேள்வியும் மாணவர்களின் சிந்தனையைத் தூண்டும் கேள்விகளாக அமைந்திருக்கின்றன. மேலும், உலகில் வேறு எந்தெந்த நாடுகளுக்கு இந்திய நாகரிகமும் பண்பாடும் பரவியிருக்கிறது என்பதை மொழி, வழிபாட்டுத்தலங்கள், உணவுமுறை, கட்டடக்கலை, சமயம், பழக்க வழக்கம், உடை, வரலாறு சான்றுகளோடு ஆராய்க என்ற தூண்டல், ஆழமானதொரு சிந்தனையைப் பத்திக்கவல்லது. இதன்வழி, நம் பண்பாட்டின் வேரையும் அது பரவிக்கிடக்கும் ஆழத்தையும் உணர்ந்து பெருமைகொள்வதோடு அதனைப் போற்றிக் காக்கவும் முனைவார்கள். “எதிர்காலத்தில் இது போன்ற நிலை நம் நாட்டிலும் ஏற்படுமா?”, ஏற்படாமல் இருக்க என்ன செய்ய இயலும்?” போன்ற வினாக்கள் மாணவர்களின் தூரநோக்குப் பார்வைக்கு நல்ல அடித்தளமாகவும் அமைகின்றன.

மொரிசியஸ் மக்கள் தமிழை மறந்திருப்பதற்கான காரணங்களை ஆராய்ந்து பட்டியலிடுதல், அங்குத் தமிழ் மொழியையும் பண்பாட்டினையும் வளர்க்க மேற்கொள்ளத்தக்க திட்டங்களைக் கூறுதல் போன்ற அணுகுமுறைகள் மாணவர் பல்திற ஆற்றல்களைப் பெற வாய்ப்பளிக்கும். ஆய்வுச் சிந்தனை, ஆக்கச் சிந்தனை இவற்றைத் தூண்டுவதாகவும் அமையும். எதிர்காலத்தில் மாணவரின் அன்றாட வாழ்வுக்கும், தொழிலில் ஏற்படும் சிக்கல்களைக் களைவதற்கும், முடிவெடுப்பதற்கும் இச்சிந்தனைத் திறன்கள் துணைபுரியும்.

திருவிழாக்கள், பெருநாட்கள் - தீபாவளி வந்தாச்சு, சித்திரைப் பௌர்ணமி, தைப்பூசம், பொங்கல் போன்ற சிறப்பு நாட்கள் பாடத் தலைப்புகளாக வந்திருக்கின்றன. அதில் நம் பண்பாட்டினைப் பிரதிபலிக்கும் அழகழகான படங்களும் இடம்பெற்றிருக்கின்றன. பக்த கோடிகள். அர்ச்சனைச் சீட்டு, அன்னதானம், பூச நட்சத்திரம், காணிக்கை போன்ற பண்பாட்டுச் சொற்களும் கையாளப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது. படிவம் 1 பாடப்புத்தகத்தில் தைப்பொங்கல் என்ற கவிதை இடம்

பெற்றிருக்கிறது. அதில் பொங்கலைக் கொண்டாடும் விதம் கூறப்படுகிறது. கவிதையை உய்த்துணரும் தருணத்தில் தேவையான பொருட்களான அலங்கரிக்கப்-பட்ட புதுப்பானை, செங்கல், விறகு, மஞ்சள் கொத்து, அரிசி, சர்க்கரை, நெய் போன்ற பொருட்கள் கூறப்படுகின்றன. வாசலில் போடப்படும் கோலம், கட்டப்படும் தோரணம், மாவிலை, கரும்பு பற்றியும் அறியமுடிகிறது. மேலும், பொங்கலுக்கு முதல் நாளான போகிப்பண்டிகை பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. பழையன கழிதலும் புதியன புகுதலும், மாடு கன்று போற்றுதல், கூட்டுப் பொங்கல், விருந்தினரைச் சென்று காணல் (காணும் பொங்கல்) போன்ற சொற்கள் நம் பண்பாட்டினைக் கண்ணாடியைப்போல் காட்டவல்ல பல தகவல்களைக் கூறுகின்றன. மேலும், இப்பாடம் பண்பாட்டினையும் மொழியையும் பிரிக்க இயலாது என்பதையும் உணர்த்தி நிற்கின்றது.

தொடர்ந்து, “பொங்கல் போன்ற திருநாட்கள் எதிர்காலத்தில் எவ்வாறு கொண்டாடப்படும்?”, “எதிர்கொள்ளும் சிக்கல்களை எவ்வாறு களைவது?” என்ற கேள்விகள் மாணவர்களின் மனதிலே எதிர்காலம் பற்றிய சிந்தனையைத் தூண்டவல்லதாகவும் வரப்போகும் சிக்கல்களைக் களைவதற்கான வழிவகைகளை ஆராயவும் வகை செய்கிறது. வந்தபின் வருந்துவதைவிட வராமல் காப்பதே மேல் என்பதை உணர்த்தி காலத்திற்கேற்ற அறிவுப்பண்பாட்டைக் கொண்ட சால்புடைய மனித ஆற்றலைத் தோற்றுவிக்கக் கூடியதாய் அமைந்துள்ளது இப்பாடம்.

கவிதை நடையில் உளம் ஆன்மீகம் சார்ந்த கூறுகளும் தமிழர் வாழ்வியலும் -

காணி நிலம் வேண்டும் என்ற பாரதியாரின் பாடல் படிவம் 3 பாடப்புத்தகத்தில் இடம்பெற்றிருக்கிறது. இக்கவிதை அமைதியான வாழ்வுக்குக் காணி நிலமே போதும் என்ற பொருளை உணர்த்தி நிற்கின்றது. காணி நிலம், அதன் அருகே கேணி, சுற்றிலும் பத்துப் பதினைந்து தென்னை மரங்கள், இளம் தென்றல், நிலாவொளி முற்றத்திலே, அங்கே கத்தும் குயிலோசை கேட்க வேண்டும் என்ற பொருளைக் கொண்டது. இப்பாடம், கவிதையின் மொழிநடையை உய்த்துணரச் செய்கிறது. குயிலோசையைக் கேட்கவேண்டும், இளம் தென்றல் வீச வேண்டும் என்றால் சுற்றிலும் பசுமை நிறைந்திருக்கவேண்டும் என்ற பொருளையும் உணர்த்துகிறது. “அந்தக் காட்டு வெளியிலே அம்மா நின்றன் காவல் வேண்டும்” என பாரதியார் சக்தியைப் பார்த்துப் பாடுவதாகவும் அமைந்த இந்தப் பாடல் இயற்கையோடு இயைந்த வாழ்வை நம் முன்னோர் எவ்வாறு அனுபவித்திருக்கிறார்கள், விரும்பினார்கள் என்பதையும் இறையருளை வேண்டி வாழ்ந்த அமைதியான வாழ்வையும் படம் பிடித்துக் காட்டுகிறது.

‘காணி நிலம்’, ‘நிலாவொளி முற்றத்திலே’ “அம்மா” (பராசக்தி) போன்ற சொற்கள் நமக்கு மட்டும் சொந்தமான சொல் அன்றோ?

<u>உலகமயக் கூறும் பழந்தமிழரின் உலக நோக்கும்</u>

படிவம் 4 பாடப்புத்தகத்தில் இந்தத் தலைப்பில் ஒரு பாடம். இது இலக்கியம் காட்டும் பழந்தமிழர் வாழ்வியல் உண்மைகளைக் கூறுகிறது. தமிழரின் பரந்து விரிந்த உலகக் கண்ணோட்டம் நம்மை வியக்கச்செய்கிறது. அமெரிக்க எழுத்தாளர் வெண்டல் வில்கி என்பவர் ஒரே உலகம் (One World) எனும் நூலினை எழுதியுள்ளார். அந்நூலில் ‘எதிர்காலத்தில் நம் சிந்தனைகள் உலகை அளாவியதாக இருக்கவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். இந்தக் கருத்து உயர்வானதொன்று என்று அமெரிக்கர்கள் பாராட்டுகின்றனர். ஆனால் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே பழந்தமிழ்ப் புலவர் கணியன் பூங்குன்றனார்,

‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ என்று உலக மக்கள் அனைவரையும் ஒரே குடும்பமாக எண்ணிப் பாடிய உண்மையினை அறிந்தால் எத்துணை மதிப்பினையும் சிறப்பினையும் தமிழர்பால் கொண்டு பாராட்டுவர். இது போன்ற பொன்மொழிகளின் சிறப்புகளை நம் சந்ததியினர் அறிய வழிவகுக்கிறது மலேசிய தமிழ்ப் பாடப்புத்தகங்கள். மேலும்,

யாதானும் நாடாமல் ஊராமால் என்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு (397)

என்ற குறளில் தெய்வப் புலவர் திருவள்ளுவர், கற்றவர்கள் உலகிற்கே உரியவர்கள் என்கிறார்.

பாரதியாரோ,

வயிற்றுக்குச் சோறிட வேண்டும் - இங்கு
வாழும் மனிதருக் கெல்லாம்
பயிற்றிப் பலகல்வி தந்தே - இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்

என்று, உலகில் வாழும் மக்கள் அனைவரும் பசியற்று வாழ்ந்து, கல்வி கற்கும் வசதி பெற்று, அதனால் உலகை உயர்த்தும் திருத்தொண்டில் தலைப்படவேண்டும் என்கிறார். இவ்வாறு காலந்தோறும் தமிழ்ச் சன்றோர்கள் பரந்துபட்ட உலக நோக்கிலேயே நின்று உலகுயிர் அனைத்யையும் ஓரினமாகக் கண்டு வாழ்வாங்கு வாழ்ந்த இவ்வுண்மைகளை இப்பாடல்கள் எடுத்தியம்புகின்றன. இது போன்ற கவிதைகளின் மொழிச்சிறப்பு,

குறளடிகளின் தெய்வீகம் இளம் உள்ளங்களிலே நம் பண்பாட்டினைப் பதிப்பதில் நிச்சயம் வெற்றி பெற்றிருக்கும். அதற்கு இப்பாடத் திட்டம் வழிகாட்டுகிறது என ஆணித்தரமாய்க் கூறலாம்.

உடல் நலம் சார்ந்த கூறுகள் - உடல் நலம் என்றாலே உணவு மற்றும் உடற்பயிற்சி பற்றியதுதான். அவ்வகையில் நலம் தரும் தமிழர் உணவுகளைப் பேசுகின்றன மலேசிய பாடப்புத்தகங்கள். தமிழர் உணவு வகைகளும் அதன் பெயர்களும் இன்று மறைந்து வருகின்றன என்றே சொல்லலாம். இச்சூழலில் தமிழர் பாரம்பரிய உணவுகளை அறிமுகப்படுத்துவதோடு ஆரோக்கியமான வாழ்விற்கும் வித்திடும் வகையில் பாடத்திட்டம் அமைக்கப்பட்டிருக்கிறது. எடுத்துக்காட்டாக, வெந்தயக் குழம்பு, வெந்தய தோசை, வெந்தயக் களி போன்றவை ஞாபகப்படுத்தப்படுகின்றன. கற்கும் குழந்தைகளுக்கு இவை என்னவென்று தெரியாவிட்டாலும் பாடங்கள் வழி அறிமுகம் செய்து வைத்துவிட்டால் தங்கள் தாய், பாட்டிகளிடம் கேட்டுத் தெளிவார்கள். நலம் தரும் நாட்டு மருத்துவம், சித்த மருத்துவம் ஆகியவற்றையும் நினவூட்டுகிறது. துளசி, வேப்பிலை, வெற்றிலை, மஞ்சள், வில்வம், போன்ற இயற்கை பொருள்களின் பெயர்களும் மகிமையும் தமிழர் வாழ்வில் ஒன்றிவிட்ட பாரம்பரியமும் மறக்கப்படாமல் இருக்க இப்பாடப்புத்தகங்கள் வழிவகுக்கின்றன. யோகாசனம், சித்த மருத்துவம், சித்தர்கள் பற்றியும் பாடங்களில் குறிப்படப்பட்டுள்ளன.

<u>இயற்கை கூறுகளும் தமிழர் வாழ்வோடு இணைந்துவிட்ட சொற்களும்</u>

தமிழர் வாழ்வில் ஒன்றிய தாவரங்களுள் வாழைமரமும் ஒன்று. வாழை இலை சாப்பாடு, வாழையடி வாழையாக வாழ்க என்ற வாழ்த்துரை இவற்றை நம்மிடமிருந்து பிரிக்க இயலாது என்பதையும் இப்பாடங்கள் உணர்த்துகின்றன. ஈடில்லா துளசி, செம்பருத்தி, தாமரை, தென்னை, கரும்பு, மாவிலை மற்றும் சித்த மருத்துவம் கூறும் இயற்கை மருந்துகள், உழவு, மாடு, கன்று, மயில் ஆகிய உயிரினங்களும் இடம்பெற்றுள்ளன. இறை பேராற்றல் என்ற பாடம் இந்த இயற்கையின் சுழற்சி, கோள்கள், இவற்றின் இயக்கம், அதனை இயக்குபவர் யார் என்ற புதிர்களுக்கு,

வையம் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காக

என்று கூறும் பொய்கை ஆழ்வாரின் நாலாயிரத் திவ்யப்பிரபந்தம், உலகை இயக்கும் பேராற்றல் இறைவனே என அழகுற விளக்கி நிற்கின்ற காட்சியைத் தெளிவுறுத்துகிறது.

மொழியணி

நம் தமிழ் மொழியில் நெடுங்காலமாகச் சிறந்து விளங்கும் பழமொழிகள், உவமைத்தொடர்கள், மரபுத் தொடர்கள், இணைமொழிகள் இவற்றைப் பொன் போல போற்றவேண்டும். உதாரணமாக, 'மணியும் ஒலியும் போல', 'பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெறும்' போன்ற பொன் மொழிகள் நம் பண்பாட்டிற்கு மட்டுமே சொந்தமானவை. இவற்றை இலக்கியப் பகுதியில் சேர்த்து மாணவர்கள் மொழிச் சிறப்பினைப் பாராட்டவும் வழிவகுத்திருக்கிறார்கள்.

தமிழ் மொழியின் சிறப்பு

ஒரு பண்பாட்டின் அடையாளத்திற்கு மொழியே முக்கியமாக இருக்கிறது. தமிழ் நம் தாய்மொழி; தொன்மையானது. அதன் தொன்மையும் ஆழத்தையும் அகலத்தையும் எழிலையும் ஓரளவுக்கேனும் இளைய தலைமுறையினர் அறிந்து போற்றவேண்டும் என்பதில் பாடத்திட்டக் குழுவினர் கவனமாய்ச் செயல்பட்டிருப்பதும் தெரிகிறது. தமிழ், தமிழ் எனக் கூற அது அமிழ்து என ஒலிக்கும் எனக்கூறி மகிழ்ந்தவர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். இதைத் தேன்தமிழ், தீந்தமிழ் என்ற அடைமொழிகளே மெய்பிக்கும். வைணவ சமயக் குரவராகிய ஆழ்வார்கள் பலரும் வண்தமிழ், சங்கமலித் தமிழ், வியன் தமிழ், சங்கத் தமிழ், கோதைவாய்த் தமிழ், திருவரங்கத் தமிழ், நா மருவு தமிழ் எனப் பலவாறாகப் போற்றியிருப்பது இப்பாடங்கள் வழி தெரியவருகிறது.

தன்னைப் 'பித்தன்' என்று சுந்தரமூர்த்தி நாயனார் வைதபொழுது, இறைவன் பெரிதும் மகிழ்ச்சியடைந்தாராம். காரணம் தமிழால் வைதான் என்பதே. கொல்லிமலைக் காட்டிலுள்ள ஆளிடம் தேன் கொண்டு வரும்படி பணித்தேன். அவன் மறுநாள் வெறுங்கையுடன் வந்ததால் கோபித்தேன். அவன் பேசினான். "மலைக்கு நடந்தேன். பலவிடங்களில் அலைந்தேன். பாறைத்தேன் கண்டு மலைத்தேன். ஒரு கொடியைப் பிடித்தேன். சென்று கலைத்தேன். சட்டியில் பிழிந்தேன். நன்றாக வடித்தேன். கண்டு மகிழ்ந்தேன். சிறிது குடித்தேன். களித்தேன். களைத்தேன். அயர்ந்தேன். மறந்தேன். இன்று காலை எழுந்தேன். விரைந்தேன். நடந்தேன். வந்தேன். சேர்ந்தேன்" என்றான்.

நானும் இதைக்கேட்டு மகிழ்ந்தேன். என்னே தமிழின் இனிமை என்கிறார் கி.ஆ.பெ விசுவநாதம். தமிழின் இனிமையை உணர்த்தி மாணவர்களின் ஆர்வத்தைத் தமிழின் பால் ஈர்க்க இப்பாடங்கள் வழிகோலும் என்று உறுதியாகக் கூறலாம்.

தமிழர் பண்பாட்டுச் சொற்கள்

கோலம், பரதம், கபடி ஆட்டம், சிலம்பம், வேப்பிலை, வாழையிலை, சம்மணமிட்டு அமர்தல் போன்ற பண்பாட்டுச் சொற்கள் இடம்பெற்றிருக்கின்றன. மும்மன்னர்கள், அவர்களின் தலைநகர்கள், பழந்தமிழர் வாழ்க்கைமுறை அக நானூறு, புறநானூறு, சங்க காலம் ஆகியவை பற்றியும் சொல்லப்பட்டிருக்கின்றன.

சமயக் குரவர்கள் நால்வர்

தமிழ் மொழியையும் திருமுறை பாடல்களையும் பிரிக்க இயலாது. அவ்வகையில் திருநாவுக்கரசர், திருநாவுக்கரசர் பாடிய 'மாசில் வீணையும் மாலை மதியமும்' என்ற பாடல், பாடலின் இனிமையும் பக்தியும் நிறைந்த பொருள் இவை யாவும் தமிழ்ப்பாடத்திட்டத்தில் அற்புதமாய் அமைந்திருக்கின்றன. திருஞானசம்பந்தர், சுந்திரமூர்த்தி சுவாமிகள், மாணிக்கவாசகர் ஆகிய சமய ஆசிரியர்கள் பற்றிய பனுவல்களும் அவர்கள் பாடிய தமிழிசைகளும் கூறப்பட்டிருக்கின்றன.

வாழ்நாள் கற்றலுக்கு அடித்தளம் அமைக்கிறது.

திருக்குறள், விவேக சிந்தாமணி, திருமுறை, மூதுரை, நாலடியார், நாலாயிரத் திவ்விய பிரபந்தம், அறநெறிச்சாரம், திருவருட்பா, நள வெண்பா, சிலப்பதிகாரம், மணிமேகலை, கம்ப இராமாயணம், நன்னூல் இவற்றிலிருந்து செய்யுளடிகளையும் பாடல்களையும் தந்து அவற்றிற்கான விளக்கங்களையும் தந்திருக்கிறது. இவற்றின் சாரங்களைக் கற்கும் மாணவர்கள் மேலும் இந்நூல்களத் தேடி வாழ்நாள் முழுதும் கற்கவும் ஆர்வமூட்டுகிறது இப்பாடத் திட்டம்.

பண்பாட்டினை விதைப்பதால் ஏற்படும் நன்மைகள்.

1 வாழ்வியல் நெறிகளைக் கற்றுத் தருகிறது

2. நன்மை தீமைகளைப் புரியவைக்கிறது

3. குடும்ப அமைப்பைப் புரியவைக்கிறது
4. நேர நிர்வாகத்தைக் கற்றுத்தருகிறது
5. பேசும் மொழியை நிர்ணயிக்கிறது
6. பிறருடன் எப்படி நல்லிணக்கதுடன் வாழ்வது என்பதைச் சொல்லித்தருகிறது
7. ஆண் பெண் உறவுகளை வரையறுக்கிறது
8. உணவு வழக்கங்களைக் கூறுகிறது
9. அதிகாரம், தலமைத்துவம் அதனை மதித்தல் ஆகியவற்றை உணர்த்துகிறது
10. நகைச்சுவையானவை யாவை என்பதைப் புரியவைக்கிறது
11. சமயத்தின் பங்கை வலியுறுத்துகிறது.
12. ஆடை அணிகலன்களை விளக்குகிறது
13. ஒரே பண்பாட்டுக் குழுவினரிடையே 'நாம்' எனும் ஒரு குழு உணர்வைத் தருகிறது.
14 முன்மாதிரியானவர்களைப் பின்பற்ற வழிகாட்டுகிறது.
15. ஆழ் மனதின் வெறுமைகளை நிரப்புகிறது.
16. உணர்வோடு கலந்த கலைகளை உய்த்துணரும் ஆத்ம திருப்தியைத் தருகிறது
17. பாரம்பரியத்தின் சிறப்பு, ஆழம், மதிப்புகள் இவற்றைத் தெரிவித்து இளைய சந்ததியினர் தவறான வழியில் செல்வதைத் தடுக்கிறது.
18. பண்பாட்டின் சிறப்புகளைக் கட்டிக் காக்கும் மு¨னைப்பைத் தருகிறது.
19. பின்பற்ற தடம் அமைக்கிறது.
20. மனம் அமைதிபெற வழிவகுக்கிறது.
21 உடல், உள நல்வாழ்விற்கு வழிகாட்டுகிறது
22. சார்ந்திருக்க ஒரு அமைப்பு இருக்கிறது என்ற மனோ¨தா¢யத்தைத் தருகிறது
23. மாந்தரை எதிர்காலத்திற்குத் தயார்படுத்துகிறது.

இப்பட்டியல் இன்னும் நீளமானது. காலதிற்குக் காலம் மாறும் தன்மையுடையது.

இதனாலேயே, இளையோரை வழிப்படுத்துவது என்பது கல்வியின் முக்கியப் பணியாக அமைகிறது. அப்பணியை மலேசிய தமிழ்ப்பாடத்திட்டப் பிரிவினர் மிகச் சிறப்பாகச் செய்துள்ளனர். கற்றலுக்கும் கற்பித்தலுக்கும் பாடநூல் ஒரு கருவியே. ஆயினும், மாணவர்கள் நிறைந்த பயனைப் பெற வேண்டுமாயின், திறமையும் அனுபவமும் வாய்ந்த ஆசிரியர்களால் திட்டமிட்டுச் செய்யப்பட்ட இப்பாடநூல்களைத் திறம்பட பயன்படுத்தினால் மாணவர்கள் அடையவேண்டிய குறியிலக்குகளுக்கு அவை நிச்சயம் துணை செய்யும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

பண்பாடு தழுவிய மொழிக்கற்றலில் பாரம்பா¢யம் காக்கப்படுகிறது; பண்பாட்டுச் சொற்கள் மறையாமல் நின்று பொருள் தருகின்றன; மொழியும் வளர்கிறது. பண்பாடு சார்ந்த இலக்கியமாக இருப்பின் அது மொழிக் கற்றல் கற்பித்தலுக்கு இரட்டிப்பு நன்மையைத் தருகிறது என்பது திண்ணம். பண்பாடு சார்ந்த மொழிக்கற்றல் கற்பித்தலில் மொழியைக் கற்கும் தருணத்தில் பண்பாட்டினையும் மறையாமல் பாதுகாக்க இயலுகிறது. மொழியையும் அது சார்ந்த பண்பாட்டினையும் பிரித்துக் கற்க இயலாது. அவ்வாறு கற்க நேர்ந்தாலும் அது காகித மலருக்கு ஒப்பானதே.

பண்பாட்டுக்கூறுகளை மொழி வழியாகவும், மொழியைப் பண்பாட்டுக் கூறுகள் வழியாகவும் கற்கலாம். பண்பாடு நிறைந்த மொழித்திறனே எதிர்காலத்தில் அன்றாட வாழ்வில் தகவல்களைச் சீர்தூக்கிப் பார்த்து, சூழலுக்கு ஏற்பத் தரமான மொழியில் கருத்துகளை வெளியிட உதவும்.

<u>முடிவுரை</u>

உலகமயச் சவால்களை எதிர்கொள்ளத்தக்க, தமிழ் மொழியையும் தமிழ் பண்பாட்டினையும் பாரம்பரியத்தையும் தற்காத்து அது கால வெள்ளத்தால் அடித்துச் செல்லாமல் காக்கவல்ல முழுமையான தமிழ் மாந்தனை உருவாக்கும் திறன்களை ஒருங்கிணைத்திருக்கிறது மலேசிய தமிழ்ப் பாடத்திட்டம்.

மேற்கோள்கள்:

1. தமிழ்மொழி பாட நூல் ஆண்டு 1 முதல் 6 வரை
2. தமிழ்மொழி பாட நூல் படிவம் 1 முதல் 5 வரை
3. ஆசிரியர் வழிகாட்டி நூல் படிவம் 1 முதல் 5 வரை
4. கே.பி.எஸ்.எம். தமிழ்மொழி பாடத்திட்டம்
5. இடைநிலைப்பள்ளிகளுக்கான இலக்கண இலக்கிய விளக்கவுரை
6. ஆரம்பப் பள்ளிகளுக்கான இலக்கண இலக்கிய விளக்கவுரை

தமிழ் கற்றல் கற்பித்தலில் தகவல் தொடர்புத் தொழில் நுட்பம் , சமூகக் கட்டமைப்பு வலைகளின் வளமைகளும் பயன்பாடும்.

இல. வாசுதேவன்
மலேசியா.

முன்னுரை :

தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தின் வளமை, உலகமயமாதலின் கட்டமைப்பில் விரிந்து பல எல்லைகளைக் கடந்து விட்டது. இந்நிலை சாத்தியமானதில் இணையத்தின் பங்களிப்பு அளப்பறியது. அதிநவீன தகவல் தொடர்புத் தொழில் நுட்பமும் பல்லூடகத்தின் ஒருங்கிணைப்பும் தமிழ் மொழி கற்றல் கற்பித்தலில் புத்தாக்கச் சிந்தனையையும் புதிய அணுகுமுறைகளையும் ஊக்குவிக்கின்றன.

இன்று, இணையத்தில், தமிழ் ஒருங்குறி எனும் யூனிகோட் பயன்படுத்தி விரல் சொடுக்குப் போடும் நேரத்தில் தேடுபொறிகளின் மூலம் தகவல்களைத் திரட்டிவிட இயலும். அதுபோல் பிரபல சமூகக் கட்டமைப்பு வலைகளான, வலைப்பூ (Blog), ஃபேஸ்புக் (Facebook), டிவீட்டர்(Twitter) எனும் குறுஞ்செய்தியோடைகளில் மிகச் சுலபமாகத் தமிழில் புழங்கவும் முடியும். இருப்பினும், மலேசியச் சூழலில், தமிழாசிரியர்களிடையே கற்றல் கற்பித்தலுக்காண முன்னேற்பாடுகளில் இணையத்தில் தமிழ் ஒருங்குறி, சமூக கட்டமைப்பு வலைகள் போன்றவற்றின் பயன்பாடு எவ்வளவு தூரம் கடந்துள்ளது எனும் வினாவுக்கு விடை காணும் வகையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது.

சமூகக் கட்டமைப்பு வலையிலிருந்து கல்வி கட்டமைப்பு வலையாகும் செல்நெறி:

சமூகக் கட்டமைப்பு வலையிலிருந்துதான் கல்வி கட்டமைப்பு வலை பரிணமிக்கிறது.இவ்விரு கட்டமைப்புகளும் அடிப்படையில் ஒன்றெனினும் அதன் நோக்கங்கள் வெவ்வேறானவை. கல்வி கட்டமைப்பு வலையானது கல்வித் துறைச் சார்ந்ததாகும். அவ்வாறு கல்வி கட்டமைப்பு வலை வழி வளப்படுத்தப்படும் குழுமம், வலை கட்டமைப்பு உருவாக்கத்திற்குப் பிறகு இலக்கு நோக்கி பரிணமிக்கப்படுதல் அவசியமாகிறது. அதன் வளர்ச்சிக்கும் விளைபயன்மிக்க மாற்றங்களுக்கும் போதிய கால அவகாசமும் தொடர்ந்த ஒருங்கிணைக்கப்பட்ட கூட்டுமுயற்சியும் தேவைப்படுகிறது.

தமிழ்ச்சமூக கல்வி கட்டமைப்பு வலையின் நீடித்த தொடர் நடவடிக்கைகளுக்கு அடித்தளமாக விளங்குவன இரு கூறுகளாகும். ஒன்று அதன் நம்பகத்தன்மை; மற்றொன்று இலக்கு நோக்கிய செயல் நடவடிக்கைகளாகும். மேலும், கல்வியியல் கட்டமைப்பு வலையின் நோக்கங்களும் தெளிவாக வரையறுக்கப்படுதல் முக்கியம். தமிழ்க்கல்வி கட்டமைப்பின் இயல்பு தன்மையை உணர்ந்து செயல்பட்டால் அதன் வளர்ச்சிக்குத் துணைபுரியும்.

சமூகக் கட்டமைப்பு வலை போன்ற நவீன தகவல் தொடர்பு தொழில் நுட்பங்களில் தமிழ்ப்பள்ளி ஆசிரியர்களின் ஈடுபாடு:

தகவல் தொடர்பு தொழில் நுட்பத்தின் பலம் தகவல் பகிர்வில்தான் உள்ளது. கல்வி கட்டமைப்பு வலையின் பலமோ அதனை நிர்வகிக்கின்ற ஆசிரியர்களிடம்தான் உள்ளது. மின்தமிழால் கல்வி கட்டமைப்பு வலை விரிவாக்கதை வளப்படுத்த மலேசியத் தமிழாசிரியர்கள் இன்னும் முனைப்பு காட்ட வேண்டும்.

ஆய்வு முறைமை / ஆய்வுத் தளங்கள்:

தமிழ் கற்றல் கற்பித்தலில் சமூக / கல்வி கட்டமைப்பு வலை பயன்பாட்டில் ஆசிரியர்களின் நிலை, நிலவும் சவால்களை அடையாளங்காணவும் அவற்றைத் தீர்க்க மேற்கொள்ளப்படவேண்டிய வழிகளைப் பரிந்துரைக்கவும் ஓர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வு மலேசியாவில் ஜோகூர் மாநிலத்தில் உள்ள மூவார், குளுவாங், சிகாமட், கூலாய், ஜோகூர் பாரு, கூலாய், கோத்த தீங்கி ஆகிய மாவட்டங்களில் பல்வேறு நிலைகளில் தமிழ் கற்றல் கற்பித்தலை மேற்கொண்டுவரும் 169 ஆசிரியர்கள் மத்தியில் மேற்கொள்ளப்பட்டு தரவுகள் பெறப்பட்டன. இந்த ஆய்வில் பங்கெடுத்த ஆசிரியர்களுல் 21 பேர் அல்லது 12.4 விழுக்காட்டினர் ஆண்களும், 148 பேர் அல்லது 87.6 விழுக்காட்டினர் பெண்களும் ஆவர். அவர்களுல் 120 பேர் (71.01%) ஆரம்பப் பள்ளிகளிலும் மேலும் 49 பேர் (28.99%) இடைநிலைப்பள்ளியிலும் பணியாற்றுகின்றனர்.அவர்களின் கல்வித் தகுதியானது : எஸ்பிஎம் /எஸ்திபிஎம் 24 பேர்(14.2 %), பட்டயக்கல்வி 50 பேர்(29.6%), இளங்கலை 91 பேர்(53.8%) மற்றும் முதுகலை 4 பேர் (2.4 %) ஆகும்.

ஆய்வு வினாத்தாள்:

ஆசிரியர்களின் அடிப்படை விபரங்களைத் தவிர்த்து, தகவல் தொடர்பு தொழில் நுட்பவியல், சமூக / கல்வி கட்டமைப்பு வலை தொடர்பான 50 கேள்விகள் சேர்த்துக்

கொள்ளப்பட்டன. இவற்றைத் தவிர்த்து சமூக / கல்வி கட்டமைப்பு வலை பயன்பாட்டில் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் சவால்களைப் பற்றி எழுதவும் அதற்கான வழிவகைகளைப் பரிந்துரைக்கவும் இரு திறந்த முடிவு கேள்விகள் வழங்கப்பட்டன.

பகுத்தாய்வு:

இந்த ஆய்விற்கான தரவுகள் அனைத்தும் 'SPSS Version 19.0 மென்பொருளைக் கொண்டு பகுத்தாயப்பட்டன.

அட்டவணை : 1

ஆசிரியர்களின் கற்றல் கற்பித்தல் அனுபவம்

	அனுபவம்	எண்ணிக்கை	விழுக்காடு
1.	< 2 ஆண்டுகள்	27	16.0
2.	2 - 5 ஆண்டுகள்	40	23.7
3	6 - 10 ஆண்டுகள்	54	32.0
4	11 - 15 ஆண்டுகள்	27	16.0
5	> 16 ஆண்டுகள்	21	12.4
	மொத்தம்	169	100.0

அட்டவணை 1-இல் குறிப்பிட்டுள்ளபடி, 16.0 விழுக்காடு ஆசிரியர்கள் 2 ஆண்டுக்கும் குறைவான கற்றல் கற்பித்தல் அனுபவம் பெற்றுள்ளனர். 2 இருந்து 5 ஆண்டுகள் அனுபவம் பெற்றவர்கள் 40 பேர் (23.7%).ஆசிரியர்களில் 54 பேர்(32.0%) 6 இருந்து 10 அண்டுகள் வரையில் அனுபவத்தைப் பெற்றுள்ளனர். 11 இருந்து 15 ஆண்டுகள் அனுபவம் பெற்றவர்கள் 27 பேர்(16.0%). மேலும், 16 ஆண்டுகளுக்கு மேல் ஆசிரியராக அனுபவம் பெற்றவர்கள் 21 பேர்(12.4%).

அட்டவணை : 2

சமூக / கல்வி கட்டமைப்பு வலை பயன்பாடு

	முற்றும் மறுத்தல்	மறுத்தல்	உறுதியின்மை	ஏற்றல்	முற்றும் ஏற்றல்
1. தமிழில் ஒருங்குறி	4 (2.4 %)	34 (20.1 %)	53 (31.4 %)	55 (32.5 %)	23 (13.6 %)
2. தமிழில் மின்னஞ்சல்	12 (7.1 %)	55 (32.5 %)	54 (32.0 %)	35 (20.7 %)	13 (7.7 %)
3. ச.க.வலை நிர்வகிக்கிறேன்	16 (9.5 %)	47 (27.8 %)	59 (34.9 %)	35 (20.7 %)	12 (7.1 %)
4. வலைப்பூ (Blog)	10 (5.9 %)	51 (30.2 %)	40 (23.7 %)	50 (29.6 %)	18 (10.7 %)
5. டிவீட்டர் (Twitter)	28 (16.6 %)	64 (37.9 %)	53 (31.4 %)	19 (11.2 %)	5 (3.0 %)
6. ஃபேஸ்புக் (FaceBook)	7 (4.1 %)	19 (11.2 %)	40 (23.7 %)	65 (38.5 %)	38 (22.5 %)

அட்டவணை 2-இல் தமிழில் ஒருங்குறி பயன்படுத்துவோர் 78 பேர்(46.1%) , உறுதியில்லாதோர் 53 பேர்(31.4 %) , பயன்படுத்தாதவர்கள் 38 பெர் (22.5 %) ஆவர். ஆசிரியர்களில் தமிழில் மின்னஞ்சல் பயன்படுத்துவோர் 48 பேர் அல்லது 28.4 விழுக்காட்டினர். தமிழில் பயன்படுத்தாதவர்கள் 67 பேர்

அல்லது 39.6 விழுக்காட்டினர். உறுதியின்மை என்றவர்கள் 54 (32.0 %) பேர். சமூக கட்டமைப்பு வலை நிர்வகிப்பவர்கள் 47 (27.8 %) பேர். நிர்வகிக்காதவர்கள் 63 (37.3 %) பேர் மற்றும் உறுதியின்மை என்று குறிப்பிட்டவர்கள் 59 பேர் அல்லது 34.9 விழுக்காட்டினர். சமூக கட்டமைப்பு வலைகளான வலைப்பூ, டிவீட்டர் மற்றும் பேஸ்புக் ஆகிய மூன்றிலும் முறையே 68 (40.3%) பேர் , 24 (14.2%) பேர் , 103 (61.0%) பேர் பயன்படுத்துகிறார்கள். பயன்படுத்தாதவர்கள் முறையே வலைப்பூவில் 61 (36.1 %) பேர், டிவீட்டரில் 92 (54.5 %) பேர் மற்றும் ஃபேஸ்புக்கில் 26 (15.3 %) பேர்.

சமூக கட்டமைப்பு வலை பயன்பாட்டில் உறுதியின்மை என்றவர்களில் வலைப்பூ 40 (23.7 %) பேர், டிவீட்டர் 53 (31.4 %)பேர் , மற்றும் ஃபேஸ்புக் 40 (23.7 %) பேர் ஆவர்.

ஆசிரியர்கள் சமூக / கல்வி கட்டமைப்பு வலை பயன்பாட்டில் எதிர்கொள்ளும் சவால்கள்:

ஆசிரியர்கள் தமிழ் கற்றல் கற்பித்தலில் சமூக / கல்வி கட்டமைப்பு வலை தொழில் நுட்பம் பயன்படுத்தும்போது எதிர்கொள்வதாகக் கூறிய சவால்கள் இங்கு தொகுத்து வழங்கப்படுகின்றன (அட்டவணை : 3).

அட்டவணை : 3

ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் சவால்கள்

எண்	சவால்கள்
1.	பயன்படுத்தும் முறையை முழுமையாக தெரிந்திருக்கவில்லை.
2.	ஆசிரியர்களிடையே தொழில் நுட்ப விழிப்புணர்வு குறைவு.
3.	பள்ளிச் சூழல் பயன்படுத்த தடையாக உள்ளது.
4.	கணினி, இணையம் பயன்படுத்தும் ஆர்வம் குறைவு/ அடிப்படை இல்லாமை.
5.	ஆசிரியர்களின் வேளைப் பளு (நிர்வாகப் பணிகள், பள்ளி நடவடிக்கைகள்).
6.	தமிழ் ஒருங்குறி பயன்படுத்த தெரியாமை.
7.	மாணவர்களின் ஈடுபாடு திருப்தியளிக்கும் வகையில் இல்லை.
8.	இணையவழி கல்வி பற்றிய விழிப்புணர்வின்மை.
9.	சமூக கட்டமைப்பு வலை தொடர்பான தகவல்கள் அறியாமை.
10.	ஆசிரியர்களிடையே சமூக / கல்வி கட்டமைப்பு வலைகளில் தமிழ் கற்றல் கற்பித்தல் தொடர்பான கலந்துரையாடல்கள் மிகக் குறைவு.

ஆசிரியர்களின் பரிந்துரைகள்:

இந்த ஆய்வில் ஈடுபட்ட 169 ஜோகூர் மாநில தமிழாசிரியர்கள் சமூக / கல்வி கட்டமைப்பு வலைகளில் தமிழ் கற்றல் கற்பித்தலை மேம்படுத்த பல்வேறு பரிந்துரைகளை வழங்கினர். அவர்கள் வழங்கிய பரிந்துரைகள் தொகுக்கப்பட்டு, 10 முதல் முக்கிய பரிந்துரைகள் (அட்டவணை: 4)இங்கு வழங்கப்படுகின்றன.

அட்டவணை : 4

ஆசிரியர்கள் வழங்கிய பரிந்துரைகள்

எண்	பரிந்துரைகள்:
1.	சமூக / கல்வி கட்டமைப்பு வலை தொடர்பான பயிலரங்கு நடத்துதல்.
2.	ஆசிரியர்கள் தொழில் நுட்ப அறிவை வளர்க்க பயிற்சி வழங்குதல்.
3.	ஆரம்பப் பள்ளி நிர்வாகம் போதிய தொழில் நுட்ப வசதிகளை ஏற்படுத்துதல்.
4.	ஆசிரியர்களிடையே சமூக/கல்வி கட்டமைப்பு வலைகளால் ஏற்படும் நன்மைகளை எடுத்துரைத்து ஆர்வத்தைக் கூட்டுதல்.
5.	இணையக் கல்வியின் அவசியத்தை தமிழாசிரிர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லுதல்.
6.	தமிழ் ஒருங்குறி பயன்படுத்தும் வழிமுறைகளை ஆசிரியர்களுக்கு பயிற்சியின் வழி கற்றுக் கொடுத்தல். மாணவர்கள் ஆர்வமுடன் தமிழில் பயன்படுத்த ஊக்குவித்தல்.
7.	இணையவழி தமிழ்க் கல்வி மாணவர்களின் மொழி அறிவை, சிந்தனை ஆற்றலை வளப்படுத்துவதாக
8.	அமைதல் வேண்டும். சமூக கட்டமைப்பு வலை தொடர்பான கருத்தரங்குகள்/ பட்டறைகள் நடத்தப்பட வேண்டும்.
9.	தமிழாசிரியர்களிடையே சமூக / கல்வி கட்டமைப்பு வலைகளின் வழி ஆக்கரமான கலந்துரையாடலுக்கும்,
10.	துறை சார்ந்த புத்தாக்க முயற்சிகளுக்கும் ஆக்கமும் ஊக்கமும் அளித்தல்.

தொகுப்பாய்வு:

ஆய்வில் பங்கெடுத்த 169 ஆரம்பம் (120 பேர்), இடைநிலைப் பள்ளி (49 பேர்) தமிழாசிரியர்களில் சமூக அல்லது கல்வி கட்டமைப்பு வலைகளில் 46.1 விழுக்காட்டினர் (78 பேர்) மட்டுமே தமிழ் ஒருங்குறி பயன்படுத்துவது கவலை அளிக்கிறது. அதாவது மீதமுள்ள 53.9 விழுக்காட்டினர் அறியாமை காரணமாகவும் அல்லது விழிப்புணர்வு இல்லாமையின் காரணமாகவும் பயன்படுத்தவில்லை என்று தெரியவருகிறது.மேலும், இன்றைய கல்விச் சூழலில் சமூக கட்டமைப்பு வலை 'தவிர்க்க முடியாதது' எனும் கூற்றுக்கு ஏற்றுக் கொண்டவர்கள் 103 பேர் அதாவது 60.9 விழுக்காட்டினர். அக்கூற்றை ஏற்க மறுத்தவர்கள் 13 (7.7%) பேர் மட்டுமே. இருப்பினும் உறுதியின்மை என்று குறிப்பிட்டவர்கள் 53 பேர் அல்லது 31.4 விழுக்காட்டினர். மொத்தத்தில் 103 பேர் சமூக கட்டமைப்பு வலையின் அவசியத்தை அல்லது செல்நெறியை உணர்ந்தவர்களாக இருப்பது சற்று ஆறுதல் அளிக்கிறது.

கற்றல் கற்பித்தலில் சமூக கட்டமைப்பு வலையை நிச்சயம் 'பயன்படுத்த முடியும்' என்று உறுதியாய் ஏற்றவர்கள் 128 பேர் (75.7 %). இக்கூற்றுக்கு நடுநிலை வகித்தவர்கள் 39 பேர் அல்லது 21.9 விழுக்காட்டினர். இக்கூற்றை ஏற்காதவர்கள் 2 பேர் (1.2 %) மட்டுமே! பெரும்பாலான ஆசிரியர்கள் தகவல் தொழில் நுட்பவியலின் அத்தியாவசியத்தை உணர்ந்துள்ளனர் என்று கூறலாம். மேலும், 145 பேர் அல்லது 85.8 விழுக்காடினர், சமூக கட்டமைப்பு வலையினால் 'பயன்விளைவுமிக்க நன்மை

அடையலாம்' என்று நம்பிக்கை கொண்டுள்ளனர். ஆனால், 20 பேர் (11.8 %) உறுதியில்லாத மனப்பான்மையிலும், 4 பேர் (2.4 %) மட்டுமே நம்பிக்கையில்லாமல் ஏற்க மறுத்துள்ளனர். தமிழ் ஒருங்குறியின் பயன்பாடு அதிகரித்தால், சமூக கட்டமைப்பு வலைகளின் பயன்பாடும் அதிகரிக்கும் என்பது ஆய்வாலரின் கருத்தாகும். எனவே, தமிழாசிரியர்கள் அதிக அளவில் தமிழ் ஒருங்குறியைப் பயன்படுத்த ஊக்குவிக்க வேண்டும். அதன்வழி சமூக கட்டமைப்பு வலைகளில் தமிழ்ன் புழக்கமும் அதிகரிக்கும் என உறுதியாகக் கூறலாம்.

முடிவுரை:

மலேசியாவில் குறிப்பாக ஜோகூர் மாநிலத்தில் ஆரம்பம் / இடைநிலைப் பள்ளி தமிழாசிரியர்கள், மாநில இலாக்காவின் கல்வியியல் இலக்கு, கோட்பாடு எனக் கல்வித்துறை சார்ந்த சவால்கள் தவிர்த்து, சமுதாயத்திடமிருந்தும் சவால்களையும் எதிர்பார்ப்புகளையும் சந்திக்க வேண்டியுள்ளது. 'சமூக / கல்வி கட்டமைப்பு வலை' என்பது உலகத்தர கல்விக்கு வழிவகுக்கும் ஒரு பல்லூடகம். இன்றைய தகவல் தொழில் நுட்பச் சூழலில் 'மின் தமிழ்வழி கற்றல் கற்பித்தல்' நடைபெற அதிக சாத்தியம் இருக்கும்போது அத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தாமல் விடுவது விவேக ஆசிரியர்களுக்குப் பின்னடைவாகும். சமூக / கல்வி கட்டமைப்பு வலையானது கல்வியியலில் பிரபலமடைந்து வரும் செல்நெறியாகும்.தமிழாசிரியர்களின் கல்விச் சிந்தனை மாற்றங்களினால்தான் ஆக்கப்பூர்வமான கற்றல் கற்பித்தலை மாணவர்களுக்கு வழங்க முடியும். எனவே, தமிழாசிரியர்கள் மின்னுலகில் கல்வியியல் தொடர்பான வலைகளில் மின் தமிழில் புழங்கவும் பயன்விளைவு மிக்க மாற்றங்களுக்கு வித்திடுபவர்களாகத் திகழ வேண்டும்.

துணை செய்த நூல்கள் / ஆவணங்கள்:

Boyd, D.M. & Ellison, N. B.(2008). *Social Network Sites: Definition, History, and Scholarship.*
Michigan State University. MI.USA

Clark, C. & Gruba, P. (2010). The use of social networking sites for foreign language learning: An
autoethnographic study of *Livemocha*. In C.H. Steel, M.J. Keppell, P. Gerbic & S. Housego (Eds.),
Curriculum, technology & transformation for an unknown future. Proceedings ascilite Sydney 2010
(pp.164-173).

Geisert ,P.G & Futnell, M.K (1995). *Teachers, Computers, and Curriculum: Microcomputers in the Classroom*. Allyn & Bacon., A Simon & Schuster Company, Needham Heights, Massachusetts.

Rajendran, Nagappan (2008).*Malaysiavil Tamil Kalviyum Katral Karpittalum.* Uma Publications.Kuala Lumpur.

துணை செய்த வலைதளங்கள்:

1. http://facebookforeducators.org/educators-guide#one
2. http://www.widbit.com
3. http://ascilite.org.au/conferences/sydney10/procs/Cclark-full.pdf
4. http://virtualprivatelibrary.com
5. http://thinkingmachine.pbworks.com/w/page/22187720/Think-Social-Networking-for-Education

தமிழ் கற்றலில் முழுமையான மதிப்பீடு - பயிலரங்கு

விரோனிக்க நாயுடு, செயிண்ட் ஹில்டஸ் தொடக்கப்பள்ளி
கலைமதி ஜேம்ஸ், சிஹுவா தொடக்கப்பள்ளி
சிங்கப்பூர்.

முழுமையான மதிப்பீடு என்பது வெவ்வேறு மூலங்களின்வழி ஒரு மாணவரின் பலதரப்பட்ட தன்மைகளைப்பற்றித் தொடர்ச்சியாகத் தகவல்களைத் திரட்டுவதும், அம்மாணவரின் மேம்பாட்டுக்கான தரநிலை, அளவுநிலையிலான கருத்துத் தெரிவிப்பை வழங்குவதும், வழிகாட்டுவதும் ஆகும். முழுமையான மதிப்பீடு கற்றலை வடிவமைக்கவும் செயல்படுத்தவும் ஆசிரியர்களுக்கு வழிகாட்டுவதோடு தங்கள் செயல்முறைகளை மாற்றிக்கொள்ளவும் உதவுகிறது. தங்கள் பிள்ளைகளின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் பெற்றோர்கள் உதவவும் வகை செய்கிறது.

சிங்கப்பூர்க் கல்வி அமைச்சின் தலைமையில் செயல்பட்ட தொடக்கக் கல்வி மறு ஆய்வு மற்றும் அமலாக்கக் குழு, தொடக்கக் கல்வியின் தரத்தை மேம்படுத்த முன்வைத்துள்ள பல பரிந்துரைகளுள் ஒன்று முழுமையான மதிப்பீட்டைத் தொடக்கப்பள்ளிகளில் அமல்படுத்துவதாகும். இப்பரிந்துரையின் அடிப்படையில் 2009முதல் சிங்கப்பூர்த் தொடக்கப்பள்ளிகளில் முழுமையான மதிப்பீடு அமலாக்கம் கண்டுவருகிறது.

மதிப்பீடு என்பது முறைசார்ந்த மதிப்பீட்டை மட்டுமே உள்ளடக்கியதாகக் கருதிவிட முடியாது. அதற்கும் அப்பாற்பட்டு பரந்த நோக்கோடு மதிப்பீட்டை அணுகுவது பயனளிக்கும். மதிப்பீட்டின் பயனைப் பெற வேண்டுமானால் ஆசிரியர்கள் பலதரப்பட்ட மதிப்பீட்டுக் கோட்பாடுகளையும் நெறிமுறைகளையும் தெளிவாகப் புரிந்துவைத்திருக்க வேண்டும். அதோடு, பொருத்தமான மதிப்பீட்டு முறைகளைத் தேர்ந்தெடுக்கவும், மதிப்பீட்டு நடவடிக்கைகளைத் திறம்பட வடிவமைக்கவும், அவற்றைச் செயல்படுத்தவும் அறிந்துவைத்திருப்பது அவசியமாகும்.

சிங்கப்பூர்த் தொடக்கப்பள்ளிகளுக்கான தமிழ்மொழிப் பாடக்கலைத்திட்டம் முறைசார்ந்த மதிப்பீட்டிற்கும் முறைசாரா மதிப்பீட்டிற்கும் முக்கியத்துவம் அளிக்கிறது. 2009-இல் சிங்கப்பூர்க் கல்வி அமைச்சு முழுமையான மதிப்பீட்டை 16 பள்ளிகளில் சோதனை முயற்சியாக அமல்படுத்தியது. சோதனைக் கட்ட முயற்சியில் ஈடுபட்ட இப்பள்ளிகளைச் சேர்ந்த மேலாண்மைக் குழுவினர்களும் ஆசிரியர்களும் மதிப்பீட்டுக்

கோட்பாடுகள், மதிப்பீட்டு முறைகள், மதிப்பீட்டு நடவடிக்கைகள் முதலியவைபற்றி விரிவாகவும் ஆழமாகவும் பயிலரங்கங்களின்வழிக் கற்றுக்கொண்டனர்.

மதிப்பீட்டைப் பொறுத்தவரை இந்தக் கற்றல் ஒரு தொடர்பயணம் என்று சொல்லலாம். சுருங்கக்கூறின், கல்வி அமைச்சு நடத்திய மதிப்பீடு குறித்த பல்வேறு பயிலரங்கங்களும் கூட்டங்களும் எங்களுக்குப் பெரும் பயன் அளித்தன. அப்பயிலரங்கங்களின்போது ஆசிரியர்களுக்குக் **கற்பித்தலியல் மதிப்பீடு வழிகாட்டி** (Pedagogy and Assessment Guide) ஒன்று வழங்கப்பட்டது. அதில் சில மாதிரிப் பாடங்கள், மதிப்பீட்டுக் கருவிகள் எனப் பல்வேறு வளங்கள் இணைக்கப்பட்டிருந்தன. மேலும், பாடத்திட்ட அதிகாரிகளும் பள்ளிகளுக்கு வந்து ஆசிரியர்களைச் சந்தித்து முழுமையான மதிப்பீட்டை முறையாகச் செயல்படுத்த வழிகாட்டினர். அவர்களது ஆதரவு முழுமையான மதிப்பீட்டைச் சுமுகமான முறையில் அமலாக்கம் செய்வதற்கு மிகவும் உதவியாக அமைந்தது.

மதிப்பீட்டுத் திட்டத்தை உருவாக்குதலும் செயல்படுத்துதலும்

எங்கள் பள்ளிகளில் உருவாக்கப்பட்ட மதிப்பீட்டுத்திட்டம் கற்றலில் மாணவரின் ஆர்வத்தைத் தூண்டவும் சுய கற்றலுக்கு வழிவகுக்கவும் உதவியது. கல்வி அமைச்சு அறிமுகப்படுத்திய *ஈடுபாடுமிக்க கற்றல் பணிச்சட்டத்தை* (PETALS™) தழுவி எங்கள் பள்ளிகளின் மதிப்பீட்டுத் திட்டம் வகுக்கப்பட்டது. இப்பணிச்சட்டத்தின் அடிப்படையில் கற்றல் பயன்மிக்கதாகவும் அர்த்தமுள்ளதாகவும் அமையுமாறு செயல்திறன் மதிப்பீடுகள் வடிவமைக்கப்பட்டன. இவை மொழித்திறன் வளர்ச்சிக்கு வித்திட்டன.

கற்றல் பயணத்தை (Learning Journey) மதிப்பீட்டுத் திட்டத்தில் ஒருங்கிணைத்தது ஆசிரியர்களாகிய எங்களுக்கு ஒரு புதிய அனுபவமாக அமைந்தது. ஏனெனில், கற்றல் பயணத்தின்வழி மாணவர்களுக்கு வகுப்பறைக்கு அப்பால் தமிழ்மொழிப் பாடத்தைக் கற்பிக்கும்போது மாணவர்கள் காட்டிய ஆர்வத்தைக் கண்டு நாங்கள் வியந்தோம். தமிழ் கற்கச் சிரமப்படுகிற மாணவர்கள் உற்சாகத்துடன் பாட நடவடிக்கைகளில் ஈடுபட்டது மனநிறைவை தந்தது. எடுத்துக்காட்டுக்கு, நாங்கள் தொடக்கநிலை ஒன்றாம் வகுப்பு மாணவர்களைக் கற்றல் பயணத்தின் ஒரு பகுதியாகச் சந்தைக்கு அழைத்துச் சென்றோம். அங்குள்ள காய்கறிகள், பழங்கள் ஆகியவற்றின் பெயர்களை மாணவர்கள் இயல்பான சூழலில் கற்றுக்கொண்டனர். இப்பயணத்தின்போது மாணவர்களுடைய

பெற்றோர்களையும் ஈடுபடுத்தினோம். கேள்வி கேட்டல் (Questioning), கருத்துத்தெரிவிப்பு (Feedback) போன்ற மதிப்பீட்டு முறைகளைப் பயன்படுத்திக் கற்பித்தோம். வகுப்புக்குத் திரும்பியதும், மாணவர்கள் பல்வேறு வாய்மொழிசார்ந்த செயல்திறன் மதிப்பீட்டுப் பணிகளில் ஈடுபட்டனர்.

கற்றல் வளர்ச்சித் திட்டம் (Learning Progression Plan)

மதிப்பீட்டுத் திட்டம் எங்களின் கற்றல் கற்பித்தலுக்கு உறுதுணையாக இருந்தபோதும், சில மாதங்களுக்குப் பிறகு அதில் மேலும் சில தகவல்களை இணைத்துக்கொண்டால் சிறப்பாக இருக்கும் என்று எங்களுக்குத் தோன்றியது. எனவே, மதிப்பீட்டுத் திட்டத்தை விரிவுபடுத்துவதில் நாங்கள் ஈடுபட்டோம். அதில், கற்றல் தேர்ச்சிநிலைகளை உரிய காலத்தில் சரிபார்த்தல் (milestone checks), இருவகை மதிப்பீடுகளைப் பயன்படுத்தும் முறைகள் (முறைசார்ந்த மதிப்பீடு, முறைசாரா மதிப்பீடு), தொழில்நுட்பச் சாதனங்களின் ஒருங்கிணைப்பு, பாட விரிவாக்கம், துணைக்கருவிகள் முதலியன இணைத்துக்கொள்ளபட்டன. இந்த விரிவாக்கம் கண்ட மதிப்பீட்டுத் திட்டமே கற்றல் வளர்ச்சித் திட்டமாக உருவாக்கம் கண்டது.

இதன்வழி மேல்தொடக்கநிலை வகுப்புகளுக்குக் கற்பிக்கும் ஆசிரியரால்கூடக் கீழ்த்தொடக்கநிலை வகுப்புகளுக்குக் கற்பிக்கக்கூடிய சாத்தியம் நிலவியது. இந்தக் கற்றல் வளர்ச்சித் திட்டத்தின்வழிக் கற்றல் கற்பித்தல் மேலும் விரிவாக்கம் கண்டு வலுவடைந்தது.

மதிப்பீட்டில் ஆதாரநடவடிக்கை (Scaffolding)

வகுப்பறைகளில் ஆதார நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொண்டபோது முதலில் சில சிக்கல்களைச் சந்தித்தோம். எடுத்துக்காட்டுக்கு, மீத்திற மாணவர்களுக்கு அவை மிகச் சுலபமாக அமைந்தன. ஆனால், சராசரி மாணவர்களுக்கும், சராசரிக்கும் கீழ்நிலையில் உள்ள மாணவர்களுக்கும் ஆதார நடவடிக்கைகள் மிகுந்த பயனையும் ஊக்கத்தையும் அளித்தன. அவர்களுக்கு ஆதார நடவடிக்கைகளைத் திட்டமிட்டுச் செயல்படுத்துவதற்கு, தமிழ்த்துறையிலிருந்த அனைத்து ஆசிரியர்களும் கூட்டுமுயற்சியில் ஈடுபட்டனர். இதனால் கிடைத்த நன்மை என்னவென்றால் அடுத்தடுத்த ஆண்டுகளில் ஆசிரியர்கள் கீழ்த்தொடக்கநிலை வகுப்புகளுக்குக் கற்பிக்கும்போது, அவர்கள் எத்தகைய

சிக்கல்களை எதிர்நோக்கக்கூடும் என்று முன்கூட்டியே அறிந்து அவற்றைக் களைந்தனர்.

மதிப்பீட்டு முறைகளைச் செம்மையாகப் பயன்படுத்த வேண்டுமானால் திட்டமிடுதல் அவசியமாகும். ஆசிரியர்கள் பாடத்தில் மாணவர்களிடம் கேட்கக்கூடிய தூண்டுதல் வினாக்கள் பற்றியும் துருவுதல் வினாக்கள் பற்றியும் குறித்துக்கொள்ள வேண்டும். மாணவர்களின் பாடப் புரிந்துணர்வைச் சோதிப்பதற்கும் ஆழப்படுத்துவதற்கும் கேள்வி கேட்கும் முறை பயனுள்ளதாக அமைந்தது. ஆரம்பத்தில் ஆசிரியர்களுக்கு வினாக்களை வடிவமைப்பதில் ஐயங்கள் இருந்தன. அவற்றைத் தீர்க்க ஆசிரியர்கள் ஒரு குறிப்பிட்ட சூழலை மையமாகக்கொண்டு (எ-டு: விளையாட்டுத்திடல்) ஒவ்வோர் ஆசிரியரும் சில தூண்டுதல் வினாக்களையும் துருவுதல் வினாக்களையும் உருவாக்கினர். பிறகு, அவர்கள் உருவாக்கிய வினாக்களில் எவை தூண்டுதல் வினாக்கள், துருவுதல் வினாக்கள் என்று கலந்துபேசி வகைப்படுத்தினர். இந்த அணுகுமுறையின் மூலம் ஆசிரியர்களால் தங்களது கேள்வி கேட்கும் திறனை மேலும் வளர்த்துக்கொள்ள முடிந்தது.

மதிப்பீட்டுக் கருவிகள் (Assessment Tools)

ஒவ்வொரு பாடத்தின் தொடக்கத்திலும் ஆசிரியர்கள் அன்றைய பாடத்தின் குறிக்கோளை விவரிப்பதைப் போலவே மாணவர்களும் தாங்கள் பாட இறுதியில் எவ்வளவு கற்றுக்கொண்டனர் என்பதை மதிப்பிடவும் அறிந்திருக்க வேண்டும்.
சுய மதிப்பீடு, சக மாணவர் மதிப்பீடு, ஆசிரியருடன் இணைந்த மதிப்பீடு முதலியவற்றின் மூலம் மாணவர்கள் தம் கற்றல்நிலையை அறிந்துகொள்ள முடியும். வகுப்பறையில் மாணவர்களின் கற்றல், ஆசிரியரின் கற்பித்தல் ஆகியவை மேம்படவும் ஆக்ககரமான மாற்றங்களைப் பெறவும் மதிப்பீட்டு முறைகள் உதவும்.

சுய மதிப்பீட்டின்போது தகுதிநிலை விளக்கக்குறிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ள அளவைகளை (criteria) எந்த அளவுக்கு தாங்கள் அடைந்திருக்கிறோம் என்று மாணவர்கள் சுயமாக மதிப்பிடுவர். மாணவர்கள் தம் படைப்பைச் சுய மதிப்பீடு செய்த பின்னரே சக மாணவர் மதிப்பீட்டில் ஈடுபடுவது சிறந்ததாகும். இதன்வழி மாணவர்கள் பிறருடைய படைப்பைப் பொறுப்போடு மதிப்பீடு செய்யவும் அவர்களிடையே நல்லுறவு வளரவும் வாய்ப்புண்டு.

தரமான சுய மதிப்பீட்டையும் சக மாணவர் மதிப்பீட்டையும் செய்வதற்குக் கால அவகாசம் தேவை. மாணவர்களிடம் இத்திறன்களை ஓரிரண்டு பாடங்களின் மூலம் வளர்த்துவிட முடியாது. மதிப்பீட்டுத் திறன்களை மாணவர்களிடம் வளர்க்க நாம் அவர்களுக்கு உரிய உதவிகளைச் செய்ய வேண்டும். குறிப்பாக, சக மாணவர் மதிப்பீட்டின்போது மாணவர்கள் ஒருசார்புடைமையின்றி (free from biasness) செயல்படப் பொருத்தமான ஆதார நடவடிக்கைகளை ஆசிரியர் வகுப்பறையில் முன்மாதியாக இருந்து செயல்படுத்திக் காண்பிக்க வேண்டும். இதில் நிச்சயம் வெற்றி கிடைக்கும். மதிப்பீட்டின்போது மாணவர்கள் ஒரு குறிப்பிட்ட தகுதிநிலையை வழங்கியமைக்கான காரணங்களை விளக்குவது சிறப்பு. இதன்வழி வகுப்பறையில் கற்றல் கற்பித்தல் சிறப்பாக நடைபெறும்.

சுய மதிப்பீட்டையும் சக மாணவர் மதிப்பீட்டையும் செய்ய மதிப்பீட்டுக் கருவிகள் மிக முக்கியம். மதிப்பீட்டுக் கருவிகளுள் சில தகுதிநிலை விளக்கக்ககுறிப்புகள், சரிபார்ப்புப் பட்டியல் முதலியவையாகும்.

தகுதிநிலை விளக்கக்குறிப்புகள் மதிப்பிடுவதற்கான அளவைகளையும், மாணவர்கள் அடையக்கூடிய வெவ்வேறு செயல்திறன்களுக்குரிய தகுதிநிலைகளையும் அவற்றுக்கான விளக்கங்களையும் கொண்டிருக்கும். இவற்றைத் தொடக்கநிலை 1-2 வகுப்பு மாணவர்களுக்கு ஏற்ற நிலையில் ஆசிரியர்கள் வடிவமைத்தோம். ஆரம்பத்தில் 4-5 அளவைகளைப் பயன்படுத்தினோம். கற்பித்தலின்போது அனைத்து அளவைகளையும் மதிப்பிட்டதால் சிரமங்களைச் சந்தித்தோம். தற்போது 1-2 அளவைகளையே பயன்படுத்தி வருகிறோம்.

சரிபார்ப்புப் பட்டியல் என்பது ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக மாணவர்களின் மொழித்திறன்களை அல்லது செயல்பாடுகளை மதிப்பிடவும் கண்காணிக்கவும் உதவும் ஒரு கருவி ஆகும். சரிபார்ப்புப் பட்டியல் சுய மதிப்பீட்டுக்கும் சக மாணவர் மதிப்பீட்டுக்கும் உதவும். இதை நாங்கள் எங்கள் பள்ளிகளில் மாணவர்களின் கற்றல் தேவைகளின் அடிப்படையில் பலமுறை திருத்தி வடிவமைத்தோம்.

<u>கற்பித்தலை மாற்றியமைத்தலும் கற்றலுக்குப் பொறுப்பேற்றலும்</u>

மதிப்பீட்டின்வழி மாணவர்கள் தங்கள் கற்றலுக்குத் தாங்களே பொறுப்பேற்றதை நாங்கள் கண்டோம். கற்றல் அடைவுகளையும் ஆசிரியரின் எதிர்பார்ப்புகளையும்

தெளிவாகப் புரிந்துகொண்டு செயல்பட்டதால், முன்னேற்றத்திற்கான வழிமுறைகளை அதாவது கற்றலில் அடுத்த படிநிலை என்ன என்பதை மாணவர்களே அடையாளம் கண்டுகொள்ள முடிந்தது. அதிகத் தன்முனைப்புடன் செயல்பட்டுச் சுயமாகக் கற்கும் திறனும் மாணவர்களிடையே தென்பட்டது. இதனால், ஆசிரியர்கள் மாணவர்களின் முன்னேற்றத்தைக் கண்காணிக்கவும் அவர்களுடைய சிந்தனைச் செயல்பாட்டை உணர்ந்து, கற்பித்தல் முறைகளையும் மதிப்பீட்டு நடவடிக்கைகளையும் மாற்றி அமைக்கவும் முடிந்தது.

சிக்கல்களைக் களைந்தவிதம்

முழுமையான மதிப்பீடு ஒரு நீண்ட பயணமாகும். இதைச் செயல்படுத்தும்போது பல சிக்கல்களைச் சந்திக்க நேர்ந்தன. நேரம் ஒரு பெரிய சவாலாக இருந்தது. தகுதிநிலை விளக்கக்குறிப்புகள், சரிபார்ப்புப் பட்டியல்கள் போன்றவற்றைத் தயாரிப்பதற்கு அதிக நேரம் எடுத்தது. குழுமப் பள்ளிகளின் நிலையில் மதிப்பீட்டு வளங்களை நாங்கள் தயாரித்தது எங்கள் சுமையை ஓரளவுக்குக் குறைத்தது. மேலும், மதிப்பீட்டு வளங்கள் பலவற்றை நாங்கள் தயாரிக்கக் கல்வி அமைச்சு வழங்கிய பாடத்திட்ட வழிகாட்டி, மதிப்பீட்டு வழிகாட்டி முதலியவை பேருதவியாக இருந்தன.

ஒவ்வொரு மாணவரையும் மதிப்பீடு செய்தல், மதிப்பீட்டைப் பதிவுசெய்தல் போன்றவை நிச்சயம் நேரம் எடுக்கும். ஆயினும், மாணவர்கள் அடையும் பயன்களைப் பார்க்கும்போது இதைச் செய்யாமல் நம்மால் இருக்க முடியாது. மேலும், காலப்போக்கில் அனுபவத்தின் காரணமாக இவை நமக்குச் சுலபமாகிவிடும்.

எங்கள் பள்ளியைப் பொறுத்தவரையில் முழுமையான மதிப்பீடு என்பது கீழ்த்தொடக்கநிலை ஆசிரியரின் பொறுப்புமட்டும் அல்ல. முழுமையான மதிப்பீடு என்பது எங்கள் தமிழ்த்துறையின் பொறுப்பு என்று நாங்கள் உணர்ந்து செயல்பட்டோம். எங்கள் கூட்டங்களின்போது மதிப்பீட்டைப்பற்றி அதிகம் பேசிக்கொள்வோம். புதிய ஆசிரியர்களுக்கு இவற்றைப்பற்றி எடுத்துரைத்தோம். ஒரு துறையாகச் செயல்படும்போது ஒருவருக்கொருவர் உதவி செய்து உற்சாகம் அளிப்பது கற்றல் கற்பித்தலுக்குப் பேருதவியாக இருக்கும் என்பது உறுதி.

முடிவுரை

முழுமையான மதிப்பீட்டை ஆசிரியர்கள் செயல்படுத்தும்போது சிற்சில சிக்கல்களை அவர்கள் எதிர்நோக்க நேரும். அவற்றைக் கண்டு ஆசிரியர்கள் தயக்கம் காட்ட தேவை இல்லை. முழுமையான மதிப்பீடு ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பல்வேறு பயன்களை அளிப்பதால் அதனைத் தொலைநோக்குடனும் முழு முயற்சியுடனும் செயல்படுத்தும்போது விரும்பத்தக்க விளைவுகளை அடைய முடியும்.

இணை அமர்வுகள் 3

இணை அமர்வுகள் 3

இரண்டாம் மொழி நிலையில் தமிழ் கற்றல் கற்பித்தல்

கல்பனா செல்வராஜ்
டெய் யீ உயர்நிலைப் பள்ளி
சிங்கப்பூர்

முன்னுரை:

கற்றல் கற்பித்தலில் நகைச்சுவையைக் கலப்பது என்பது எல்லாக் காலங்களிலும் உலகின் எல்லாப் பகுதிகளிலும் ஆசிரியர்களால் கையாளப்பட்டு வருகின்றது ஆசிரியரை மையமாகக் கொண்ட கற்றல் கற்பித்தலில் மாணவர்கள் அனைவரும் அமைதியாக இருப்பதே சிறந்த முறை என்று போற்றப்பட்டது. ஆசிரியர் பாடம் கற்பிக்கும்போதும் கலந்துரையாடும்போதும் மாணவர்கள் வாய்விட்டுச் சிரித்தால் அவமரியாதையாகக் கருதப்படும் நிலை இருந்து வந்தது. இந்நிலை இன்று மலையேறிவிட்டது. மாணவரை மையமாகக் கொண்ட கற்றல் கற்பித்தலில் மாணவர்களின் பங்கேற்பைச் சுவையுடையதாக்க நகைச்சுவை உணர்வை ஒருங்கிணைத்துக் கற்பிப்பது மிகவும் அவசியம். வகுப்பறை கற்றல் கற்பித்தலில் நகைச்சுவை உணர்வு இருந்தால்தான் ஆசிரியர் மாணவர் உறவு வலுப்படும். ஒரு நல்ல வகுப்பறைச் சூழலை உருவாக்க நகைச்சுவை உணர்வை ஒருங்கிணைத்துக் கற்பிப்பது புத்தாக்கத்திற்கும் சிந்தனைத்திறனை வளர்ப்பதற்கும் வழி வகுக்கிறது.

எதிர் நோக்கிய பிரச்சினைகள்:

1. சிங்கப்பூரில் 60% விழுக்காட்டுக்கும் மேலாகத் தமிழ்க் குடும்பங்களில் ஆங்கிலம்தான் புழக்கத்தில் உள்ளது. இதனால் எதிர்காலத்தில் தமிழ் இளையர்கள் தமிழைப் பேசுவார்களா? இயல்பான நிலையில் பேச்சுத்தமிழ் புழக்கம் இவர்களிடம் இருக்குமா? என்பன சவால்களாகவே உள்ளன
2. எட்டு அல்லது ஒன்பது பாடங்களை ஆங்கிலத்தில் படிக்கும் மாணவர்களிடையே தமிழ்ப் புழக்கத்தை வலுப்படுத்துவது என்பதும் மிகவும் சவால் மிக்க ஒன்று
3. வீட்டுச்சூழலும் வெளிப்புறச் சூழலும் ஆங்கிலப் புழக்கத்திற்கு ஏற்ற வகையில் அமைந்துள்ளமையால் தமிழில் பேசுவதற்கான வாய்ப்புகளும் மிகவும் குறைவே.

4. அப்படியே பேச்சுத்தமிழில் பேசினாலும் நகைச்சுவையினூடே பொதிந்திருக்கும் உட்பொருள், அது உணர்த்தும் சமுதாய சிந்தனை ஆகியவற்றை உணர்ந்து கொள்வது என்பது அதனினும் சவால் மிக்கது.
5. மரபுத்தொடர்கள், இணைமொழிகள், பழமொழிகள் போன்றவற்றில் மறைந்திருக்கும் நகைச்சுவை, வஞ்சப் புகழ்ச்சியாகப் பயன்படுத்தும் தொடர்களில் காணப்படும் சிந்தனையைத் தூண்டும் வகையில் அமைந்த சிரிப்பு, நடைமுறை செயல்பாடுகளில் உருவாகும் சிரிப்புத் துணுக்குகள் போன்றவற்றைப் புரிந்து கொண்டு மாணவர்களால் ரசிக்க முடியாத நிலை காணப்படுகிறது
6. இத்தகைய இடர்ப்பாடுகளுக்கிடையே தமிழ் மொழிப் பாடத்தைச் சுவையுடைய தாக்குவது எப்படி? என்பது பற்றிய சிந்தனையால் மேற்கொள்ளப்பட்டதே இவ்வுத்தி. மேலும் இவ்வுத்திக்குத் தேவைப்படும் கற்பித்தல் துணைக்கருவிகளை மேம்படுத்திக் கொள்வதும் சற்றுச் சிரமமான காரியமாக இருந்தது.

தீர்வுகள்:

- எட்டு அல்லது ஒன்பது பாடங்களை ஆங்கிலத்தில் படிக்கும் மாணவர்களைத் தமிழின்பால் ஈடுபாடு கொள்ள வைக்கும் உத்தியாக நகைச்சுவை உணர்வைக் கற்றல் கற்பித்தலில் ஒருங்கிணைத்தல்
- கட்டுரை +கடிதம்+ கருத்தறிதல் = தமிழ் என்ற நிலையை மாற்றித் தமிழை மகிழ்ச்சிகரமான சூழ்நிலையில் தமிழைக் கற்க வைத்தல்
- இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை 'சிரிப்போம் சிந்திப்போம்' என்றநடவடிக்கையின் அடிப்படையில் கற்றல் கற்பித்தலை மேற்கொள்ளுதல்
- மாணவர்களுக்குள்ளே மறைந்து கிடக்கும் நகைச்சுவை உணர்வையும் சிந்திக்கும் ஆற்றலையும், படைப்பாற்றலையும் மேம்படுத்துதல்
- பேச்சுத்தமிழில் கலந்துரையாடத் தமிழ் மாணவர்களை ஈர்ப்பதற்கான ஓர் உத்தியாகவும், வகுப்புக்கு மகிழ்ச்சியோடும் ஆர்வத்தோடும் வரவழைப்பதற்கான ஓர் உத்தியாகவும் இதனை நடைமுறைப்படுத்துதல்

புதிய அணுகுமுறைகள்:

சிங்கப்பூர் போன்று தமிழை இரண்டாம் மொழியாகக் கற்பிக்கும் நாடுகளில் மாணவர்கள் புரிந்துகொள்ளும் வகையில் அன்றாட நிகழ்வுகளை ஒருங்கிணைத்துக் கற்பிக்கலாம். செய்தித்தாள்களில் இடம்பெறும் கேலிச் சித்திரப்படங்கள், நகைச்சுவைத் துணுக்குகள் போன்றவற்றைப் பற்றிய கருத்துகளைப் பகிர்ந்து கொள்ளுமாறு

மாணவர்களை ஊக்கப்படுத்தலாம். திரைப்படங்களில் இடம்பெறும் நகைச்சுவைக் காட்சிகளைப் பற்றிப் பேசவைக்கலாம். சிரித்திரன், சுவைத்துகள் போன்ற நகைச்சுவை இதழ்களை அறிமுகப்படுத்தி மாணவர்களை கற்றல் நடவடிக்கைக்கு ஆயத்தப்படுத்தலாம். நகைச்சுவை எழுத்தாளர்களான ஆர்.மகாதேவன், கு.ஞான சம்பந்தன், கிரேசி மோகன், தேனி. எஸ். மாரியப்பன், கிரிஜாமணாளன் போன்றோரின் நகைச்சுவைக் கதைகளை ஆசிரியர்கள் படித்து அவற்றை மாணவர்களுடன் பகிர்ந்துகொள்வதன் மூலம் அவர்களது கதைகளை அறிமுகப்படுத்தலாம். அப்புசாமி.காம் என்ற இணையப் பக்கத்தில் இடம்பெறும் நகைச்சுவைத் துணுக்குகளைப் படிக்க வைக்கலாம். இவ்வாறு மாணவர்களின் நிலைக்கேற்பப் புதிய புதிய உத்திகளை அறிமுகப்படுத்துவதன் வாயிலாகப் பேச்சுத் தமிழைப் புழக்கத்தையும் வலுப்படுத்தலாம்.

"மொழி வாழ வேண்டும் என்றால் காலத்துக்கேற்ப அதனை மாற்றி அமைக்க வேண்டும். இளைஞர்கள் விரும்பும் அம்சங்களை அதில் சேர்க்க வேண்டும். அவ்வாறு செய்தால் எந்த மொழிக்கும் சிறந்த எதிர்காலம் உண்டு. தமிழ், இணையத்தில் அதிகம் உள்ளது. இது பெருமை. ஆனால், இதைத் தொடர்ந்து நாம் தக்க வைத்துக்கொள்ள வேண்டும். இங்கு வந்துள்ளவர்கள், அது பற்றி விவாதிக்க வேண்டும்" என்று உலகத்தமிழ் செம்மொழி மாநாட்டில் அமைச்சர் திரு ஈசுவரன் பேசினார். இந்தக் கோட்பாட்டின் அடிப்படையில் மாணவர்கள் விரும்பும் வண்ணம் இணையம், தொலைக்காட்சி, வானொலி, விளம்பரங்கள், வெளியீடுகள், கேலிச்சித்திரப் படங்கள், நகைச்சுவைத் துணுக்குகள் போன்றவற்றின் மூலம் மாணவர்கள் பேசுவதற்கான சூழலை அமைத்துக் கொடுக்கவேண்டும். தொலைக்காட்சி நிகழ்ச்சிகளையும், திரைப்படங்களையும், திரைப்பாடல்களையும் ஒருங்கிணைத்துக் கற்பதும் கற்பிப்பதும் இன்று நடைமுறை வழக்காகிவிட்டது. குறிப்பாக நகைச்சுவை உணர்வை ஒருங்கிணைக்கும்போது மாணவர்களின் பங்கேற்பு அதிகரிக்கும் என்பதால் இவ்வுத்தியைக் கற்பித்தலில் ஒருங்கிணைத்துக் கற்பிக்கப்பட்டது.

படி நிலை 1: தமிழ் மாணவர்களைத் தொலைக்காட்சியில் 'சன் ஒளிவழி' 'விஜய் ஒளிவழி' ஆகிய ஒளிவழிகளில் ஒளிபரப்பப்பெறும் அரட்டை அரங்கம், அசத்தப்போவது யாரு? கலக்கப் போவதுயாரு' போன்ற நகைச்சுவை நிகழ்ச்சிகளைப் பார்த்து வருமாறு ஊக்கப்படுத்தினேன். தமிழ்த் திரைப்படங்களில் இடம்பெறும் நடிகர் வடிவேலு, விவேக் ஆகியோரின் நகைச்சுவைக் காட்சிகள் இணைந்த ஒளிவட்டுகளை வகுப்பில் காண்பித்த பின்னர் அதில் இடம்பெறும் சுவையான கருத்துகளைப் பற்றிக்

கலந்துரையாடல் நிகழ்ந்தது. அவற்றில் இடம்பெறும் வட்டார வழக்குகள், கொச்சை வழக்குகள் ஆகியவை உணர்த்தும் நகைச்சுவையின் ஆழத்தை, அவை உணர்த்தும் சமுதாய விழிப்புணர்வை, சூழ்நிலைக்கேற்ப அமைந்த நகைச்சுவை உரையாடலை, இயல்பான பேச்சுத்தமிழ்ப் புழக்கத்தை மாணவர்களால் புரிந்து கொள்ள முடிவதில்லை. ஆசிரியர் அவற்றை எடுத்துரைக்கும் போது கற்றல் கற்பித்தல் ஆர்வமூட்டக்கூடியதாக அமைகிறது. மாணவர்களுக்கு மிகவும் பிடித்தமான திரு.பீன், சார்லி சாப்ளின் போன்ற ஆங்கில நகைச்சுவை நடிகர்களின் உரையாடல் இடம்பெற்ற ஒளி வட்டுகளில் உள்ள ஒலிப்பகுதியை நீக்கிவிட்டு அல்லது ஒலியைக் குறைத்துவிட்டு சைகை மொழிகளைக் கொண்ட பகுதிகளின் மூலமாக உரையாடலைத் தொடங்கி அவர்களை நகைச்சுவையாகப் பேச வைக்கலாம்.

படிநிலை 2: ஒரே மாதிரியான அணுகுமுறையை மேற்கொண்டால் அது மாணவர்களுக்குச் சலிப்பை ஏற்படுத்திவிடும். அதனால் நாள், வார, மாத இதழ்களில் வெளிவரும் நகைச்சுவைத் துணுக்குகளைப் பயன்படுத்திக் கற்றல் கற்பித்தலை மேற்கொள்ளலாம். ஆசிரியர்கள்தாம் படித்து ரசித்தவற்றை மாணவர்களுடன் வகுப்பறையில் பகிர்ந்து கொள்வதன் மூலம் மாணவர்களும் அவற்றைப் படிப்பதற்கு ஊக்கமூட்டலாம். ஓரிரு வரிகளில் இடம்பெற்றுள்ள அத்துணுக்குகள் உணர்த்தும் கருத்துகள் சில சமயங்களில் ஓராயிரம் வார்த்தைகளுக்குச் சமமாக அமைந்து விடுவதைத் தெளிவுபடுத்தலாம். நாளடைவில் இப்பழக்கம் மாணவர்கள் தாமாகவே அவற்றைப் படித்துப் புரிந்து கொள்வதற்கு வழிவகுக்கும். இரண்டு வாரத்திற்கு ஒருமுறை தமிழ்மொழி வகுப்பினை நகைச்சுவை விருந்து வகுப்பாக இதனை மேற்கொள்ளலாம்.

படிநிலை 3. அடுத்தடுத்த வகுப்புகளில் மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் நகைச்சுவைத் துணுக்குகளில் இடம்பெறும் உரையாடலில் ஒருபகுதியை மட்டும் நீக்கிவிட்டு, அதற்கேற்ப அடுத்த பகுதியை நிறைவு செய்ய வைக்கும் பயிற்சிகளைத் தந்து அதனை அசல் பகுதியோடு ஒப்பிட்டுப் பார்த்து மாணவர்களின் படைப்புத்திறனைப் பாராட்ட வேண்டும். இது மாணவர்களிடையே புத்தாக்கத்தையும் புதிய சிந்தனைகளையும் உருவாக்கும். மாணவர்கள் ஆசிரியர்கள் எதிர்ப்பார்ப்பதற்கும் மேலாக நகைச்சுவைத் துணுக்கு உரையாடல்களைப் படைக்கும்போது கற்றல் கற்பித்தல் சுவையுடையதாகிவிடும். தொடக்கத்தில் கூடுதலான நேரத்தைப் பயிற்சிக்கு எடுத்துக்கொண்டாலும் பின்னர் குறிப்பட்ட காலவரையறைக்குள் முடித்துவிடும் பழக்கத்தை மாணவர்கள் மேற்கொள்வார்கள்.

படிநிலை 4. நகைச்சுவைத் துணுக்குகளில் இடம்பெறும் உரையாடல் பகுதிகளை முழுமையாக நீக்கிவிட்டு அதில் இடம்பெறும் படங்களை மட்டும் கொடுத்து அதற்கேற்ப நகைச்சுவை உரையாடல்களை எழுதும் பயிற்சியைக் கொடுக்க வேண்டும். வகுப்பறையில் அவற்றைச் சக மாணவர்களோடு பகிர்ந்து கொள்ளும்போது நகைச்சுவையோடு தன்னம்பிக்கையும் படைப்பாற்றல் திறனும் ஒருங்கே வளர்க்கப்படுகின்றன. மாறுபட்ட பண்புகளைக் கொண்ட விலங்குகளின் படங்களை இணையாகப் பொருத்திக் கொடுத்து அவை ஒன்றை மற்றொன்று சந்தித்தால் மேற்கொள்ளும் உரையாடல், மாறுபட்ட பண்புகளைக் கொண்ட மனிதர்களின் படங்களை இணையாகப் பொருத்திக் கொடுத்து அவர்கள் ஒருவரையொருவர் சந்தித்தால் மேற்கொள்ளும் உரையாடல் போன்றவற்றைக் கற்பனை செய்து எழுத வேண்டும். பின்னர் அவற்றை வகுப்பறையில் பகிர்ந்து கொள்ளும்போது ஆர்வமூட்டும் அங்கமாகவும் இது அமைந்துவிடுகிறது

படிநிலை 5. அடுத்த நிலையில் மாணவர்களுடைய வாசிப்புத்திறனை மேம்படுத்தும் வகையில் இலக்கியப் பகுதிகள், செய்திப்பகுதிகள் போன்றவற்றை வாசிக்கக் கொடுப்பதை விடச் சிரிப்பூட்டும் சிந்தனைக் கதைகள், தெனாலிராமன் கதைகள் போன்றவற்றிலிருந்து வாசிப்புப் பகுதிகளைத் தேர்ந்தெடுத்துக் கொடுக்கும்போது அவர்களால் எளிமையாக வாசிக்கமுடிகிறது. அதில் இடம் பெறும் நகைச்சுவைக் கதையின் தொடக்கத்தைக் கொடுத்து அக்கதையை முடித்து எழுதுமாறு பயிற்சி கொடுக்க வேண்டும். கதையின் முடிவு நகைச்சுவை ஊட்டக்கூடியதாக அமையவேண்டும் என்பதை ஆசிரியர்கள் தெளிவுபடுத்த வேண்டும். மாணவர்களின் படைப்பை வகுப்பறையில் பகிர்ந்து கொள்ளச் செய்யும்போது அம்முடிவுகள் வெவ்வேறாகவும் புதிய கோணத்திலும் அமையும்போது அவர்களிடையே மறைந்திருக்கும் புத்தாக்கத்திறனை வெளிப்படுத்தும் வாய்ப்பினையும் உருவாக்கிக் கொடுக்க முடிகிறது.

படிநிலை 6. மாணவர்களுக்குப் பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள நகைச்சுவைப் பாடலின் சூழலையும் கருத்தையும் புரியவைக்க வேண்டும். சிங்கப்பூர்ச் சூழலில் மோர் விற்றல் என்பது மாணவர்களால் புரிந்துகொள்ள முடியாது என்பதால் அதனையும் விளக்கிக் கூறவேண்டும்.

காரென்று பேர்படைத்தாய் ககனத்துறும் போது
நீரென்று பேர்படைத்தாய் நெடுந்தரையில் வந்தபின்

வாரொன்று மென்மயில் நேர்ஆய்ச்சியர் கைவந்த பின்
மோரென்று பேர்படைத்தாய்! முப்பேரும் ஏற்றாயே!

என்ற பாடலில் இடம்பெறும் வானத்தில் உள்ள மேகத்தைக் கார்(மேகம்-மழை) என்னும், அது மழையாக மண்ணில் பொழியும்போது நீர் என்றும், தயிரில் நீர் கலந்தால் அது மோர் என்றும் கூறவேண்டும். பின்னர் மோர்க்காரி விற்கும் மோரில் தயிரைவிட நீரே அதிக அளவில் கலந்திருப்பதையும் சுட்டிக்காட்டவேண்டும். மோர்க்காரியின் மனம் பண்படாமல் நயமாகவும் நகைச்சுவையாகவும் காளமேகப்புலவர் பாடியிருப்பதையும் தக்க சான்றுகளுடன் மாணவர்களுக்குப் புரிய வைக்கவேண்டும். மேலும் இதைப்போன்ற பாடல்களிலும் நடைமுறை வாழ்க்கையிலும், இடம்பெறும் வஞ்சப்புகழ்ச்சி அணியில் இடம்பெற்றுள்ள இயல்பான நகைச்சுவையை மாணவர்கள் ரசித்து மகிழுமாறு கற்றல் கற்பித்தலை மேற்கொண்டால் மாணவர்கள் தமிழை விரும்பிப் படிப்பார்கள். இயல்பாகவும் நகைச்சுவையாகவும் பேச முற்படுவார்கள்.

படிநிலை 7. நம்நாட்டில் கலைகளை ஒருங்கிணைத்துக் கற்பிக்கும் உத்தி இன்று பரவலாகப் போற்றப்படுகிறது. அதில் நகைச்சுவையை இணைத்துக் கற்பித்துவிட்டால் சர்க்கரைப் பந்தலில் தேன்மாரிப் பொழிந்தாற்போலக் கற்றல் நடவடிக்கைகள் சுவையுடையதாகிவிடும். எடுத்துக்காட்டாக, 'தாயே யசோதா உந்தன் ஆயர் குலத்துதித்த' என்ற பாடல் பாரம்பரிய நாட்டியத்திற்குரியது. அப்பாடலுக்கான நடனத்தை ஒளிவழி காணச்செய்த பின்னர் அப்பாடலில் இடம்பெறும் கண்ணனின் குறும்புகளை அடிப்படையாக வைத்து ஒரு நகைச்சுவை நாடகம் ஒன்றை மாணவர்களே உருவாக்கி நடிக்கவேண்டும். நேரக் கட்டுப்பாட்டையும் மாணவர்கள் கடைபிடிக்கவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. வீட்டுப்பாடத்தைச் செய்துகொண்டு வராத மாணவன் ஒருவன், வீட்டுப்பாடத்தைப் பற்றி ஆசிரியரிடம் பேசக்கூடாது, நினைவு படுத்தக் கூடாது என்று மற்ற மாணவர்களிடம் வேண்டுகோள் விடுத்தல், பாடத்தை முடித்துவிட்ட மாணவர்களின் புத்தகங்களை எடுத்து மறைத்து வைத்தல், வகுப்பறையில் ஏதும் அறியாதது போல் போலியான அமைதியைக் காத்தல் என்று பல பரிமாணங்களை உள்ளடக்கிய நகைச்சுவை நாடகத்தை மாணவர்கள் படைத்தபோது அவர்களே வயிறு குலுங்கச் சிரித்துவிட்டனர். இது போன்றே பாடப்பகுதியில் இடம்பெறும் இவை போன்ற இலக்கியக் காட்சிகளையும் நகைச்சுவைக் காட்சிகளாகப் படைத்துக் காட்டும்போது அக்கற்றல்

நடவடிக்கையானது என்றென்றும் அவர்களுடைய மனதில் பசுமரத்தாணி போலப் பதிந்து விடும்.

செயலாய்வு: தமிழை இரண்டாம் மொழியாகக் கற்பிக்கும்போது மாணவர்களிடையை ஈடுபாட்டை உண்டாக்குவது எப்படி? என்ற நிலையில் மேற்கொண்ட பல்வேறு அணுகுமுறைகளில் மாணவர்களை மிகவும் ஈர்த்தது நகைச்சுவையை ஒருங்கிணைத்துக் கற்பித்தல் என்ற உத்தியே ஆகும். மேற்கூறிய படிநிலைகளை அடிப்படையாகக் கொண்டு அவ்வப்போது நகைச்சுவையை ஒருங்கிணைத்துக் கற்பித்தபோது கற்றல் கற்பித்தல் சுவைபட அமைந்தது. மாணவர்களிடையே கருத்துப் பரிமாற்றமும் அதிகரிக்கத் தொடங்கியது. இதனை “Teachers Network” இல் ஆசிரியர்களுடன் பகிர்ந்து கொண்ட போது நல்ல வரவேற்பு கிட்டியது. உயர்நிலை மூன்று விரைவு வகுப்பிற்கு மட்டும் இவ்வுத்தியை மேற்கொண்ட நான் அதனை விரைவு, வழக்கம் ஆகிய இரு வகுப்புகளுக்குரிய செயலாய்வு முறையிலும் அணுகினேன். இவ்விரண்டு வகுப்புகளின் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளை ஒப்பிட்டுப் பார்க்கும் செயலாய்வின்மூலம் இவ்வுத்திகள் இடம்பெறாத வழக்க வகுப்பின் ஆர்வமும் சிந்தனைத்திறனும் விரைவு வகுப்பு அளவுக்குச் சிறப்பாக அமையவில்லை என்பதை அறிய முடிந்தது. நகைச்சுவையை ஒருங்கிணைத்துக் கற்பிக்கும்போது கற்றல் கற்பித்தலில் ஆர்வமும் சிந்தனைத்திறனும் அதிகரிப்பதை ஆய்வின் மூலம் அறிய முடிந்தது.

பரிந்துரைகள்

கற்றல் கற்பித்தலில் முக்கியமான இடத்தைப் பெறுவது ஆசிரியர் மாணவர்களுக்கு இடையே உள்ள புரிந்துணர்வுதான். தமிழ் ஆசிரியர்கள் தமிழ்மாணவர்களுடன் நகைச்சுவையாகப் பேசிப் பழகும்போது ஆசிரியர் மாணவர் உறவு அணுக்கமானதாக மலர்கிறது. பாடத்திட்டத்தை மட்டும் மையமாகக்கொண்டு கற்றல் கற்பித்தலை மேற்கொள்ளாமல் மாணவர்களின் ஆர்வத்தையும் கருத்தில் கொண்டு அவர்களுடைய விருப்பத்திற்கு ஏற்ற வகையில் அவ்வப்போது இது போன்ற உத்திகளை மேற்கொண்டு கற்பிக்கலாம். பேச்சு வழக்கில் இடம்பெறும் ஒலிப்பு முறை, உச்சிரிப்பு முறை, உச்சிரிப்புப் பிழை, பொருள் வேறுபாடுகள் போன்றவற்றால் உருவாகும் நகைச்சுவை உணர்வை ஆசிரியர்கள் இயல்பாகச் சுட்டிக்காட்ட வேண்டும். ஒலி அழுத்தம், ஒலி ஏற்ற இறக்கம் போன்றவற்றால் உருவாகும் நகைச்சுவையை உணர்த்துவதோடு, சரியான ஒலிப்பு முறைக்கு வழி காட்ட வேண்டும். சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும்

நாப்பழக்கம் என்பதற்கேற்ப மாணவர்களும் அவற்றைக் கருத்தில் நாளடைவில் நகைச்சுவையுணர்வோடு பேச முற்படுவார்கள். இயல்பான நிலையில் பேசுவதற்கான வாய்ப்புகளை மாணவர்களுக்கு உருவாக்கித் தந்தால் அவர்கள் வாழ்நாள் முழுவதும் நகைச்சுவையை ரசிப்பதோடு மட்டுமல்லாமல் பிறர் ரசிக்கும் வண்ணம் நகைச்சுவையாகவும் பேசுவார்கள். நகைச்சுவைத் துணுக்குகளைப் படைக்கும் ஆற்றலையும் பெறுவார்கள்.

துணை நூல்கள்

1. உரையாடல் தமிழ்- முனைவர். அகஸ்தியலிங்கம்
2. கற்றல் கற்பித்தலில் எதிர்நோக்கும் சவால்கள்- 8-ஆம் உலகத்தமிழ் மாநாட்டு மலர்.
3. உலகத்தமிழ் செம்மொழி மாநாட்டு மலர்
4. Diglosssic situation in Tamil(A socio linguistic approach) Dr.Deiva Sundaram
5. http://www.learningandteaching.info/teaching/humour.htm

தமிழ்மொழி இலக்கணம் கற்பித்தலில் தற்காலத் தமிழ் இலக்கியம்

மன்னர் மன்னன் மருதை
மலாயாப் பல்கலைக் கழகம்
மலேசியா.

முன்னுரை

இன்றையக் கல்வியுலகில் பல மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. இந்த மாற்றங்களுக்கேற்ப தமிழ்மொழி கற்றலிலும் மாற்றங்கள் ஏற்பட வேண்டியது அவசியமாகும். இலக்கணமும் இலக்கியமும் தமிழ்மொழியின் இரு கண்களாகும். ஆகவே, இலக்கணத்தையும் இலக்கியத்தையும் பொருத்தியும் இணைத்தும் கற்பித்தல் இன்றியமையாததாகிறது. அவ்வகையில் இன்றையக் கல்வியுலகில் தற்காலத் தமிழ் இலக்கியக் கூறுகளைப் பயன்படுத்தி எவ்வாறு தமிழ்மொழி இலக்கணம் கற்பிக்கலாம் என்பதை இவண் ஆராய்வோம்.

பெயர்ச்சொற்கள்/வினைச்சொற்கள் : அமைப்பு - பயன்பாடு

முழுமையிலிருந்து பகுதிக்குப் போதல், தெரிந்ததிலிருந்து தெரியாதவற்றுக்குப் போதல் போன்ற கற்றல் விதிகள் சொற்களின் வாயிலாகவே எழுத்துகளை அறிமுகம் செய்வதையே வலியுறுத்துகின்றன. எவ்வகையான சொற்களை அறிமுகப்படுத்துவது? எளிமையிலிருந்து அருமைக்குச் செல்லல் என்ற கற்றல் விதிக்கேற்ப பெயர்ச்சொற்களையும் அவற்றோடு இணைந்து செல்லும் பெயரடைச்சொற்களையும் முதலில் அறிமுகப்படுத்தல் நலம். அதனை அடுத்து வினைச்சொற்களையும் அவற்றோடு இணைந்து செல்லும் வினையடைச்சொற்களையும் அறிமுகப்படுத்தல் வேண்டும்.அந்த வகையில், கவிப்பேரரசு வைரமுத்துவின் ‘விலங்கு’ என்ற புதுக்கவிதையின் சில வரிகளைக். காண்போம்.

ஒரு கடவுள் - காளை கொண்டான்

ஒரு கடவுள் - மயில் கொண்டான்

ஒரு கடவுள் - எலி கொண்டான்

ஒரு கடவுள் - கருடன் கொண்டான்

இக்கவிதை வரிகளிலுள்ள பெயர்ச்சொற்களான விலங்குகள் யாவும் மாணவர்களுக்கு நன்கு பரிச்சயமானவை என்றாலும் .புரிந்துகொள்ள இயலாத தொடக்க நிலை அல்லது மழலையர்ப் பள்ளிப் பிள்ளைகளுக்குப் படங்களைக் காட்டிக் கூறச்செய்யலாம். தொடர்ந்து மாணவர்களுக்குத் தெரிந்த வேறு விலங்குகளின் பெயர்களையும் கூறச்செய்யலாம். பொருத்தமான பிற தற்காலத் தமிழ் இலக்கிய வடிவங்கள் சிலவற்றையும் பயன்படுத்தலாம். தொடர்ந்து இடைநிலை மாணவர்களுக்குச் சொற்களஞ்சியம் பெருக்கும் பயிற்சிகளை வழங்கலாம்..

எடுத்துக்காட்டு : ‘கடவுள்’ என்ற சொல்லுக்குப் பொருத்தமான வேறு சொற்களை அடையாளங்கண்டு எழுதுக:

இ	வ	ப	சு	வ	க	அ
தெ	றை	த	ர	எ	ண	ன்
ய்	இ	வ	ஃ	ம	வ	ப
வ	ஈ	ச	ன்	ட	ன்	ன்
ம்	சா	ந	ண்	அ	ழ	கு
மி	ஈ	ஆ	மு	ரு	க	ன்

ஒரு _____ -_காளை கொண்டான்

ஒரு _____ - மயில் கொண்டான்

ஒரு _____ - எலி கொண்டான்

ஒரு _____ - கருடன் கொண்டான்

தொடர்ந்து, பெயர்ச்சொற்களோடு தொடர்புபடுத்தி வினைச்சொற்களை அறிமுகப்படுத்தலாம்.

இந்த அடிப்படையில் கவிப்பேரரசு வைரமுத்துவின் ‘மரங்களைப் பாடுவேன் ’ என்ற புதுக்கவிதையின் சில வரிகளைக். காண்போம்.

பிறந்தோம் தொட்டில் மரத்தின் உபயம்

நடந்தோம் நடைவண்டி மரத்தின் உபயம்

எழுதினோம் பென்சில் பலகை மரத்தின் உபயம்

மணந்தோம் மாலை சந்தனம் மரத்தின் உபயம்

துயின்றோம் தலையணை பஞ்சு மரத்தின் உபயம்

நடந்தோம் பாதுகை ரப்பர் மரத்தின் உபயம்

இறந்தோம் சவப்பெட்டி பாடை மரத்தின் உபயம்

எரிந்தோம் சுடலை விறகு மரத்தின் உபயம்

கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டில் இலக்கண அமைப்புகளை ஒன்றோடு ஒன்றனைத் தொடர்புபடுத்திக் கற்பிப்பது பயனுள்ள விளைவுகளை ஏற்படுத்தும். அந்த வகையில் மேற்கண்ட கவிதையில் இடம்பெற்றுள்ள வினைச்சொற்களுடன் தொடர்புடைய பொருத்தமான சில பெயர்ச்சொற்களையும் கீழே காண்போம்.

வினைச்சொற்கள்	**பெயர்ச்சொற்கள்**	
பிறந்தோம்	தொட்டில்	
நடந்தோம்	நடைவண்டி	
எழுதினோம்	பென்சில்	பலகை
மணந்தோம்	மாலை	சந்தனம்
துயின்றோம்	தலையணை	பஞ்சு
நடந்தோம்	பாதுகை	ரப்பர்
இறந்தோம்	சவப்பெட்டி	பாடை
எரிந்தோம்	சுடலை	விறகு

வினை அடிகளான பிற, நட, எழுது, மண, துயில், இற, எரி போன்றனவற்றைப் பல முறை கூறச்செய்தல் வேண்டும். தேவையெனின் நிகழ்கால, எதிர்கால வினையமைப்புகளையும் (வினைமுற்று அமைப்புகள்) அறிமுகப்படுத்தலாம்.

இடைத்தொடர், நெடில்தொடர்க் குற்றியலுகரம் வலிமிகும், இரட்டிக்கும்

கண்ணதாசனின் பாடல்கள் கேட்பதற்குத் தேன் போன்று இனிமையானவை என்பது யாவரும் அறிந்ததே! ஆனால் அதனையே கவிஞர் வாலி எவ்வாறு அழகாக எடுத்துரைக்கிறார் என்பதைப் பின்வரும் வரிகளில் காணமுடிகிறது.

‘காட்டுக்குள் தேனீக்கள் கூட்டுக்குள் வைத்ததை

பாட்டுக்குள் வைத்தவன் நீ ‘

இந்தக் கவிதை வரிகளில் உள்ள காட்டு, கூட்டு, பாட்டு ஆகிய சொற்கள் (இவற்றில் உள்ள ‘டகரம்’) யாவும் இரட்டித்து வந்துள்ளன. காடு, கூடு, பாடு ஆகியன நெடில்தொடர்க் குற்றியலுகரமாகும். நெடில்தொடர்க் குற்றியலுகரம் வலிமிகும், இரட்டிக்கும் என்ற இலக்கண விதியைக் கற்பிக்க மேற்கண்ட இலக்கிய வடிவத்தை நன்கு பயன்படுத்திக் கொள்ளலாம் (எடுத்துக்காட்டினைத் தந்து விளக்கலாம்) அல்லவா? அதுபோன்றே இடைத்தொடர்க் குற்றியலுகரம் வலிமிகும், இரட்டிக்கும் என்ற இலக்கண விதியைக் கற்பிக்கவும் ஏதுவாகப் பொருத்தமான இலக்கியப் பகுதியைத் தெரிவுசெய்து கொள்ளவும் வேண்டும்.

மொழி கற்றல் கற்பித்தல் : கருத்துணர் வினாக்கள் / சிந்தனைத்திறன் வளர்த்தல்.

<u>கொடுக்கப்பட்டுள்ள சிறுகதையை (**நிர்மலா ராகவன் எழுதிய *மாதா பிதா குரு தெய்வம்*** என்ற சிறுகதை) படித்தறிந்த பின்னர் கீழ்க்கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு உரிய விடை தருக.</u>

அ) கீழே கொடுக்கப்பட்டுள்ள சொல்லுக்கும் சொற்றொடர்களுக்கும் சூழலுக்கேற்ற பொருள் தந்து விளக்குக..

i) பிஞ்சிலே பழுத்தது

ii) வேலியே பயிரை மேயிறது போல

iii) பச்சாதாபம்

ஆ) இக்கதையில் வரும் உமா எத்தகையப் பண்புகளைப் பெற்று விளங்குகிறாள் என்பதை விளக்குக.

இ) சரோஜா தன் ஆசிரியரின் மீது சுமத்தும் பழியில் எந்த அளவுக்கு உண்மை உள்ளது என்பதை ஆராய்க. கருத்துகளைச் சான்றுகளோடு நிறுவுக.

ஈ) சரோஜா போன்ற மாணவிகள் ஒழுக்கக்கேடான செயல்களில் ஈடுபடுவதற்கு இக்கதையில் கூறப்பட்டுள்ள காரணங்கள் ஏற்புடையனவாக உள்ளனவா? ஏன் அவ்வாறு கருதுகிறீர்கள்?

இங்கே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான – சரியான விடைதருவதற்கு ஏற்றவாறு தமிழ் மொழியமைப்பும் (grammar structure) தமிழ்மொழிப் பயன்பாடும் (use of Tamil) இயைபு படுத்தப்பட்ட நிலையில் கற்றல்-கற்பித்தல் அமையவேண்டும்.

இவ்வகையான இயைபினைக் கற்றுத் தருவதற்குப் பல்வேறு வகையான இலக்கியப் பயன்பாடும் எடுத்துக் காட்டுகளும் தேவைப் படுகின்றன. இதனை மையப்படுத்தியே 'இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பலின்' என்ற கொள்கை வலியுறுத்தப்பட்டும் மேற்கொள்ளப்பட்டும் வருகிறது. மேலும், இன்றைய மொழி கற்றல் - கற்பித்தலில் பெருமளவில் பின்பற்றப்பட்டு வரும் கருத்தாடல் அணுகுமுறையும் (Communicative Approach to Language Learning-Teaching) இந்த அடிப்படையில் அமைந்தது. அதாவது மொழியமைப்பின் சரியான - தெளிவான - நிறைவான பொருண்மையை (Conveyed Meaning) அறிதற்குப் பல்வேறு சமுதாயப் பண்பாட்டுச் சூழல்களும் மொழிப்பயன்பாட்டோடு ஒன்றிச்செல்லும் மொழிச்சாராக் கூறுகளும் (Suprasegmental Features, Body Language, gestures, semiotics) காரணமாகின்றன என்பதனையே இவ்வுணுகுமுறை விளக்குகிறது என்றால் அது மிகையன்று.

இன்னும் சொல்லப்போனால் 'மொழிவெளிப்பாட்டுத் திறனையும் (Linguistic Competence) 'கருத்தறித் திறனையும் / புரிதிறனையும் (Comprehension / Understanding Efficiency) மேம்படுத்துவதற்கேற்ற கற்றல் -- கற்பித்தல் அணுகுமுறைகள் தேவை என்பதையே இன்றையக் கருத்தாடல் தொடர்பான கொள்கைகள் வலியுறுத்துகின்றன என்பதில் ஐயமேதுமில்லை.

<u>மேற்கோள் நூல்கள்</u>

1. அறிஞர் குழு. (2000) வைரமுத்து கவிதைகள். சென்னை : சூர்யா வெலியீடு
2. கருணாகரன், கி. & ஜெயா, வ.(1997) மொழியியல். சிதம்பரம் : மாணிக்கவாசகர் பதிப்பகம்.

3. சண்முகம், செ. (2002) கருத்தாடல் : கருவும் உருவும். சென்னை : மணிவாசகர் பதிப்பகம்.
4. நிர்மலா ராகவன்,(2009) *'மாதா பிதா குரு தெய்வம்',* இலையுதிர் காலம் சிறுகதைத் தொகுப்பு. கோலாலம்பூர் : மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம்.
5. வைரமுத்து. (2000) வைரமுத்து கவிதைகள். சென்னை : திருமகள் நிலையம்.

தமிழ்மொழி கற்றலில் முழுமையான மதிப்பீட்டின் பங்கு

ஆர் சரோஜினி, கிரீன் ரிஜ்ட் தொடக்கப்பள்ளி
சாந்தா சுப்பையா, செயிண்ட் அந்தோணி தொடக்கப்பள்ளி
சிங்கப்பூர்.

கற்றல்-கற்பித்தலின் இன்றியமையாத ஒரு கூறு மதிப்பீடு. அந்த மதிப்பீடு ஏன், யாருக்காக, எப்போது, எவ்வாறு மேற்கொள்ளப்படுகிறது என்பதை அறிந்திருப்பது ஒவ்வோர் ஆசிரியரின் தலையாய கடமையாகும். மதிப்பீட்டின் அடிப்படை நோக்கம் கற்றலை மேம்படுத்துவதும் அளவிடுவதும் ஆகும். மதிப்பீடு அர்த்தமுள்ளதாக அமைவது அவசியம். இக்காரணத்தால்தான் இன்று பல்லேறு உலக நாடுகளின் கல்வி நிறுவனங்கள் மதிப்பீட்டில் தனிக் கவனம் செலுத்தி வருகின்றன. இந்தப் பின்னணியின் அடிப்படையில்தான் சிங்கப்பூர்த் தொடக்கப்பள்ளிகளுக்கான 'பாடக்கலைத்திட்டம் 2008' மதிப்பீட்டை வலியுறுத்தி வருகிறது. *'சிந்திக்கும் பள்ளி கற்கும் நாடு'* என்னும் கல்வி அமைச்சின் இலக்கிற்கேற்ப மாணவர்களுடைய மொழித்திறன்களையும் சிந்தனைத்திறன்களையும் வளர்க்க மதிப்பீடு பெருமளவில் பங்களிக்க முடியும். மாணவர்கள் தங்கள் தேர்ச்சிநிலையையும் கற்றல் இலக்குகளையும் சுயமாகத் தீர்மானிக்க மதிப்பீட்டுமுறை உதவ வேண்டும். பாடத்திட்டம் குறிப்பிடும் கற்றல் அடைவுநிலைகளை (Learning Outcomes) மாணவர்கள் எந்த அளவுக்கு அடைந்துள்ளனர் என்பதை அளவிட மதிப்பீடு பயன்பட வேண்டும். வகுப்பில் கற்பிக்கப்படுபவை மட்டுமே சோதனைக்குட்படுத்தப்பட வேண்டும் எனத் *தமிழ்மொழி மறு ஆய்வு அறிக்கை (2005)* வலியுறுத்துகிறது.

முழுமையான கல்வியின் ஒரு முக்கியக் கூறாக **முழுமையான மதிப்பீடு** உள்ளது என்று சொல்ல முடியும். பல ஆண்டுக்காலமாக நாம் கற்பிக்கப்பட்ட பாடத்தை மாணவர்கள் எந்த அளவுக்குக் கற்றறிந்துள்ளனர் என்பதை கண்டறிய, பாரம்பரிய முறையிலான தேர்வுமுறையைப் பின்பற்றி வந்துள்ளோம். இது கற்றலை மதிப்பிடுதல் (Assessment for Learning) அல்லது முறைசாரா மதிப்பீடு (Summative Assessment) எனப்படுகிறது. அதாவது, மாணவர்கள், எந்த அளவுக்குக் கற்றதைப் புரிந்துவைத்துள்ளனர் என்பதை நிர்ணயிக்கும் ஓர் அளவுகோலாக இது பயன்பட்டு வந்துள்ளது.

அண்மைக்காலமாகச் சிங்கப்பூர்க் கல்வி அமைச்சு கற்றலுக்கான மதிப்பீட்டில் அதிகக் கவனம் செலுத்தி வருவதை அறிவோம். அதாவது, இம்மதிப்பீடு மாணவர்கள்

அடைந்துள்ள கற்றல் அடைவுநிலைகளை மதிப்பிடுவதோடு நின்றுவிடுவதில்லை. அதோடு, அவர்கள் கற்றலில் அடுத்த நிலையை அடைய எத்தகைய கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதையும் ஆசிரியருக்கு அறிவிக்கிறது. அப்படி அந்த மாணவர்கள், விரும்பத்தக்க அடைவுநிலைகளை அடைந்திருக்காவிடில், அவர்களுக்குத் தேவையான வகையில் கற்பித்தல் முறைகளையும் நடவடிக்கைகளையும் மாற்றியமைத்துக் கற்பித்து, அவர்களைத் தேர்ச்சிபெறச் செய்ய இவ்வகை மதிப்பீடு உதவுகிறது. இதனை 'முறைசாரா மதிப்பீடு' (Formative Assessement) என்றும் குறிப்பிடுகிறோம். இத்தகைய மதிப்பீட்டு முறை, மாணவர்களின் கற்றல் நிலைகளைத் தெளிவாக எடுத்துரைக்க உதவுவதோடு, மாணவர்களிடம் தன்னம்பிக்கையையும் வளர்க்கிறது. பெற்றோருக்கும் தத்தம் பிள்ளைகளின் வளர்ச்சி நிலையைக் கண்டறிய இம்முறை உறுதுணையாக விளங்குகிறது.

மாணவர்கள் தங்கள் கற்றலுக்கு முழுப் பொறுப்பேற்க வேண்டும். அதே வேளையில் கற்றலைச் சுகமான அனுபவமாக கருத வேண்டும் என்பனவற்றை அடிப்படையாகக்கொண்டு சிங்கப்பூர்க் கல்வி அமைச்சு முழுமையான மதிப்பீட்டு முறையை 2009-ஆம் ஆண்டு சோதனை திட்டமாகப் பதினாறு தொடக்கநிலைப் பள்ளிகளில் அமல்படுத்தியது. அந்தச் சோதனைத் திட்டப் பள்ளிகளில் எங்கள் இரு பள்ளிகளும் அடங்கும்.

பின்வரும் காரணங்களுக்காக முழுமையான மதிப்பீட்டுமுறை சோதனைத் திட்டமாகச் செயற்படுத்தப்பட்டது.

1. *தொடக்கக்கல்வி மறு ஆய்வு மற்றும் அமலாக்கக்குழுவின்* PERI (Primary Education Review and Implementation) பரிந்துரைகளுக்கேற்பக் கல்வி அமைச்சும் சோதனைப் பள்ளிகளும் ஒன்றிணைந்து முழுமையான மதிப்பீட்டை அமல்படுத்துதல்
2. சோதனைப் பள்ளிகள் செயற்படுத்தி வெற்றிகண்ட மதிப்பீட்டு முறைகளுள் பயன்மிகு வழிமுறைகளை மட்டும் தேர்ந்தெடுத்து அவற்றைச் செம்மைப்படுத்துதல்
3. பயன்முனைப்புமிக்க மதிப்பீட்டுச் செயல்முறைகளை எல்லாப் பள்ளிகளிலும் முறைப்படுத்த வழிவகுத்தல்

பள்ளிகளில் முழுமையான மதிப்பீட்டு முறையை அமலாக்கம் செய்வதற்குக் கல்வி அமைச்சு சோதனைப் பள்ளிகளுக்குப் பல்வேறு வகைகளில் உறுதுணையாக இருந்தது. முதலில், முழுமையான மதிப்பீடு தொடர்பாக ஆசிரியர்களுக்குப் பயிலரங்கங்கள்

நடத்தப்படடன. அப்பயிலரங்கங்களின்போது முழுமையான மதிப்பீடுபற்றிய விவரங்கள் விளக்கமாக எடுத்துரைக்கப்பட்டன. அவற்றோடு முழுமையான மதிப்பீட்டு முறையை வகுப்பறைக் கற்பித்தலின்போது எவ்வாறு செயற்படுத்துவது, வளங்களை எவ்வாறு தயாரிப்பது போன்றவையும் உதாரணங்களுடன் சுட்டிக்காட்டப்பட்டன.

கல்வி அமைச்சின் அதிகாரிகள் அவ்வப்போது பள்ளிகளுக்கு வருகை மேற்கொண்டு தமிழாசிரியர்களுடன் கலந்துரையாடிப் பள்ளிகள் எதிர்நோக்கும் சிக்கல்கள்பற்றி அறிந்துகொண்டனர். அதோடு அவற்றைக் களைய எல்லா வகைகளிலும் உதவிக்கரமும் நீட்டினர்.

கல்வி அமைச்சு நடத்திய பயிலரங்கங்களுக்குப் பின்னர், ஒவ்வொரு சோதனைப் பள்ளியைச் சேர்ந்த ஆசிரியர்களும் முழுமையான மதிப்பீட்டுத் திட்டத்தை அமலாக்கம் செய்யுமாறு களத்தில் இறங்கினர். பள்ளி முதல்வர் தொடங்கி அனைத்துப் பாட ஆசிரியர்கள் வரையிலும் முழுமையான மதிப்பீடுசார்ந்த பயிலரங்குகளும் கூட்டங்களும் அவர்களுக்கு நடத்தப்பட்டன. அதற்குத் துணையாக எங்கள் பள்ளி முழுமையான மதிப்பீட்டுக்கான பணிச்சட்டம் ஒன்றை உருவாக்கியது. அதில் நான்கு முக்கியப் பிரிவுகள் உள்ளன. அவை திட்டமிடுதல், அமலாக்குதல், அறிவித்தல், மறு ஆய்வு மேற்கொள்ளுதல் என்பன.



1. திட்டமிடுதல்

திட்டமிடப்படாத எந்தவொரு காரியமும் வெற்றி காணாது என்பதற்கேற்ப முழுமையான மதிப்பீடடுத் திட்டத்தைப் பள்ளிகளில் செம்மையாக அமல்படுத்துவதற்காக ஒரு தனிக்

குழு ஒன்று அமைக்கப்பட்டது. அக்குழுவில் பள்ளியின் மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் இடம்பெற்றனர். அவர்கள் பள்ளியின் இலக்கு, கொள்கைகள், மாணவர்களின் கற்றல் தேவைகள் முதலியவற்றைக் கருத்திற்கொண்டு பள்ளிசார் மதிப்பீட்டுத் திட்டத்தை உருவாக்கினர்.

அதனைத் தொடர்ந்து, தாய்மொழித் துறையின் (சீனம், மலாய், தமிழ்) பாட மதிப்பீட்டுத் திட்டங்கள் வரையப்பட்டன. அவை மொழித்திறன்களை முறைசார்ந்த மதிப்பீட்டுமுறையிலும் முறைசாரா மதிப்பீட்டுமுறையிலும் மதிப்பிட உதவின. ஒவ்வொரு தவணைக்கும் மூன்று மொழிகளுக்குமே ஒரே மதிப்பளவு வழங்குவதாக முடிவெடுக்கப்பட்டது.

2. அமலாக்கம்

➢ பணித்திட்டத்தில் இணைத்தல்

கல்வியாளர்கள் கற்பித்தலையும் மதிப்பீட்டையும் ஒருங்கிணைத்துக் கற்பிப்பதன் அவசியத்தை வலியுறுத்தி வந்துள்ளனர். எனவே, கற்றலைப் பாட இறுதியில் மட்டும் மதிப்பீடு செய்யாமல், கற்றல் கற்பித்தல் நிகழும்போதே அதை மதிப்பீடு செய்வது அவசியமாகிறது. இதை அடிப்படையாகக்கொண்டு பள்ளிகளில் நடப்பில் இருக்கும் தமிழ்மொழிப் பணித்திட்டத்தில் முழுமையான மதிப்பீட்டை ஒருங்கிணைத்துப் புதிய பணித்திட்டம் உருவாக்கப்பட்டது.

➢ பாடக்குறிப்புகள் தயாரித்தல்

முழுமையான மதிப்பீட்டை முறையாகச் செயற்படுத்த பாடக்குறிப்புகள் தேவைப்பட்டன. பதினாறு சோதனைப் பள்ளிகள் தனிநிலையில் பாடக்குறிப்புகளை உருவாக்கின. பயிலரங்கங்களின்போது பெற்ற முழுமையான மதிப்பீடுபற்றிய விவரங்களைப் பாடக்குறிப்புகள் உருவாக்கும்போது பயன்படுத்துவதற்கான வாய்ப்புக் கிடைத்தது. கல்வி அமைச்சு அதிகாரிகளின் வழிகாட்டுதலுடன் பாடக்குறிப்புகள் செம்மைப்படுத்தப்பட்டன. பிறகு அவை edumall2.0 என்னும் இணையத்தளத்தில் ஏற்றம் செய்யப்பட்டன. பல பள்ளிகளும் தயாரித்தளித்த இப்பாடக்குறிப்புகள் இன்று பள்ளிகளுக்குச் சிறந்த வளங்களாகப் பயன்பட்டு வருகின்றன. மாதிரிப் பாடங்களில் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பீட்டு நடவடிக்கைகளை நடத்துவதற்கு முன்பாக, ஆதார

நடவடிக்கைகள் (Scaffolding) நடத்தப்பட்டன. பாடத்தின்போது எழுப்பக்கூடிய வினாக்கள் (Questioning) செயல்திறன் மதிப்பீடு முதலானவை பாடக்குறிப்புகளில் உள்ள பாட வளர்ச்சியில் இணைக்கப்பட்டன.

- **செயற்படுத்துதல்**

வகுப்பறைகளில் முழுமையான மதிப்பீட்டு முறைகளை இணைத்துப் பாடங்கள் நடத்தப்பட்டன. ஒவ்வொரு பாடத்தின் தொடக்கத்திலும் மாணவர்களிடம் கற்றல் குறிக்கோள்கள் எடுத்துரைக்கப்பட்டன. இதன்வழி மாணவர்கள் பாட இறுதியில் அடைய வேண்டிய இலக்கை நன்கு புரிந்துகொண்டு அதற்கேற்பச் செயற்பட்டனர். கேள்வி கேட்டல், கருத்துத் தெரிவிப்பு (feedback) முதலிய மதிப்பீட்டு முறைகள் அதிக அளவில் பாடங்களின்போது பயன்படுத்தப்பட்டன. மாணவர்களின் செயல்திறனை வெளிக்காட்டப் பல வாய்ப்புகள் ஏற்படுத்தித் தரப்பட்டன. இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்தது *பொருளைக் காட்டிப் பேசும்* (Show-and-Tell) செயல்திறன் நடவடிக்கையாகும். பொருளைக் காட்டிப் பேசும்போது மாணவர்களுக்கு மூன்று நிலைகளில் கருத்துகள் வழங்கப்பட்டன. முதலில், மாணவர்கள் சுயமாகத் தங்கள் செயல்திறன் மதிப்பீட்டின்போது சொல்ல விரும்பும் கருத்துகளை இணைநிலையில் கூறுவர். கருத்துகளைக் கேட்ட சக மாணவர்கள் கருத்துத் தெரிவிப்பர். அடுத்து, ஆசிரியர் அம்மாணவர்களின் வாய்மொழிப் படைப்பின்போது கருத்துத் தெரிவிப்பார். இறுதியாக, பொருளைக் காட்டிப் பேசிய மாணவர் தம்முடைய செயல்திறனைப்பற்றிச் சுய மதிப்பீடு செய்து வகுப்பினரிடம் தம் தேர்ச்சிநிலைபற்றியும் கற்றலின் அடுத்த குறிக்கோள்பற்றியும் கூறுவார். இந்த மூன்று நிலைகளிலும் மாணவர்கள் தங்கள் படைப்புக்குறித்து நிறைகள், குறைகள், மேம்பாட்டிற்கான ஆலோசனைகள் ஆகியவற்றைப் பெறுவர்.

3. அறிவித்தல்

முழுமையான மதிப்பீட்டு முறையில் மாணவர்களுக்குப் பல்வேறு செயல்திறன் பயிற்சிகளும் சிறு சிறு தேர்வுகளும் தொடர்ச்சியாக நடத்தப்பட்டன. அவற்றை முறையாகப் பெற்றோருக்கு அறிவிக்கப் பல்வேறு முறைகள் கையாளப்பட்டன.

1. செயல்திறன் கோப்புகள் (Performance Portfolio) – இவற்றில் மாணவர்களின் செயல்திறனை வெளிக்காட்டும் வகையில் சில முன்மாதிரிப் படைப்புகள் வைக்கப்பட்டன. அதோடு ஆசிரியர் வழங்கிய கருத்துத் தெரிவிப்பு

விளக்கக்குறிப்புகள், சரிபார்ப்புப் பட்டியல் (Checklist) போன்றவையும் வைக்கப்பட்டன.

2. கருத்துரையாடல் (Conferencing) வாயிலாகவும் பெற்றோருக்கு மாணவர்களின் செயல்திறன் தேர்ச்சிநிலை குறித்து அறிவிக்கப்பட்டது.

4. மறு ஆய்வும் மதிப்பீடும்

ஒவ்வொரு தவணை அல்லது பருவத்துக்கு இறுதியில் முழுமையான மதிப்பீடு தொடர்பாக மறு ஆய்வும் மதிப்பீடும் (Review and Assessment) மேற்கொள்ளப்பட்டது. அவ்வாறு மேற்கொள்ளும்போது பின்வருவனவற்றில் கவனம் செலுத்தப்பட்டது.

- மாணவர்கள் கண்டுள்ள முன்னேற்றம் பற்றிய தகவல்கள் சேகரித்தல்
- சேகரித்த தகவல்களை ஆராய்ந்து மாணவர்களின் முன்னேற்றத்தை மையமாகக் கொண்டு குறித்த நேரத்தில் கருத்துத் தெரிவித்தல்
- கற்றல் கற்பித்தல் பற்றிப் பிரதிபலித்தலும் முன்னேற்றத்திற்கான வழிமுறைகளில் ஈடுபடுதலும்

முழுமையான மதிப்பீட்டின் பயன்கள்

இனி முழுமையான மதிப்பீட்டை அமல்படுத்தும்போது அனுபவப்பூர்வமாகக் கண்டறிந்த சில பயன்களைப் பார்ப்போம்.

1. மாணவர்களின் தன்னம்பிக்கை மேம்பட்டுள்ளது. அவர்களால் தற்போது வகுப்பின்முன் வந்து தங்கள் கருத்துகளைத் தன்னம்பிக்கையுடன் தெளிவாகவும் சரளமாகவும் கூற இயல்கிறது.

2. மாணவர்கள் மகிழ்ச்சியாகவும் விருப்பத்தோடும் கற்பதைப் பார்க்க முடிகிறது. ஆசிரியரின் எதிர்பார்ப்புகளை மாணவர்கள் நன்கு அறிந்துவைத்துள்ளனர். இம்முறையில் மாணவர்கள் தங்கள் கற்றல் தேர்ச்சி குறித்து அடிக்கடி கருத்துகளைப் பெறுகின்றனர். எனவே, அவர்களுக்குத் தமது நிறைகள், குறைகள் ஆகியவற்றை நன்கு அறிந்துகொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது.

3. முழுமையான மதிப்பீடு அமலாக்கம் கண்டதிலிருந்து மாணவர்கள் அனைவரும் பாடங்களில் முழு ஈடுபாடு காட்டுவதும் கண்கூடு. இதற்கு முக்கியக் காரணம் அவர்களுக்குத் தம் சக நண்பர்களின் படைப்புகளையொட்டிக் கருத்துத் தெரிவிக்கும்

வாய்ப்புக் கிடைத்ததாலாகும். அதே நேரத்தில் மற்றவர்களுக்குக் கூறப்படும் கருத்துகளைக் கேட்டுத் தங்களை மேம்படுத்திக்கொள்ளவும் இம்மதிப்பீடு உதவுகிறது.

4. அதோடு பெற்றோர்-ஆசிரியர் ஆகிய இரு சாராரும் மாணவர்களை நன்கு அறிந்துகொள்ள முழுமையான மதிப்பீட்டு முறை பெரிதும் உதவுகிறது. மேலும், பெற்றோர்கள் தம் பிள்ளைகளின் முன்னேற்றத்தில் அதிக அக்கறை செலுத்துவதையும் காண முடிகிறது.

எதிர்நோக்கிய சிக்கல்கள்

1. நேரம் பற்றாக்குறை ஒரு மிகப் பெரும் சவாலாக அமைந்தது. ஒவ்வொரு முறையும் விரிவாகக் கருத்துத் தெரிவிப்பதற்குக் கூடுதல் நேரம் தேவைப்பட்டது என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

2. தேவையான வளங்களைத் தயாரிப்பதற்கான கால அவகாசம் மிகவும் குறைவாகவே இருந்தது. அதனால், மிகவும் துரிதமாகத் திட்டமிட்டுச் செயற்பட வேண்டியிருந்தது.

3 மூன்று தாய்மொழிகளுக்கிடையே ஒருங்கிணைந்த மதிப்பீட்டுத் திடடத்தை உருவாக்குவதில் சில சிக்கல்கள் இருந்தன. வெவ்வேறு மொழித்திறன்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய விகித அளவு, திட்டமிடப்பட்ட தேர்வுகளின் கடினத்தன்மை, சோதிக்கப்பட வேண்டிய கூறுகள், போன்றவற்றில் ஒற்றுமையைக் காட்டுவது நாங்கள் எதிர்நோக்கிய சிக்கல்களில் சில.

4 எல்லாத் தரப்பினரையும் இந்த முறையைப் ஏற்றுக்கொள்ளச் செய்வதில் பொறுமை தேவைப்பட்டது.

மேற்கொள்ளப்பட்ட தீர்வுகள்

1. அவ்வப்போது சோதனைப் பள்ளிகள் ஒன்றிணைந்து வளங்களைத் தயாரித்தன. மேலும், சில சமயங்களில் பாடக்குறிப்புகளும் பள்ளிகளுக்கிடையே பரிமாறிக்-கொள்ளப்பட்டன.

2. கூடுதலான நேரத்தை எடுத்துக்கொண்டு அந்தந்த மொழிகளுக்குரிய சிறப்புக் கூறுகளைப்பற்றிக் கலந்துபேசி மூன்று மொழிகளுக்கிடையே ஒருமித்த கருத்துக்கு வர முயன்றது.

3. பெற்றோரைச் சந்திப்பதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொண்டு அவர்களிடம் முழுமையயான மதிப்பீட்டின் பயன்கள்பற்றி விளக்கப்பட்டன.

முடிவுரை

“மாணவர்களுக்குத் தமிழ்மொழி கற்றல் ஒரு சுவையான அனுபவமாக அமைய வேண்டும். மதிப்பீட்டை முறையாகக் கையாள்வது அதற்கு நிச்சயம் துணைபுரியும். சிங்கப்பூரில் தமிழ் வாழும் மொழியாகத் திகழ, மாணவர்கள் தங்கள் தாய்மொழியை உணர்வுபூர்வமாக விரும்பிப் படிக்க வேண்டும். இந்த இலக்கை அடைய மதிப்பீட்டிற்கும் ஒரு முக்கியப் பங்குண்டு. மதிப்பீடு அர்த்தமுடையதாக அமையும்போது, மாணவர்களுக்கு அது சுமையாகத் தோன்றாது.”
(*Adapted from edumall, Ministry of Education, Singapore)*

இதனை அடிப்படையாகக்கொண்டுதான் ஆசிரியர்கள் முழுமையான மதிப்பீட்டைச் செயற்படுத்தி வருகின்றனர். முழுமையான மதிப்பீட்டின் அடிப்படையில் ஒருவர் தமிழ்க் கல்வி கற்பாரேயானால் அவர் தமிழ்மொழியில் சிறப்புத் தேர்ச்சி பெறுவதோடு தம் தாய்மொழியான தமிழை விரும்பிப் புழங்கவும் போற்றவும் செய்வர்.

தமிழ் தகவல் இணையத் தளங்கள் : ஓர் ஆய்வு

சு.கோதைநாயகி
உதவிப் பல்கலைக்கழக நூலகர், அண்ணாப் பல்கலைக்கழகம்
இந்தியா

முன்னுரை

இன்றைய விஞ்ஞான உலகில் இணையம் முதல் பன்மொழி ஊடகமாக திகழ்கிறது. உலகம் முழுவதிலும் உள்ள மக்களில் குறிப்பிட்ட விஷயங்களில் ஒருங்கமைப்பு உடையவர்களை இணைக்கும் மிகப்பெரியத் தகவல் ஊடகமாகவும்இ தகவல் பதிவு ஃ பரிமாற்ற சாதனமாகவும் இணையம் திகழ்கிறது.

இன்று இணையத் தகவல்கள் உலகின் பல மொழிகளில் இடம் பெற்றிருந்த போதிலும், பெரும்பாலானவை ஆங்கிலத்தை சார்ந்தே அமையப்பட்டுள்ளன. இதைப்போன்ற பெரும்பாலான இணையத் தகவல் தேடும் மென்பொறியும் (தேடுபொறி) ஆங்கில மொழியையே சார்ந்து அமைந்திருக்கிறது.

இன்றைய காலகட்டத்தில், இணையத்தில் தமிழ் மொழியின் பங்கும் அதிகரித்துக் கொண்டே வருகின்றது. செம்மொழியாம் தமிழ் மொழி காலத்திற்கு ஏற்ற வகையில் தன்னை வளர்த்துக் கொண்டே வருகின்றது. ஏறக்குறைய இணையப்பயன்பாட்டில் தமிழ்மொழி குறித்த தகவல் பரிமாற்றம் உலக அளவில் இரண்டாம் இடத்தில் இருப்பதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

உலகம் முழுவதும் பரவி வாழும் தமிழர்களை, இணையவழி தமிழ் மொழியால் இணைத்திருப்பது தகவல் தொழில்நுட்பத்தின் புரட்சியே ஆகும். தமிழ் மொழியைக் கற்கவும், கற்பிக்கவும் இணையத் தளங்கள் அதிகம் பெருகி உள்ளன.

தமிழ் இணையத்தளங்கள்

இன்றைய நிலையில் தமிழில் 19071 இணையத்தளங்கள் பயன்பாட்டில் இருக்கின்றன. இந்த இணையத்தளங்கள் பல்லேறு தலைப்புகளின் பின்வரும் அட்டவணை–1-இல் பகுக்கப்பட்டு பட்டியலிடப்பட்டிருக்கின்றன.

[1] www.tamildomain.com/topsites

அட்டவணை – 1 : பல்லேறு தலைப்புகளில் தமிழ் இணையத்தளங்களின் பகிர்வு

எண்	தலைப்புகள்	எண்ணிக்கை	விழுக்காடு
1.	மின்கல்வி வளச் சாதனங்கள்	31	1.63
2.	மின்னிதழ்கள்	42	2.20
3.	பொழுதுபோக்கு	1247	65.39
4.	குழுமம்	5	0.26
5.	ஊடகம்	77	4.04
6.	செல்லிடைப்பேசி	19	0.99
7.	தனித்துவம்	73	3.83
8.	ஒளிப்படங்கள்	26	1.36
9.	வலைவாசல்கள்	23	1.21
10.	மதநல்லிணக்கம்	36	1.90
11.	தேடுபொறி	13	0.68
12.	இசைக்கூறுகள்	148	7.76
13.	துணைநிலை ஆதாரங்கள்	48	1.42
14.	ஆராய்ச்சி நிறுவனங்கள்	34	1.78
15.	தமிழ் சேவைகள்	27	8.12
16.	மற்றவை	58	2.46
	மொத்தம்	**1907**	**100**

இன்றைய சமுதாயம் இணையத்தளத்தையே சார்ந்து இருப்பதால் இத்தகைய இணையத்தளங்களின் சிரத்தன்மை, மற்றும் நிலைத்தன்மையை ஆராய வேண்டிய நிர்பந்தம் உள்ளது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள கூறுபாடுகளில் தமிழ் கற்றல், கற்பித்தல் ஆகியவற்றிக்கான இணையதளங்களைக் கொண்டுள்ளன. இந்த ஒவ்வொரு கூறுபாடுகளிலிருந்தும், நான்கு இணையத்தளம் வீதம், மொத்தம் இருபது இணையத்தளங்கள் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

அட்டவணை – 2 :

ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட தமிழ் இணையத்தளங்களின் கூறுபாடுகள்

எண்	தலைப்புகள்	எண்ணிக்கை	விழுக்காடு
1.	மின்கல்வி வளச் சாதனங்கள்	4	20
2.	மின்னிதழ்கள்	4	20
3.	வலைவாசல்கள்	4	20
4.	துணைநிலை ஆதாரங்கள்	4	20
5.	தமிழ் மொழி ஆராய்ச்சி நிறுவனங்கள்	4	20
மொத்தம்		**20**	**100**

மின்கல்வி வளச் சாதனங்கள், மின்னிதழ்கள், வலைவாசல்கள், துணைநிலை ஆதாரங்கள் மற்றும் தமிழ் மொழி ஆராய்ச்சி நிறுவனங்கள் ஆகிய ஐந்து கூறுபாடுகளைத் தேர்வு செய்து, இந்த ஒவ்வொரு கூறுபாடுகளிலிருந்தும், நான்கு இணையத் தளங்கள் தேர்வுச் செய்யப்பட்டு, மொத்தம் இருபது இணையத்தளங்கள் ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

இந்த ஆய்வில் இணையத்தளங்களின்; சிரத்தன்மை, நிலைத்தன்மை ஆகியவற்றை கண்டறிவதற்காகக் கூகுள் (கூகிள்) பேஜ்ரேங்க்(Google PageRank), அலெக்ஸா மதிப்பு (alexa traffic rank), கூகுள் இன்டெக்ஸ் (Google Index), யாஹு இன்டெக்ஸ் (Yahoo Index), பிங் இன்டெக்ஸ் (Bing Index), யான்டெக்ஸ் இன்டெக்ஸ் (Yandex Index) மற்றும் டெலிஷியஸ் இன்டெக்ஸ் (Delicious Index) ஆகியவை பயன்படுத்தப்பட்டன.

தேர்வு செய்யப்பட்ட இணையத்தளங்களின் பாகுபாடுகள்

துணைக்கள பின்னொட்டு என்பது ஒரு இணையத்தள முகவரியின் இறுதியில் இடம் பெறும் பகுதியாகும். துணைக்கள பின்னொட்டுகள் இணையத் தேடுதலின்போது சில நேரங்களில் முக்கியத்துவம் அளிக்கப்படுவதால் ஆய்விற்கு தேர்வுச் செய்யப்பட்ட

இருபது இணையத்தளங்களைத் துணைக்கள பின்னொட்டுகள் கொண்டு பகுக்கப்பட்டு அட்டவணையிடப்பட்டன.

அட்டவணை – 3 : இணையதளங்களின் துணைக்கள பின்னொட்டுகள்

எண்	துணைக்கள பின்னொட்டுகள்	எண்ணிக்கை	விழுக்காடு
1.	.com	14	70
2.	.edu	2	10
3.	.in	1	5
4.	.org	3	15
மொத்தம்		**20**	**100**

மேற்கூறிய அட்டவணை–3-இன் படி, .com என்னும் துணைக்கள பின்னொட்டு எழுபது விழுக்காடும், .org பதினைந்து விழுக்காடும், .edu பத்து விழுக்காடும், .in ஐந்து விழுக்காடும் பெற்றுள்ளது அறியப்படுகிறது.

மேலும், இந்தக் கூறுபாடுகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட இருபது இணையத்தளங்களின் சராசரி கூகுள் பேஜ்ரேங்கினை கண்டறிந்து, கூறுபாடுகள் தரவரிசைப்படுத்தப்பட்டுக் கீழ்கண்ட அட்டவணை–4-இல் கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை – 4 : சராசரி கூகுள் பேஜ்ரேங்கின் படி இணையத்தளங்களின் மதிப்பீடு

எண்	தலைப்புகள்	சராசரி கூகுள் பேஜ்ரேங்க்	தரம்
1.	மின்கல்வி வளச்சாதனங்கள்	3.75	2
2.	மின்னிதழ்கள்	3.00	4
3.	வலைவாசல்கள்	2.75	5
4.	துணைநிலை ஆதாரங்கள்	4.00	1
5.	தமிழ் மொழி ஆராய்ச்சி நிறுவனங்கள்	3.50	3

இதன் மூலம், இந்த 5 கூறுபாடுகளில் துணைநிலை ஆதாரங்கள் முதலாவது இடத்தையும், மின்கல்வி வளச் சாதனங்கள் இரண்டாவது இடத்தையும், தமிழ் மொழி ஆராய்ச்சி நிறுவனங்கள் மூன்றாவது இடத்தையும் பெற்றுள்ளன.

இந்தத் தரவரிசையை ஒப்பிடுவதற்காக அலெக்ஸா மதிப்பு முறையும் பயன்படுத்தப்பட்டன. கணக்கிடப்பட்ட சராசரி அலெக்ஸா மதிப்புக் கொண்டு இந்த கூறுபாடுகள் தரவரிசைப்படுத்தப்பட்டன. அலெக்ஸா மதிப்பு முறை மற்றும் இணையத்தளங்களின் தரவரிசை அட்டவணை–5-இல் கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை – 5 : அலெக்ஸா மதிப்பு முறைக் கொண்டு இணையத்தளங்களின் மதிப்பீடு

எண்	தலைப்புகள்	சராசரி அலெக்ஸா மதிப்பு	தரம்
1.	மின்கல்வி வளச்சாதனங்கள்	28,03,571.75	4
2.	மின்னிதழ்கள்	8,14,587.50	2
3.	வலைவாசல்கள்	41,11,319.75	5
4.	துணைநிலை ஆதாரங்கள்	6,04,378.00	1
5.	தமிழ் மொழி ஆராய்ச்சி நிறுவனங்கள்	10,83,301.75	3

மேற்கூறிய இரு தரவரிசைகளையும் (கூகுள் பேஜ்ரேங்க் மற்றும் அலெக்ஸா மதிப்பு முறை) ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, துணை நிலை ஆதாரங்கள் முதல் இடத்தையும், தமிழ் மொழி ஆராய்ச்சி நிறுவனங்கள் மூன்றாம் இடத்தையும் ஒருசேரப் பெற்றுள்ளன. இரண்டாம் இடம் அலெக்ஸா மதிப்பைப் பொறுத்தவரை மின்னிதழ்கள் கூறுபாட்டிற்குக் கொடுக்கப்பட்டுள்ளன.

மேலும், இந்த இணையத்தளங்களின் உள்தொடுப்புகள், வெளித்தொடுப்புகள் முறையே கண்டறியப்பட்டு அட்டவணை–6-இல் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

அட்டவணை–6: உள்தொடுப்புகள் மற்றும் வெளித்தொடுப்புகளின் விகிதாசாரப்படி இணையத்தளங்களின் மதிப்பீடு

எண்	தலைப்புகள்	உள்தொடுப்புகள்	வெளித்தொடுப்புகள்	உள்தொடுப்புகள் மற்றும் வெளித்தொடுப்புகளின் விகிதாசாரம்
1.	மின்கல்வி வளச்சாதனங்கள்	68.75	14.75	4.66:1
2.	மின்னிதழ்கள்	106.75	3.25	32.8:1
3.	வலைவாசல்கள்	51.00	1.50	34:1
4.	துணைநிலை ஆதாரங்கள்	24.75	2.25	11:1
5.	தமிழ் மொழி ஆராய்ச்சி நிறுவனங்கள்	24.75	6.00	4.13:1

இதன் மூலம், இணையத்தளங்களின் உள்தொடுப்புகள், வெளித்தொடுப்புகள் மற்றும் அவைகளின் விகிதாசாரம் கண்டறியப்பட்டு அட்டவணையிடப்பட்டிருப்பது தெரியவந்துள்ளது.

இதனால் தெரியவருவது யாதெனில், உள்தொடுப்புகள் அதிகமாக இருப்பின், அந்த குறிப்பிட்ட இணையத்தளம் பற்றியச் செய்திகளை அதிகம் அறிந்து கொள்ள முடியும். வெளித் தொடுப்புகள் அதிகம் இருப்பின், இணையத்தளம் சார்ந்த தகவல்கள் அதிகம் பெறக்கூடிய வாய்ப்புகள் அதிகம் என்று நாம் கருத்தில் கொள்ளலாம்.

அட்டவணை–7: இணையத்தளங்களும் அதன் கூகுள் இன்டெக்ஸ், யாஹூ இன்டெக்ஸ், பிங் இன்டெக்ஸ், யான்டெக்ஸ் இன்டெக்ஸ், மற்றும் டெலிஷியஸ் இன்டெக்ஸ் மதிப்புகளும்.

எண்	தலைப்புகள்	கூகுள் இன்டெக்ஸ்	தரம்	யாஹூஇன்டெக்ஸ்	தரம்	பிங் இன்டெக்ஸ்	தரம்	யான்டெக்ஸ் இன்டெக்ஸ்	தரம்	டெலிஷியஸ் இன்டெக்ஸ்	தரம்
1.	மின்கல்வி வளச்சாதனங்கள்	**12,055**	**5**	**8,533**	**3**	**1,939.5**	**3**	**23**	**5**	**29.5**	**4**
2.	மின்னிதழ்கள்	**3,09,002**	**2**	**2,638.5**	**4**	**476**	**5**	**26**	**4**	**4.5**	**5**
3.	வலைவாசல்கள்	**63,246.5**	**3**	**24,542**	**1**	**9,175**	**1**	**339**	**3**	**5.5**	**1**
4.	துணைநிலை ஆதாரங்கள்	**17,628.5**	**4**	**12,480.75**	**2**	**4,721.75**	**2**	**409.75**	**2**	**18.75**	**2**
5.	தமிழ் மொழி ஆராய்ச்சி நிறுவனங்கள்	**5,62,868.25**	**1**	**1,982**	**5**	**1,445**	**4**	**863.25**	**1**	**4**	**1**

மேலும், அட்டவணை–7-இல் கொடுக்கப்பட்டிருக்கும் கூகுள் இன்டெக்ஸ் மற்றும் அதன் தரம், யாஹூ இன்டெக்ஸ் மற்றும் அதன் தரம், பிங் இன்டெக்ஸ் மற்றும் அதன் தரம், யான்டெக்ஸ் இன்டெக்ஸ் மற்றும் அதன் தரம், டெலிஷியஸ் இன்டெக்ஸ் மற்றும் அதன் தரம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு பார்க்கும்போது, தமிழ் மொழி ஆராய்ச்சி நிறுவனங்கள், வலைவாசல்கள், துணைநிலை ஆதாரங்கள், மற்றும் மின்கல்வி வள

சாதனங்கள் ஆகிய கூறுபாடுகள் முன்னணி இடங்களைப் பெற்றுள்ளதை அறிய முடிகிறது.

முடிவுரை

தமிழ் கற்றல், கற்பித்தல் ஆகியவற்றுக்கு இன்றைய நிலையில் இணையத்தளங்கள் உறுதுணையாக உள்ளன. இந்த ஆய்வில் கண்டறிந்தபடி தமிழ் கற்றல், கற்பித்தல் முறைகளை மின்கல்வி வளச்சாதனங்கள் ஆகிய மின்னிதழ்கள், வலைவாசல்கள் மற்றும் தமிழ் மொழி ஆராய்ச்சி நிறுவனங்கள் மூலம் பயிற்றுவித்தல் மிகவும் பயனளிக்கும். மேலும் இன்றைய சமுதாயமும் இதனையே அதிகம் விரும்புவது தெள்ளத் தெளிவாகிறது. இன்றைய இணையத்தளங்களின் சிரத்தன்மையையும் நிலைத்தன்மையையும் அதிகரிப்போமேயானால் தமிழ் மொழி கற்றல் உலகளாவிய அளவில் வளரும் என்பது திண்ணம்.

ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இணையத்தளங்களும் அவற்றின் ஒருசீர் வள இடங்குறிப்பிகளும் (URLs)

எண்	இணையதளத்தின் பெயர்	ஒருசீர் வள இடங்குறிப்பிகள்
1.	Learn Tamil through English	www.learntamil.com
2.	Online Tamil Library	www.chennailibrary.com
3.	Tamil Internet Library for Kids	www.kids.noolagam.com
4.	Web Assisted Learning and Teaching of Tamil (WALTT)	http://ccat.sas.upenn.edu/plc/tamilweb/tamil.html
5.	Free English to Tamil Dictionary	www.tamilpadi.com
6.	Kaanthalakam	www.tamilnool.com
7.	Online English-Tamil Dictionary	www.tamildict.com
8.	Online Tamil Dictionary	www.agaraadhi.com
9.	Andhimazhai	www.andhimazhai.com
10.	Koodal	www.koodal.com
11.	Modern Tamil World	www.moderntamilworld.com
12.	Tamil Nadu Online	www.tamilnaduonline.org

எண்	இணையதளத்தின் பெயர்	ஒருசீர் வள இடங்குறிப்பிகள்
13.	Ezilnila	http://ezilnila.com
14.	Keetru	www.keetru.com
15.	Nilacharal	www.nilacharal.com
16.	Tamil Oviam	www.tamiloviam.com
17.	Association for Tamil Computing	www.kanithamizh.in
18.	Roja Muthiah Research Library (RMRL) Project	www.lib.uchicago.edu/e/su/southasia/ rmrl.html
19.	Tamil Foundation – Malaysia	www.tamilfoundation.org
20.	Tamil Heritage Foundation	www.tamilheritage.org

தமிழ்மொழி கற்றல் கற்பித்தலில் நோக்கல் கருத்தறிதல்

Dr. எம். ஆண்டாள்
பீட்டி உயர்நிலைப் பள்ளி, சிங்கப்பூர்.

இன்றைக்கு வகுப்பறைகளில் தமிழ்கற்பிக்கும் பொழுது மாணவர்களின் கவனத்தை ஈர்ப்பதற்கும் பாடப்பொருளை மேலும் விளக்குவதற்கும் பாடத்தைச் சுவாரசியமாக ஆக்குவதற்கும் திரைப்படக் காட்சிகள் அல்லது பாடத்தோடு தொடர்புடைய ஒளிப்படக்காட்சிகளைப் பயன்படுத்துகிறோம். அந்த வகையில் இது போன்ற (வீடியோ) ஒளிப்படக் காட்சிகளில் சிலவற்றைக் கேட்டல் கருத்தறிதல் போன்று நோக்கல் கருத்தறிதலாகப் பயன்படுத்தப்பட்டன. இதனால் அதிகப் பயன்கிடைத்தது. மாணவர்களிடம் மொழிக்கூறுகளையும், மொழித்திறன்களையும், கற்பித்ததோடு பண்பாட்டையும் எளிதில் கொண்டு சேர்க்க முடிந்தது. எடுத்துக் கூறுவதைவிட நேரடியாகக் காட்சிகளின் மூலம் பார்ப்பது மாணவர்களின் புரிந்துணர்வையும் மேம்படுத்தியது. அதன் விளைவுதான் இந்தப்பகிர்வும் கட்டுரையும் ஆகும்.

படக்காட்சிகளை நோக்கல் கருத்தறிதலாகப் பயன்படுத்தியபொழுது மாணவர்களின் வகுப்பு, மாணவர்களின் நிலை முதலியவை கவனத்தில் கொள்ளப்பட்டன. வகுப்பு என்பது விரைவுநிலை, வழக்கநிலை, வழக்கநிலை தொழில்நுட்பப் பிரிவு ஆகியவற்றைக் குறிக்கும். மாணவர்களின் நிலை என்று சொல்லும்போது மீத்திறன் மிக்கவர்கள், சராசரி நிலையில் உள்ளவர்கள், சராசரிக்கும் குறைந்த நிலையில் உள்ளவர்கள் என்பதாகும். இவற்றைக் கவனத்தில் கொண்டு நோக்கல் கருத்தறிதலுக்குத் தேவையான கேள்விகள் தயாரிக்கப்பட்டன.

கேள்விகள்: 1. சரியா? / தவறா? 2. கோடிட்ட இடங்களை நிரப்புதல் 3. பல்விடைத் தேர்வுகள் 4. ஓரிரு சொற்களில் பதில் அளிக்கக்கூடிய வினாக்கள் 5. ஓரிரு வாக்கியங்களில் விடையளிக்கக் கூடியவை ஆகும்.

படக்காட்சிகளை நோக்கல் கருத்தறிதலாகப் பயன்படுத்திய பொழுது மாணவர்கள் மற்ற நடவடிக்கைகளைவிட அதிக ஈடுபாட்டுடன் செய்யத் தொடங்கினர். மிகவும் சிறப்பாகவே செய்து முடித்தனர்.

ஒரு தாய் தன் குழந்தைக்கு உணவோடு பண்பாட்டையும் சேர்த்தே ஊட்டுகிறாள் என்பார்கள். அதே போன்றதுதான் மொழி கற்பித்தலும். மொழியைக் கற்பிக்கும் நாம்

பண்பாட்டையும் சேர்த்துக் கற்பிக்கிறோம். அவ்வகையில் நோக்கல் கருத்தறிதல் நம் பண்பாட்டுக் கூறுகளைக் கற்பிப்பதற்கு ஒரு சிறந்த கருவி என்றே சொல்லலாம்.
பண்பாடும் நாகரிகமும் நமக்கு இரு கண்களாகும். உள்ளத்தின் செம்மையே பண்பாடாகும். பண்பாடு என்பது நம்மிடையே பிறப்பிலிருந்தே வளர்க்கப்பட வேண்டிய ஒன்றாகும். குடும்ப உறவை வளர்க்கும் நம் பண்பாட்டில் முதியோரைப் பேணுதல் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. பெற்றோரைப் பேணுதல், பெற்றோரை மதித்தல், பெற்றோர் சொல் கேட்டு நடத்தல் இதுவும் நம் பண்பாடே!

இன்றைய சூழலில் பெற்றோரை மதித்தல், பெற்றோருக்கு உதவுதல் என்பது மிகவும் முக்கியம் என்பதை மாணவர்களுக்கு உணர்த்த வேண்டியுள்ளது. இதை உணர்த்துவதற்கு ஒரு வாய்ப்பாக அகத்தியர் படத்தில் வரும் ஒரு காட்சி எடுத்துக் காட்டப்பட்டது.

ஒரு சிறுவன் கண்தெரியாத தாயாருக்கும் நடக்க இயலாத தந்தைக்கும் தொண்டு செய்வதைத் தன் தலையாய கடமையாகச் செய்து வருகிறான். இப்படியும் ஒரு சிறுவன் இருக்கிறான் என்பதைக் கேள்விப்பட்டு அகத்தியர் அவனைக் கண்டு அது உண்மைதானா என்பதை அறிய வருகிறார்.

அகத்தியரைப் பார்த்ததும் அவர் ஒரு முனிவர் என்பதை அறிந்து வணக்கம் கூறுகிறான். ஆனால் அவர் யார் என்பதைக்கூட அவரிடம்தான் கேட்டுத் தெரிந்துகொள்கிறான். பின்னர் அவரை அமரும்படிக் கூறிச் செல்கிறான். எங்கே போகிறாய் நில் என்று கூறும் அகத்தியரிடம் அன்றாடம் காலையில் தான் பெற்றோருக்குச் செய்யும் பணிவிடைகளைச் செய்துவிட்டு வருவதாகக் கூறுகிறான். அகத்தியரோ ஆசான் ஸ்தானத்தில் வந்திருக்கும் என்னைவிட உனக்கு அன்னை தந்தையர்கள் பெரிதாகப் போய்விட்டார்களா? என்று கேட்கிறார். சிறுவனோ, ``மாதா, பிதா பிறகுதானே குரு என்று தங்களைப் போன்ற பெரியோர்களே சொல்லியிருக்கிறார்கள்?'' என்று இயம்புகிறான். வந்த என்னைவிட உனக்குச் சொந்தக் காரியம் முக்கியமா? என்று கேட்கிறார். தன்னைப் பெற்றெடுத்தது தாய்தந்தையர்தானே என்று கூறுகிறான் சிறுவன். உலகத்தையே ஆட்டிப்படைப்பவர்கள் தன்னைப் போன்ற ஞானியர்கள்தானே என்று அகத்தியர் கூற அந்த ஞானியர்களையும் இந்த உலகத்திற்குத் தந்தவர்கள் ஒரு தாய்தந்தையர்தானே என்று சிறுவன் கூறி, ஆத்திரப்படாதீர்கள் இதோ அரைநொடியில் வந்துவிடுகிறேன் என்று கூறிவிட்டு உள்ளே சென்று விடுகிறான்.

பெற்றோருக்குப் பணிவிடைசெய்து வணங்கிய சிறுவனிடம், வெளியே யாருடன் பேசிக்கொண்டிருந்தாய் என்று கேட்கிறார் அவன் தந்தை. அகத்தியர் வந்திருக்கிறார் என்று கூற, அருந்தவ முனிவரையா காக்க வைத்துவிட்டு வந்திருக்கிறாய் என்று பதறியடித்துக்கொண்டு ஓடிவருகின்றனர். சிறுபிள்ளைத்தனமாக எங்கள் செல்வன் செய்த தவறை மன்னித்துவிடுங்கள் என்று மன்னிப்பும் கேட்கின்றனர். தங்களைக் காக்க வைத்துவிட்டு எங்களைப் பெரிதாக நினைத்து எங்கள் மகன் செய்த பிழையைப் பொறுத்தருள வேண்டும் என்று வேண்டுகின்றனர். கண்ணில்லாத தனக்குக் கண்ணாகவும் காலில்லாத தன் கணவருக்கு ஊன்றுகோலாகவும் இருக்கும் தன் பிள்ளையிடம் கோபத்தைக் காட்டிவிட வேண்டாம் என்று அந்தத் தாயும் வேண்டுகிறார். ஆனால் அவரோ தன்னைக் காக்க வைத்ததற்காகக் கோபப்படவில்லை என்றும் தங்களுக்குத் தொண்டு செய்வதைப் பார்க்க வைத்ததற்காக ஆனந்தப்படுவதாகவும் கூறுகிறார்.

இந்தப் பகுதியைப் பார்த்த மாணவர்கள், பெற்றோர்கள் எவ்வளவு முக்கியம் பெற்றோர்களுக்குத் தொண்டு செய்வது எவ்வளவு உயர்ந்த செயல் என்பதைப் புரிந்துகொண்டார்கள். அவர்களின் மனதில் அரைநொடியில் வருவதாகக் கூறிச்செல்லும் சிறுவனின் செயல் ஒரு நொடி சிந்திக்க வைத்தது.

வழக்கநிலை தொழில்நுட்பப் பிரிவில் படிக்கும் மாணவர்கள் இந்தப் படக்காட்சியைப் பார்த்த பின்னர் பின்வரும் சரியா?/தவறா? வினாக்களுக்கு விடை எழுதினர்.

வ. எண்	தொடர்கள்	சரி	தவறு
1	சிறுவன் தாய்தந்தையரை அன்புடன் கவனித்து வந்தான்		
2	சிறுவன் அகத்தியரின் தோற்றத்தைக் கண்டு அஞ்சினான்		
3	சிறுவன் முனிவரின் பேச்சுக்குக் கட்டுப்பட்டு நடந்தான்		
4	தாயாரால் நடக்க இயலாது, தந்தை பார்வையில்லாதவர்		
5	முனிவரைப் பற்றிச் சிறுவனின் பெற்றோர் அறிந்திருந்தனர்		
6	முனிவரைக் காக்கவைத்துவிட்டுத் தமக்குத் தொண்டு செய்த மகனின் செயலை எண்ணி பெற்றோர் மகிழ்ந்தனர்		
7	முனிவரிடம் சிறுவனின் பெற்றோர் மன்னிப்புக் கேட்டனர்		
8	பெற்றோரை மதித்த சிறுவனை அகத்தியர் பாராட்டினார்		
9	அகத்தியர் சிறுவனைப் பற்றி அறிந்து அவனைக் காணவந்தார்		
10	தன் தொண்டைவிட சிறுவனின் தொண்டு உயர்ந்தது என்று அகத்தியர் கூறினார்		

வினாக்களுக்கு அனைவருமே சிறப்பாக விடையளித்திருந்தனர். பின்னர்,

1. அந்தச் சிறுவனின் செயல் சரி என்று கருதுகிறாயா? ஏன்?
2. நீங்கள் உங்கள் பெற்றோருக்கு எந்தெந்த வகையிலெல்லாம் உதவி செய்கிறீர்கள்?

என்பன போன்ற வினாக்களுக்கு வகுப்பில் கலந்துரையாடி கருத்துகளைப் பகிர்ந்து கொண்டனர்.

இதே காட்சி உயர்நிலை இரண்டு விரைவு வகுப்பு மாணவர்களிடம் காட்டப்பட்டது. இவர்களுக்குக் கொடுக்கப்பட்ட வினாக்கள் ஓரிரு வரிகளிலும் சில வாக்கியங்களிலும் பதில் எழுதக் கூடியவையாக இருந்தன.

1. சிறுவனின் தாய் தந்தையர்களுக்கு உள்ள குறைகள் என்ன?
2. அடுத்த பிறவியில் தாய் தந்தையர் யாருக்குத் தொண்டு செய்ய விரும்புகின்றனர்? ஏன்?
3. முனிவர் தன் தொண்டு சிறியதாகிவிட்டது என்று கூறக் காரணம் என்ன?
4. நல்ல பிள்ளைகளால் யார் யாருக்குப் பெருமை என்று முனிவர் கூறுகிறார்?

மீத்திறன் மிக்க மாணவர்களுக்குக் கொடுக்கப்பட்ட வினாக்கள்:

1. சொந்தக் காரியம் உனக்கு முக்கியமாகப் போய்விட்டதோ? - இங்குச் சொந்தக் காரியம் என்று அகத்தியர் கூறியது எதனை?
2. அகத்தியர் சிறுவனைக் காண வந்ததன் நோக்கம் என்ன?
3. ஞானியர்களையும்விட தாய்தந்தையரே உயர்ந்தவர்கள் என்பதை சிறுவன் எவ்வாறு நிலைநாட்டினான்?
4. நீ சிறுவனின் நிலையில் இருந்திருந்தால் என்ன செய்திருப்பாய்?

காட்சி ஐந்து நிமிடங்களே! என்றாலும் இந்தக் கேள்விகளுக்கு அவர்கள் எழுதிய பதில் மிகவும் சிறப்பாக இருந்தது. பார்த்த காட்சிகளை மனதில் வைத்து வினாக்களுக்கான விடைகளை எழுதினர்.

விடைகளை எழுதி முடித்த பிறகு பின்வரும் வினாக்கள் குறித்துக் கலந்துரையாடி வகுப்பில் கருத்துகளைப் பகிர்ந்து கொண்டனர்.

1. முனிவரிடம் பெற்றோர் மன்னிப்புக் கேட்கக் காரணம் என்ன?
2. இக்காலத்தில் பிள்ளைகள் பெற்றோருக்கு எவ்வகையிலெல்லாம் உதவியாக இருக்கலாம்?

மாணவர்கள் மேற்கண்ட வினாக்கள் குறித்து குழுநிலையில் விவாதித்து கருத்துகளைச் சிறப்பாகப் பகிர்ந்துகொண்டனர்.

இதன்பிறகு இந்த நோக்கல் கருத்தறிதல் பற்றி மாணவர்களிடம் கருத்துகள் கேட்கப்பட்டன.

பெரும்பாலும் மாணவர்கள் பேசுதல், வாசித்தல், எழுதுதல் இந்த நடவடிக்கைகளைவிட கேட்டல் நடவடிக்கையை ஆர்வத்துடன் செய்வர். காரணம், ஒலித்தட்டைக் கேட்டுப் பதில் அளிப்பது அவர்களுக்கு எளிதாக இருக்கிறது. தற்பொழுது ஒலிமட்டுமன்றி ஒலியும் ஒளியுமாக வீடியோ காட்சியைக் காட்டி நோக்கல் கருத்தறிதலாகச் செய்யும்பொழுது மிகவும் எளிதாக இருக்கிறது என்றனர். கேட்டுக் கருத்தறிதலைச் செய்யும் பொழுது இருந்த சிறு சோர்வுகூட பார்த்துச் செய்யும்போது இல்லை என்றனர். கேட்டு எழுதும்போது செய்ததைவிட பார்த்து எழுதும்போது சிறப்பாக செய்துள்ளனர் என்பதையும் அறியமுடிகிறது.

வீடியோ வழி பார்த்தால் அந்தக் காலத்தில் முனிவர்கள் பார்க்க எப்படியிருந்தார்கள்? மக்கள் எப்படி வாழ்ந்தார்கள்? என்பதையும் அறிய முடிந்தது என்றனர். அவர்கள் பேசுவதைப் போன்று தாங்களும் பேசவேண்டும் என்று விரும்பினர்.

கேட்கும்போது சில பகுதிகளுக்குப் பொருள் தெரியாது. ஆனால் அதேமாதிரி பொருள் தெரியாத சொல் இங்கும் வந்தது. ஆனால் நேரே காட்சிகளைப் பார்க்கும்போது அதன் பொருள் தெரிந்துவிடுகிறது. எனவே சிரமமின்றி செய்ய முடிகிறது என்றனர்.

ஒலித்தட்டைக் கேட்கும்போது அந்தச் செய்தியைப் பற்றிய உணர்வு அவ்வளவாக இருப்பதில்லை. ஆனால் வீடியோவில் ஒளிப்படக்காட்சியாகப் பார்க்கும்போது அச்செய்தியைப் பற்றிய உணர்வு முழுமையாக இருக்கிறது என்றனர். ஒளிப்படக்காட்சி தங்கள் மனதில் நல்லதொரு பாதிப்பை ஏற்படுத்துகிறது என்றனர். எனவே, ஒளிப்படக்காட்சி அவர்களின் சிந்தனைத் திறனை வளர்க்கிறது. அதுமட்டும் அல்லாமல் அவர்களின் கற்றலை எளிமையாக்குகிறது.

எதிர்காலத்தில் கட்டுரை எழுதுவதற்கும் இப்படி வீடியோவைப் பயன்படுத்தினால் பயன் மிகச் சிறப்பாக இருக்கும் என்று நம்புகிறேன்.
இதுமட்டுமன்றி, இணையத்தளத்தில் குறும்படப் போட்டியில் சிறந்த குறும்படம் என்று பரிசு பெற்றதாக இடம்பெற்றுள்ள `ஆசை'' என்ற ஒரு குறும்படத்தையும் மாணவர்கள் நோக்கல் கருத்தறிதலாகச் செய்தனர். இது பத்து நிமிடம் மட்டுமே ஓடக்கூடியதாகும்.

WINNER - BEST SHORT FILM , INDIAN FILM FESTIVAL 2010, MELBOURNE – AUSTRALIA

http://www.youtube.com/watch?v=2T699DfffhU

<u>சுருக்கம்:</u>

செல்வம் என்னும் பெயர்கொண்ட சிறுவன் சென்னையில் மளிகைக் கடையொன்றில் வேலை செய்கிறான். அவனுடைய ஆசை தொலைபேசி மூலமாக மிகவும் நீண்ட தொலைவில் அதாவது திருநெல்வேலியில் இருக்கும் தன் தாயிடம் பேசவேண்டும் என்பதுதான். அவன் வேலை செய்யும் இடத்திற்கு அருகிலேயே ஒரு தொலைபேசி மையும் உள்ளது. அங்கு வேலை செய்யும் பெண் ஐந்து நிமிடம் பேசுவதற்கு எவ்வளவு பணம் வேண்டும் என்று கூறுகிறாள். செல்வம் ஐந்து நிமிடத்திற்குள் பேசி முடிப்பதற்கு என்ன பேசவேண்டும் எப்படிப் பேச வேண்டும் என்று தனக்குள் பேசிப் பேசி பயிற்சி செய்கிறான். செல்வம் தன் தாயுடன் பேசினானா? இல்லையா? என்பதுதான் கதை. அவன் பேசமுடியாமல் போனது சோகம். அந்தச் சோகத்தை மாணவர்கள் கண்டார்கள் அவன் நிலையை உணர்ந்தார்கள். அதுகுறித்துப் பேசினார்கள்.

இதனை நோக்கல் கருத்தறிதலாகச் செய்த பிறகு, மாணவர்களின் பேசுதல் திறனையும், பேச்சுவழிக் கருத்துப்பரிமாற்றத்திறனையும் வளர்க்கும் நோக்கில் கலந்துரையாடலும் செய்யப்பட்டது. இது மாணவர்களின் சிந்தனையைத் தூண்டுவதாக இருந்தது. மாணவர்கள் அதிகமாகவே பேசினார்கள். நிறைய தூண்டுதல் வினாக்கள் துருவுதல் வினாக்களைக் கேட்டுப் பேச வைக்க முடிந்தது. அவர்கள் ஆர்வத்தோடு நீண்ட நேரம் பேசியதைக் காணமுடிந்தது.

நிறைவாக. . . .

நோக்கல் கருத்தறிதல் மூலம் தமிழ்மொழி கற்றல் கற்பித்தலை ஈடுபாடுமிக்கக் கற்றலாக மாற்ற முடிகிறது. மாணவர்களின் கற்றல் ஆர்வத்தைத் துடிப்போடு வைத்துக்கொள்ள முடிகிறது. எழுத்துத் திறனை மேம்படுத்துவதோடு, வேறுபடுத்தப்பட்ட கற்பித்தல் முறைகளையும் செயல்படுத்த முடிகிறது. முக்கியமாக அவர்களின் பேச்சாற்றலையும் இயல்பாகப் பேசும் திறனையும் வளர்க்கவும் மேம்படுத்தவும் முடிகிறது. கட்டுரை எழுதுவதற்கான ஊக்கக்கூறாகவும் இதனைப் பயன்படுத்த முடியும்.

புதிய கற்பித்தல் கருவிகள் மூலம் தமிழ் கற்பித்தல்

மு. முருகையன், இயொ சூ காங் உயர்நில்ப்பள்ளி
சா. மெய்யப்பன், விட்லி உயர்நிலைப் பள்ளி
சிங்கப்பூர்.

முன்னுரை

இருபத்தோராவது நூற்றாண்டில்ட தகவல் தொழில்நுட்பம் முக்கிய இடம் வகிக்கிறது, நவீனதகவல் தொழில் நுட்பக் கருவிகளோடு பல விளையாட்டு முறைகளையும் புகுத்திக் கற்பிப்பதன் மூலம் மாணவர்களின் கற்றல் ஈடுபாடு சிறப்பாக அமையும். அவ்வகையில் நாங்கள் வகுப்பறையில் இசைநாற்காலி, சொல்விளையாட்டு, பரமபதம், ஒரு வார்த்தை ஒரு இட்சம், தொலைக்காட்சி செய்திவாசித்தல் போன்ற நடவடிக்கைகளை வகுப்பறையில் பயன்படுத்தினோம். மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் மிகச் சிறப்பாக இருந்தன. அவற்றை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறோம்.

1.இசை நாற்காலி நடவடிக்கை மூலமாக ஆசிரியர் சில பேசுதல் தலைப்புகளைத் தெரிவு செய்து மாணவர்களைப் பேச ஊக்குவித்தல் இந்நடவடிக்கையால் மாணவர்கள் அச்சம், கூச்சம், தயக்கமின்றி ஆர்வத்தோடு பேசுவர். இதனால் பேச்சுத்தமிழ் வளரும்.

முதலில் மாணவர்கள் எண்ணிக்கைக்கு ஒன்று குறைவாக வட்ட வடிவில் நாற்காலிகளை மாணவர்கள் ஓடி உட்காரும் வசதிக்கேற்பப் போட வேண்டும். புதிய நல்ல அர்த்தமுள்ள மாணவர்கள் விரும்புகின்ற பாடல்களைத் தெரிவுசெய்து ஒவ்வொன்றாக ஒலியேற்ற வேண்டும். மாணவர்களின் அனுபவத்திற்கு ஏற்ற பேசும் தலைப்புகளைத் தெரிவு செய்து ஒரு அட்டைப் பெட்டியில் தாயாராக வைத்திருக்க வேண்டும். பாடலை ஒலியேற்றியவுடன் மாணவர்கள் சுற்றிவரத் தொடங்குவர். பாடலை நிறுத்தியவுடன் மாணவர்கள் போட்டி போட்டுக்கொண்டு நாற்காலில் உட்கார இடம் பிடிப்பர். இடம் கிடைக்காத ஒரு மாணவர் அட்டைப் பெட்டியில் உள்ள தலைப்பினில் ஒன்றை எடுத்து குறைந்தது 3 நிமிடங்கள் பேச வேண்டும். இவ்விதம் வகுப்பு மாணவர்கள் அனைவரும் பங்கெடுத்துப் பேசுவர். மேலும் பாடல்களுக்குப் பதிலாக ஒளிவட்டை ஒளியேற்றியும் இந்நடவடிக்கையைத் தொடரலாம். பேசும் தலைப்புகளுக்குப் பதிலாக படவில்லைகளைத் தெரிவு செய்தும் பேசவைக்கலாம்.

2. சொல்விளையாட்டு ஆசிரியர் தமிழ் இலக்கியங்கள் தொடர்பான கதைச் சுருக்கங்களை உருவாக்கி, அதில் இடம் பெற்றுள்ள அருஞ்சொற்களின் பட்டியலையும் மாணவர்களிடம் கொடுப்பர். மாணவர்கள் சொற்றொகுதியிலிருந்து குறிப்பிட்ட இலக்கியத்துக்குரிய சொற்களைக் கண்டுபிடித்து வரிசைப்படுத்துவர். குறுக்கெழுத்துப் புதிர் மூலமாகவும் புதிய சொற்களை அறிவர். எடுத்துக்காட்டு

ஐம்பெருங் காப்பியங்கள்

தமிழில் தோன்றிய காப்பியங்கள் சிலவற்றை ஐம்பெருங்காப்பியங்கள் என்ற தலைப்பில் தொகுத்துள்ளனர். அவை முறையே

1. சிலப்பதிகாரம்
2. மணிமேகலை
3. சீவகசிந்தாமணி
4. வளையாபதி
5. குண்டலகேசி

என வழங்கப்படும். இவற்றுள் சிலப்பதிகாரத்தை இயற்றியவர் இளங்கோவடிகள். இவர் சேரன் செங்குட்டுவனின் தம்பி. இவர் காலம் கி.பி. 2ஆம் நூற்றாண்டு. சிலப்பதிகாரமே தமிழில் தோன்றிய முதல் காப்பியமாகும். அடுத்துத் தோன்றியது மணிமேகலை. இது சீத்தலைச் சாத்தனார் என்பவரால் எழுதப்பட்டது. இதன் கதைத் தலைவி மணிமேகலை, கோவலன் மாதவி இருவருக்கும் பிறந்தவள். அவளின் கதையைக் கூறுவதால் சிலம்பு, மணிமேகலை இரண்டையும் இரட்டைக் காப்பியங்கள் என்றழைப்பர். இவ்விரண்டும் சமகாலத்தில் தோன்றிய காப்பியங்கள். இதனை அடுத்துத் தோன்றிய சீவகசிந்தாமணியை எழுதியவர் திருத்தக்கதேவர். இதன் தலைவன் சீவகன் காந்தருவதத்தை, குணமாலை, பதுமை, கேமசரி, கனகமாலை, விமலை, சுரமஞ்சரி, இலக்கணை என்ற எட்டுப்பெண்களை மணந்து இறுதியில் முத்தியடைவதைக் குறிப்பதால் இதற்கு மணநூல் என்ற மற்றொரு பெயரும் உண்டு. ஐம்பெருங்காப்பியங்களுள் நான்காவதாக இடம்பெறும் நூல் வளையாபதி. இதை சமணமுனிவர்கள் எழுதியதாகக் கூறுவர். இந்நூல் முழுவதும் கிடைக்கவில்லை. சுமார் 15 பாடல்கள் மட்டுமே தற்போது கிடைத்துள்ளன. இது நவகோட்டி நாராயணன் என்னும் வணிகனின் வரலாற்றைக் கூறுகிறது. இத்தொகுப்பில் இறுதியாக இடம்பெறும் நூல் குண்டலகேசி. குண்டலகேசி என்னும் பெண்ணின் வாழ்க்கை நிகழ்ச்சிகளைக் குறிப்பதால் இப்பெயர் பெற்றது. இந்நூலும் முழுமையாகக் கிடைக்கவில்லை. தற்போது

19 பாடல்கள் மட்டுமே கிடைத்துள்ளன. இதன் ஆசிரியர் நாதகுத்தனார். இது புத்தமதத்தின் பெருமை பேசும் ஒரு தர்க்க நூலாகும்.

நூல்	ஆசிரியர்	சமயம்
சிலப்பதிகாரம்	இளங்கோவடிகள்	சமண சமயம்
மணிமேகலை	சீத்தலைச்சாத்தனார்	பௌத்த சமயம்
சீவகசிந்தாமணி	திருத்தக்க தேவர்	சமண சமயம்
வளையாபதி	சமணமுனிவர்கள்	சைண சமயம்
குண்டலகேசி	நாதகுத்தனார்	பௌத்த சமயம்

3. பரமபதம் - பரமபத விளையாட்டு மூலம் உடன்பாடு எதிர்மறை, தன்வினை பிறவினை, செய்வினை செயப்பாட்டுவினை, அறுவகைப் பெயர்கள் போன்ற எளிய இலக்கணங்களை அறிவர்.

பாரமபதம் (பாம்பும் ஏணியும்) தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுகளில் ஒன்று. இதனைப் பாமர மக்கள் பாம்புத்தாயம் என்று எளிமையாகக் குறிப்பிடுவர். இவ்விளையாட்டு இருவிதமான தத்துவங்களை உள்ளடக்கியது. ஒன்று சமயத்தொடர்பான தத்துவம். பாம்புகள் வாழ்வில் ஏற்படும் இடர்ப்பாடுகளையும் ஏணிகள் வாழ்வில் கிடைக்கும் வாய்ப்புகளையும் குறிப்பது. பரமாத்மாவை நாடும் மனிதர்கள் ஒரே குறிக்கோளுடன் வாழ்வில் ஏதிர்ப்படும் பந்தபாசங்களில் அகப்பட்டுச் சிக்கிவிடாமல் வாய்ப்புகளைப் பயன்படுத்தி முன்னேறினால் இறைவனை அடையலாம் என்பது சமயவாதிகள் கூறும் தத்துவம். மற்றொன்று வாழ்வில் இன்ப துன்பங்கள் வருவது இயல்பு. பாம்பெல்லாம் துன்பங்கள்’ ஏணியெல்லாம் இன்பங்கள். பாம்பால் கடிபட்டவர் சோர்ந்து போய் பின்தங்கிவிடாது ஊக்கத்தோடு உழைத்தால் வெற்றி என்னும் ஏணியை அடைந்து மகிழ்ச்சி அடையலாம். எனவே, இவ்விளையாட்டு மாணவர்களுக்கு ஊக்கத்தை அளிக்கும் ஒன்றாகும்.

விளையாடும் முறை

எத்தனை பேர் வேண்டுமானாலும் விளையாடலாம். தாயக்கட்டையை வைத்து, காயை நகர்த்த வேண்டும். அந்த எண்ணில் ஏணி இருந்தால் மேலே ஏறலாம். அவ்வெண்ணில் பாம்பின் தலையிருந்தால் கடிபட்டு பாம்பின் வால் இருக்கும் இடத்திற்கு இறங்கி விடுவர். இவ்வாறு ஒவ்வொருவராகத் தொடர்ந்து காயை உருட்டி ஆடி முதலில் எண் 100 அடைபவர் வெற்றி பெற்றவார். இம்முறையை மாணவர்களுக்கேற்ற முறையில்

சிறிது மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டும். எண்களின் இடையே கொடுக்கப்பட்டிருக்கும் இலக்கணப் பகுதிகளுக்கு விடையளிக்க வேண்டும். அப்பொழுதுதான் மாணவர்கள் விளையாட்டைத் தொடரமுடியும்.

பயன் - இவ்விளையாட்டில் மாணவர்கள் ஆர்வத்தோடு பங்கேற்பதோடு மொழிக்கூறுகளையும் கற்றுக் கொள்வர். இவ்விதம் கற்றுக் கொள்வது அவர்கள் மனதில் பசுமரத்தாணி போல் பதியும்.

4. ஒரு வார்த்தை ஒரு லட்சம்

இம்முறை மணவர்களிடம் சொற்களஞ்சிய அறிவைப் பெருக்க உதவும். ஒரு இருவர் இடம் பெற வேண்டும். திரையில் காட்டும்சொல்லை ஒருவர் பார்த்து தன் குழுவிலுள்ள மற்றொருவரிடம் பொருத்தமான 3 குறிப்பைகளை குறிப்பிட்ட நேரத்திற்குள் கொடுக்க வேண்டும். மற்றொருவர் அந்த குறிப்பைக் கொண்டு குறிப்பிட்ட நேரத்திற்குள் கண்டு பிடிக்கவேண்டும். இவ்வாறு10 சொற்களைச் சரியாகக் கூறிய குழு வெற்றி பெற்ற குழுவாக்க கருதப்படும். இவ்விளையாட்டின் மூலம் ஒரு பொருள் பன்மொழி என்ற மொழிக்கூறுகளை நன்கு கற்றுக் கொளவர்.

5. தொலைக்காட்சிச் செய்திகள் – மாணவர்கள் தமிழ்த்தொலைக்காட்சிச் செய்திகளைப் பார்ப்பதன் மூலம் மாணவர்களின் தமிழறிவு, பொது அறிவு மற்றும் கேட்டல் திறன் வளர்கிறது.

மாணவர்களிடம் அன்றாடச் செய்திகளைத் திரையில் காட்டி வாசிக்கச் சொல்லாம். ஆசிரியர் ஒலிப்பிழைகளைத்திருத்துவதன் மூலம் மாணவர்களின் வாசிப்புத்திறன் மேம்படும். மாணவர்களின் பொது அறிவு வளர்வதோடு வாசிப்புத் திறன் கேட்டல் திறன் கூடுகிறது.

மேலும் ஒளிப்படக்காட்சிகள் – இணைய ஒளிப்படக்காட்சிகளைக் காட்டி மாணவர்களைத் தமிழில் சரளமாகப் பேச ஊக்குவிகலாம்

ஒலிப்பதிவு - மாணவர்கள் விளம்பரங்கள் மற்றும் பல்வேறு தலைப்புகளில் பேசுவதை ஒலிப்பதிவு செய்வதன் மூலம் திருத்தமாகப் பேச வைக்கலாம்

படங்கள்- நகரும் படங்கள் மற்றும் நகராப் படங்கள் மூலம் பேச வைப்பதோடு சிறு சிறு தொடர்களை எழுத வைப்பதன் மூலம் பேச்சாற்றலையும் எழுத்தாற்றலையும் வளர்க்க முடியும்.

முடிவுரை: மாணவர்கள் அண்மைக்காலங்களில் தமிழ்ப்பாடம் படிப்பதை ஒருசுமையாகக் கருதுகிறார்கள். இதுபோன்ற விளையாட்டு முறைகள் மூலம் கற்றல் கற்பித்தல் நடைபெற்றால் சுகமாக இருக்கும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

பயன்மிக்க மொழி கற்பித்தலுக்கு இலக்கியங்களின் பங்கு

செல்வஜோதி இராமலிங்கம்
மலேசியா.

மாந்தனின் தொடர்பு கருவியாக விளங்கிய மொழி, மாந்த நாகரீக வளர்ச்சிக்கு அடையாளமாக இருந்த மொழி இன்று பல நிலைகளில் பரிணாமங்களைக் கண்டு பல துறைகளாக உருக்கண்டு உள்ளது. இன்று மொழியானது மனிதனைத் தொடர்புபடுத்துவதற்கு மட்டும் அல்லாது அறிவுத் துறை வளர்ச்சிக்கும் சிந்தனைத் திறன் வளர்ச்சிக்கும் மிகவும் இன்றியமையாததாக விளங்குகின்றது. அவ்வாறே மொழி தொடர்பான ஆய்வுகளும் காலத்திற்குக் காலம் மாற்றமும் வளர்ச்சியும் கண்டு வருகிறது.

இக்கால மொழி அறிஞர்கள் மொழியை உயிரியல் பின்புலத்தில் (Biolinguistic approach) ஆராய்ச்சி செய்கின்றனர். இந்த அடிப்படையில் மனித மொழி ஓர் அறிவுப்புலன் (human faculty of language) என்று ஆய்ந்துரைக்கப்படுகிறது (Prof. Chomsky). மனித உடம்பில் பல உறுப்புகள் இருப்பது போலவே அதாவது மூளை இருப்பது போல மொழியும் ஓர் உறுப்பு போலவே கருதப்படுகிறது. அவ்வாறு முக்கியத்துவம் நிறைந்த இந்த மொழி கற்பித்தல் என்பது இன்றைய நவீன உலகில் ஒரு சவாலாகவே உள்ளது.

இலக்கியங்கள் குறிப்பாக தமிழ் இலக்கியங்கள் சீரிய இலக்கை மையமாக வைத்துப் படைக்கப்பட்டன. சங்க இலக்கியங்கள் முதல் தற்கால இலக்கியங்கள் வரை ஓர் இலக்கை அல்லது படிப்பினையை மையமாக வைத்து எழுதப்பட்டவையாக உள்ளன. இந்த இலக்கியங்கள் எவ்வாறு மொழி கற்பித்தலுக்குப் பங்காற்ற இயலும் என்பதை இந்த ஆய்வின் மூலம் காண்போம்.

மலேசிய இடைநிலைப்பள்ளிகளுக்கான தமிழ்மொழி பாடத்திட்டத்தின் முகான்மையான நோக்கம் அல்லது குறியிலக்கு என்னவெனில் இடைநிலைப் பள்ளிகளில் ஒருங்கிணைக்கப்பட்ட தமிழ்மொழி பாடத்திட்டத்திலுள்ள இலக்கியப் பகுதிகள் தொடர்பான அறைவினைப் பெற்று அவற்றைத் தமிழ்மொழி கற்றல் கற்பித்தலில் வெளிப்படுத்த வேண்டும் என்பதாகும். இதன் அடிப்படையில் பார்க்கும் போது மொழி கற்பித்தலுக்கு இலக்கியங்களின் பங்கு என்ற தலைப்பிலான ஆய்வு மூன்று துறைகளை உள்ளடக்கியதாகும். அவை மொழித்திறன், இலக்கியம் மற்றும் பயிற்றியல் ஆகும். இவை மூன்று துறைகளின் நோக்கங்களை ஆராய்ந்தால் இவை எவ்வாறு ஒன்றை

ஒன்று தொடர்பு கொண்டுள்ளது; பயன்மிக்க மொழி கற்பித்தலுக்கு இலக்கியங்கள் எவ்வாறு பங்காற்றுகின்றது என அறிய முடியும்.

மலேசிய கலைத்திட்ட மேம்பாட்டின் தமிழ்மொழி பாடத்திற்கான நோக்கங்களைக் கூறும் போது கீழ்க்காணும் அடிப்படைகளில் காணலாம்.



மேற்காணும் நோக்கங்களின் அடிப்படையில் எவ்வாறு இலக்கியங்கள் பயன்மிக்க மொழி கற்பித்தலுக்குத் துணை நிற்கின்றன என்பதை காணும்பொழுது மூன்று துறைகளையும் உள்ளடக்கிய ஒரு முக்கியமான கூறாகவும் இன்றைய உலகமயமாதல் கொள்கைக்கு ஏற்ற வகையிலும் அவர்களைத் தயார் செய்யும் ஒரு

துறையாகவும் விளங்குவது சிந்தனைத் திறன் ஆகும். அதாவது பயன்மிக்க கற்பித்தலுக்கு இலக்கியங்கள் எவ்வாறு பங்காற்றுகின்றது என்று பார்க்கும் போது குறிப்பாக சிந்தனைத் திறன் வளர்ச்சிக்குப் பெறும் துணைப்புரிகின்றது.

இலக்கியங்களின் வாயிலாகச் சிந்தனைத் திறனை மேம்படுத்துதல்

தலைப்பு : மொழியணிகள் வாயிலாகச் சிந்தனைத் திறன் மீட்சி

வரையறை:

1. இலக்கிய நூல் - திருக்குறள்
2. சிந்தனைத் திறன் - ஆக்கச் சிந்தனை மற்றும் ஆய்வுச் சிந்தனை.
3. அணிகள்- உவமை மற்றும் உருவகம்

அணிகளின் பயன்பாடு சிந்தனைத் திறன் வளர்ச்சிக்கு முக்கியப் பங்காற்றுகின்றது. இந்தச் சிந்தனைத் திறன் மனித வாழ்வில் ஏற்படும் சிக்கல்களுக்குத் தீர்வு காண உந்துதலாக அமையும் என்பதில் எந்தவொரு மாற்றுக் கருத்தும் இல்லை. திருக்குறளில் அதாவது 1330 குறட்பாக்களில் பெரும்பாலான குறள்களில் சிந்தனைத் திறன் கூறுகள் புதைந்திருப்பதை காண இயலும். இந்த சிந்தனைத் திறன் பலவகைப்பட்டாலும் இந்த ஆய்விற்கு இரண்டினை மட்டும் எடுத்துக்கொள்ள இருக்கிறோம். அதாவது ஆக்கச் சிந்தனை மற்றும் ஆய்வுச் சிந்தனை ஆகும். ஆக்கச் சிந்தனை மற்றும் ஆய்வுச்சிந்தனையின் கீழ் சிலவற்றை மட்டும் ஆராயவிருக்கிறோம்.



உவமை - ஒப்பு நோக்குதல்/ ஒத்த தன்மை

திருக்குறளில் பல இடங்களில் ஒத்த தன்மை உடைய செய்திகள் சித்திரிக்கப் பட்டுள்ளன. அதாவது உவமை மற்றும் உருவகம். ஒரு கருத்தையோ அல்லது பொருளையோ எளிமையாக விளக்கிப் புரியவைப்பதற்கு அந்தக் கருத்தோ அல்லது பொருளோ தொடர்பான பொருள் அன்றி வேறொரு பொருளைக் கொண்டு விளக்கும்பொழுது படிப்போர் அல்லது கேட்போர் எளிதில் புரிந்து கொள்ள விழைகிறது.

இதனை மூன்று அடிப்படைகளில் காணலாம்
முதலாவது : இரண்டு பொருளையும் ஒப்பு நோக்குதல்.
இரண்டாவது : இரண்டு பொருள்களிலும் உள்ள ஒத்த தன்மையை அடையாளம் காணுதல்.
மூன்றாவது : இரண்டு பொருளையும் தொடர்புபடுத்துதல்.
மேற்காணும் அடிப்படைகளில் எவ்வாறு ஒப்புமையை அடையாளம் கண்டு சிந்தனைத் திறனை வளப்படுத்துகின்றது என்று பார்ப்போம்.

<u>காட்டு 1</u>
அறைபறை அன்னர் கயவர்தாம் கேட்ட
மறைபிறர்க்கு உய்த்துரைக்க லான் (1076)

பொருள்

கயவர் தாம் கேட்டறிந்த மறைபொருளைப் பிறர்க்கு வலியக் கொண்டு போய்ச் சொல்லுவதால் அறையப்படும் பறை போன்றவர்.

முதலாவது : பறையைக் கயவரோடு ஒப்பிடுதல்
(ஒப்பிடுதல்)
இரண்டாவது : இரண்டிலும் உள்ள ஒப்புமை என்னவென்றால் இரண்டும் இசையை அல்லது
(ஒரேதன்மை) ஓசையை எழுப்பும்.

மூன்றாவது : பறை எப்படி எந்தவொரு விளைவையும் எண்ணிப் பார்க்காமல் இசையை
(தொடர்பு) அல்லது ஓசையை எழுப்புகிறதோ அது போன்று கயவர்கள் எந்தவொரு

விளைவையும் எண்ணிப்பார்க்காமல் தாம் கேட்டறிந்த மறைபொருள்களை வலியப் போய்ச் சொல்லுவர்

காட்டு 2

மண்ணோடி யைந்த மரத்தனையர் கண்ணோ
டியைந்துகண் ணோடாதவர் (576)

பொருள் : கண்ணோட்டத்திற்கு உரிய கண்ணோடு பொருந்தி இருந்தும் கண்ணோட்டம் இல்லாதவர், (கண் இருந்தும் காணாத) மரத்தினைப் போன்றவர்

முதலாவது : மரத்தை அன்பற்ற மனிதனோடு ஒப்பிடுதல்.
(ஒப்பிடுதல்)

இரண்டாவது: இரண்டும் அன்பு என்ற உணர்வுக்குத் தூண்டப்படாதவை
(ஒரே தன்மை)

மூன்றாவது : மரத்திற்கு எந்தவொரு உணர்ச்சியும் இல்லை, அதுபோன்று மனிதனிடத்தில்
(தொடர்பு) அன்பு இல்லையெனில் அவன் உணர்ச்சியற்ற மரத்தைப் போன்றவனாக கருதப்படுகிறான்.

காட்டு 3

பொச்சாப்பு கொல்லும் புகழை அறிவினை
நிச்ச நிரப்புக் கொன்றாங்கு (532)

பொருள் : நாள்தோறும் விடாமல் வரும் வறுமை அறிவைக் கொல்லுவது போல ஒருவனுடைய புகழை அவனுடைய மறதி கொன்றுவிடும்

முதலாவது : வறுமையை மறதிடோடு ஒப்பிடுதல்
(ஒப்பிடுதல்)

இரண்டாவது : இரண்டும் அறிவை இழக்கச் செய்யும்
(ஒரே தன்மை)

மூன்றாவது : வறுமையால் விளையும் தீமையும் மறதியால் விளையும் தீமையும் ஒரே பாதிப்பைக் கொடுக்கும்.

இவ்வாறு ஒப்பு நோக்கி அறியும் போது மனிதனின் சிந்தனைத் திறன் மேலோங்கி வளரும் என்பது சிந்தனைத் திறன் ஆய்வாளர்களின் கருத்து. ஒரு பொருளையோ அல்லது ஒரு பொருளின் தன்மையையோ இன்னொரு பொருளோடு ஒப்பிடும் பொழுது மனிதனின் சிந்தனைத் திறன் குறிப்பாக ஆக்கச் சிந்தனை வளர்ச்சி பெறும் (Bloom 1956).

அணிகளின் பயன்பாடு வாசிப்போரின்; கேட்போரின் ஆக்கச் சிந்தனையைத் தூண்டவல்லது. மேற்கண்ட உவமை அணிகளின் பயன்பாடானது வாசிப்போர் அதனைப் படிக்கும் போது அதிலுள்ள ஒற்றுமை வேற்றுமைகளை அறிந்துகொள்ள முற்படுகின்றனர். இவ்வாறு ஒற்றுமை வேற்றுமைகளை அறியும் பொருட்டு பகுப்பாய்வு (analysis) செய்கின்றனர். இவ்வாறான பகுப்பாய்வானது சிந்தனைத் திறன் வகைகளில் உயர்நிலை சிந்தனைத் திறனாக கருதப்படுகிறது.

1. உருவகம்/ metaphor — ஒத்ததன்மை/ analogy

உருவகம் என்பது உவமானத்தையும் உவமேயத்தையும் வேற்றுமைப்-படுத்தாமல் ஒற்றுமைப்படுத்திக் கூறும் முறை. உவமை என்பது ஒரு பொருளை இன்னொரு பொருளோடு ஒப்பிட்டு கூறுதல் ஆகும். ஆனால் உருவகம் ஒரு பொருள் இன்னொரு பொருளாகவே ஆகி நிற்கும். இந்த உருவக பயன்பாடும் ஆக்கச் சிந்தனை வளர்ச்சிக்குத் துணைபுரிகின்றன. இதனைக் கீழ்க்காணும் குறளின் வாயிலாக அறிய முடியும்.

காலை அருப்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலரும் நோய்

பொருள் : இந்த காமநோய், காலைப்பொழுதில் அரும்பாய்த் தோன்றி பகற்பொழுதெல்லாம் பேரரும்பாய் வளர்ந்து மாலைப் பொழுதில் மலராகின்றது.

இந்த குறளில், ஒரு மலரானது காலையில் மொட்டாக இருந்து, பகலில் அரும்பாகி மாலையில் மலர்ந்துநிற்கின்றது. இது ஒரு மலரின் மலர்ச்சியின் படிநிலையைக் காட்டினாலும் வள்ளுவர் இந்தச் சூழலைக் காதல் உணர்வுக்கொண்ட ஒரு பெண்ணோடு ஒப்பிடுகிறார். இந்தக் குறளில் எந்த இடத்திலும் ஒரு பெண்ணைப் பற்றியோ அல்லது காதலைப் பற்றியோ வள்ளுவர் குறிப்பிடவில்லை. ஆனால் ஒரு பெண்ணின் காதல் உணர்வுகளை ஒரு மலராகவே ஒப்பிடும் போது படிப்போர் நிச்சயமாக அதனைத் தொடர்புபடுத்தி அதன் உட்கருத்தை அறிந்துகொள்ள வேண்டும். இவ்வாறான சூழலில் சிந்தனைத் திறன் மேலொங்கும்.

2. காட்சிப்படுத்துதல் - கற்பனைத்திறன்

சிந்தனைத் திறனில் அடுத்ததொரு பரிணாமம் காட்சிப்படுத்துதல் ஆகும். அதாவது ஒரு சூழலையோ அல்லது கருத்தையோ விளங்கிக் கொள்வதற்கு ஒரு காட்சியாகக் கொண்டுவருதல். நடைமுறை வாழ்க்கையில் எந்த நிலையில் உள்ள மக்களும் படித்துக் கூறவருகின்ற கருத்தை விளங்கிக் கொள்ளவேண்டும் என்பது வள்ளுவரின் எண்ணமாக இருந்திருக்கக் கூடும். ஆனால் இந்த நூற்றாண்டில் இதனை ஆய்வுக்கு எடுத்துப் பார்க்கும் பொழுது மிக நுட்பமான முறையில் சிந்தித்து வள்ளுவர் இந்தத் திருக்குறளை வடித்திருக்கின்றார் என்பது புலப்படுகிறது. இதனைக் கீழ்க்காணும் குறள்வழி அறிய முடியும்.

குடம்பை தனித்து ஒழியப் புள்பறந் தற்றே
உடம்பொடு உயிரிடை நட்பு (338)

பொருள் : உடம்போடு உயிர்க்கு உள்ள உறவு, தான் இருந்த கூடு தனியே இருக்க
அதைவிட்டு வேறிடத்திற்குப் பறவை பறந்தாற் போன்றது.

இங்கு வள்ளுவர் ஒரு சூழலைத் தான் கூறவருகின்ற கருத்தோடு உவமையாக காட்டுகின்றார். உயிருக்கும் உடலுக்கும் உள்ள தொடர்பைக் கூட்டைவிட்டு பறந்து சென்ற பறவையப் போன்றது எனும் கருத்தை விளக்க வந்த சூழலில் சிந்தனைத் திறன் மேம்படுகின்றது. அதாவது ஒருவனிடம் உள்ள கற்பனைத் திறன் மேலும்

வளம்பெறுகின்றது. இந்த கற்பனைத் திறன் என்பது ஆக்கச் சிந்தனையின் ஒரு பகுதியாகும்.

ஆக்கச் சிந்தனையானது சிந்திக்கும் ஆற்றலே தவிர அறிவாற்றல் என்பது கிடையாது. ஆகையால் யாவரிடமும் சிந்திக்கும் திறன் புதைந்து கிடக்கிறது. புதுப் புது கருத்துகள் உருவாகுவதற்கும் புதிய கோணத்தில் சிந்தித்துச் செயல்படுவதற்கும் இந்த சிந்தனைத் திறன் இன்றியமையாததாக அமைகிறது. ஆக்கச் சிந்தனை என்பது ஒரு மனிதன் இதுவரை எவ்வாறு சிந்தித்து ஒரு சிக்கலைத் தீர்வு காணுகிறான் எனவும் இனி எவ்வாறெல்லாம் சிந்தித்துத் சிக்கலைத் தீர்வு காண்பான் எனவும் கண்டறிந்து கூறுவதும் அடங்கும். நம்முடைய அன்றாட வாழ்வில் பல சிக்கல்கள் இடம்பெறுகின்றன. இந்தச் சிக்கல்கள் தீர்க்கப்படாமல் இருப்பதற்கு ஒரு காரணம் மனிதனிடம் குறைந்து காணப்படும் ஆக்கச் சிந்தனையே ஆகும்.

3. ஆய்வுச் சிந்தனை

ஆய்வுச் சிந்தனை என்பது ஒரு பொருளையோ அல்லது கருத்தையோ ஆய்வு அடிப்படையில் பார்ப்பது ஆகும். குறிப்பாக அதிலுள்ள தவறு அல்லது குறைகளாகும். இதன்வாயிலாக ஒரு மனிதனிடமோ அல்லது அவனிடம் உள்ள கருத்துகளிலோ ஏதேனும் குறை இருந்தால்; தவறு இருந்தால் அதனைத் திருத்திக் கொள்ள இயலும். இவ்வாறான ஆய்வுச் சிந்தனைத்திறனைக் கீழ்க்காணும் குறளின்வழி அறியலாம்.

கணைகொடிது யாழ்கோடு செவ்விதுஆங் கன்ன
வினைபடு பாலால் கொளல் (279)

பொருள் : நேராகத் தோன்றினாலும் அம்பு கொடியது; வளைவுடன் தோன்றினாலும் யாழின் கொம்பு நன்மையானது; மக்களின் பண்புகளையும் செயல் வகையால் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இந்தக் குறளில் திருவள்ளுவர் ஒரு மனிதனானவன் சிந்தனைத்திறனைக் குறிப்பாக ஆக்கச்சிந்தனையை நிச்சயமாக பயன்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தும் பொருட்டுக் கூறியுள்ளார். அதாவது ஒரு கணையின் தோற்றம் பார்ப்பதற்கு நேராக இருந்தாலும் (நேர் என்பது நேர்மறைப் பண்பைக் குறிக்கும்) அதன் விளைவு தீங்கானதாகும். மாறாக யாழ் எனும் இசைக்கருவி பார்ப்பதற்கு வளைவாக இருந்தாலும்

(வளைவு என்பது எதிர்மறை பண்பைக் குறிக்கும்) அதன் விளைவு நல்ல பயனைக் குறிப்பனவாகும். இவ்வாறான அணிகளைப் பார்க்கும்பொழுது முதலில் நாம் சிந்திக்க வேண்டும் தொடர்ந்து அதனை ஆராய வேண்டும். இதுவே சிந்தனைத் திறன் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும்.

அணிகள் பயன்படுத்து வாயிலாக மிகவும் பணிவான முறையில் கேட்போர் மனதைப் புண்படுத்தாமல் கூறவருகின்ற கருத்தைப் புரியும்படி விளங்கிக் கொள்ளும்படி கொண்டுபோய்ச் சேர்க்கப் படுகிறது. ஒரு மனிதனின் குறைகளை எடுத்துக் கூறும் பொழுது சற்று நிதானமாகவும் மனம் புண்படாமலும் எடுத்து விளக்க வேண்டும். அதற்கு அணிகள் பயன்பாடு ஒரு நல்ல முன்னுதாரணம்.

கல்வியுலகை எடுத்துக் கொண்டால் ஆசிரியர்கள் உவமையோ உருகமோ பயன்படுத்தும் பொழுது மாணவர்கள் எளிமையாக விளங்கிக் கொள்வதற்கும் இவ்வாறான குறள்கள் உதவுகின்றன. மேலும் இலக்கியங்களில் காணப்படும் இவ்வாறான அணிகள் வாயிலாக மாணவர்களின் சிந்தனைத் திறன் மேலோங்கும்; இன்றைய தமிழ்மொழி கற்றல் கற்பித்தலுக்கு மேலும் வலுசேர்க்கும்.

மேற்கோள் நூல்கள்

1. Ainon & Abdullah. (1996) Teknik Berfikir- Konsep Dan Proses (*Edisi Kedua*). Kuala Lumpur. Utusan Publication & Distributors Sdn.Bhd
2. Bloom (1956) Taxanomy of Educational Objectives: The Classification of Educational Goals. Handbook 1: Cognitive Domain. New York: David Mckay
3. Edward de Bono. (1993) Teach Your Child How to Think. England. Penguin Books.
4. Mok Soon Sang. (2002) Ilmu Pendidikan Untuk KPLI (Edisi Kedua). Kuala Lumpur. Percetakan Seasons Sdn.Bhd
5. Supramani.S.(2006) Penyoalan Guru: Pemangkin Pemikiran Aras Tinggi Murid Dalam Jurnal Pendidikan Fakulti Pendidikan Universiti Malaya, Kuala Lumpur
6. Thirukkural Nuulgal.(2000) Chennai. Tamil Valarchi Thurai
7. Varatharasan,M. (1959). Ilakkiyathiran. Chennai. Paarinilayam

தமிழ்மொழி கற்றல் கற்பித்தலில் மென்பொருள்கள் - பயிலரங்கு

சம்பந்தம் மோகன், கிரசண்ட் பெண்கள் பள்ளி
கிருஷ்ணமூர்த்தி, தெக்வாய் உயர்நிலைப் பள்ளி
சிங்கப்பூர்.

நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியாய் வளர்ந்து கொண்டிருப்பது கணினித் தொழில்நுட்பம். கணினி இன்றிக் கல்வி இல்லை எனும் அளவிற்குக் கணினியும் இணையமும் மக்கள் மத்தியில் உயர்ந்தோங்கி நிற்கின்றன. உலகில் நிகழும் ஆக்கப்பூர்வ மாற்றமாக இது கருதப்படுகிறது. இம்மாற்றத்திற்கேற்பக் கற்பித்தல் கற்றலில் தம்மை மாற்றிக்கொண்டு பீடுநடை போடவேண்டும் என்ற கொள்கையுடன் சிங்கப்பூர் கல்வியமைச்சும் செயல்பட்டுவருகின்றது. தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியால் உருவான இணையவழிக் கருவிகளும் மென்பொருட்களும் இன்றைய உலகை ஈர்க்கத் தவறவில்லை. இவற்றோடு இணைந்திருப்பதையே இன்றைய மாணவர்களும் இளையர்களும் பெரிதும் விரும்புகின்றனர். கரும்பலகையில் எழுதிக் கற்ற காலம் போய் இணையம் வழிக் கற்கும் காலம் வந்துவிட்டது. அந்த வகையில் சிங்கப்பூர் பள்ளிகள் கற்றல் கற்பித்தலுக்காகத் தகவல் தொழில்நுட்பத்தைத் தீவிரமாகப் பயன்படுத்தி வருகின்றன.

இன்றைய மாணவர்கள் தகவல் தொழில்நுட்பத்தோடு சேர்ந்து வளரும் தன்மை கொண்டவர்கள். இவர்கள் மின்னியல் உலகை ஆளப் பிறந்தவர்கள். இவர்கள் விருப்பத்திற்கேற்ப கற்பித்தல் அமைவதே சாலச் சிறந்தது என்பதை அறிந்து சிங்கப்பூர் ஆசிரியர்கள் செயல்படுகிறார்கள். இணையவழிக் கருவிகளைச் செம்மையாகப் பயன்படுத்திக் கற்றல் கற்பித்தலில் ஈடுபடுகிறார்கள்.

<u>கல்வியமைச்சின் கற்பித்தல் கற்றலில் தகவல் தொழில்நுட்பம்</u>

இன்றைய அறிவுசார் பொருளியல் தகவல் தொழில் நுட்பத்தை மையமாகக் கொண்டுள்ளது. இதற்கேற்ப மாணவர்களை உருவாக்கவே சிங்கப்பூர் கல்வியமைச்சு IT Master Plan 3-ஐ நடைமுறைப்படுத்தியுள்ளது. மாணவர்களின் சுயமாகக் கற்கும் திறனை வளப்படுத்துதல், மாணவர்களை ஆழமான, பரந்த அறிவு பெற ஊக்குவித்தல், எங்கும் எப்பொழுதும் கற்றல் மற்றும் கற்றல் அடைவுகளை அடையாளம் கண்டு அதற்கேற்பக் கற்பித்தல் உத்திகளையும் வளங்களையும் பயன்படுத்துதல்

ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு ஆசிரியர்கள் பாடங்களை உருவாக்கிக் கற்பித்தலில் ஈடுபட்டுள்ளனர். ஒவ்வொரு பாடத்திலும் 30 விழுக்காடு பாடவேளைகளைத் தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தியே கற்பிக்கிறார்கள்.

இணையவழிக் கருவியான கூகல் தளம் மற்றும் சில மென்பொருள்கள் தமிழ் கற்றல் கற்பித்தலுக்கு எவ்கையில் உதவுகின்றது என்பதைப் பார்ப்போம்.

கூகல் இணையத்தளக் கருவி

கூகல் தளங்கள்(Sites), ஆவணங்கள்(Docs), அஞ்சல்(Mail) ஆகியவை கற்பித்தல் கற்றலுக்குப் பயன்படுகின்றன. இணையத்தின் வாயிலாக பயன்படுத்தப்படும் இவை இருவழிக் கருத்துப் பரிமாற்றத்திற்கு உகந்ததாக உள்ளன.

கற்றல் கற்பித்தலில் சில மென்பொருள்கள்

Lectora Professional Publishing Suite

http://www.trivantis.com

கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளுக்குப் பல்வேறு மென்பொருள்கள் பயன்படுத்தப்படுகின்றன. அவற்றுள் Lectora Professional Publishing Suite என்ற மென்பொருளைக் கொண்டு பல்லூடகக் கணினிப் பாடங்களைத் தயாரித்து அவற்றை இணையத்தளத்தின் மூலம் மாணவர்களுக்கு வழங்க முடியும். அதாவது, அதில் உருவாக்கப்பட்ட பாடங்களைக் கணினி வட்டுகளாகவும் இணையக் கோப்புகளாகவும் மாற்றிக்கொள்ள முடியும். இதன்வழி உருவாக்கப்படும் பாடங்கள் மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் அமைவதோடு மாணவர்களின் சுயகற்றலுக்கும் துணை நிற்கின்றன.

BRAVO

http://www.c3softworks.com/

BRAVO என்னும் இந்த மென்பொருள் வகுப்பறைக் கற்றல் நடவடிக்கைகளுக்குப் பெரிதும் உதவுகின்றது. விளையாட்டு முறையில் கற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்ள வழிசெய்கிறது. இந்த விளையாட்டுகள் மாணவர்களைக் கவரும் வகையில்

உருவாக்கப்பட்டுள்ளன. மேலும், பயன்படுத்துவதற்கு எளிமையாகவும் அமைந்துள்ளன. இம்மென்பொருளைக் கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளும்போது அதில் மாணவர்கள் மிகுந்த உற்சாகத்துடன் பங்கேற்கின்றனர்.

NewsMaker

http://www.aboutnewsmaker.com/

NewsMaker மென்பொருள் மாணவர்களின் படைப்பாற்றலை வளர்க்க உதவுகின்றது. இதன் மூலம் மாணவர்கள் தங்களின் வாசிக்கும் திறனை வளர்த்துக்கொள்ள முடியும். திரையில் அவர்கள் எழுதிய பகுதியைப் படித்துக்கொண்டே அதைப் பதிவும் செய்ய முடியும். பிறகு, அவர்கள் வாசித்த பகுதியில் பிழைகள் இருப்பின் அவற்றை நீக்கிக்கொண்டு மீண்டும் பதிவு செய்ய முடியும்.

மேற்குறித்த கூகல் மற்றும் சில மென்பொருள்களைப் பயன்படுத்துங்கள்; கற்றல் கற்பித்தலை வளமாக்குங்கள்.

மாணவர்கள் திறனுக்கும் தேவைக்கும் ஏற்ற வேறுபடுத்தப்பட்ட கற்பித்தல் - பயிலரங்கு

சி. சுப்புலட்சுமி
தமிழரசி சுப்பிரமணியம்
கல்வி அமைச்சு, சிங்கப்பூர்.

முன்னுரை

ஒவ்வொருக்கும் ஏற்ற கல்வியை வழங்க வேண்டும் என்பது சிங்கப்பூர்க் கல்விமுறையின் முக்கியக் குறிக்கோளாகும். ஒவ்வொரு மாணவரும் கற்றலில் பலவகையில் வேறுபட்டிருப்பர். தாய்மொழியறிவு அறவே இல்லாதவர்களுக்கும் சிறிதளவே உடையவர்களுக்கும் அதிக உதவி தேவைப்படுகிறது. அதே சமயம் தாய்மொழியில் வலுவான அடிப்படையைப் பெற்றிருக்கும் மாணவர்களின் மொழித்திறன் மேலும் வளர உதவ வேண்டும். இல்லங்களில் மாறிவரும் மொழிச்சூழலைக் கருத்திற்கொண்டு, பல்வேறு மாணவர்களின் கல்வித் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் தாய்மொழி கற்பித்தல் முறைகள் அமைய வேண்டும். இவற்றைக் கருத்திற்கொண்டு திறன் அறிந்து கற்பிப்பதோடு மாணவர்களின் தேவை அறிந்தும் கற்பிக்க உதவும் அணுகுமுறையான வேறுபடுத்தப்பட்ட கற்பித்தல் சிங்கப்பூர்ப் பள்ளிகளில் வலியுறுத்தப்படுகிறது. மொழி கற்றலில் மாணவர்களுக்கு நம்பிக்கை வளர உதவுவதோடு மாணவர்களின் கற்றல் தேவைகளுக்கேற்பவும் அறிவுத்திறத்திற்கேற்பவும் நாட்டங்களுக்கேற்பவும் பாடங்களைத் திட்டமிட்டு நடத்த இவ்வணுகுமுறை பெரிதும் உதவும். இந்த அணுகுமுறையை மேற்கொள்ளும் வகுப்பறையில் மாணவர்களுக்குப் பலதரப்பட்ட கற்றல் வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன. மேலும், ஒவ்வொரு கற்றல் நடவடிக்கையும் ஒவ்வொரு மாணவரின் கற்றல் தேவைகளைப் பொறுத்து வடிவமைக்கப்படுகிறது. இது, மாணவர்கள் சுயமாகச் சிந்திப்பவர்களாகவும் கற்பவர்களாகவும் உருவாக வழிவகுக்கிறது.

வேறுபடுத்தப்பட்ட கற்பித்தல் என்றால் என்ன?

அண்மைக் காலங்களில், கற்பித்தல் தொடர்பான பல்வகையான அணுகுமுறைகளும் உத்திகளும் கற்பித்தலில் வலியுறுத்தப்படுகின்றன. அவற்றுள் ஒன்றுதான் வேறுபடுத்தப்பட்ட கற்பித்தல் என்னும் அணுகுமுறையாகும். மாணவர்களுக்குப் பலவிதமான கற்றல் தேவைகள் உள்ளன. அவற்றின் அடிப்படையில், அதாவது

மாணவர்களின் திறனுக்கும், தேவைக்கும் விருப்பத்திற்கும் ஏற்ப, ஆசிரியர் பாடங்களைத் திட்டமிட்டு நடத்துவதே வேறுபடுத்தப்பட்ட கற்பித்தல் ஆகும்.

ஆசிரியர்கள் தங்கள் வகுப்பு மாணவர்களுக்கு ஏற்ற பாடங்களைத் திட்டமிடும்போது, மாணவர்கள் ஒரே வயதுடையவர்களாக இருந்தபோதிலும் அவர்கள் வேறுபட்ட அறிவுத்திறன், கல்விப் பின்புலம், விருப்பு வெறுப்புகள் கொண்டவர்கள் என்பதை நன்குணர்ந்து செயற்படுதல் வேண்டும். ஒரே வயதுடைய மாணவர்களிடம் ஒற்றுமைக் கூறுகள் இருப்பதுபோல், வேற்றுமைகளும் நிறைந்துள்ளன என்னும் அடிப்படை உண்மையை உணர்ந்து ஆசிரியர்கள் செயற்பட்டால் வகுப்பறையில் கற்றல் என்பது ஒவ்வொரு மாணவர்க்கும் அர்த்தமுள்ளதாக அமையும்.

வேறுபடுத்தப்பட்ட கற்பத்தலின் அடிப்படைக் கோட்பாடுகள்



தரமான பாடக்கலைத்திட்டம்

தரம் வாய்ந்த வேறுபடுத்தப்பட்ட கற்பித்தல் உருவாக்கத்திற்கு உயரிய பாடக்கலைத்திட்டம் தொடக்கமாக இருத்தல் வேண்டும். இது மாணவர்களை ஈர்க்கக்கூடியதாக, அவர்களின் ஆர்வத்தைத் தக்கவைக்கக்கூடியதாக, மாணவர்களின் அறிதிறன்களை விரிவடையச் செய்யக்கூடியதாக, மாணவர்களுக்குச் சவால்மிக்கதாக அமைதல் வேண்டும்.

குழு அமைப்பில் நெகிழ்வுத்தன்மை

மாணவர்களின் வேறுபட்ட தேவைகள், திறன்கள், கற்றல் பின்புலம்/கற்றல் பாணி, நாட்டங்கள் ஆகியவற்றை நன்குணர்ந்து அவர்களைக் குழுக்களாக அமைத்தல் பயனளிக்கும். அவ்வாறு குழுக்கள் அமைப்பதில் நெகிழ்வுத்தன்மை வேண்டும்.

மதிக்கத்தக்க நடவடிக்கைகள்

மாணவர்கள் ஒவ்வொருவரையும் அவர்களுடைய திறனுக்கும் ஆர்வத்துக்கும் ஏற்பக் கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்துதல் அவசியம். நடவடிக்கைகள் ஒவ்வொரு மாணவர்க்கும் அவரவர் திறனுக்கு ஏற்பச் சவால்மிக்கதாய் இருத்தல் வேண்டும்.

கற்றல் சமூகம்

ஆசிரியர் தம் வகுப்பறையில் அச்சுறுத்தலற்ற கற்றல் சூழல் நிலவுவதை உறுதிப்படுத்த வேண்டும். மாணவர்களோடு ஒன்றிணைந்து செயற்பட்டு அவர்களின் வெற்றிக்கும் வளர்ச்சிக்கும் ஆசிரியர் பாலமாக இருத்தல் அவசியம். மாணவர்களைக் குழு நிலையில் அல்லது தனிநிலையில் சந்தித்து அவர்களின் சந்தேகங்களைப் போக்குவதோடு அணுக்கமான உறவையும் வளர்த்துக்கொள்ளுதல் வேண்டும். ஆசிரியர்-மாணவர், மாணவர்-மாணவர் என கற்றல் சமூகங்கள் உருவாகவும் மாணவர்கள் தங்கள் கற்றலுக்குப் பொறுப்பேற்கவும் ஆசிரியர் வழிவகை செய்தல் வேறுபடுத்தப்பட்ட கற்பித்தலில் அவசியமாகும்.

வெளிப்பாடு/ மதிப்பீடு

கற்றல் வெளிப்பாடு என்பது மாணவர்கள் ஒவ்வொருவரும் தாங்கள் கற்றுக்கொண்டதைப் பலதரப்பட்ட வழிகளில் வெளிப்படுத்துவதாகும். கற்பித்தலும் மதிப்பீடும் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புடையவை. மதிப்பீடு என்பது தொடர் நடவடிக்கையாக அமைந்தால்தான் கற்றல் என்பது மாணவர்களுக்கு அர்த்தமுள்ள ஒன்றாக அமையும். மாணவர்களின் தயார்நிலை, கற்றல் பின்புலம்/கற்றல் பாணி, நாட்டங்கள் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு மொழி நடவடிக்கைகளின்போது ஆசிரியர் மாணவர்களின் செயற்பட்டைக் கவனித்து உடனுக்குடன் கருத்துத் தெரிவித்து அவர்களை வழிநடத்தவேண்டும். மாணவர்களின் கற்றல் அடைவுகளை நிர்ணயித்து அதற்குத் தக்கவாறு நடவடிக்கைகளை மாற்றியமைத்தல் முக்கியமாகும்.

வேறுபடுத்தப்பட்ட கற்பித்தலில் எவற்றைப் வேறுபடுத்தலாம்?



பாடப்பொருள்

மாணவர்களின் அறிவுத்திறன், அனுபவம் அறிந்து ஆசிரியர் பாடப்பொருளை, அதாவது எவற்றைக் கற்பிப்பது என்பதை வேறுபடுத்தலாம். பாடப்பொருள் மாணவர்களின் திறன், நாட்டம், கற்றல்பாணி முதலியவற்றின் அடிப்படையில் வேறுபடுத்தலாம்.

செயற்பாடு

மாணவர்களின் கற்றல் பின்புலம், கற்றல் பாணிகள், நாட்டங்கள் ஆகியவற்றுக்கேற்ப ஆசிரியர் தம் கற்பித்தல் நடவடிக்கைகளை வேறுபடுத்தலாம். மாணவர்களை ஆக்கபூர்வமாகக் கற்றலில் ஈடுபடுத்துவதற்கு உகந்த கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டு கற்பிக்க வேண்டும்.

கற்றல் வெளிப்பாடு

மாணவர்கள் தாங்கள் கற்றுக்கொண்டவற்றைப் பல வழிகளில் வெளிப்படுத்தலாம். அவற்றை ஆசிரியர் மாணவர்களுக்கு ஏற்பத் திட்டமிட்டுக் கொடுக்கும்போது அது கற்றலை வலுப்படுத்தும். மாணவர்களின் கற்றலை உடனுக்குடன் மதிப்பிடவும் அவை உதவும்.

வேறுபடுத்தப்பட்ட கற்பித்தலை எவற்றின் அடிப்படையில் வேறுபடுத்தலாம்?



தயார்நிலை

உளவியல் அடிப்படையில், மாணவர்கள் கற்றலுக்கான தயார்நிலையில் இருக்கும்போது நிகழ்த்தப்படும் கற்பித்தலே பயன்மிக்கதாக அமையும் என்று குறிப்பிடப்படுகிறது. எனவே, ஒரு பாடத்தைக் கற்பிக்க ஆசிரியர் திட்டமிடும்போது தம் மாணவர்கள் அதைக் கற்றுக்கொள்ள எந்த அளவுக்குத் தயாராக இருக்கிறார்கள் என்பதை அவர்

உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். மாணவர்கள் ஒவ்வொருவரின் தயார்நிலைக்கு ஏற்பப் பாடத்தை வேறுபடுத்தி அமைத்துக் கற்பித்தல் நல்ல பலனையளிக்கும்.

நாட்டங்கள்

ஒரு மாணவரின் நாட்டத்தை அறிந்து கற்பிக்கும்போது கற்பிப்பவை அந்த குறிப்பிட்ட மாணவரை எளிதில் சென்று அடையும். அதற்குக் காரணம் அந்த மாணவரின் கவனம் எளிதல் ஈர்க்கப்படுகிறது; அவனுக்குக் கற்றல் சுகமான பயணமாகிறது.

கற்றல் பின்புலம்/கற்றல் பாணி

மாணவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறு கற்றல் பின்புலத்தையும் கற்றல் பாணியையும் கொண்டவர்களாக இருக்கிறார்கள். பல்வகை நுண்ணறிவுத் திறன்கள் அடிப்படையில் மாணவர்களை வேறுபடுத்தலாம், அல்லது ராபர்ட் ஸ்டெர்ன்பெர்க் (Robert Sternberg) குறிப்பிடுவதுபோல அறிவுபூர்வமாக ஆய்ந்தறிந்து கற்கும் மாணவர்கள், நடைமுறையில் செய்துபார்த்துக் கற்கும் மாணவர்கள், கற்பனைத்திறத்துடனும் படைப்பாக்க நிலையிலும் சிந்தித்துப் பார்த்துக் கற்கும் மாணவர்கள் என வேறுபடுத்திக் கற்பிக்கலாம். இவ்வாறு மாணவர்களின் பின்புலம், கற்றல்பாணி அறிந்து வழங்கப்படும் கற்பித்தலே அவர்களுக்கு மிகவும் உகந்த கற்றல் அனுபவமாக அமையும்.

வேறுபடுத்தப்பட்ட கற்பித்தல் – சில கற்பித்தல் உத்திகள்

சில கற்பித்தல் உத்திகள்

↓

அறிதல்-புரிதல்-செய்தல் (KUD), ராஃப்ட் (RAFT), டியர்ட் (Tiered), திங்க்-டெக்-தோ (Think-Tac-Toe), பலநோக்கு எண்ணத்துளிகள் (Multiple-Entry-Journal), பல்வகை நுண்ணறிவுத் திறன்கள் (MI), கூடிக்கற்றல் உத்திகள் (CLS)

வேறுபடுத்தப்பட்ட கற்பித்தலை மேற்கொள்ளும் ஆசிரியர்கள் பல்வேறு உத்திகளைப் பயன்படுத்துவார்கள். ஏதேனும் ஓர் உத்தி மட்டும் மாணவர் எல்லாருக்கும் ஏற்புடையதாக இருக்க முடியாதல்லவா? அத்தகைய வேறுபடுத்தப்பட்ட கற்பித்தல் உத்திகளுள் சில:

அ. அறிதல்-புரிதல்-செய்தல் [Know-Understand-Do (KUD)

வேறுபடுத்தப்பட்ட கற்பித்தலுக்கு அடிப்படையான உத்தி அறிதல்-புரிதல்-செய்தல் ஆகும். இவ்வுத்தி ஆசிரியர் தமது கற்பித்தலை வேறுபடுத்துவதில் குவிநோக்க வழிகாட்டுகிறது. அதன் படிநிலைகள் பின்வருமாறு:

i. பாடத்தைத் தொடங்குவதற்கு முன், மாணவர்கள் எவற்றை அறிந்துகொள்ளவும், புரிந்துகொள்ளவும், செய்யவும் வேண்டும் என்பதைத் தீர்மானித்தல்

எ-டு:

அறிந்துகொள்ள வேண்டியவை:	அருச்சொற்கள், வரையறைகள், தகவல்கள்
புரிந்துகொள்ள வேண்டியவை:	கோட்பாடுகள், பொதுமைக்கூறுகள், அடிப்படை உண்மைகள்
செய்ய வேண்டியவை:	அறிந்தும் புரிந்தும் கொண்டவற்றைப் பயன்படுத்தும் திறன்கள், சொற்கள்/சொற்றொடர்களை உருவாக்குதல்

ii. மேற்கண்ட முறையில் கற்பித்தலுக்குத் திட்டமிடுதல்

iii. மாணவர்கள் அறிந்துகொள்ளவும், புரிந்துகொள்ளவும், செய்யவும் வேண்டியவற்றை வகுப்பில் அவர்களது பார்வைக்கு வைத்தல்

மாணவர்களின் கற்றல் திறனுக்கேற்ப அவர்கள் அறிந்துகொள்ளவும், தெரிந்துகொள்ளவும், செய்யவும் வேண்டியவற்றைப் பணிப்பதால் அவர்கள் தங்களின் கற்றல் வேகத்திற்கேற்பக் கற்க இயலும்.

ஆ. திங்க்-டெக்-டோ [Think-Tac-Toe]

இந்தக் கற்பித்தல் உத்தி டிக்-டெக்-டோ {Tic-Tac-Toe} என்னும் விளையாட்டு முறையைப் பின்பற்றி அமைந்ததாகும். மாணவர்களின் தயார்நிலை, நாட்டம், கற்றல் பாணி/கற்றல் பின்புலம் ஆகியவற்றின் அடிப்படையில் வேறுபடுத்திக் கற்பிக்க இவ்வுத்தி வாய்ப்பளிக்கிறது. 9 கட்டங்களில் ஒவ்வொரு வரிசையும் ஒரு குறிப்பிட்ட கருப்பொருளைக் கொண்டிருக்கும். அக்கருப்பொருளுக்கான மூன்று வெவ்வேறு நடவடிக்கைகள் அல்லது மதிப்பீட்டுப் பணிகள் கட்டங்களில் கொடுக்கப்படும். மாணவர்கள் தத்தம் விருப்பங்களின் அடிப்படையில் ஒவ்வொரு வரிசையிலிருந்தும்

ஒன்றைத் தெரிவுசெய்து அதில் ஈடுபடுவர். அகன்ற வாசிப்பு, கருத்தறிதல் கற்பிக்க இவ்வுத்தி ஏற்புடையது. ஓர் எடுத்துக்காட்டு:

கதைநூலின் தலைப்பு	கதைநூலில் உள்ள படத்தை வரை; தலைப்பை எழுது.	கதையின் தலைப்பு உனக்குப் பிடித்திருக்கிறதா? ஏன்?	நீ இந்தக் கதையின் எழுத்தாளராக இருந்திருந்தால் கதைக்கு என்ன தலைப்பு கொடுத்திருப்பாய்? ஏன்?
கதாபாத்திரம்	உனக்குப் பிடித்த கதாபாத்திரம் யார்? நீ அவரைத் தேர்ந்தெடுக்கக் காரணம் என்ன?	உனக்குப் பிடித்த கதாபாத்திரம் யார்? அவருடைய பண்புகளைப் பட்டியலிட்டு எழுது.	கதையில் வரும் கதாபாத்திரத்தின் குணநலன்கள் உன்னோடு எவ்வாறு ஒத்திருக்கின்றன?
கதையின் தொடக்கம், முடிவு	கதையின் தொடக்கமும் முடிவும் உன்னைக் கவர்ந்ததா? ஏன்?	நீ கதையின் முடிவை எவ்வாறு மாற்றி அமைத்திருப்பாய்?	நீ கதையின் முடிவையும் தொடக்கத்தையும் எவ்வாறு மாற்றி அமைத்திருப்பாய்?

இவ்வுத்தியில் மாணவர்களுக்குத் தாங்கள் மேற்கொள்ளவிருக்கும் கற்றல் செயற்பாட்டில் அல்லது வெளிப்பாட்டில் விருப்பத்தெரிவு உள்ளது.

இ. படிநிலை வளர்ச்சிமுறையில் கற்பித்தல் (Tiered Instruction)

முன்பு குறிப்பிட்டதுபோல ராபர்ட் ஸ்டெர்ன்பெர்க் மாணவர்களை மூவகையான கற்றல் பாணிகளைக் கொண்டவர்களாக வகைப்படுத்துகிறார்.

- நடைமுறையில் செய்து பார்த்துக் கற்பவர்கள் (Practical Learners)
- அறிவுப்பூர்வமாக ஆய்ந்தறிந்து கற்பவர்கள் (Analytical Learners)
- கற்பனைத்திறத்துடனும் படைப்பாக்க நிலையிலும் சிந்தித்துக் கற்பவர்கள் (Creative and Critical Thinking Learners)

மூன்று நிலை கற்றல்பாணி கொண்ட மாணவர்களுக்கேற்பக் கேள்விகள், நடவடிக்கைகள் அல்லது பணிகள் எளிமையிலிருந்து படிப்படியாகச் சவால்மிக்கவையாக அமைக்கப்பட்டு வழங்கப்படும். இதனால், மாணவர்களுக்குச்

சலிப்போ ஏமாற்றமோ ஏற்படுவதில்லை. அவரவரது கற்றல்பாணியில் கற்றல் ஈடுபாட்டுடன் நிகழும்.

ஈ. பலநோக்கு எண்ணத்துளிகள் (Multiple Entry Journal)

வாசித்தல் ஒரு வாழ்நாள் திறனாகும். அத்தகைய வாசித்தலை மாணவர்கள் பொருளுணர்ந்தும் ஆழமாகவும் மேற்கொள்வதற்கான படிநிலைகளைக் கொண்டது இவ்வுத்தி. வாசிப்பதற்குமுன், வாசிக்கும்போது, வாசித்தபின் ஆகிய சமயங்களில் மாணவர்கள் தங்கள் கவனம் சிதறாமல் வாசிக்க வழிகாட்டும் கேள்விகள் அவர்களுக்கு வழங்கப்படும். அக்கேள்விகளில் கவனத்தைக் செலுத்துவதால் மாணவர்கள் பொருளுணர்ந்தும் ஆழமாகவும் வாசிக்க இயலும். இதன் படிநிலைகள்:

- மாணவர்கள் வாசிக்க வேண்டிய பனுவலை மௌனமாக வாசித்தல்
- அதன்பின், 'பகுதி நன்றாகப் புரிகிறது, ஓரளவுக்குப் புரிகிறது, அறவே புரியவில்லை' ஆகியவற்றில் அவர்களின் தயார்நிலையைக் கணித்தல்
- கணிப்பின் அடிப்படையில் மாணவர்கள் குழுக்களாகச் செயற்படுதல்
- வாசிக்கும்முன், வாசிக்கும்போது, வாசித்தபின் ஆகிய சமயங்களில் பொருத்தமான வழிகாட்டும் வினாக்களைக் கொண்டு மாணவர்கள் தங்கள் வாசிப்பை மேற்கொள்ளுதல்

உ. ராஃப்ட் [Role, Audience, Format, Topic (RAFT)]

ராஃப்ட் என்பது பாத்திரம்/பாகம், பார்வையாளர், அமைப்பு/வடிவம், தலைப்பு ஆகியவை உள்ளடங்கிய தொகுப்பின் சுருக்கச் சொல் ஆகும். இவ்வுத்தி வேறுபட்ட திறனையும் நாட்டங்களையும் உடைய மாணவர்களை முழுமையாகக் கற்றலில் ஈடுபடுத்துகிறது. மாணவர்களின் படைப்பாற்றலை மேம்படுத்துகிறது. மாணவர்கள் ஒரு குறிப்பிட்ட பாத்திரத்தை/பாகத்தை ஏற்று, குறிப்பிட்ட பார்வையாளர்களுக்காகக் குறிப்பிட்ட அமைப்பு/வடிவத்தில் பொருத்தமான தலைப்பினைக் கொண்டு தயாரித்து வழங்கக்கூடிய செயற்பாடுகளை இது விளக்குகிறது. ஓர் எடுத்துக்காட்டு:

பாகம்/பாத்திரம் (யார்?)	பார்வையாளர் (யாருக்காக?)	அமைப்பு/வடிவம்	தலைப்பு
மகன்/மகள்	குடும்பம்	கவிதை	அன்பு
நண்பன்	மாணவர்கள்	கட்டுரை	நட்பு
நிருபர்	வானொலி கேட்பவர்	பேட்டி	கவர்ந்த ஒருவர்
இயக்குநர்	பொதுமக்கள்	நாடகம்	அன்பின் விலை

முடிவுரை

அக்காலந்தொட்டே, கல்வியாளர்கள் மாணவர்களுடைய வயதுக்கும் திறனுக்கும் ஏற்ற பொருத்தமான கற்பித்தல் முறைகளைத் தேர்ந்தெடுத்துக் கற்பித்தல்பற்றிக் குறிப்பிட்டு வந்துள்ளனர். மாணவர்களை மையமாகக் கொண்டமைந்த வேறுபடுத்தப்பட்ட கற்பித்தல் அணுகுமுறை பல கோணங்களில் மாணவர்களைப்பற்றி ஆசிரியர்கள் நன்கு அறிந்துகொள்ளவும் அவற்றிற்கேற்ப ஒவ்வொரு மாணவரின் தேவை, திறன் அறிந்து கற்பித்தலைத் திட்டமிடவும் பாடம் நடத்தவும் துணைபுரிந்து வருகிறது. மொழியைப் பயன்படுத்த மாணவர்களுக்கு ஊக்கமூட்டக்கூடிய வகையில் அமைவதே நல்ல கற்கும் சூழலாகும். இச்சூழலை வேறுபடுத்தப்பட்ட கற்பித்தல் அணுகுமுறை நிச்சயம் ஏற்படுத்தித் தரும்.

இணை அமர்வுகள் 4

இணை அமர்வுகள் 4

இயல்பு மற்றும் கற்றல் சூழல்களில் சிங்கப்பூர்த் தமிழின் பயன்பாடு - ஒரு சமுதாயமொழியியல் அணுகுமுறை

Dr. இரா. வேல்முருகன்
நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக் கழகம், தேசியக் கல்விக் கழகம்
சிங்கப்பூர்.

மொழி என்பது மக்களால் உருவாக்கப்பட்ட அரியதொரு கலை. கருத்துப்பரிமாற்றத்திற்கும் உள்ளத்து உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கும், முழுமையான அனுபவங்களைப் பெற்றுப் பயனடைவதற்கும் காரணமாக அமைவது மொழி. மற்றவர்களோடு உறவாடி மகிழத் துணை நிற்கும் இணைப்புச் சங்கிலி. இத்தகைய கூறுகளைத் தன்னகத்தே கொண்ட தமிழ்மொழி தொன்மையும், செழுமையும், வளமையும் கொண்டு வாழும் மொழியாக, உயர்தனிச் செம்மொழியாக உலகை வலம் வந்து கொண்டிருக்கிறது.

தேமதுரத் தமிழோசை உலகெலாம்
பரவும் வகை செய்திடல் வேண்டும்

என்ற முண்டாசுக் கவிஞனின் முழக்கத்திற்கேற்ப எண்பது நாடுகளுக்கு மேல் இனிய செந்தமிழ் பீடுநடை போட்டு வருகிறது. புலம் பெயர்ந்த நாடுகளில் தமிழ்மொழி சீரோடும் சிறப்போடும் பேணி வளர்க்கப்படுவதோடு புத்தம் புதிய அணுகுமுறைகளின் வழி கற்பிக்கப்பட்டும் வருகிறது. சிங்கப்பூரில் மாணவர்களும் மக்களும் தமிழ்மொழியை அதன் பயன் அறிந்து பலவகைகளில் பயன்படுத்தி வருகின்றனர். செந்தமிழ் அன்னைக்கு மகுடம் சூட்டிப் பெருமை சேர்க்கும் புலம்பெயர்ந்த நாடுகளில் சிங்கைக்குடியரசு தலைநிமிர்ந்து நிற்கிறது என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

<u>இருநிலை வழக்கு</u>

தமிழ்மொழி எழுத்து வழக்கு, பேச்சுவழக்கு என இருநிலை வழக்கு கொண்டது. ஒரு கருத்தினை எழுதி வாசிப்பதற்கும் அதே கருத்தை எதிரில் உள்ளவர்களிடம் இயல்பாகக் கூறுவதற்கும் இருவகை வழக்குகளைப் பயன்படுத்துகிறோம். முன்னது எழுத்து வழக்கு; பின்னது பேச்சு வழக்கு. இவ்வேறுபாட்டை முதன் முதலில் விளக்கிக் கல்வி உலகிற்கு அறிமுகப்படுத்திய பெருமை சமுதாய மொழியியல் அறிஞர் (Sociolinguists) பெர்கூசன்

(Ferguson)என்பவரையே சாரும். ஒரு சமுதாயத்தில் இருநிலை வழக்கு ஏற்படுவதற்குரிய காரணங்கள்:

1. அச்சமுதாயத்தில் நீண்ட காலமாக இலக்கியப் பாரம்பரியமும், மதச்சார்பான இலக்கியங்களும் மக்கள் பேசும்மொழியில் அல்லது தொடர்பான மொழியில் அமைந்திருக்க வேண்டும்.
2. சமுதாயத்தில் சிறுபான்மையினர் மட்டுமே கல்வி அறிவு பெற்றவர்களாக அமைந்து பெரும்பான்மையான மக்களின் பேச்சு மொழி, இலக்கிய நடையினின்றும் ஓரளவு மாறுபட்டதாக அமைய வேண்டும்
3. எழுத்து மொழிக்கும் பேச்சுமொழிக்கும் உள்ள வேறுபாடுகள் அதிகரித்தும் ஒவ்வொரு வகையும் தத்தமக்கென, பயன்படும் காலமும் இடமும் வெவ்வேறாக அமையவேண்டும்.

இம்மூன்று அமைப்புகள் எந்தெந்த சமுதாயங்களில் ஏற்பட்டாலும் அங்கு இரு நிலை வழக்கு உருவாகும் என விரிவான விளக்கம் தருகிறார் மொழியியல் அறிஞர் சீனிவாச வர்மா.

<u>சிங்கப்பூரும் பன்மொழி வழக்குச் சூழலும்</u>

பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனியின் நிர்வாக அதிகாரியான சர் ஸ்டாம்போர்டு ராபிள்ஸ் என்பவர் 1819 ஆம் ஆண்டில் ஜொகூர் சுல்தான் அவர்களிடம் செய்து கொண்ட ஒப்பந்தத்திற்குப் பிறகு அடர்ந்த காடும், சின்னஞ்சிறிய குன்றுகளும், கரடு முரடான இடங்களுமாகக் காட்சியளித்த ஒரு சிறிய தீவு வணிக நிலையமாக வளர்ந்தது. சுமார் 140 ஆண்டுகளில் மக்களின் உழைப்பும், மனம் தளராத முயற்சியும் சேர்ந்து 1959 ல் சிங்கப்பூர் தனிநாடாகத் தன்னாட்சி பெற்ற நாடாக விளங்கி, 1963 – ல் மலாயா நாட்டுடன் இணைந்து, இரண்டே ஆண்டுகளில் சரியாக 1965 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் ஒன்பதாம் தேதி மலாயாவிலிருந்து பிரிந்து தனிக் குடியரசு நாடாக, உலக நாடுகள் வியக்கும் வண்ணம் ஒப்பற்ற நாடாகப் பீடுநடை போட்டு வருகிறது.

தொடக்க காலத்திலிருந்தே மலேசியா, இந்தியா, சீனா, இலங்கை, இந்தோனிசியா போன்ற நாடுகளிலிருந்து பல்வேறு இனத்தைச் சேர்ந்த மக்கள் சிங்கப்பூரில் குடியேறி நாட்டின் முன்னேற்றத்திற்கு அயராது பாடுபட்டு வருகின்றனர். பல்வேறு இன மக்கள் வாழும் நாட்டில் பன்மொழி வழக்குச் சூழல் என்பது தவிர்க்க முடியாத ஒன்று. 2000 ம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் படி சிங்கப்பூர்க் குடியரசின் மொத்த மக்கள் தொகை, 50,76,700 (ஐம்பது லட்சத்து எழுபத்தி ஆறாயிரத்து எழுநூறு).

இவர்களில் சீனர்கள் 74.1 விழுக்காட்டினர். மலாய்க்காரர்கள் 13.4 விழுக்காட்டினர். இந்தியர்கள் 9.2 விழுக்காட்டினர். பிற இனத்தவர்கள் 3.3 விழுக்காட்டினர்.

இந்தியர்களுள் தமிழ், மலையாளம், தெலுங்கு, பஞ்சாபி, இந்தி, வங்காள மொழி பேசுவோர் அடங்குவர். இவர்களில் தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் ஏறத்தாழ 66 விழுக்காட்டினர். எனவே இந்தியர்களுள் அதிக எண்ணிக்கையில் இருப்பவர்கள் தமிழர்களே. இங்கு ஆங்கிலம் முதல்மொழியாகவும், பொதுமொழியாகவும், தொடர்பு மொழியாகவும் உள்ளது. சீனம், மலாய், தமிழ் மொழிகள் இரண்டாம் நிலை மொழிகளாக உள்ளன.

சிங்கப்பூர் மக்களின் கல்வியறிவு ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருவதை மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் வழி அறிய முடிகிறது.

1980	84%
1990	90%
2000	93%
2010	95.9

<u>சிங்கப்பூர் பள்ளிகளில் தமிழும் தமிழ் மாணவர்களும்</u>:

தாய்மொழியை மொழிப்பாடமாகக் கற்பிக்கும்போது கிளைமொழிகளின் தாக்கம், நிறைவில்லாத சொற்களஞ்சியம், எழுத்துத்திறன், நடை போன்றவற்றை மதிப்பிடல் செய்யவேண்டும் என்கிறார் ராபர்ட் லாடோ. அதற்கேற்பச் சிங்கப்பூர் அரசாங்கம் கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து ஆசிரிய, மாணவர்களுக்குத் தேவையான கற்றல் கற்பித்தல் தொடர்பான வசதிகளைச் செய்து கொடுத்துக் கொண்டிருக்கிறது. பள்ளிகளில் நவீன தொழில்நுட்ப வசதிகளைப் பெருக்கி மாணவர்கள் தொழில் நுட்பத் துறையில் சிறந்து விளங்க வழிவகை செய்கிறது. இங்கு 218 தொடக்கப்பள்ளிகளிலும், 89 உயர்நிலைப்பள்ளிகளிலும் 12 உயர்நிலை மொழி நிலையங்களிலும் 16 தொடக்கக் கல்லூரிகளிலும் 1 மத்தியக் கல்வி நிலையத்திலும் தமிழ் மொழி கற்பிக்கப்பட்டு வருகிறது. பல்கலைக் கழகப் புகுமுக நிலையில் 700 க்கும் மேற்பட்ட மாணவர்கள் தமிழ் மொழியைப் பயில்கிறார்கள்.

பன்மொழி வழக்குச் சூழலில் தாய் மொழியே முதல் மொழி என்றோ தாய்மொழி தமிழ் என்றோ சொல்லுகின்ற கோட்பாடு எந்த வகையிலும் பொருந்தாது. எனவே தான் தமிழ் மொழி இரண்டாம் நிலை மொழியாகக் கற்றுக் கொடுக்கப்படுகிறது. தமிழ் மாணவர்களின் தரத்திற்கும் தன்மைக்கும் ஏற்பப் பள்ளிகளில் தமிழ், உயர்தமிழ், அடிப்படைத் தமிழ், தமிழ் மொழி B என நான்கு வகைப் பிரிவுகளில் தமிழ் மொழி கற்பிக்கப்பட்டு வருகிறது.

தொடக்கப் பள்ளிகளில் EM 2 கல்விப் பிரிவில் உள்ள மாணவர்களுக்கும் உயர்நிலைப்பள்ளிகளில் விரைவு மற்றும் வழக்கப் பிரிவு மாணவர்களுக்கும் தமிழ் மொழி கற்றுத் தரப்படுகிறது. தமிழ்மொழியில் மிகச் சிறந்த வகையில் திறன் பெற்ற மாணவர்களுக்கு உயர்தமிழும், தொடக்கப்பள்ளிகளில் EM 3 கல்விப் பிரிவில் உள்ள மாணவர்களுக்கும் உயர்நிலைப் பள்ளிகளில் வழக்கம், தொழில்நுட்பப் பிரிவு மாணவர்களுக்கும் அடிப்படைத் தமிழும், பிற பாடங்களில் அதிகத்திறன் பெற்றுத் தமிழ் கற்பதில் மிகுந்த சிரமத்தை எதிர்கொள்ளும் மாணவர்களுக்குத் தமிழ் மொழி B யும் கற்றுக் கொடுக்கப்படுகின்றன.

சிங்கப்பூரில் பரவலாக ஐந்து பள்ளிகளைத் தேர்வுசெய்து 20 மாணவர்களுக்குப் பேச்சுத் தமிழ் தொடர்பான வினா நிரல் கொடுக்கப்பட்டன. மாணவர்களிடம்,

- அன்றாடம் வகுப்பறையிலும் வகுப்பறைக்கு அப்பாலும் தமிழைப் பயன்படுத்தும் நிலை
- தமிழ்மீது அவர்கள் கொண்டிருக்கும் ஆர்வம்
- நண்பர்களோடு உரையாடும்போது அவர்கள் பயன்படுத்தும் சொற்கள்
- தொடர்ச்சியாகத் தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்திப் பேச இயலாமைக்குரிய காரணங்கள்
- பொதுவாகச் சொல்வளம் குறைந்து காணப்படுவதற்குரிய சூழல்கள்
- தமிழ்மொழியின் உச்சரிப்பில் ஏற்படும் சிக்கல்கள்
- பிறமொழி மாணவர்களோடு சேர்ந்திருக்கும் நேரம் அதிகமாக இருக்கும்போது தமிழ்மொழிப் புழக்கத்தின் நிலை
- தமிழை வாழும் மொழியாக ஆக்குவதற்குரிய எதிர்காலத் திட்டம்

போன்ற வினாக்கள் அடங்கிய வினாநிரல் கொடுக்கப்பட்டுத் தரவுகள் சேகரிக்கப்பட்டுப் பதிவு செய்யப்பட்டன. அதனடிப்படையில் 80 விழுக்காட்டு மாணவர்கள்

தமிழ்மொழியைக் கற்கும்போதும் பேசும்போதும் ஆங்கில மொழியில் சிந்தித்துப் பேச எழுத முற்படுகின்றனர். தொடர்பு மொழியாகவும் முதன் மொழியாகவும் விளங்குகின்ற ஆங்கிலம் மாணவர்கள் அடிக்கடிப் பயன்படுத்துவதற்கு ஏதுவான மொழியாக இருப்பதால் அதனைத்தமிழ் மொழியோடு கலந்துபேசக்கூடிய கட்டாயத்துக்கும் உட்படுகின்றனர். மாணவர்களிடம் சேகரிக்கப்பட்ட தரவுகளில் சில,

- தமில் Lesson ரெம்ப Simple ன்னு சொல்ல முடியலெ. கொஞ்சம் boring ஆ இருக்கும். தெனமும் bus எடுத்து school போறதுக்குள்ள போதும் போதும்னு ஆயிடுது.
- Class ல, ரொம்ப சத்தமாப் பேசுறது படிக்கிறதுக்கு disturbance ஆ இருக்குலா.
- தமிழ்ப் படம் இப்ப ரொம்ப boring ஆ இருக்குன்னு ஏன் சொல்றே?
- Compo ன்னு சொன்னாலே ஏன்லா இப்படி எரிச்சலாகிற.
- Stupid மாதிரி பேசாதே, நா எழுதுறதைச் சொல்லல, அந்த title ல சொல்றேன்
- ஏ- லா எப்பவும், ஏசிக்கிட்டே இருக்கிறாங்க. அதனால, இப்ப ஒழுங்கா படிக்க try பண்றேன்.
- ஓய், சாந்தினி, Face book ன்னு சொன்னாலே,ரொம்ப fun ஆக இருக்கும்ல.
- Class க்கு வெளியே English and தமிழ் mix பண்ணித்தான் பேசுவோம். மத்தபடி தமிழ்ல பேசுறதே இல்லலா.
- Exam க்கு மட்டும்தான் படிக்கிறது. வீட்ல, எல்லாரும் English தான். அதனாலே தமிழ்ப் பேச ரொம்ப difficult so, ஆர்வம் இல்லாமப் போகுது.
- Friend's கூடப் பேசும் போது mostly English தான் தமிழில் பேசக் கஷ்டம். பேசுனாலும், மத்தவங்க bully பன்னுவாங்க
- தமிழ்ல தொடர்ச்சியாகப் பேசுனா ரொம்ப mistakes வரும். some words க்குத் தமிழ்ல சொல்லத் தெரியாது. So தெரிஞ்சாலும் பேசுறதில்ல.
- அப்பா அடிக்கடி ஏசுவார்லா I don't mind.
- இதைப்போய்ப் பெருசா எடுத்துக்கிறியே! Take it is easy da !

மாணவர்கள் பேசும் தமிழில் மொழித்தாவலும் (Code-switching), மொழிக் கலப்பும் (Code-mixing) எந்த அளவிற்கு இருக்கிறது என்பது பற்றிய ஆய்வுகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆங்கில மொழியை அதிகம் கலந்து பேசும் நிலை உருவாகும் போது மொழிச் சிதைவு ஏற்பட்டு, மொழிப் புழக்கம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து விடக்கூடிய சூழ்நிலையும் ஏற்படும்.

எனவே மாணவர்கள் தமிழ் மொழியின் தன்மையைப் புரிந்து கொள்ளும்வரை, ஆங்கிலச் சொற்களைத் தேடி அலையாமல் செந்தமிழில் உரையாட முடியும் என்ற நிலை வரை ஆங்கிலத்தை அவ்வப்போது பயன்படுத்த அனுமதிக்கலாம்.

மொழிக் கலப்பு ஏற்படுவதற்கான முக்கியக் காரணங்களாகச் சமுதாய மொழியியலார் பின்வருமாறு வகைப்படுத்துகின்றனர்.

1. பிற மொழியைக் கலந்து பேசுவது கௌரவம் (Prestige motive) என எண்ணுவதால்
2. சொல்ல வரும் கருத்தை எளிமையாக எடுத்துரைக்க முடியும் என்பதால்
3. தாய்மொழியில் சரளமாகப் பேசுவதற்குரிய சொல்வளத்தை அதிகம் பெற்றிராததால்.
4. ஏற்புடைய சொல்லை நிரப்ப இயலாததால்
5. புதிதாகப் பயன்படுத்தும் பொருள்களுக்குரிய சொல் தமிழ்மொழியில் இல்லாததால் மொழிக்கலப்பு ஏற்படுகின்றது.

மாணவர்களுக்குத் தமிழ் மொழி மீது ஆர்வமும் அதே நேரத்தில் அதிக சொல்வளப் பெருக்கமும் ஏற்பட்டால் பிறமொழிக் குறுக்கீட்டைக் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்துக் கொண்டு நல்ல தமிழில் பேச முடியும். தமிழ் மொழியில் ஏற்கனவே கடன் வாங்கிப் பல காலமாகப் பயன் பாட்டில் இருந்துவரும் சொற்களைத் தவிர்க்கவும் முடியாது. அதற்கு இணையாகப் புதுமையான தமிழ்ச் சொற்களைத் தேடிக் கண்டுபிடித்துச் சேர்த்தாலும் தாமரை இலைத் தண்ணீர் போலப் பட்டும் படாமலும் நின்று கொண்டிருக்கும்.

சான்றாக :

Coffee என்பதைக் குளம்பி என்றும் Ball point பேனா என்பதைப் பந்து முனைப் பேனா என்றும் Cycle என்பதை ஈருளை மிதிவண்டி என்றும் புதுமையாக வலிந்து தூய தமிழில் மாணவர்கள் பயன்படுத்தித்தான் ஆகவேண்டும் என விஷப் பரிட்சையில் இறங்கினால், அவர்களிடம் இருக்கும் ஆர்வமும் குறைவதற்கு வாய்ப்பு ஏற்படும். எனவே, இரண்டாம் மொழி நிலையில் தமிழைக் கற்கும் மாணவர்கள் சிற்சில அவசியமான சொற்களை ஆங்கிலத்திலேயே பயன்படுத்திப் பிறகு தமிழ்ச்சொற்களுக்கு மாறலாம்.

வேகமாக வளர்ந்து வரும் அறிவியல் வளர்ச்சியில் இது போன்ற எண்ணிறந்த கலைச் சொற்கள் எவ்வித மாற்றமுமின்றியும், தமிழாக்கப்பட்டும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. புதிதாக உருவாகும் எல்லாச் சொற்களையும் மொழி பெயர்த்துக் கொண்டிருக்க இயலாது. புதியனவாகச் சொற்கள் உருவாகிக் கொண்டு இருப்பது இயற்கையின் நியதி. இவ்வாறு வழங்கும் சொற்களை **கல்விச் சொற்கள்** அல்லது **கற்ற**

சொற்கள் எனப் பெயரிடலாம் என்கின்றனர் சமுதாய மொழியியலார். மொழியின் பயன்பாட்டில் சொற்களின் தேவையும் அதிகரித்துக்கொண்டே இருக்கும்.

மொழியில் கடன் வாங்குவதும் கடன் கொடுப்பதும் இன்று நேற்றல்ல, காலம் காலமாக நடைபெற்றுக்கொண்டிருப்பதுதான். அதே நேரத்தில் புதிதாகத் தோன்றும் எல்லாச் சொற்களும் பிற மொழிச் சொற்களாக இருக்கவேண்டும் என்ற அவசியம் இல்லை. பிற மொழிச் சொற்களில் சில எளிமையாகத் தமிழ்ப் படுத்தப்பட்டு, பயன்பாட்டில் வெற்றியும் கண்டிருக்கிறது. சிங்கப்பூரில் Computer என்ற சொல்லுக்குப் பதிலாகக் கணினி என்று மொழிபெயர்க்கப்பட்டு அச்சொல் எவ்விதச் சிக்கலுமின்றி எல்லோராலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இதுபோல Dollar என்பது வெள்ளி எனவும், message என்பது குறுந்தகவல் எனவும் Hand phone என்பது கையடக்கத் தொலைபேசி எனவும் பயன்பட்டு வருவதைக் காணமுடிகிறது. இதுபோன்று எளிமையான மொழிபெயர்ப்பு கொண்ட பல சொற்களை உருவாக்கினால் காலப்போக்கில் நல்ல தமிழ்ச் சொற்கள் அதிகமாக உருவாகி மக்களிடையே பயன்பாட்டில் உலவி வரும்.
தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகை, பாடநூல்கள், இலக்கிய நூல்கள், மாத இதழ்கள் போன்றவற்றில் பெரும்பாலும் பயன்படுத்தப்படும் எழுத்துத் தமிழைச் சில வேளைகளில் சிங்கப்பூர் மாணவர்கள் அதிகம் பயன்படுத்துவதையும் காணமுடிகிறது. தொடக்கநிலை மாணவர்கள் வானொலியில் உரையாடும்போது

“நான் தொடக்கநிலை இரண்டாம் வகுப்பில் படிக்கிறேன்”
“அம்மா சந்தைக்குச் சென்றிருக்கிறார்”
“நான் நேற்று என் தாத்தாவுடன் பள்ளிக்குச் சென்றேன்”

என எழுத்துத் தமிழிலேயே அதிகமாக உரையாடுவதையும் காணலாம். ஏனெனில் வகுப்பறைத் தமிழே வாழ்க்கைத் தமிழ் என எண்ணியதன் விளைவேயாகும். இந்நிலை மாற வேண்டியது மிக அவசியம்.

மாணவர்கள் சில வேளைகளில் எழுத்துத் தமிழில் பேசுவதும், ஆங்கிலத்தின் பயன்பாடு மாணவர்களிடைய அதிகரித்துக் கொண்டு வருவதும், ஆங்கிலத்திலேயே உரையாடுவதை விரும்புவதும், தமிழ்பாடங்களைப்பற்றிக் கலந்துரையாடும் போதும் ஆங்கிலத்தைப் பயன்படுத்துவதும் தமிழ் மொழியின் பயன்பாடு குறைந்து கொண்டு

வருவதற்குக் காரணங்களாக அமைகின்றன. அதோடு தமிழர்களின் வீடுகளில் தமிழ் மொழிப்புழக்கம் நாளுக்குநாள் குறைந்து கொண்டு வருவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி தமிழ்மொழியைப் பயன்படுத்துவோர் எண்ணிக்கை 1980 –ல் 54 விழுக்காடாகவும், 1990-ல் 43.2 விழுக்காடாகவும், 2000-ல் 42.9 விழுக்காடாகவும் குறைந்து கொண்டே வருகிறது. இந்த நிலையைக் கவனத்தில் கொண்டு அரசாங்கமும், கல்வி அமைச்சும், சமூக அமைப்புகளும் பேச்சுத் தமிழுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துப் பல்வேறு வழிகளின் மூலம் பேச்சுத் தமிழை மேம்படுத்த முயற்சிகள் செய்துவருகின்றன.

கல்வி அமைச்சு, புதிய பாடத்திட்டத்தில் பேச்சுத் தமிழுக்கு அதிக மதிப்பெண்கள் வழங்கி மாணவர்களைப் பேச்சுத் தமிழில் சரளமாக உரையாட வழிவகை செய்கிறது. சமூக அமைப்புகள் பல்வேறு கலை நிகழ்ச்சிகளை மாணவர்களுக்காக நடத்தி அதன் வழி அவர்கள் பேச்சுத் தமிழில் மேம்படப் பாடுபடுகிறது.

<u>சிங்கப்பூர்ப் பள்ளிகளுக்கு அப்பால் தமிழ்மொழியின் நிலை:</u>

சிங்கப்பூர்த் தமிழ் மக்களிடம் மலாய், மொழிச் சொற்களின் கலப்பு இயல்பாக அமைந்திருப்பதை அவர்களது பேச்சுத் தமிழில் அதிகம் காணலாம். காரணம் சிங்கப்பூர் முன்பு மலாயாவின் ஒரு பகுதியாக இருந்தது. அப்போது சீனர்களும், மலாய்க்காரர்களும், இந்தியர்களும் தொடர்பு கொள்வதற்குப் பொதுவான மொழியாக மலாய் மொழி அமைந்திருந்தது.

வாழ்க்கையை மேம்படுத்திக் கொள்ளக் கடல்கடந்து வந்த தமிழ் மக்கள் கல்வியறிவு அதிகம் இல்லாத நிலையில் மலாய்மொழிச் சொற்களை அதிகம் கலந்து பேசுவதைக் கௌரவம் (prestige motive) எனவும் எண்ணினர்.

தொழில் நிறுவனங்கள், மளிகை, உணவு, காய்கறிக் கடைகள் போன்ற, மக்கள் கூடும் இடங்களில் தகவல் பரிமாற்றம் செய்து கொள்வதற்காக மலாய் மொழிச் சொற்களைப் பயன்படுத்தப்பட வேண்டியதன் அவசியம் (Need filling motive) ஏற்பட்டது.

சிங்கப்பூரில் வாழ்கின்ற மூத்த தலைமுறைத் தமிழர்களிடமே மலாய் மொழிக் கலப்பு அதிகம் இருப்பதைக் காண முடிகிறது. காரணம் அவர்களில் பெரும்பாலோர் மலாய் நாட்டைச் சேர்ந்தவர்கள்.

- அந்தக் காலத்துல நாங்க **கம்போங்** ல தான் இருந்தோம்.
- அவரு புதுசா **காடி** வாங்கியிருக்கார்
- **காடியில** போயி **சப்பாத்தும்** **சிலுவாரும்** வாங்கணும்
- **பீசாங் கோரிங்** எல்லாச் சாப்பாட்டுக் கடையிலும் விக்கிறாங்க.
- அப்பா **பசாருக்குப்** போயிருக்கார்.
- அந்தக் கடையில **நாசிலாமா** ரொம்ப நல்லாருக்கும்
- ஒவ்வொரு மாசமும் **சேவா** கட்டணும்
- **ஊடானோட அச்சாரும்** வாங்கிட்டுவா.
- அவரு **கச்சாங்** வாங்கிட்டுவரப் போயிருக்காரு.
- அவன் **சம்பால்** கொண்டு வந்தான்
- அவரு **ஜாகா** வேலை செய்யிறார்
- அம்மா **குசினியில்** இருக்காங்க
- **மக்கான்** ஒரு **பொங்குசு** வாங்கிட்டுப் போகாட்டா **கச்சோர்** பண்ணுவாங்க
- **தாங்கப்படியில** ஏறி வீட்டுக்கு வந்தேன்
- போன மாசத்துல இருந்து வீடு **கோசமா** இருக்கு

வேற்றுமொழிச் சொற்களைக் கடன் வாங்கி தமிழில் பயன்படுத்தும் போது தமிழ் மொழியின் அமைப்பிற்கும் அதன் ஒலி அமைப்பிற்கும் ஏற்ப மாற்றி அமைத்துக் கொள்வது இயல்பு. அந்த நிலையில் சிங்கப்பூர்த் தமிழில் வகுப்பறைக்கு அப்பால் இயல்பு நிலைநில் மக்களிடையே மலாய் மொழி கலந்த தமிழ் மொழி பயன்பாட்டில் இருப்பதை அறிய முடிகிறது.

பள்ளிகளில் மாணவர்கள் தமிழ்மொழியைக் கற்கும் போது இரண்டாம் மொழி நிலையிலேயே கற்கின்றனர். வகுப்பறையைத் தவிர வெளியிடங்களில் தமிழைக் கற்றுக் கொள்வதற்குரிய வாய்ப்பு மிகவும் குறைவாகவே உள்ளது. பல இன மக்கள் வாழும் சூழலில் மொழி கைவரப்பெறல் (Language acquisition) என்பது இயலாத ஒன்று. எதிர்வீட்டில் சீனக் குடும்பமும் பக்கத்து வீட்டில் மலாய்க் குடும்பமும் வாழ்ந்து கொண்டிருக்கும் சூழலில் குழந்தைகள் தானாகவே மொழிவளத்தைப் பெருக்கிக் கொள்ள இயலாமல் போய்விடுகிறது. தமிழை முதல் மொழியாக்க் கற்கும் சூழலில் இத்தகைய இடர்பாடுகள் இல்லை. வீட்டிற்கு வெளியே சக நண்பர்களும், எதிர் வீட்டாரும், தமிழிலேயே பேசுவதால் ஏராளமான சொற்களைத் தானாகவே அறிந்து கொள்ளமுடிகிறது. கல்விச் சாலைக்குள் காலடி எடுத்து வைப்பதற்கு முன்பே ஏராளமான சொற்களை அறிந்துகொள்ள முடிகிறது.

இந்த நிலை சிங்கப்பூரில் மிகவும் குறைவு. கலப்புத் திருமணத்தால் தந்தை பேசும் மொழி தமிழாகவும் தாய் பேசும் மொழி மலாய், சீனம் போன்ற வேறு மொழிகளாகவும் அமைந்து விடுகின்றன. இந்த நிலையில் வீட்டில் தமிழ் புழக்கம் அதிகம் இல்லாமல் போய்விடுகிறது. பள்ளிக்குச் சென்று தமிழ் படிக்க நேரிடும் போது. எளிமையாகப் புரிந்து கொள்ள இயலாமல் இன்னலுக்கு உள்ளாகித் தமிழ்மொழியை வெறுக்கும் சூழல் உருவாகிறது. இளந் தலைமுறையினர் ஆங்கில மொழிச் சொற்களையும் _ 'lah' என்ற விகுதியையும் அதிகம் பயன்படுத்துகின்றனர்.

தங்கள் குழந்தைகள் பேசும் ஆங்கில மொழியைக் கண்டு அகம் மகிழும் பெற்றோர்களின் எண்ணிக்கையும் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. ஆங்கில மொழியின் அவசியத்தை அறிந்து அன்றாடம் ஆங்கிலத்திலேயே தங்கள் குழந்தைகளோடு உரையாடும் பெற்றோர்களும் அதிகமாகிக் கொண்டிருக்கின்றனர். இது மட்டுமல்லாமல் மலாய், சீன நண்பர்களோடு ஆங்கிலத்தில் மட்டுமே உரையாட வேண்டிய அவசியம் ஏற்படுவதாலும் தமிழ் மொழிப் புழக்கம் அதிகம் இல்லாத நிலை உருவாகி விடுகிறது.

சிங்கைத் திருநாட்டில் செம்மொழியாம் தமிழ்மொழியை நிலைத்து நிற்கச் செய்வது ஆசிரியர்களின் கைகளிலும் பெற்றோர்களின் கைகளிலும் தான் இருக்கிறது. இதனைக் கருத்தில்கொண்டு மாணவர்களிடம் பேச்சுத் தமிழில் உறவாடி, உரையாடித் தமிழ் மீது மிகுந்த ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டும். சிங்கைத் திருநாட்டில் தமிழ்மொழியின் வளத்தைப் பெருக்கிச் சாகாவரம் பெற்ற உயர்தனிச் செம்மொழியாகத் தமிழை உலவ விட வேண்டும். இல்லையெனில் மெல்லத் தமிழ் இனிச் சாகும் என்ற பேதை ஒருவனின் கூற்றுப்படி இனிய நம் தமிழ் மொழி "டமில் மொலி" யாகப் பல மொழிகளின் கலப்படமாகப் பிறந்த புது மொழியாக (Creole) மாறும் நிலையும் ஏற்படலாம். எனவே நம் உயிரினும் மேலான தமிழ்மொழி உயர்வதும் தாழ்வதும் நம் கைகளில்தான்!.

<u>பயன்பட்ட நூல்கள்:</u>

இராமையா, கா — தமிழ் மாணவர்கள் செய்யும் மொழிப் பிழைகள் ஓர் ஆய்வு - ஸ்டாம்போர்டு அச்சகம் சிங்கப்பூர், 2001.

கருணாகரன், கி — சமுதாய மொழியியல், பாரி நிலையம் சென்னை 1973

சண்முகம், தி.க — மலாய் எப்படிப் பேசுவது மனோன்மணி விலாஸ், சென், பெர் கோலாலம்பூர், 1998.

திண்ணப்பன், சு.ப. சிங்கப்பூரில் தமிழ்மொழியும் இலக்கியமும், தேசியக் கல்விக் கழகம் சிங்கப்பூர் 1993.

வேல்முருகன், இரா. சிங்கப்பூர்ப் பேச்சுத் தமிழில் பிறமொழித் தாக்கம் பேரா. கருணாகரன் மணிவிழாமலர் பக்.221 - 237 கோயமுத்தூர்.

வேல்முருகன் இரா. சிங்கப்பூர்த் தமிழ் – இலக்கியம் பன்முகப் பார்வை, தமிழ்க் கலை அச்சகம், சிங்க்கப்பூர் - 2008

Velmurugan R "A Linguistic Study of Minority Language in Tamil nadu, August, 2002, Singapore.

கேட்டல், பேச்சுத்திறன் கற்பித்தலில் தகவல் தொழில்நுட்பப் பயன்பாடு

முனீஸ்வரன் குமார், சுல்தான் இட்ரிஸ் கல்வியியல் பல்கலைக் கழகம்
க. திலகவதி, லாடாங் ரின்ச்சிங் தொடக்கப் பள்ளி
மலேசியா.

முன்னுரை

காலங்காலமாக கல்வி போதனை நடைமுறையில் இருந்து வந்தாலும், கால மாற்றத்திற்கேற்ப கல்வி கற்றல் கற்பித்தலில் சீர்திருத்தம் செய்வது மிக அவசியம். இக்காலக்கட்டத்தில் பல்லூடகத்தின் பயன்பாடு கற்றல் கற்பித்தலிலும் ஆழமான மாற்றத்தைக் கொண்டுவருவதை மறுக்க முடியாது. ஆக, இப்பல்லூடகத்தை வைத்து தொடக்கப் பள்ளி ஒன்றாம் படிநிலை மாணவர்களின் கற்றலில் ஈடுபாட்டையும் ஆர்வத்தையும் திறனையும் எவ்வாறு புதிய கற்றல் கற்பித்தல் வழிமுறைகளின்வழி மேம்படுத்தலாம் என்பதை இக்கட்டுரை விவாதிக்கிறது.

மொழித்திறன் வாசிப்பு, எழுத்து, கேட்டல், பேச்சு ஆகிய நான்கு அடிப்படைத் திறன்களை உள்ளடக்கியது. இந்நான்கு திறன்களும் ஒருங்கே சரிவர வளக்கப்படவேண்டும் என்பது மலேசிய கல்வித்திட்டம் (1986) வலியுறுத்துகிறது. இத்திறன்களில் கேட்டலும் பேச்சும் பல்லூடகத்தின் உதவியோடு மெருகூட்ட இக்கட்டுரை முயல்கிறது.

கேட்டல் திறன்

மலேசியக் கல்வித்திட்டத்தின் (1986) வரையரைப்படி, கேட்டல் திறனில் மாணவர்கள் பல்வேறு சூழல்களில் உன்னிப்பாகச் செவிமடுத்தும் ஒலி வேறுபாடுகளை அறிந்துகொண்டும் செவிமடுத்தவற்றின் பொருளைப் புரிந்துகொண்டும் துலங்குவர்.

பேச்சுத்திறன்

மலேசியக் கல்வித்திட்டத்தின் (1986) வரையரைப்படி, பேச்சுத்திறனில் மாணவர்கள் பண்புடன் நல்ல மொழியில் உரையாடி மற்றவர்களிடையே தொடர்பை ஏற்படுத்திக்கொள்வர். அதோடு, நன்கு சிந்தித்து தத்தம் கருத்து, எண்ணம், தகவல் ஆகியவற்றைச் சரியான உச்சரிப்புடன் தெளிவாக உரைப்பர்.

முந்தைய ஆய்வுகள்

பல்லூடக தொழில்நுட்பத்தில் உரை, வரைகலை, ஒலி, ஒளி, அனிமேஷன் ஆகியன முக்கிய உட்கூறுகள் என்று ஜமாலுடின் ஹாருன் (2003), குறிப்பிடுகிறார். இவை யாவும் கற்றல் கற்பித்தலில் மிகவும் பயனுள்ளதாக இருப்பதைத் தனது கட்டுரையில் நிறுவியுள்ளார்.

ஆய்வுகளின்வழி நவீன பல்லூடக தொழில்நுட்பங்களைக் கற்றக் கற்பித்தலில் பயன்படுத்துவதால் மாணவர்கள், குறிப்பாக பாலர் பள்ளி மாணவர்கள் போதனைகளை எளிதில் கற்றுக்கொள்கிறார்கள் என தெரிகிறது (அஹ்மாட் கிலானி, 2005).

ஆய்வுக்குட்படுத்தப்பட்டோர்

பகாங் மாநிலத்தில் உள்ள தேசிய வகைத் தமிழ்ப்பள்ளி ஒன்றின் மூன்றாம் ஆண்டு மாணவர்கள் இவ்வாய்வுக்கு உட்படுத்தப்பட்டனர். ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட மொத்தம் முப்பது பேரில் ஆண்கள் பதின்மூவரும் பெண்கள் பதினெழுவரும் அடங்குவர். இந்த மொத்த எண்ணிக்கையில் பதினைவர் நகரச் சூழலைப் பின்னனியாகக் கொண்டோர். ஏனையோர் புறநகரைச் சேர்ந்தவர்கள்.

செயலாக்க முறை

இவ்வாய்வுக்கு மொத்தம் மூன்று செயலாக்க முறைகள் கையாளப்பட்டன. அவை;

i. செயலாக்க முறை 1: கேள்வி பதில்
ii. செயலாக்க முறை 2: ஒலி
iii. செயலாக்க முறை 3: கதை

இவற்றில் செயலாக்க முறை 1 பல்லூடகத்தின் உதவியின்றி நடத்தப்படும். இதன் முடிவுகள் பல்லூடகத்தின் துணையோடு நடத்தப்படும் செயலாக்க முறைகளோடு (செயலாக்க முறை 2 மற்றும் 3) ஒப்பீடு செய்யப்படும்.

செயலாக்க முறை 2 மற்றும் 3க்குக் கணினி பயன்படுத்தப்படும். மற்ற பல்லூடகங்களைக் காட்டிலும் கணினி பல செயல்பாடுகளைக் கொண்டுள்ளமையால் இவ்விரு செயலாக்க முறையையும் நடத்துவதற்கு இது பயன்படுத்தப்படும்.

செயலாக்க முறை 1: கேள்வி பதில்

கேள்வி பதில் பகுதி இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்படும். முதலாவது பிரிவில் ஆய்வாளரால் ஒவ்வொரு மாணவரிடமும் தனித்தனியாக கேள்விகளைக் கேட்கப்படும். இக்கேள்விகள் ஏற்கனவே தயாரிக்கப்பட்டவையாகும். இதில், மாணவரைப் பற்றிய சுய

விபரங்கள், அடிப்படைப் பொதுக் கேள்விகள் ஆகியவை அடங்கும். இரண்டாம் பிரிவில், மாணவர்கள் ஜோடியாக வகுக்கப்பட்டு, ஒருவர் அவருக்குத் தோன்றிய ஏதாவது இரண்டும் கேள்வியைக் கேட்க இன்னொருவர் அதற்குச் சரியாக பதிளலிப்பர். பின்னர், பதில் சொன்ன மாணவர் கேள்வி கேட்க முதலில் கேள்வி கேட்டவர் பதில் சொல்வார். மாணவர்களது எல்லா கேள்விகளும் பதில்களும் குறிப்பெடுக்கப்பட்டுப் பகுப்பாய்வு செய்யப்படும்.

செயலாக்க முறை 2: ஒலி மற்றும் பாடல்

முதல் நடவடிக்கையில் மாணவர்கள் கணினியின் மூலம் ஒலியேற்றப்படும் ஒலிகளைக் ஒன்றைக் கேட்பர். இவ்வொலிகள் விலங்கு, செயல், இயற்கை முதலானவற்றால் எழுப்படும் ஓசைகளாக இருக்கும். ஓசையைக் கேட்டு மாணவர்கள் அது எந்த ஓசை என்று கண்டுபிடித்துக் கூறுவர்.

அடுத்த நடவடிக்கையில் மாணவர்கள் ஒலிநாடாவின் மூலம் ஒலியேற்றப்படும் பாடல் ஒன்றைக் கேட்பர். மாணவர்கள் கேட்டிராத பாடலாக இருக்கும் நோக்கில் பழைய பாடல் ஒன்றைத் தேர்ந்தெடுக்கப்படும். இப்பாடல், திருத்தமான உச்சரிப்புடன் இலகுவான தொனியிலானதாகவும் இருக்கும். இப்பாடல் முதலின் முதல் ஒரு நிமிடம் மட்டுமே ஆய்வுக்காக பயன்படுத்தப்படும். மாணவர்கள் அந்த ஒரு நிமிடத்தில் வரும் பாடல் வரியை மட்டுமே செவிமடுப்பர்.

முதல் முறை பாடல் ஒலிபரப்பட, மாணவர்கள் அதை அமைதியாகவும் கவனமாகவும் செவிமடுப்பர். பின்னர், கேட்ட பாடல் வரியை மனதுக்குள் அசைபோட ஒரு நிமிடம் வழங்கப்படும். அதே பாடல் பகுதி மீண்டும் ஒலிபரப்பப்படும். பின்னர், முப்பது சொற்கள் அடங்கிய பட்டியல் ஒன்று மாணவர்களுக்கு வழங்கப்படும். அதில் மாணவர்கள் பாடலில் கேட்ட சொற்களைப் பட்டியலில் கண்டுபிடித்து வட்டமிடுவர்.

செயலாக்க முறை 3: கதை

மாணவர்களிடம் தமிழ் அனிமேஷன் காணொளி கணினியில் காட்டப்படும். மாணவர்கள் அக்காணொளியை அமைதியாகவும் உன்னிப்பாகவும் காண்பர். பத்து நிமிடங்களுக்கு மேற்போகாத அக்காணொளியைக் கண்டு அதில் வரும் உரையாடலை உன்னிப்பாகக் கேட்பதோடு கதையையும் கிரகிப்பர்.

பின்னர் முதல் நடவடிக்கையாக, மாணவர்கள் காணொளியில் தாங்கள் கேட்ட கதைமாந்தர்களின் பெயர்களையும் ஊர்களின் பெயர்களையும் கொடுக்கப்பட்ட வெள்ளைத்தாளில் பட்டியலிடுவர். மொத்தம் பத்து பெயர்கள் இருக்கும் என்று மாணவர்களுக்கு முன்கூட்டியே அறிவுறுத்தப்படும்.

இரண்டாம் நடவடிக்கையாக, மாணவர்கள் காணொலியில் கண்ட கதையை ஒருவர் பின் ஒருவராக சங்கிலித் தொடர் போல் சொல்லி முடிப்பர். மாணவர் எங்கே கதையை நிறுத்தவேண்டும் என்றும் அவர் விட்ட இடத்திலிருந்து அடுத்து எந்த மாணவர் கதையைத் தொடரவேண்டும் என்று ஆய்வாளரால் முடிவு செய்து பணிக்கப்படும். இதில் கதையோட்டமும் முன்னவர் விட்ட இடத்தில் சரியாகத் தொடங்குதலும் ஆய்வாளரின் குறிப்பெடுத்தலில் முக்கியமாக கருதப்படும்.

ஆய்வு பகுப்பாய்வு

ஆய்வின் தரவுகள் மேற்கூறிய செயலாக்க முறை மூலம் திரட்டப்பட்டு, கேட்டல் மற்றும் பேச்சுத்திறனுக்கான பகுப்பாய்வு செய்யப்பட்டது. முதலில், மாணவர்களின் தனித்தனியான அடைவுநிலையைக் கணக்கிட வரையறை செய்யப்பட்ட புள்ளிகள், அதே பள்ளியில் பத்து ஆண்டுகளுக்கும் மேற்பட்ட ஆசிரிய அனுபவம் கொண்ட மூவரால் வழங்கப்பட்டன.

அடுத்து, உற்று நோக்கல் வழி பெறப்பட்டத் தகவல்கள் விளக்கமுறையில் பதிவுசெய்யப்பட்டன. ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட முப்பது மாணவர்களும் ஒருவர் பின் ஒருவராக நேரடி கேள்வி பதில் மூலம் அவர்களது ஈடுபாட்டையும் ஆர்வத்தையும் செயல்பாடுகளையும் அறிந்து குறித்துக்கொள்ளப்பட்டது.

பின்வரும் அட்டவணை ஒட்டு மொத்த அளவில் எல்லா செயலாக்க முறைகளுக்கும் மாணவர்கள் வழங்கிய ஈடுபாட்டைக் காட்டுகிறது.

ஆய்வு முடிவு

செயலாக்க முறை	ஈடுபாடு காட்டிய மாணவர் எண்ணிக்கை	விழுக்காடு
1	15	50%
2	30	100%
3	30	100%

அட்டவணை 1

அட்டவணை 1இன் முடிவுகளின்படி, மாணவர்கள் பல்லூடகத்தின் மூலம் நடத்தப்படும் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளை அதிகம் விரும்புகிறார்கள் என்பது புலனாகிறது. மாறாக, பல்லூடகத்தின் உதவியின்றி நடத்தப்பட்ட நடவடிக்கை வகுப்பில் பாதி மாணவர்களுக்கு ஈடுபாட்டை ஏற்படுத்தவில்லை. இதில் பின்தங்கிய மாணவர்களே பெரிதும் அடங்குவர் என்பது ஆய்வாளரின் உற்றுநோக்கலின் மூலம் அறியப்பட்டது.

ஒவ்வொரு செயலாக்க முறைக்கும் மாணவர்களின் தனித்தனியாக கேட்டல் மற்றும் பேச்சுக்குப் பெற்ற அடைவுநிலையின் ஒட்டுமொத்த முடிவுகள் விழுக்காட்டு அடிப்படையில் பின்வரும் அட்டவணை காட்டுகிறது.

புள்ளிகள்	செயலாக்க முறை 1		செயலாக்க முறை 2		செயலாக்க முறை 3	
	எண்ணிக்கை	%	எண்ணிக்கை	%	எண்ணிக்கை	%
0-19	2	6.7	2	6.7	0	0
20-39	1	3.3	1	3.3	2	6.7
40-59	15	50.0	10	33.3	2	6.7
60-79	0	0	0	0	0	0
80-100	12	40.0	17	56.7	26	86.6

அட்டவணை 2

ஆய்வின் கண்டுபிடிப்பு

தினசரி வாழ்க்கையில் மாணவர்கள் பல்லூடகத்தின் மூலம் பல தகவல்களை நேரடியாகவும் மறைமுகமாகவும் பெறுகின்றனர். அதைக் கற்றல் கற்பித்தலுக்கென பயன்படுத்தி மாணவர்களை ஈடுபடச் செய்யும்போது பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இதன்வழி, பல்லூடகம் மாணவர்களின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்துள்ளது என்பது தெளிவாகிறது.

பல்லூடகத்தின்மூலம் அளிக்கப்படும் பயிற்சியில் மாணவர்கள் தங்களது ஆற்றலை அதிகமாக வெளிப்படுத்துகிறார்கள். பின்தங்கிய மாணவர்களும் ஆர்வத்துடன் கற்றல் கற்பித்தலில் கலந்து கொண்டு ஆற்றலை வெளிக்கொணர முயற்சிக்கின்றனர்.

மாணவர்கள் பெரும்பாலும் சுயமாக ஈடுபடவும் தங்களுடைய கருத்துகளை மற்றவர்களுக்குத் தெளிவாகக் கூறவும் புதிய அணுகுமுறைகள் தேவைப்படுகின்றன.

கேட்டல் திறனில் மாணவர்கள் பல்வேறு சூழல்களில் உன்னிப்பாகச் செவிமடுத்தும் ஒலி வேறுபாடுகளை அறிந்தும் செவிமடுத்தவற்றின் பொருளைப் புரிந்துகொண்டும் துலங்குவதற்கு இத்தகைய வழிமுறைகள் பயன்படுகின்றன. பேச்சுத்திறனில் மாணவர்கள் பண்புடன் நல்ல மொழியில் உரையாடி பிறருடன் தொடர்பை ஏற்படுத்திக்கொள்வதோடு, சிந்தித்துத் தங்களின் கருத்து, எண்ணம், தகவல் ஆகியவற்றைச் சரியான உச்சரிப்புடனும் தெளிவுடனும் கோவையாகவும் பிறருடன் உரையாட இவை உதவுகின்றன.

ஆகவே, கற்றல் கற்பித்தலில் பல்லூடகத்தைப் புதிய மற்றும் பல்வித அனுகுமுறைகளோடு பயன்படுத்துவதன் மூலம் மாணவர்களின் கேட்டல் திறனையும் பேச்சுத்திறனையும் வளர்க்கமுடியும் என்பது இவ்வாய்வின்வழி திண்ணமாகிறது.
எனவே, தமிழ்மொழி போதிக்கும் ஆசிரியர்களுக்குப் பலதரப்பட்ட அணுகுமுறைகள் அமைந்திருப்பது சாலச்சிறந்தது. கற்றல் கற்பித்தலில் ஏற்பட்டுவரும் பலவகையான மாற்றங்களுக்கு ஏற்ப ஆசிரியர்கள் தங்களைத் தயார்படுத்திக்கொள்ள வேண்டும்.

துணைநூல்கள்

Ahmad Kilani Mohamed. 2005. *Pengurusan pendidikan di sekolah: Huraian menurut perspektif Islam.* Skudai: Universiti Teknologi Malaysia.

Jamalludin Harun & Zaidatun Tasir. 2003. *Multimedia dalam pendidikan.* PTS Publication: Bentong

Nor Hayati. 2010. *Keberkesanan penggunaan teknologi maklumat dan komunikasi (ICT) dalam pengajaran dan pembelajaran Bahasa Melayu.* Latihan ilmiah Pendidikan. Universiti Perguruan Sultan Idris

Robiah Sidin. 2007. ICT dalam Pendidikan: Prospek dan Cabaran dalam Pembaharuan Pedagogi. *Jurnal Pendidikan 32, 139-152.*

Siti Fatimah Ahmad & Ab. Halim Tamuri. 2010. Persepsi Guru Terhadap Penggunaan Bahasa Bantu Mengajar Berasaskan Teknologi Multimedia dalam Pengajaran j-QAF. *Journal of Islamic and Arabic Education 2(2), 53-64.*

இரண்டாம்மொழி, அந்நியமொழி நிலையில் தமிழ் கற்றல், கற்பித்தல்.

பாஸ்கரன் சுப்பிரமணியம்
மலேசியத் தமிழ்ப்பள்ளிகளின் அமைப்பாளர்
கல்வி அமைச்சு, மலேசியா.

முகவுரை

தொன்மை வாய்ந்த தமிழ்மொழி உலகில் பல நாடுகளில் பேசப்பட்டு வருகிறது. தமிழர்கள் வாழும் பல இடங்களில் தமிழ்மொழி பயன்பாடு மிகச்சிறப்பாகவே உள்ளது என்றால் அது மிகையாகாது. அந்த வகையில், மலேசியாவிலும் தமிழ்மொழி பேசப்பட்டும், மழலையர் பள்ளி தொடங்கி பல்கலைக்கழகம் வரையில் பயிலப்பட்டும் வருகின்றது. மலேசியாவில் 523 தமிழ்ப்பள்ளிகள் இயங்கி வருகின்றன. இத்தமிழ்ப்பள்ளிகளில் ஏறக்குறைய 1 லட்சத்து ஏழாயிரம் மாணவர்கள் கல்விப் பயில்கின்றனர். இப்பள்ளிகள் மூன்று சூழலில் அமைந்திருக்கின்றன. முதலாவது தோட்டப்புற சூழல், இரண்டாவது புறநகர் சூழல், மூன்றாவது நகர்புற சூழல் பள்ளிகள். இப்பள்ளிகளில் மொத்தம் 12 பாடங்கள் மாணவர்களுக்குப் கற்பிக்கப்படுகின்றன. மலாய், ஆங்கில மொழிகளைத் தவிர்த்து மற்ற பாடங்களெல்லாம் தமிழ்மொழியிலேயே கற்பிக்கப்படுகின்றன. தோட்டப்புறம் மற்றும் புறநகர் பகுதிகளில் இயங்கும் பள்ளிகளில் தமிழ் மாணவர்களைத் தவிர்த்து சிறிது அளவில் மலாய்க்கார மாணவர்களும், தொல்குடியினர் மாணவர்களும் தமிழ்ப்பள்ளிகளில் பயில்கின்றனர்.

மலேசியாவில் தேசியத் தொடக்கப்பள்ளிகள் அதாவது மலாய் தொடக்கப்பள்ளிகள் 4393 உள்ளன. இப்பள்ளிகளில் 95 விழுக்காடு மலாய் மாணவர்களும் 5 விழுக்காடு சீன மாணவர்களும் இந்திய மாணவர்களும் பயில்கின்றனர். 2007 ஆம் ஆண்டு தொடக்கம் மலேசிய அரசாங்கம் தேர்ந்தெடுக்கப்பட்ட தேசியத் தொடக்கப்பள்ளிகளில் தமிழ்மொழி,சீன மொழி மற்றும் அரபு மொழிப் பாடத்தை அறிமுகம் செய்தது. விருப்பப்பாடமான இத்திட்டத்தின் வழி எராளமான மலாய்கார மாணவர்களும் சீன மாணவர்களும் தமிழ்மொழியைத் தொடக்கப்பள்ளிகளில் பயில்வதற்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் மலேசியாவில் பல்கலைக்கழக மாணவர்களுக்கு மட்டுமே தேர்வுப்பாடமாக (elective) தமிழ்மொழிப்பாடம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது.

மாணவர் பின்னனி

தமிழ்மொழியை இரண்டாம் மொழியாக கற்கும் இம்மாணவர்கள் மலாய்க்காரர்கள் ஆவர். இவர்கள் மலேசியாவில் எல்லா பகுதிகளிலும் வாழ்கிறார்கள். இன்னும் அதிகமான மலாய்காரர்கள் கிராமங்களிலும், புறநகர் பகுதிகளிலும் வாழ்கிறார்கள். அன்றாடம் வாழ்க்கை சூழலில் இவர்கள் தமிழர்களைச் சந்திப்பதும்,தமிழர்களின் வாழ்க்கை முறை, கலை, கலாச்சாரத்தை அறிந்தும் வைத்துள்ளார்கள்.

இக்கட்டுரையின் நோக்கம்

1. தமிழ்மொழியை இரண்டாம் மொழியாகக் கற்றல் கற்பித்தலின் அனுபவங்களைப் பகிர்ந்துக் கொள்ளுவது,
2. தமிழ்மொழியின் மீது பற்றுக்கொண்டு தமிழில் எழுதவும், வாசிக்கவும் உரையாடவும் மேற்கொள்ளும் நடவடிகைகளை ஆராய்தல்.

மாணவர்களின் எண்ணிக்கையும் ஆசிரியர்களின் நிலையும்

தேசியப்பள்ளிகளில் மலாய் மற்றும் ஆங்கிலமொழிப்பாடங்களைத் தவிர்த்து தற்போது சீன மொழியும் தமிழ்மொழியும் கற்பிக்கப்படுகிறது. தற்போது 233 தேசியப்பள்ளிகளில் தமிழ்மொழி போதிக்கப்பட்டு வருகிறது. இங்கு 9463 மாணவர்கள் தமிழ்மொழி பாடத்தை கற்று வருகின்றனர். இவர்களில் 1577 மாணவர்கள் மலாய்க்கார மாணவர்களாகும். இப்பள்ளிகளில் 276 தமிழாசிரியர்கள் தமிழ் போதித்து வருகிறார்கள். சில பள்ளிகளில் வகுப்பு நேரத்திலும் மேலும் சில பள்ளிகளில் பள்ளி முடிந்த பிறகும் தமிழ்மொழி கற்பிக்கப்படுகிறது. அனைத்து மாணவர்களும் இவ்வகுப்புகளில் பயில்வதற்கு இது ஏதுவாக அமைகிறது. இவ்வகுப்புகளில் கற்பிக்க பட்டதாரி ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஆசிரியர் பயிற்சி கழகங்களில் ஓர் ஆண்டுக்கு இவர்களுக்குச் சிறப்பு பயிற்சியளிக்கப்படுகிறது. மலேசியாவில் எல்லா மாநிலங்களிலுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட பள்ளிகளில் இப்பாடம் மிகச்சிறப்பாக கற்பிக்கப்படுகிறது. ஒவ்வோர் ஆண்டும் இத்திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்டு ஏனைய பள்ளிகளுக்கு அறிமுகப்படுத்தப்படுகிறது. அவ்வகையில் மலேசியாவில் அரசாங்கத்தின் முயற்சியால் தமிழர் அல்லாதவர்களுக்குத் தொடக்கப்பள்ளிகளில் தமிழ்மொழி இரண்டாம் மொழியாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது ஒரு வரலாற்று நிகழ்வாக கருதப்படுகிறது.

தமிழ்மொழி பாட நேரமும் பாட புத்தகமும்

இரண்டாம் மொழியாகத் தமிழைக் கற்கும் இம்மாணவர்களுக்கு வாரத்திற்கு 150 நிமிடங்கள் தமிழ்மொழி போதிக்கப்படுகிறது. கால அட்டவணைக்குள் தமிழ்மொழிப் பாடம் கற்பிக்கப்படும் பள்ளிகளில், வகுப்பில் இருக்கின்ற அனைத்து மாணவர்களும் தமிழை கற்கின்ற வாய்ப்பு ஏற்படுகிறது. இவ்வகுப்பில் படிக்கும் மாணவர்களுக்கு அரசாங்கம் இலவச பாடப்புத்தகங்களை வழங்கியுள்ளது. இது அம்மாணவர்கள் தமிழ்மொழியை மேலும் சிறப்பாக பயில்வதற்கு பெரும் துணைப்புரிகிறது. மிகவும் எளிமையாக தயாரிக்கப்பட்ட இப்புத்தகங்கள் இவ்வகை மாணவர்களுக்கு எற்புடைதாகவும் அமைந்துள்ளன.

இரண்டம்மொழியாக தமிழைக் கற்கும் மாணவர்களின் பாடதிட்டம் பின்வரும் கூறுகளை உடையதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

1. தொடர்பு

   பிறருடன் தொடர்பு கொள்ளும்போது ஒருங்கிணைந்த மொழியாற்றலைப் பயன்படுத்தி வாய்மொழியாகவும் மற்ற வகையிலும் மலாய், ஆங்கிலம், சீனம், தமிழ் ஆகிய மொழிகளில் தொடர்பு கொள்ளுதல்.

2. அறிவியல் தொழிற்நுட்ப பிரிவு

   அறிவியல் அறிவு, அறிவியல் திறன், அறிவியல் பண்பு ஆகிய கூறுகளை ஆய்வின்வழி கைவரப்பெறுதல்.

   சிக்கலுக்கு தீர்வு காண கணித ஆற்றலையும் அறிவையும் கைவரப்பெறுதல்.

   அன்றாட வாழ்வில் ஒன்றைச் செய்வதற்குத் தேவைப்படும் தொழில்நுட்பக் கூறுகளான கருவிகள், வழிமுறைகள், உத்திகள், செயல்முறைகள் அகியவற்றைப் பற்றிய அறிவையும் திறனையும் கைவரப்பெறுதல்.

3. ஆன்மீகம், நடத்தை, பண்பு

   ஆன்மீகம், இறைநம்பிக்கை, நடத்தை, பண்பு போன்றவற்றை உய்த்துணர்ந்து கடைப்பிடித்ததல்

4. மனிதவியல்

   சமுகவியல், சுற்றுச்சூழல், நாடு, உலகம் ஆகியவற்றைப் பற்றிய கல்வியறிவைப் பெற்றுக் கடைப்பிடித்தல்.

5. சால்புடைமை

கலைத்திட்டம், புறப்பாட நடவடிக்கை ஆகியவற்றின் வழி தலைமைத்துவத்தையும் நற்பண்பையும் வலுப்படுத்துதல்.

6. உடலும் முருகுணர்ச்சியும்

தனிமனித நல்வாழ்விற்காக உடற்கூறு, சுகாதாரம் ஆகியவற்றை மேம்படுத்துதல்.

கற்பனை வளம், ஆக்கம், திறம், பிறரைப் போற்றுதல் ஆகிய கூறுகளை வலுப்படுத்துதல்

பாடநூல்களின் அமைப்பும் உள்ளடக்கமும்

மாணவர்களின் அன்றாட வாழ்க்கைக்கு தொடர்புடையதாகவும் இன்றைய சமுதாய வளர்ச்சிக்கு ஏற்புடையதான வகையில் பாடங்கள் இடம்பெற்றுள்ளன. மலாய் மற்றும் சீன இனத்து மாணவர்கள் என்பதால் பாடபுத்தகங்களில் அவர்கள் விளங்கிக் கொள்ளும் அளவிற்குத் தமிழ்ச்சொற்களோடு மலாய் சொற்களையும் இடம்பெற செய்துள்ளனர். குறிப்பிட்ட அந்தச் சொல்லை மலாய் உச்சரிப்பில் எப்படி கூறுவது என்று தெளிவாக பாடபுத்தகத்தில் குறிக்கப்பட்டுள்ளது.

எ.கா.	1.	துயில் எழுதல்	-	tuyil elutal
	2.	பல்துலக்குதல்	-	pal tulakkutal
	3.	குளித்தல்	-	kulittal
	4.	சீருடை அணிதல்	-	ci:rudai anital

எழுத்துக்களை அறிமுகம் செய்யும்போதும் இந்த வழிமுறை கையாளப்பட்டுள்ளது.

எ.கா.	மெல்லினம்	-	Mellinam
	ங		nga
	ஞ		nya
	ன		<u>n</u>a
	ந		na
	ம		ma
	ண		na

இம்முறையானது மாணவர்கள் சொற்களைச் சரியாக வாசிக்கத் துணைப்புரிகிறது. ஆனாலும் மாணவர்கள் தமிழ் எழுத்துக்களைப் பார்த்து வாசிக்க சிரமப்படுகிறார்கள். ஆசிரியர் துணையுடன் மட்டுமே மாணவர்களால் வாசிக்க இயலுகின்றது.

இரண்டாம் மொழியாக தமிழ்மொழியை படிக்கும் மாணவர்களுக்குப் பாடப்புத்தகங்களும் மற்ற ஆவணங்களும் தமிழ்ழொழியிலேயே இருத்தல் அவசியமாகிறது. அதுமட்டுமல்லாது ஆசிரியர் பாடவேளையின் போது மாணவர்களிடம் தமிழ்மொழியில் உரையாடி பாடங்களைப் போதித்தும் நடவடிக்கைகளில் ஈடுபடும்போதும் மாணவர்கள் தமிழில் உரையாடுவதற்கு வாய்ப்பும் ஏற்படுகிறது.

தாய்மொழிச் சூழலில் எந்த மொழியும் கற்பிக்கப்படும்போது வகுப்பறையில் மட்டுமல்லாது வெளியிலும், விளையாட்டு இடங்களிலும் வீடுகளிலும், எல்லா இடங்களிலும் மொழிக் கற்றல் நிகழ்கிறது. ஆனால் இரண்டாம்மொழியாக தமிழை கற்கின்றவர்கள் வகுப்பறையைத் தவிர்த்து தமிழைக் கற்கின்ற சூழல் ஏற்படுவதில்லை.

கற்றல் கற்பித்தலில் காணப்படும் நிறைகளும் குறைகளும்

தமிழர் அல்லாத மாணவர்களுக்குத் தமிழை இரண்டாம் மொழியாகக் கற்பிக்கும்போது காணப்படும் நிறைகளையும் குறைகளையும் தொடர்ந்து காண்போம். இதற்காக, சில குறிப்பிட்ட பள்ளிகளில் உற்றுநோக்கிய தகவல்கள் இங்கு முன்வைக்கப்படுகின்றன.

கேட்டல் பேச்சு

மாணவர்கள் பாட வேளையின் போது ஆசிரியர் வழங்கும் பல்வேறு சூழல்களுக்கு ஏற்ப துலங்குவது மிகச்சிறப்பாக உள்ளது. இவ்வகுப்பில் அனைத்து மாணவர்களும் ஆசிரியருக்கு முறையாக வணக்கம் சொல்வதும் பின் நன்றி கூறுவதும், ஆசிரியர் கூறும் கட்டளையைக் கேட்டு துலங்குவதும் மிகச்சிறப்பாக உள்ளன. ஆசிரியரிடம் அவர்களே இயல்பாகவே புதிய செய்திகளைக் கேட்டுப் பேசுவது மிகக்குறைவாகவே உள்ளது. ஆனால் ஆசிரியர் ஒரு குறிப்பிட்ட மாணவரை அழைத்து கேள்விகளைக் கேட்கும்போது பிற மாணவர்கள் கையை உயர்த்தி பதில் கூற முயற்சி செய்வது பரவலாக காணப்படுகிறது. மாணவர்கள் ஆசிரியரிடம் ‘ஐயா’ ‘ஐயை’ போன்ற மரியாதைச் சொற்களைச் சரளமாகப் பேசுவதும் குழு நடவடிக்கைகளில் மாணவர்கள் ஈடுபடும்போது சொற்களைத் தமிழில் சொல்லி விடுப்பட்ட சொற்களை இணைப்பதும் நல்ல முன்னேற்றமாகும்.

மாணவர்கள் வகுப்பை விட்டு வெளியில் செல்வதற்கு ஆசிரியரிடம் தமிழிலே அனுமதி கேட்பதும் மிகச்சிறப்பாக உள்ளது. 'ஐயை நான் கழிப்பறைக்குச் செல்ல முடியுமா?' என்று சரளமாக கூறுவது மிகச்சிறப்பாக உள்ளது. சிறுவர் பாடல்களையும் நன்றாக பாடுகிறார்கள். தமிழ்மொழி பாட வேளையில் ஆசிரியரின் பங்கு மிகச்சிறப்பாக உள்ளது.

இது போன்ற சூழல் வரவேற்கக்கூடியதாகும். மாணவர்களைப் உரையாடத் தூண்டும் நடவடிக்.கைகளை அதிகப்படுத்தினால் மாணவர்களின் பேச்சுமொழி வளர்வதற்கு வாய்ப்புகள் ஏற்படும்.

வாசிப்புத் திறன்

வகுப்பில் பயிலும் மாணவர்கள் எழுத்துக்களையும் சொற்களையும் அடையாளம் கண்டு மிகச்சிறப்பாக வாசிக்கின்றனர். ஆசிரியர் அட்டையில் காட்டும் சொற்களைச் சரியாகவும் தெளிவாகவும் உச்சரிக்கிறார்கள். கலைத்திட்டத்தின் உள்ளடக்கத்தை-யொட்டி மாணவர்களின் அன்றாட வாழ்க்கைக்குத் தொடர்புடையதும் அவர்கள் அன்றாடம் பார்க்கின்ற அனுபவிக்கின்ற சூழலில் அமைந்துள்ள சொற்கள் மட்டுமே வழங்கப்படுகின்றன.

எழுத்து திறன்

தமிழை இரண்டாம் மொழியாக பயிலும் மாணவர்கள் முதலாம் ஆண்டு தொடக்கம் ஐந்தாம் ஆண்டு வரையிலும் எழுத்துகளை நன்றாக வரிவடிவமாக எழுதுகிறார்கள். ஆசிரியர் கூறும் சொற்களை உள்வாங்கிக் கொண்டு மிகச்சிறப்பாக எழுதும் திறனைப் பெற்றிருப்பது மிகவும் வரவேற்கக்கூடியதாகும். வாக்கியத்தில் விடுப்பட்ட இடத்தை நிரப்பும் ஆற்றலை மாணவர்கள் பெற்றுள்ளனர். ஆனாலும், எண்ணங்களையும் கருத்துக்களையும் பயன்படுத்திக் கற்பனை வளத்துடன் படைப்புகளை உருவாக்கும் திறனை அவர்கள் இன்னும் பெறவில்லை என்பதே உண்மை. இம்மாணவர்களுக்கான தமிழ்மொழிக் கற்றல் கற்பித்தல் வகுப்பறையிலேயே முடிந்துவிடுவதால் மொழி வளர்ச்சி மற்றும் பயன்பாடு குறைவாக உள்ளது, ஆகவே அவர்களால் சுயமாக சிந்தித்து எழுத இயலாமல் போகிறது.

இரண்டாம்மொழியாக தமிழை கற்கின்ற மாணவர்களுக்குப் பேச்சுமொழியை வளர்க்க சில் வழிமுறைகள்.

தேசியப்பள்ளிகளில் இந்த வகுப்புகள் தொடங்கப்பட்டு ஐந்து ஆண்டுகளாகிவிட்ட நிலையில், இவ்வகுப்பில் படிக்கின்ற மாணவர்கள் தமிழ்ச்சொற்களையும் வாக்கியங்களையும் பார்த்து வாசிக்கவும், சரியான வடிவரிவத்துடன் எழுதுவதற்கும் திறமைப் பெற்றுள்ளனர். ஆனால் இம்மாணவர்கள் தமிழில் பிறமாணவர்களுடனோ அல்லது வெளியிலோ பேசுவதில்லை. இவர்களின் பேச்சுமொழியை ஊக்குவிக்க என்ன வழிவகைகளை ஆசிரியர் கையாளலாம் என்பதற்குச் சில பரிந்துரைகள்.

1. வகுப்பறையில் மகிழ்ச்சியாக இயல்பாக தமிழைக் கற்கின்ற சூழலை ஏற்படுத்தி மாணவர்கள் உரையாடுவதற்கு அதிக வாய்பை ஏற்படுத்த வேண்டும்.

2. ஆசிரியர் வகுப்பில் தமிழ்மொழியிலேயே அதிகம் உரையாடடுவது மிக முக்கியமாகும்.

3. பல்வகையான நடவடிக்கைகளின் மூலம் மாணவர்களை உரையாடச்செய்வது சிறந்த நடவடிக்கையாகும். சூழமைவை உருவாக்கி மாணவர்களை உரையாடச் செய்வது மிகச்சிறந்த நடவடிகையாகும்..

4. விளக்க நடையில் இல்லாமல் உருபுகள் குறைந்த நிலையில் வாக்கியங்களை மாணவர்களுக்கு வழங்குதல்.

5. கட்டளையை நிறைவேற்றும் வாக்கியங்களை ஒரு மாணவர் இன்னொரு மாணவரிடம் கூறி துலங்கச் செய்தல்.

6. சிறு சிறு வாக்கியங்களை அதிகம் வாசிக்கச் செய்தல்.

   எ.கா: நேற்று மழை பெய்தது
   தண்ணீர் பெருகியது
   வீடுகள் மூழ்கியது.

7. சின்ன-சின்ன வார்த்தைகளை கொடுத்து கலந்து ஆய்தல் (Discusion)
   வர்ணனைச் செய்தல்.
   பாடல்கள் வழி மாணவர்களை உரையாடச் செய்தல்.

இரண்டாம் மொழியாகத் தமிழ்க் கற்றல் கற்பித்தலை வளர்த்தெடுக்க சில பரிந்துரைகள்

1. மலேசியாவில் தமிழ்ப்பள்ளிகளிலும் சீனப்பள்ளிகளிலும் மலாய் எவ்வாறு கட்டாயப் பாடமாக உள்ளதோ, அவ்வாறே மலாய்ப்பள்ளிகளில் தமிழ் அல்லது சீனமொழி கட்டாயப்பாடமாக ஆக்கப்பட வேண்டும்.
2. தமிழ்மொழிப்பாடம் அவசியம் பாடவேளையிலேயே கற்பிக்கப்படவேண்டும்.
3. தகவல் ஊடகங்கள் குறிப்பாக வானொலி தொலைக்காட்சியில் மலாய் ஒலியலையில் இப்பாடத்தை எளிமையாக போதிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
4. இரண்டாம் மொழியாக தமிழ்மொழியைக் கற்lõ மாணவர்களுக்கு ஆண்டுதோறும் மொழி தொடர்பான போட்டிகளை ஏற்று நடத்த வேண்டும்.
5. விளம்பரப்பலகை, அறிவுப்பு பலகைகளில் தமிழ்மொழி கட்டாயம் இடம்பெற ஆவன செய்யவேண்டும்.

முடிவுரை

இக்கட்டுரை மலேசியாவில் தேசியத் தொடக்கப்பள்ளிகளில் தமிழை இரண்டாம் மொழியாக கற்கும் மாணவர்களை மையாக கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அடிப்படையில் எழுதப்பட்டதாகும். முதல் முறையாக மலாய்த் தொடக்கப்பள்ளி மாணவர்கள் தமிழ்மொழியை இரண்டாம் மொழியாக கற்க மலேசிய அரசாங்கம் மேற்கொண்ட இம்முயற்சி மேலும் விரிவாக்கம் செய்யப்பட வேண்டும். மாணவர்களும் பெற்றோர்களும், மலாய் இனத்தினரும் இம்முயற்சிக்கு முழு ஆதரவு வழங்கினால் தமிழ்மொழியை மலாய் மாணவர்கள் ஆழமாகக் கற்றுணரவும், தமிழிலேயே சிறப்பாக உரையாடி தங்களின் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளவும் ஏதுவாக அமையும்.

பண்பாடு தழுவிய தமிழ் கற்றலும் கற்பித்தலும்

சிவநேசன் இராஜூ
ஆசிரியர் கல்விக் கழகம், ஈப்போ வளாகம்
மலேசியா.

இன்றைய கல்விச் சூழலில் மாணவர்களும் சரி ஆசிரியர்களும் சரி சம காலத் தேவைகளுக்கே அதிமுக்கியம் கொடுத்துத் தங்கள் கல்விப் பயணத்தை முன்னெடுத்துச் செல்கின்றனர். அதுவும் குறிப்பாகத் தேர்வு வகுப்புகளில் பயில்கின்ற மாணவர்களும் ஆசிரியர்களும் முற்றாகத் தேர்வுக்கே முன்னுரிமையும் முக்கியத்துவம் கொடுத்து பாடத்தைப் பயில்கின்றனர்; பயிற்றுவிக்கின்றனர். இதன் விளைவாகக் கல்வி ஏற்பாட்டின் உன்னத நோக்கமாகிய முழுமையான சமசீர் வளர்ச்சியுடைய மாந்தனை உருவாக்கும் முயற்சி தோல்வியில் முடிகின்றது என்று கல்வியாளர்கள் கவலைப்-படுன்றனர். கல்வி ஏற்பாட்டில் வலியுறுத்தப்படுகின்ற ஆன்ம, அறிவு, உடல், உள்ளத் தேவைகளுள் அறிவுத்தேவைக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. உடல்வளர்ச்சித் தேவையும் உள்ள வளர்ச்சித் தேவையும் ஆன்மீக வளர்ச்சியும் புறந்தள்ளப்படுகின்றன. இவற்றோடு சேர்ந்து பண்பாட்டு அம்சங்களும் முக்கியத்துவம் தரப்படாமல் ஓரங்கட்டப்படுகின்றன. இச்சூழலிருந்து மீள மொழியாசிரியர்கள பெரிதும் பங்காற்ற முடியும். மொழித்திறன்களாகிய பேசுதிறன், செவிமடுத்தல் திறன், படித்தல் திறன், எழுதுதிறன், இலக்கணம், இலக்கியம் ஆகிய கூறுகளோடு பண்பாட்டுக் கூறுகளையும் இணைத்துக் கற்றல் கற்பித்தலை மேற்கொண்டால் குறுகிய நோக்கக் கல்வியின் எதிர்மறை விளைவுகளிருந்து மாணவர்களைக் காப்பாற்றலாம்.

இன்றைய கல்வி முறையில் பலவற்றைப் புகுத்திக் கற்பிக்கவேண்டும் என்று கல்வி ஏற்பாடு எதிர்பார்க்கின்றது. பொது அறிவு, நற்பண்பு (மனித விழுமியங்கள்), சமுதாய பண்பாட்டு நெறிமுறைகள், பல்வகை நுண்ணறிவு (பன்னுண்ணறிவு), வாணாள் கல்வி, எதிர்காலவியல், தகவல் தொழில் நுட்பத்திறன், தொழில்முனைவம், ஆக்கமும் புத்தாக்கமும், குடிமையியல், சிந்திக்கும் திறன் அல்லது சிந்திக்கும் வழிமுறை, சுற்றுசூழல் கல்வி, அறிவியல் திறன், சிக்கல் தீர்வு, பயனீட்டாளர் கல்வி போன்ற கூறுகளை பாடத்தின்போது புகுத்த வேண்டும் என்று மலேசிய தொடக்கப்பள்ளித் தர ஆவணம் பரிந்துரைக்கின்றது. இவற்றோடு பண்பாட்டுக்கூறுகளையும் நமது பாடத்தில் புகுத்தினால் சரிசமநிலை வளர்ச்சி அடைந்த மாந்தன் உருவாக வாய்ப்புள்ளது.

பண்பாடு என்றால் என்ன?

பண்பாடு பற்றிப் பலர் விளக்கம் கூற முற்பட்டுள்ளர். அவர்களுள் அறிஞர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் அவர்கள் தந்த விளக்கம் இங்குக் கருதத் தக்கது. சிறந்த வாழ்க்கைக்கு அடிப்படையாக அமைகின்ற உள்ளப்பாங்கின் வெளிப்பாட்டையே பண்பாடு என்கின்றோம் என்கின்றார் அவர். அந்த வெளிப்பாடு சுவையுணர்வாகவும் நடையுடை பாவனையாகவும் தோன்றும். அது மக்கள் கூட்டத்தின் சிறப்பியல்பாகவும் தனி மக்களின் சிறப்பியல்பாகவும் விளங்கும்போதே பண்பாடு எனக் குறிக்கப்படுகின்றது என தெ.பொ.மீ. விவரிக்கிறார். மக்களின் பழைய வரலாற்றில் அவர்கள் இயற்றிக் கொண்ட கருவிகள், சமூகப்பழக்கம், வழக்கம், நம்பிக்கை, சமயம் முதலியவற்றைப் பண்பாடு என்ற சொல்லால் குறிக்கின்றனர் என அ. தட்சணாமூர்த்தி குறிப்பிடுகின்றனர். பண்பாடு என்பது மனிதன் சமூகத்தில் ஓர் அங்கமாக இருந்துகொண்டு பெற்ற அறிவு, போற்றிய நம்பிக்கை, கலை, நெறி, சட்டம், சமூக வழக்கம், மனிதனின் இதர ஆற்றல்கள், பழகிக்கொண்ட பழக்க வழக்கங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய சிக்கலும்செறிவும் மிக்க ஒரு முழுமைத்தொகுப்பு எனப் பண்பாடு எனும் சொல்லிற்கு வரையறை கூறியுள்ளார் பிரிட்டிஷ் மாந்தவியல் தந்தை எனப் போற்றப்படும் டைலர் (Tylor). Culture is defined as ‘that complex whole which includes knowledge, belief, art, morals, law, custom, and any other capabilities and habits acquired by man as a member of society’ எனவே பண்பாடு எனும் சொல் பொருட்செறிவுமிக்க ஒரு சொல். அது சமுதாயத்தின் எல்லாக்கூறுகளையும் உள்ளடக்கியது. சமுதாயத்தின் ஓர் அங்கமாகிய மனிதனுக்கு பண்பாடு பற்றிய அறிவு மிகவும் முக்கியம். அது பள்ளிகளில் அவசியம் கற்பிக்கப்பட வேண்டிய ஒன்று.

பண்பாடு பற்றிய அறிவினால் விளையும் நன்மைகள்

பண்பாட்டினால் உள்ளொளி பெருகும்; உயிர்த்தத்துவம் மிளிரும்; பிறர் மீது அன்பும் அருளும் மிகும்; சமுதாயத்தில் உள்ள விழுமியங்கள் சமுதாய உறுப்பினர்களாகிய மாணவர்கள் அறிந்துகொள்ள வாய்ப்பாக அமைகின்றது. அதனைப் பின்பற்றி வாழவும் இது வழிவகுக்கின்றது. சமுதாயத்தில் ஒரு தீவாக வாழாமல் தோப்பாக வாழும் நிலைக்கு மனிதனை உயர்த்தும். தனி மரம் தோப்பாக ஆகாது என்பன போன்ற விழிப்புணர்ச்சி ஏற்பட வாய்ப்புண்டு. சமூக உறுப்பினர்களின் செயற்பாட்டினை, சமூகப் பழக்கவழக்கங்களை அறிந்து ஊரோடு ஒட்டி வாழும் மனப் பக்குவத்தை ஏற்படுத்தப் பண்பாட்டுக்கல்வி உதவும் .

பாடத்தில் புகுத்துவற்குரிய பண்பாட்டுக்கூறுகள்

தமிழர் வரலாறு, உடை, இறப்பு, ஈமச்சடங்கு, தமிழர் விளையாட்டுகள், சமய வாழ்வு, தமிழர் நம்பிக்கைகள், சமய விழாக்கள், தமிழர் இசை, சிற்பக்கலை, தமிழர் நடனம்/ நாட்டியக் கலை, கட்டிடக்கலை, ஓவியக்கலை, தமிழர் மருத்துவம் போன்றைவை பண்பாட்டுக்கூறுகளுள் அடங்கும்..

மொழிப்பாடத்தில் பண்பாட்டுக்கூறுகள்

பள்ளிகளில் பல பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. அவற்றுள் மொழிப்பாடமே பண்பாட்டுக்கூறுகளைப் புகுத்தப் பொருத்தமான பாடமாக அமைகின்றது. மொழி கற்பிக்கும் ஆசிரியர் மொழியை வெறுமையில் கற்பிக்க முடியாது. அதற்குக் கதையோ கட்டுரையோ உரையாடலோ பாடலோ கவிதையோ எனப் பல்வேறு வடிவிலான பாடப்பகுதிகளைப் பயன்படுத்துகின்றோம். அதனூடே பண்பாட்டுக்கூறுகளையும் இணைத்துக்கற்பித்தால் மொழித்திறனோடு பண்பாட்டையும் அறிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படும்.

எல்லாப் பாடவேளயிலும் பண்பாட்டுக்கூறுகளைப் புகுத்த நினைப்பது சரியான முறையாகாது. பொருத்தமான இடங்களில் மட்டுமே புகுத்துதல் சிறப்பு. பண்பாட்டைப் போதிக்கப்போகின்றேன் என்று எடுத்துக்கொண்ட பாடநோக்கத்தை விட்டு விலகுதல் சரியன்று.

பண்பாடு தழுவிய இலக்கணப்பாடம்

இலக்கணம் கற்பிக்கும்பொழுது நமது பண்பாடு தொடர்பான செய்திகளைப் புகுத்தலாம். பெயர்வகைகள் கற்பிக்கும்பொழுது குறிப்பாகக் காலப்பெயர் பற்றி விளக்குபொழுது நமது தமிழ் மாதங்களாகிய சித்திரை வைகாசி ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை, மாசி, பங்குனி போன்ற மாதங்களை வரிசைக் கிரமமாகச் சொல்லப் பயிற்றுவிக்கலாம். இதன்வழி ஆங்கில மாதத்தையும் தமிழ் மாதத்தையும் அறிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படுகின்றது. இதனோடு நம் சமுதாயத்தினர் கொண்டாடும் சமய விழாக்களயும் அவ்வமயம் நாம் அறிமுகப்படுத்தலாம். ஒவ்வொரு தமிழ் மாதத்திலும் கொண்டாடப் படுகின்ற தமிழ்ப் பண்டிகைகள், திருவிழாக்கள் பற்றிக் கற்பிக்கலாம். சித்திரையில், சித்திரைப் பருவம், வைகாசியில் விசாகம், ஆனி மஞ்சனம், ஆடிப்பூரம், ஆவணியில் புதுமனை புகுதல், புரட்டாசியில் நவராத்திரி , விநாயகர் சதுர்த்தி, ஐப்பசியில் தீபாவளி, கந்த சஷ்டி விரதம், கார்த்திகையில் கார்த்திகைத் தீபம், மார்கழியில் பாவைநோன்பு, திருவாதிரை, தையில் தைப்பூசம் போன்ற சமுதாய சமய

நிகழ்வுகள் அவர்களுக்குத் தாங்கள் சார்ந்த சமய அறிவும், சமூக அறிவும் பெற்று நல்ல குடிமகனாக வாழும் வாய்ப்பை ஏற்படுத்தும். இதே போன்று இடப்பெயர் பற்றிக் கற்பிக்கும்பொழுது தமிழர் ஐவகை நிலப்பாகுபாடு பற்றிக் குறிப்பிடலாம். இலக்கணம் கற்பிக்கும்பொழுது சூழ்நிலைக்கேற்ப நமது பண்பாடு தொடர்பான செய்திகளைத் தகவலாகக் கூறிச்செல்லாம். இலக்கணப்பாடத்தை வெறும் இலக்கணப்பாடமாக நடத்தாமல் மாணவர்களது வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்த சமயச்செய்திகளும் சமூகச் செய்திகளும் அவர்களைச் சமூகம் சார்ந்த மனிதர்களாக வாழ வழி வகுக்கும் என நம்பலாம்.

இலக்கியப்பாடத்தில் பண்பாடு

செய்யுள் கற்பிக்கும்பொழுது நமது பண்பாட்டில் போற்றப்படும் விழுமியங்கள் இயல்பாகவே அப்பாடத்தின் வழி மாணவர்களைச் சென்றடையும். ஆத்திசூடி, கொன்றை வேந்தன்,உலகநீதி, நறுந்தொகை, மூதுரை, நல்வழி, நன்னெறி, நீதிநெறிவிளக்கம், ,நாலடியார், திருக்குறள் முதலியவற்றை மொழிப்பாடத்தின்போது கற்பிக்கும்பொழுது நேரடியாகவோ மறைமுகமாகவோ நமது பண்பாட்டின் விழுமியங்கள் அடுத்த தலைமுறைக்குச் சென்றடைவதை உறுதி செய்யலாம். ஆசாரக்கோவை போன்ற நூலும் பண்பாட்டுக்கூறுகளை பாடத்தில் உட்புகுத்த உதவும். இராமாயணம், மகாபாரதம், சிலப்பதிகாரம், நளவெண்பா, நல்லதங்காள் கதை, அரிச்சந்திரன் கதை போன்ற கிராமிய, இதிகாசக் கதைகள், அவற்றில் உள்ள கிளைக்கதைகள் கூட நமது பண்பாட்டினை வளர்க்கப் பெரிதும் பயன்படும். மேற்காணும் விழுமியங்கள் நிறைந்த பண்பாடு தொடர்பான கதைகளை மொழிப்பாடத்தில் பயன்படுத்துவது பண்பாடு பேண உதவும். அம்புலி மாமாவில் கூட பண்பாட்டு அம்சங்கள் உள்ளன.

மொழியணி கற்பித்தலில் பண்பாடு

மொழி நடைக்கு அழகு சேர்க்கும் பழமொழிகள், இணைமொழிகள், உவமைத்தொடர்கள், மரபுத்தொடர்கள் ஆகியவற்றைக் கற்பிக்கும்பொழுதும் பண்பாட்டுக்கூறுகளைப் பற்றிச் சிந்திக்கவும் விவாதிக்கவும் இடம் உண்டு. ”நொறுங்கத் தின்றால் நூறு வயசு” அணிமணிகள், காது குத்துதல், தாம்பூலம் வைத்தல், கை கழுவுதல், கைநனைத்தல், கல்யாண வீட்டில் கட்டி அழலாமா?, குருமொழி கேளாதவனும் தாய் வார்த்தை கேளாதவனும் சண்டி போன்றவற்றிற்குப் பொருள் விளக்கும்பொழுது பண்பாட்டு அடிப்படையிலும் சற்று நோக்கலாம்.

பண்பாடும் மொழித்திறன்கள் கற்பித்தலும்

செவிமடுத்தல் திறன்

மொழிப் பாடத்தில் பேசுதிறன் செவிமடுத்தல் திறன் கற்பிப்பது வழமையான ஒன்று. அவ்வமயம் பண்பாட்டுக்கூறுகளையும் புகுத்தி மொழிப்பாடத்தை நடத்துவதற்கு இடம் உள்ளது. குறிப்பாக, நாடகம், கதை, கவிதை போன்றவற்றைச் செவிமடுத்தல் திறன் நடத்தும்பொழுது பண்பாட்டுக் கூறுகள் உள்ள பாடப்பகுதிகளைப் பயன்படுத்தலாம். எத்தகைய பண்பாட்டு அம்சங்கள் உள்ள கதை, கவிதை, நாடகம், இசைப்பாடல் போன்றவற்றைத் தெரிவு செய்வது மாணவர்களின் பின்புல அறிவைப் பொருத்து ஆசிரியர் நிர்ணயித்துக் கொள்ளுதல் வேண்டும். இப்பொழுதெல்லாம் இணையங்களில் பல உரைகள், பாடல்கள், நாடகங்கள் காணப்படுகின்றன. அவற்றை நாம் நன்கு பயன்படுத்திக்கொள்ளலாம். செறிவட்டுகளும் கூடச் சந்தையில் நிறையவே உள்ளன. சுகி.சிவம் போன்றோரின் சமய தன்முனைப்பு உரைகள் பெரிதும் மாணவர்களைக் கவரும் என்பது திண்ணம். கண்ணதாசனின் அர்த்தமுள்ள இந்துமதம் உரையும் செவிப்புலனுக்கு நல்ல விருந்தாக அமையும். கிருபானந்த வாரியார் கீரன் போன்றோரின் உரைகளும் பண்பாட்டு அமசங்களை நமது பாடத்தில் புகுத்த உதவும்.

பேசுதிறன்

மாணவர்களின் பேசுதிறனை வளர்ப்பதில் ஆசிரியர்க்குப் பெரும்பங்கு உண்டு. பேசுதிறனை வளர்க்க தனியாள் முறையிலான பேச்சு, சொற்போர், கருத்தரங்கம், பாடும் பயிற்சி போன்றவற்றை நடத்தலாம். அவ்வமயம் பண்பாடு சார்ந்த தலைப்புகளைக் கொடுத்துப் பேசவைக்கலாம். பாடவைக்கலாம். ”தமிழர் கொண்டாடும் பண்டிகைகள்”, ”தமிழர் உணவு’ ”தமிழர் இசை”, தமிழர் வீரவிளையாட்டுகள் எனப் பலவாறான பண்பாடு தொடர்பான தலைப்புகளைக் கொடுக்கலாம். பண்பாடு பற்றிய பாடல்களைப் பாடவைக்கலாம்.

மாதிரிப்பாடல்:

”தமிழன் என்றுசொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா”,

”அச்சம் என்பது மடமையாடா..”,

”தமிழன் என்றொரு இனமுண்டு தனியே அவர்க்கொரு குணமுண்டு”

இவ்வாறே ஓரங்க நாடகங்கள் நடித்தல், நாடோடிப் பாடல்கள் பாடுதல் போன்ற பேசுதிறன் பாடத்தின்போது பண்பாடு தழுவிய தலைப்புகளைப் பயன்படுத்தலாம். “ தமிழன் என்றொரு இனமுண்டு; தனியே அவர்க்கோர் குணமுண்டு’’ –

இது பற்றி உமது கருத்தென்ன?

தமிழனுக்கென்று தனியே குணம் உண்டா?

அப்படி இருந்தால் அவை யாவை? - போன்ற விவாதத் தலைப்புகள் மாணவர்களைச் சிந்திக்க வைக்கும். தமிழர் பண்பாடு பற்றி அறிய வைக்கும்.

வாசிக்கும் திறன்

வாசிப்புப் பாடம் நடத்தும்பொழுது கண்டிப்பாக ஆசிரியர் உரைநடைப்பகுதிகளை மாணவர்களுக்குக் கொடுக்க வேண்டியுள்ளது. சிற்சில சமயங்களில் கவிதைகள், நாடகங்கள், கட்டுரைகள், உரையாடல் பகுதிகள் போன்றவற்றை பயன்படுத்த வேண்டியுள்ளது. இத்தகைய சூழல்களில் தேவைக்கேற்பப் பண்பாடு தொடர்பான கருப்பொருளைக் கொண்ட பாடப்பொருளைப் பயன்படுத்தலாம்.. தமிழர் வரலாறு, உடை, தமிழர் விளையாட்டுகள், சமய வாழ்வு, தமிழர் நம்பிக்கைகள், சமய விழாக்கள், தமிழர் இசை, சிற்பக்கலை, தமிழர் நடனம்/ நாட்டியக் கலை, கட்டிடக்கலை, ஓவியக்கலை, தமிழர் மருத்துவம்போன்ற தலைப்புகளில் உள்ள வாசிப்புப் பகுதிகளைப் பயன்படுத்தலாம். சுய வாசிப்புத்தேடல் வேலைகளைக் கொடுக்கலாம். “ தமிழன் என்றொரு இனமுண்டு; தனியே அவர்க்கோர் குணமுண்டு “ இது பற்றிய தகவல்களைத் திரட்டும்படியும் பண்பாட்டு அறிவைப் பெருக்கும் நடவடிக்கைகளைக் கொடுக்கலாம்.

எழுது திறன்

மொழித்திறனில் கட்டுரைத் தலைப்புகள் தெரிவு செய்யும்பொழுது பண்பாடு தொடர்பான தலைப்புகளைத் தெரிவுசெய்து மாணவர்கள் அதன் தொடர்பான ஆய்வுகளில் இறங்கும் சூழல் ஏற்படுத்தலாம். இதன் விளைவாகப் பண்பாட்டைப் பற்றி மேலும் விரிவாகவும் ஆழமாகவும் அறிந்துகொள்ள வாய்ப்பு ஏற்படும். “ தமிழன் என்றொரு இனமுண்டு; தனியே அவர்க்கோர் குணமுண்டு “ இது பற்றிய உமது கருத்து என்ன? போன்ற வினாத் தலைப்புகள் பண்பாடு நோக்கி அவர்களின் பார்வையைத் திருப்பும்.

மொழிப்பாடத்தில் செயல்திட்டங்கள்

இப்பொழுதெல்லாம் கல்வி பொருள் பொதிந்ததாக இருக்க வேண்டும் என்பதற்காகப் பள்ளிகளில் மாணவர்களுக்குக் களஆய்வு மேற்கொள்ளும் சூழலை ஏற்படுத்தி வருகின்றார்கள். செயல்திட்ட வடிவில் மதிப்பீடும் நடத்துகிறார்கள். இத்தகைய சூழல்களிலெல்லாம் பண்பாடு தொடர்பான தலைப்புகள் பண்பாட்டு அறிவினை வளர்க்கவும் கூர்மைப்படுத்தவும் உதவும். தமிழர் உணவு உண்ணும் முறை பற்றி

ஆராய்ந்து அறிக்கை ஒன்று தயார் செய்க போன்ற களப்பணி வேலைகள் பண்பாடு பற்றி மேலும் அறிய வழிவகுக்கும்.

பரிந்துரைகள்

கலைத்திட்டம் உருவாக்குபவர்கள் பண்பாட்டுக்கூறுகளுக்கும் கலைத்திட்டத்தில் உரிய இடம் கொடுத்தல். பாடநூல் எழுதுபவர்கள்: பண்பாடு தொடர்பான தலைப்புகளில் உரைநடைப் பகுதிகளை வாசிப்புப் பகுதிகளை பாடநூலில் உட்புகுத்துதல். ஆசிரியர்கள் தங்கள் கற்றல் கற்பித்தலில் பண்பாட்டுக் கூறுகளைப் பொருத்தமான இடங்களில் உட்புகுத்தி மொழிப்பாடத்தை நடத்துதல். பள்ளிகள் கல்லூரிகள் பல்கலைக்கழகங்கள் இணைப்பாட நடவடிக்கைகளில் பண்பாட்டு அம்சங்களுக்கும் இடங்கொடுத்தல்; ஊக்குவித்தல்

முடிவு

மொழிப்பாடத்தை வெறும் மொழி கற்பிக்கும் பாடமாகக் கருதாமல் அப்பாடத்தின் வழி பண்பாட்டுக்கூறுகளையும் புகுத்தினால் சரிசம வளர்ச்சி அடைந்த மாந்த இனத்தை உருவாக்க முடியும். தகவல் யுகத்தில் வெறும் தகவல் மட்டுமே தெரிந்த மனிதர்களை உருவாக்காமல் சமுதாயம் சார்ந்த மனிதர்களை உருவாக்கினால் நாளைய உலகம் வெறும் எந்திர மயமான உலகமாக இருக்காது. அன்பும் இரக்கமும் நிறைந்த மனித நேயமிக்க சமுதாயத்தை உருவாக்கிய புண்ணியம் நம்மையே வந்து சேரும்.

துணை நூல்கள்

1. தட்சிணாமூர்த்தி, அ. (1999) தமிழர் நாகரிமும் பண்பாடும். சென்னை: யாழ் வெளியீடு
2. Lucy Mair (1975) An Introduction to Sociall Anthropology. London: Oxford University Press.
3. அரங்கராசன், ம. (1998) தமிழில் மரபுத்தொடர்கள். பெரம்பலூர்: பாலமுருகன் பதிப்பகம்
4. ஜகந்நாதன், கி.வ.(1988) தமிழ்ப் பழமொழிகள். சென்னை: பூஞ்சோலை அச்சகம்.
5. பாடத்திட்டம்: தமிழ் மொழி. கல்வி அமைச்சு குவாலாலும்பூர் டெவான் பஹாசா டான் புஷ்தாக்கா (1983)
6. தமிழ்மொழித் தர ஆவணம் (2010) கல்வி அமைச்சு குவாலாலும்பூர் பாட்த்திட்ட மேம்பாட்டுக் கழகம்

இலங்கையில் தமிழை இரண்டாம் மொழியாகக் கற்றல் கற்பித்தலிலுள்ள பிரச்சனைகள் : பேச்சுத் தமிழ் பற்றிய ஓர் ஆய்வு

சிவகௌரி சிவகுருநாதன்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

தமிழ்மொழி பல ஆண்டுகளாகத் தாய்மொழியாகக் கற்பிக்கப்பட்டும், கற்கப்பட்டும் வந்த சூழ்நிலையில் அண்மைக்காலமாக இரண்டாம்மொழியாகவும், அந்நிய மொழியாகவும் ஆசிய நாடுகளில் மட்டுமல்ல, ஐரோப்பிய அமெரிக்க நாடுகளிலும் கற்பிக்கப்பட்டு வருகின்றது.

இரண்டாம் மொழி கற்பித்தல் என்பது தாய்மொழி கற்பித்தல் போல் பேச்சு ஊடகத்தில் நன்கு தேர்ச்சி பெற்ற மாணவனின் மொழியாற்றலை எழுத்து ஊடகத்துக்கு மாற்றுவதன்று. இது ஒரு சவால் நிறைந்த பணியாகும்.

எந்தவொரு மொழியைக் கற்கும்போதும் மாணவர்களுக்கு முதலில் தோன்றும் பிரச்சனை உச்சரிப்பு பற்றியதாகவே இருக்கும். ஏனென்றால் ஒரு மொழியை உச்சரிக்காமல் கற்றல் அரிது, கற்கும் மொழியில் புதிய ஓசைகளும் ஒலிகளின் புதிய சேர்க்கைகளும் வருவதுண்டு. சொற்களில் ஒலிகள் பயின்று வரும் இடங்களும் புதியனவாகலாம்.

ஒரு நாட்டில் பல மொழிகள் வழக்கில் இருப்பினும் அந்நாட்டு மக்களின் தாய்மொழியும் இரண்டாம் மொழியும் முக்கியத்துவம் கூடியனவாக உள்ளன.ஆசியாவின் முத்து என வர்ணிக்கப்படும் இலங்கையில் பெரும்பான்மை இனத்தவரான சிங்களவரின் தாய்மொழியாகச் சிங்களமும் சிறுபான்மைத் தமிழரினதும் முஸ்லிம்களினதும் தாய்மொழியாக தமிழ் மொழியும் உள்ளன.

சுதந்திரத்திற்கு முற்பட்ட காலத்தில் இலங்கையில் நிலவிய பிரித்தானியர் ஆட்சியின் விளைவாக சுதந்திர இலங்கையில் ஆங்கிலத்திற்கான முக்கியத்துவம் அதிகமானதாகவே இருந்தது. சிங்களவரும் தமிழரும் தொடர்பு கொள்வதற்கான பொதுஊடகமாகவம் ஆங்கிலம் தொழிற்பட்டது. இரண்டாம் மொழியாக ஆங்கிலத்திற்கு அரச அங்கீகாரம் கிடைத்ததுடன் பாடசாலைகளிலும் கட்டாய இரண்டாம் மொழியாகக் கற்பிக்கப்பட்டு வருகிறது. சுதந்திரத்திற்குப் பின்னர் தமிழ் சிங்கள மக்களிடயே அரசியல் அபிலாசைகள்

காரணமாகத் தோன்றிய காழ்ப்புணர்வுகள், வெறுப்பு, குரோதம் என்பனவும் 1956ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட தனிச் சிங்களச் சட்டமும் தமிழர்களையும் தமிழ்மொழியையும் நாட்டின் நிர்வாக நிலைகளில் இருந்து ஒதுக்கின. இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர், தமிழர்கள் சிங்களவர்களிடையே ஏற்பட்ட காழ்ப்புணர்ச்சிகள் அரசியல் பிரச்சனைகளாக உருவெடுத்த போதும் மொழிப் பிரச்சினைகளும் இருக்கவே செய்தன.இவ்வாறான சந்தர்ப்பத்தில் தமிழை இரண்டாவது மொழியாகக் கற்பதற்கான வாய்ப்புக்கள் இல்லாமலே போய்விட்டன.

இன்றைய காலப்பகுதிகளில் இலங்கையில் தமிழ்மொழியும் சிங்களத்துடன் அரச கரும மொழியாக இருக்கின்ற போதும் தமிழ்மொழிக்கும் தமிழர்களுக்குமான முக்கியத்துவம் கொடுக்கப்படாமலேயே இருந்து வருகின்றது. பொதுவாக இலங்கையில் இரண்டாம் மொழியாக ஆங்கிலம் இருப்பதுடன் பாடசாலைகளில் போதிக்கப்பட்டும் வருகின்றது. எனினும் சிங்கள மாணவர்களுக்குத் தமிழ்மொழியும் தமிழ் மாணவர்களுக்கு சிங்கள மொழியும் இரண்டாம் மொழியாகக் கற்பிப்பதற்கு அரசாங்கம் பல நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. இலங்கையில் பல சிங்களப் பாடசாலைகளில் தமிழ்மொழி கற்பிக்கப்பட்டு வருவதுடன் இலங்கையில் தமிழ்ர் செறிந்து வாழும் மாவட்டங்களுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள், காவலர்கள் இராணுவத்தினர் என்பவர்களுக்கும் தமிழ்மொழிக்கல்வி வழங்கப்படுகின்றது. அண்மைக் காலமாக தமிழைச் சிங்கள மாணவர்களுக்கு இரண்டாம் மொழியாகக் கற்பிப்பதற்கான நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது. எனவே தமிழ் மொழியை இரண்டாம் மொழியாகக் கற்க வேண்டும் என்ற ஆர்வம் சிங்கள மாணவர்களிடையே ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில் இரண்டாம் மொழியாகத் தமிழைக் கற்பிப்பதில் ஆசிரியர்கள் மட்டுமல்ல, கற்பதில் மாணவர்களும் பல பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். இப்பிரச்சனைகளில் பல, மொழியியல் ரீதியாக அணுகப்பட வேண்டியவையாக உள்ளதுடன் பல ஆய்வுகளும் இவ்விடயம் தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய நிலையில் இவ்வாய்வுக்கட்டுரையானது சில பிரச்சனைகளை பேச்சுத்தமிழை அடிப்படையாகக் கொண்டு ஒலியியல் அமைப்பு ரீதியாக ஆராய முற்படுகின்றது.

சிங்கள மாணவர்கள் தமிழை இரண்டாவது மொழியாகக் கற்பதில் பல சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். நாம் ஒரு மொழியைப் பயன்பாட்டிற்காகத் தேர்ந்தெடுக்கும்போது

முதலில் அதனைப் பேசக் கற்றுக் கொள்ள வேண்டும். ஏனெனில் மொழி தொடர்பாடலுக்குப் பயன்படுத்துவதற்காகவே கற்கப்படுகிறது.
எனவே இரண்டாம் மொழி கற்றல் / கற்பித்தல் செயற்பாட்டிலே பேச்சுமொழிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். அதிகமான மாணவர்கள் இரண்டாம் மொழியில் சிறப்பாக எழுதக்கூடியவர்களாக இருக்கின்றார்களேயன்றி, அம்மொழியில் சரளமாகப் பேசுவதற்கு முடியாத நிலையில் உள்ளனர். இவ்வாறான ஒரு நிலை இரண்டாம் மொழி கற்பிப்பதில் ஏற்படுவது தவிர்க்க முடியாத ஒன்றாகி விட்டது.

மேலும் இரண்டாம் மொழி கற்பிப்பதில் கிளை மொழியைத் தெரிவு செய்வது மிகப் பெரிய பிரச்சினையாக உள்ளது. இலங்கையைப் பொறுத்தவரையில் பேச்சுத்தமிழ் பிரதேசத்திற்கு பிரதேசம், சமூகத்திற்கு சமூகம் வேறுபட்டே காணப்படுகிறது. யாழ்ப்பாணத்தமிழ், மட்டக்களப்புத்தமிழ், முஸ்லீம்தமிழ், கொழும்புத்தமிழ் என்பன இலங்கையில் உள்ள பேச்சுத்தமிழ் வேறுபாடுகளாகும்.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில் இலங்கையில் தமிழை இரண்டாம் மொழியாக சிங்கள மாணவர்களுக்குக் கற்பிக்கும்போது எந்தக் கிளைமொழியைத் தெரிவு செய்வது என்பது ஒரு பிரச்சினையாகும். ஏறத்தாழ மூன்று தசாப்தங்களுக்கு மேலாகத் தொடர்ந்த யுத்தத்தினால் தென்னிலங்கைச் சிங்களவாகளுக்கும், யாழ்ப்பாணத் தமிழர்களுக்கும், மட்டக்களப்புத் தமிழர்களுக்கும் இடையிலான தொடர்பு குறைவானதாகவே இருந்து வந்தது. ஆனால் சிங்களவாகளுக்கு, மலைநாட்டுத் தமிழர், முஸ்லீம்களுடனான தொடர்பு நெருக்கமானதாக இருந்தது. அது மட்டுமன்றி மலைநாட்டு மற்றும் முஸ்லீம் பேச்சுத் தமிழ் இந்தியப் பேச்சுத் தமிழுடன் அதிக நெருக்கமுடையதாக இருப்பதால், இவ்விரு கிளைமொழிகளில் ஒன்றையே தெரிவு செய்ய மாணவர்களும் ஆசிரியர்களும் முயல்வர். எனினும் இலங்கையைப் பொறுத்தவரையில் யாழ்ப்பாணத்தமிழே சமூக அந்தஸ்திலுள்ள கிளை மொழியாக அதாவது எழுத்துத் தமிழிலிருந்து அதிகளவு பிறழ்வற்றதாக இருப்பதால், அதனைத் தெரிவு செய்வது மாணவர்களுக்கு பயன் உள்ளதாக அமையும். எனினும் கிளைமொழியைத் தெரிவு செய்வதில் ஆசிரியர்களும் மணாவர்களும் காரணங் கருதாது ஒன்றைத் தெரிவு செய்வது நல்லது. ஏனெனில் கிளைமொழிகளைப் புரிந்து கொள்ளும் அளவிலேயே வேறுபாடுகள் காணப்படும்.

தமிழ் மொழியும் சிங்கள மொழியும் ஒலியனியல்,வாக்கியவியல் மற்றும் உருபனியல் நிலைகளில் பல வேற்றுமைகளைக் கொண்டிருப்பதற்கு காரணம் இரு மொழிகளும் வெவ்வேறு மொழிக் குடும்பங்களைச் சேர்த்திருப்பதேயாகும். தமிழை இரண்டாம்

மொழியாகக் கற்கும் போதும் கற்ப்பிக்கும் போதும் பேச்சு மொழியில் ஏற்படும் பிரச்சனைகள் ஒலியனியல்,வாக்கியவியல் மற்றும் உருபனியல் நிலைகளில் ஏற்படுகின்றது. இக்கட்டுரை ஒலியனியல் நிலையில் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் உருவாகும் பிரச்சனைகளை விளக்குவதுடன் அவற்றை நிவர்த்தி செய்வதற்கு ஆசிரியர்கள் கையாளக் கூடிய உத்திகளையும் முன்வைக்கிறது.

யாழ்ப்பாணப் பேச்சுத் தமிழில் 10 உயிர்ஒலியன்களும் கொழும்பும் அதன் சுற்றுப்புறத்தில் பேசப்படும் சிங்களத்தில் 13 உயிர் ஒலியன்களும் உள்ளன.

தமிழ்

	முன்	நடு	பின்	
மேல்	i		u	i: u:
இடை	e		o	e: o:
கடை		a		a:

சிங்களம்

	முன்	நடு	பின்	
மேல்	i		u	i: u:
இடை	e	ə	o	e: o:
கடை	æ		a	æ: a:

தமிழுடன் ஒப்பிடுகையில் சிங்களத்தில் æ æ: ə என்ற மூன்று ஒலியன்கள் அதிகமாக உள்ளன.

இருமொழிகளின் உயர்ஒலியன்களின் மாற்றொலிகளில் அதிக வேறுபாடு உள்ளது. தமிழில் /i/என்ற ஒலியனின் மாற்றொலிகளாக [ɨ] , [i] என்பனவும், சிங்களத்தில் [i] மட்டுமே மாற்றொலியாக உள்ளது. எனவே தமிழில் [i]யின் மாற்றொலியான [ɨ] உச்சரிக்கப்பட வேண்டிய இடங்களில் சிங்கள மாணவர்கள் [i] என்றே ஒலிப்பார்கள். இதேநிலைதான் [i:] என்ற ஒலியனுக்கும். தமிழில் [u] ஒலியன் [ʉ],[u] ஆகிய இரண்டையும் மாற்றொலிகளாக உடையது. சிங்களத்தில் |u| ஒலியன் [u] எனும்

மாற்றொலியை மட்டுமே உடையது. இதே நிலைதான் நெடிலிலும் உண்டு. எனவே தமிழ்ச் சொற்களில் [ɨ] [ɨ:] வரும்போது அதனை மாணவர்கள் முறையே [u] , [u:] என ஒலிக்கிறார்கள். /na:kku/ எனும் சொல் தமிழரால் /na:kk ɨ/ என ஒலிக்கப்படும். ஆனால் சிங்கள மாணவர்கள் /na:kku/ என ஒலிப்பர்.

இவ்வாறே தமிழில் /a/ ஒலியன் [a], [ɛ] எனும் மாற்றொலிகளை உடையது. அதற்கு சிங்களத்தில் [æ] எனும் மாற்றொலியே உள்ளது. எனவே மாணவர்கள் [ɛ] ஒலிக்கப்படவேண்டிய இடங்களில் [æ] என்றே உச்சரிக்கின்றனர். தமிழ் சொற்களின் இறுதியில் வரும் -ai / - a y எனும் தொடரை e/ei என ஒலிக்கும் போக்கு அவர்களிடமுள்ளது.

உதாரணம்: கடை kaṭay – [kaṭe],[kaṭei]

சொற்களின் முதல் வரிசையில் வரும் நெடிலின் நீட்டத்தைக் குறைத்து உச்சரிக்கும் போக்கு தமிழ் கற்கும் மாணவரிடமுள்ளது. சிங்களத்தில் சொற்களின் ஈற்றில் வரும் உயர் ஒலிகள் ஒருவகை குரல்வளை ஒலியன் பிடியுடன் உச்சரிக்கப்படுகின்றன. இதேவழமை தமிழ்ச் சொற்களின் ஈற்றில் வரும் உயிர் ஒலிகளை ஒலிக்கும் போது சிங்கள மாணவர்களுக்கு வந்து விடுகின்றது.

உதாரணம்: வீடு [v ɨ ṭ ɨ] = [v i: du]

இரு மொழிகளிலும் மூக்கின ஒலிகளுக்கு முன்னர் வரும் உயிர் ஒலிகள் மூக்கினச்சாயல் பெறுகின்றன. ஆனால் சிங்களத்தில் இந்த மூக்கினச்சாயல் வன்மை பெற்றது. தமிழிலே மென்மையாக வருவது சிங்கள மாணவர்கள் தமிழ்ச சொற்களிலும் மூக்கினச்சாயலை வன்மைப்படுத்தி வருகின்றார்கள். இத்தகைய இயல்புகளால் சிங்கள மாணவர்கள் பேசுந் தமிழ் "சிங்களத் தமிழ்" ஆகிவிடுகின்றது.

தமிழ்மொழியில் 14மெய்யொலியன்களும்,சிங்கள மொழியில் மேலதிக 10 ஒலியன்களுடன் 24 மெய்யொலியன்களும் உள்ளன.

தமிழ்

p t t̲ ṭ c k

m n ṇ

l ḷ

r

v y

சிங்களம்

p	t		t		k	
b	d		d		g	
				c		
				∂		
b̄	d̄		d̄		ḡ	
m		n		ñ		
f	s			s'		h
v				y		
		l				
		r				

லி சிங்களத்தில் இல்லை. அவ்வாறே சிங்களத்தில் ஒலிப்பு, ஒலிப்பிலான முன் மூக்கினச்சாயல் ஒலியன்களுக்ககும் இடையேயுள்ள முவ்வழி முரண் தமிழிலே இல்லை.

இருமொழிகளிலும் முவ்வழி முரண் மூக்கொலியன்கள் இருப்பினும் மூன்றாம் ஒலியன் வேறுபடுகிறது. தமிழில் மருங்கொலியன் 2 சிங்களத்தில் 1, சிங்களத்திலுள்ள குழிந்துரசொலியனும் குரல்வளை பினந்துரசொலியனும் தமிழில் இல்லை.

தமிழ் மெய்யொலியன்களின் மாற்றொலிகளை உச்சரிப்பதில் சிங்கள மாணவர்கள் பல சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். தமிழில் காணப்படும் நுனிநா நுனியண்ணத் தடையொலி [t̪] சிங்களத்தில் இல்லை. இவ்வொலி தமிழச்சொற்களில் முதல்நிலையில் வரும் போதெல்லாம் அதனைச் சிங்கள மாணவர்கள் வளைநாத் தடையொலியாக [ṭ] உச்சரிக்கின்றார்கள்.சொற்களின் ஈருயிர்களுக்கிடையே [ṭ] தனியே வரும் போது நுனிநா நுனியண்ண வருடொலியாக [ṛ] அது ஒலிக்கப்படுகின்றது.

இரட்டித்து [n̪] என வரும்போது அதனை [t̪] என ஒலிக்கிறார்கள. நாவளை மூக்ககொலியும் நாவளை மருங்கொலியும் தமிழிலே ஒலியன்கள் அதாவது [n] [n̪] தொழிற்பாடுடைய ஒலிகளாக [Functional] முரண்நிலையில் வருவன. இவைபோன்று நுனிநா நுணியண்ண மருங்கொலியும் வளைநா மருங்கொலியும் தமிழிலே ஒலியன்கள் சிங்களத்தில் [n] [n̪] மாற்றொலிகள் [l] [l̪] மாற்றொலிகள் [n̪] [l̪] கியவற்றில் “வளைநாத்தன்மை“ ( ) குறிப்பிடத்தக்க அளவு இல்லை. மிக இலேசாகவே உள்ளது. ஆதலால் மாணவர்கள் தமிழில் வரும் /n̪/ [ṇ] ஒலியை நுனிநா நுணியண்ண ஒலியாக

அதாவது [n] ஆக ஒலிக்கின்றனர். இதேபோன்று [l] [l̪] ஒலியை நுனிநா நுணியண்ண ஒலியாக, அதாவது /l/ [l̪] ஆக ஒலிக்கின்றார்கள். இதனால் அவர்கள் பேச்சில் தமிழில் வேறுபடுத்தி ஒலிக்கப்படும் சொற்கள் (கொன்னை. கொண்ணை, கொல்லை, கொள்ளை போன்றவை) ஒரே மாதிரி ஒலிக்கப்படுகின்றன. அதாவது உச்சரிப்பிலும் பொருளிலும் வேறுபடும் இவ்விரு சொற்கள் ஒன்றாகி விடுகின்றன. சொல்லின் நடுவே உயிர் ஒலிகளுக்கிடையே வரும் /p/ ஒலியன் [Φ~β] என ஒலிக்கப்படும். இதனைச் சிங்கள மாணவர்கள் பெரும்பாலும் [ʃ] எனவோ [b] எனவோ ஒலிக்கின்றனர்.

தமிழ்ச் சொற்களில் ஈருயிர்களுக்கிடையே வரும் [k] [x] என ஒலிக்கப்படும். இதனைச் சிங்கள மாணவர்கள் தம் மொழியில் வரும் [h] [g] ஆகவோ ஒலிக்கிறார்கள். இனிப் பொதுவாக ஒப்பிட்டுப் பார்க்கும்போது தடை ஒலிகளின் ஒலிப்பு வன்மை இரு மொழிகளிலும் வேறுபடுகிறது. சிங்களத்தில் வரும் b d ḍ j g ஒலியன்கள் எனக் கண்டோம். இவை இவற்றையொத்த தமிழ் மாற்றொலிகளை விட ஒலிப்பு வன்மை மிக்கவை. எனவே தமிழ் மாற்றொலிகளையும் சிங்கள மாணவர்கள் மிக்க ஒலிப்புடனேயே ஒலிக்க முற்படுகின்றனர். /v/ [v] சிங்களத்திலும் தமிழிலும் உண்டு. தமிழ்ச் சொற்களின் முதல்நிலையில் வரும் [v] ஒலியைச் சிங்கள மாணவர்கள் ஒலிக்கும்போது தமது உதடுகளைக் குவிய வைத்து ஒலிக்கின்றனர். ஆதலால் அது தமிழ் ஒலியாகத் தோன்றுவதில்லை.

தமிழ் மெய்யொலியன்களின் கூட்டு சிங்கள மணாவர்களுக்கு சில உச்சரிப்புப் பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றது. தமிழிலுள்ள மெய்யொலியன்களின் இரட்டிப்பைக் காட்டிலுயள்ள சிங்களத்தில் வரும் இரட்டிப்பு நீட்டமானதாகவும், விறைப்புள்ளதாகவும் உள்ளது. தமிழிலுள்ள [ll] [rr] [t̪ t̪] [ṇṇ] ஆகிய சேர்க்கைகள் சிங்கள மாணவர்களால் முறையே [ll] [r] [ṭṭ] [nn] என ஒலிக்கப்படுகிறது.

வேறுபட்ட ஒலியன்கள் ஒன்றாக வரும்போது சிங்கள மாணவர்கள் அவற்றை பின்னோக்கு ஓரினமாக (regressive assimilation) ஒலிக்கின்றனர். உதாரணமாக மேற்கு - [me:t̪ku] என்பது [me:kku] என்றாகிறது.

அவ்வாறே தமிழிலுள்ள ஓரிட மூக்கன்அல்லாத தடையொலி சிங்களத்தில் இல்லை. எனவே மாணவர்கள் இதனை ஓரிட மூக்கனாக ஒலிக்கின்றனர். எடுத்துக்காட்டாக அன்பு [ɛnbu:] என்பது [ambu:] என ஒலிக்கப்பட்டு சொல்லும் வேறாகி, பொருள் நிலையும் வேறாகின்றது.

இவ்வாறாகத் தமிழை இரண்டாம் மொழியாகக் கற்கும் போது மாணவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் ஆசிரியர்களுக்குப் பெரும் சவால்களாக அமைந்து விடுகின்றன. தமிழை இரண்டாம் மொழியாகக் கற்பிக்கும் போது உச்சரிப்பு நிலையில் பேச்சு மொழியை மாணவர்களுக்குச் சீர்செய்வது எப்போதுமே கடின பணியாகி விடுகிறது. எனினும் ஆசிரியர்கள் பல உத்திகளையும் இரண்டாம் மொழி கற்பித்தல் முறைகளையும் கையாண்டு வெற்றி கொள்ளலாம்.

மொழியியலில் கல்வி நிலைசார் ஆய்வுகள் எதுவும் தமிழ்மொழியை இரண்டாம் மொழியாகக் கற்றல்/ கற்பித்தலிலுள்ள ஒலியனியில் ரீதியான விடயங்கள் தொடர்பாக அண்மைக்காலங்களில் அதிக அளவில் மேற்கொள்ளப்படவில்லை. அத்துடன் இரண்டாம்மொழி கற்றலில் ஒலியனியல் முறைகளை அறிந்து கொள்வதற்கு மாணவர்களைத் தயார்படுத்துவதில் ஆசிரியர்களின் வாண்மை விருத்தி செய்யப்படவில்லை.
இவ்வாய்வானது இதனை அகற்றுவதற்கான ஒரு சிறு முயற்சியாகவே உள்ளது. எனவே இவ்விடயம் தொடர்பான பல ஆய்வுகள் குறிப்பாகப் பாடசாலை ஆசிரியர்களையும், கல்விசார் போராசிரியர்களையும் ஒருங்கிணைத்து மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகின்றது.

பெரும்பாலான ஆசிரியர்கள் உச்சரிப்புப் பற்றிய தெளிவின்மைகளைக் கொண்டுள்ளனர். ஆசிரியர்களுக்கு ஒலியியல் பயிற்சிகள் பயிற்சிப் பட்டறைகளின் ஊடாக வழங்கப்படவேண்டும்.(Teacher training /Professional development courses on pronunciation)அது ஆசிரியர்களுக்கு கட்டாயமானதாக இருக்க வேண்டும். பெரும்பாலான ஆசிரியர்கள் எவ்வாறு கற்பிப்பது என்பதை கற்றார்களேயன்றி, மொழியில் பற்றிய அறிவு அவர்களுக்குப் போதுமானதாக இல்லை.

மாணவர்களுக்குப் பேச்சுத் தொடர்பாடல் பயிற்சி வகுப்புக்கள் மிகக் குறைவானதாகவே உள்ளன. இது மாணவர்களின் பேச்சு அடைவு மட்டத்தில் தாக்கம் விளைவிக்கின்றது. உச்சரிப்புப் பயிற்சி வகுப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும்.

சிங்கள மாணவர்களுக்குத் தமிழ் மாணவர்களுடன் பேசுவதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இது அவர்களின் பேச்சு மொழியின் வளர்ச்சிக்கு உதவுவதுடன் கலாசார உறவுகளை வலுவடையச் செய்யும்.

உச்சரிப்பு கற்பித்தல் (Pronunciation teaching) பல ஆண்டுகளின் பின் தற்காலத்தில் புதிய பரிணாமம் கொண்டுள்ளது. அத்துடன் இரண்டாம்மொழி கற்பித்தலில் பல்வேறு கற்பித்தல் முறைகளும் உத்திகளும் காலத்திற்குக் காலம் அறிமுகப் -படுத்தப்பட்டு வந்துள்ளன. அவற்றில் முக்கியமானவை :

- உரத்து வாசித்தல் (Read aloud)
- உரத்துச் சிந்தித்தல் (Think aloud)
- சிந்திப்பதற்கு பேச்சுருக் கொடுத்தல் (make your thinking visible)
- சொற்களை எழுத்துக்களாகவும் அசைகளாகவும் பிரித்து மாணவர்களை உச்சரிக்கச் செய்து திருப்பித் திருப்பிச் சொல்லுதல் (repeated drilling)
- மாணவர்களுக்கு விதிமுறைகளை விளக்கி அவர்களுக்கு தமிழ்ஒலி உச்சரிப்பினை எடுத்துக்கூறுதல்
- உலக ஒலியன்களின் அரிச்சுவட்டின் (IPA) உதவியுடன் மாணவர்கள் எந்த இடங்களில் (ஒலி பிறக்குமிடம்,ஒலி உச்சரிக்கும் முறை) தவறான முறையில் உச்சரிக்கிறார்கள் எனத் தெளிவு படுத்த வேண்டும்.
- ஆசிரியர் உச்சரிக்கும் ஒலிகளையும் சொற்களையும் மாணவர்களால் அடையாளம் காணச் செய்தல்

பல ஆண்டுகளாகத் தமிழை இரண்டாம் மொழியாகச் சிங்கள மாணவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்களுடனான நேர்காணலின் பின்னர் பேச்சுமொழி கற்பித்தலில் குறிப்பாக உச்சரிப்பு நிலையில் ஏற்படும் பிரச்சினைகளுக்கான தீர்வாக பின்வருவனவற்றை முன்வைக்கின்றேன்.'

- உச்சரிப்பு நிலையில் தமிழ்மொழியைக் கற்பிக்கும்போது பரந்த நிலையில் சொற்கள், சொற்றொடர்கள், வாக்கியங்கள் என்பவற்றில் கவனம் செலுத்துவதுடன் தனியான ஒலிகளில் ஏற்படும் பிழைகளிலும் குறிப்பிடத்தக்களவு கவனம் செலுத்தவேண்டும்.
- உச்சரிப்புப் பிழையின்றித் தெளிவானதாக இருக்க வேண்டுமாயின் மாணவர்கள் தனியே விதிமுறைகளையும் பேச்சு மொழி விடயங்களையும் மனப்பாடம் செய்யாமல் அவர்கள் சுயமாகப் பேசுவதற்கான சூழ்நிலைகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

- பொதுவாக மாணவர்கள் விதிமுறைகள்,சூத்திரங்களைக் கற்றுக்கொள்ள ஆர்வம் காட்டுவார்கள், பேசுவது என்பது அவர்களுக்கு ஒரு பயமூட்டும் செயலாக இருப்பதே இதற்குக் காரணம்.எனவே மாணவர்கள் தாம் கற்ற ஒலியனியல் உச்சரிப்பு விதிகளை செயல்முறைப்படுத்தி அதிலுள்ள தவறுகளை அவர்களே இனங்கண்டு கொள்ள இடமளிக்க வேண்டும்.
- உச்சரிப்பைக் கற்றல் என்பது அதிகளவிலான பயிற்சியைக் கொண்டதாக உள்ளது. குறிப்பாகத் தொடக்க நிலைகளில் மாணவர்களுக்கு ஒரு சொற்றொடரையோ, வாக்கியத்தையோ பிழையின்றி உச்சரிக்கும்வரை மீண்டும் மீண்டும் சொல்வது பிழையான பயிற்சியாகாது. சில வேளைகளில் "திருப்பிச் சொல்லுதல்" (drilling) என்பது மொழிக்கல்வி வகுப்புக்களில் வெறுப்புள்ளதாக மாறுவதற்குக் காரணம் சில நடத்தையியலாளர் முறைகளை (behaviorist method) அதனுடன் ஆசிரியர்கள் இணைப்பதே ஆகும். இப்பயிற்சியானது வகுப்புக்களில் சில சமயங்களில் நேரத்தை வீணடிப்பதாக இருக்குயோனால் சரியான, தேவையான, பயனுள்ள சொற்றொடர்களை வகுப்புக்கு வெளியே திருப்பிச் சொல்லச் செய்வதன் மூலம் மாணவர்கள் நிறைந்த பயனை அடைவார்கள்.
  - ஆசிரியர்களின் ஒலியனியல் சம்பந்தமான பூரண அறிவு மாணவர்களுக்குச் சிறந்த வழிகாட்டலாக இருக்க வேண்டும். ஆசிரியர்களுக்கு சில மொழியியல் கோட்பாடுகள் அவசியமாகத் தெரிந்திருத்தல் வேண்டும். (Being practical requires some kind of theory.)
  - பொருத்தமான பாடத்திட்டம் அவசியம். உச்சரிப்புத் தொடர்பான வகுப்புக்கள் பொதுவாகப் பாடத்திட்டத்தினை கொண்டிருப்பதில்லை. எனவே ஆசிரியர்களிடமுள்ள r பருமட்டான பாடத்திட்டத்திற்கேற்ப உதவிக்குறிப்புகளைப் பயன்படுத்தலாம்.
  - மாணவர்களை மையப்படுத்திய கற்பித்தல் முறையாக இருக்க வேண்டும்.மாணவர்களின் கற்றல் போக்கின் தன்மையை ஆசிரியர்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். மாணவர்கள் தாம் கேட்ட உச்சரிப்பினைத் திருப்பிக் கூறும்போது மேற்கொள்ளும் தவறுகளை சுட்டிக் காட்ட வேண்டும். உதாரணமாக " எனக்கு ஒறு மணிக்கு பல்லிக்கூடம் மூடப்பறும்."
  - பேச்சுமொழிப் பயிற்சியில் சொற்கள், சொற்றொடர்கள், வாக்கியங்கள் என்பவற்றை இரண்டாம் மொழிக் கற்றல் வகுப்பிற்கு வெளியே உபயோகிக்கக்கூடியவாறு தெளிவாக உச்சரிக்க பயிற்சியளிக்க வேண்டும்.

- மாணவர்களை தங்களுடைய பேச்சினைப் பதிவு செய்யச்செய்து அதனைத் தாங்களே விமர்சிக்கச் செய்தல், அதிலுள்ள தவறுகளை திருத்தச் செய்தல் .
- மாணவர்கள் பேசுவதற்கு சந்தர்ப்பம் அளிப்பதுடன் தவறுகளை அவர்களுக்குப் புரியுமாறு சுட்டிக் காட்டி பேசும்போது அவர்களுக்குள்ள அழுத்தங்களைக் குறைக்க வேண்டும்.

ஒரு மொழியை இரண்டாம் மொழியாகக் கற்கும் போதும் கற்ப்பிக்கும் போதும் தோன்றும் பல சிக்கல்களில் ஒலி நிலையில் தோன்றுபவை ஆரம்பத்திலேயே கண்டறியப் படவேண்டியவை. இக்கட்டுரை தமிழைச் சிங்கள் மாணவர்கள் இலங்கையில் கற்பதில் எதிகொள்ளும் பிரச்சனைகளையும் அவற்றைத் தீர்ப்பதற்கு ஆசிரியர்கள் கையாள வேண்டிய உத்திகளையும் எடுத்துக் கூறுகின்றது. எனினும் இவ்விடயம் தொடர்பான பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டிய நிலையில் இவ்வாய்வானது ஓர் ஆரம்ப முயற்சியாக உள்ளது.

துணை நூல்கள் :

1. Coates,W.A De silva,M.W.S.1960.”The segmental phonemes of Sinhalese”.University of Ceylon Review,18.163-75
2. Gair.J.W.,Suseendirarajah,S.Karunatillake,W.S.1978.An Introduction to Spoken Tamil,External services Agency,University of Ceylon.
3. Kailainathan.R.1980.A contrastive study of Sinhala and Tamil phonology.M.A. Disssertation,University of Kelaniya.
4. Kailainathan.R.1998.Problems in learning Sinhala and Tamil as second languages.in Sri Lankan journal of South Asian studies,University off Jaffna,Sri lanka .
5. Interview with the lecturers at the University of Kelaniya

கற்றல் உத்திகளின்வழி எழுத்துத்திறன் மேம்பாடு - பயிலரங்கு

பிரேமா ராமலிங்கம், சங்காட் சாங்கி உயர்நிலைப்பள்ளி
ரா மஞ்சுளா தங்கப்பன், உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம்
சிங்கப்பூர்.

தமிழ்மொழியைக் கற்பதற்கு மாணவர்களுக்கு உதவும் வகையில் வெவ்வேறு வகையான கற்பித்தல் முறைகளை ஆசிரியர்கள் கையாளவேண்டும். இதற்குத் துணைபுரிவது மாணவர்களின் கற்றல் முறைகள் ஆகும். ஆகவே மாணவர்கள், கற்றலின் போது கையாளும் கற்றல் உத்திகளைப்பற்றி அறிந்திருப்பது இன்றியமையாதது.

இக்கருத்தை அடிப்படையாகக் கொண்டு மாணவர்கள் தமிழ் மொழியைக் கற்பதற்குக் கையாளும் கற்றல் உத்திகளைப் பற்றிய ஆய்வும் அவர்களின் எழுத்துத்திறன் மேம்பாட்டுக்கு இக்கற்றல் உத்திகள் எவ்வாறு பயன்படுகின்றன என்பதைப் பற்றிய செயல்முறை ஆய்வும் பள்ளிகளில் மேற்கொள்ளப்பட்டன. ஆய்வுகளில் கண்டறியப்பட்ட தகவல்களும் ஆசிரியர்கள் தம் மாணவர்கள் பயன்படுத்தும் கற்றல் உத்திகளுக்கு ஏற்ப எவ்வாறு பாடங்களைத் திட்டமிட்டுக் கற்பிக்கலாம் என்பதற்கான வழிமுறைகளும் இப்பயிலரங்கில் சான்றுகளோடு விளக்கப்படும்.

அ) பயிலரங்கத்தின் நோக்கங்கள்:

1. ஆக்ஸ்போர்ட் பணிச்சட்டம் (Oxford Framework, 1990) தமிழ்மொழி கற்றல் கற்பித்தலுக்குப் பொருந்தும் வகையில் இருப்பதால் இப்பணிச்சட்டம் பற்றி அறிந்துகொள்ளுதல்.
2. தமிழ் மாணவர்கள் நேர்முகக் கற்றல் (Direct) உத்திகளுள் ஒன்றான அறிவு சார்ந்த (Cognitive) கற்றல் உத்திகளைத் தமிழ்மொழிக் கற்றலில் அதிகமாகப் பயன்படுத்துகிறார்கள் என்பது ஆய்வின் முடிவுகள் விளக்குகின்றன. (Manjula Ramasamy, 2005) இக்கண்டுபிடிப்புகள் பற்றிய தகவல்களை விளக்குதல்.
3. அறிவு சார்ந்த (Cognitive) கற்றல் உத்திகளின் மூலம் மாணவர்களின் எழுத்துத்திறன் எவ்வாறு மேம்பட்டிருக்கின்றது என்பதையும் இந்தக் கற்றல் உத்திகளுக்கு ஏற்ப எழுதுதல் நடவடிக்கைகளை எவ்வாறு வடிவமைத்துக் கற்பிப்பது என்பதையும் அறிந்துகொள்ளுதல்.

பயிலரங்கின் அமைப்பு – ஒரு கண்ணோட்டம்



60 மணி விழா

anniversary

1951 2011

STTU